
# அம்பிலாந்துறை




முருகுதயாநிதி



அன்பை ஊட்டி, பண்பை காட்டி, அறிவைப் பெருக்கி,
அகிலம் விட்டுச் சென்ற அன்புப் பெற்றோர்க்கு
இந் நூல்
சமர்ப்பணம்

# அம்பிலாந்துறை

முருகுதயாநிதி
MPhil, MA, MEd, PGDE, SLPS
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை
தேசிய கல்வி நிறுவகம்.
மகரகம.

வெளியீடு
ஸ்ரீசித்தி விநாயகர், சிவமுத்துமாரியம்மன்
ஆலய பரிபாலன சபை அம்பிலாந்துறை.

தலைப்பு : அம்பிலாந்துறை
ஆசிரியர் : முருகுதயாநிதி
ISNB : 978 - 955 - 43173 - 0 - 7
உரிமை : திருமதி.தயாநிதி சாரதாதேவி
முதற்பதிப்பு : 2016
வெளியீடு : ஸ்ரீசித்தி விநாயகர், சிவமுத்து மாரியம்மன் ஆலய பரிபாலன சபை, அம்பிலாந்துறை.
பக்க வடிவமைப்பு : முருகுதயாநிதி
அட்டை வடிவமைப்பு : ஹரி அச்சகம், வெள்ளவத்தை.
பதிப்பு : 2016
தாள் : 80 GSM
நூலின் அளவு : A5
பக்கங்கள் : 338 + XX
விலை : 900.00

Title : Ampilanthurai
Author : MruguThayanithy
Copy Right : Thayanithy Sarathadevi
ISNB NO : 978 - 955 - 43173 - 0 - 7
First Edition : 2016
Publisher : Sri siththivinayagar Sivamuththu Mariyamman Alaya Paripalana Sapai Ampilanthurai
Lay Out : MuruguThayanithy
Cover Design : Hare Printers, Wellawatta.
Printing : 2016
Paper : 80 GSM
Page : 338 + XX
Price : 900.00

# ஆசியுரை

"முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்
அறிவும் ஆற்றலுமுடையர் செயல்"

முருகுதயாநிதியை ஈன்ற முருகேசு பொன்னம்மா தம்பதியினருக்கு முதல் நன்றி கூறி, இப் புவியில் மானிடராய்ப் பிறப்பவர்கள் பலகோடி உண்டு அதிலும் கல்வி, அறிவு, ஞானம் பெற்று பிறப்பவர்கள் சிலர்தான். முருகுதயாநிதி அவர்கள் கல்வி கற்கும் காலத்தில் இருந்து அவருடைய சமூகம் சார்ந்த செயற்பாட்டினை நான் நன்கு அறிந்தும் புரிந்துமிருந்தேன். அக் காலத்தில் இருந்து அவர் கல்வியால் பலருக்கு மாயை போக்கி அறியாமையை நீக்கிக் வருகின்றார். ஆலயத்தோடு நெருங்கிய பற்றுடைய இவர் சமூகத்தின் உயர்ச்சிக்காக கூறும் கருத்துக்கள் பலவற்றை நான் நன்கு அறிவேன். இவ்வாறான இவர் தன்னுடைய ஊரின் பண்டு பரவணிப் பண்பாடுகளையும் பாரம்பரியத்தினையும் பேணிக்காக்கும் முயற்சிகளில் முக்கியமான ஒன்றாக ஆதியூர் அம்பிலாந்துறை என்ற பெயரில் இந் நூலை வெளியீடு செய்கின்றார். இந்த நூலில் இது வரையும் நாம் அறியாத, தெரியாத பல வரலாற்றுத் தகவல்களைத் தருகின்றார். உண்மையிலே அத் தகவல்கள் யாவும் அம்பிலாந் துறைக்குப் பெருமை சேர்க்கின்றன. இவருடைய இந்த முயற்சி எத்தனையோ அரசர்களும், சிற்றரசர்களும், வன்னியர்களும் இருந்து மறைந்து போன அம்பிலாந்துறை வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கின்றன. அத்தகைய பெருமையினை முதன் முதலில் எழுத்து மூலம் தருகின்றார். இத்தகைய பெரும் முயற்சியாளனை நாம் எல்லோரும் மனதாரப் பாராட்டுதல் வேண்டும். இவருடைய முயற்சி இதனுடன் நிறைவு பெறாமல் இன்னும் பல நூல்களை வெளியீடு செய்வதற்கும் ஸ்ரீசித்திவிநாயகர், சிவமுத்துமாரியம்மன் அருளாசியும் எனது குருவாசியும் கிடைக்க மனமுவந்து பிராத்திக்கின்றேன். அவர் இன்றுபோல் என்றும் வாழ்க.

நன்றி.
சிவஸ்ரீ சு.கு.வினாயகமூர்த்திக் குருக்கள்
திருப்பழுகாமம் மாவேற்குடாப் பிள்ளையார் ஆலயம்,
அம்பிலாந்துறை ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயப் பிரதமகுரு.

# வாழ்த்துரை

எமது கிராமத்தின் வரலாறுபடைத்த நூலை முதன் முதலில் முருகுதயாநிதி வெளியீடு செய்வதற்காக முதற்கண் எனது நல்வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவரது முயற்சியானது பெருமைமிக்க ஒன்றாக அமைகின்றது. எமது கிராம பாரம்பரிய தகவல்களை கல்வெட்டு மூலமாகவும் பெரியோர்கள் அறிஞர்கள் மூலமாகவும் திரட்டி, வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினர் அறியவேண்டும் என்பதற்காக எமது கிராம வரலாற்றினை வியத்தகு வகையில் எழுதியுள்ளார். இந்த நூலைப் பின்பற்றி நாம் பழமைமிகு பாரம்பரியங்களை அறிந்து கொள்வதற்கு இவர் வழிவகுத்தமையினையிட்டு பெருமிதம் அடைகின்றோம்.

எமது கிராமத்தின் அரசியல், சமூக, பொருளாதார, கலை கலாசாரங்களை தெளிவாக எடுத்துக் காட்டியதோடு, அவை ஏனைய கிராமங்களுக்கும் சென்றடைவதற்காக இந்த நூலை வெளியிட்டுள்ளார். இவரது இந்த நூலாக்கமானது மறைந்திருக்கும் எமது கிராமத்தினுடைய வரலாற்றுப் பெருமையினை அறிந்து கொள்வதற்கும் மேலும், வளர்ச்சியடையச் செய்வதற்கும் உணர்வு பூர்வமாகச் செயற்பட்டுள்ளார். அச் செயற்பாடானது அவரை இமயம் தொடச் செய்கின்றது. அதனையிட்டு அம்பிலாந்துறை மக்களாகிய நாம் முதலில் பெரும் மகிழ்ச்சியடைவதுடன் இவருடைய பணி மென்மேலும் தொடர்வதற்கு ஸ்ரீ சித்தி விநாயகர் பெருமான் அருளும் சிவமுத்துமாரியம்மன் அருளும் என்றென்றும் துணையாக இருக்க வேண்டும் என்று எனது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் எமது ஆலய பரிபாலனசபை சார்பாகவும் எமது அம்பிலாந்துறை பொது மக்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

திரு.சி.தவராசா - தலைவர்
ஸ்ரீ சித்தி விநாயகர், சிவமுத்துமாரியம்மன்
ஆலய பரிபாலன சபை
அம்பிலாந்துறை.

## வாழ்த்துரை

"ஊரோடு உறவாடும் உளமான பூர்வீகம்
உரமான உறுதிக்கு உயர்வான தேனகம்
ஆண்ட தமிழரின் அழகான மான்மியம்
அம்பிலாந்துறைப்பதி ஆதித் தாயகம்"

ஒரு இனத்தின் வரலாறு அந்த இனம் வாழும் நிலத்தில்தான் தங்கியுள்ளது. நிலம் என்பதனை ஊராகவும், கிராமமாகவும், நகரமாகவும் வாய்ப்பு வசதிகளைக் கொண்டு வகைப் படுத்தப் படுகின்றது. அந்த வகைப்படுத்தலுக்கு அமைவாக பிரதேசமாகவும், மாவட்டமாகவும், மாகாணம், தேசியம் என்று நீண்டு செல்லும். அந்த வகையில் எமது அம்பிலாந்துறைக் கிராமத்தின் தோற்றம், இனப் பரம்பல், அரசாட்சி, ஆளுமை, நில ஆதிக்கம், கல்வியின் தோற்றப்பாடு, இந்து சமய நெறிமுறைகள், தொழிற் பங்கீடு, மற்றவரை அரவணைக்கும் பண்பு, கலை கலாசாரம், விளையாட்டு, மட்டக்களப்பு மாந்திரீகம், சித்தமருத்துவம், தமிழ் வீரம், தாய்மொழி சிந்தனைகள் எனப் பூர்வீக வரலாற்றுப் பெட்டகத்தை தனித்துவமாய்க் கொண்ட ஒரு அழகிய செல்வந்த கிராமம் என்பதனை யாவரும் அறிந்திருந்தாலும், பல ஆய்வாளர்களும் கல்வியலாளர்களும் எழுத்தாளர்களும் பல்வேறுபட்ட குறிப்புக்களாகவும் கட்டுரைகளாகவும் எழுதி இருந்தபோதும் ஆதியூர் அம்பிலாந்துறை பற்றிய சில உண்மைகளை அறிந்திருந்தும் அதனை வெளிக்கொணரத் தவறியுள்ளனர் அல்லது, அறியாமலே விட்டுள்ளனர். என்பது கசப்பான உண்மை. இதனை நாம் பிழையாகவும் எடுக்கமுடியாது. ஏனென்றால் இதுவரை இவ்வாறான வரலாற்று ஆய்வு கட்டுரைகள் அனேகமானவை அம்பிலாந்துறை சாராத எழுத்தாளர்களாலும் ஊர்ப் பற்று சாராத ஆய்வாளர்களாலும் எழுதப்பட்டது என்பதனை மறுதலிக்க முடியாது. ஆனால், இந்த நூல் அவ்வாறான ஒருவரால் கற்பனையிலோ, தற் புகழ்ச்சிக்காகவோ எழுதப்படவில்லை. இந்நூல் தம்பி தயாநிதி அவர்கள் சிறந்த கல்விமான் என்பதற்கு அப்பால் பல்வேறு வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டவர். எமது கிராமத்தில் பிறந்த இவர் நீண்ட காலமாக எழுத்துத் துறையிலும் கல்வித் துறையிலும், சிறப்பாகக் கவிதைத் துறையிலும் சிறந்து

விளங்குகின்றார். அம்பிலாந்துறை வரலாற்று நூல் ஒன்றை வெளியிட வேண்டும் என்ற அவாவுடன் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது என்னுடன் கதைத்தார். (2011)

ஒரு கிராம வரலாறு எழுதுவதென்பது எல்லோராலும் இலகுவாக செய்யும் விடயம் அல்ல. குறிப்பாகத் தகவல் திரட்டுவது, அதற்கான ஆவணங்களைத் தேடிப் பிடிப்பது, வாய்மொழித் தகவல் வழங்கக்கூடிய முதுசங்களைத் தொடர்பு கொள்வது என பல சவால் நிறைந்த பணியாக இருக்கின்ற வரலாற்று நூலை எழுதுவதை நாம் அறிவோம். புத்தகம் வெளியிடப்பட்ட பின்பு நாம் அதில் என்ன பிழைகள் உள்ளன என்று, பிழை பிடித்துக் குற்றம் கூறும் விமர்சனங்கள் மட்டுமே நான் உட்பட அனைவரும் செய்வோம். இந்த நூலாக்கத்துக்காக நூலாசிரியர் பட்ட கஷ்டங்களை நாம உணர்வதில்லை.

அம்பிலாந்துறையூரில் பல பிரமுகர்கள், அரச உத்தியோகஸ்தர்கள், பொதுப் பணியாளர்கள், சமூகசேவையாளர்கள், ஊர்ப் பெரியவர்கள் எனப் பல்வேறு தரப்பட்டவர்களின் பெயர் உள்வாங்கப் பட்டுள்ளபோதும் எமது மண்ணிற்காய்ப் போராடி உயிர் நீத்த மாவீரர்கள் எமது ஊரில் 85 பேர் வரை உள்ளனர் அவர்களை எம்மூர் என்றும் மறக்காது என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் கூறுவதில் பெருமை அடைகின்றோம்.

இந்த நூலில் தவறவிடப்பட்ட, சேர்க்காமல் விட்டப்பட்ட விடயம் இருந்தால் உரிமையுடனும் ஆதாரத்துடன் எழுத்து மூலமாக யாரும் முன்வைத்தால் அவைகள் அனைத்தும் திரட்டி ஆராய்து மீண்டும் அம்பிலாந்துறை வரலாற்று நூலை நூலாசிரியரின் துணையோடு இற்றைப்படுத்தமுடியும் என்ற ஆலோசனையினையும் கூறிக்கொள்கின்றேன்.

எனது பாராளுமன்ற காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு முன்னாள் பாராளுமன்ற காலமான இன்று இந்த அருமையான நூல் வெளியிடப்பட்டுள்ளது. பல சிரமங்கள் மத்தியில் இந்நூலை ஆவணமாகத் தொகுத்து எழுதிய நூலாசிரியர் அம்பிலாந்துறை

முருகுதயாநிதி அவர்களுக்கும், இந் நூலை வெளியிட வெயியீட்டு உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கும் எமது கிராமத்தின் ஸ்ரீசித்திவிநாயகர், சிவமுத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையினருக்கும் மனம் நிறைவான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"தாய் நிலத்தில் பற்றில்லாதவன்
தாயிலும் பற்றில்லாதவன்"

நன்றி.
பாக்கியசெல்வம் அரியநேத்திரன் (அரியம்),
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு.

## அணிந்துரை

என்னுடைய அனுபவத்தில் நான் அறியாப் புதிய அனுபவம். அதுவும் வெளிநாட்டிலிருந்து' அதுவும் ஈழத்திலிருந்து, எனது தொப்புள்கொடி உறவுகள் துயரங்களின் கோரப்பிடியில் சொந்தங்களையும் வாழ்வையும் துக்கத்தோடு தொலைத்து தூரதூர தேசங்களுக்கு அகதிகளாகவும் அபலைகளாகவும் கனவுகளைச் சுமந்து கனத்த இதயத்தோடு காத்திருப்பதற்குக் காரணமான (தமிழ்) ஈழத்திலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு. மகிழ்ச்சியும் வியப்பும் யாரென வினவுகிறேன். அவர் கூறுகின்றார் "என் பெயர் தயாநிதி. தங்களிடம் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ள விரும்புகிறேன்". "உங்களை எனக்கு அறிமுகம் கிடையாது, என்னை எப்படி நெறியாளராகத் தெரிவு செய்தீர்கள்." நான் தொடர்ந்து வினவுகின் றேன். அவர் "நான் 2008ஆம் ஆண்டு மதுரையில் நடந்த சைவ மாநாட்டிற்கு வந்திருந்தேன். அப்போது தங்களின் கட்டுரை வாசிப்பைக் கண்டும் கேட்டும் மிகவும் மகிழ்ந்தேன். அப்போது உங்களோடு உரையாடிய பலருள் ஒருவனாக நானும் இருந்தேன். அந் நேரத்தில் தங்களின் தொலைபேசி எண்ணையும் தங்களிடம் பெற்றேன். அப்போது நான் நினைக்கவில்லை இப்படியொரு வாய்ப்பு வரும் என்று.

பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென்ற சூழல் வந்த போது உங்கள் நினைவுதான் முதலில் வந்தது. நல் வாய்ப்பாக நான் முயன்று தேடியபோது தங்களின் தொலைபேசி எண் எனக்கு புதையலைப் போல கிட்டியது. இப்பொழுது உங்களிடம் பேசிக்கொண்டி ருக்கின்றேன். என்று ஈழத்தமிழின் ஈரத்தோடும் என்னைக் கூர்மையாக கேட்கத் தூண்டிய தமிழ்த்திசைச் சொல்லோடும் சொல்லி முடித்தார். உள்ளத்தில் மகிழ்ச்சி அணையுடைக்க உறவாகச் சொன்னேன் நீங்கள் முனைவர் பட்ட ஆய்வை உறுதியாக நிறைவு செய்யலாம். நான் நெறிப்படுத்துகின்றேன்." அவர் நன்றி சொல்ல, பொதுவான விசாரிப்புக்களோடு எங்கள் உரையாடலை நிறைவு செய்தோம். அவர் தேசிய கல்வி

நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் என்பதால் ஆய்வுப் படிப்புக்கு அனுமதி வாங்கவேண்டியிருந்தது. இரண்டாண்டுகள் கடந்து விட்டன. அனுமதி கிடைத்தபாடில்லை. இடையிடையே பேசுவார். நானும் அவருக்காக இடம் ஒதுக்கி வைத்திருந்தேன். திடீரென்று ஒருநாள் அனுமதி கிடைத்துவிட்டதென முனைவர் பட்டம் முடித்து விட்ட மகிழ்ச்சியில் பேசினார். எனக்கும் பேருவகை. அவர் விரும்பியவாறே தலைப்பு தேர்வு செய்து, ஆய்வுச் சுருக்கம் எழுதி, எம் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறையில் ஆய்வாளராகச் சேர்ந்தார். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் முறைப்படி பதிவு செய்தார்.

தொலைபேசி வாயிலாகவே தலைப்பு, ஆய்வுப் பகுப்பு முதலான பல விபரங்களையும் பேசி அனைத்து முன்னேற்பாடுகளுடன் விண்ணப்பம் செய்ய மதுரை வந்து சேர்ந்த பொழுததான் அவரை நேரில் பார்க்கிறேன். வியப்பும் எனக்கு பண் மடங்காயிற்று. காரணம் அவ்வளவு எளிமை, கனிவு, ஆய்வுத்தேடல், கூரிய பார்வை என ஒரு நல்ல மனிதரைக் கண்டேன். தொடர்ந்து பேசியபோது அவர் ஒரு சிறந்த பாடும் திறன் படைத்த நல்ல நாடகக் கலைஞராகத் திகழ்வதையும் அறிந்தேன். பெரிதும் மகிழ்ந்தேன். இப்பொழுது சில மாதங்கள் கழிந்த நிலையில் அவர் ஒரு வரலாற்று ஆசிரியராக, சமூக ஆய்வாளராக, இன்னும் புதிய பரிமானமாக இந்த நூலின் வழி அவரை அறிந்தேன். இதோ நூலைப் படித்து அணிந்துரையும் எழுதுகின்றேன்.

தயாநிதி அவர்கள் ஆர்வத்தைத் தூண்டும் ஆசான்களால் இளம்பருவம் முதற்கொண்டு எதையாவது எழுத வேண்டும் என்பதில் தனியாத ஆர்வம் உடையவராக - பலர் எழுதிய மட்டக்களப்பு வரலாற்றைப் படித்து வியப்பவராக இருந்த நிலையில் கல்வெட்டின் சொற்றொடர் ஒன்றால் ஈர்க்கப்பட்டு அதனை மட்டக்களப்பு வரலாறுகளில் தேடியுள்ளார். ஆழமான வாசிப்புக்குப் பின்னும் அவருக்கு தெளிவு புலப்படவில்லை - கல்வெட்டுக்கள், ஏடுகள், பலருடைய வாய்மொழித் தகவல்கள் என்று பலவாறு ஆராயத் தொடங்குகின்றார். புதிய புதிய தகவல்களின் திரட்சியில்

அவருக்கு "அம்பிலாந்துறை வரலாறு" அகப்படுகிறது. இம் முயற்சியே அவருக்கு இந்நூலாக ஆக்கம் பெறுகின்றது.

மட்டக்களப்பு வரலாறு எழுதிய எவரும் அதனோடு இணைவாக இருக்கும் அம்பிலாந்துறை வரலாற்றைக் குறிப்பாகக்கூடக் காட்டவில்லை என்கின்ற ஆதங்கம் தயாநிதியின் தேடலை வேகப்படுத்தியிருக்கின்றது. உலக நாச்சியின் வருகைக்கு முன்னரே இக் கிராமம் இருந்தமையினை ஆதாரபூர்வமாக நிறுவுகின்றார். ஆங்கிலேயர் காலத்தில் அலங்கரித்த பல வன்னியர் கூட்டத்தையும் உடையார்களையும் அம்பிலாந்துறையில் கண்டு காட்டுகின்றார்.

மட்டக்களப்பு முக்குகதேசம் எனப்படும். ஆனால், முக்குகரின் நடைமுறைகளைப் பின்பற்றும் கிராமமாக இன்றும் அம்பிலாந்தறை இருக்கின்றது என ஆய்வாளர் ஆய்வுச் சான்று காட்டுகின்றார். எழுத்துருவின் தகவல்களும் ஆய்வில் பெற்ற தகவல்களும் ஒருமித்துச் செல்வது ஆய்வாளரின் கருதுகோளை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது. இதனை மேலாய்வுக்கு உட்படுத்த விரும்புகிறார் ஆசிரியர்.

இந்த வரலாற்றுத் தேடல்கள் பல ஆண்டுகளாக உருப் பெற்றுத் தந்தை இறப்புக்குப் பின் வலுப்பெற்று (2012) ஆண்டுகள் பல கடந்த நிலையில் ஐந்து வருட உழைப்பில் இந்நூலை அரங்கேற்றுகின்றார். ஒரு நல்ல ஆய்வாளராக, தந்தை உள்ளிட்ட தகவலாளிகளை நன்றியோடு நினைவு கூருகின்றார். ஊக்கப்படுத்தியோருக்கும் மனைவி, மக்களுக்கும் நன்றி போற்றும் இந் நல்லாசிரியர் இந்நூலைப் பெற்றோருக்குச் சமர்ப்பணம் ஆக்குகின்றார்.

இந்நூல் ஆசிரியரின் பகுப்பாய்வுப்படி அறிமுகம் முதற்கொண்டு பின்னிணைப்பு ஈறாகப் பல தலைப்புக்களில் ஆகியிருக்கின்றது. அறிமுகத்தில், குமரிக்கண்டத்தில் தொட ங்கி உலகநாச்சி வருகைக்கு முன்னம் பின்னும் விளக்கி அம்பிலாந்துறையின் பெயர் விளக்கம் தந்து முக்குகர் பற்றித் தெளிவாகப் "போடி" கல்வெட்டில் அன்னமிட்ட அறத்தைக் கூறுகின்றார் ஆய்வாளர். தொடர்ந்து

திருமணம் பிள்ளைப் பேறு, சாமத்தியச் சடங்கு, புதுமனைபுகுதல், மரணச்சடங்கு எனச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் எடுத்துரைக்கின்றார். சடங்குகளின் வழியிலான சமூகத் தொடர்பையும் தொட ர்ந்து நிலவியலையும் குறிப்பிடுகின்றார்.

அம்பிலாந்துறையின் அரசியல் நிலையைச் சுட்டும் விதமாக வன்னியர்களின் ஆளுமைகளும் மட்டக்களப்போடு கண்டிய மன்னர்களுக்கான தொடர்புகளும் போர்த்துகேகேயர் ஒல்லாந்தர் காலமும் அறுமக்குட்டிப்போடி காலத்துக்கு முன்னதான அம்பிலாந்துறையும் குலவிருது ஏற்படுத்தியமையும் குடும்ப, சமூக, நிருவாக முறைகளும் உறவுகளும் சொல்லி விரிவான விளக்கத்தை ஆசிரியர் தருகின்றார்.

வழிபாடு எனும் பகுதியில் ஆகம வழிபாட்டு நிலையை விளக்கி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயக் கிரியை, சடங்குகளை எடுத்துரைத்துப் பல்வேறு உபயகாரர்களின் பட்டியலைத் தந்து நெற்காணி, அன்னதானம், ஒலிபெருக்கி, கிணறு, மதில் எனக் கோயில் தொடர்பான செயற்பாட்டு சிலைகளை ஆசிரியர் விளக்குகின்றார். மேலும், ஆகமம்சாரா வழிபாட்டு முறை, சடங்கில் மாரியம்மன் வழிபாட்டுச் சடங்கு, காலக்கணிப்பில் மாற்றம், கண்ணகி வரலாற்றிலிருந்து மாரியம்மன் தோற்றம், விழாவின் பல்வேறு பூசைகள் செயற்பாடுகள், குருக்கள், பரிபாலனங்கள் உன விரிவாகக் கூறி , தீவுக்குடியிருப்புக் கோவில் உருவானதன் காரணமும், பிள்ளையார், வாலையம்மன், முருகன், கானடிக் கோவில்களை ஆசிரியர் விளக்கியுரைக்கின்றார்.

அம்பிலாந்துறை மக்களுக்கு பல்வேறு கோயில்களில் இருந்த உறவுகளைச் சொல்லும் விதமாகச் செட்டிபாளையம் கண்ணகியம் மன் கோயில், பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோயில், தாந்தாமலை முருகன் கோயில்,மாவேற்குடாப் பிள்ளையார் ஆலயம், கதிர்காம முருகன் ஆலயம், உகந்தை முருகன் கோயில், ஆகிய பிரதான கோயில்களை ஆசிரியர் விளக்கியுரைக்கின்றார். அம்பிலாந்துறையில் கல்வி வளர்ச்சி பற்றியும் ஆய்வாளர் ஆய்துரைக்கின்றார்.

"செயலொடு திருச்சிராதேசத்தவரில்
அம்பிலாந்துறையதிலே சென்று
வம்பிலாக் கலிங்க மரபினரொருவன்
பலநூலாந்த பண்டிதர் சிலரை
சம்புநாதன் தனையிருமென்று
அம்பிலாந்துறை அதனில் வைத்து
வேண்டிய தமிழ்நூல் விளங்கப் பயின்றென
ஆண்டனரெங்கள் எடிகுலமரபினோர்"

என்ற போடி கல்வெட்டின்வழி, இந்திய நாட்டின் திருச்சி நகரிலிருந்த அம்பிலாந்துறைக்கும், ஈழத்து அம்பிலாந்துறைக்கும் இருந்த தொடர்பை விளக்குவது பாராட்டத்தக்கது. பாடசாலை தொடங்கிய காலத்தையும் அதன் தரத்தையும் பட்டியலிட்டுக் காட்டி விளக்கிய விதம் சிறப்பாக அமைந்துள்ளது.

நல்லவும் தீயவும் செய்யும் மந்திரங்கள் அதர்வண வேதத்தில் இருப்பதைக் குறிப்பிட்டு, இப் பகுதியில் குரு - சீட பரம்பரையாக நாட்டார் கலையாக நம்பிக்கை சார்ந்து நடத்தப்படுவதைக் கூறி அம் மந்திரங்கள் கேரளத்தோடு ஒத்திருப்பதை எடுத்துரைத்து, பூசாரியார்களின் செயற்பாடும், சிறப்பும் எடுத்துரைக்கப்படுகின்றது. அத்தோடு பரிகாரியார்களையும் மருத்துவச்சி பற்றியும் ஆசிரியர் விளக்குகின்றார். மந்திரக் கல்வி நிலையம் இருந்தது குறித்து விளக்கிப் பரியாரியார்களின் பெயர்ப்பட்டியலைத் தந்திருப்பது வியப்பைத் தருகிறது. தொடர்ந்து பாம்புக்கடி வைத்தியத்தின் தேவை பற்றியும், சலவைத் தொழிலாளி, நாவிதர், நாசிவர் போன்றோரின் வாழ்வியலையும் பிரச்சினைகளையும் நயமாக ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். மேலும், கூத்துக் கலையின் மரபாந்த தொடர்ச்சியையும், அதன் வகைப்பாட்டையும், அதற்கான காரணங்களையும், ஆலயச் சார்பும் கலைக் கழகங்கள் தோன்றியமையும் ஆய்வாளர் ஆய்ந்து கண்டு விளக்குகின்றார். நிறைவாக இந்து இளைஞர் மன்றத்தின் மக்கள் பணியை விளக்கி, மரபு சார்ந்த பற்பல விளையாட்டுக்கள் குறித்து எடுத்துரைத்து, இன்று கானாமல் போய்க் கொண்டிருக்கும் கிராமிய விளையாட்டுக்களைத் தொகுத்து விளக்கிய விதம் பெரிதும் உவகை

தருகிறது. தொடர்ந்து சமூகசேவை நிறுவனங்களாக இளைஞர் கழகம், நற்பணி ஒன்றியம், சமூகப்பணி ஒன்றியம், போன்றவற்றைத் தெளிவாக அடையா ளங் காட்டியும், பேரில்லா அமைப்பின் பணி யையும் பெரிதும் பாராட்டியும் தனது ஆய்வு முயற்சியை ஆசிரியர் நிறைவு செய்கின்றார்.

பின்னிணைப்பாக ஊஞ்சல் பாடல்கள், போடி கல்வெட்டு, அம்மன் பத்து, அம்மன் காவியம், ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. இறுதியில் ஒட்டுமொத்தச் சமூக செயற்பாட் டாளர்களின் பெயர்ப் பட்டியல் இடம்பெறுகின்றது. மொத்தத்தில் தயாநிதி அவர்களின் தேடல் முயற்சி, அயராது உழைப்பு, நுணுகிப் பார்க்கும் ஆய்வுப் பார்வை, பிறந்த மண்மீது கொண்ட பற்று, மக்கள்மீது கொண்ட நேயம் - இவற்றின் ஒட்டு மொத்த வெளிப்பாடாக இந்நூல் உருவாகியுள்ளது. தயாநிதிக்குப் பாராட்டுக்கள். மென்மேலும் பல் நூற்களைத் தந்து தமிழ்த் தரணிக்கு அணிசேர்க்க வேண்டுகிறேன். இப் பணியில் இல்லத் துணைவியின் பங்கும் பிள்ளைகளின் அன்பும் தயாநிதிக்கு என்றும் துணையாக இருக்கட்டும்.

என்றும் அன்புடன்
பேராசிரியர் முனைவர் இ.பேச்சிமுத்து
தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி
மதுரை.

18.09.2015
மதுரை - 09

# என்னுரை

இளம்பருவமுதற்கொண்டு எதையாவது எழுதவேண்டும் என்பதில் தனியாத ஆர்வம் உண்டு. அத்தகைய ஆர்வத்தைத் தூண்டியவர்கள் எனக்கு வழிகாட்டியாக இருந்தவர்கள். மட்டக்களப்பு வரலாறு பற்றிப் பலர் எழுதியுள்ளனர் அவர்களுடைய புத்தகங்களையும் கட்டுரைகளையும் படித்து வியப்பதுண்டு. அப்போதுதான் "அம்பிலாந்துறைக்கு அப்பாலுள்ள மண்னேரிமுனை வளர்ந்து காடுசெறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து, ஓரிடத்தில் குடிகளை அனுப்பி, காடுகளை வெட்டித்தூர்ந்து, மாளிகை உண்டாக்கி, உலகநாச்சிக்குக் கொடுத்தான்" என்னும் சொற்றொடர் எனது ஆழ்மனதில் பதிந்தது. இத்தொடர் பற்றிய வெளிப்பாடு மட்டக்களப்பு வரலாறுகளில் உண்டா? என்பது பற்றி மீண்டும் மீண்டும் ஆழமாக வாசிக்கத் தொடங்கினேன், அத் தொடர் பற்றி தெளிவான விளக்கம் பெறுவது கடினமாக இருந்தது. எனினும், கல்வெட்டுக்கள், ஏடுகள், பலருடைய வாய்மொழித் தகவல்கல் என்று பலவாறு ஆராயத் தொடங்கியபோது, அம்பிலாந்துறை பற்றிய பற்பல புதிய தகவல்கள் கிடைக்கத் தொடங்கின. அத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அம்பிலாந்துறை பற்றி எழுத முனைந்தேன்.

மட்டக்களப்பு வரலாறு பற்றிப் பலர் எழுதியுள்ளனர். அதில் மட்டக்களப்பினுடைய பூர்வீகம் பற்றிய வரலாறுகள் வெளிப்படுகின்றன. மட்டக்களப்பு வரலாற்றுடன் இணைந்த ஒன்றாகவே அம்பிலாந்தறை வரலாறும் காட்டப்படகின்றது. வெளிவந்த வரலாறுகளிலெல்லாம் அம்பிலாந்துறை பற்றிய வரலாற்று அம்சங்கள் இடம்பெற்றதாக இல்லை. ஏன் இவை தவற விடப்பட்டதென்ற சந்தேகம் எழவே செய்கின்றது. தெரிந்து விடப்பட்டதா? தெரியாமல் விடப்பட்டதா? நுனிப்புல் பார்வையா? என்று தெரியவில்லை. வரலாற்று அடிப்படையில் இக்கிராமம் உலகநாச்சி வருகைக்கு முன்னரே இருந்தமையினை சான்றுகளால் ஆதார பூர்வமாக நிருபிக்க முடிகின்றது. அத்கைய வரலாறு மட்டக்களப்பு வரலாற்றினை எழுதியவர்களால் குறிப்பாகக் கூடக் காட்டப்படவில்லை. எனினும், பன்முக ஆளுமை கொண்ட

ஆய்வாளர் மகிழை மகேசன் அவர்கள், அம்பிலாந்துறை வரலாறு பற்றி அவர் எழுதிய கட்டுரைகளில் சில குறிப்புக்களைத் தந்துள்ளார். சிலருடைய ஆய்வுகளில் அம்பிலாந்துறையில் இருந்த வன்னியர்களில் குஞ்சித்தம்பி வன்னியனாரையும் கதிர்காமப்போடி வன்னியனாரையும் பற்றியே குறிப்பிடுகின்றனர். அறுமக்குட்டிப் போடி, கந்தப்போடி, கதிராமப்போடி வன்னியனார், கதிரமலைப் போடி வன்னியனார், சின்னத்தம்பி வன்னியனார், மதனம் சின்னத்தம்பி வன்னியனார், கதிராமப்போடி வன்னியனார், கணபதிப்பிள்ளை வன்னியனார், வீமாப்போடி உடையார், வீரபத்திரப்போடி உடையார், தம்பிமுத்து உடையார், கந்தப்போடி உடையார், என்று பல பலம் பொருந்திய வன்னியர்கள் அம்பிலாந்துறையில் இருந்திருக்கின்றனர். இவர்களைப் பற்றிய குறிப்புக்கள் வரலாறுகளில் வருதாகத் தெரியவில்லை.

ஆங்கில நாட்டின் வெட்சித்துரை அம்பிலாந்துறைக்கு வந்து தங்கியிருந்து குஞ்சிலயாப்போடி வன்னியனாருடன் உறவாடி அவரை குதிரை வண்டியில் ஏற்றிக்கொண்டு கிழக்கு மாகாணத்தை நிருவாகித்தான் என்றால் அம்பிலாந்துறையின் பழமையினை இலகுவாகவே விளங்கிகொள்ளமுடியும். அத்தகைய அரசியல் பின்புலம் இந்தக் கிராமத்திற்கு இருந்திருக்கின்றது. அந்த அரசியல் நிலைமை பண்டைய காலந்தொட்டு இருந்து வந்திருக்கின்றன என்பதனை வரலாற்றின் ஊடாக அறிந்துகொள்ள முடிகின்றது. அதற்கு குணசிங்க மன்னன் உலகநாச்சிக்கு எழுதிய மடல் சிறந்த சான்றாதாரமாகும். அதனைத் தொடர்ந்து அரசியல் மாற்ற நிலையில் ஆதாரபூர்வமான தகவல்கள் அறுமக்குட்டிப்போடி காலத்திற்குப் பின்னரே கிடைக்கின்றன. எனினும், கிடைக்கப்பெற்ற ஆதாரத்தின் அடிப்படையிலும், அவற்றினால் வரும் ஊக ஆதாரத்தின் அடிப்படையிலும், இந்தியாவிலுள்ள அம்பிலாலந்துறைக்குச் சென்று அங்கு கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையிலும், பலரது வாய்மொழித் தகவல்களின் அடிப்படையிலும், அம்பிலாந்துறையின் பழமையினை நிறுவியுள்ளேன்.

அம்பிலாந்துறை வரலாற்றினை விட்டோ அல்லது புறந்தள்ளியோ மட்டக்களப்பு வரலாற்றினை எழுதமுடியாத வகையில் அதன் செல்நெறிகள் ஆழமாகவும் அகலமாகவும் வேரூன்றியுள்ளன.

அம்பிலாந்துறை பற்றிய பல தகவல்கள் பல்தரப்பட்ட அறிவுடையவர்களிடம் இருந்து பெறப்பட்டு, அவர்களுடைய தகவல்கள் யாவும் தொகுக்கப்பட்டு, ஆராயப்பட்டு பொருத்தமுறத் தரப்படுகின்றது. இவர்களுடைய தகவல்களை வைத்துப் பார்க்கும்போது எழுத்துருவில் கிடைத்த சில தகவல்களுக்கு மாறுபடாத வகையில் காணப்படுகின்றமையினை ஆய்வின் மூலம் உறுதி செய்யமுடிகின்றது. இந்தத் தகவல்களை வைத்துக்கொண்டு எதிர்வருகின்ற காலங்களில் மேலும், ஆய்வினை விரிவுபடுத்த முடியுமென எண்ணுகின்றேன். இந்த ஆய்வானது ஒரு முதல் முயற்சி மட்டும்தான். இத் தளத்தில் நின்று மேலும் புதிய தளத்தில் ஆய்வு முன்கொண்டு செல்லப்படும்.

மட்டக்களப்பு முற்குக தேசமாகும். முக்குகச் சட்டத்தின் அடிப்படையிலே மக்களது நடைமுறைகள் இருந்தன. ஆனால், முக்குகரின் நடை முறைகளை இன்றும் பின்பற்றுகின்ற மரபு எமது கிராமத்தில் உள்ளது. திருமணம் தொடக்கம் திருமரணம் வரையும் இத்தகைய நடைமுறைகளை இன்றும் காணலாம். அத்தகைய நடைமுறைகள் மட்டக்களப்பு வரலாற்றுக்கு ஓர் எடுத்துக் காட் டாகும். எனவே, அம்பிலாந்துறை வரலாற்றூடாக மட்டக்களப்பு மரபினைப் பார்க்க முடியும் என்பதனை பல்வேறு தகவல்களின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விடயதானத்திலும் வருகின்ற சொற்கள், சொற்றொடர்கள் அதனை ஆதாரம் காட்ட முனைகின்றன. இலங்கை அரசியல் பின்புலம், திருச்சியிலுள்ள அம்பிலாந்துறை, உலகநாச்சி வருகை, அம்பிலாந்துறை அரசியல் நிலைமை, கல்வி, ஆலய வழிபாடு, கோயில்களுடன் உள்ள உறவு, வாழிவியல் சடங்குகள், மந்திரம், மக்கள் வாழ்க்கை, குடிமக்கள், கலைகள், விளையாட்டுக்கள், சமூகசேவை நிறுவனங்கள் என்ற அடிப்படையில் முன்வைக்கப்பட்டு அவற்றுக்கான விளக்கம் தரப்படுகின்றன. நிறுவப்படுகின்ற உவ்வொரு விடயமும் ஒவ்வொரு ஆதாரங்களின் பின்புலத்தில் இருந்து எழுந்தவையாகம். இவற்றின் ஊடாக இனிவருகின்ற வரலாற்றினை செம்மைப்படுத்தமுடியுமென எண்ணுகின்றேன்.

இந்த வரலாற்றுப் புத்தகத்திற்கு "ஆதியூர் அம்பிலாந்துறை " என்ற பெயரினை இட்டுள்ளேன். காரணம் பழைய வரலாற்று மூலங்களில் அம்பிலாந்துறை என்றும் அம்பிலாலந்துறை என்றுந்தான் ஊர்ப் பெயர் இருந்திருக்கின்றது. பின்னர் அம்பிலாலந்துறை அம்பிலாந்துறை என மருவி இருக்கின்றது. தற்காலத்தில் காலத்தில் அம்பிளாந்துறை என நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றது. இந்தியாவில் உள்ள அம்பிலாலந்துறை "ல" கரம் பெற்றே எழுதப்படுகின்றது. அம்பிலாலந்துறை என்றோ அல்லது அம்பிலாந்துறை என்றோ எழுதப்பட்ட பண்டைய காலத்தில் நமது ஊருக்கு சிறப்பு இருந்திருக்கின்றது என்ற தூர நோக்கில் அம்பிலாந்துறை என்ற பெயரினை இட்டுள்ளேன். இந்தச் சொல்லுக்குப் பொருளும் சிறப்பும் உண்டு.

இந்த வரலாறு எழுத வேண்டும் என்கின்ற எண்ணம் எனது அப்பாவின் இறப்பின் பின்னரே வலுப்பெற்றது. (2012) எனினும், அதுவும் பல ஆண்டுகள் கடந்துவிட்டன. வரலாற்றினை எழுதுவதற்காக சுமார் ஐந்து வருடங்களுக்கு மேல் செலவு செய்துள்ளேன். அதற்காக வாய்மொழியில் சிறந்த தகவல்களைத் தந்தவர்களில் எனது அப்பா மூ.முருகேசு, பூசாரியார் வே.சின்னத்தம்பி, மூ.தங்கராசா ஆகியோர் இறைவனடி சேர்ந்து விட்டார்கள் அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன். வீ.தம்பியன்,.வே. சுப்பிரமணியம், செ.கோவிந்தராசா, செ.தவலிங்கம் கா.பூபாலபிள்ளை, மா.கதிர்காமத்தம்பி, உ.குமாரவேலி, அ.ஏகாம்பரம், பா.இராசரெத்தினம், வெ.கணபதி, சிவபாலன் (பட்டிப்பளை), பா.அரியநேத்திரன், இ.சரவணமுத்து, அ.யோகேந்திரன், பெ.மகேந்திரன், இ.மாக்ரட்மேரி, அ.அரசரெத்தினம் (களுதாவளை) க.குணசேகரம், (மாங்காடு) க. பொன்னுத்துரை, (குடியிருப்பு) செ.அருளம்பலம், செ.தவலிங்கம் க.தில்லையப்போடி, செ.அருளானந்தம், ஏ.கிருஷ்ணானந்தமூர்த்தி, சி.சரஸ்வதி, சி. பூபதிப்பிள்ளை, சு.புனிதமலர், கோ. பிரமசாயிசிவம் (ஆரையம்பதி) ஆகியோருக்கும், இந்த வெளியீட்டினைச் செய்வதற்கு உதவி கேட்டபோது அதனைச் செய்வதற்கு மனப் பூர்வமான ஆதரவினை வழங்கிய ஆலய பரிபாலனசபைத் தலைவர் சி.தவராசா, செயளாளர் சு.கோபிநாத், பொருளாளர், த.நவநிதி

மற்றும் உறுப்பினர்கள், கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கிய சபையோர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். இவர்களுடைய தகவல்கள் ஒவ்வொன்றும் மிகவும் பெறுமதி வாய்ந்தவை.

இவர்களைத் தவிர மதிப்பிற்குரிய பேராசிரியர்களில் ஒருவரான மா.செல்வராசா அவர்களுடைய வீட்டுக்கு நான் சென்றிருந்தபோது என்னிடம் கேட்டார் அம்பிலாந்துறை பற்றி நீங்கள் யாது அறிந்து வைத்துள்ளீர்கள் என்று, நான் எனக்குத் தெரிந்த சில தகவல்களைக் கூறினேன். அதனைக் கேட்டிருந்த அவர், இலக்கிய கலாநிதி வ.சிவசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய மட்டக்களப்புப் பண்பாண்பாடு எனும் புத்தகத்தைக் காட்டி அதில் அம்பிலாந்துறையில் இருந்த கல்வி மரபு பற்றிக் கூறப்பட்டிருக்கின்ற பக்கத்தினை எடுத்துக்காட்டி வாசிக்கச் செய்தார். அந்தப் பக்கம் எனக்கு மேலும், ஆய்வு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது. இத்தகைய ஆர்வத்தினைத் தூண்டிய பேராசிரியருக்கு எனது நன்றிகள். அத்தோடு, அம்பிலாந்துறையின் பழமைபற்றிக் கூறி இவை ஆய்வு செய்யப்பட வேண்டிய அவசியத்தை உணர்திய விபுலானந்தருடைய மாணவர்களில் ஒருவரான இறைபதமடைந்த இலக்கிய கலாநிதி வ.சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்த வரலாறு எழுதப்படுவதற்கு என்னுடன் இணைந்து தகவல்களைப் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியது மட்டுமன்றி தகவல்களையும் தந்ததவிய எனது உறவு பா.இராசரெத்தினம் அவர்களுக்கும், ஆய்வுக்குத் தொடர்ந்தும் ஊக்கமளித்துக் கொண்டிருந்தது மட்டுமன்றி சிக்கலான விடயங்களுக்குச் சிறந்த விளக்கம் தந்த பா.ஸ்ரீஸ்கந்தசெயா அவர்களுக்கும், ஆய்வுக்கான மூல ஆதாரங்கள் சிலவற்றைத் தந்துதவியது மட்டுமன்றி கருத்துக்களையும் வழங்கிய தான்தோன்றீஸ்வரர் ஆலய வண்ணக்கர் இ.சாந்தலிங்கம் அவர்களுக்கும், ஆய்வுப் புத்தகத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு உதவிய மகாலிங்கசிவம் (யாழ்ப்பாணம்) அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளை சரிபார்த்துத் தந்துதவிய இ.தர்மிளா அவர்களுக்கும், 2005ஆம் ஆண்டு ஒரு

புத்தகத்தைக் கொண்டுவந்து இது உங்களுக்குத்தான் உதவும் என்றும், நான் கொக்கட்டிச்சோலைக்குப் போக வரும்போது கடுக்காமுனை வீதியில் இப்புத்தகம் கிடந்தது என்றும் கூறி புத்தகத்தை தந்து (மட்டக்களப்பு குகன்குல முக்குகர் வரலாறு) அதனூடாக மட்டக்களப்புப் பிரதேசம் பற்றிய பல விளக்கங்களைப் பெறுவதற்கு உதவிய எனது உறவும் மாணவனுமாகிய த. குணசுந்தரம் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள். இவற்றுக்கப்பால் இந்த ஆய்வுப் புத்தகத்தினை வாசித்து உணர்வு பூர்வமான முறையில் அணிந்துரையினை எழுதிய என்னுடைய கடல் கடந்த உறவு, முனைவர் பட்ட ஆய்வுக்கான நெறியாளர் பேராசிரியர், முனைவர் இ.பேச்சிமுத்து அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய, சிவமுத்தமாரியம்மன் ஆலயகுரு சிவஸ்ரீ சு.கு.வினாயகமூர்த்திக் குருக்கள் அவர்களுக்கும், வாழ்த்துரைகளை வழங்கிய சி.தவராசா, பா அரியநேத்திரன் அவர்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றிகள்.

இவற்றுக்கு மேலாக இந்த புத்தகம் செம்மைபெற ஒத்துழைப்பு வழங்கிய மனைவி சாரதாதேவி, மகள் ஷோபினிகா, மகன் ஜயனோவன், மகள் ஹர்சினிகா ஆகியோர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். இவற்றுக்கு மேலாக இந்த வரலாறு வெளிவருவதற்கு எந்தப் பொல்லாப்புமில்லாமல் என்னை சீராக இட்டுச் சென்ற இறைவனுக்கு என் நன்றிகள் யாவர்க்கும் மேலாகச் செல்லட்டும்.

***12.06.2016*** முருகுதயாநிதி

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆசியுரை | iii |
| வாழ்த்துரை | iv |
| வாழ்த்துரை | v |
| அணிந்துரை | viii |
| என்னுரை | xiv |
| 01. இலங்கை பற்றிய அறிமுகம் | 01 |
| 02. திருச்சியிலுள்ள அம்பிலாலந்றை | 12 |
| 03. உலகநாச்சி வருகையும் அம்பிலாந்துறையும் | 19 |
| 04. அரசியல் | 61 |
| 05. ஆலய வழிபாடு | 102 |
| 06. தீவுக்குடியிருப்பு பிரிந்து சென்றது | 168 |
| 07. கல்வி | 179 |
| 08. வாழ்வியல் சடங்கும் சம்பிரதாயங்களும் | 207 |
| 09. மந்திரமும் மக்கள் வாழ்வும் | 223 |
| 10. குடிமக்கள் | 240 |
| 11. கலைகள் | 253 |
| 12. விளையாட்டு | 264 |
| 13. கிராமிய விளையாட்டுக்கள் | 273 |
| 14. சமூக சேவை நிறுவனங்கள் | 279 |
| **பின்னிணைப்பு** | |
| அ. சமூக செயற்பாட்டாளர்கள் | 286 |
| ஆ. போடிகல்வெட்டு | 299 |
| இ. ஊஞ்சல் பாடல்கள் | 302 |
| ஈ. அம்மன் பத்து | 307 |
| உ. அம்மன் காவியம் | 310 |

# இலங்கை பற்றிய அறிமுகம்

இந்து சமுத்திரத்தின் முத்து எனவும், இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனவும், புன்னகைக்கும் மக்களின் தேசம் எனவும் சிறப்புப்படுத்தி அழைக்கப்படும் இத்தீவு நீண்ட வரலாற்றைக் கொண்டது. முற்காலத்தில் இலங்கை, இலங்காபுரி, நாகதீபம், தர்மதீபம், லங்காதுவீபம், என்று வடமொழியில் வழங்கிய பெயர்கள் சின்மோன்டு, சிலோன், தப்ரபேன் என்று கிரேக்கர்களாலும், செரண்டிப் என் அராபியர்களாலும், செரன்தீவு எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்ட இலங்கை 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசாக அறிவிக்கப்படும் வரை சிலோன் என்று அழைக்கப்பட்டது. இலங்கை இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையத்தில் அமைந்துள்ளது. இதன் பரப்பு 65,610 சதுரக் கிலோ மீற்றர் (25,418 சதுர மைல்) வடக்கிலுள்ள பருத்தித்துறைக்கும் தெற்கிலுள்ள தெய்வேந்திர முனைக்கும் இடையிலுள்ள தூரம் 447 கிலோ மீற்றர் ஆகும். இத் தீவு 1000 கிலோ மீற்றர் நீளமுடைய கடற்கரையைக் கொண்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 300 அடிக்கு மேற்பட்ட உயரத்தையுடைய பகுதி மலை நாடாகும். 103 ஆறுகளைக் கொண்டு அமைந்துள்ள இலங்கைத் தீவின் முதல் அரசன் இராவணன் ஆவான். அவனைத் தொடர்ந்து பல மாற்றங்கள் இடம்பெற்று ஆட்சி நீட்சி பெறுகின்றது.

## குமரிக்கண்டம்

குமரிக்கண்டத்தில் இருந்த உள்நாடுகளுள் இலங்கைத்தீவும் ஒன்று. ஈழத்திலுள்ள மலைத்தொடர்கள் குமரிமலையின் பகுதிகளே. சிவனொளிபாதமலை இக் கண்டத்திலுள்ள தெய்வீக மலையாகும். அந்த மலையிலேதான் சிவபெருமான் நான்கு முனிவர்களுக்கும் ஞான உபதேசம் செய்தார். (சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர்) கந்தபுராண வரலாறு மிகப் பழமையானது. அதன் பின்னர்தான் இராமாயாணம், பாரதம், சங்க காலத்து நூல்கள் என்பன கிடைக்கின்றன. சூரன் ஆட்சிக்கால முடிவில் பெரிய கடல்கோள் இடம்பெற்றிருக்கின்றது. அக் கடற்கோளினால்

இலங்கையின் முன்னிருந்த பெரும்பகுதி கால்வாய்களாக மாறியிருக்கின்றன. வீரவாகுதேவர் சூரனிடம் தூதாக வீரமகேந்திரம் சென்றதாகக் கூறப்படுகின்றது. வீரவாகு சென்ற காலத்தில் தரையாக இருந்து சூரன் ஆட்சி முடிவில் ஏற்பட்ட கடல் கோளினால் அத்தரைப் பகுதி சிறு கால்வாயாக மாறியது என்று குறிப்பிடுகின்றனர். இலங்கையும் இந்தியாவும்" ஒரு காலத்தில் ஒரே நாடாய் இருந்திருக்கின்றன. அதனால், இலங்கை, இந்தியாவில் வாழ்ந்துவரும் பூர்வகுடிகள் ஒரே நாட்டு மக்களே என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது.

குமரிக்கண்டம் பற்றிப் பல ஆதரபூர்வமான செய்திகளை தொல்லியல் ஆய்வாரளர் க. தங்கேஸ்வரி அவர்கள் தருகின்றார். உலகவரலாற்றில் குமரிக்கண்டம் மிகத் தொன்மையானதும், திராவிடரின் தாயகமுமாகும். இக்கண்டம் பற்றிப் பல ஆதார பூர்வமானதகவல்கள் தரப்படுகின்றன. 1,000 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் தற்போது இந்துமகா சமுத்திரம் இருக்கும் பரந்த கடற்பரப்பில் பெரும் நிலப்பரப்பு இருந்தது. தற்போது இலங்கைக்கு தென் கிழக்கே 550 கல் தொலைவில் ஆழ் கடலில் அன்னளவாக 10,000 அடி வரை மலை உயர்ந்திருந்தது. குமரிக்கண்டம் சிதைவுற்றபோது அக்கண்டம் முழுவதும் கடலில் அமிழ்ந்துபோக வடக்கே இமயமலை தோன்றியது. அச் சிதைவின்போது பல பூமித் துணிக்கைகள் எஞ்சி நின்றன அவற்றுள் ஒன்றே நமது இலங்கைத்தீவு. இலங்கைத்தீவு குமரிக்கண்டத்தின் ஒரு பகுதி, இக் கண்டம் லெமூரியாக் கண்டம் என்றும் வழங்கப்பெறுகின்றது.

இங்கு ஆதியில் இருந்து வாழ்ந்துவரும் மக்கள் தமிழர்கள் என வரலாறுகள் மூலம் அறியக்கிடைக்கின்றன. இலங்கைத்தீவின் அமையப்பெற்ற பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசத்தில் காலாகாலமாக மன்னர்களின் பார்வையும் பதிவும் இருந்துவந்துள்ளன. இப் பிரதேசம் வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே மாணிக்கங்கை வரையும், கிழக்கே வங்காள விரிகுடாவையும், மேற்கே ஊவாமலைத் தொடரையும் (வெல்லசப் பிரிவு) கொண்டு பரந்திருந்தது. தமிழ் பேசும் மக்களின் பரம்பல் இன்றைய உலகில் பல பாகங்களிலும் காணப்படுகின்றன.

அவர்களுடைய சமூக ஆளுமைகள் அந்தந்தப் பாகங்களில் சிறப்பாகக் அமையப் பெற்றிருக்கின்றன. சமூக ஆளுமைகளின் அடிப்படையில் பார்க்கும் போது, தமிழ்நாட்டைப் பின் புலமாகக்கொண்டு தமிழர்களின் பாரம்பரிய நடைமுறைகள் அமையப்பெற்றிருக்கின்றன.

## இலங்கையின் சமகால அரசியல்

இலங்கையில் தமிழர்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய அரசியல் பாரம்பரியங்கள் குபேரன், இராவணன் ஆகிய இயக்க அரசர்களுடன் ஆரம்பமாகின்றன என வரலாற்றாய்வாரளகள் குறிப்பிடுகின்றனர். குபேரன் முருக வழிபாட்டையும், இராவணன் சிவலிங்க வழிபாட்டையும் பின் பற்றியதாகக் குறிப்புக்கள் கிடைக்கின்றன. இதிகாசக் கதையோடு தொடர்புடைய இராவணன், இலங்கையின் முதல் மன்னன் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

வரலாற்றுத் தகவல்களின்படி இலங்கை தென்னிலங்காபுரியென தமிழகக் குறிப்புக்களில் இடம் பெற்றிருக்கின்றன. தென்னிலங்காபுரியின் முதல் அரசன் இராவணன் ஆவான். இராவணனைத் தொடர்ந்து கி.மு.543ஆம் ஆண்டு விஜயன் 700 தோழர்களுடன் இலங்கை வருகின்றான். கி.மு.380ஆம் ஆண்டு பண்டுகாபயன் ஆட்சியில் அனுராதபுரம் தலைநகராகின்றது. இது சுமார் 1400ஆண்டுவரை நீண்டது. கி.மு. 250ஆம் ஆண்டு காலத்தில் மௌரீயப் பேரரசர் மகனான அசோகனின் புதல்வன் மைந்ததேரர் மிகிந்தலைக்கு வந்து தேவநம்பியதீசனை பௌத்தனாக மாற்றினார். அதனைத் தொடரந்து கி.மு.245ஆம் ஆண்டு பிக்குணி சங்கமித்தை போதி மரக்கிளையுடன் வந்து அதனை அனுராதபுரத்தில் நட்டாள்.

கி.பி.205ஆம் ஆண்டு சோழ மன்னன் எல்லாளன் அசேலனைத் தோற்கடித்து 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான். பின்னர் விசிதபுர போரில் துட்டுகைமுனு எல்லாளனைத் தோற்கடித்தான். கி.மு 47- 42ஆம் ஆண்டு காலத்தில் அனுலா இலங்கையை ஆட்சி புரிந்துள்ளாள். இவள்தான் இலங்கையின் முதல் பெண் அரசி.

கி.பி.477 - 495 காலத்தில் காசியப்பனின் ஆட்சியின் கீழ் இலங்கை வருகின்றது. கி.பி.993ஆம்ஆண்டு 5ஆம் மகிந்தன் சோழர்கள் படையெடுத்த போது தப்பிச் செல்கின்றான். கி.பி.1017 ஆம் ஆண்டு இராசேந்திர சோழன் பாரிய படையெடுப்பினை மேற்கொண்ட போது 5ஆம் மகிந்தன் சிறைப்பிடிக்கப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டான். கி.பி.1070ஆம் ஆண்டு இவர்களுடைய ஆட்சி நிறைவுக்கு வருகின்றது. கி.பி.1153-1186ஆம் ஆண்டு காலங்களில் மகாபராக்கிரமபாகுவின் ஆட்சி இடம்பெறுகின்றது. இவன் 165 அணைகள், 3910 கால்வாய்கள், 163 நீர்த் தேக்கங்கள், 2376 சிறிய குளங்களைக் கட்டியவன். கி.பி.1215 ஆம் ஆண்டு கலிங்க மாகன் 100 கப்பல்களில் 690 கடல் மைல் தாண்டி 24000 படைவீரர்களுடன் பொலநறுவையைக் கைப்பற்றி ஆட்சி அதிகாரம் ஏறுகின்றான். இவன்தான் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தவன் என்கின்றது வரலாறு. பின்னர் முதலாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனான செம்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்தினை நோக்கிப் படையெடுத்து கி.பி. 1450-1467 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான். பின்னர் கி.பி. 1505-1658 வரை போர்த்துக் கேயரும், கி.பி.1658 -1796 வரை ஒல்லாந்தரும், கி.பி. 1796 - 1948 வரை பிரித்தானியரும் இலங்கையை ஆட்சி செய்தனர்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் D.S.சேனனாயக்க நாட்டின் முதலாவது பிரதமராகப் பதவியேற்றார். இவரது அமைச்சரவையில் சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன். அருனாசலம் பேன்றோர் அமைச்சர்களாக இருந்துள்ளனர். 1956ஆம் ஆண்டுவரை பிரித்தானிய கடற்படை திருகோணமலைத் துறைமுகத்தில் தங்கியிருந்தமை, அரிசி பங்கீட்டு முறையை நீக்கியமை தொடர்பாக நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக D.S.சேனனாயக்க பதவி விலகினார். அதனைத் தொடர்ந்து S.W.R.D.பண்டார நாயக்க 1956ஆம் ஆண்டு பிரதமரானார். இவர் சிங்கள மொழியினை தனிச் சட்டமாக மாற்றினார். தமிழர்கள் இச் சட்டத்தினை தமது மொழிக்கும் பண்பாட்டுக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தலாகக் கருதி 04.02.1956ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை துக்க தினமாக அனுட்டித்து, 05.06.1956ஆம் ஆண்டு இலங்கை முழுதும் அறப்போராட்டத்தில் ஈடுபட்ட போதுதான் 26.07.1957ஆம் ஆண்டு

S.J.V.செல்வநாயகம் அவர்களுடன் ஒப்பந்தமொன்று ஏற்பட்டது. இது பண்டா - செல்வா ஒப்பந்தம் என்ற பெயரில் வழங்கியது. இதில் "தமிழை ஒரு தேசிய சிறுபாண்மையினரது மொழி என்று ஒத்துக்கொள்ளும் வகையில் உத்தேச அரசியல் சட்டம் அமைய வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. பிரதமரின் நான்கு அம்சத்திட்டத்தின் கீழ் ஆட்சி மொழி அந்தஸ்தைப் பாதிக்காத வகையில் தமிழை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிருவாக மொழியாகக் கொள்ளும் ஏற்பாடுகளும் இருக்க வேண்டும். அம் மாகாணங்களில் இருக்கக் கூடிய தமிழ் தெரியாத சிறுபாண்மையினருக்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்". இந்த ஒப்பந்தத்திற்கு எதிராகப் பௌத்த பிக்குகளும் எதிர்க்கட்சியினரும் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக ஒப்பந்தம் மார்ச் மாதம் 1958ஆம் ஆண்டு கிழித் தெறியப்பட்டது.

1960ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமரானார் இவர் S.W.R.D.பண்டார நாயக்க அவர்களின் மனைவியாவார். இவருடைய காலத்தில் சமவுடமைப் பொருளாதாரமுறை கடைப்பிடிக்கப் பட்டது. சோவியத் ஒன்றியம், சீனா ஆகிய நாடுகளுடன் உறவைப் பலப்படுத்தி அணிசேராக் கொள்கையையும் கடைப்பிடித்தது. 1971ஆம் ஆண்டு இங்கு மாட்சிசப் புரட்சி ஏற்பட்டபோது அப் புரட்சி உடனடியாக அடக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசானதுடன் நாட்டின் பெயரும் ஸ்ரீலங்கா என மாற்றப்பட்டது. வில்லியம் கொபல்லாவ (22.05.1972 - 04.02.1978) ஜனாதிபதியாக இருந்துள்ளார். இவர்தான் நாட்டின் முதலாவது ஜனாதிபதியாவார். நாட்டின் பின்தங்கிய மாணவர்களுக்கும் பல்கலைக் கழகத்தில் கல்வியை வழங்குவதற்காகத் கல்வியில் தரப்படுத்தல் 1970ஆம் ஆண்டு காலத்தில் கொண்டு வரப்பட்டபோது பல்கலைக் கழகத்தில் திறமை வாய்ந்த தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்பு பறிக்கப்பட்டது. இது தமிழர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு உடனடிக் காரணியாக அமைந்தது.

1977ஆம்ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைத் தோற்கடித்து ஜீனியஸ் ரிச்சட் ஜெயவர்த்தனா பதவிக்கு வந்தார்.

(04.02.1978 - 02.01.1989) இவர் 1978ஆம் ஆண்டு புதிய அரசியல் அமைப்பைத் தோற்றுவித்தார். திறந்த பொருளாதாரக்கொள்கை, பிராஞ்சு அரசுப் பாணியிலான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையும் உருவாக்கினார். தெற்காசியாவிலே பொருளாதாரத்தைத் தாராளமாக்கிய முதல் நாடென்ற பெருமையையும் பதித்தது. 1983ஆம் ஆண்டு இன முரன்பாடு, 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பன ஏற்பட்டது. இவரைத் தொடர்ந்து ரணசிங்க பிரேமதாசா அவர்கள் நாட்டின் தலைவரானார். (02.01.1989 - 01.05.1993) இவருடைய காலத்திலும் மேற்கூறப்பட்ட கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டது. அத்தோடு மக்கள் விடுதலை முன்னணியினரின் இரண்டாவது போராட்ட ஆரம்பம், 1990ஆம் ஆண்டு இந்திய அமைதிகாக்கும் படை திருப்பி அனுப்பப்பட்டது என்பன இடம் பெற்றன. 1993.05.01ஆம் திகதி ரணசிங்க பிரமதாசா அவர்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னர் டிங்கிரி பண்டா விஜயதுங்க (02.05.1993 -12.11.1994) நாட்டின் தலைவர் பொறுப்பினை ஏற்றார். பின்னர் சந்திரிக்கா பண்டாரநாயக்க நாட்டின் தலைவராகின்றார். (12.11.1994 - 19.11.2005) இக்காலத்தில் பலவாறு சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை வெற்றியளிக்கவில்லை. அதனைத் தெடர்ந்து மகிந்த ராசபக்ச அவர்கள் தலைவரானார். (19.11.2005 - 09.01.2015) தற்போது மைத்திரிபால சிறிசேன அவர்கள் 09.01.2015ஆம் ஆண்டிலிருந்து நாட்டின் ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருக்கின்றார்.

## தமிழ்த் தேசிய அரசியல்

இலங்கையின் நவீன காலம் 1833ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கொல்புறுக்கமரன் திருத்தத்துடன் ஆரம்பமாகின்றது. எனினும், 1847ஆம் ஆண்டு காலங்களில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதனால் அரசாங்கம் பல வகையான பொருட்களுக்கு வரிகளை விதிக்கவே செய்தன. இதனால் நாட்டில் குழப்பநிலை அதிகரித்தது. 1869ஆம் ஆண்டு எமிலியா வசுட்டாட்ரிக்சு எனும் நோய் கோப்பி இலைகளுக்கு ஏற்பட்டதனால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. 19ஆம் நூற்றாண்டில் இலங்கைச் சிவில் சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதில் சாதி, சமூக, இன கட்டமைப்பு

பின்பற்றப்பட்டது. இதற்கு எதிர்ப்புக் கிளம்பியது. இதன் பிரதிபலனாக 1919ஆம் ஆண்டு சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் தலைமையில் இலங்கைத் தேசிய சங்கத்தை உருவாக்கினர். எனினும், கொழும்பு ஆசனத்தைப் பெறுவதில் ஏற்பட்ட முறுகலால் இச் சங்கம் 1920ஆம் ஆண்டு கலைந்தது. 1937ஆம் ஆண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் 50 : 50 பிரதிநித்துவத்தைக் கோரினார் எனினும், சோல்பரித் திட்டத்தில் இக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இவர் 1944ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரசை உருவாக்கினார். (ACTC) 1935ஆம் ஆண்டு லங்கா சமசமாக் கட்சியும், 1946ஆம் ஆண்டு D.S.சேனநாயக்கவினால் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் அமச்சராக இருந்த S.W.R.D. பண்டார நாயக்கவினால் 1951ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், 1965ஆம் ஆண்டு றோகண விஜய வீரவினால் மாக்சிய - லெனினிய கட்சியும், 1981ஆம் ஆண்டு அஷ்ரப்பால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும் பிரதான கட்சிகளாக உள்ளன. இலங்கையில் 67 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜீ.ஜீ.பொன்னம்பலம் D.S.சேனநாயக்கவுக்கு ஒத்துழைப்பு வழங்கியதை எதிர்த்து S.J.V.செல்வநாயகம் தலைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. (ITAK) இக்கட்சி இலங்கையின் முதன்மை தமிழ் அரசியல் கட்சியாக மாற்றம் பெற்றது. பின்னர் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும் (ACTC) இலங்கைத் தமிழரசுக் கட்சியும் (ITAK) இணைந்து தமிழ் ஐக்கிய முன்னணி எனும் பொதுக் கட்சியை உருவாக்கினர். இக் கட்சி பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி எனப்பட்டது. 1972ஆம் ஆண்டு காலத்தில் தமிழரசுக் கட்சி, தமிழ காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து தமிழர் கூட்டணி எனும் கூட்டமைப்பினை உருவாக்கினர். இதன் பின்னர் 1976ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அமைக்கப்பட்டது. இக்கட்சியில் ITAK, TELO, EPRLF, PLOT ஆகிய கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவராக இரா.சம்பந்தன் அவர்கள் செயற்படுகின்றார்.

# இலங்கையில் பண்டைக்காலமுதற்கொண்டு இடம்பெற்ற அரசியல்.

## இயக்கர் குடிவழி அரசுகள்

**(இலக்கம், அரசர் பெயர், தலைநகர், மொழி, மதம், காலம் எனும் வகையில் அமைகின்றது.)**

1. குபேரன் - அழகாபுரி - தமிழ், வடமொழி - சைவம் சிறப்பாக முருகவழிபாடு - காலம் குறிப்பிடப்படவில்லை
2. இராவணன் - இலங்காபுரி - வடமொழி, தமிழ் - சைவம் - சிவலிங்க வழிபாடு - கலியுக ஆரம்ப சகாப்தம்
3. இராவணன் ஆட்சிக்குப் பின்னர் ஒரு யுகம் நீரால் பாழ்பட்டிருந்தது.
4. அத்தினாபுரியிலிருந்து குருகுலநாகர் வருகை - அரசிருக்கை இல்லை - தமிழ், வடமொழி - வைதீக மதம் - கலி 800
5. இயக்கரும் குருகுல நாகரும் இணைந்த ஆட்சி - உகந்தை நகர் தமிழ், வடமொழி - வைதீக மதம் - கலி 806 — 1400
6. இயக்கர், அத்தினாபுரிநகர் இணைந்த ஆட்சி விண்டு அணை (விந்தனை) தமிழ் மொழி மேலோங்கலாயிற்று சைவம் - முருகன், பத்திரகாளி கலி 2860 - 3020
7. இயக்கர் - தட்சனாபதி - தமிழ் - சைவம் - பத்திரகாளி - கலி 3020

## நாகர் குடிவழி அரசுகள்

1. அத்தினாபுரி குருகுலநாகர் (இயக்கருடன் இணைந்த ஆட்சி) - உகந்தை தமிழ், வடமொழி - சைவம் - கலி - 806 — 1400
2. குருகுலநாகர் - மணற்றிடர், முள்ளுத்தீவு - தமிழ்மொழி மேலோங்கலாயிற்று - சைவம் - நாக, சிவ வழிபாடு - கலி 2706
3. மண்டு நாகன் - மண்டூர், நாகர்முனை - தமிழ் - சைவம் - சிவ வழிபாடு - கலி - 2709
4. நாகர் இயக்கர் இணைந்த ஆட்சி - விண்டு, அணை (விந்தனை) தமிழ் - சைவம் - நாக, முருக, பத்திரகாளி வழிபாடு - கலி 2860-3020
5. குருகுல நாகர் - மண்ணாறு, மணற்றிடர் - தமிழ் - சைவம் - கலி 3020
6. கொட்டாயன் - மணிபுரம் (யாழ்குடாநாடு) - தமிழ் - சைவம் - கலி 3110
7. கோட்டியன் கோட்டியனூர் - கொட்டியாபுரம் - தமிழ் - சைவம் - கலி 3340
8. நாகர்குலத் திரிதாட்டிக ஆரியன் - மணிபுரம் - தமிழ் - சைவம் - கலி 4220
9. நாக அரசன் - மணிபுரம் - தமிழ் - சைவம் - கலி 4250

## பரிதிகுல இரகுவம்சக் குடிவழி அரசுகள்

1. காலசேனன் (காளிசேனன்) - காளிதேசம் - வடமொழி - இரகுவமிசம் - கலி 2709

## கலிங்கர் குடிவழி அரசுகள்

1. சிறிகுலசேனன் - விஜயதுவீபம் - தமிழ் - சைவம் - கலி 2790 - 2806
2. கூத்திகன் - காளிதேசம் - தமிழ் - சைவம் - கலி 2806 - 2868
3. சேனன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - கலி 2868
4. இரஞ்சலன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - கலி 3020
5. சிறிகுலன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - கலி 3020 - 3070
6. வாகூரன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - கலி 3070 - 3110
7. பிரசின்னசித்து - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - கலி 3020 - 3070
8. தாசகன், நாசகன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - கலி 3150 - 3070
9. தனசேனன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - கலி 3340
10. பிரசேது - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - கலி 3420
11. தினகரசேனன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - கலி 3130
12. புவனேயபாகு - உன்னரசுகிரி - தமிழ் - சைவம் - கலி 3130
13. மனுநேயகயபகு (மேகவன்னன்) - உன்னரசுகிரி - தமிழ் - சைவம் - கலி 3150
14. ஆடகசௌந்தரி - உன்னரசுகிரி - தமிழ் - சைவம் - கலி 3130
15. மாகோன் - தோப்பாவை - தமிழ் - சைவம் - கலி 4250
16. சுகதிரன் - வட மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - மாகனுக்குச் சமகாலம்
17. வரதகுணன் - தமிழ் - கலி 4290 குறிப்பு இல்லை
18. சமுகதிரன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - 40 வருடங்கள்
19. பரதசுந்தரன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - 60 வருடங்கள்
20. இராசசந்திரன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - 16 வருடங்கள்
21. யாகசேனன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - 50 வருடங்கள்
22. குகசந்திரன் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம் - 10 வருடங்கள்
23. படையாட்சிகுடி, கலிங்க குலம், வங்கர், சிங்கர் - மண்முனை, மட்டக்களப்பு, உன்னரசுகிரி - தமிழ் - சைவம் - 70 வருடங்கள்
24. மாருதசேனன் - தோப்பாவை - தமிழ் - சைவம் - கலி 4640
25. எதிர்மனசிங்கன் - தோப்பாவை - தமிழ் - சைவம் - கலி 4640 - 4680

## சிங்கர் குடிவழி அரசுகள்

1. விஜயன் - விஜயதுவீபம் - பழைய சிங்கள மொழி - சைவம் - கலி 2750 -2790
2. பந்துவதசன் - விஜயதுவீபம் - பழைய சிங்கள மொழி - சைவம் - கலி 2806
3. சேரர் நாகன் - அனுரதபுரம் - பழைய சிங்கள மொழி - பேளத்த அறிகுக காலம் கலி 2030
4. தெத்ததீசன் - அனுரதபுரி - பழைய சிங்கள மொழி - பேளத்தம் - கலி 3340
5. மேகவன்னன் - விஜயதுவீபம் - சிங்களம் - பௌத்தம் - கலி 3500
6. மிகுந்தன் - அனுரதபுரி - சிங்களம் - பௌத்தம் - கலி 3895
7. இலங்கைச் சிங்கன் - மட்டக்களப்பு - சிங்களம் - பௌத்தம், சைவம் குறிப்பு இல்லை
8. சேனன்தோப்பாவை - சிங்களம் - பௌத்தம் - குறிப்பு இல்லை
9. குமாரசிங்கன் - மட்டக்களப்பு - சிங்களம் - பௌத்தம், சைவம் - கலி 4080
10. கதிர்சுதன் - மட்டக்களப்பு - சிங்களம் - பௌத்தம், சைவம் - கலி 4115
11. மதிசுதன் - மட்டக்களப்பு - சிங்களம் - பௌத்தம், சைவம்
12. நாதன் - மட்டக்களப்பு - சிங்களம் - பௌத்தம், சைவம் - கலி 4780
13. லோகேஸ்வரன் - திசைமாறாமை - சிங்களம் - பௌத்தம் - கலி 4780
14. தினசிங்கன் - மட்டக்களப்பு - சிங்களம் - பௌத்தம் - கலி 4820
15. அணிகங்கன் - தோப்பாவை - சிங்களம் - பௌத்தம் - கலி 4820
16. சிங்கர்குல ஆட்சி - உன்னரசுகிரி - சிங்களம்- பௌத்தம்
17. சிங்கர், வங்கர் துணையுடன் ஆட்சி (கண்டி) - கண்டிசிங்களம்- பௌத்தம் 38 வருடங்கள்
18. இராசசிங்கன் - கண்டிசிங்களம் - தமிழ், சைவம் - கலி 4680
19. விமலதர்மன் - கண்டி சிங்களம் - பௌத்தம் - கலி 4722
20. இராசசிங்கன் - கண்டி சிங்களம் - பௌத்தம் - கலி 4738-4758
21. ஸ்ரீவிஜயராசசிங்கன் - கண்டி சிங்களம் - தமிழ், பௌத்தம் - கலி 4830
22. கீர்த்தி ஸ்ரீஇராசசிங்கன் - கண்டி சிங்களம், தமிழ், பௌத்தம்
23. இராசாதி இராசசிங்கன் - கண்டி - தமிழ் - சைவம் - கலி 4680

## வங்கர் குடிவழி அரசுகள்

1. எல்லாளன் - வடமேற்குத் தொடங்கி வடகிழக்கு வரையுள்ள பகுதி - தமிழ் - சைவம், பௌத்தம் - கலி 2806
2. மகாசேனன் - அனுராதபுரம் - தமிழ், வடமொழி - சைவம், பௌத்தம்
3. வங்கர், சிங்கர், கலிங்கர் - மட்டக்களப்பு - தமிழ் - சைவம்

### போர்த்துக்கேய, ஒல்லாந்தர் குடிவழி அரசுகள்

1. போர்த்துக்கேயர் - மண்ணாறு, மணற்றிடர் - போர்த்துக்கேயம் - கிறிஸ்தவம் *கலி 4640 (கி.பி 1560)*
2. போர்த்துக்கேயர் - மட்டக்களப்பு - போர்த்துக்கேயம் - கிறிஸ்தவம் *கலி 4680 (கி.பி 1626)*
3. போர்த்துக்கேயர் - புலிமாறன் கோட்டை - வட மட்டக்களப்பு போர்த்துக்கேயம் - கிறிஸ்தவம் - கலி 4722 (கி.பி 1622)
4. போர்த்துக்கேயர் - மணற்றிடர் பண்ணை - போர்த்துக்கேயம் - கிறிஸ்தவம்
5. போர்த்துக்கேயர் - மட்டக்களப்பு - போர்த்துக்கேயம் - கிறிஸ்தவம் - கலி 4738 (கி.பி 1622)
6. ஒல்லாந்தர் - ஒல்லாந்தம் - கிறிஸ்தவம்
7. போர்த்துக்கேயர் - மட்டக்களப்பு கோட்டை - போர்த்துக்கேயம்- கிறிஸ்தவம் *கலி 4738 (கி.பி 1622)*
8. ஒல்லாந்தர் - யாழ்ப்பாணம் - ஒல்லாந்தம் - கிறிஸ்தவம் - கலி 4750
9. ஒல்லாந்தர் - யாழ்ப்பாணம் - ஒல்லாந்தம் - கிறிஸ்தவம் - கலி 4810
10. ஒல்லாந்தர் - யாழ்ப்பாணம் - ஒல்லாந்தம் - கிறிஸ்தவம் - கலி 4830
11. ஒல்லாந்தர் - யாழ்ப்பாணம் - ஒல்லாந்தம் - கிறிஸ்தவம் - கி.பி 1747-1782
12. ஒல்லாந்தர் - மட்டக்களப்பு - ஒல்லாந்தம் - கிறிஸ்தவம் - கி.பி 1766
13. ஒல்லாந்தர் - மட்டக்களப்பு - ஒல்லாந்தம் - கிறிஸ்தவம் - கலி 4815
14. ஆங்கிலேயர் - கொழும்பு - ஆங்கிலம் - கிறிஸ்தவம் - கி.பி 1796 - 1948
15. 1948.02.04ஆம் திகதி இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெறுகின்றது.

ஆதாரம் : மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி ___ (தகவலின் சுருக்கம்)

# திருச்சியிலுள்ள அம்பிலாலந்துறை

இந்தியாவுக்கு பல முறை சென்று வந்தாலும் எனக்கு திருச்சியிலுள்ள அம்பிலாலந்துறைக்குச் செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. (அம்பிலாலந்துறை இன்றைய நிலையில் அன்பில் என்ற பெயரினால் அழைக்கப்படுகின்றது.) ஆய்வினுடைய தேடல்களால் உண்மைகள் மெய்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால், 17.03.2016ஆம் ஆண்டு எப்படியோ அம்பிலாலந்துறையினைத் தரிசிக்க வேண்டும் என்பதற்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலிருந்து தனியாகப் புறப்பட்டு திருச்சி சென்று, அங்கிருந்து சத்திரம் பேருந்து நிலையம் சென்று, அங்கிருந்து லால்குடி பேருந்து நிலையம் சென்று பின்னர் அம்பில் பேருந்தில் அம்பிலாலந்துறையினை அடைந்தேன்.

அங்கு சென்றதும் எனக்குப் பேருவகை, காரணம் நாம் பேச்சு மூலம் சொன்ன கிராமத்தில் எனது காலடி பட்டதனையிட்டு. முதலில் அம்பிலாலந்துறையில் இருக்கின்ற பிரம்மபுரீஸ்வரரைத் (சிவபெருமானை) தரிசித்தேன். இந்தக் கோவில் இன்று ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலின் உபதிருக் கோயிலாகக் காணப்படுகின்றது. அது சோழர் காலத்தில் கட்டப் பட்ட கற்கோயில். பூசைகள், திருவிழாக்கள் என்பன இடம் பெறுகின்றன. தினப்பூசை இடம் பெற்றபோதும், அக் கோயில் செழிப்பாகத் தோற்றமளிக்கவில்லை. பலர் ஆலயத்தைச் சுற்றி சுத்தம் செய்கின்றனர். சிலர் ஆலய பூசைக்கு மாலை கட்டி ஆயத்தம் செய்கின்றனர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இறைவன் சத்தியவாகீசர், இறைவி சவுந்தரநாயகி, தீர்த்தம் காயத்திரி. கீழன்பில், ஆலந்துறை போன்ற புராணப் பெயர்களுடைய இத்தலத்தினை பிரமன், வாகீச முனிவர் வழிபட்டதாக கூறப்படுகின்றது. திருச்சிராப்பள்ளியில் மாந்துறை, திருப்பாற்துறை போன்ற துறையினை பின்னொட்டாகக் கொண்டுவருகின்ற கோயில்களும் உண்டு. திருச்சிராப்பள்ளி மாவட்டதித்தி 13 கோயில்கள் பாடல் பெற்ற தலங்கள் அவற்றுள் இந்த மூன்று தலங்களும் அடங்கும். இத்தலங்கள் மூன்றும் பக்கம் பக்கமாகவே உள்ளன.

அங்குள்ள சமூக பண்பாட்டுத் தளத்தினை அவதானித்தால் கிராமத்துடன் கூடிய வாழ்க்கை முறையில் அங்குள்ளவர்கள் பலர் வாழ்கின்றனர். பலர் அடிமட்டப் பொருளாதாரத்தில் இருக்கின்றனர். இளமைத் திருமணத்தினை அவதானிக்கமுடிந்தது. சேற்று நிலங்கள் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் காணப்படுகின்றது. அத்துடன் இருவாட்டி மணல் நிலங்களும் காணப்படுகின்றன. வேளாமையும் கரும்பும் வாழைத் தோட்டங்களும் பெருவாரியாகக் காணப் படுகின்றன. வயல் வெளிகளுக்கு நடுவிலும் வீதிக் கரையை அண்டியும் வீடுகள் காணப்படுகின்றன. ஓலையாலான வீடுகளையும் ஆங்காங்கே அவதானிக்க முடிந்தது. மக்களில் பலர் அன்றாடம் வேலை செய்து சம்பாதிப்பவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களு டைய வாழ்க்கை சந்தோசமாகக் கழிவதனை அவதானிக்க முடிந்தது. பேருந்து அப்பக்கமாகச் செல்வது குறைவு அம்பில் ஸ்ரீமாரியம் மன் கோயில் வரையும் சில மணி நேரத்தின் பின்னர் ஒரு பேருந்து சென்று வருகின்றது. அரச பேருந்து நேரசூசிப்படியே பல மணி நேரத்திற்குப் பின்னர் லால்குடியில் இருந்து செல்கின்றது. லால்குடியில் இருந்து இக்கோயில் 7 கி.மீ தூரத்தில் உள்ளது. இங்குள்ள வயல் வெளியினை ஊடறுத்து சென்னை செல்கின்ற புகை வண்டிப் பாதை அமையப்பெற்றுள்ளது.

இவ்வாறான நிலையில் ஆலயம்பற்றி விசாரிக்கத் தொடங்கினேன். இந்த ஆலயமானது பண்டைக் காலத்திலிருந்து இருக்கின்றது என்றும், பல்லவர் காலத்தில் அப்பரும் சம்பந்தரும் இங்குள்ள சிவனை அகக் காட்சியில் எண்ணி தேவாரம் பாடியுள்ளனர் என்றும், பின்னர் சோழ மன்னான ஆதித்த சோழனின் மகன் பராந்தக சோழனால் கற்கோயிலாகக் கட்டப்பட்டதென்றும் கூறினார்கள். சோழர் என்பது பண்டைக் காலந்தொட்டே ஆட்சி செய்துவரும் குடி அல்லது, குலத்தின் பெயராகும் என்பது பரிமேலழகர் கருத்தாகும். சோழ அரசு காவிரி ஆற்றுப்படுக்கையில் தோற்றம் பெற்று கி.பி 2ஆம் நூற்றாண்டில் தளர்வுற்று, கி.பி 9 நூற்றாண்டில் நிலைபெற்று, 13ஆம் நூற்றாண்டில் பொற்காலமாகத் திகழ்ந்தது. இவ்வாட்சியில் முதலாம் பராந்தகசோழன் ஆட்சிக்காலம் கி.பி 907 - கி.பி.955 வரையாகும்.

அம்பிலாலந்துறையிலே பெரிய கல்விச்சாலை இருந்தது என்றும், இங்கு பிராமணர்கள் கல்வி கற்றுக் கொடுத்தனர் என்றும், இப் பிராமணர்களை மன்னர்கள் வட நாட்டிலிருந்து அழைத்து வந்து அம்பிலாலந்துறையில் இருத்தி பிரமதேயங்களை அமைத்து அதனூடாகக் கல்வி கற்பித்துக் கொடுத்தனர் என்றும் குறிப்பிட்டனர். அதாவது, வேதத்தையும் குறிப்பாகச் சாம வேதத்தில் காணப்படுகின்ற ஜெய்மினி வேதத்தினைக் கற்றுக் கொடுத்த தாகத்தான் பலரும் குறிப்பிட்டனர். அத்தோடு மீமாஞ்சையினையும் கற்பித்துக் கொடுத்துள்ளனர். பிரமதேயம் என்பது பிராமணர் குடியிருப்புக்களாகும். சோழர் காலத்தில் பிரமதேயம் பற்றி தெளிவுபடுத்தப்படுகின்றது.

அம்பிலாந்துறையிலே காலாகாலமாக அமுது கொடுக்கப்பட்ட தென்று, இராமநாததேவர் தானம் கொடுத்தமை பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. பிராமணர்களுக்குத் தானமாக இந்த ஊரினை அக்காலத்தில் கொடுத்ததாகவும் கூறினர். ராமநாததேவர் தானம் கொடுத்தமை பற்றி சுந்தரசோழன் காலச் செப்பேடு தெளிவுபடுத்துகின்றது. தஞ்சை மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு பக்கமாக திருச்சோற்றுத்துறை ஆலயம் உள்ளது இவ்வாலயம் அடியவரின் பசிதீர உணவளித்த ஆலயமாகும். அதாவது, பிறவிப் பிணிதீர இறைவன் வீடுபேறு வழங்கும் தலம் இது. இத் தலங்கள் எல்லாம் அக்காலத்தில் தானம் கொடுத்தமை பற்றிப் பேசுகின்றது. அதனால் அவர்கள் அங்கிருந்து சிறப்பாக வேதங்களை ஓதியது மட்டுமன்றி மக்களுக்குக் கல்வியையும் வழங்கினர்.

இங்கு வாழ்கின்ற மக்களை விசாரித்த போது அவர்கள் பல குடிகளைச் சாந்தவர்களும் சாதியினைச் சார்ந்தவர்களும் இருக்கின்றார்கள் என்றும், அவர்களுடைய தொழிலினை அவர்களாகவே செய்கின்றனர் என்றும் குறிப்பிட்டனர். அதாவது, சலவைத் தொழிலாளி, நாவிதர், நாசிவர், பள்ளர், பிராமணர் என்று பலசாதிமக்களும் அங்கிருக்கின்றனர். பள்ளரில் ஒருவர் சிவனுக்கு பூமாலை கட்டிக் கொடுப்பதனையும் அவதானித்தேன்.

காலநிலையினை அவதானித்தபோது வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றினை அடிப்படையாகக் கொண்டு நாம் வேளாமை செய்வது போன்ற காலநிலையில் அவர்களும் வேளாமைச் செய்துள்ளனர். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வேளாண்மையுடன் காணப்படும் நிலங்களே காணப்படுகின்றன. இடையிடையே சிறிய சிறிய காடுகளும் தெரிகின்றன. ஐப்பசி தொடங்கி பங்குனி மாதம் வரையான பருவகாலத்தினை அடிப்படையாகக் கொண்டு அறுவடை இடம் பெற்றமையினை அவதானிக்க முடிந்தது. இவ்வாறாக எமது பிரதேச மண்ணோடு ஒத்துச் செல்கின்ற பல வகையான அம்சங்களை அவதானிக்க முடிந்தது. இந்த தகவல்கள் யாவும் இந்த ஆய்வினை மேலும் ஒருபடி முன்கொண்டு செல்வதற்கு ஊன்றுகோலாயின.

இவ்வாறான பின்னணியினை வைத்துப் பார்க்கும் போது அம்பிலாலந்துறையில் 1766ஆம் ஆண்டு காலத்தில் நாயக்கர் மன்னர்களின் ஆட்சி இருந்தது. அக் காலத்தில் அறுமக்குட்டிப் போடி அங்குசென்று கற்ற குழுவினரை அழைத்து வருவதென்பது இலகுவான காரியமல்ல. அப்படியானால் அறுமக்குட்டிப் போடிக்கும் அங்குள்ள மன்னர்களுக்கும் சிறந்த தொடர்பு இருந்திருக்கும். அதனைப் பயன்படுத்தி இவர் அவர்களை இங்கு அழைத்து வந்திருக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும், அம்பிலாந்துறையில் இருந்த வன்னியர்களின் முன்னோர்கள் மற்றும் சமகாலத்தவர்கள் அம்பிலாலந்துறையில் இருந்திருப்பார்கள் அவர்கள் மூலம் இக்குழுவினர் அம்பிலாந்துறைக்கு அழைத்துவர வாய்ப்பு ஏற்படுகின்றது. அம்பிலாலந்துறையை மன்னர்கள் தளமாகக் கொண்டு செயற்பட்டமையினால் மன்னர்களின் தொடர்பின்றி இந்தச் செயற்பாடு இடம்பெற்ற வாய்ப்பிருக்க முடியாது.

அம்பிலாலந்துறையில் இருந்த கற்ற குழுவினரை அழைத்து வந்த அறுமக்குட்டிப்போடி அம்பிலாந்துறையில் வைத்து கல்வி புகட்டி இருக்கின்றான் என்ற பின்னணியில் அவதானிக்கக் கூடியதாக இருப்பது அறுமக்குட்டிப் போடி காலத்துக்கு முன்னரே இங்கு கல்வி

நிலையம் இயங்கியிருக்கின்றது. அதனால் கற்ற குழுவினரை அழைத்து வந்த அவர் இங்குள்ள கல்வி நிலையத்தில் வைத்து கல்வி புகட்டியிருக்க சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அந்தக் கல்வி நிலையம் கற்பதற்குப் பொருத்தமுடைய இடமாக இருந்திருக்கும். ஆகவே, அறுமக்குட்டிப்போடி "போடி" நியமனம் பெற்றதும் கல்வி நிலையத்தினை கல்வி கற்கக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தி இருக்கின்றான். இவன் பதவி ஏற்பதற்கு முன்பாகவே கல்வி நிலையமசீர் செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் இவருக்கு இருந்திருக்கின்றது. பதவியேற்றதும் இந்த கைங்கரியத்தினைச் உடனே செய்து முடித்திருக்கின்றான்.

அந்த கற்ற குழுவினர் பல நூற் படிப்பினை சிறப்பாகக் கற்றவர்கள் இவர்களைப் பண்டிதர் என்கின்றனர். அதாவது, கல்வியை உரைப்பதில் பாண்டித்தியம் பெற்றவர்கள். இவர்கள் செம்பனைத் தலைவராகக் கொண்டு அறுவர் வந்திருக்கின்றனர். அம்பிலாலந் துறையில் கூறப்பட்ட விடயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவர்கள் வேதக் கல்வியை உரைப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள். இவர்களுடைய கல்விப் பாரம்பரியம் வட இந்திய கல்விப் பாரம்பரியத்தினை ஒத்ததாகவே காணப்படுகின்றது. எது எவ்வாறாக இருந்தபோதும் 1766ஆம் ஆண்டு காலத்தில் அம்பிலாந்துறையில் கல்வி நிலையம் இருந்தமை பற்றிய தகவல் ஆதாரபூர்வமாக கல்வெட்டு மூலம் கிடைக்கின்றது. இத்தகைய ஆதார பூர்வமான தகவலின் அடிப்படையில் தற்போது காணப்படுகின்ற அம்பிலாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தின் ஆரம்பகாலம் கி.பி.1766ஆம் ஆண்டு என்பது மாற்றுக் கருத்துக்கு இடமில்லாமல் நிருபணமாகின்றது.

அம்பிலாலந்துறையில் ஸ்ரீமாரியம்மன் கோயிலையும் தரிசித்தேன். அந்த மாரியம்மன் ஆலயம் காலத்தால் முற்பட்டது. இன்று கருவறை கற்கோயிலால் கட்டப்பட்டிருக்கின்றது. அக் கோயில் மூன்று மண்டபங்களுடன் காணப்படுகின்றது. வெளி மண்டபம் திறந்த வகையில் கட்டப்பட்டுள்ளது. ஆரம்ப காலங்களில் பூசாரியார்தான் பூசை செய்திருக்கின்றார். பத்தாசி நடைமுறை இங்கும் இருந்திருக்கின்றது. எந்தப் பத்தாசி என்பதில் தெளிவில்லை.

கும்பாபிஷேகம் இடம்பெற்றதன் பின்னர் குருக்கள் பூசை செய்கின்றார். இங்கு பூசை செய்கின்ற குருக்களை விசாரித்தபோது அவர் கூறினார், எங்களுக்கு எப்போது ஆரம்பித்தது என்று தெரியாது ஆனால், பண்டைக் காலமிருந்து பூசை நடைமுறைகள் இங்கு இருக்கின்றது என்றார்.மேலும், இவர் கூறுமிடத்து, சரபோஜிகள் காலத்திற்கு முன்னரிருந்து இக்கோயில் இருப்பதாகப் பெரியோர்கள் கூறினார்கள் என்றார். சரபோஜிகள் காலத்தில் இந்த மாரியம்மன் கோயில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வாய்ப்ர்ண்டு. இவர்களுடைய காலம் கி.பி *1676* - கி.பி *1885* வரையாகும். சோழ மன்னர்களால் மாரியம்மன் வழிபட்டதாக தெளிவான குறிப்பில்லை. இவர்கள் சொல்கின்ற குறிப்பையும் வைத்துப்பார்க்கும் போது மராட்டியர் காளி, மாரி போன்ற தெய்வங்களை வழிபட்டிருக்கின்றனர். எனவே, இவர்களால் அம்பிலாலந்துறையில் மாரியம்மன் வழிபாடு இடம்பெற்றிருக்க வாய்ப்பு ஏற்படுகின்றது.

அறுமக்குட்டிப்போடி அம்பிலாலந்துறையுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தமையினால் கற்ற குழுவினரையும், அங்கு சிறப்புப் பெற்றிருந்த மாரியம்மன் வழிபாட்டு நெறிமுறை கூறுகின்ற பத்தாசிகளையும், மந்திர ஏடுகளையும் கொண்டுவந்து இங்கு இவ்வழி பாட்டினை ஆரம்பித்திருக்கின்றான் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. எனவே, அம்பிலாலந்துறையில் அம்பிலாந் துறை மாரியம்மன் வழிபாட்டுக்குப் பின்பற்றப்படுகின்ற வாலபத்தாசி முறையே இருந்திருக்கும். நாம் பயன்படுத்தும் பத்தாசி முறை அங்கு இல்லை. இன்று ஆகம முறையில் மட்டுமே பூசை இடம்பெறுகின்றது. பத்தாசிமுறை நீண்ட காலத்திற்கு முன்பே கைவிடப்பட்டுள்ளது.

எமது கிராமத்திலும் ஆரம்ப காலங்களில் ஸ்ரீமாரியம்மன் என்ற பெயருடன்தான் தற்போதுள்ள சிவமுத்துமாரியம்மன் அழைக்கப் பட்டிருக்கின்றது. கொத்துக்குளத்தில் உள்ள மாரியம்மனும் ஸ்ரீமாரியம்மன் என்ற பெயருடந்தான் அழைக்கப்படுகின்றது இவ்வாறான பெயர் அமைப்புக்கிடையே நெருங்கிய தொடர்பு இருக்கின்றமை அம்பிலாலந்துறையுடன் இருக்கின்ற வரலாற்றுத் தொடர்புக்கு மேலும் வலுச் சேர்க்கின்றது.

பொதுவாக அம்பிலாலந்துறையினுடைய நில அமைப்பு, வாழ்க்கை முறை, சாதியமைப்பு, காலநிலை, ஆலய அமைந்திருக்கும் சூழல் பாடசாலை அமைப்பு முறை, அங்கு சொல்லப்பட்ட வரலாற்றுத் தகவல்கள் யாவும் எமது பிரதேசத்தினுடனும் குறிப்பாக அம்பிலாந் துறையுடனும் ஒத்துச் செல்வதால் இந்த இரண்டு கிராமங்களுக்கு மிடையே பல வகையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றமை தெரிய வருகின்றது.

உழவரில் ஆறு குடி வந்த விதம் என்று வருகின்ற மட்டக்களப்பு பூர்வசரித்திரம் எனும் பகுதியில் அம்பிலாலந்துறை வடநாட்டில் உள்ள இடம் என்ற மயக்கம் வருகின்றது. கலியுகம் சென்ற ஆண்டு மூவாயிரத்து இருபதாம் வருஷம் உலக குருநாதர் சொற்படி மட்டக்களப்பினை அரசு புரியும் படையாட்சி குலத்துச் சிறிகுலன்

சிவன் திருப்பணிக்கு "வட நாட்டுச் சோழ தேசத்து" அம்பிலாலந்துறையிலிருந்து ஆறு பிராமணக் குடும்பங்களை பாண்டிய சோழனுக்குத் திருமுகமனுப்பி அவர்கள் சம்மதப்படி வரவழைத்து பணிக்கு அமர்த்தி இருக்கின்றான். அம்பிலாலந்துறை என்பது தமிழ் நாட்டில் திருச்சிராப் பள்ளியில்தான் இருக்கின்றது என்பதோடு அங்கு பிரா மணர்கள் வாழ்ந்துள்ளனர் இவர்கள் சோழர் காலத்தில் வடநாட்டிலிருந்து குடியமர்த்தப்பட்டவர்கள் என்பதும், சோழ மன்னர்களுடைய ஆட்சி நிலவியதென்பதும் ஆய்வுவழி நிருபணமாகின்றது. எனவே, இங்கு வடநாடு என்பது தமிழ் நாட்டினைத்தான் சுட்டுகின்றது. (மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் ப : 87) எனினும், வட நாட்டிலும் அம்பிலாலந்துறை உண்டா? என்பதனை கள ஆய்வு மூலம் அறியவேண்டியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் பார்க்கும் போதும் அம்பிலாலந்துறை பிராமணர்கள் வாழ்ந்துள்ள செறிவான இடமாக இருந்திருக்கின்றது. அங்கிருந்து பல பிராமணர்கள் பல சேவைகளைச் செய்வதற்காக மட்டக்களப்பின் பல பிரதேசங்களுக்கு அவ்வப்போது குடியேற்றப் பட்டிருக்கின்றார்கள். அக் குழுவில் இருந்து கற்ற குழுவினரை அம்பிலாந்துறையில் அறுமக்குட்டிப்போடி குடியேற்றியமை தெளிவுபடுத்தப்படுகின்றது.

# உலகநாச்சி வருகையும் அம்பிலாந்துறையும்

கலிங்கதேசம் (பழையபெயர்) என்றழைக்கப்படும் ஒரிசா தேசத்திலிருந்து அந்நாட்டினை ஆட்சி நடத்திக்கொண்டிருந்த குகசேனன் என்பவனுடைய புத்திரி உலகநாச்சி, கி.பி 3ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் இலங்கை வந்தாள். இவள் கௌதம புத்தருடைய தசனத்தை தனது நீண்ட கூந்தலுக்குள் மறைத்துக்கொண்டும், கைலயங்கிரியில் குகவம்சத்தார், முன்னாளில் எடுத்துவைத்திருந்த சிவலிங்கத்தையும் எடுத்துக்கொண்டும், தனது சகோதரன் உலகநாதனுடன் (சிவநாதன்) கப்பல்மூல் இலங்கை வந்தடைந்தாள். அவள் விஜயதூபத்தை ஆண்டு கொண்டிருந்த (அனுராதபுரம்) மேகவண்ணன் (கி.பி.301 - 382) எனும் அரசனிடம் சென்று தன்னைப் பற்றி அறிமுகப்படுத்தி, தான் கொண்டுவந்த கௌதமபுத்தருடைய தசனத்தை அவனிடம் கொடுத்திருக்கின்றாள். பின் அரசனிடம் காடுகளால் சூழப்பட்ட குடிமக்கள் வாழ்வில்லாத இடம் ஒன்று தனக்கு வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றாள். அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட மேகவண்ணன் தனது சினேகிதனான குணசிங்கன் (கி.பி - 398) எனும் மட்டக்களப்பு மன்னனுக்கு மடலொன்று எழுதி அவளிடம் கொடுத்து அனுப்பியிருக்கின்றான். அவள் அம் மடலைக்கொண்டு குணசிங்கன் ஆட்சி செய்து கொண்டிருந்த பாணகைக்குச் சென்று அவனிடம் கொடுத்திருக்கின்றாள். மடல் கண்டு மகிழ்ந்த குணசிங்கன், அவளை விசாரித்தபோது அவள் தனது சந்ததியினைச் சேர்ந்தவள்தான் என்பதனை அறிந்து, சந்ததியுரிமை கொண்டாடி அவளுடைய வேண்டுகோளை நிறைவு செய்கின்றான். அதற்காக அவளுக்கு **"மட்டக்களப்பின் வடபால் அம்பிலாந்துறைக்கு அப்பால் காடு சூழ்ந்து, குடிவாழ்வற்றிருந்த மண்னேரிமுனைப் பகுதியைக் கொடுத்தான்"**. அத்தோடு அவன் காடுகளை வெட்டி வெளியாக்கி ஒரு மாளிகையும் அமைத்துக்கொடுத்தான். சில காலம் அங்கு வாழ்ந்த அவள், பின்னர் கலிங்கத்திலிருந்து குகக் குடும்பம் 106உம், சிறைக் குடும்பம் 30உம் கொண்டு வந்து தனக்கருகில் இருத்தி, அந்த இடத்தில் ஒரு ஆலயம் அமைத்து தான் கொண்டு

வந்த சிவலிங்கத்தையும் தாபித்து கோயில் எழுப்பினாள். பின்னர், கலிங்கத்திலிருந்து அனேகம் குகக் குடும்பங்களை அழைப்பித்து காப்பு முனைக்காட்டை (மண்முனை) வெட்டிவெளியாக்கி அவர்களை அங்கு குடியேற்றித் தான் அரசியாக இருந்து ஆண்டாள். இந்த இடத்துக்கு மண்முனை எனப் பெயர் சூட்டினாள். பின்னர் தற்போதய மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தை உருவாக்கினாள்.

குணசிங்கன் பாணகையில் இருந்து ஆட்சிசெய்தபோதே மண் முனையை உலக நாச்சிக்குக் கொடுத்திருக்கின்றான். அப்போது அவன் "அம்பிலாந்துறைக்கு அப்பாலுள்ள மண்னேரிமுனை வளர்ந்து காடுசெறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து, ஓரிடத்தில் குடிகளை அனுப்பி, காடுகளை வெட்டித்தூர்ந்து, மாளிகை உண்டாக்கி, உலகநாச்சிக்குக் கொடுத்தான்" என மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தில் வருகின்றது. இத் தொடரிலிருந்துதான் அம்பிலாந்துறை பற்றிய வரலாற்றுப் பின்புலம் முன்வைக்கப்படுகின்றது.

## முக்குகர் / முற்குகர்

மட்டக்களப்புப் பிரதேசம் முக்குகர் (முற்குகர்) தேசமாகும். அன்று முதல் மட்டக்களப்பு நாடு மட்டுமே ஒரு குறிப்பிட்டவரின் தேசம் என வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. பண்டைக் காலந்தொட்டே முக்குகர்களின் அரசியல் ஆதிக்கம் இங்கு இருந்திருக்கின்றது. வேறு எந்தச் தமிழ்ச் சாதியினரின் பெயரிலும் அச்சாதியினரின் நாடு என்று எப்பிரதேசமும் குறிப்பிடப்படவில்லை. (சிவசண்முகம் ப: 12) முக்குவர் என்ற சொல் பழந்திராவிடச் சொல்லாகும். முக்குக என்பது கடலினுள் அமிழ்ந்து சங்கு குளித்தல், முத்துக்குளித்தல் ஆகிய தொழில்களைக் குறிக்கின்றது. இவர்கள் கேரளம், தமிழ்நாடு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், புத்தளம் ஆகிய பிரதேசங்களில் வாழ்கின்றனர். இவர்களுடைய தொழில் அந்தந்த இடத்துக்கேற்ப வேறுபடுகின்றது. கேரளத்தில் உள்ளவர்களை, முக்குகர், கரையார், திமிலர் என்றும், இவர்களுள் முக்குகர் முத்துக் குளிப்பவர்களாகவும், மாலுமிகளாகவும் இருந்து வருகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள

முக்குகர்கள் மீன்பிடியை தொழிலாகக் கொண்டுள்ளனர். புத்தளத்திலிருந்த முக்குகர்கள் அதிகாரம் பெற்றவர்களாக் காணப் பட்டனர். முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் இவர்களுடைய செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டது. பொலநறுவை ஆட்சியின் பின்னர் இவர்கள் புத்தளப் பிரதேசத்தில் சுதந்திர ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்றும், அங்கிருந்தே பிற பிரதேசங்களுக்கு வந்தனரென்றும் கூறப்படுகின்றது. ஆறாம் பராக்கிரமபாகு காலத்தில் புத்தளத்தின் முக்குகர் வன்னிமைகள் இந்திய கூலிப்படைகளின் துணையுடன் அடக்கப் பட்டிருக்கின்றனர்.

முக்குகர்கள் பற்றி பிதாகுயரோஸ் குறிப்பிடும் கருத்து முக்கியமானது. இந்தியாவில் தென்னசேறியம் எனும் இடத்திலுள்ள ராசகுமாரன் அந்த நாட்டின் அரசனின் மகளாகிய இளவரசியை காதல் வயத்தால் அழைத்துக்கொண்டு, நாற்பது கப்பல்களில் தனது உறவினர்களுடன் யாழ்ப்பாணத்தில் குடியேறும் நோக்குடன் அங்கு சென்றான். யாழ்ப்பாணத்து மன்னன் இதனை எதிர்த்ததினால் அவர்கள் மட்டக்களப்பினை நோக்கிப் புறப்பட்டார்கள். வரும் வழியில் மாரடைப்பினால் இளவரசன் மரணமானான். இளவரசியும் மற்றவர்களும் மட்டக்களப்புக்கு வந்து, மட்டக்களப்பு மன்னனைச் சந்தித்து தாங்கள் இருப்பதற்கு ஓர் இடம் கேட்டார்கள். மன்னனும் அங்கிருந்த வாவியின் குடாவுக்குள்ளிருந்த தீவினை கொடுத்தான். சிறிது காலத்தின் பின்னர் அந்த மன்னன் இளவரசியினை திருமணம் செய்து கொண்டான். இவர்களுக்கு மூன்று ஆண் பிள்ளைகள் பிறந்தனர். இவர்கள் தகப்பனைக் கொன்று மட்டக்களப்பினை மூன்று பிரிவாகப் பிரித்து ஆட்சி செலுத்தினர். அந்த மூன்று இடமும் பழுகாமம், சம்மாந்துறை, ஏறாவூர் என்பன. இவர்கள் வன்னிய இராசாக்கள் என்று அழைக்கப்பட்டனர். இப் பின்னணி உலகநாச்சியின் வருகையுடன் ஒத்துப்போவதனை அவதானிக்க முடிகின்றது என்பர். இவர்களுடன் வந்தவர்கள் மட்டக்களப்பில் 72 கிராமங்களில் குடியேற்றப்பட்டிருக்கின்றனர் என்றார் அவர். மட்டக்களப்புப் இப்பிரதேசத்தில் முக்குகர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்துவருகின்றது. முக்குக வன்னியர்களும், போடிகளுமே இங்கு சுதேச அரசியல் தலைவர்களாக இருந்து வந்துள்ளனர். முக்குகர்கள் தம்மைத்தாமே நிருவகிப்பதற்குரிய ஸ்திரத்

தன்மையினைப் பெற்றுக்கொண்டனர். இவ்வகையில் முக்குகச் சாதியின் உட் பிரிவுகள் ஸ்திரம் அடைந்தன. அவற்றுள்ளும் கலிங்கர், படையாட்சியாகிய இனங்கள் முக்கிய இடத்தினை வகித்தன. மட்டக்களப்புப் பிரதேசத்தின் வாழ்வியல் அம்சங்கள் முக்குகச் சட்டத்தின் அடிப்படையிலேயே இடம் பெறுவது வழக்கம். இதற்காக அவரவர் குடிக்கென்று இருக்கும் சட்டதிட்டங்கள் மூலம் அவை பின்பற்றப்படுகின்றன. எனினும், பல கிராமங்களில் அந்தச் சட்டங்கள் இன்று செயலிழந்து போவதனை அவதானிக்க முடிகின்றது.

மகத ராஜ்யத்தில் இணையாமல் தன்னிலை அதிகாரத்தினால் முரண்பட்டுக்கொண்டிருந்த நாடு கலிங்க நாடாகும். இந்த ராஜ்யத்தில் பக்கமாக இருந்த நாடுகள் யாவும் இணைந்தன. இந்த நாடு மகாநதிக்கும் கோதாவரி நதிக்கும் இடையே வங்காள விரிகுடாக் கடலை ஒட்டியிருந்தது. கி.மு 261ஆம் ஆண்டு அசோகர் அரியணையில் அமர்ந்து 13 ஆண்டு கடந்து கலிங்கத்தைக் கைப்பற்றினார். பல இழப்புக்களைச் சந்தித்த கலிங்க தேசம் மீண்டும் புத்துயிர் பெற்றது. மனுவரதனுடைய புதல்வனான மாகோன் கி.பி.1215ஆம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றி 40 ஆண்டுகள் ஆட்சி ஆண்டுகள் செய்தபோது அக்காலப்பகுதியில் மட்டக்களப்பிலுள்ள சமூகக் கட்டமைப்பை சீர்செய்கின்றான்.

கி.பி 7ஆம் நூற்றாண்டில் அனுராதபுரம், பொலநறுவை, இலங்கையின் மேற்குக் கரையோரம் ஆகிய பகுதிகளில் தமிழர்களினதும் செல்வாக்கு படிப் படியாக அதிகரித்திருந்தது. இவ்வாறான நிலையில் கி.பி 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகளில் முக்குகரின் செல்வாக்கும் கிழக்கிலங்கையில் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. இத் தொடர்பு போர்த்துக்கேயர் வந்ததை அடுத்து மேலும் வலுப்பெற்றது. கலிங்க மாகோனின் ஆட்சியைத் தொடர்ந்து கலிங்கர் ஏறாவூர், சத்துருக்கொண்டான், அம்பிலாந்துறை போன்ற பல பிரதேசங்களில் குடியேறினர். இவ்வாறு குடியேறிய முக்குகர்களை ஒன்றுபடுத்தி அரபு நாட்டுப் பட்டாணிகள், கண்டிய மன்னர்களின் உறவு கொண்டு பலம்பெற்று நின்றனர். கேரளத்து முக்குகர் கண்டி இராச்சியத்தில் மிக்க செல்வாக்கு உடையவர்களாக

இருந்தனர். அம்பிலாந்துறையிலே முக்குகச் சட்டத்தின் அடிப்படையிலேயே வாழ்வியல் அம்சங்கள் இன்றும் பின்பற்றப்படுகின்றது. பிறப்பு முதல் இறப்புவரையுமுள்ள அனைத்துச் சடங்குகளும் கட்டமைக்கப்பட்ட சட்டதிட்டங்களின் கீழ் இடம்பெற்று வருகின்றது. (புத்தகத்தில் விளக்குமுண்டு) இக் கிராமத்தில் முக்குகர்களுடைய அதிகாரமே என்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

விபுலானந்தர் வாழ்ந்த காலத்தில் தற்போது கல்லடி உப்போடையில் காணப்படும் சிவானந்தா வித்தியாலயத்தினைக் கட்டுவதற்காக வந்திருக்கின்றார். அந்த இடம் தற்போது கிறிஸ்தவ ஆலயமிருக்கும் இடமாகும். இங்குள்ளவர்கள் அந்த முயற்சியினை ஏற்கவில்லை. அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். இதற்கான பின்னணி பற்றிப் பார்க்கும் போது, விபுலானந்தர் வேளாளர், இவர் முக்குகர் உள்ள இடத்தில் பாடசாலையினை அமைக்கப்போகின்றார். அப் படிப்பாடசாலை அமையுமாகவிருந்தால் வேளாளர்களுடைய ஆதிக்கம் அதிகரிக்கும். அப்போது முக்குகர்களுடைய நிலை பின்தள்ளப்படும் என்பதற்காகப் பாடசாலையினை அமைக்க விடவில்லை என்பார். ஆனால், சிலர் கூறுவார்கள் பாடசாலையைக் கட்டி பிள்ளைகள் படித்தால் எமது பொருளாதாரம் அழிந்துவிடும். வேளாண்மைச் செய்யமாட்டார்கள், மாட்டுப் பட்டிகளைப் பார்க்கமாட்டார்கள், விவசாயத்தில் நாட்டங்கொள்ளமாட்டார்கள் ஆகவே, பாடசாலை அமைவது பொருத்தமற்றது என நிராகரித்தனர். அம்பிலாந்துறையில் தான் வன்னிமைகளும் போடிகளும் அதிகம் இருந்துள்ளனர். ஆகவே, இவர்கள் தங்களை மீறிப்பாடசாலை அமைப்பதற்கு விட்டிருக்கமாட்டார்கள். இன்னொரு புறம் விபுலானந்தர் வன்னியர்களிடம் அனுமதி பெறாமல் வந்திருக்கலாம். அவ்வாறான நிலையிலும் இது தடுக்கப்பட வாய்ப்புண்டு.

## தேசம்

தேசம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்களைக்கொண்ட சமுதாயமாகும். மட்டக்களப்புப் பிரதேசம் முக்குகதேசம் என்றுதான் அழைக்கப்படுகின்றது. மட்டக்களப்பில் மாகோன் வகுத்த குடிகளின் அடிப்படையிலே கொக்கட்டிச்சோலைச் சிவன் கோயிலில் பூசைகள் இடம்பெறுகின்றன. ஒரே மாதிரியாகச் சிந்தித்து ஒரே மாதிரியாகப் பேசும் மக்கள் தொடர்பற்றவர்களானாலும் சரி அல்லது, எந்த இடத்தில் வாழ்ந்தாலும் சரி அவர்கள் ஒரு தேசமாகின்றார்கள். மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழும் மக்கள் ஒரே தன்மை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அதிலும் படுவான்கரைப் பிரதேச மக்களுக்கு நெருங்கிய தொடர்புண்டு. இவற்றின் வழி பார்க்கும் போது மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் வாழும் மக்கள் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தினை அடிப்படையாகக்கொண்டு மாகோனின் வருகைக்குப் பின்னர் குடிகளும் கடமைகளும் என்று கட்டமைக்கப்பட்டவர்கள். இந்தக் கோயில் மட்டக்களப்புப் பிரதேசத்திற்கென்று சிறப்புவாய்ந்தது. குடிகளுடன் சேர்ந்தவர்கள் எந்த நாட்டிலிருந்தாலும் தேசம் சேர்ந்து இக்கோயிலைப் பராபரித்து வருவது பண்டு பரவனியான செயன்முறையாகும்.

தேசம், பல்வேறு இனங்கள் பழங்குடிகளிடமிருந்து உருவானதாகும். மட்டக்களப்புப் பிரதேசத்தில் மக்கள் பண்டைக்காலந் தொட்டு வாழ்ந்து வருகின்றனர். இங்கு ஆரம்பத்தில் இயக்கர், நாகர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இராவணனை இயக்கர் இனத்தின் இராசன் மட்டுமல்ல, அவன் இலங்கைத் திருநாட்டின் முதல் மன்னனும். இராவணன் ஆட்சிக்கு முன்னராக குபேரன் ஆட்சி இடம் பெற்றதாகவும் கர்ணபரம்பரைக் கதைமூலம் அறியக்கிடைக்கின்றது. இவ்வாறாக காலத்துக்குக் காலம் இலங்கையில் மக்கள் குடியேற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இராவணனோடு தொடர்புபடுத்தி திருக்கோயில், அமிர்தகழி ஆகிய கோயில்கள் பேசப்படுகின்றன. இம் மன்னன் சிவலிங்க வணக்கத்தினை மேற்கொண்டிருக்கின்றான். அவன் வணங்கிய லிங்கங்களில் ஒன்றாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் லிங்கமும் கொள்ளப்பட வரலாறு இடம் கொடுக்கின்றது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் கி.மு 261ஆம் ஆண்டு காலத்தில் மக்கள் குடியேறியதாக தகவல்கள் மூலம் தெரியவருகின்றது. இவர்கள் மட்டக்களப்பிலே பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களால் ஆதிகாலத்தில் சிவலிங்க வணக்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். இவ் வழிபாடு உலகநாச்சியின் வருகைக்குப் பின்னர் உறுதி செய்யப்படுகின்றது. எனவே, பழங்குடிகளின் பண்பாட்டை அடியொற்றி கொக்கட்டிச்சோலைக் கோயிலின் நிருவாக முறையும் பராபரிப்பும் அமையப்பெறுவதனால் அது இலக்கண அடிப்படையிலே சந்தேகத்துக்கு இடமின்றி தேசத்துக் கோயிலாகின்றது.

தேசத்துக் கோயில் என்பது வரலாற்று அளவிலே அமையப்பெற்ற மக்கள் சமுதாயத்துடன் தொடர்புடைய ஆலயமாக இருக்க வேண்டும்.

1. வரலாற்று அடிப்படையில் அமைந்த மக்கள் சமுதாயம் இருத்தல் வேண்டும்.

2. அரசர்களால் மானியம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

2. பொருளாதார அடிப்படையில் மேலோங்க வேண்டும்.

4. தேசத்தில் உள்ளவர்களின் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள மக்களுடைய வரலாறானது நீண்ட பாரம்பரியங்களைக் கொண்டு அமைந்துள்ளது. தேசம் என்பது சாதாரண முறையிலோ அல்லது, நிலையற்ற முறையிலோ அமைந்திருக்கக் கூடிய சேர்ப்பு அல்ல. மாறாக தேசம் என்பது நிலையான மக்கள் சமுதாயமாகும். தேசிய சமூகம் என்பது ஒரு பொதுவான மொழியின் அடிப்படையைக்கொண்டு எழுந்ததாகும். பொதுமொழி ஒரு தேசத்தின் அம்சமாகும். ஒரு தேசம் என்பது மக்கள் தலைமுறை தலைமுறையாக ஒன்றாக வாழ்ந்து அதன்மூலம் ஏற்படும் ஒரு நீண்ட நெடிய மற்றும் முறையான கலப்பின் மூலம் உருவானது. பொதுவான வாழ்க்கைப் பகுதி என்பது ஒரு தேசத்தின் பிரதான அம்சமாகும். தேசத்தின் பல்வேறு பகுதிகளை ஒன்றிணைத்து அவற்றை முழுமையாக்கும் அளவிற்கு உள்நாட்டுப் பொருளாதாரப் பிணைப்பு இருக்க வேண்டும். பொருளாதாரக்

கட்டமைப்பென்பது அத்தேசத்தின் பிரதான பண்பாகும். பொருளாதார அளவில் முழுமையான உருவெடுப்பு அவசியமாகும். பொருளாதார வாழ்வும் பொருளாதார ஒன்றினைப்பும் ஒரு தேசத்துக்கான பிரதான அம்சங்களாகும். ஒழுக்க நிலைப் பண்பு தேசிய கலாசாரத்தின் குறிப்பிட்ட தன்மையை விளக்கி நிற்கின்றன. வாழ்க்கை முறைமை தேசத்திற்கு தனித் தன்மை வாய்ந்த பொதுக் கலாசாரத்தைத் தருகின்றது. பொதுவான கலாசாரத்தைத் தரக்கூடிய பொதுவான மன இயல்பு ஒர தேசத்தின் பிரதான அம்சமாகும். சுருங்கச் சொன்னால் தேசம் என்து ஒரே தன்மை கொண்ட தொடர்புடைய சமூகம் ஆகும்.

தேசம் பற்றிக் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது மட்டக்களப்புத் தேசம் என்பது முக்குக தேசமாகும். இங்கு கலிங்கர், வங்கர், சிங்கர் என்ற ஒரே தன்மை கொண்ட மூன்று சமூகநிலையில் பண்டைக்காலம் தொடக்கம் அரசியல் ஆட்சியானது இடம்பெற்று வந்திருக்கின்றது. பின்னர் காலத்துக்குக் காலம் ஆட்சி நடைமுறையானது தொடர் சிந்தனை உடையதாக இடம்பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு வன்னியர் ஆட்சியில் இந்து சமயத்தைப் பின்பற்றும் மக்களிடையே முக்குகச் சட்டத்தின் அடிப்படையில் சமூக நடை முறைகள் இடம் பெறுகின்றன. மட்டக்களப்புச் சமூகங்களிடையே சமூக உறவுமுறை பலமானதாகும். சமூகக் குழுக்களுக்கென்று கடமைகள் இருக்கின்றன. அக்கடமைகள் அவர்களுடைய செயற்பாட்டின் மூலம் உறுதி செய்யப்படுகின்றது. அதனால் அவர்கள் ஒரு கட்டுக் கோப்புக்குள் இயங்குகின்றனர். மொழியடிப்படையில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள மக்கள் தமிழ் மொழியினைப் பேசியவர்கள், மாகோன் வகுத்த குடி அடிப்படையில் நிருவாக நடைமுறைகள் இடம்பெறுகின்றன. நிலம் ஒரே தொடர்பு கொண்டதாக அமையப்பெற்றுள்ளன. பொருளாதாரத்தில் வேளாமை, மேட்டு நிலப் பயிர் செய்தல், மந்தை வளர்ப்பு என்று பல தொழில் துறைகள் அமையப் பெற்றுள்ளன. அப்பொருளாதாரம் மக்களுடைய வாழ்வுடன் ஒன்றிக்கப்பட்டதாக இருந்தது. ஆங்கிலேயர் காலத்தில் கிழக்குமாகாண அதிகாரிகளினால்தான் பொருளாதார முறைமை

பேணப்பட்டு வந்தது. அதனை 1897ஆம் ஆண்டு அம்பிலாந்துறையினைச் சேர்ந்த பொலிஸ் தலைமையும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் செயலாளர் வண்ணக்கருமாகிய ஆழ்வாப்போடி வீரபத்திரப்போடியினுடைய அதிகாரத்திற்கு மாற்றுகின்றனர். அப்படியானால் இவனுடைய, இவன் முன்னோர்களுடைய செல்வாக்கு இந்த ஆலயத்தில் எத்தகையதாக இருந்திருக்கும்.

இத்தகைய பின்னணியில் அவதானிக்கும்போது தான்தோன்றீஸ்வரர் ஆலயம் மட்டக்களப்பிலுள்ள ஒரே மக்கள் ஆட்சி செய்த நிருவாகத்தின் கீழ் இருந்துள்ளது. ஆகவேதான் தேசமகாசபை என்று கொக்கட்டிச்சோலைக் கோயில் நிருவாகம் அழைக்கப்படுகின்றது. கோயிலில் கூடும் கூட்டம் தேசமகாசபை என்றே அழைக்கப்பட்டு வருவது வழக்கமாகும். இந்தக் கூட்டத்திற்கு வன்னியர்களே தலைமை தாங்குவர். உலகநாச்சியின் வருகையின் பின்னர் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரம் மீள் எழுகின்றது. இந்த ஆலயத்தினை அடிப்படையாகக் கொண்டே சமூக நடைமுறைகளும் கட்டமைப்புக்களும் வலுப்பெறுகின்றன. ஆலயத்துடன் தொடர்புடையவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்கள் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பங்குதாரர்களே. ஆகவே, இந்த ஆலயம் தேசங்கடந்து நிற்கின்ற தேசத்துக் கோயில் என்ற பெருமையினைப் பெறுகின்றது. எனவே, பலரின் சந்தேகங்களைப் போக்கும் வகையில் கொக்கட்டிச் சோலைச் சிவன்கோயில் திருப்படைக் கோயில் அல்ல அது தேசத்துக் கோயில் என்பதனை நிருபனமாக்குகின்றது.

எனவே, தேசம் என்கின்ற நிலையில்தான் மட்டக்களப்புப் பிரதேசத்தினுடைய ஆட்சிப்புலங்கள் இருந்துள்ளன. அந்த ஆட்சி காலா காலமாக தமிழ் மன்னர்களுடைய கண்காணிப்பின் கீழ் இருந்து வந்துள்ளது. அதன் பின்னனியில் எதிர்மனசிங்கன் மட்டக்களப்பின் இறுதி மன்னனாக ஆட்சி செய்கின்றான். தொடர்ந்து போடிகள், வன்னியர்கள் என்று மட்டக்களப்புப் பிரதேச ஆட்சி நீட்சிபெற்று வந்திருக்கின்றது.

## அப்பால் என்பது

அப்பால் என்னும் சொல் காலத்தை அடிப்படையாகக் கொண்டும் இடத்தை அடிப்படையாகக் கொண்டும் பொருள் தருகின்றது. இவை இரண்டும் காலம், இடம் கடந்து நிற்கின்றது. பிரபல உரையாசிரியர் C.K.S. சுப்ரமணிய முதலியார் காலத்தாலும் இடத்தாலும் அப்பால் எனும் சொல் முற்பட்டு நிற்கின்றது என்றார். அவர் அப்பாலும் அடிசார்ந்தார் புராணத்துக்கு சிறந்த உரை எழுதியவர். இட எல்லை, கால எல்லை என்கின்ற இரண்டு கருத்துப் பொருள்களை நாங்கள் எல்லை தொடர்பாக வரையறுக்க முடியும். அதில் அப்பால் என்று வருகின்ற தமிழ்ச் சொல்லுக்கு இடம் என்கின்ற கருத்தைக் கொடுக்கின்ற பொழுது நாங்கள் காட்டுகின்ற பிரதேசத்தைக் கடந்து நிற்கின்ற, அல்லது, அதைத் தாண்டி நிற்கின்ற இடத்தை, நாட்டை, பகுதியை அப்பால் என்பது குறிக்கும். பெரியபுராணத்துக்கு, அப்பாலும் அடிசார்ந்தார் புராணத்துக்கு உரை செய்யும்பொழுது, பெரிய பெரிய உரையாசிரியர்கள் இந்த அப்பால் என்கின்ற சொல்லை சேக்கிழார் வாழ்ந்த நாட்டில் இருந்த நாயன்மார்களை பிரதேசத்திற்கு அப்பால் இருந்த அடியார்கள் என்று பொருள் கண்டிருக்கின்றார்கள்.

அதே போல அதற்குக் காலம் என்கின்ற பொருளை அமைத்துப் பார்க்கின்றபோது, ஒரு குறிப்பிட்ட காலத்தை நாங்கள் சுட்டினால் அதைக் கடந்து அதற்கு முன்னேயுள்ள காலத்தைச் சுட்டுவதாக இச் சொற்பதம் குறிக்கின்றது. அதே அப்பாலும் அடிசாந்தார் புராணத்து க்கு உரைகாணுகின்ற பொழுது சேக்கிழார் சுட்டிய நாயன்மார்கள் வாழ்ந்த காலத்தைக் கடந்து வேறுவேறு காலங்களிலிருந்த அடியவர்களையும் உள்ளடக்கவேண்டும் என்பதற்காகவே அப்பால் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்ப தாக உரையாசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். எனவே, அப்பால் என்கின்ற சொல்லானது ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கடந்து நிற்கின்ற பிர தேசத்தையும் ஒரு குறிப்பிட்ட காலத்தைத் தாண்டி அதற்கு முன்னே இருக்கின்ற காலத்தையும் காட்டி இரண்டு சொற்களைச் சுட்டுகின்ற ஒரு சொல்லாகக் காணப் படுகின்றது. எனவே ஒன்றை வைத்துக் கொண்டே இன்னொன்றுக்கு அப்பால் எனும் பதத்தினைப் பாவிக்கமுடியும் என்பது திண்ணம்.

எனவே, உலகநாச்சி வருகைக்கு முன்னர் அம்பிலாந்துறைக் கிராமம் இருந்திருக்கின்றது என்பதனை ஐயந்தெளிவுற நோக்க முடியும். அம்பிலாந்துறைக்கும் மண்ணேரி முனைக்கும் இடையே கிராமங்கள் இருக்கவில்லை என்பதனையும் இப்பதம் விளக்குகின்றது. அவ்வாறு இருந்திருந்தால் அங்கிரு ந்த கிராமத்தின் பெயர் சுட்டப்பட்டிருக்கும். எனவே, சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்க முடிகின்றது அம்பிலாந்துறைக் கிராமம் ஆதிகுடிகள் வாழ்ந்த பழம்பதி அக்கிராமம் உலகநாச்சி வருகைக்கு முன்பிருந்தே அமைந்திருக்கின்றது என்பது தெளிவு

உலகநாச்சி வருகைக்கு முன்னர் அம்பிலாந்துறை இருந்திருக்கின்றது. அம்பிலாந்துறை பற்றி குணசிங்கன் அறிந்திருக்கின்றான் என்றால் அது சாதாரணமான இடமாக இருந்திருக்க முடியாது. உலகநாச்சி வருகைக்கு முன்னர் இங்கொரு அரசியல் பாரம்பரியம் நிலவியிருக்கின்றது என்பதனை இவன் கையாண்ட சொற்றொடர் மூலம் வெளிப்படுகின்றது. இந்தக் கிராமத்தினை அக்காலத்தில் மன்னன் பெயர்சுட்டி அழைப்பதென்பது சாதாரண விடயமாக இருக்க முடியாது. இங்கு குணசிங்க மன்னனுடைய படைப் பிரிவுகூட இருந்திருக்கலாம். அல்லது, அவனுக்கு துணையாக வன்னியப் படைகள் இருந்திருக்கலாம். அவனுடைய கண்காணிப் பின் கீழ் இப் படைப் பிரிவு இயங்கியதால் உலகநாச்சிக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கலாம் என்பது நடைமுறைரீதியாக சந்தேகத்திற்கு இடமின்றி ஏற்க வேண்டிய விடயமாகும்.

அவளும் அம்பிலாந்துறையில் தங்கியிருந்து மண்முனைக் காட்டினை வெளியாக்கி குடிமனைகளை அமைத்திருக்கிறாள். ஏனெனில், எடுத்த எடுப்பிலே காட்டுப் பகுதியில் போயிருந்து குடிவாழ்வமைப்பதென்பது சிக்கலானதும் பொருத்தமற்றதும். இவர்களிடம் குதிரை வண்டிகள் இருந்தமையினால் அம்பிலாந்துறையிலிருந்து மண்முனையில் குடிவாழ்வமைப்பது இலகுவாக இருந்திருக்கும். குடிவாழ்வமைத்து முடியும் மட்டும் அம்பிலாந்துறையில் தங்கி இருந்திருப்பார்கள். இவர்களுக்கான பாதுகாப்புக்காக குணசிங்கனுடைய படைகள் பாதுகாப்பு

வழங்கியிருக்கும். அது மட்டுமன்றி சந்ததியுரிமை கொண்டாடினான் என்பதால், இவனும் கலிங்ககுலம் என்பதோடு, கலிங்கனின் தலைமையிலான ஆட்சி நிலவிய அம்பிலாந்துறைக்கு இவர்களை அனுப்பியிருக்கலாம். அரசினுடைய பாதுகாப்பென்பது முக்கியமானது. எனவே, இவளுக்குச் சிறந்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும். பாதுகாப்புக்காக, அம்பிலாந்துறையில் உள்ள குடிகளையும், படைகளையுமே இக்கைங்கரியத்துக்காகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். என்பதனை கிடைக்கின்ற தகவல்களைக் கொண்டு, ஊக ஆதார அடிப்படையில் நிருபிக்க முடிகின்றது. உலகநாச்சி தங்கியிருந்த இடம் அம்பிலாந்துறை என்பார். (புலவர் சிற்றம்பலம் - பருத்திச்சேனை)

இவ்வாறு ஆய்வு அடிப்படையில் நோக்கினால் அம்பிலாந்துறை உலகநாச்சி வருகைக்கு முன்னர் அரசியல், பொருளாதாரம், கல்வி, பண்பாட்டு ரீதியாக சிறந்த தளமாக நிலவியிருக்கின்றது, "அம்பிலாந்துறைக்கு அப்பாலுள்ள மண்ணேரிமுனை வளர்ந்து காடுசெறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து, ஓரிடத்தில் குடிகளை அனுப்பி, காடுகளை வெட்டித்தூர்த்து, மாளிகை உண்டாக்கி, உலகநாச்சிக்குக் கொடுத்தான்" என்ற தொடர் மூலம், உலகநாச்சிக்குக் சிறந்த கௌரவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, குணசிங்கன் தனது குடிகள், படைகளை அனுப்பி மாளிகை உண்டாக்கிக் கொடுத்திருக்கின்றான். இந்தக் குடி, படைகள்யாவும் பாணகையிலிருந்து வருவதற்கு வாய்ப்பில்லை அவை அம்பிலாந்துறையிலே இருந்திருக்கும் என்பது தெளிவு.

# அம்பிலாந்துறை எனும் பெயர்வரக் காரணம்

அம்பிலாந்துறை எனும் பெயர் வந்தமைக்கான காரணங்கள் பல கூறப்படுகின்றன. "அம்பிளா" எனும் மரம் இங்குள்ள துறையில் காணப்பட்டதனால் அம்பிளாந்துறை என்றும், செட்டிகள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள இக்கரையில் இருந்த அம்பலத்தில் தங்கியிருந்தனர் என்றும், இராசாக்கள் கூடும் இடம் "அம்பலம்" என்றும், இங்குள்ள துறையினால் அக்கரைக்குச் செல்வதற்கு "அம்பி" எனும் மரக்கலங்களைப் பயன்படுத்திச் சென்றிருக்கலாம் என்றும், தென்னிந்தியாவில் படைத்தொழில் செய்பவர்கள் அம்பலக்காரர் எனும் பெயரால் அழைக்கப்பட்டனர். இவர்கள் குடியேறிய காரணத்தால் அம்பிலாந்துறை என்ற பெயரால் அழைக்கப்பட்டது என்றும் பலவாறு பெயர் விளக்கமுண்டு.

பூர்வீகவரலாற்றுக் காலத்துக்கு முன்னர் அயோத்தி, காசி, வட மதுரை, கங்கைதேசம், கும்பகோணம், அம்பிலாலந்துறை, இராமநாதபுரம் ஆகிய இடங்களிலிருந்து வன்னியர்கள் மட்டக்களப்பில் குடியேறி இருக்கின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் அம்பிலாலந்துறையிலிருந்து வந்தவர்கள் அம்பிலாலந்துறை என்ற பெயரை இட்டிருக்கலாம். அம்பிலாலந்துறை என்பது பல்லவர் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த சிவதலம் அமைந்திருந்த ஊர்களில் ஒன்றாகும். மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் கலிங்கர் வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்கள் எதிரிகளை இலகுவாகத் தோற்கடிப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். பண்டைய காலத்திலும் வன்னியர் போர் தொழிலுக்காக இங்கு வந்திருக்கின்றனர். (மகிழை மகேசன்)

அன்பிலாலந்துறை எனும் தலம் நாயன்மார்களின் தேவாரப் பாடல்காளால் சிறப்புப் பெற்றிருக்கின்றது. அம்பிலாலந்துறையில் உறையும் சிவனைப் பற்றிப்பாடும் அப்பரும் சம்பந்தரும் அவரை "அம்பிலாந்துறையானே" என்று பாடுகின்றார்கள். இத்தகைய சிறப்புப் பெற்ற தலப்பெயர் அம்பிலாந்துறைக் கிராமத்துக்கு இருப்பது சிறப்புடையதாகும்.

## அம்பிளாந்துறையா ? அம்பிலாந்துறையா ?

## அன்பிலாலந்துறையா ?

மறவர்கள் பூர்வகாலம் இருந்தே வாழ்ந்துவந்த அம்பிலாந்துறைக் கிராமம் அம்பு + இல்லாத + துறை என விரிகின்றது. இதில் வெளிப்படும் கருத்து ஆழமானது. அம்பு இல்லாமல் நின்று போர் செய்த வீரர்கள் வாழ்ந்த கிராமமாகும். (இலக்கிய கலாநிதி வ.சிவசுப்பிரமணியம் ஐயா - சுவாமி விபுலானந்தருடைய மாணவன்) பூர்வகாலத்தில் அம்பு, வில் எனும் ஆயுத வருகைக்கு முன்னும், பின்னும் வீரர்கள் தங்களுடைய பராக்கிரமத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். அதற்காக அவர்கள் எத்தகைய போர்க் கருவிகளையும் பயன்படுத்தி இருக்கவில்லை என்பதும் புலனாகின்றது. இத்தகைய வீரர்கள் வாழ்ந்த கிராமத்துக்குத்தான் அம்பிலாந்துறை எனும் பெயர் அக்காலத்தவர்களால் இடப்பட்டிருக் கின்றது. அத்தோடு பராக்கிரமத்தின் வெளிப்பாடு தெளிவுபடுத்தப்படு கின்றது. வரலாறு தரும் சான்றுகளின் அடிப்படையில் நோக்கினால், அம்பிலாந்துறையில் முக்குக இனத்தைச் சேர்ந்த வீரமறவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்கள் எதிரிகளை இலகுவாகத் தோற்கடிப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். இவர்கள் ஆயுதம் வைத்திருக்கும் எதிரிகளையும் ஆயுதம் இல்லாமல் தோற்கடிப்பார்கள் போலும்.

பொதுவாக அவதானிக்கும் போது "அம்பிளா" மரம் என்பது அறியப்படாத மரமாகவும், சொல்லாகவும் இருப்பதால் அக்காரணம் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. அம்பு + இல்லா என்பதில் இல்லா என்பது இல்லாத என்ற பொருளுடைய சொல்லாகும். "அம்பு இள்ளா என்பதில் "இள்ளா" என்பது பொருளுடைய சொல்லல்ல. பொருடைய சொல்லுக்குச் சக்தியுண்டு என்பது மரபு. "அம்பில்லா" எனும் சொல் "அம்பிளா" என மருவியுள்ளமை புலனாகும். தமிழகத்திலுள்ள ஆலயம் மற்றும் இடப் பெயர்களும் அம்பிலாலந்துறை என்றே வருகின்றது. தேவாரப் பாடல்களிலும் அன்பிலாலந்துறை என்றே குறிப்பிடப்படுகின்றது. எமது கிராமப் பெருமை கூறும் போடிகல் வெட்டுடிலும் அம்பிலாலந்துறை என்றே எழுதப்பட்டுள்ளது. எனவே,

பொருளுடையதும் சிவதலப் பெயரான அன்பிலாலந்துறை என்ற சொல் எமது கிராமத்திற்கு மேலும் வலுச் சேர்க்கும். மற்றைய காரணங்கள் யாவும் அம்பிலாந்துறைக் கிராமத்தின் பெயருக்குச் சிறப்பாக அமைகின்றது. எனினும், ஒரு கிராமத்திற்கு இத்தகைய காரணங்கள் கற்பிக்கப்படக் கூடியதாக இருப்பது அக்கிராமத்தின் சிறப்பையும், பூர்வீகத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

## பெயர் மருவியமை

பண்டையகாலத்தில் அம்பிலாலந்துறை என்ற பெயருடனே இக்கிராமத்தின் பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. அம்பிலாலந்துறை என்ற பெயர் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. திருச்சிராதேசத்தில் "அம்பிலாலந்துறை அதிலே சென்று'.." என்ற சொற்றொடரே கையாளப்பட்டிருக்கின்றது. அம்பிலாலந்துறையுடன் வன்னியர்கள், போடிகளினுடைய தொடர்பு இருந்துள்ளமையினால் அம்பிலாலந்துறை என்றே இப்பெயர் இருந்திருக்க வேண்டும். நாயன்மார்களுடைய தேவாரப்பாடல்களிலும் அம்பிலாலந்துறை என்றே கையாளப் பட்டிருக்கின்றது. இத்தகைய பெயர் மருவி அம்பிலாந்துறை என்றும், தற்போது அம்பிளாந்துறை என்றும் வழக்கில் உள்ளது. ஆய்வு நோக்கில் அவதானிக்கும்போது, அம்பிலாலந்துறை என்றோ, அம்பிலாந்துறை என்றோ இப்பெயர் அமைவதே சிறந்தது. இவற்றிலும் இறைவன் பெயர் கூறுகின்ற அம்பிலாலந்துறை என அமைவது சாலச் சிறந்தது. திருச்சியிலுள்ள அம்பிலாலந்துறைக்கும் நாம் வாழும் அம்பிலாந்துறைக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் உண்டு. அதாவது, கல்வி கற்ற குழுவினரை கி.பி 1766ஆம் ஆண்டு காலத்தில் அம்பிலாலந்துறை யில் இருந்து அழைத்துவந்து அம்பிலாந்துறையில் கல்வி நிலையம் அமைத்து கற்பித்தலை மேற்கொள்கின்றார்கள் என்றால் அத் தொடர்பு தெளிவாக வெளிப்படுகின்றது.

கணைநீடெரிமாலாவம்வரைவில்லா
இணையாவெயின்மூன்றுமெரித்தவிறைவர்
பிணைமாமயிலும்குயிலும்சேர்மடவண்ணம்
அணையும்பொழிலன்பிலாலந்துறையாரே.

(திருஞானசம்பந்தர்)

## கிராமசேவகர் பிரிவு

ஆரம்ப காலத்தில் பெரியகுடியிருப்புப் பகுதி மட்டுமே இருந்துள்ளது. பின்னர் நாகமுனை, தீவுக்குடியிருப்பு, சோதயன்கட்டுப் பகுதியும் இணைந்து அம்பிலாந்துறை ஒரே கிராம சேவகர் பிரிவாகவே இருந்துள்ளது. சனத்தொகை பெருக்கத்தின் காரணமாக மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகத்தினால் மூன்று கிராமசேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை அம்பிலாந்துறை, அம்பிலாந்துறை மேற்கு, அம்பிலாந்துறை வடக்கு என்பன. கற்சேனை அம்பிலாந்துறை மேற்கு கிராம சேவகர் பிரிவில்தான் இருந்துள்ளது.

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் 11 கிராமங்கள்தான் உண்டு. அவை பழமை வாய்ந்த கிராமங்களாகும். மற்றவையெல்லாம் கிராம சேவகர் பிரிவுகளே. உதாரணமாக, அம்பிலாந்துறைக் கிராமத்துக்கு அம்பிலாந்துறை, அம்பிலாந்துறை மேற்கு, அம்பிலாந்துறை வடக்கு, கற்சேனை ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் உண்டு. கற்சேனைப் பகுதி ஆரம்பத்தில் அம்பிலாந்துறை மேற்கு கிராம சேவகர் பிரிவுடந் தான் இருந்தது. பின்னர் மக்களின் நலன் கருதி தனிக் கிராமசேவகர் பிரிவாக மாற்றப்பட்டுள்ளது. எனவே, கிராமம் வேறு கிராம சேவகர் பிரிவு வேறு என்பதனை ஒவ்வொருவரும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு கிராமம் ஒரு கிராம சேவகர் பிரிவாகவும் வரும்.

| இல | கிராமப் பிரிவு | குடு | மக்கள் | ஆண் | பெண் | கி.சே.இ |
|---|---|---|---|---|---|---|
| 01 | அம்பிலாந்துறை | 373 | 1814 | 610 | 635 | 127 |
| 02 | அம்பிலாந்துறை மேற்கு | 263 | 905 | 398 | 419 | 127 A |
| 03 | அம்பிலாந்துறை வடக்கு | 213 | 699 | 336 | 348 | 127 B |
| 04 | கற்சேனை | 182 | 698 | 340 | 359 | 127 C |

## மண்முனை தென் மேற்குப் பிரதேசத்தில் உள்ள ஏனைய கிராம சேவகர் பிரிவுகள்

| இல | கி.பி | குடு | மக் | ஆண் | பெண் | கி.சே.இ |
|---|---|---|---|---|---|---|
| 05 | அரசடித்தீவு | 362 | 1200 | 598 | 602 | 128 |
| 06 | கடுக்காமுனை | 480 | 1814 | 903 | 913 | 128 A |
| 07 | பட்டிப்பளை | 228 | 849 | 422 | 427 | 128 B |
| 06 | அரசடித்தீவு வடக்கு | 306 | 1098 | 553 | 545 | 128 C |
| 09 | பண்டாரியாவெளி | 422 | 1402 | 694 | 708 | 129 |
| 10 | மகிழடித்தீவு தெற்கு | 576 | 2038 | 1004 | 1037 | 129 A |
| 11 | மகிழடித்தீவு | 234 | 821 | 405 | 416 | 129 B |
| 12 | முதலைக்குடா | 260 | 858 | 439 | 419 | 131 |
| 13 | முதலைக்குடா மேற்கு | 384 | 1291 | 608 | 683 | 131 A |
| 14 | முனைக்காடு கிழக்கு | 246 | 948 | 470 | 475 | 133 |
| 15 | முனைக்காடு மேற்கு | 341 | 1130 | 558 | 572 | 133 A |
| 16 | முனைக்காடு தெற்கு | 323 | 1107 | 527 | 580 | 133 B |
| 17 | முனைக்காடு வடக்கு | 398 | 1392 | 694 | 698 | 133 C |
| 18 | கொக்கட்டிச்சோலை | 539 | 1780 | 878 | 902 | 134 |
| 19 | கொக்கட்டிச்சோலை மேற்கு | 472 | 1685 | 840 | 845 | 134 A |
| 20 | மாவடிமும்மாரி | 201 | 644 | 329 | 315 | 135 |
| 21 | தாந்தாமலை | 270 | 876 | 440 | 436 | 135 A |
| 22 | குழுவினமடு | 219 | 736 | 331 | 405 | 135 B |
| 23 | கச்சக்கொடி | 345 | 1377 | 668 | 709 | 135 C |
| 24 | பனிச்சயடிமும்மாரி | 94 | 381 | 188 | 193 | 135 D |
| | மொத்தம் | 7731 | 26960 | 13287 | 13673 | |

(மூலம் : மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகம்)

## பெரியகுடியிருப்பு

அம்பிலாந்துறை கிராமசேவகர் பிரிவில் பெரியகுடியிருப்பு (அறுமக்குட்டிப்போடி வாழ்ந்த கிட்டங்கி வளவு, வன்னியர்கள் வாழ்ந்த வளவு, முதல் பூசாரியார் வாழ்ந்த வளவு என்பன அடங்குகின்ற பகுதி) பெரியகுடியிருப்பு என்பது முதன் முதலாவதாக மக்கள் வாழ்ந்த இடம். இதனுடன் இணைநது நடுக்குடியிருப்பு எனும் பகுதியும் உண்டு. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், சிவமுத்து மாரியம்மன் ஆலயம் என்பன இப்பகுதியிலேயே அமையப் பெற்றுள்ளன.

## தீவுக்குடியிருப்பு

தீவுக்குடியிருப்பு அம்பிலாந்துறை வடக்கு கிராமசேவகர் பிரிவு க்குள் அடங்குகின்றது. அப்பிரிவில் நாவற்காடு, சேனைத்தெரு ஆகிய பிரிவுகள் வருகின்றன.

### நாகமுனை

நாகமரங்கள் செறிந்து காணப்பட்ட இடம். மண்டபத்தடி பிள்ளையார் ஆலயம், காஞ்சிரயடி வைரவர் ஆலயம் என்பன இப்பகுதியிலேயே அமையப்பெற்றுள்ளன.

### சோதயன்கட்டு , வாழைச்சேனை

வீரர்கள் வாழ்ந்த இடமாக சுட்டப்படுகின்றது. வாழைச் சேனை என்ற பெயருடன் ஒரு பகுதியும் உண்டு. இப் பகுதியில் முத்துலிங்கப் பிள்ளையார் ஆலயம் அமையப்பெற்றுள்ளன.

### கற்சேனை

அத்தியாமுன்மாரி, சின்னமடு, அம்பலத்தடி, பள்ளியடி, முப்படிதேக்கர், நீலண்டமடு, கிழாக்கொடி, வண்ணான்சேனை எனும் சிறுசிறு பிரிவுகள் உள்ளடங்கியிருக்கின்றன. இதில் அத்தியாமுன்மாரி

என்பது பண்டைக்காலப் பெயராகும். இது பல கருத்துக்களைச் சுட்டிநின்றாலும், அது வீரத்தின் வெளிப்பாட்டினையும் விளைச்சலின் உயர்வையும் சுட்டுகின்றன. கற்சேனை என்பது அம்பிலாந்துறையின் ஒரு பிரிவாகும். கல் + சேனை என அதன் பதப்பொருள் அமைகின்றது. ஆரம்ப காலத்தில் கற்களாலும் காடுகளாலும் இப்பிரதேசம் அமைந்திருந்தது. 1940ஆம் ஆண்டு காலத்தில் வேட்டையாடுவதற்காகவும் கல் உடைப்பதற்காகவும் சிலர் இங்கு வந்துள்ளனர். இவர்களில் பாலகர் சின்னததம்பி முதன்மையானவர். இவரைத் தொடர்ந்து வேலாப்போடி, கந்தப்போடி, பத்தண்ணன் ஆகியோர்களும் இங்கு வந்துள்ளனர். இவர்கள் மேட்டு நிலப் பயிர்களுடன் முத்துக்கறுப்பன், சீனெட்டி, வானம்பாடி போன்ற நெல்லினங்களையும் பள்ளமான இடங்களில் செய்கை பண்ணினர். இவ்வாறான நிலையில் "தாயதி" திட்டத்தின் கீழ் ஒருவருக்கு 5 ஏக்கர் காட்டினை வெட்டி வயலாக்கலாம் என்ற திட்டத்தின் கீழ் சிலருக்கு 1952ஆம் ஆண்டு காலத்தில் அரசாங்கத்தினால் ஒப்பம் கொடுக்கப்படுகின்றது. இத்தகைய ஒரு பின்னணியில் காடுகள் களனிகயாக்கப்படுகின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் 1957 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரிய வெள்ளத்தின் பின்னர் இங்கு மக்கள் குடியேறத்தொடங்கி இருக்கின்றார்கள். அவர்களும் காட்டினை வெட்டி களணியாக்கி பயிர் செய்தவர்கள். பா.சின்னத்தம்பி மிருகங்களை வேட்டையாடுவதில் சிறந்தவர். இவர் நொண்டி கூத்தாடியே அறம்பட்டு சிறப்புப்பெற்றவர். சின்னமடுவில் இருந்த புலிகளை வேட்டையாடி அங்கிருந்தவர்களுடைய கால்நடைகளைக் காத்தவர். புலியினைப் பிடிப்பதற்காகப் புலிக்கூடுகளையும் பயன்படுத்தியிருக்கின்றனர். அதனைப் பல இடங்களில் அமைத்திருக்கின்றனர். அதாவது, ஒரு கூட்டினை இரண்டாகப் பிரித்து ஒரு கூட்டுக்குள் அட்டை கட்டியிருப்பார்களாம். புலி ஆட்டினைப் பிடிப்பதற்காக புலிக்கூட்டின் முன்னுள்ள பகுதியால் செல்லுமாம். செல்கின்ற போதே வழி அடைபட்டு விடுமாம். அப்போது புலியை இலகுவாக சாகடிப்பார்களாம். அவர்களைத் தொடர்ந்துதான் பிற்பட்ட காலங்களில் மெல்ல மெல்லக் குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இன்று கற்சேனையில் உள்ள மக்கள் அம்பிலாந்துறை வாரிசுகளே.

சின்னமடு என்பது சிறிய குளம் உள்ள இடம் என்றும், புலிக்காலமடு (புலிகுட்டிபோட்ட இடம்) என்றும், வில்லுவாடி வில்லுக் குளத்தினை அடையாளப்படுத்துகின்றது என்றும், அம்பலத்தடி என்பது அம்பலம் இருந்தரமையினால் ஏற்பட்ட பெயர் என்றும், துவரையடி துவரை மரம் இருந்தமையினால் ஏற்பட்ட பெயர் தற்போது பாடசாலை அமைந்துள்ள இடம் . நீலண்ட மடு நீலன் என்ற வண்ணான் 1957ஆம் ஆண்டு வெள்ளம் ஏற்பட்டபோது இக்குளத்தில் உடுப்புகளைத் துவைத்துள்ளான். அப்போது மடுவில் நீலத்தைப்போட்டு கழவியதால் ஏற்பட்டது என்றும். இந்த இடம் 2001ஆம் ஆண்டு காலத்தில்தான் கற்சேனையுடன் சேர்க்கப்பட்டது. முன்னர் களுவுந்தன்வெளி கிராமத்துடன் இணைந்து இருந்துள்ளது.

அம்பிலாந்துறையின் கிழக்குப் பகுதி மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியுடன் இணைந்திருக்கின்றது. இந்தச் சந்தி அம்பிலாந்துறைச் சந்தியாகும். மேற்குப் பகுதி நீலண்டமடு வரை நீண்டு செல்கின்றது. அம்பிலாந்துறை பிரதான வீதி சந்திக்கும், நீலண்டமடு வரைக்குமான தூரம் அண்ணளவாக 7 கிலோ மீற்றராகும். வடக்குப்புறம் காண்வாய்க்காலையும் (கடுக்காமுனை எல்லை) தெற்குப் புறம் அத்தியாமுன்மாரி வாய்க்கால் வரையும் (பழுகாமம் எல்லை) நீண்டு செல்கின்றது. இவற்றுக்கிடையே உள்ள தூரம் அண்ணளவாக 3 கிலோ மீற்றர் வரை அமையும். பரப்பளவில் அதிகமாக வேளாண்மை நிலங்களை உள்ளடக்கி இந்த நிலப்பரப்பு அமைகின்றது.

## 19 கண்டங்கள்

அம்பிலாந்துறையில் பண்டைக் காலம் முதற்கொண்டு இருந்து வந்த நிலபுலங்கள் காலாகாலமாகப் பலருக்குக் கைமாறப்பட்டு வந்துள்ளமையினை வரலாற்றினூடாகக் கண்டுகொள்ள முடியும். அறுமக்குட்டிப்போடி, மண்முனைப்போடி, C.D கதிராமப்போடி, குஞ்சிலயாப்போடி என்று அவற்றின் வரன் முறையினைக் கண்டுகொள்ள முடியும். அறுமக்குட்டிப்போடி காலத்தில் இருந்த எழுத்துரு உரிமம் ஏட்டில் இருந்துள்ளது. அது பின்னர் அவருடைய மகன் மண்முனைப்போடிக்குக்

கைமாற்றப் பட்டுள்ளது. அந்த ஏடுகள் யாவும் அழிக்கப்பட்டுள்ளன (விடயம் வரலாற்றில்) பின்னர் குஞ்சிலயாப்போடி வன்னியனார் காலத்தில் நிலங்கள் யாவும் 19 கண்டங்களாக வரையறுக்கப் படுகின்றது. அந்தக் கண்டங்கள் ஆங்கில G எழுத்தில் ஆரம்பமாகி Y எழுத்தில்முடிவடைகின்றன. இத் திட்டத்துள் பலருடைய நிலங்கள் இலவ்பாகவே பறிமுதல் செய்யப்படுகின்றன.

| கண்டங்களின் பெயர்கள் | | ஏக்கர் | பேர்ச் | ரூட் |
|---|---|---|---|---|
| முதலாம் இலக்கக் கண்டம் | G 62 | 103 | 00 | 22 |
| இரண்டாம் இலக்கக் கண்டம் | H 62 | 32 | 00 | 31 |
| மூன்றாம் இலக்கக் கண்டம; | I 62 | 35 | 01 | 00 |
| நான்காம் இலக்கக் கண்டம் | J 62 | 20 | 02 | 04 |
| ஐந்தாம் இலக்கக் கண்டம் | K 62 | 17 | 02 | 29 |
| ஆறாம் இலக்கக் கண்டம் | L 62 | 19 | 02 | 29 |
| ஏழாம் இலக்கக் கண்டம் | M 62 | 67 | 02 | 33 |
| எட்டாம் இலக்கக் கண்டம் | N 62 | 180 | 01 | 00 |
| ஒன்பதாம் இலக்கக் கண்டம் | O 62 | 40 | 00 | 00 |
| பத்தாம் இலக்கக் கண்டம் | P 62 | 19 | 00 | 21 |
| பதினொன்றாம் இலக்கக் கண்டம் | Q 62 | 25 | 02 | 10 |
| பனிரெண்டாம் இலக்கக் கண்டம் | R 62 | 103 | 02 | 35 |
| பதின்மூன்றாம் கண்டம் | S 62 | 29 | 00 | 26 |
| பதின்நான்காம் இலக்கக் கண்டம் | T 62 | 76 | 03 | 21 |
| பதினைந்தாம் இலக்கக் கண்டம் | U 62 | 176 | 10 | 26 |
| பதினாறாம் இலக்கக் கண்டம் | V 62 | 26 | 11 | 00 |
| பதினேழாம் இலக்கக் கண்டம் | W 62 | 25 | 03 | 19 |
| பதினெட்டாம் இலக்கக் கண்டம் | X 62 | 34 | 02 | 00 |
| புத்தொன்பதாம் இலக்கக் கண்டம் | Y 62 | 54 | 00 | 23 |

இக் கண்டங்கள் யாவும் இலக்கம் 84565 படத்தில் காட்டப் பட்டுள்ளது. கி.பி 1862ஆம் ஆண்டு அளக்கப்பட்டுள்ளது. நில அளவைத் திணைக்களத்தினால் 1872.02.03இல் A.B Fueres Capt R.E.Surveyor General அவர் கையொப்பமிட்டிருக்கின்றார். J.A. சேதுகாவலர் அவர்கள் பொது அளவையாளருக்காக ரூபா 3.00

இட்டு கையொப்ப மிட்டிருக்கி ன்றார். A,B,C,D,E,F,Z ஆகிய கண்டங்கள் பற்றிய சந்தேகங்கள் இயல்பாக ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இந்தக் கண்டங்கள் யாவும் வன்னியர்களுடைய பெயரில் வேறு இடங்களில் அமைந்திருந்தன. உதாரணமாக கொக்கட்டிச்சோலைக் கோயிலுக்குப் பின்னால் கன்னாக் காட்டுடன் ஒட்டி நீண்டு காணப்படுகின்ற நிலங்கள், கொக்கட்டிச் சோலைச் சந்தியிலிருந்து மணற்பிட்டி வரையும் காணப்படுகின்ற குஞ்சிலயாப்போடி வன்னியனாரால் விறதர்களுக்குக் கொடுக் கப்பட்டு விறதர்மாருடைய கண்டம் என்று அழைக்கப்படுகின்ற பரந்த பூமிகள் போன்றன யாவும் இதில் அடங்கலாம். அத்தோடு குஞ்சிலயாப்போடி வன்னியன் அவர்களுடைய பெயரில் இருந்த கன்னன்வெளி, பொன்னன்வெளி, கரவாகு வட்டை போன்ற இடங்களில் காணப்பட்ட வயல் நிலங்களும் இவற்றில் அடங்கலாம். (19 கண்டங்களின் அளவைப் படத்தினை பா. ஸ்ரீ கந்தசெயா அவர்கள்தான் அண்மைக்காலத்தில் கொழும்பு அளவைத் திணைக்களத்தில் இருந்து பெற்று அறிமுகப்படுத்தியவர்)

## உறுதி எழுதுதல்

முன்னைய காலங்களில் வயல் நிலபுலங்களுக்கு உறுதி எழுதும் போது கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு, அம்பிலாந்துறையில் உள்ள குறிப்பிட்ட இடம் குறிக்கப்படுவதுண்டு. அதாவது, கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு அம்பிலாந் துறையிலுள்ள நாதனவெளி என்று வெல்லாவெளியிலுள்ள காணிகளுக்கு உறுதி எழுதப்பட்டிருக்கின்றது. கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு, அம்பிலாந்துறையிலுள்ள தெவிலாமுனை என்றும், கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு, அம்பிலாந்துறையிலுள்ள கிளாக்கொடிச்சேனை என்றும், கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு, அம்பிலாந்துறை,சுனையங்குடா என்றும் எழுதப்படுவது வழக்கமாகும்.

உதாரணத்துக்கு உறுதி இலக்கம் 794, இதனகத்து யாவரும் அறிவார்களாக இதனடியில் கைச்சாத்திடும் மட்/ஆரையம்பதி - 3, சின்னத்தம்பி கோணாமலை ஆகிய இவரின் மனைவி திருமதி தங்கப்பிள்ளை கோணாமலை ஆகிய நான் இதே ஊர் முகவரி

செல்வன் கோணாமலை ஸ்ரீபிரேமசாயிசிவம் ஆகிய இவர் மீது இயல்பாகவே எழுந்த நற்புணர்வே மதிபலனாக இதன் கீழ் ஆதன அட்டவனையில் நன்கு விளக்கியுரைக்கப்படும் ஆதனத்தை இதன் மேல் பெயர் குறிக்கப்பட்ட கோணாமலை ஸ்ரீபிரேமசாயிசிவம் ஆகிய இவருக்கு ஒருபோதும் கைமீட்கத்தகா நன்கொடையாகக் கொடுத்தும், கையளித்தும், ஒப்படைத்தும் விட்டேன் இவ்வாத னத்திற்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி ருபா நாற்பதினாயிரமாகும்.

## ஆதன அட்டவணை

கிழக்குமாகாணம் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப் பற்று அம்பிளாந்துறையில் அமைந்துள்ள ஆற்றுச்சேனைப் பூமி என அழைக்கப்படுமோர் நெற்காணியில் கிழக்குப்புறப் பங்கு இதன் அளவு ஏக்கர் -12 இதன் எல்லைகள் வடக்கு வாடிப்பங்கு இது த.சின்னத்தம்பிக்குரியது. கிழக்குப் புறம் பத்தரை ஏக்கர் கண்டம் அது கத்தோலிக்க மிசனுக்கும் மறு பெயர்க்குமுரியது. தெற்கு இத்தியடிப்பங்கு இது த.சின்னத்தம்பிக்குரியது மேற்கு க.மகேஸ்வரியும் அனைவரும் பிரிவிட்டாச்சி செய்யும் இதன் மீதிப் பூமி. இது முழுவதும் பாய்ச்சல் வடிச்சல் உரித்துக்கள் அனைத்தும்.

அண்மையில் அம்பிலாந்துறையில் எழுதப்படுகின்ற உறுதிகள்கூட கண்டங்களை எல்லையாகக் கொண்டுதான் அமைகின்றன. உதாரணமாக ஆதன இடாப்பு இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது.

## ஆதன இடாப்பு

கிழக்குமாகாணம் மட்டக்களப்பு டிஸ்திறிக் மண்முணைப் பற்று அம்பிலாந்துறையில் இருக்கும் H - 62 ம் இல. கண்டமாகிய வட்டவான் வட்டி எனப்படும் பூமி எல்லைகள் : வடக்கு I - 62 ம் கண்டம். தெற்கும் கிழக்கும் உப்பாறு. மேற்கு முடிக்குரிய பூமி. விசாலம் ஏக்கர் முப்பத்திரெண்டு பேட்செஸ் முப்பத்து மூன்று. 32.0.33 இவ்விபரமுடைய பூமியிலுமதன் உரித்துக்கள் சகலதிலும் பிரிவில்லாத 1/12 பன்னிரெண்டில் ஒரு பங்கு என வருகின்றது.

## அம்பிலாந்துறை எல்லை

பலருடைய வாய்மொழித் தகவல்களை மெய்பிக்கக் கூடிய வகையில் கோணாமலை அவர்களுடைய உறுதி தெளிவுபடத்துகின்றது. பண்டைக் காலத்தில் அம்பிலாந்துறையின் எல்லை ஆத்துச்சேனை வரை இருந்திருக்கின்றது. கெவுளியாமடு வரை இருந்ததாக ஞா.துரையப்பா சிவதொண்டன் அவர்கள் கூறுவார். மண்முனைப் பற்றுக்கு அம்பிலாந்துறை தலைமையிடமாக இருந்திருக்கின்றது. என்பதனை சந்தேகத்திற்கிடமின்றித் தெளிவுபடுத்துகின்றது. இதன் மூலம் விளங்குவது அம்பிலாந்துறையில் பண்டைக்காலமுதற் கொண்டு பலமான அரசியலோடு படைகளும் படைப் பிரிவுகளும் இருந்திருக்கின்றன. அது குணசிங்க மன்னன் உலகநாச்சிக்கு எழுதிய மடல்மூலம் வெளிப்படுகின்றது.

## கன்னக்குடா

அம்பிலாந்துறை வரலாற்றில் கன்னக்குடாப் பூமி சிறந்த வரலாற்று ஆவணமாகும். இந்தப் பூமி 181 ஏக்கர் ஆகும். இந்தப் பூமி ஆரம்பத்தில் பலரால் வெட்டப்பட்டிருக்கின்றன. இடப்போகம் மட்டும் செய்யப்பட்டுவருகின்றன. வில்லுக்குளத்தில் இருந்து முதல் பாய்ச்சல் அக்காலமுதற்கொண்டு இப் பூமிகளுக்கு இருந்து வருகின்றது. கன்னக்குடாப் பூமி கறுத்தாருடைய வட்டி, குடாப்பத்து, தளப்பத்துக்கூர், பறயன்வெட்டி, சின்னவட்டி, பெரியவட்டி, பிச்சகாக்காட முலை, குடாப்பம், வடிச்சல், ஏழுவரவப்பத்து, துறயடிவட்டி எனப் பல பிரிவுகளை உள்ளடக்குகின்றது.

ஆரம்ப காலத்தில் வயல்களை வளைத்து வேலி கட்டப்படு வதில்லை. ஆனால் வயல்களைச் சுற்றி சிறாம்பி கட்டி விடிய விடிய காவல் இருப்பது வழக்கமாகும். இவர்களுடன் அதிகாரியும் இருப்பார். ஒரு தொங்கலில் இருந்து தகரத்தினை அடித்து ஆரம்பிப்பார்களாம். அதனைத் தொடர்ந்து வரிசையாக அடித்துச் செல்வார்களாம். அவ்வாறு அடித்துச் செல்லும்போது மற்றய சிறாம்பியில் உள்ளவர் நித்திரை செய்தால் அவரை எழுப்பாமல்

தகரத்தினை வைத்துவிட்டு வருவார்களாம். அப்போது தகரச் சத்தம் கேட்கவில்லை என்பதனை உணர்ந்த அதிகாரி அந்த இடம் வந்து அவருக்கு பிரம்பால் அடித்து எழுப்பி விடுவாராம். பின்னர் அவர் தகரத்தினை அடித்து மற்றவரிடம் கொண்டு செல்ல வேண்டுமாம். இவ்வாறாக இந்த நிகழ்வு தொடருமாம்.

மறுநாள் காலையில் வைரத்தடியில் கூட்டம் இடம்பெறுமாம். (வயிரத்தடி என்பது பெரியதொரு வைரக்கட்டை நடப்பட்ட இடமாகும். இது கன்னக்குடா வட்டிக் கட்டில் இருந்தது.) கூட்டத்திற்கு வயல்காரர் எல்லோரும் செல்வது அவசியமாகும். கூட்டத்திற்கு வட்டானை தலைமை வகிப்பார். அந்த வேளையில் இரவு நித்திரை செய்தவர்கள், கடமையை ஒழுங்காகச் செய்யாதவர்கள், மிருகங்கள் சென்ற வழியில் சிறாம்பி இருந்தவர்கள் யாவரையும் தண்டிப்பார்களாம். மிருகங்கள் ஒன்று சென்றிருந்தால் 6 தரம் பிரம்பால் அடிப்பார்களாம், கிளையாகச் சென்றிருந்தால் 12 தரம் பிரம்பால் அடிப்பார்களாம் இதனை அதிகாரியே மேற்கொள்வார்.

வட்டானையாக எதிர்மனசிங்கம், தம்முத்தர் ஆகியோர் இருந்த காலத்தில் மூத்ததம்பி அதிகாரியாக இருந்துள்ளார். இவரை நெடிய மூத்தவர் என்றே கூறுவார்கள். அப்படியான தோற்றம் உடையவர். அக்காலத்தில் சிறந்த சேவை செய்திருக்கின்றார். இந்த இரண்டு வட்டானைகளுடனும் சிறந்த தொடர்பை பேணியவர். எதிர்மனசிங்கத்தையும் மூத்ததம்பியையும் பிரிக்கமுடியாத அளவுக்கு வட்டை சேவையிலும் கிராம முன்னோடித் தன்மையிலும் அன்னியொன்னியமாக இருந்துள்ளமையினை இன்றும் பலர் கூறுகின்றனர்.

## வயல் நிலங்களை விற்றல்

1940ஆம் ஆண்டக்குப் பின்னர் அம்பிலாந்துறையின் பொருளாதார நிலை வீழ்ச்சிப் பாதையையே காட்டிச் சென்றிருக்கின்றது. நிலக்கிழார்கள் வாழ்ந்து செல்வம் கொளித்த இந்தக் கிராமத்தில் படிப்படியாக வறுமை ஊசலாடத் தொடங்கியது. சரியாக

வழிகாட்டக்கூடிய கிராமத் தலைவர்களும் இருக்கவில்லை, மாறாக நிலத்தினை விற்பதற்கான அனுமதியும் இருந்தது இதனால் நிலங்களை விற்கத் தொடங்கினர். அண்மைக்காலத்தில் வயல் நிலங்களின் பெறுமதி தெரியாத பலர் அவற்றினை மிகவும் குறைந்த தொகைப் பணத்திற்கு விற்றுள்ளனர். குருக்கள்மடம், செட்டிபாளையம் போன்ற கிராமத்தவர்களுக்கு அதிகமாக இந்த நிலங்கள் விற்கப்பட்டுள்ளமை தெரிகின்றது. இப்பகுதியில் வேறு கிராமத்தவர்களுக்கு வயல் நிலமோ, மேட்டு நிலமோ இருக்கவில்லை. ஆனால், தற்காலத்தில் பல கிராமத்தவர்களுக்கு அத்தகைய வயல் நிலங்கள் சொந்தமாக்கப் பட்டிருக்கின்றன. கன்னக் குடாக் கண்டம், கற்சேனைக் கண்டம், வீரானை வில்லுக் கண்டம், அத்தியாமும்மாரிக் கண்டமென்று இந்த நிலங்கள் விரிந்து காணப்படுகின்றன. நிலத்துக்குச் சொந்தக் காரர்களாக இருந்தவர்களின் வாரிசுகளில் இன்றும பலர் சாண்தற பூமிகூட இல்லாமல் வறுமையில் இருப்பது மனவேதனைக்குரியது.

## வயல் சம்பந்தமான பிரச்சினை

அம்பிலாந்துறையில் பல ஏக்கர் நெற்காணிகள் அறுமக் குட்டிப் போடிவசம் இருந்திருக்கின்றது. அக்காணிகள் 1100 ஏக்கருக்கு அதிகம் என்பர். இவற்றினைத் தவிர மட்டக்களப்பின் பல இடங்களிலும் அவருக்குச் சொந்தமான காணிகள் இருந்துள்ளன. இக்காலத்தில் அம்பிலாந்துறையில் இருந்த கதிர்காமப்போடி வன்னியனாருக்கு 127 ஏக்கர் காணி இருந்திருக்கின்றது. ஆங்கிலேயர் காலத்தில் அவர் மகன் குஞ்சிலயாப்போடி வன்னியனார் பெயரில் இருந்திருக்கின்றது. இவர்களுக்கு கன்னன்வெளி, பொன்னன்வெளி, கரவாகு வட்டை ஆகிய இடங்களிலும் பெரியபெரிய கண்டங்கள் இருந்துள்ளன. (அம்பாறை மாவட்டம்) மண்முனைப்போடி அம்பிலாந்துறையில் நிலத்திற்குச் சொந்தக்காரணாக இருந்திருக்கின்றார். இவர்பற்றி பூசாரியார் சின்னத்தம்பி (அம்பிலாந்துறை) அவர்கள் குறிப்பிடும்போது, "மண்முனைப்போடியிடம் இருந்த பூமியைப் பறித்து எடுக்கும் நோக்குடன் அம்பிலாந்துறையில் இருந்த வன்னியர்கள் திட்டம் தீட்டி அதற்காக "ஆயா" எனும் வெள்ளைக்காரியையும் பயன்படுத்தி இருக்கின்றான்.

மண்முனைப்போடியை இந்த வன்னியர்கள் மட்டக்களப்பு நீதிமன்றில் வழக்கு வைத்துள்ளனர். குறித்த அந்த நாளில் மண்முனைப் போடி நீதிமன்றம் செல்வதற்கு உறுதிக்கட்டை தனது பொட்டகத்தில் இருந்து எடுத்து பொட்டகத்தின் மேல் வைத்து தனது வீட்டில் இறைவழிபாடு செய்து இருக்கின்றார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உறுதிக்கட்டு எடுக்கப்பட்டிருக்கின்றது. உறுதி இல்லாமல் மனம் நொந்து அன்று நீதிமன்றம் சென்றபோது, அங்கு வழக்கு நடந்தது. அந்த இடத்தில் உறுதியைக் கேட்டபோது இவரும் நடந்தவற்றைக் கூறினாராம். இதனை ஏற்கமறுத்த ஆங்கிலேய நீதிமன்மறு விசாரணையின்றி அரச நிலமாக அதனை மாற்றியதாம். இதனை எல்லோருக்கும் தெரியப்படுத்த நீதி மன்றைச் சுற்றி ஒருவர் தவில் அடித்தாராம். அதன் பின்னர்தான் அரச நிலமாக மாற்றப்படும் முறை இருந்ததாம். உறுதி இல்லாமல் சென்றமைக்காக மண்முனைப்போடி 1½ நாள் சிறையில் இருந்தாராம். பின்னர் மேற் கூறிய வன்னியர்கள் தங்கள் நிலமாக மாற்றியிருக்கின்றனர். இந்த நிலங்கள்தான் இன்று பேசப்படும் 1111 ஏக்கராகும் என்றார். இது வாய்மொழித் தகவலாக இருந்தாலும் ஒர் உண்மை வெளிப்படுகின்றது. மட்டக்களப்பில் இருந்த ஆங்கில ஆட்சியாளர்களின் பிரதான நோக்கம் போடிமார்களிடமும், வன்னியர்களிடமும் இருந்த பூமியை எந்த முறையிலாவது சுவிகரிப்பது. அதற்காக அவர்களுக்கு மேற்கூறிய வழிமுறை சுலபமாகவே இருந்திருக்கும். ஆங்கில ஆட்சியாளர்கள் சுதேசிகளிடமிருந்த நிலங்களைப் பறிப்பதற்கு நீதிமன்றங்களையும், சுதேச அடிவருடிகளையும், பலாத்காரத்தையும் பயன்படுத்தியுள்ளனர்.

வன்னியர்கள் பொது மக்களைக் கொண்டு காட்டை வெட்டி வயல் களாக்கி இருக்கின்றார்கள். அவற்றைத் தங்களது பெயரில் எழுதியிருக்கின்றார்கள். அப் பூமிகளைப் பறயன் வெட்டியதால் பறையன் வட்டி என்றும், கறுத்தான் வெட்டியதால் கறுத்தாருடைய வட்டி என்றும் கன்னக்குடாப் பூமி பல பெயர்களில் வருகின்றன.
ஆங்கிலேயராலும், அவர்களுடைய சூழ்ச்சிக்காரர்களாலும் பறிமுதல் செய்யப்பட்ட காணிகள் எவ்வாறு இன்று பலரிடம் காணப்படுகின்றன எனும் வினா எல்லோருக்கும் எழவே செய்யும்?

பறிமுதல் செய்யப்பட்ட காணிகள் ஆங்கிலேயரால் இங்குள்ள எல்லோருக்கும் விற்பனை செய்யத் தொடங்கினார்கள். பிரித்தானியாவின் இலங்கைக்கான தேசாதிபதிகளே உறுதி மூலம் இவ் விற்பனவுகளை மேற்கொண்டனர். ஆங்கிலேயர் நில உடமையை சிறிது சிறிதாக மாற்றி போடிகளின் முக்கியத்துவத்தையும் குறைக்கத் தொடங்கினர்.

குஞ்சிலயாப்போடி வன்னியனாருடைய காலத்திற்கு முன்னர் வயல் நிலங்கள் வரையறுக்கப்படாமல் பரந்துபட்டே பகுதிபகுதியாக இருந்திருக்கின்றன். 1862ஆம் ஆண்டுதான் நிலங்கள் அளக்கப்பட்டு 19 கண்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அக்கண்டங்கள் யாவும் 62 என்ற இலக்க த்திலே அமைந்துள்ளன. ஆங்கில எழுத்துக்களான G 62 தொடக்கும் Y 62 வரையுமாக அமைந்துள்ளது. இந்தக் காணியின் அளவு 1111 ஏக்கர் 1 ரூட் 7 பேர்ச் எனக் காட்டப் பட்டுள்ளது. (விளக்கம் புத்தகத்தில்)

அம்பிலாந்துறையைப் பொறுத்தமட்டில் இன்று வரையும் உப்புலக்கிடா எனும் இடத்தில் உள்ள நிலம் வன்னியர்களின் பெயர்களிலே உள்ளது. அதேபோல் இன்று புதுவட்டை எனும் இடத்தில் காணப்படும் 176 ஏக்கர் நிலங்கள் யாவும் இத்தகைய வன்னியர்களின் பெயர்களிலேயே இருந்திருக்கின்றன. அத்தியாமுன்மாரிப் பகுதியில் காணப்படும் பல ஏக்கர் நிலங்கள் கதிராமப்போடி வன்னியனின் மறுபங்கு எனும் பெயரிலேயே இருந்தன. அந்த நிலங்கள் யாவும் கொக்கட்டிச்சோலைச் சிவன் கோயிலுக்குச் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தன. பழுகாம கிராம மக்கள் கொக்கட்டிச்சோலைச் சிவன் கோயில் தொண்டூழியப் பணியில் இருந்து பிரிந்து சென்ற காலத்தில் அந்த நிலங்களை மாவேற்குடாப் பிள்ளையார் ஆலயத்துக்காக எழுதி எடுத்துள்ளனர். புதுவட்டைப் பூமி ஆலய பரிபாலன சபையினரால் ஏக்கருக்கு ரூபா 1500 என அறிவிட்டு அண்மைக் காலத்தில் பொதுமக்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது, இந்த முயற்சியானது அக்காலத்திலிருந்த ஆலய பரிபாலன சபையினர் விட்ட மாபெரும் தவறு என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆலயத்துக்குச் சொந்தமான சொத்தினைக் கையாளமுடியாத நிலைமை

அவர்களுக்கு இருந்தது மட்டுமன்றி, இந்த நிலங்களை எப்படியாவது விற்று விடவேண்டும் என்ற ஆதங்கத்தில் செயற்பட்டது வேதனைக் குரியது.

கொக்கட்டிச்சோலை கமநலகேந்திர நிலையத்தின் கீழ் 21 விவசாய அமைப்புக்கள் உள்ளன. அவற்றுள் அம்பிலாந்துறைக்கென்று நான்கு விவசாய அமைப்புக்கள் உள்ளன.

1. அம்பிலாந்துறை மேல்கீழ் கண்டம் - இக்கண்டத்தில் 474 ஏக்கர் வயல்நிலமும் 159 விவசாயக் குடும்பங்களும் உள்ளன.
2. அம்பிலாந்துறை தென்கண்டம் - இக்கண்டத்தில் 446 ஏக்கர் வயல் நிலங்களும், 135 விவசாயக் குடும் பங்களும் உள்ளன.
3. கற்சேனைக் கண்டம் - இதில் 841 ஏக்கர் விவசாயக் காணிகளும், 263 விவசாயக் குடும்பங்களும் உள்ளன.
4. வீரானை வில்லுக்கண்டம் - இக்கண்டத்துள் 364 ஏக்கர் பூமிகளும், 134 விவசாயக் குடும்பங்களும் உள்ளன.

## மதில்

அரசர்கள் இருக்கும் இடங்களில் காவலரண் இருப்பது இயல்பே. இத்தகைய நிலையில் அம்பிலாந்துறையில் குட்டக்கல் மதில் இருந்துள்ளது. இந்த மதிலை பன்றிக்கு வன்னியர்கள் கட்டியது என்பார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. வரலாற்று அடிப்படையில் பார்க்கும் போது, அம்பிலாந்துறையில் நீண்ட அரசியல் பாரம்பரிய மொன்று இருந்திருக்கின்றது என்பதனை பாணகையில் இருந்து ஆண்ட குணசிங்கன் உலகநாச்சிக்கு மண்முனையை அறிமுகப்படுத்தும்போது, தெளிவுபடுத்தி இருக்கின்றான். குணசிங்கன் அம்பிலாந்துறையிலிருந்த அரசியல் பலத்தினை அறிந்திருக்கின்றான். எனவே, இம்மதில் அரசர்களுடைய பாதுகாப்பு அரணாகவே இருந்திருக்கின்றது. பன்றிக்கு மதில் கட்ட வேண்டிய அவசியம் இருந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியானாலும் அகலம், உயரம் இவ்வளவு தேவைப்பட்டுமிருக்காது. மண்முனைப்

பகுதியில் மட்டும் 1100 ஏக்கர் வயல் இருந்திருக்கின்றது. பின்னர் இந்த வயல் 1111 ஏக்கராக விரிவடைந்திருக்கின்றது. குஞ்சிலயாப்போடி வன்னியன் காலத்தில் இந்த வயல்களைச் சுற்றி 6 அடி உயரமுடைய மதிலை நீண்ட தூரத்திற்குக் கட்டியிருக் கின்றனர். இது குட்டைக்கல் மதிலாகும். இந்த மதிலின் சிதைந்த தன்மையினை 1990ஆம் ஆண்டு காலம்வரையும் காணக்கூடியதாக இருந்தது. அரசாங்கம் வீடுகட்டுவதற்காக ரூபா 4000 பணம் கொடுத்தபோது அடித்தளம் போடுவதற்கும், சீமெந்துக்கல் வெட்டுவதற்குமாக மக்களில் பலர் எஞ்சியிருந்த மதிலை உடைத்து அதிலுள்ள கற்களைப் பயன்படுத்தயிருக்கின்றனர். இதனால் இந்த மதில் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளது.

அறுமக்குட்டிப்போடி மாபெரும் வீரன். ஆங்கிலேயரைத் துரத்தி புளியந்தீவுடன் மட்டுப்படுத்தியவன். ஒல்லாந்தருக்கு அடிபணியா தவன். போர்த்துக்கேயருக்கு இவனுடைய முன்னோர் பிரச்சினை யினைக் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள். இத்தகைய வீரமகன் இருந்த இடத்தில் காவலரண் இருப்பதுதான் இயல்பு. அதுமட்டுமன்றி நீண்டதொரு அரசியல் பின்னணி நிலவிய அம்பிலாந்துறையில் காவலரண் இருப்பது இயல்பே.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கரையோரப் பகுதியினைக் கைப்பற்றியிருந்த காலத்தில் அம்பிலாந்துறையில் காவல் அரண் இருந்திருக்கின்றது. கண்டி மன்னனுக்கும் அம்பிலா ந்துறையில் இருந்த வன்னிமைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது. அம்பிலாந்துறை தாந்தாமலை வீதி அன்று "ராஜ" வீதி என்றே அழைக்கப்பட்டிருக்கின்றது. அம்பிலாந் துறையில் இருந்து கண்டிக்குச் செல்வது பாதுகாப்பாகவும் இலகுவாகவும் இருந்திருக்கும். வன்னியர்களுடைய இராணுவ முகாம்கள் காடுகளிலே இருந்திருக்கின்றது. அவர்களுடைய பாதுகாப்பு கண்டிய மன்னர்கள் மட்டக்களப்பு வீரர்களுடன் சந்திப்பினை ஏற்படுத்துவதற்கு துணை புரிந்திருக்கும். எனவே, இவ்வாறான நிலையில் பாதுகாப்பும் பாதுகாப்பரணும் இன்றியமையாதது. உலகநாச்சி வருகைக்கு முன்னரும், பின்னரும்

வன்னியர்களின் காலம்வரை அரசியல் உறுதிப்பாடு பலமாகவே இருந்திருக்கின்றது.

### வந்தோரை வரவேற்றல்

மட்டக்களப்பு என்றாலே அன்னங்கொடுத்து அரவனைப் பதில் சிறப்புடையவர்கள் உள்ள பிரதேசம். அதிலும், படுவான்கரைப் பிரதேசத்தில் இருக்கும் மக்கள் பன்மடங்கு பெரியவர்கள். அன்னங்கொடுத்து அரவணைத்து பாயுடன் ஒட்டவைத்த பண்புடையவர்கள் இவர்கள் என்பர்.

மூவர் வேதங்கள் முற்றுமுணர்ந்து
மதுரமதனால் மட்டக்களப்பை
சதுர மதிலாய்த் தரித்து முன்னாண்டு
அன்னக்கொடையும் அண்டர்கள் மகிழ
மன்னர்க்கதிபன் மட்டக்களப்பில்
(போடி கல்வெட்டு)

என்ற கல்வெட்டுப் பாடலடிமூலம் மட்டக்களப்பு பிரதேசமே அன்னங்கொடுத்து அரவணைத்த பிரதேசம். அவற்றினுள்ளும், அம்பிலாந்துறைக் கிராமம் பற்றிக் குறிப்பிடப்படுமிடத்து,

அன்னசத்திரம் அளித்திடும் நகரில்
பன்னூல் ஓதும் பண்டிதர் வரவே
சம்புநாதன் தனையிருமென்று
அம்பிலாலந்துறையதனில் வைத்து
(போடி கல்வெட்டு)

என்ற போடிகல்வெட்டால் வெளிப்படுவது, அம்பிலாந்துறையில் அன்னசத்திரம் அமைக்கப்பட்டு நீண்ட காலமாக மக்களுக்கு உணவு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இங்கு இருந்தவர்கள் வேளாண்மை நிலங்களையும், மாட்டுப் பட்டிகளையும் மிகுதியாக வைத்திருந்து செல்வந்தர்களாக இருந்தவர்கள். அதுமட்டுமன்றி சுதந்திரமான ஆட்சி நடத்தியவர்கள் அதனால் இவர்களுக்கு அன்னசத்திரம் அமைத்து அன்னம் கொடுப்பதென்பது இலகுவாகவே இருந்திருக்கும்.

அன்னசத்திரம் என்பது, அன்னசாலையாகும். இங்கு பலநாள் நாட்டின் நன்மை கருதியும், மக்களின் எழுச்சி கருதியும் வேள்வி செய்யப்படும். அதாவது, மக்கள் தங்கியிருந்து உணவுண்டு செல்கின்ற விடுதி என்று பொருள் கொள்ளப் படுகின்றது. எனவே, அம்பிலாந்துறையில் அன்னசத்திரம் என்பது பண்டுதொட்டு இருந்து வந்திருக்கின்றது. ஏழைகளுக்கு பகல் இரவாக அன்னம் கொடுக் கப்பட்டிருக்கின்றது. அன்னசத்திரம் அளித்திடும் நகரில் என்ற அடி அதனையே உணர்த்தி நிற்கின்றது. அம்பிலாந்துறையில் மட்டுமன்றி படுவான்கரைப் பிரதேசத்திலே பல அன்ன சத்திரங்கள் அமைக்கப் பட்டிருக்கலாம். இதன் பின்னனியில் பார்க்கும்போது, தம்மத்தான் கிணற்றடி அமுதினைக்கொள்ளமுடியும். இவ்வமுது முதலைக் குடா, மகிழடித்தீவுச் சந்தியில் இடம்பெற்றிருக்கின்றது. அறுமக் குட்டிப்போடியின் மகன் மண்முனைப்போடி இதனை தொடர்ந்து நடத்தி வந்திருக்கின்றான். ஆலயங்களில் தொடர்ந்து இவ்வமுது கொடுக்கும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதன் தொடர்ச்சியினை இன்றும் இப்பிர தேசத்திலுள்ள தாந்தாமலை, கொக்கட்டிச்சோலை போன்ற ஆலயங்களில் சிறப்பாக அவதானிக்கலாம். அத்தோடு இப்பிரதேசத்தின் கிராமங்கள் தோறும் உள்ள ஆலயங்களில் அன்னதானம் கொடுக்கும் வழக்கமுண்டு. அம்பிலாந்துறையிலுள்ள மாரியம்மன் சடங்கு தொடங்கிய காலமுதற் கொண்டு இறுதிநாள் வரை அன்னதானம் கொடுக்கும் வழக்கம் இன்றுவரையுமுண்டு. அத்தோடு பிள்ளையார் திருவிழாக் காலங்களிலும் இந்தகைய நடைமுறையுண்டு.இன்றும் அம்பிலாந்து றையிலுள்ள மக்கள் வந்தோரை வரவேற்பதில் பேர்பெற்றவர்கள். இதைச் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. இந்த நடைமுறை பண்டைக்காலந் தொடக்கம் இருந்துவருகின்றது.

## ஏட்டுப் பிரதி

குஞ்சித்தம்பி அம்பிலாந்துறையிலிருந்து பின்னர்களுவுந்தன் வெளியில் இருந்தவர். இவர் அம்பிலாந்துறையில் இருந்தக் காலத்தில் பல ஏடுகளைப் பிரதி செய்தவர். இவருடைய காலத்திலிருந்து, இங்கு பல ஏடுகள் மீள எழுதப்பட்டிருக் கின்றன. வள்ளியம்மன் அம் மானை, பாரத அம்மானை, இராமர் அம்மானை, கடோற்கசன் அம்

மானை, கஞ்சன் அம்மானை, வைகுந்த அம்மானை, வாகடம், மந்திர ஏடுகள், கூத் தேடுகள், மருந்தேடுகள் என்று பலவற்றைக் கொள்ளமுடியும். இவருடைய முயற்சி பாரம்பரியமாகப் பேணப் பட்டு வந்த ஏடுகளைப் பாதுகாத்திருக்கின்றது. அம்பிலாந்துறையில் எண்ணிக்கையற்ற ஏடுகள் காணப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சிலர் ஏழ்மைநிலை காரணமாக சிறு தொகைப் பணத்திற்கு விற்றிருக கின்றனர். அதனால் பல ஏடுகள் யாரிடம் இருக்கு தென்று தெரியாத வண்ணம் கைமாறியுள்ளது. முன்னர் குறிப்பிட்டவர்களிடம் இருந்துள்ளது. அந்த ஏடுகள் வெளிவருமாக இருந்தால் அம்பிலாந்து றையின் வரலாறு இன்னும் தெளிவு படுத்தப்படும். ஏடுகளைப் பிரதிபண்ணி சிறப்புப்பெற்ற இவர் அண்மைக் காலத்திலே இறந்துள்ளார்.

### வில்லுக்குளம்

அறுமக்குட்டிப்போடி காலத்திலிருந்து இக்குளம் பற்றிய குறிப்புக்கள் உண்டு. அறுமக்குட்டிப்போடி காலத்தில்தான் 1100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் வேளாமை செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காக வில்லுக்குளத்திலிருந்து நீர் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. எனினும், இக்குளம் குளக்கோட்டன் காலத்தில் கட்டப்பட்டிருக் கலாம். ஆடகசௌந்தரியைத் திருமணம் செய்து வாழ்ந்த இடம் மட்டக்களப்பாக இருப்பதனால் இக் குளத்தினையும் கட்டிருக்க வாய்ப்புண்டு. அம்பிலாந்துறையிலிருந்த வன்னியர்களும் அவர்களைத் தொடர்ந்துவந்த நிருவாகத்தினரும் இக் குளத்தினைப் புனரமைத்துள்ளனர். ஆறுதலை வாய்க்காலை அறுமக்குட்டிப் போடியும், கானடி வாய்க்காலை வன்னியர்களும் வெட்டிக் கன்னக்குடாவுக்கு நீர் பாய்ச்சியுள்ளனர்.

குஞ்சிலயாப்போடி வன்னியருடைய காலத்தில் வில்லுக்குளம் உடைப்பெடுக்கும் நிலையில் காணப்பட்டிருக்கின்றது. குளம் உடைப்பெடுத்தால் பண்டாரியாவெளி, அரசடித்தீவு, படையாண்ட வெளி போன்ற கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் இருந்தன. இந்த நிலையினை உணர்ந்த வன்னியனார், குளக்கட்டின் ஒரு பகுதியினை வெட்டி நீரை அகற்றி இருக்கின்றார். அப்போது

வெட்சித்துரை அங்கு வந்து கோபப்பட்டு யார் இந்த வேலையைச் செய்தது? என்றும் இதை எப்படிக்கட்டுவது? என்றும் கோபாவேசத்துடன் கேட்டிரு க்கின்றார். அப்போது வன்னியனார் கூறினாராம் அதை நான் தான் செய்தேன். அக் குளத்தினை நான் திருத்தித்தருவேன் என்றாராம். வன்னியனாரின் கதையைக் கேட்ட துரை எதுவும் பேசவில்லையாம்.

பின்னர் அவர் அம்பிலாந்துறையில் உள்ளவர்களைக் கொண்டு தோளால் மண் சுமந்து குளத்தின் உடைந்த பகுதியினைக் கட்டினாராம். அந்த இடம் வந்து பார்த்து அதிற்சியுற்ற வெட்சித்துரை சந்தோ சத்துடன் நான் என்ன செய்ய வேண்டும் என்று குஞ்சித்தம்பி வன்னியனிடம் கேட்டாராம். அதற்கு வன்னியனார் சொன்னாராம் அம்பிலாந்துறை வயல்களுக்கே முதல் பாய்ச்சல் கொடுக்க வேண்டும் என்று. அதனை ஏற்றுக்கொண்ட துரை அக் கால முதலே அவருடைய வேண்டுகோளை நிறைவேற்றினாராம். அன்றிலிருந்து இன்று வரையும் வில்லுக்குளத்தின் முதல் பாய்ச்சல் நீர் அம்பிலாந்துறை வயல்களுக்கே இருந்து வருகின்றதாம்.
*(சிவபாலன் பட்டிப்பளை)*

இனிமேல் வில்லுக்குளம் உடைக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக குஞ்சிலயாப்போடி வன்னியனார் தற்போது வில்லுக்கட்டு அருகில் காணப்படும் பிள்ளையாரை நிறுத்தி வணங்கி இருக்கின்றார். அன்றிலிருந்து இன்று வரையும் வில்லுக்கட்டுக்கு எந்த பொல்லாப்பும் இல்லை என்பர். வில்லுக்குளம் கட்டுவதற்காக தம்பட்டையிலிலுந்து ஒரு குழு அழைக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் இரு பகுதியாகப் பிரிந்து கடுக்காமுனைச் சோதயன் கட்டுப் பகுதியிலும் வில்லுக்குளத்தினுள் காணப்படும் புளியமுனைப் பகுதியிலும் இருந்திருக்கின்றனர். அவர்கள் வில்லுக்குள வேலை முடிந்தும் செல்லவில்லையாம். அங்கேயே இருந்திருக்கின்றனர். அவர்கள் ஆடல் பாடல் புரிவதில் வல்லவர்கள். வைலா பாடல்களைப்பாடி சந்தோசமாக இங்கேயே இருந்திருக்கின்றனர். அவர்களுக்கு இங்கிருந்து செல்வதற்கு விருப்பமில்லையாம். இதனைக் கடுக்காமுனை மக்கள் குஞ்சிலயாப்போடி வன்னியனாரிடம் கூறியபோது, அவர் குதிரை வண்டியில் வந்து

நீங்கள் நாளைக் காலையிலே இங்கிருந்து வெளிக்கிட்டுச் செல்லவேண்டும் என்று கூறினாராம். அவர்களும் அவருடைய சொற்படி குடும்பத்துடன் சகல சாமான்களையும் ஏற்றி தம்பட்டைக்குச சென்றார்களாம். (பா.தில்லையப்போடி)

வில்லுக்குளம் கட்டிமுடித்த காலத்தில் மக்கள் குளத்தில் குளிப்பது வழக்கம். அப்போது ஒரு பிள்ளையை முதலை பிடித்துச் சென்று விட்டதாம். பிள்ளையயை மீட்டுத் தரும்படி அங்கிருந்த முருகேசு எனும் மந்திரவாதியிடம் கூறியிருக்கின்றனர். அவர் கூறினாராம் பிள்ளையை உயிருடன் மீட்கமுடியாது என்று. பின்னர் அவர் மந்திரத்தால் முதலையைப் பிள்ளையுடன் அழைத்து அவர்களிடம் கொடுத்தாராம். பின்னர் நம்பியாண்டா நம்பி எனும் குருக்கள் மந்திரத்தால் கல் ஒன்றை ஓதி எறிந்தாராம். அன்றிலிருந்து இன்று வரையும் முதலையால் மக்களுக்கு எந்தத் தாக்கமும் இல்லை. (பா.தில்லையப்போடி)

இக்குளத்தினைத் தாமரைக் குளம் என்று கூறுவது வழக்கம். ஆரம்ப காலத்தில் தாமரைப் பூ இக் குளத்தில் அதிகம் காணப்பட்டது. மட்டக்களப்பு பிரதேசம் மட்டுமன்றி வேறு மாவட்டங்களில் உள்ளவர்களும் இங்கிருந்து பூப்பறித்துச் செல்வதுண்டு. ஆனால், இன்றைய நிலையில் தாமரை எதுவும் இல்லாமல் காட்சியளிக்கின்றது. 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் தாமரை கிழங்கு இக் குளத்திலிருந்து பிடுங்கபபட்டது. இந்த நிகழ்வு தொடர்ந்து வருடாவருடம் இடம்பெற்றமையினால் இங்கிருந்த தாமரை யாவும் முற்றாக அழிந்துவிட்ட நிலையில் பல வருடங்களின் பின்னர் மீண்டும் தளைக்கத் தொடங்குகின்றது. வில்லுக்குளத்திலே வதனமார் 500 மாடுகளை கட்டியதாக வதனமார் காவியத்தில் வருகின்றது.

**சவக்காலை**

முன்னர் உள்ள காலங்களில் பிரேதம் இவ்விடத்தில் அடக்கம் செய்யப்பட்டாலும் அறுமக்குட்டிப்போடி காலத்தில் சவக்காலைக்கான நிலம் அறுதியிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. குஞ்சிலயாப் போடி வன்னியர்களுடைய காலத்தில் சீர்செய்யபபட்டு உறுதியும்

எழுதப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு மூன்று ஏக்கருக்குக் குறையாத பரப்பளவைக் கொண்டது. எனினும் அத்தகைய அளவு இன்று இல்லை. இது அம்பிலாந்துறை மக்களுக்கான பொது மயானமாகும். அன்று தொட்டு இன்றுவரையும் இந்த மயானத்திலேயே பிரேதங்கள் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. கற்சேனைக் கிராமமக்கள் தங்கள் வசதி கருதி அங்கு ஒரு சவக் காலையினை அமைத்துக் கொண்டுள்ளனர். அறுமக்குட்டிப்போடி காலத்தில்தான் நாவிதர்கள், சலவைத் தொழில்வழிகள், நாசிவர்கள் குடியேற்றப்பட்டு சவத்தினை அடக்கம் செய்வதற்கான ஒழுங்கு முறையும் அவர்களுக்கு வகுத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. 19 கண்டங்களுள் ஒரு கண்டம் சவக்காலைக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்றது.

## கிட்டங்கி

மட்டக்களப்புப் பிரதேசத்திலே கிட்டங்கி என்ற பெயரோடு பல இடங்கள் உண்டு. அவை மட்டக்களப்பு வரலாற்றுடன் தொடர் பட்டன. கிட்டங்கி என்பது பண்டசாலை எனும் பொருளில் வருகின்றது. பண்டசாலை என்றால் களஞ்சியம் என்றும், பொருள் அறை என்றும், கூலஞ் சேர்த்துவைக்கும் இடமென்றும் பொருள்படு கின்றது. கூலம் சேர்த்துவைக்கும் இடமென்பது பல பொருளில் வருகின்றது. அவற்றுள் படையணி, பலபண்டம் அதாவது, நெல் முதலிய பதினெண் வகைப் பண்டம் சேகரித்து வைக்குமிடம் கிட்டங்கியாகும். கிட்டங்கி என்பது இவ்வாறான பொருளில் அமைகின்றதென்றால், அந்த இடம் ஆயுதக் களஞ்சியமாகவும், உணவுப் பண்டங்கள் சேகரித்து வைக்கப்பட்ட இடமாகவும் இருந்திருக்கின்றது. அக்காலத்தில் வன்னியர்களும், போடிகளும் அடிக்கடி எதிரிகளின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியமையினால் கிட்டங்கி பாதுகாப்பான இடமாக இருந்திருக்கும். அங்கு அதனால் தான் கிட்டங்கி வளவில் அறுமக்குட்டிப்போடி, குஞ்சிலயாப்போடி, கந்தப்போடி போன்றோர் இருந்திருக்கின்றனர். அதுமட்டுமன்றி எதிரிகள் இலகுவாக வரமுடியாத இடமாகவும் அம்பிலாந்துறை இருந்திருக்க வாய்ப்புண்டு. அக்காலத்தில் காடு சூழ்ந்து சுற்றுப் பிரதேசம் இருந்திருக்கும். இங்குள்ள துறையினால் மாத்திரம் போக்கு வரத்து இடம்பெற்றிருக்கும் ஆகவே, எதிரிகளைச் இலகுவாகத்

தோற்கடிக்கக் கூடிய இடமாக அம்பிலாந்துறை இருந்திருக்கும். பெதுவாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் முக்கிய தளமாக அம்பிலாந்துறையிலுள்ள கிட்டங்கி திகழ்ந்திருக்கும். ஆகவேதான், இங்குள்ள மதில் என்பது வெறும் பன்றிக்குக் கட்டப்பட்டதல்ல. அது பாதுகாப்பு அரண் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிராமோதயசபை

கொக்கட்டிச்சோலைக் கிராமோதய சபையிலே அம்பிலாந்துறை யினைச் சேர்ந்த பலர் இருந்திருக்கின்றனர். இ.செல்லையாப் பரிகாரியார், க.கு.நடராசா, க.கணபதிப்பிள்ளை, சி.பாலிப்போடி, கதிராமப்போடி (கொழும்பார்) போன்றோர் இருந்திருக்கின்றனர். 11 பேர் உறுப்பினராக 11 கிராமத்துக்கும் இருப்பர். அதில் அக்கிராசனாக மார்க்கண்டர் (முதலைக்குடா) அன்றைய காலத்தில் இருந்திருக்கின்றார். பின்னர் பிரதேசசபை உறுப்பினராக சு.தேவராசன் அதிபர் (உதவித் தவிசாளர்) அவர்களும் தேவப்போடி அவர்களும் இருந்துள்ளனர். உள்ளூராட்சி வீடமைப்பு ,நிர்மான அமைச்சினால் அகில இலங்கை மட்டத்தில் கிராமோதய சபைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் (1983.03.31 - 1984.02.29) திரு.பு.சுந்தரநாயகம் அவர்கள் வெற்றிபெற்று ஆர்.பிரேமதாசா இலங்கைப் பிரதம மந்திரியும் உள்ளூராட்சி விடமைப்பு நிர்மான அமைச்சரும் கிராமேதய சபை நிதித் தலைவருமாகிய அவர்களால் பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கின்றார்.

## வாகை மரம்

அம்பிலாந்துறையின் வாகை மரம் அண்ணளவாக 300 வருடம் பழமையானது. அறுமக்குட்டிப்போடி காலத்துக்கு முன்பிருந்து இருக்கின்றது. அன்றைய காலத்தில் பிரேதத்தினை அடக்கம் செய்ததும் இந்த மரத்தடியிலேயே மாத்து மாறியுள்ளனர். அந்த மரபு இன்று வரையும் தொடர்கின்றது. அன்றைய காலத்திலும் ஏன் இன்றைய காலத்திலும் இரவில் மக்கள் இந்த மரத்தடியால் செல்லும்போது அச்சப்படுவது வழக்கமாகும். காரணம் பேய்,

பிசாசுகள் இருக்கின்றது என்ற நம்பிக்கைதான். இன்றைய காலத்தில் சித்திரை வருடப் பிறப்பன்று ஊஞ்சல் போட்டு நிகழ்வு கொண்டாடப்படுகின்றது.

## அம்பிலாந்துறைச் சந்தி

பண்டைக்காலந் தொட்டு அம்பிலாந்துறையில் இருந்து துறையால் அக்கரைப்பட்டுச் செல்கின்றபோது தற்போதைய மட்டக்களப்பு கல்முனை வீதியினைச் சந்திக்கின்ற இடம் அம்பிலாந்துறைச் சந்தி என்று அழைக்கப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தில் உள்ள காணிகள் வன்னியர்களுடைய பெயரிலே இருந்திருக்கின்றது. இன்று அக்காணிகள் பலருக்குச் சொந்தமாகியுள்ளன. அம்பிலாந்துறையில் இருந்து செல்கின்ற மக்கள் அவ்விடத்தில் இருந்துதான் வாகனத்தில் ஏறிச் செல்வர். இதனால் கைகாட்டியடி என்றுகூட அழைக்கப் படுவது வழக்கமாகும். இவ்விடத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அம்பிலாந்துறைச் சந்தி என்று பெயர்ப்பலகை இடப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி செய்யப்பட்டதனால் அந்தப் பெயர் எழுதப்பட்டிருந்த இடம் அழிக்கப்பட்டது. அதனால் ஒரு சில ஆண்டுகளாக அந்த பெயர் இடப்படாமலேயே காணப்படு கின்றது. அந்தப் பெயர் இடப்படுவது அவசியமானதாகும். இவ்வாறு தான் எமது பிரதேச வரலாறுகள் கட்டம் கட்டமாக அழிக்கப்பட்டு வருகின்றன. குருக்கள்மடத்தினைச் சேர்ந்த கதிரமலை அவர்கள் எரிபொருள் நிலையத்தினை உருவாக்குவதற்கு படுவான்கரைப் பிரதேசத்தின் உள்ள வாகனங்களின் தொகையையே காட்டி உறுதிப்படுத்தப் பட்ட பின்னர் அந்தச் சந்திக்குப் பக்கத்தில் திறக்கப்பட்டு "அம்பிலாந்துறைச் சந்தி" என்றுதான் எர்பொருள் நிலையத்திற்கு விலாசம் இடப்பட்டிருந்தது. இன்று அந்தப் பெயர் மாற்றப்பட்டு குருக்கள்மடம் எனப் பெயர் இடப்பட்டுள்ளது. இது வரலாற்றினை அடியோடு அழிக்கும் அல்லது, மறைக்கும் செயலாகும். வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்த விடயத்தினைக் கருத்தில் கொண்டு அம்பிலாந்துறைச் சந்தி என்ற பெயரினை இட்டு வரலாற்றினைப் பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும்.

## துறையடி

துறையடி என்பது அம்பிலாந்துறைத் துறையையே இங்கு சுட்டி நிற்கின்றது. இத் துறையினைச் சிறப்பாக வெட்டத்துறை என்பர். பண்டைக்காலம் தொட்டு இந்த துறையால் மன்னர்களும் மக்களும் பிரயாணம் செய்திருக்கின்றனர். இந்தத் துறையால் பல வணிகங்கள் இடம்பெற்றிருக்கின்றன. படைகளும் படைக் கலங்களும் பரிமாறப்பட்டிருக்கின்றன. துறையின் இரு மருங்கிலும் அம்பலம் அமையப்பெற்றிருக்கின்றது. இங்கு அடியவர்களும் வணிகர்களும் ஏனையவர் களும் இரவு பகலாகத் தங்கியிருந்து சென்றிருக்கின்றனர். அம்பிலாந்துறையில் இருந்த உலகநாச்சி இத்துறையாலே மண்முனைக்குச் சென்றிருக்கின்றாள். அரசர்களுடைய பார்வையும் பதிவும் அமையப்பெற்ற இடமாக இத்துறை விளங்கியிருக்கின்றது. ஆரம்பத்தில் தோணி மூலமும், பின்னர் மரத்தாலான பாதை மூலமும், பின்னர் 1988ஆம் ஆண்டு காலத்தில் இரும்பாலான பாதை மூலமும் பிரயாணத்தினை மேற்கெண்டுள்ளனர்.

## கன்னக்குடாத்துறை

இத் துறைானது அக்காலத்தில் சிறப்பு வாய்ந்த துறையாக விளங்கி யுள்ளது. செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயிலுக்குச் செல்வதற்காக இத்துறை பெரிதும் பயன்படுத்தப் பட்டன. கண்ணகி அம்மன் கதவு திறப்பதற்காக அம்பிலாந்துறையில் இருந்ததான் நெல் கொண்டு செல்லப்படுவது வழக்கமாகும். ஒரு முறை நெல் கொண்டு போகும் போது ஓடம் தாண்டதினால் பலர் இறந்துள்ளனர். இதனைக் கருத்தில் கொண்ட வன்னியர்கள் ஓடம் தாண்ட அடுத்த ஆண்டு பூசையினை கிரான்குளத்து மக்களுக்கு மாற்றியதாக கூறப்படுகின்றது. (க. அரசரெத்தினம் - கிராம சேவகர்)

## கரச்ச வெளித்துறை

பண்டைக்காலம் தொட்டு இருந்து வருகின்ற துறைகளில் இதுவும் ஒன்று. நாகமுனைக்கு எதிரே உள்ளது. பாதை போக்குவரத்து இல்லை. ஆனால் தோணியால் பிரயாணம் செய்தனர். மீன் பிடி வியாபாரிகள் இத்துறையினை பயன்படுத்துவதுண்டு. மேலும்

மாரியக் கிளவர் துறை - பறயன் வெட்டிப் பகுதியில் இருப்பது பூவரசயடித் துறை - குடாப்பத்துக் பகுதியில் இருப்பது கல்லடித்துறை - உப்புளக்குடாப் பகுதியில் இருப்பது

## நூல் நிலையம்

1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தினை ஒழுங்கு செய்து நூல் நிலையம் திறக்கப்பட்டு செயற்பட்டு வந்தது. இதற்கான புத்தகங்களையும் வீரகேசரிப் பத்திரிகையையும் பிரதேச சபை வழங்கியது. இதன் ஆரம்பகாலத் தலைவராக மு.தயாநிதி அவர்கள் செயற்பட்டு வந்தார். பின்னர் வி.சம்பந்தன் தலைவரானார். தற்போது நூல் நிலையம் ஒன்று அம்பிலாந்துறை மேற்கில் அமைக்கப்பட்டுள்ளது. நூல்நிலைய உத்தியோகஸ்தர்களாக திருமதி.க.பரஞ்சோதி அவர்களும் இ. பூங்கொடி அவர்களும் செயற்படுகின்றார்கள்.

## இறுவட்டு வெளியீடு

மாரியம்மன் பாடல்கள் அடங்கிய இறுவட்டு 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அழகுதனு அவர்களை முருகு தயாநிதி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அழகு தனு அவர்களின் முயற்சியினால் இந்தக் கைங்கரியம் நிறைவேறியுள்ளது. இறுவட்டுக்கான பாடல்களை பா.அரியநேத்திரன் அவர்களும் முருகுதயாநிதி அவர்களும் அழகுதனு அவர்களும் இவ்விரண்டு பாடல்களாக எழுதினர். இந்த வெளியீடு ஆலய பரிபாலன சபையின் அனுசரணையுடன் பிரமாண்டமாக இடம்பெற்றது. வெளியீட்டுக்குப் பிரதம அதிதியாக அன்றைய பிரதிக்கல்விப் பணிப்பாளரும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ ஞா.ஸ்ரீநேசன் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். இன்றைய நாளில் அம்பிலாந்துறை அரியம் எழுதி மாரியம்மன் காவியச் சிந்தும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஆடி மாதம் மா.வதனரூபன் ஆசிரியர் அவர்களால் வினாயகப் பெருமானுக்கு இறுவட்டு வெளியிடப்

பட்டது. நான்கு பாடல்களை வதனரூபன் அவர்களும், ஒரு பாடலை அழகுதனு அவர்களும் எழுதியிருந்தனர். பிரதம அதிதியாகச் மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். இந் நிகழ்வு அம்மனுக்கு கும்பம் வைத்து இரண்டாம் நாள் அம்மன் முன்றலில் இடம்பெற்றது.

## அனர்த்தம்

### 1957

பல்வேறு காலங்களில் பல அனர்த்தங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. அவை அனைத்தும் எமக்குக் கிடைக்கவில்லை. 1957ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெரு வெள்ளம் ஏற்பட்டிருக் கின்றது. இதன் காரணமாக இங்குள்ள மக்கள் முற்றாக இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. தொடர் மழையாலும், குளங்கள் உடைப்பெடுத்த தாலும் வெள்ளம் திடீரென ஏற்பட்டது. இதனால் மக்கள் உடைமைகளையும், கால்நடைகளையும், இருப்பிடங் களையும் மொத்தத்தில் பொருளாதாரத்தினை இழந்தனர். இவற்றிற்கு மேலாக தாங்கள் பாதுகாத்து வைத்திருந்த வரலாற்றுப் பொக்கிசங்களான ஏட்டுச்(ஓலை) சுவடிகளையும் புத்தகங்களையும், கொப்பிகளில் எழுதப்பட்ட ஆவணங்களையும் இழந்தனர். இதனால் அம்பிலாந்துறையின் தேடல்கள் பல அழிந்து போகலாயிற்று.

### 1978

இதனைத் தொடர்ந்து 1978 கார்த்திகை 23ஆம் நாள் யாருமே ஏதிர் பார்த்திராத வகையில் தொடர் காற்று வீசியது. காற்று வீசுகின்றது என்று பார்த்துக்கொண்டிருக்கையில் அது சூறாவளியாக உருவெடுத்தது. அன்று பகல் 4.00 மணியளவில் வீசத் தொடங்கிய காற்று சூறாவளியாக வடிவம் பெற்று இரவு முழுவதும் வீசியது. மண் வீடுகள் முற்றாகச் சேதமாயின, கல்வீடுகளின் ஓடுகள் உடைந்து சிதறியது, தகரங்களால் அமைக்கப்பட்ட வீடுகள் சிதறின, மக்கள் செய்வதறியாது அல்லோல கல்லோலமாயினர், வீடுகளில்

தென்னை மரங்கள் முறிந்து விழுந்தன, கால்நடைகள் அழிந்தன, நெல் வயல்கள் முற்றாகச் சேதமாயின மொத்தத்தில் முழு அழிவே இடம்பெற்றது. இவற்றிற்கு மேலாக தாங்கள் 1957 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாதுகாத்து வைத்திருந்த வரலாற்றுப் பொக்கிசங்களான ஏட்டுச்(ஓலை) சுவடிகளையும் புத்தகங்களையும், கொப்பிகளில் எழுதப்பட்ட ஆவணங்களையும் இழந்தனர்.

## 2007

2007 ஆம் ஆண்டு திடீரென ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்கள் எழுவான்கரையை நோக்கி இடம் பெயரலாயினர். சுமார் நான்கு மாதங்கள் அப்பகுதியிலே தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டது. பின்னர் அரச கட்டளைக்கு ஏற்ப மீண்டும் மக்கள் தங்கள் இடங்களில் மீள குடியேறினர். இக் காலத்திலும் மக்கள் தங்களது பொக்கிசங்களை இழக்க வேண்டி ஏற்பட்டது. இவ்வாறாக காலாகாலமாக பல இடம்பெயர்வுகள் ஏற்படுவதும் இடம்பெயர்வதும் வழக்கமாகவே இருக்கின்றது. மேலும், வருடாவருடம் ஏற்படும் வெள்ளப்பெருக்கு காரணமாகப் பலர் இடம்பெயர்வது வழக்கமாக இருந்து வருகின்றமையும குறிப்பிடத்தக்கது.

# அரசியல் நிலை

## வன்னியர்

வன்னியர்கள் பற்றி பேராசியர் சி.பத்மநாதன் அவர்கள் குறிப்பிடும்போது, வன்னியர் என்ற சொல், தமிழ்மொழி வழக்கிலே பல பொருள் குறிக்கும் சொல்லாகும். அந்த வழக்கும் தமிழகம், ஈழம் ஆகிய இரண்டுக்கும் பொதுவானது. அது ஒரு சமூகப் பிரிவின் பெயராக வழங்கிவருகின்றது. வன்னியர் என்போர் தமிழ் நாட்டிலே ஒரு பெருஞ் சமூகப் பிரிவாக விளங்குகின்றனர். சோழ, பாண்டிய, விஜயநகர மன்னர்களின் காலங்களில் வன்னியர் என்போர் இராணுவ சேவையில் ஈடபட்டிருந்தனர். வன்னியர் என்பது சேனாதிபதிகளுக்குரிய பட்டமாக விளங்கியதென்று நவீன அகராதிகளில் அடங்குகின்றது. அத்துடன் சில நிலப் பகுதிகளின்மீது ஆட்சி புரிகின்ற குறுநில மன்னரை வன்னியர் என்று குறிப்பிடுவது நெடுங்கால வழக்கமாகும். அது ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் பொதுவான வழமை.

இலங்கை வரலாற்றில் வன்னியர் பிரதானிகள் பிரபல்யம் அடைந்துள்ளனர். இலங்கையிலிருந்த வன்னிய சிற்றரசர்களை ஐந்து பிரிவாக வகைப்படுத்தலாம். அவையாவன,

1. திருகோணமலை வன்னிமைகள்.
2. மட்டக்களப்பு வன்னிமைகள்.
3. அடங்காப்பற்று வன்னிமைகள்.
4. புத்தளம் வன்னிமைகள்.
5. மகாவன்னி.

## மட்டக்களப்பு வன்னிமை

வன்னியர் என்னும் பட்டம்பெற்றிருந்த பிரதானிகள் சில நிலப் பகுதிகளில் பரம்பரைவழியான ஆட்சியுரிமை கொண்டிருந்தனர். அவை பெரும்பாலும் ஒரு தொடர்ச்சியான பிரதேசத்திலே அமைந்திருந்தன. சிலர் விசாலமான நிலப் பிரிவுகளில் அதிகாரம் பெற்றிருந்ததோடு சமுகத்தில் மிகுந்த சண்டையில் பலர்

கொல்லப்பட்டிருக்கின்றனர். எனினும், பின்னர் கண்டிய மன்னர்களுடன் கொண்ட தொடர்பினால் மீண்டும் பிரிவுகளில் அதிகாரம் பெற்றிருந்ததோடு சமுகத்தில் மிகுந்த செல்வாக்கினைக் கொண்டிருந்தனர். ஆரம்பகால வன்னியர் கள் மிக நீண்ட காலமாக மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் வன்னிய அரசர்களாக ஆண்டு வந்தனர். ஆரம்பகால வன்னியர்கள் மிக நீண்ட காலத்திற்கு முன்பே மட்டக்களப்பில் தமது ஆட்சியினைத் தொடங்கினார்கள் என்று பிதாகுலரோஸ் கூறுகின்றார். இவருடைய கருத்துப்படி, இந்தியாவிலுள்ள தென்னசேறிம் என்ற இடத்திலுள்ள இராசகுமாரன் தன்னுடன் இவர்களின் சந்ததியினர் பாணகை, நாடுகாடுப்பற்று, அக்கரைப்பற்று, வெல்லச, மண்முனை, ஏறாவூர் ஆகிய இடங்களில் ஆண்டிருக்கின்றனர். தெற்கே பாணகையிலிருந்து வடக்கே ஏறாவூர் வரை ஆட்சி செய்த வன்னியர்கள் போர்த்துக்கீசர் மட்டக்களப்பைக் கைப்பற்ற வந்த காலத்தில் அவர்களுடன் போர் செய்து பலர் மடிந்திருக்கின்றனர். போர்த்துக்கீசனின் வருகையின் பின்னர் வன்னியர்கள் பாதிப்புக்குள்ளாயினர். நீண்டகாலமாக பழுகாமம், சம்மாந்துறை, ஆகிய இடங்களில் ஆட்சி செலுத்திய வன்னியர்கள் இவர்களால் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மட்டக்களப்புத் தமிழகத்திலே தமிழ்க் குடியேற்றங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தோன்றியிருக்கின்றது என அறிஞர்கள் கருதுகின்றனர். இங்கு குடியேறிய முதல் தமிழர்கள் முற்குக குலத்தவர்கள் என்பதை அறியக் கூடியதாக இருப்பதனால், முற்குக வன்னியர்களின் ஆட்சி நீண்ட காலத்திற்கு முன்பே மட்டக்களப்பில் ஏற்பட்டுவிட்டன என்பதனை அறியக்கூடியதாக இருக்கின்றது. மட்டக்களப்புத் தமிழகத்திலே மத்திய காலத்தில் ஏழு வன்னிமைகள் இருந்திருக்கின்றன.

1. பாணைகைப்பற்று
2. நாடுகாட்டுப்பற்று
3. அக்கரைப்பற்று
4. கரவாகுப்பற்று
5. சம்மாந்துறைப்பற்று
6. மண்முனைப்பற்று
7. ஏறாவூர்ப் (கோறளைப்) பற்று என்பனவாகும்.

## மண்முனைப்பற்று வன்னிமை

மண்முனைப் பிரதேசத்தில் வன்னியர்களின் ஆட்சி மிகநீண்ட காலமாக நிலவி வந்திருக்கின்றது. போர்த்துக்கேயருடன் ஏற்பட்ட சண்டையில் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். எனினும், பின்னர் கண்டிய மன்னர்களுடன் கொண்ட தொடர்பினால் மீண்டும் உறுதிப்பாடு பெற்றிருக்கின்றனர். கண்டி மன்னர்களுடன் மட்டக்களப்பு மன்னர்கள் ஆரம்பத்தில் தொடர்பு கொண்டிருக்க வில்லை. எனினும், கண்டிய மன்னர்களுக்கு மட்டக்களப்பு, பாணகை போன்ற துறைமுகங்கள் தமது ஏற்றுமதிகளை மேற்கொள்ளத் தேவைப்பட்டமையால் மட்டக்களப்பு மன்னர்களையும் தம்முடன் நல்லுறவு கொண்டவர்களாக வைத்திருக்க வேண்டியது மன்னனுக்கு அவசியமாயிற்று. மட்டக்களப்பை ஆண்ட வன்னிய அரசர்கள் இந்த உறவைப் பெரிதும் விரும்பிக் கண்டி மன்னர்களுடன் ஒத்துழைத்தே வந்துள்ளனர்.

ஒல்லாந்தர் மட்டக்களப்பினைக் கைப்பற்றவந்த காலத்தில் முற்குக வன்னியர்கள் அவர்களுடன் சண்டை செய்திருக்கின்றனர். அந்தச் சண்டையில் பல வன்னியர்கள் கொடூரமான முறையில் கொல்லப் பட்டிருக்கின்றனர். எனினும், அவர்களால் முழுமையான முறையில் வன்னியர்களை அடக்கிவிட முடியவில்லை. இப் பிரதேசங்களில் போடிகளின் அதிகாரம் தொடர்ந்தே இருந்தது. அப்போது இங்கிருந்த போடிகள் நல்லமுறையில் ஒத்துழைக்காமையினால் ஒல்லாந்தர் மட்டக்களப்பின் நிருவாகத்தினைக் கொண்டு நடத்துவதில் பாரிய சிக்கல்களைச் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதனால், போடிகளுடன் சமரசம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக மட்டக்களப்பின் வடபகுதிக்கு அறுமக்குட்டியையும், மட்டக்களப்புத் தென் பகுதிக்கு கந்தப்போடியையும் போடிகளாக நியமிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. இதன் பின்னருங்கூட மட்டக்களப்பு போடிகள் சுயாதினமாகவே செயற்பட்டனர். மட்டக்களப்புப் பிரதேசம் அவர்களுக்குரிய ஆட்சிப்புல எல்லையாக இருந்தாலும் மண்முனைப் பற்றில் அம்பிலாந்துறையினைப் அவர்கள் தங்களுக்குரிய பாதுகாப்பான இடமாக வைத்திருக்கின்றார்கள்.

## அம்பிலாந்துறை வன்னிமை

அம்பிலாந்துறை வன்னிமைகளின் காலம் மிக நீண்ட வரலாற்றினைக் கொண்டது. மட்டக்களப்புப் பிரதேசத்திலே வன்னிமைகளின் ஆட்சிக்காலம் எப்போது ஆரம்பமானதோ அப்போதிருந்தே வன்னியர்களுடைய ஆட்சியும் அம்பிலாந்துறையில் நிலவியிருக்கின்றது என்பதனை ஆய்வின் வழி அறியமுடிகின்றது. மண்முனை இராச்சியம் தோற்றுவிக்கப்பட முன்னமே அம்பிலாந்துறை, மணற்பிட்டி, பங்குடாவெளி ஆகிய கிராமங்களில் மக்கள் குடியேறி இருந்தனர் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. இக்குடியேற்றங்களை அமைத்திருந்தவர் வன்னியர்களே. இதனால்தான் அம்பிலாந்துறை பண்டைக்காலத்தில் இராசதானியாக விளங்கியிருக்கின்றது. கண்டிய மன்னர்களின் தொடர்பு இக்கிராமத்திலிருந்த சிற்றரசர்களுடன் நெருக்கமாக இருந்திருக்கின்றது. போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கில நாட்டுப் படையெடுப்பு இலங்கையை நோக்கி இடம் பெற்றபோது மண்முனைப் பிரதேசத்தை நோக்கி அவர்களுடைய பார்வையும் பதிவும் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. வன்னியர்கள், போடிகள், பின்னர் வன்னியர்கள், உடையார்கள் என்று அப் பாரம்பரியம் நீண்டு செல்கின்றது. அறுமக்குட்டிப்போடி யினுடைய முன்னோர்கள் மட்டக்களப்பில் இருந்ததாகச் சிவராம் அவர்கள் குறிப்பிடுவதிலிருந்து இப் பாரம்பரியம் நீண்டது என்பது தெரிகின்றது.

அம்பிலாந்துறையில் வன்னியர்களின் பாரம்பரியம் பண்டைக் காலந்தொட்டு இருந்துள்ளது என்பதற்குப் மேலும் பல ஆதாரங்களைக் காட்டமுடியும். அம்பிலாந்துறை உலகநாச்சி வருகைக்கு முன்னரே இருந்த கிராமம். இக் கிராமத்தில் அரசியல் பாரம்பரியம் இருந்திருக்கின்றது. அதனால்தான் குணசிங்க மன்னன் அம்பிலாந் துறை பற்றிய தொடரைக் கையாண்டுள்ளான். ஏற்கனவே கூறியது போன்று குணசிங்க மன்னனுடைய படைகளும், படைக்கலங்களும் இங்கு இருந்திருக்க வாய்ப்புண்டு. மேலும், அம்பிலாந்துறையில் தொடர்ச்சியான அரசியல் ஸ்தீரணம் நிலவியிருக்கின்றதோடு, படைகளும், படைப்பிரிவுகளும் நிலை கொண்டிருக்கின்றன.

அடுத்து அம்பிளாந்துறை என்பது, ஆரம்பகாலத்தில் அம்பிலாலந் துறை என்றே அழைக்கப்பட்டிருக்கின்றது. இப் பெயர் திருச்சியிலுள்ள சிவதலத்திற்குரிய பெயராகும். திருச்சிக்கும் அம்பிலாந்துறைக்கும் இடையே நெருங்கிய தொடர்பிருந்திருக் கின்றது (போடி கல்வெட்டு) சிவதலத்துக்குரி பெயர், அம்பிலாந்துறைக்கு இடப்பட்டிருக்கின்றதென்றால் அதற்கு அரசியல் காரணம் இருக்க வேண்டும். பூர்வீக வரலாற்றுக் காலத்துக்கு முன்னர் அயோத்தி, காசி, வடமதுரை கங்கைதேசம், கும்பகோணம், அம்பிலாலந்துறை, இராமநாதபுரம் ஆகிய இடங்களிலிருந்து வன்னியர்கள் மட்டக்களப் பில் குடியேறி இருக்கின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் அம்பிலாலந் துறையிலிருந்து வந்தவர்கள். (மகிழை மகேசன்) அவர்கள் அம்பிலாந்துறை யில் இருக்கின்ற காலத்தில் இவர்களால் இப்பெயர் இடப்பட்டிருக்கும். இப்பெயர் இடப்படுவதற்கு முன்னராக அம்பிலாந்துறைக்கு வேறுபெயர் இருந்திருக்கலாம். அல்லது, பண்டைக்காலத்தில் இவர்களே முதற்குடியாக இருந்து இப்பெயரினை இட்டிருக்கலாம். இவ்வாறான பின்னணியில் பார்க் கும் போது வன்னியர்களுடைய வரலாறு என்பது மட்டக்களப்பு வரலாற்றோடு தொடர்புடையது. அத்தொடர்பு அம்பிலாந்துறைக் கிராமத்திற்கு நீண்ட பாரம்பரியங் கொண்டதாகும்.

அரசியலில் நீண்ட பாரம்பரியமொன்று அம்பிலாந்துறையில் நிலவியமையினால்தான் போடிகள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயருடன் போர் செய்து அவர்களை மனப்படுத்தி அவர்களுக்கு சிம்ம சொற்பனமாக இருந்தனர். ஆங்கிலேயரும் அம்பிலாந்துறை யில் இருந்த வன்னியர்களைப் பற்றி அறிந்திருந்து, அவர்களை கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்ற வேண்டிய கட்டாயத் தேவை இருந்தது. இதன் பின்னணியில் குஞ்சிலயாப்போடி, கதிராமப்போடி வன்னியர்கள் மதமாற்றப்பட்டனர். மதமாற்றிய பின்னர் குஞ்சிலயாப்போடி வன்னியனை றொபேட் குஞ்சிலயாப்போடி வன்னியன் என்றும், கதிராமப்போடி வன்னியனை டானியல் கதிராமப்போடி வன்னியன் என்றும் கிறிஸ்தவப் பெயர்களால் அழைக்கலாயினர். குஞ்சிலயாப்போடி வன்னியனுக்கும் ஆங்கிலேய வெட்சித்துரைக்கும் இடையே

நெருக்கமான தொடர்பிருந்தது. வெட்சித்துரை அம்பிலாந்துறைக்கு வந்து இவரை குதிரை வண்டியில் ஏற்றிக்க கொண்டு நிருவாக மேற்பார்வைக்காகச் திருகோணமலை தொடக்கம் பாணகை வரைச் செல்வாராம். இதிலிருந்து விளங்குவது குஞ்சிலாப்போடி வன்னியனுடைய அறிவும், வீரமும். இத்தகையவர்களை புறந்தள்ளி நிருவாகம் செய்தால் ஆங்கிலேயர் சிக்கலை எதிர்நோக்கலாம் என்ற அச்சம் அவர்களுக்கு இருந்திருக்கும்.

இவர்களை ஏன் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாற்றினார்கள் என்ற வினா? எழலாம். இவர்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் செய்யவில்லை. அவர்களுக்குச் சார்பானவர்களாக விளங்கி இருக்லாம். அத்துடன் இவர்களுடைய வீரம், விவேகம் என்பவற்றை இவர்கள் அறிந்திருப்பார்கள். அத்தகைய நிலையில் இவர்களுக்கு வன்னியப் பதவியினைக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அவ்வாறாயின் இவர்களை மதமாற்ற வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். இவர்கள் மதம் மாறாவிட்டால் வன்னியப் பதவியினைப் பெறமுடியாமல் இருந்திருக்கும். அவ்வாறு மதம் மாறவில்லையானால் இவர்கள் ஆங்கிலேயரின் கோபத்துக்கு உள்ளாக வேண்டி வந்திருக்கும். இவ்வாறான பல சிக்கல்களின் காரணமாக இவர்கள் மதமாறியிருக்க வேண்டும். ஆங்கிலேயர் நினைத்திருப்பார்கள் இவர்களை மதம் மாற்றினால் மக்களையும் மதம்மாற்றலாம் என்று அதுதான் இடம்பெறவில்லை. இவர்கள் தங்கள் மனைவியையோ, பிள்ளைகளையோ, கிராம மக்களையோ, ஏனைய பிரதேச மக்களையோ மதமாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னியர்கள், போடிகளுடன் இணைந்து ஏன் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் செய்யவில்லை என்ற வினா? எழலாம். அறுமக்குட்டிபோடிக்கும் C.D.கதிர்காமப்போடி வன்னியனுக்கும் இடையில் உட்பூசல் இருந்தது. எனினும், அறுமக்குட்டிப் போடியினை எதிர்த்து இவரால் எதுவும் செய்யமுடியவில்லை. இதற்காக இவர் குஞ்சிலயாப்போடி வன்னியனை அறுமக்குட்டிப் போடியின் மகளுக்குத் திருமணம் செய்து கொடுத்திருக்கின்றார். எனினும், அவர்களிடமிருந்த முழுமையான நிலபுலன்களை

இவர்களால் பெறமுடியவில்லை. இவ்வாறான ஒரு நிலையில் ஆங்கிலேயர் பலம் பொருந்தியவர்கள் இவர்களை எதிர்த்துப் போர் செய்தால் வெல்லமுடியாது என்பதனை இவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஏனென்றால், உலகினை அவர்கள் காலனித்துவப்படுத்திய காலம் அது. இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திய அவர்கள் போரைத் தவிர்த்திருக்கின்றார்கள். அதனால் நிலபுலன்களைச் சுவிகரிக்கமுடியும் என்ற எண்ணம் இவர்களுக்கு இருந்திருக்க வாய்ப்புண்டு. அந்த எண்ணம் காலப்போக்கில் நிறைவேறியமையும் குறிப்பிடத்தக்கதே.

## கண்டிய மன்னர்களுக்கும் மட்டக்களப்புக்குமுள்ள தொடர்பு

கண்டி அரச ஆட்சி நிலை மூன்று பிரிவாகக் காட்டப்படுகின்றது.

1. ஸ்ரீ சங்கபோ வம்சம்
   சேனாசம்மத விக்கிரமபாகு (கி.பி.1473 - 1511)
   ஜயவீர அஸ்தானா ( கி.பி.1511 - 1551)
   கரலியத்த பண்டார ( கி.பி. 1551 - 1581)
   தொனா கதரீனா (கி.பி. 1581 - 1590)

2. தினஜார வம்சம்
   முதலாம் விமலதர்ம சூரியன் (கி.பி.1590 - 1604)
   செனரத் (கி.பி.1604 - 1635)
   இரண்டாம் இராசசிங்கன் (கி.பி.1635 - 1687)
   இரண்டாம் விமலதர்ம சூரியன் ( கி.பி.1687 - 1707)
   வீரநரேந்திரசிங்கன் (கி.பி. 1707 - 1739)

3. கண்டி நாயக்கர் வம்சம்
   ஸ்ரீ விஜயராசசிங்கள் (கி.பி. 1739 - 1747)
   கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் (கி.பி.1747 - 1782)
   ஸ்ரீ இராச இராசசிங்கன் (கி.பி.1782 - 1798)
   ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் (கி.பி 1798 - 1815)

ஸ்ரீ விஜயராசசிங்கன் இந்து சமயத்தைச் சேர்ந்தவன். எனினும், பௌத்தசமயத்தை ஆதரித்தான். அந்தச் சமயத்தின் எழுச்சிக்காக பெரும் பங்காற்றினான். கரையோரப் பகுதியினை ஆண்டுவந்த ஒல்லாந்தருக்கும் இவனுக்கும் இடையே வணிகம் தொடர்பில் ஏற்பட்ட பிணக்குகளால் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்தான். பால கிறிஸ்தவ தேவாலயங் களை இடித்தான் கலகத்தை உண்டுபண்ணினான். இவனுக்குப் பின்னர் ஸ்ரீ விஜய இராசசிங்கன் கி.பி.1951ஆம் ஆண்டு ஆட்சிப்பீடம் ஏறுகின்றான். இவன் கி.பி.1760ஆம் ஆண்டு ஒல்லாந்தருக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டான். கி.பி.1765ஆம் ஆண்டு ஒல்லாந்தர் கண்டியை ஆக்கிரமிப்புச் செய்தபோது தப்பிச் சென்றான். பின்னர் கி.பி 1766ஆம் ஆண்டு ஒல்லாந்தருடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்கின்றான்.

ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் ஆட்சிப்பீடம் ஏறுகின்றான். இவன் கண்டியை ஆண்ட கடைசி மன்னனாவான். இவனுடைய இயற் பெயர் கண்ணுசாமி. இவனுடைய காலத்தில் பிரித்தானியர் கரையோரப் பிரதேசங்கள் யாவையும் ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றப்படுகின்றனர். எனினும், கண்டி அரசில் தலையிட வில்லை. பிலிமத்தலாவை பிரித்தானியருடன் மறைமுகத் தொடர்புகளை வைத்துக்கொண்டு பிரித்தானியருக்கு எதிராக கண்டியரசனைத் தூண்டிவிட்டு கண்டியைக் கைப்பற்றச் செய்கின்றான். (1803.03.22) இது அவனுரடய சதி முயற்சியாகும். என்னும், பின்னர் கண்டி ஸ்ரீ விக்கிரமராசசிங்கனால் ஆளப்படுகின்றது. இவனைத் தொடர்ந்து எகலபொலையின் சதியால் 1815.02.10ஆம் திகதி கண்டி கைப்பற்றப்படுகின்றது. பிடிபட்ட ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் தென்னிந்தியாவிலுள்ள வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டான். அங்கு இரண்டு மனைவியுடனும் வாழ்ந்த அவன் 1832ஆம் ஆண்டு மரணத்தைத் தழுவிக் கொண்டான். கண்டியராசன் ஒப்பாரி எனும் இலக்கியத்தில் ஸ்ரீ விக்கிரமராசசிங்கனை ஆலம்பிள்ளை காட்டிக் கொடுத்தாக வருகின்றது. எகலபொல ஆலம்பிள்ளையாக காட்டப்படுகின்றது. இந்த இலக்கியத்தில் வரலாற்றுத் தகவல்கள் திரிபுபடுத்தப்பட்டு பாடப்பட்டிருக்கின்றது.

கண்டிய மன்னர்களுக்கும் மட்டக்களப்புக்குமிடையேநெருங்கிய தொடர்பு இருந்துள்ளன. கி.பி 15ஆம் நூற்றாண்டில் கோட்டையில் இருந்து பிரிந்த ஒரு இளவரசனால் கண்டி இராசதானி அமைக்கப் பட்டிருக்கின்றது. கண்டி இராச்சியம் வலுப்பெற்றதும் அக்காலத் திலிருந்து கண்டி மன்னர்களுக்கும் மட்டக்களப்பு வன்னியச் சிற்றரசர் களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கி ன்றது. 16 ஆம் நூற்றா ண்டின் நடுப்பகுதியில் கண்டியரசனின் சபைக்குச் சென்றிருந்த கத்தோலிக்க குருவான சைமோவோ டி கொயிம்ரா எனும் பாதிரியார் அவருடன் சென்ற ஆந்திரே டி சுசா எனும் போர்த்துக் கேய வீரனும் சென்றிருந்தனர். பாதிரியார், கண்டி மன்னனுடை சபையில் மட்டக்களப்பு மன்னனின் தூதுவர்களும் இருந்ததாக கோவாவிலிருந்த போர்த்துக்கேய ஆளுனருக்கு 27.05.1546 இல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். மேற்கூறிய பாதிரியார் கோவாவிற்குத் திரும்பிய பின் போர்த்துக்கல் நாட்டு மன்னனுக்கு 25.12.1546 இல் எழுதிய கடிதத்தில் தாம் கண்டியிலிருந்து கண்டி மன்னனின் நன்பனான மட்டக்களப்பு மன்னனின் இராச்சியத்திற்கு சென்றதாகத் தெரிவிக்கின்றார். மட்டக்களப்பு மன்னனின் இராச்சியம் கண்டி மன்னனின் இராச்சியத்திற்கு அருகிலுள்ளதால் தாம் மட்டக்களப்பிலிருந்தே பிரயாணத்தைத் தொடங்கியதாகத் தெரிவிக்கின்றார். இங்கு குறிப்பிடப்பட்ட மட்டக்களப்பு மன்னன் போடிகல்வெட்டில் குறிப்பிடப்படும் காலிங்கா குடியினரின் முன்னோராக இருக்கலாம் என ஆய்வாரள் டி. சிவராம் குறிப்பிடுகின்றார். அப்படியானால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இராச்சியம் அம்பிலாந்துறையாக இருக்க வாய்ப்பேற்படுகின்றது. இதற்குச் சான்றாக அம்பிலாந்துறையின் அரசியல் பின்புலத்தினை அவதானிக்கும்போது அவற்றினை விளங்கிக்கொள்ளமுடியும்.

கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனின் பதவியேற்பு விழாவிற்கு (கி.பி 1778 ஆம் ஆண்டு) அறுமக்குட்டிப்போடியும், கந்தப்போடியும், மட்டக்களப்புப் பொது மக்களும் ஒல்லாந்தர் காலத்தில் சென்றிருக்கின்றனர். இவனுடைய முடிசூட்டு விழா 1750ஆம் ஆண்டு இடம்பெற்றிருக்கின்றது. ஆங்கிலேயர் காலத்தில் அவர்களுடன் போர் செய்து வெற்றிபெற்று பின்னர் தக்கவைக்க முடியாமையினால் பின்வாங்கி கண்டிக்குச் சென்றிருக்கின்றனர்.

கண்டி மன்னன் நிலைமைப் போடிகளுடைய நியமனத்தில் மட்டக்களப்பில் கலந்து சிறப்பித்திருக்கின்றான். கண்டி மன்னனுக்கு மிகவும் விசுவாசமாக மட்டக்களப்பு மன்னர்கள் நடந்திருக்கின்றனர்.

மாருதசேனனின் மகன் எதிர்மனசிங்கன் மட்டக்களப்பு, மண்முனை, உன்னரசுகிரி, கோரளை, தோப்பாவை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கி ஆட்சி செய்தான். (கி.பி 1538-1582) இவனுடைய மரணம் நிகழ்ந்த காலத்தில் முதலாம் இராசசிங்கன் (கி.பி 1581-1593) சீதாவாக்கையில் அரசனாயிருந்தான். அவன் போர்த்துக்கேயரை கொழும்பிலிருந்து துரத்துவதற்கு பெருமுயற்சி எடுத்துக கொண்டிருந்தான். இரண்டாம் இராசசிங்கன் ஒல்லாந்தருடன் போர்த்துக் கேயருக்கு எதிராக ஒப்பந்தம் செய்திருந்தான். அதில் மட்டக்களப்பு தவிர அனைத்துத் துறைமுகங்களும் ஒல்லாந்தர் வசமாயின. இத்துடன் இவன் போருக்குப் பண உதவி, மற்றும் படை உதவியும் செய்வதாகவும் ஒப்பந்தம் செய்து கொண்டான். அதற்குப் பதிலாக மட்டக்களப்பு, கண்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் கத்தோலிக்க குருமார் இருக்கக்கூடாதென்றும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

ஒல்லாந்த - போர்த்துக்கேய போரில் 16.05.1638 இல் ஒல்லாந்தரால் மட்டக்களப்பு வெல்லப்பட்டிருக்கின்றது. எனினும் இவர்களுக் கிருந்த ஐரோப்பாவில் ஏற்பட்ட சமாதானம் காரணமாக மட்டக்களப்பு மீண்டும் போர்த்துக்கேயருக்கு ஒப்படைக்கப்பட்டது. இதனால் ஆத்திரம் கொண்ட இராசசிங்கன் ஒல்லாந்தர் மீது போர் தொடுத்து ஒல்லாந்தத் தலைவன் ஒருவனின் தலையை வெட்டி யாழ்ப் பாணத்து ஒல்லாந்தத் தளபதிக்கு அனுப்பியிருக்கின்றான். எனினும், அவர்கள் இராசசிங்கனைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. மீண்டும் இடம்பெற்ற போரில் போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்பட்டு மட்டக்களப்பு ஒல்லாந்தர் வசமானது. இறுதியில் மட்டக்களப்பும் ஏனைய நகரப் பிரதேசங்களும் இராசசிங்கனுக்கு ஒல்லாந்தரால் கி.பி 1656 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டன.

வெற்றியின் பின்னர் இராசசிங்கன் கண்டிக்கு சென்றிருக்கின்றான். பின்னர் பஸ்கோமுதலி கி.பி.1728 ஆம் ஆண்டு ஒல்லாந்த நாட்டிலிருந்து மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டிருக்கின்றான். இவன் மதமாற்றுதல், லஞ்சஊழல் என்பவற்றிற்கு கள்ளக்கையொப்பமிடுதல், ஏமாற்றுதல் போன்ற அபாயகரமான வேலைகளைச் செய்துகொண்டிருந்தான். இந்த விடயம் சம்பந்தமாக கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்கு கி.பி 1747 - 1782) அறிவிக்கப்பட்டது. நிலமையினை விசாரித்து ஒல்லாந்தருக்குப் பின்வருமாறு கூறுகின்றான். "பஸ்கோ முதலியோ அவனுடைய சந்ததியினரோ அரச பதவிகளுக்கு நியமிக்கப்படக் கூடாதென்றும், இனி மட்டக்களப்பு முக்குலத்தோரைத் தவிர அன்னியர் இராச அதிகாரியாக நியமிக்கப்படக் கூடாது எனவும் அரச பட்டயத்தில் எழுதுவித்தான். பஸ்கோ முதலி ஊர்காவற்துறை கோட்டையில் சிறைவைக்கப் பட்டான். இதன் பின்னனியில்தான் அறுமக்குட்டிப் போடியும் கந்தப்போடியும் "போடி" நியமனம் பெற்றனர். மட்டக்களப்பு வீரர்களுடைய சாமர்த்தியத்தினை கண்டிய மன்னர்கள் நேரடியாகவே பார்த்திருப்பார்கள். அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய கௌரவமும் கண்டிய மன்னனால் கச்சிதமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

கண்டியை ஆட்சி செய்த விமலதர்மசூரியன் (கி.பி 1590 - 1604) மட்டக்களப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளான் என்பதனை கொக்கட்டிச்சோலைச் சிவன்கோவிலில் இடம்பெற்ற ஒருநிகழ்வு தெளிவுபடுத்துப்படுகின்றது. திருப்படைக் களஞ்சியத்தில் கூறப்பட்டதன்படி வன்னிமைகளுக்கும், வேளாளருக்கும் பிணக்கு ஏற்பட்டபோது திருப்படையில் கலந்துகொண்ட விமலதர்மனும் அவற்றை வினவி இருக்கின்றான். வன்னியர்களும் செப்பேட்டை எடுத்து வாசித்துக் காட்டியிருக்கின்றனர். அதனை செவிமடுத்த மன்னன் கலிங்கராசன் பண்டைக்காலத்தில் நடத்தியபடி சூரக வேட்டையாடி நடத்திக் காட்டுங்கள் என்று கூற, வன்னியர்களும் வேளாளரைக் கட்டி பண்டாரங்களைக் கொண்டு அடிப்பித்த பின் அவிழ்த்து மஞ்சள் நீர் தெளித்து முன்முதன்மை சொற்படி முட்டி கூறுமென்ன வேளாளர் வரிசை முட்டி கூறும்போது அரசன்

மகிழ்ந்து மட்டக்களப்புத் திருப்பணி ஆறுக்கும் வெகுமதிகள் ஈந்து வேளாளரையும் சிறைகளையும் நிறுத்தி வன்னிபம் முதன்மைச் சொற்படி உங்கள் பண்டூளியங்களைச் செய்யும்படி திட்டம்புரிந்து அதற்குத் தவறினால் கொடிய தண்டனை கிடைக்குமெனவும் கட்டளை இட்டான் (தேரோட்டம் ப: 71 - 72) இந்தச் விபரம் எதனை வெளிப்படுத்துகின்றதென்றால் கண்டியமன்னனுக்கும் மட்டக்களப்புக்குமுள்ள தொடர்பினையும் மரபுவழிப்படி கடமைகள் இடம்பெறவேண்டும் என்பதனையுமே. இம் மன்னன் இங்கு வருவதானால் முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு அம்பிலாந்துறையிலுள்ள படைகள் பயன்படுத்தப்பட்டிருக்கும். இக்காலம் போர்த்துக்கேயர் பல ஆலயங்களையும் தமிழ்ப் படைகளையும் அழித்த காலம் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒல்லாந்தர் காலம்

கி.பி 1658 - 1796ஆம் ஆண்டு காலப்பகுதியினை ஒல்லாந்தர் காலம் எனபர். அரசியல், பொருளாதாரம், கல்வி, சமயம் எனும் அம்சங்களில் போர்துக்கேயர் காலத்தைக் காட்டிலும் வேறுபட்ட வளர்ச்சியைக் காட்டிய காலம். கல்வி வாய்ப்பு விரிவுபடுத்தப்பட்டது. எல்லோருக்கும் கல்வி எனும் சிந்தனை வளர்ச்சியடைந்தது. முக்குகர் வழமைகள், தேசவழமைகள் முதலான மரபுகள் சட்டமாக்கப்பட்டன. நீதி நிருவாகம் நல்ல முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. உயர் கல்விக் கூடங்கள், செமினெரிகள் தோற்றுவிக்கப்பட்டன. அச்சியந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது. பலநூல்கள் அச்சுக்குக் கொண்டுவரப்பட்டன. சமயப் பொறுமை காணப்பட்டது. இலக்கியம், கல்வி, கலை, சமயம் முதலிய அம்சங்களுக்கு மதிப்பளிக்கப்பட்ட காலம் இது. இக்காலத்தில்தான் அறுமக்குட்டிப் போடி "போடி" நியமனம் பெறுகின்றார்.

ஒல்லாந்தர் வருகையின் பின்னர் போர்த்துக்கீசரால் கொல்லப்படாதிருந்த வன்னிய அரசர்களும், முன்பு கொல்லப்பட்டவர்களின் வாரிசுகளான வன்னியர்களும் மட்டக்களப்பில் ஆட்சி செய்திருக்கின்றார்கள். மட்டக்களப்பு மன்னனாக குமாரவன்னியன்

(குமாரசிங்க வன்னியன்), பழுகாமத்து மன்னனாக செல்வாவண்டா (செல்லையா வன்னியன்) இருந்ததாகவும் அறியக்கிடை க்கின்றது. பாணமையிலும் ஒரு மன்னன் இருந்ததாகவும் ம.க.அ. அந்தனிசில் தெரிவிக்கின்றார். நாடு காட்டுப் பரவணிக்கல்வெட்டு மட்டக்களப்பில் இருந்த ஏழு பற்றுக்களிலும் இவர்கள் ஆட்சி செலுத்தியமை பற்றிக் குறிப்பிடுகின்றது. 1638இல் மட்டக்களப்பு ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டபோது வன்னியர்களும் அவர்களின் தளபதிகளும் டச்சுக்காரரால் கொடூரமானமுறையில் கழுவில் ஏற்றிக் கொல்லப் பட்டமையினை டச்சு சரித்திர ஆசிரியர் பிலிப்பஸ் வால்டியஸ் தமது வராலாற்றுப் புத்தகத்தில் குறிப்பிடுவார். ஏறாவூரில் ஆட்சி செய்த இளஞ்சிங்கன் எனும் வன்னியன் பிடிபடவில்லை என்றார். ஒல்லாந்தர் மட்டக்களப்பைக் கடைசியாக ஆண்ட முற்குக வன்னியர்களும், மற்றும் தலைவர்களும் அவர்களால் ஒழிக்கப் பட்டனர்.

அதாவது, போடி எனும் கௌரவத்தினை ஒல்லாந்தர் தங்கள் காலத்தில் கொடுத்திருக்கின்றனர். போடி என்பது மட்டக்களப்பு மக்களின் பெயர்களுக்கு பின்னடையாக காலாகாலமாக வந்திருக்கின்றது. அதனை மேலும் மெருகுபடுத்தும் நோக்கோடு இவ் நியமனம் கொடு க்க வாய்ப்பிருந்திருக்கின்றது. மட்டக்களப்பில் வன்னிமைகளே பண்டைக்காலமுதற் கொண்டு இருந்திக்கின்றனர. ஏழு முற்குகத் தலைவர்களால் ஏழு பிரிவுகளும் ஆளப்பட்டன. இவர்களுக்கே இங்கிருந்த எல்லா நிலங்களும் சொந்தமாயிருந்தன. கண்டி அரசனுக்கும் ஒல்லாந்தருக்கும் கி.பி. 1766ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக மட்டக்களப்பு முழுவதும் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் வந்தது. இதனால் போடிகள் இவர்களோடு ஒத்துழைக்காமையினால் போடிகளுடன் சமரசம் செய்ய முற்பட்டனர். இதன் விளைவால் கி.பி. 1766ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 6ஆம் திகதி மட்டக்களப் புப் பிரதேசத்தை இரண்டாகப் பிரித்து வடபாகத்திற்கு அறுமக்குட்டிப் போடியையும் (காலிங்ககுடி), தெற்குப் பாகத்திற்குக் கந்தப் போடியையும் நியமித்து அதிகாரக் கடிதமான ஆக்கொத்தினை வழங்கினர்.

## அறுமக்குட்டிப்போடி காலத்திற்கு முன்னர் அம்பிலாந்துறை

மட்டக்களப்பில் அம்பிலாந்துறையினை இராசதானியாகக்கொண்டு அறுமக்குட்டிப்போடி காலத்திற்குப் முன்னர் இக்கிராமம் மட்டக்க ளப்பின் பிரதான இடமாக விளங்கியிருக்கின்றது. சடுதியாக அறுமக்குட்டிப் போடி இங்கு வரவில்லை. இங்கு ஸ்தீரனமான அரசியல் பின்புலம் இருந்திருக்கின்றது என்பது வெளிப்படை. இதனை குணசிங்கன் காலமுதற் கொண்டு அவதானிக்க முடியும். ஒல்லாந்தர் மட்டக்களப் பினைக் கைப்பற்றி ஆண்ட காலத்திற்கு முன்னர் அறுமக்குட்டிப்போடியின் முன்னோர்கள் மன்னர்களாக இருந்திருக்கின்றனர். அவர்கள் மட்டக்களப்புப் பகுதிக்கு அதிபதிகளாக இருந்திருக்கின்றனர். இவர்களுடைய ஆட்சியில் அறம் மேலோங்கியும், அதர்மம் அழிந்தும், தீமை அகன்றும், ஆலயங்கள் சிறப்புற்றும், தேவாரங்களைப் பாடும்முறை சிறப்புப் பெற்றும், அன்னம் கொடுக்கப்பட்டும் ஆட்சி இடம் பெற்றிருக்கின்றது. அதாவது, அறம் மேலோங்கியும், அதர்மம் அழிந்தும், தீமை அகன்றும் என்பதன் மூலம் சண்டை செய்து வெற்றிபெற்றோம் என்பதனை மறைமுகமாகச் வலியுறுத்தியுள்ளனர். (போடிகல்வெட்டு)

கலிங்கரே தலைமையாய், நிலைமயாய் இருந்தனர். எங்கள் குலமே மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆட்சி செலுத்திவந்தனர். இந்தச் செய்தியினை ஒல்லாந்த அரசர்களுக்கு எடுத்துரைத்து, நாங்கள்தான் தெடர்ந்து மட்டக்களப்பினை ஆளவேண்டும் என்ற செய்தியினையும் விளக்கினார். "ஒல்லாந்த அரசே உமக்கிது உரைத்தோம் பொல்லாங்ககற்றிப் போடியாய் வைத்தால், செந்நெல் செழிக்கும் தேன் சொரிந் தொழுகும் மன்னர் மகிழ மண்முனை தளைக்கும்" என்ற தொனியில் உரைத்தனர். இதனால் பொதிந்துள்ள செய்தி உடன்படவில்லையென்றால் சண்டைதான் அதில் நாங்கள் வெல்வோம் என்பதனை சூக்குமமாக தெளிவுபடுத்துகின்றனர். இவர்களுடைய பின்னணியை ஆராய்ந்த ஒல்லாந்தர் அறுமக்குட்டிப்போடிக்குப் 1766.11.06ஆம் ஆண்டு ஆக்கொத்தெழுதி போடி நியமனம் கொடுக்க, அவர் மட்டக்களப்பு வடக்குப் பகுதியை (எருவில்பற்று, போர்முனைப்பற்று, மண்முனைப்பற்று,

கோரளைப்பற்று) ஆட்சி செய்தார். மட்டக்களப்பின் தென் பகுதியினை (கரவாகுப்பற்று, சம்மாந்துறைப்பற்று, அக்கரைப்பற்று, பாணகைப்பற்று, உன்னாசகிரி) கந்தப்போடி ஆட்சி செய்தார். இவ்விருவரும் சிறந்த தளபதிகள் மட்டுமன்றி, அறிவுடையவர்களும். இவர்கள் இருவரும் அம்பிலாந்துறையில் இருந்தவர்கள்.

கண்டிய மன்னனுக்கும் இவர்களுடைய முன்னோர்களுக்கும் இருந்த தொடர்பானது, இவர்களுடைய காலத்தில் மேலும் விரிவுபடுத்தப் பட்டது. கண்டி மன்னன் இராசாதி இராசசிங்கனுடைய முடிதரிப்பு விழாவுக்கு அறுமக்குட்டிப்போடி, கந்தப்போடி இருவரோடும், முக்குலத்தவரின் நித்திய அதிபர்களும் கலந்துகொண்டனர்.

கண்டிய மன்னனுக்கும் இவர்களுடைய முன்னோர்களுக்கும் இருந்த தொடர்பானது, இவர்களுடைய காலத்தில் மேலும் விரிவுபடுத்தப் பட்டது. கண்டி மன்னன் இராசாதி இராசசிங்கனுடைய முடிதரிப்பு விழாவுக்கு அறுமக்குட்டிப்போடி, கந்தப்போடி இருவரோடும், முக்குலத்தவரின் நித்திய அதிபர்களும் கலந்துகொண்டனர். அறுமக்குட்டிப்போடி வைரமாலையையும், கந்தப்போடி வராகன்மாலையையும் இராசாதி ராச சிங்கனுக்கு (கீர்த்தி சிறிராச சிங்கன்) அணிந்தனர். இந்த மாலையை அணிவித்ததன் நோக்கம் மன்னன் தங்களுக்கு முன்னர் தலைகுனிய வேண்டும் என்பதற்காகவாம். வேறு பொருட்களைக் கொடுத்தால் கையில் வாங்கிக்கொள்வார்களாம். அத்தகைய தந்திரம் கொண்டவர்கள் இவர்கள். எப்போதும் இவர்கள் அதிகாரம் கொண்டவர்களாகவே இருந்திருக்கின்றனர். (ஆ.அரசரெத்தினம்)

மட்டக்களப்புப் பிரதேசத்தினை போடிகள் ஆண்டுவரும் காலத்தில் அவர்கள் ஒல்லாந்தருக்கு திறை செலுத்தி வந்தனர். திறைவரியைப் பெறுவதற்காக யாழ்ப்பாணத்திலி ருந்து மட்டக்களப்புக்கு இரண்டு கணக்கப்பிள்ளைகள் அனுப்பிவைக்கப்பட்டு, அவர்கள் திறைபெற்று வந்தனர். இவ்வாறு வருங்காலத்தில் 1776ஆம் ஆண்டுகாலத்தில் இருவரும் மருமமான முறையில் வெட்டிக்கொல்லப்பட்டனர். அந்தக் கொலையை ஒல்லாந்த நீதிபதிகளால் எவ்வளவோ முயற்சி

செய்தும், கண்டுபிடிக்க முடியவில்லை. இதன் காரணமாக ஒல்லாந்தர், 1795ஆம் ஆண்டு மட்டக்களப்பினை விட்டு வெளியேறிச் சென்றனர். இது மட்டுமல்ல ஆங்கிலேயருடைய கெடுபிடியும் இருந்திருக்கலாம். பல்வேறு எதிர்ப்பினைச் சமாளிக்க முடியாமையினால், இவர்கள் மட்டக்களப்பினை விட்டுச் செல்ல வேண்டியிருக்கும்.

ஆங்கிலேயர் 1796ஆம் ஆண்டு இலங்கையினைக் கைப்பற்றினர். இவர்கள் மட்டக்களப்புக்கு வந்தபோது, இவர்களக்கும் மட்டக்களப்புப் போடிகளுக்குமிடையே போர் இடம் பெற்றிருக்கின்றது. போடிகள் ஆங்கிலேயரை வெருட்டியடித்து புளியந்தீவுப் பகுதிக்குள் மட்டுப் படுத்தியிருந்தனர். மூன்று மாதம் வரையும் கட்டுப்பாட் டில் வைத்திருந்தபோதும் போடிக ளுக்குள்ளே காட்டிக் கொடுக்கும் போக்கு ஊடுருவியதால் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதில் பல சிரமங்களைச் சந்தித்தனர். பின்னர் இவர்கள் 1802ஆம் ஆண்டு பின்வாங்கி கண்டிக்குச் சென்றிருக்கின்றனர். அவர்களுள் பலர் ஆங்கி லேய படைகளினால் சிறைப் பிடிக்கப்பட்டனர். ஆங்கிலேயர்களுக்கு ஒத்துளைத்த போடிகளுக்கு பல பதவிகளும், சன்மானங்களும் வழங்கப்பட்டன. இவர்களுடைய காலத்தில்தான் பரம்பரை வன்னியர்களை, பணம்பெறும் வன்னியர்களாக மாற்றினர். கண்டிக்குச் சென்ற போடிகள் கண்டிய இராசனுடன் இருந்து, 1815ஆம் ஆண்டு கண்டியில் ஆங்கிலேயருக்கும் கண்டிய மன்னனுக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையில் கொல்லப்பட்டிருக்கலாம்.

### அறுமக்குட்டிப்போடி

அறுமக்குட்டிப்போடி பற்றி மட்டக்களப்பு பூர்வசரித்திரம் பின்வருமாறு விளக்கம் தருகின்றது. இவன் பராகிரமசாலி, தருமத்தில் விருப்பங்கொண்டவன், கல்வியில் சிறந்தவன், ஆடவருக்குரிய இலட்சணங்கொண்டவன், பூரண ஆயுள் உடைய வன், பல்லக்கில் ஊர்வலம் வந்தவன், அரசர்களால் நற்பெயர் பூண்டவன், முக்குகர் "லோ" எனும் சட்டத்தினைஉண்டாக்கியவன், கலிங்க குலமானபடியால் சிறைத்தளதாபர அதிகாரத்தில்

முழுமைபெற்றவன், ஆலயங்களைச் செழிப்புறச் செய்தவன், மட்டக்களப்பில் மாடுகளுக்கு குலவிருதுக்குறி ஏற்படுத்தியவன் என்கின்றது. இவருடைய தகப்பன் பாணகையைச் சேர்ந்தவர். இவருடைய தாய் சத்துருவண்டன். அறுமக்குட்டிப்போடிக்கு ஏழுபேர் மனைவியராக இருந்திருக்கின்றனர். முதல் மனைவி பானகையைச் சேர்ந்தவரென்றும், ஏனைய மனைவியர் மண்முனைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கொள்ளப் படுகின்றது.

இவர் அம்பிலாந்துறையில் திருமணம் செய்திருக்கின்றார். மனைவி பெயர் அறியக்கிடைக்கவில்லை. மகன் மண்முனைப்போடி, மகள் பெயர் அறியக்கிடைக்கவில்லை. இவருடைய மகளை குஞ்சித்தம்பி வன்னியன் திருமணம் செய்திருக்கின்றார். (தகவல் வே.சின்னத்தம்பி பூசாரியார், தங்கராசா, வே. கணபதி) இவர் இருந்த இடம் அம்பிலாந்துறையில் பெரிய குடியிருப்புப் பகுதியில் உள்ள கிட்டங்கி வளவு என்று அழைக்கப்படுகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்திலே கிட்டங்கி பற்றிய குறிப்புக்கள் பலவுண்டு, அது ஆராய்ச்சிக்குரியது.

இவருடைய காலத்தில்தான் கந்தப்போடி வன்னியனும் இருந்திருக்கின்றார். இவர்கள் இருவருக்கும் இடையில் இருந்த உறவால்தான் தனது மகளுக்கு குஞ்சித்தம்பி வன்னியனாரைத் திருமணம் செய்து வைத்திருக்கின்றார். எனினும், இவர்களுக்கு இடையில் போட்டியும் நிலவியிருக்கின்றது. இவர்கள் இருவரும் தற்போது மட்டக்களப்பு பெரிய தபால் நிலையம் இருக்கும் இடத்தில் போட்டிக்கு வீடு கட்டியிருக்கின்றனர். இவருடைய காலத்தில்தான் செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அக்கோயிலுக்கு 127 ஏக்கர் பூமியினைக் கொடுத்திருக்கின்றார். சின்னத்தம்பி உடையார் 150 ஏக்கர் பூமியினைக் கொடுத்ததாகவும் தகவல் உண்டு. அறுமக்குட்டிப்போடிக்கு அம்பிலாந்துறையில் 1100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் இருந்திருகிக்ன்றன.

## குலவிருது

அறுமக்குட்டிப்போடி பட்டிமாடுகளுக்குக் குலவிருது வகுத்தவர். இவருடைய காலத்திற்கு முன்னர் மாடுகளுக்கு இத்தகைய விருது இருக்கவில்லை என்பது தெளிவு. இதனால் மாடுகளை இனங் காண்பதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம். அதனைக் கருத்தில்கொண்ட அறுமக்குட்டிப்போடி இந்த குலவிருதினை ஏற்படுத்தியிருக்கின்றார். ஏற்கனவே மாகோனால் குலங்கள் பகுக்கப்பட்டிருந்தமையினால் இந்த விருதினை அடையாளப் படுத்துவதற்கு இலகுவாக இருந்திருக்கும். இந்த முயற்சி பாராட்டப்பட வேண்டியது. அதன் தொடர்ச்சியினை இன்றும் மாடுகளில் காணமுடிகின்றது. ஒரு மாட்டினைப் பார்த்தால் கூறிவிடுவார்வார்கள் மாட்டுக்குரிய ஊரினையும், சொந்தக்காரர் களையும். இந்த விருது மக்களின் மனங்களிலே ஆழப்பதிந் திருந்தது.

1. கலிங்ககுலம் - செங்கோலும் வாளும்
   (தற்போது சீனிப்புள்ளடியும் "ம" வும்)
2. உலகிப்போடிகுடி - எட்டுக்கால்
3. படையாட்சிகுடி - பட்டிச்சங்கு, முடியெழுத்தாணி
4. பணிக்கொணார்குடி - மந்துவளையம்
5. கச்சிலாகுடி - வட்டச்சங்கு
6. கோப்பிகுடி - ஆறுகால்
7. பெத்தான்குடி - கனிச்சங்கு
8. கரையார் - தோணி
9. துலுக்கர்க்கு - தொப்பி
10. காராளர்க்கு - மேழி
11. வேடுவர்க்கு - வில்லம்பு
12. முக்குகர்க்கு - எழுத்தாணி
13. கோயிலார்க்கு - கமலமலர்
14. பண்டாரப்பிள்ளைக்குச் - கைச்சங்கு
15. திமிலர்க்கு - பால்முட்டி
16. சேணியர்க்கு - நூலச்சு
17. அமலர்க்கு - தேர்க்கொடிகள்

| | |
|---|---|
| 18. அம்பட்டருக்கு | - கத்தரிக்கோல்,மத்து |
| 19. வேதியர்க்கு | - பூநூல் |
| 20. வண்ணார்க்கு | - கல் |
| 21. வாணியர்க்கு | - செக்கு |
| 22. கடையார்க்கு | - கூடை |
| 23. மன்னவருக்கு | - செங்கோல் |
| 24. வள்ளுவருக்கு | - மேளம் |
| 25. குசவர்க்கு | - கும்பகுடம் |
| 26. தட்டார்க்கு | - குறடு |
| 27. சாணர்க்கு | - கத்தி |
| 28. செட்டிக்கு | - தராசு |

(மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்)

## ஆக்கத்து

### (எழுத்துருவமான உத்தியோக அதிகார சின்னம்)

அறுகக்குட்டிப்போடிக்கு ஒல்லாந்தர் கொடுத்த ஆக்கத்து தரப்படுகின்றது. ஆக்கத்து என்பது நியமனக் கடிதமாகும். "அறுமக்குட்டி சாதி முக்குவன் எங்களிடத்திலே மண்முனைப் பகுதிக்கு பெடியாய் இருக்கக் கெட்டபடியால் அதற்கு நாங்கள் நிரிணயித்துப் பார்த்துத் தன்னுடைய நல்ல நடபடியைக் கெட்டுத தெரிமாணித்து முன் சொல்லப்பட்ட மண்முனைப் பகுதிக்குப் பொடியாகக் கற்பிக்கிறோம், அது கூடக் கொடுக்கப்பட்டது. தமது தொளிருக்கடுத்த சங்ளையும், புரோசனமும், பெரியவர்களுக்கு நடக்கும் பூச்சியமும் பொதுக்கிடைத் திருந்த படிக்கு இப்பவும் அந்தப் பிரகாரந்தான் யிதிற் கட்டளை பண்ணுகின்றோம். இதில் அடங்கிய சகலமானபேரும் இந்த அறுமக்குட்டியைப் பெடியாக அறிந்து உண்டானபடிக்குச் சங்கிக்கவெணும் இதற்கு அடையாளம் திட்டப்படுத்தி வளமையான முத்திரையும் வைத்துக் கையொப்பம் பொட்டுக் கொடுத்தோம். இப்படிக்கு இலங்கைத்தீவிற் கொழும்புக் கோட்டை. 776 வருடம் கார்த்திகை மீ 6 ஆந் தீ யிலே கையொப்பம் வைத்தது. இமான்வெல்லம்பல்க் கத்தனாகிய கொலாண்தொர்.

## இலங்கையில் முத்திரை சிவத்த லொக்கிரியாலே வைத்தது

| இலங்கையில் முத்திரை சிவத்த லொக்கிரியாலே வைத்தது |
|---|

மகாராசா மெஸ்தர்
இமான்வெல்க் லம்பல்க்
அவர்கள் கட்டளைப்படிக்கு
அதன் கீழ் கையொப்பம்
வைத்து யொகான் கொஸ்தன் அங்கலவெல்க் சக்கடத்தார். சரிவரக் கண்டது. அதிரியானிஸ் யுவானிஸ் பிறான்ஸட் கே.தொலுக்கரித்தது. கணக்கன்.

(ஆக்கொத்து - ஆக்கத்து, பெடி - போடி, கற்பிக்கின்றோம் - நியமிக்கின்றோம், தொளிர் - தொழில், புரோசனம் - பிரயோசனம், சங்கித்தல் - மரியாதை செய்தல், நல்லநடபடி - நன்னடத்தை, சங்கை - மதிப்பு, கெட்ட - கேட்ட, தெரிமானித்து - தீர்மானித்து)
*(மட்டக்களப்புத் தமிழகம் ப : 103 - 104)*

## தலைமை நிலமை கந்தப்போடி

மட்டக்களப்பின் தென்பகுதிக்கு நியமிக்கப்பட்டவர் கந்தப்போடி, இவரும் அம்பிலாந்துறையைச் சேர்ந்தவர். தெய்வநாயகம் பாராளுமன்ற உறுப்பினருடைய அப்பா கணபதிப்பிள்ளை உடையாரின் அம்மாவின் தங்கையைத் திருமணம் செய்தவர்தான் இவர். இவரும் அம்பிலாந்துறையில் உள்ள கிட்டங்கி வளவிலேயே இருந்துள்ளார். இவருக்கும் பங்குடாவெளிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. இவருக்கு ஐந்து ஆண்களும் இரண்டு பெண்களும் இருந்துள்ளனர். ஆண்கள் சத்துருக்கொண்டான், பங்குடாவெளி, முனைக்காடு, ஏறாவூர், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் திருமணம் செய்துள்ளனர். இவருக்கு பானகையிலும் ஒரு வீடு இருந்திருக்கின்றது. இவர் பானகை தொடக்கம் கதிரவெளி வரையும் நிருவாக பரிபாலனத்திலும் இருந்துள்ளார்.
*(ம.கதிர்காமத்தம்பி வயது - 84)*

இவர் நிருவாக பரிபாலனம் செய்வதற்காகச் சென்றால் மாதக்கணக்கில் செல்லுமாம் வீட்டுக்குத் திரும்பி வருவதற்கு. இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி குஞ்சிலயாப்போடி வன்னியன் அவருடைய நிலங்களுக்கான உறுதிகளை பெயர் மாற்றி

எடுத்திருக்கின்றார். இவர் வந்து பார்த்தாராம், உறுதி மாற்றம் இடம்பெற்றிருப்பதனை. இவர் எந்தப் பிரச்சினையும் எடுக்க வில்லையாம். உனக்கும் எனக்கும் உறவு இருக்கக்கூடாது. என்னுடைய சாவுக்கும் நீர் வரக்கூடாது என்று சொல்லிக் கிட்டங்கி வளவிலிருந்து நடுக்குடியிருப்புக்குச் சென்றாராம். (மா.கதிர்காமத்தம்பி)

## மண்முனைப்போடி

அறுமக்குட்டிப்போடியின் மகனான மண்முனைப்போடி சிறந்த வீரன் மட்டுமன்றி, பக்தியில் துறைபோனவன், பூசாரி, தகப்பனின் மறைவிற்குப் பிறகு சொத்துக்கள் யாவும் இவனிடமே இருந்தது. மண் முனைப் பகுதியில் பெரும் சொத்துடையவனாக இவன் இருந்தமையினால் அது குஞ்சிலயாப்போடி வன்னியனாருக்குப் பெரும் நடைமுறைச் சிக்கலை உண்டு பண்ணியது. ஏவ்வாறாயினும் இவனிடமுள்ள பூமியினைக் கைப்பற்ற வேண்டும் என நினைத்துத் திட்டங்கள் வகுத்தாலும், இந்த விடயம் பற்றி அன்றைய மட்டக்களப்பிலுள்ள நீதிபதியிடமும் கூறியிருக்கின்றார்.

இவரை மட்டக்களப்பிலுள்ள நீதி மன்றில் வழக்கு ஒன்று போட்டிருக்கின்றார், மண்முனைப்போடி அரச நிலங்களை சுவிகரித்து வைத்திருக்கின்றார். அவை அனைத்தும் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்று. இதற்காக நீதிமன்று அவரை குறிப்பிடட் நாளில் அழைக்கின்றது. அவரும் நீதிமன்று செல்வதற்காக பூமிகளின் ஆதாரம் கூறும் உறுதிக் கட்டுக்களைப் பொட்டகத்திற்கு மேலே எடுத்து வைத்துவிட்டு இறைவனை வணங்கியிருக்கின்றார். இவர் இறை வணக்கம் செய்வதற்குக் குறைந்தது இரண்டு மணித்தியாலமாவது தேவைப்படுமாம். அந்த நேரம் பார்த்து வெள்ளைக்கார ஆயாவைப் பயன்னடுத்தி உறுதிக்கட்டு களவாடப்பட்டிருக்கி ன்றது (பூசாரியார் சின்னத்தம்பி) என்றும், அவர் வீட்டில் இருந்த வேலைக்காறியைப் பயன்படுத்தி உறுதிகளவாடப் டது. களவாடிய உறுதியினை நெல்லுடன் வைத்து அவித்து எழுத்துக்களையெல்லாம் அழித்துப் பின்னர் உறுதிகளை அவருடைய வீட்டிலேயே போட்டதாகக் கூறுகின்றார்.
(மூ.தங்கராசா அம்பிலாந்துறை)

உறுதியைக் காணவில்லையென்று மனமுடைந்த நிலையில் நீதிமன்றம் சென்ற மண்முனைப்போடியிடம் நீதிமன்றம் தங்களிடம் உள்ள காணிகளுக்கான ஆதாரத்திகைக் கேட்டிருக்கின்றார்கள். அவரும் நடந்தவிடயத்தினைக் கூறியிருக்கின்றார். அதனை ஏற்கமறுத்த நீதிபதி அவருடைய காணிகளை அரசகாணியாக அறிவித்தது மட்டுமன்றி, அதனை வன்னியனாருடைய பெயருக்கும் மாற்றியிருக்கின்றார். அந்தக் காணிகள் யாவும் அரச உடைமையாக மாற்றப் பட்டமையினை தெரிவிப்பதற்காக நீதிமன்றைச் சுற்றி தவில் அடித்து அறிவித்திருக்கின்றனர். (இது அக்கால நடைமுறை) மண்முனைப்போடிக்கு ஒன்றரை நாள் சிறைத்தண்டனை கொடுக்கப் பட்டதாம். இவ்வாறான நிலையில் மனமுடைந்து பின்னர் தனது பொருளாதார நிலையினை இழந்திருக்கின்றார். இது வாய்மொழித் தகவலாக இருந்தாலும் ஓர் உண்மை வெளிப்படு கின்றது. மட்டக்களப்பில் இருந்த ஆங்கில ஆட்சியாளர்களின் பிரதான நோக்கம் போடிமார்களிடமும், வன்னியர்களிடமும் இருந்த நிலங்களை எந்த முறையிலாவது சுவிகரிக்கும் நோக்குடனேயே இருந்த இவர்களுக்கு மேற் கூறிய வழிமுறை சுலபமாகவே இருந்திரு க்கும். ஆங்கில ஆட்சியாளர்கள் சுதேசிகளிடமிருந்த நிலங்களைப் பறிப்பதற்கு நீதிமன்றங்களையும், சுதேச அடிவருடிகளையும், பலாத் காரத்தையும் பயன்படுத்தியிருக்கின்றனர் என்பது தெரியவருகின்றது. மகிழை மகேசனும்கூட இக் கருத்தடிப்படையிலேயே கூறுகின்றார்.

### C.D. கதிராமப்போடி வன்னியனார்

C.D. கதிராமப்போடி வன்னியனாரும் அறுமக்குட்டிப்போடியும் சமகாலத்தவர். இருவரும் அம்பிலாந்துறையில் இருந்திருக்கின்றனர். C.D கதிராமப்போடி சம்மாந்துறை நாடுகாடுப்பற்று வன்னியனாராக இருந்திருக்கின்றார். அவர் கிறிஸ்தவசமயத்தைச் சார்ந்தே வன்னியர் பதவியினைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார். இருவருக்கும் பல விடயங்களில் போட்டி நிலவியிருக்கின்றது. மட்டக்களப்பில் தற்போது பெரிய தபால் நிலையம் உள்ள இடத்தில் போட்டிக்கு இருவரும் பெரிய வீடு அமைத்திருக்கின்றனர். ஆனால், இருவருக்கும் இடையில் பிரச்சினை இடம்பெறவில்லை என்பர். இந்தப்போட்டி

தொடர்ந்து செல்லக்கூடாது என்பதற்காக கதிர்காமப்போடி வன்னியனாரின் மகனுக்கு அறுமக்குட்டிப்போயின் மகளைத் திருமணம் செய்துகொடுத்து மச்சான் - மச்சினன் உறவு கொண்டாடிப் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார்களாம். அது மட்டுமன்றி மட்டக்களப்புப் பிரதேசத்தில் இருவரும் பல வகைகளில் பலம் மிக்கவர்கள் தங்களுக்கிடையே பிரச்சினை ஏற்பட்டால் மட்டக்களப்பை எதிரிகள் இலகுவாகத் தாக்கிவிடுவார்கள் என்பதனால் இத்தகைய சமரச முயற்சி ஏற்பட வாய்ப்புண்டு.

அடுத்து இவர்கள் வாழ்ந்த காலம் ஒல்லாந்தர்களுடைய ஆட்சி நிலவிய காலம். இக்காலத்திலே ஒல்லாந்தருக்குச் சவால் விடக் கூடிய வீரனாக அறுமக்குட்டிப்போடி இருந்திருக்கின்றான் என்றால், இதற்கு அவனுடைய படைபலமும் பணபலமம் பக்கபலமும் காரணமாக இருந்திருக்கும். இதற்கு வன்னியர்களுடைய படைபாரிய பங்காற்றியிருக்கும். இவருடைய காலத்தில்தான் கொக்கட்டிச்சோலைச் சிவன் கோயிலுக்கு அத்தியாமுன்மாரிக் கண்டத்தில் வயல் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் அந்நிலம் மாவேற்குடாப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமாக் கப்பட்டுள்ளது. கொக்கட்டிச்சோலைச் சிவன்கோயிலில் உட்கட் டமைப்புப் பணியினைச் செய்துவந்த பழுகாமத்துக் கிராமத்தினர், சிறிய பிரச்சினையில் கோயிலில் இருந்து பிரிந்து சென்று, மாவேற்குடாப் பிள்ளையார் ஆலயத்தில் பூசைசெய்யலாயினர். அக்காலமுதல் இந்தப் வயல் நிலத் தினையும் தன்வசப்படுத்திக் கொண்டனர்.

கொக்கட்டிச்சோலைச் சிவன்கோயிலில் சுவாமியைத் தூக்கி வலம் வரும் உரிமம் பெற்றிருந்த அத்தியாகுடி வேளாளரின் சேவையினைப் பாராட்டி காலிங்காகுடியைச் சேர்ந்த தலைமை வண்ணக்கரான இவரால் 60 ஏக்கர் பூமி வழங்கப்பட்டது. பின்னர் கோயிலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகப் பிரிந்து சென்ற இவர்கள் பூமியினையும் திருப்பி வழங்கவில்லை. அந்தப் பூமியினை மாவேற்குடாக் கோயிலுக்கு உரிமையாக்கியுள்ளனர்.
*(கு.தம்பையா ப : 88)*

## நாவற்கன்னியார்

அறுமக்குட்டிப்போடியினுடைய பெத்தப்பன் முறையுடையவர். அறுமக்குட்டிப்போடி, அம்பிலாந்துறையில் 1766ஆம் ஆண்டு காலத்தில் மாரியம்மன் சடங்கை ஆரம்பித்துவைத்து, பூசாரி யாராக நாவற்கன்னியாரை நியமித்துள்ளார். அன்றிலிருந்து அவர்களுடைய பரம்பரையினரே மாரியம்மன் சடங்குக்கான பூசாரியார்களாக இருந்துவருகின்றனர்.

## ஆங்கிலேயர் காலம்

கி.பி. 1796ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் மட்டக்களப்பு கைப்பற்றப்பட்டபோது அருமைப்பெருமாள் என்பவர் ஒல்லாந்த நிருவாக அமைப்பின் காலத்திலிருந்தே பிரதான பதவியாக இருந்த நிலவிதான பதவியை வகித்து வந்திருக்கின்றார். இக்காலத்தில் போடிமார்களுக்கும் ஆங்கிலேயருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்று மைகளால் போடிமார்களிடமிருந்து வரிகள் அறவிட முடியாமற் போனது. இதன் விளைவால் ஏற்பட்ட கிளர்ச்சியால் அருமைப் பெருமாள் சிறைப்பிடிக்கப்பட்டார். கி.பி. 1803 ஆம் ஆண்டு அருமைப்பெருமாளின் சகோதரர்களான தியாகப்பர், வன்னியப்பர் ஆகியோர் மண்முனைப்போடியும் (அறுமக்குட்டிப்போடி), மட்டக்களப்பின் நிலைமைப் போடிகளும், சில முஸ்லிம் அதிகாரிகளும் கண்டி அரசனது துணையோடு போராடி, புளியந்தீவு தவிர்ந்த ஏனைய இடங்களைக் கைப்பற்றி மூன்றுமாதம் வரை ஆட்சி செய்தனர். எனினும், மீண்டும் போர்செய்து ஆங்கிலேயர் மட்டக்களப்புப் பிரதேசத்தை மீட்டெடுத்தனர். இதனால் மட்டக்களப்புத் தலைமைமப் போடிகள் அனைவரும் கண்டிக்குச் செல்ல வேண்டிய தாயிற்று.

ஆங்கில ஆட்சியாளர்களுடைய ஆட்சித்திறன் மற்றவர்களை அடிவருடிகளாக வைத்துக்கொள்வது. இதற்காக அவர்களின் உணவு, உடை, உத்தியோகம் எனும் மாயையைப் பிரயோகிப்பார்கள். மட்டக்களப்பில் சண்டை இடம்பெற்ற காலத்தில் தங்களுக்கு விசுவாசமாக இருந்தவர்களையும், போரில்

ஈடுபடாமல் இருந்த சிறு போடிகளையும் மாகாணத் தலைமைப் போடிகளாக நியமிக்கலா யினர். இதற்காக இராணுவச் சட்டத்தினைப் பயன்படுத்தினர். இச்சட்டத்தின் கீழ் முற்குகருக்கிருந்த சொத்துக்கள் ஆங்கிலேயரா லும் அவர்களுக்கு ஏவல் செய்யும் ஆடிவருடிகளாலும் பறித்தெடுக் கப்பட்டன.

1833ஆம் ஆண்டு கோல்புறுக் ஆணைக்குழுவால் நிருவாக மாற்ற யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இம்மாற்றத்தின் பின்னர் பரம்பரை வன்னியர் எனும் பதவிக்குப் பதிலாக சம்பளம் பெறும் வன்னிபம் எனும் உத்தியோகஸ்தர்களை நியமித்தனர். மதம்மாறிய பலருக்கு வன்னியப் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இத்த கைய பின்னணியில்தான் அம்பிலாந்துறையில் இருந்த கந்தப் போடியும், அவர் மகன் குஞ்சிலாயப்போடியும் கிறிஸ்தவத்துக்கு மதம்மாறியதால் முறையே டானியல் கதிராமப்போடி வன்னியன், றொவேட் குஞ்சிலயப்போடி வன்னியன் எனும் பெயரில் வன்னியர்களாக இருந்தனர்.

இவ்விரு வன்னியர்களும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பிரபல்யமான நிருவாகிகளாக இருந்தனர். கதிர்காமப்போடி வன்னியன் மட்டக்களப்பிலும் இருந்துள்ளான். இவர் இருந்த இடம் தற்போது வில்லியம் ஒல்ட் மண்டபம் அமைந்துள்ள இடமாகும். தற்போது அரசாங்க மில் இருக்கும் இடமும் இவருக்குரியதாகும். ஒல்லாந்தர் காலப்பகுதியில் ஊர்களின் தலைவர்களாக போடிமார் செயற்பட்டுவந்தனர். இவர்கள் ஊர்களின் தருமக் கைங்கரியங்களில் ஈடுபட்டு வந்தனர். அவ்வூர் போடிகளே அந்தந்த ஊர்களில் இருக்கும் கோயில்களில் பாராமரிப்பாளர்களாக செயற்பட்டனர். பின்னர் பராமரிப்பாளர்கள் பரிபாலகர்கள் என்று அழைக்கப் பட்டனர். இவர்கள் வீதியோரங்களில் சுமைதாங்கி அமைத்தல், ஆட்கள் ஆறியிருந்து போவதற்கான தங்குமடங்கள் அமைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டனர். பிரதேசத்தில் காணப்படும் ஏழை மக்களுக்காக வேளாண்மை வெட்டி முடித்ததும் தன்மத்தான் கிணற்றடியில் அமுது வழங்கப்பட்டிருக்கின்றது. இது இன்று காணப்படும் முதலைக்குடாச் சந்தியாகும்.

ஆங்கிலேய ஆட்சியின் ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட வன்னியர்களும் வன்னிமைகளும்.

1. C.D.கதிராமப்போடி வன்னியன் - சம்மாந்துறை நாடுகாடுப்பற்று
2. குஞ்சிலயாப்போடி, கதிராமப்போடி வன்னியர்கள் மண்முனைப்பற்று (அம்பிலாந்துறை)
3. சின்னத்தம்பிச்செட்டி - நிந்தவூர், அக்கரைப்பற்று, பாணகைப்பற்று, கோறளைப்பற்று.
4. A.அகமதுலெவ்வை வன்னியன் - ஏறாவூர்ப்பற்று
5. நிலம சின்னத்தம்பிப்போடி - கரவாகுப்பற்று
6. W.J.சுப்பிரமணிய வன்னியன் - விந்தனைப்பற்று

## ஆங்கிலேயரும் வன்னியர்களும்

ஆங்கிலேயர் மட்டக்களப்பினை 1796 - 1997 ஆம் ஆண்டு கைப்பற்றினர். அக் காலத்தில் முக்குக குலத்தைச் சேர்ந்த நிலவிதானை அருமைப்பெருமாள் என்பவர் முஸ்லிம்களோடு சேர்ந்து பிரித்தானியருக்கு எதிரான கலகம் ஒன்றினைச் செய்துள்ளார். இதன் விளைவால் நற்பெட்டிமுனையிலிருந்த பிரித்தானிய வர்த்தகக் கம்பனிக்குச் சொந்தமான நெற்களஞ்சியம் தீக்கிரையாக்கப்பட்டது. இதனால் பிரித்தானியர் அதுவரை காலமும் அறவிடப்பட்டு வந்த வரியில் தடை ஏற்பட்டது. எனினும், பிரித்தானியர் இக் கலகத்தினை அடக்கி, மட்டக்களப்புச் சுதேசத் தலைவர்களுடன் முரண்படுவதைத் தவிர்த்துக் கொண்டனர். இந்த நிலையினைப் பயன்படுத்தி பிரித்தானியர்களுக்கு எதிராக 1803ஆம் ஆண்டு காலப் பகுதியில் அருமைப்பெருமாளின் சகோதரர் தியாகப்பரும் வள்ளியப்பரும் முக்குக தலைமைப்போடிகளும் முஸ்லிம் தலைவர்களுடன் இணைந்து ஊவாப் பகுதியின் திக்கதிபனின் துணையுடன் புரட்சி செய்தனர். இப் புரட்சியில் புளியந்தீவு தவிர ஏனைய பகுதிகள் யாவும் வன்னியர்களினால் கைப்பற்றப்பட்டன. எனினும், இப் பகுதிகளைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை.எ ஆதர் யோன்ஸ்ரன் தலைமையில் மீண்டும் பிரித்தானியர் வசமாகியது. முக்குகப் போடிகளும் ஏனையோரும் கண்டியை நோக்கிப் பின்வாங்கினர்.

மட்டக்களப்பில் இருந்த வன்னியர்களும் போடிகளும் வீரம் மிக்கவர்கள், வீரம் விளை நிலத்தில் உதித்தவர்கள். வீரம் விளைநிலம் என்பது இன்று நேற்று வந்ததல்ல. அதற்கு கால வரையறை கிடையாது. தங்களை எதிர்த்தவர்களை யாரென்றும் பார்க்காமல் அவர்களுடன் சண்டை செய்திருக்கின்றார்கள். மட்டக்களப்பினை நீண்ட காலமாக தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து. தங்களைத் தாங்களாகவே ஆண்டவர்கள். முக்ககர் என்ற அடையாளத்தினை நிலைபேறடையச் செய்தவர்கள். தாங்கள் சார்ந்த தலைமைக்கு விசுவாசமாக இருந்தவர்கள். தங்களை நம்பியவர்களைக் கைவிடாதவர்கள். ஆரம்பத்தில் கண்டிய மன்னர்களுடன் கசப்புணர்வு இருந்தாலும் பின்னர் கண்டித் தலைமையுடன் இணைந்து அன்னியர்களை எதிர்த்து வெற்றியும் கண்டவர்கள். அவர்களும் முக்குகர் என்பதனால் அவர்களுடன் தொடர்ந்து உறவைப் பேணினார்கள். அந்த உறவினை அவர்கள் இறுதிவரையும் கைவிடவில்லை. மட்டக்களப்பிலிருந்து கி.பி 1803 ஆம் ஆண்டு காலத்தில் பின்வாங்கிய அவர்கள் இறுதியாக கண்டிக்குத்தான் சென்றனர்.

உலகெல்லாம் ஆங்கிலேயர் பல நாடுகளைக் கைப்பற்றி வந்தபோது ஏன் இவர்களை எதிர்த்து இவர்கள் போர் செய்தார்கள். இதற்கு கண்டிய மன்னன்தான் காரணமாக இருந்திருப்பான். கண்டியைத் தக்கவைத்தக்கொள்ள வேண்டுமாக இருந்தால் மட்டக்களப்பு தங்களின் கண்காணிப்பின் கீழ் இருக்கவேண்டும். அப்படியானால் ஆங்கிலேயரை இங்கிருந்து விரட்டியடிக்க வேண்டும். அதற்கு அவனுடைய வழிகாட்டலில் சண்டையைத் தொடங்கி இருக்கின்றான். இதன்மூலம் ஆங்கிலேயருடைய போர் வலிமையையும் தெரிந்து, அதற்கேற்ப கண்டி இராசதானியைப் பலப்படுத்துவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டிருக்கும். அதற்காக இவர்களைப் பயன்படுத்தி இருப்பான். சண்டைக்குத் தயங்காத இவர்களும் தங்களை எதிர்த்தவர்களை விடக்கூடாது என்பதற்காகப் போர் செய்து இருப்பார்கள்.

இந்தக் கலகத்தில் ஈடுபட்ட முக்குகப் போடிகளும் ஏனையோரும் கி.பி 1803ஆம் ஆண்டு காலத்தில் கண்டியை நோக்கிப்

பின்வாங்கினர். இக்காலத்தில் சம்பந்தப்பட்ட முக்குகத் தலைவர்களுடைய சொத்துக்கள் எல்லாம் பிரித்தானியரால் பறிமுதல் செய்யப்பட்டன. மண்முனைப் பற்றுப்போடி இக்கலகத்தில் முக்கிய பங்குதாரராக இருந்தபடியால் அவருடைய நிலபுலம் சொத்துடைமை யெல்லாம் பிரித்தானியரால் பறிக்கப்பட்டது. (அந்தக் காலத்தில் மட்டக்களப்பு வட பாகத்திற்கு அதிகாரம்கொண்டவனாக இருந்தவன் அறுமக்குட்டிப்போடிதான்.) இதனால் அம்பிலாந்துறையைச் சூழவுள்ள காணிகள் உட்பட மண்முனைப் போடிமாருக்குச் சொந்தமான பல ஏக்கர் காணிகள் ஆங்கில அரசாங்கத்திற்கு உரித்துடையவனாயின.

இக்கலகம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அதனை அடக்குவதற்குத் துணைபுரிந்தவர்கள், கலகத்தில் ஈடுபடாமல் இருந்தவர்கள் எனப் பிரித்தானிய இராணுவத்தால் கருதப்பட்ட முக்குகப் போடிகள் ஆதர்யோன்ஸ்ரனால் தலைமைப்போடிகளாக நியமனம் பெறும் வாய்ப்பினைப் பெற்றனர். இத்தகைய சூழ்நிலையில் பிரித்தானியருக்கு விசுவாசிகளாகவும், கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர்களாகவும், வாங்கிய நெல்லை முறைப்படி செலுத்தியவர்களையும் போடிகளிடமிருந்து முன்பு பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களை விற்பனை செய்தனர். இவ்வாறான நிலையில்தான் குவியப்படுத்தப் பட்டிருந்த காணிகள் பலருக்குச் சொந்தமாயின. ஆனால் அம்பிலாந்துறையில் இருந்த காணிகள் யாவும் குஞ்சில யாப்போடி வன்னியர்களுக்கு நீதி மன்றமூலம் பறிமுதல் செய்யப்பட்டு மாற்றப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அறுமக்குட்டிப்போடி தனது மாமன், மண்முனைப் போடி மச்சான் ஆகையால் ஆங்கிலேயரும் அக்காணியைப் பற்றி சிந்தித்திருக்க வாய்ப்பில்லை.

அன்றைய நிலையில் பிரித்தானியர் உலகையே தமது காலனித்துவத்தின் கீழ் கொண்டுவந்தவர்கள். இதனை அறிந்த குஞ்சிலயாப்போடி குடும்பத்தினர் ஆங்கிலேயருடன் சேர்ந்து முரண்பட விரும்பவில்லை. முரண்பட்டால் தம்மைத்தானே அழித்துக்கொள்ள வேண்டிவரும் என்பதற்காக பிரித்தானியருடன் நல்லுறவு பூண்டனர். இத்தகைய பின்னணியில்தான்

குஞ்சிலயாப்போடி வன்னியனாரை மட்டக்களப்பில் தன்னிகரற்ற தலைவனாக மாற்றுகின்றது. இவர் அம்பிலாந்துறைக்கு மட்டுமல்ல அன்றைய மட்டக்களப்புப் பிரதேசத்துக்குமே தன்னிகரற்ற தலைவனாகத்தான் இருந்துள்ளார்.

## குஞ்சிலயாப்போடி வன்னியனார்

குஞ்சிலயாப்போடி வன்னியனாரை ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் கிழக்கு மாகாணத்துக்கென்று குளங்களை நிருவாகம் செய்ய நியமிக்கப் பட்டிருக்கின்றார். அம்பிலாந் துறையில் குறிப்பிடத்தக்க ஒரு பெரிய மனிதர். சம்மாந்துறை நாடுகாடுப்பற்று வன்னியனார் C.D கதிராமப் போடி அவர்களின் மகனாவார். இவர் கி.பி 1790 ஆம் ஆண்டு காலத்தில் சம்மாந்துறையில் பிறந்திருக்கலாம். எனக் கருத இடமுண்டு. இவர் திருமணம் செய்த இடமே அம்பிலாந்துறையாகும். இவருடைய தந்தையார் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தே வன்னிப் பதவியைப் பெற்றுக் கொண்டதால் இளம் வயதிலேயே இவரும் கிறிஸ்தவராயிருக்க வேண்டும். இவருடைய கிறிஸ்தவப் பெயர் றொபேட் என்பதாகும். இவருக்கு கதிராமப்போடி, எதிர்மனசிங்கம், மூத்தம்மை, வள்ளியம்மை, குஞ்சிநாச்சிப்பிள்ளை, சின்னப்பிள்ளை, ஆகிய பிள்ளைகள் இருந்துள்ளனர்.

*(மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் ப : 193)*

அவர் மண்முனைப் பகுதிக்கான நிருவாக செயற்பாட்டுடன் கிழக்கு மாகாணத்திலுள்ள குளங்களையும் நிருவாகம் செய்யும் பணியினையும் மேற் கொண்டிருக்கின்றார். ஆங்கிலேய தேசாதி பதியினால் நியமிக்கப்பட்ட வெட்சித்துரை யுடன் நெருங்கிய தொடர்புடையவர். வெட்சித்துரை அம்பிலாந்துறைக்கு வருவாராம், பின்னர் இருவரும் குதிரை வண்டியில் திருகோணமலை, பொத்துவில் என்று பயணத்தினைத் தொடர்வார்களாம். பயணம் செய்யும்போது பெரிய வட்டைகளைக் கண்டால் வெட்சித்துரை சொல்வாராம், குஞ்சித்தம்பி இந்த வட்டையை உன்பெயரில் எழுதிக்கொள் என்று. அவரும் தனது பெயரில் உறுதி முடித்துக் கொள்வாராம். இவ்வாறு பயணம் செய்யும் காலங்களில்

எழுதப்பட்டது, அம்பாறை மாவட்டத்தில் உள்ள கன்னன்வெளி, பொன்னன்வெளி, கரவாகுவட்டை போன்ற இடங்களிலுள்ள வயல் நிலங்கள். அந்த வயல் நிலங்களை அவர் நீண்ட காலம் பராமரித்து வந்துள்ளார். அவர் வேளாண்மை செய்ய முடியாத நிலையில் காணப் பட்ட காலத்தில் அவருடைய நிலங்களைப் பலர் ஆயத்திற்கு (குத்தகைக்கு) எடுத்து வேளாண்மைச் செய்துள்ளனர். ஆயத்துக்கு எடுத்தவர்கள் குத்தகைப் பணத்தினைக்கொண்டு கொடுப்பார்களாம், அப்போதும் அவருக்குத் தெரியாதாம் தனது வயல் நிலங்கள் எங்கெங்கு உள்ளதென்று. அவர் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் வேளாமை செய்யாமல் விட்டிருக்கின்றார். அதனால் அவருக்கு வயல் நிலங்கள் உள்ள பல இடங்கள் மறந்திருந்ததாம். அதனால் அந்த நிலங்கள் பலவற்றைப் பிற்பட்ட காலத்தில் பலரும் சொந்தமாக்கிக் கொண்டனர். எஞ்சிக் கிடந்த சில ஏக்கர் காணிகளை அவருடைய சொந்தக்காரர்கள் அண்மைக் காலத்தில் விற்றுள்ளனர். இன்று கன்னன்வெளி, பொன்னன்வெளி, கரவாகு வட்டையில் வன்னியர்களின் பெயர்களில் எந்த காணிகளும் இல்லை. உறுதிகள் சரியாக ஆராயப்பட்டால் பல நிலங்கள் சுவிகரிக்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டு அவை அம்பிலாந்தறை ஆலயத்திற்குச் சொந்தமாக்கப் பட வாய்ப்பிருக்கின்றது.

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் 1111 ஏக்கர் 1 ரூட் 11 பேர்ச் நெற்காணிகள் இருந்துள்ளன. அத்தோடு ஆற்றிலும் ஒரு சங்கிலி என்று இவர்களுடைய நில விஸ்தீரனம் இருந்திருக்கின்றது. அதனை இன்றும் கூறுவார்கள் "ஆயிரத்து நூற்றுப் பதினொரு ஏக்கரில் ஆற்றிலும் ஒரு சங்கிலி" என்று. இவருக்கு கொழும்பிலும் ஒரு வீடு இருந்திருக்கின்றது. கொழும்பில் ஏலத்தில் வீட்டை எடுத்து திருகோணமலைக்கு வந்து பணம்கொண்டு கொடுத்திருக்கின்றார். இவருக்குத் திருகோணமலையிலும் ஒரு மனைவி இருந்ததாகக் கூறுகின்றனர் அது ஆராய்ச்சிக்குரியது.

இவருடைய காலத்தில் வில்லுக்குளம் இருந்திருக்கின்றது. ஒரு முறை குளம் உடைப்பெடுக்கும் நிலையில் இருந்திருக்கின்றது. குளம் உடைப்பெடுத்தால் கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் இருந்தது. அந்த நிலையினை உணர்ந்த வன்னியனார்,

குளக்கட்டின் ஒரு பகுதியினை வெட்டி நீரை அகற்றி இருக்கின்றார். அப்போது வெட்சித்துரை வந்து கோபப்பட்டு யார்? இந்த வேலையைச் செய்தது என்றும், இதை எப்படிக் கட்டுவது என்றும் கேட்டிருக்கின்றார். அப்போது வன்னியனார் கூறினாராம் அதை நான் செய்வேன் என்று. பின்னர் அவர் அம்பிலாந்துறையில் உள்ளவர்களைக் கொண்டு தோளால் மண் சுமந்து கட்டினாராம். இதனைக் கண்டு அதிற்சியுற்ற வெட்சித்துரை வன்னியனாரைப் பாராட்டி, நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டாராம். அதற்கு வன்னியனார் சொன்னாராம் அம்பிலாந்துறை வயல்களுக்கே முதல் பாய்ச்சல் கொடுக்கவேண்டும் என்று. அன்றிலிருந்து இன்றுவரையும் முதல்பாய்ச்சல் அம்பிலாந்துறை வயல்களுக்கே என்பார். (சிவபாலன் பட்டிப்பளை)

வில்லுக்குளத்தினை கட்டுவதற்கு அம்பிலாந்துறையில் உள்ளவர்களின் பங்கு அதிகமாக இருந்திருக்க வாய்ப்புண்டு. அம்பிலாந்துறையில் சோதயன்கட்டு, கடுக்காமுனையில் சோதயன் கட்டு எனும் இடங்கள் இன்றும் அதே பெயர்களுடன் காணப்படு கின்றது. எனவே, இத்தகைய பெயர்கள் ஏற்பட்டதற்கு, இங்குள்ள வர்கள் சிறந்த உடல் வலிமை உடையவர்களாக இருந்திருக்கலாம். அவர்களைக் கொண்டே இக்குளம் கட்டப்பட்டிருக்கலாம். அம்பிலாந்துறையில் உள்ள வீரர்களை குளம் கட்டுவதற்காக கடுக்காமுனையிலுள்ள சோதயன் கட்டு உள்ள இடத்தில் அமர்த்தி குளங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கலாம். கடுக்காமுனை யிலும் சோதயன் கட்டு உள்ளது.

இந்தக் குளக்கட்டு இனிவரும் காலங்களில் உடைக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் குளக்கட்டுக்கு அருகாமையில் பிள்ளையாரை இருத்தி வன்னியனார் வணங்கியி ருந்தாராம். அக்காலந் தொடக்கம் எந்தப் பொல்லாப்பையும் விநாயகப்பெருமான் மக்களுக்கு ஏற்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்த விநாயகப்பெருமான் இன்று கடுக்காமுனை நெக்கட்டியடி விநாயகப்பெருமானாக அருள்பாலிக்கின்றார். (க.அரசரெத்தினம் - கி. உ, பா.தில்லையப்போடி)

மட்டக்களப்பில் அநாதைப் பிள்ளைகளை கிறிஸ்தவ தேவால யத்தில் வைத்து படிப்பித்து வந்திருக்கின்றனர். இவர்களுடைய கல்வி, பாதுகாப்பு, உணவுத்தேவைகளுக்காக குஞ்சிலயாப்போடி வன்னியனிடம் விறதர்மார் வந்து பூமி கேட்டு இருக்கின்றனர். இதற்காக அவர், பட்டிப்பளைச் சந்தியிலிருந்து மணல்பிட்டி வரையும் இவருக்கு இருந்த வயல் நிலத்தினை அந்தக் கைங்கரியத்துக்காக மானியமாகக் கொடுத் திருக்கின்றார். அந்தப் பகுதி அன்றைய காலத்தில் விறதர்மாருடைய கண்டம் என்றே அழைக்கப் பட்டிருக்கின்றது. பின்னர் விறதர்மார் இக்காணிகளைப் பொதுமக்களுக்கு விற்று இருக்கின்றனர். (சிவபாலன் பட்டிப்பளை) 1931அம் ஆண்டு வைகாசி மாதம் சஞ்சூசையப்பர் துறவிகள் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு வந்து புனித அகுஸ்தினார் ஆசிரியர் கலாசாலை, புனித மரியாள் பாடசாலை - விடுதிசாலை, அனாதர்சாலைகளையும் கையேற்றனர். இவர்களை யாழ்ப்பாணத்து விறதர்மார், கொழும்புத்துறை விறதர்மார், படிப்பிக்கும் விறதர்மார் என்று அழைத்திருக்கின்றனர்.
*(நூறு வருட மட்டுநகர் நினைவுகள் ப : 8)*

குஞ்சிலயாப்போடி வன்னியனார் இறுதிக் காலத்தில் பட்டிப்பளையில் இருந்திருக்கின்றார். அவரும், அவருடைய மனைவியும் இறந்ததன் பிற்பாடு தற்போது காட்சியளிக்கும் பட்டிப்பளை வீரபத்திரர் ஆலயம் அமைந்ததருக்கும் இடத்தில் இருவரு டைய உடல்களும் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. இவர்களுடைய புதைகுழி அழிந்து காணப்பட்ட நிலையில் அப் புதைகுழிக்குமேல் தான் ஆலயம் எழுப்பப்பட்டிருக்கின்றது என்று சிவபாலன் கூறுவார். அதாவது, மட்டக்களப்புப் பிரதேசத்திலே இத்தகைய ஒருவருக்கு இவ்வளவு காணி இருந்ததென்றால் குஞ்சிலயாப்போடி வன்னியனார் தவிர வேறு யாரும் இருக்கமுடியாது.

### மரணசாசனம்

சாகுந்தறுவாயில் ஒருவன் தன் சொத்தைப் பிரித்துக் கொடுப்பதைக் குறித்து எழுதி வைக்கும் ஆவணம் மரணசாசனமாகும். இதனை இறுதிமுறி என்றும் கூறுவர். குஞ்சிலயாப்போடி வன்னியனார்

1858 ஆம் ஆண்டு காலத்தில் தமது பெண்பிள்ளைகள் நால்வர்க்கும் தமக்குச் சொந்தமான காணிப்பரப்பு யாவற்றையும் மரணசாசனம் எழுதி ஒப்புவித்திருக்கின்றார். இதில் அவர் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளாராம் அதாவது, இந்தப் பரம்பரை இல்லாதபோது அக்காணிகள் யாவும் அம்பிலாந்துறை ஸ்ரீ சித்தி விநாயகர் முத்துமாரி யம்மன் கோயிலுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதாம். (பூசாரியார் சின்னத்தம்பி, மூ.தங்கராசா, பூசாரியார்)

இந்த மரணசாசனம் ஏன் எழுதப்பட வேண்டும் எனும் வினா எழுகின்றது. குஞ்சிலயாப்போடி வன்னியனாருக்குத் தெரியும் பரம்பரை என்பது அழியாத ஒன்று. அவ்வாறு அப்பரம்பரை இல்லாமல் போகுமாக இருந்தால் அக்காணிகள் வேறு யார்க்கும் சொந்தமாக்கப்பட முடியாது அவை யாவும் ஆலயத்துக்கு சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதுதான். இன்னோருபுறம் சிந்தித்தால் இவருக்குப் பிறகு பல வன்னியர்களும் உடையார்களும் அம்பிலாந்துறையில் இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தி நிலங்களை அபகரிக்கலாம் என்பதற்காக இவர் மரணசாசனம் எழுத வாய்ப்புண்டு. ஏனெனின், கோயில் என்ற பெயர் வரும்போது அந்தச் சொத்தில் யாரும் கைவைக்க முடியாது, கைவைக்கவுமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். தங்கள் பிள்ளைகளிடமிருந்து நிலங்களைப் பிரித்தால் அல்லது, பறித்தால் அவை ஆலயத்துக்குத்தான் செல்லவேண்டும் வேறுயாருக்குமல்ல என்பது சூச்சுமமாக எழுதப்பட்டுள்ளது. இது ஒரு சட்ட ஆவணமுமாகும். இதற்கு ஆங்கிலேயர்களும் ஒத்துழைப்பு வழங்கினர். அவருடைய அனுபவ வெளிப்பாடு மரணசாசனமாக உருவெடுத்திருக்கின்றது.

## குதிரை கட்டிய இடம்

போடிகளுக்கும் வன்னயர்களுக்கும் குதிரை வண்டிகள் இருந்துள்ளன. குஞ்சிலயாப்போடியாருக்கு சிறப்பான குதிரை வண்டி இருந்துள்ளன. இவருக்கு ஆங்கிலேயரினால் குதிரை வண்டில் வழங்கப்பட்டிருக்கின்றன. நடுக்குடியிருப்புப் பகுதியிலேயே குதிரை கட்டப்பட்டிருக்கின்றது.

## கதிராமப்போடி வன்னியனார்

ஆங்கிலேயர் காலத்தில் நியமிக்கப்பட்ட வன்னியனார் இவர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர். பின்னர் இவருடைய பெயரினை டானியல் கதிராமப்போடி என்று அழைத்தனர். குஞ்சிலயாப்போடி வன்னியனாரின் மகனான இவரும் சிறந்த நிருவாகி. இவர் கொழும்பு, மட்டக்களப்பு நகர், கொம்மாதுறை என்று பல இடங்களில் இருந்திருக்கின்றார். இவர்தான் திருத்தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் படையான்டகுடிக்கான மடத்தினை முதலில் கட்டியிருக்கின்றார். இந்த மடம் குட்டக் கல்லையும் கொழுக்கி ஓட்டினையும் கொண்டு காணப்பட்டது. அண்மைக்காலத்தில் இந்த மடம் உடைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கதே.

## கதிரமலைப்போடி வன்னியனார்

மதனம் சின்னத்தம்பிப்போடி வன்னியனாரின் மகனான கதிரமலைப்போடிவன்னியனார் அம்பிலாந்துறையைச் சேர்ந்தவர். (களுதாவளை - ஆ.அரசரெத்தினம் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்) தங்கராசா வயது 92 குறிப்பிடுகையில், அவர் இங்குதான் இருந்தவர். செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயிலுடன் இவருக்குத் தொடர்பிருந்தது. பழுகாமத்துடனும் தொடர்பிருந்தது என்றார். பூசாரியார் சின்னத்தம்பி வயது 86 இவரும் இதே கருத்தைத்தான் கூறினர். கதிர் காமத்தம்பி வயது 81 இவரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றேன். எமது ஊரிலே இருந்தவர், இவருக்கு நற்பெட்டி முனையுடனும் தொடர்புண்டு என்றார். எவ்வாறாயினும் இவ்வன்னியனார் செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயிலின் பிரதான பொறுப்பினை வகித்திருக்கின்றார். அம்பிலாந்துறை வன்னிமைகளின் பராபரிப்பில் இவ்வாலயம் நீண்ட காலத்திற்கு இருந்திருக்கிறது. 1893ஆம் ஆண்டு ஆனி மாதம் 11 ஆம் திகதி நி.இ.வ.கதிரமலைப்போடி வன்னிமையின் காலத்தில் கண்ணகியம்மன் கோயில் கூட்டம் இடம்பெற்றிருக்கின்றது. இக்காலத்திற்குப் பின்னர் இவர் பற்றிய தகவல்கள் கூட்டக் குறிப்பில் இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

## சின்னத்தம்பி வன்னியனார்

கதிரமலைப்போடி வன்னியனின் மகனான இவர் அம்பிலாந்துறையினைப் பிறப்பிடமாகக் கெண்டவர். இவர் நற்பெட்டிமுனையில் திருமணம் செய்துள்ளார். கரவாகுப்பற்றுக்கு வன்னியராக இருந்துள்ளார். *(ஆ.அரசரெத்தினம் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்)*

## மதனம் சின்னத்தம்பி வன்னியனார்

கதிரமலைப்போடி வன்னியனின் தகப்பனான இவர் அம்பிலாந்துறையைச் சேர்ந்தவர். இவர் மண்முனைப் பற்றுக்கு வன்னியனாக இருந்துள்ளார்.

*(களுதாவளை - ஆ.அரசரெத்தினம் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்)*

## கணபதிப்பிள்ளை வன்னியனார்

இவர் நற்பெட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அம்பிலாந்துறையில் திருமணம் செய்துள்ளார். மண்முனைப் பற்றுக்கு வன்னியராக இருந்திருக்கின்றார்.

*(களுதாவளை - ஆ.அரசரெத்தினம் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்)*

## உடையார்கள்

மட்டக்களப்பு வன்னியர்களின் கீழ் உடையார்கள் கடமையாற்றினர். இதற்காக 9 உடையார் பிரிவுகள் இருந்துள்ளன. உடையார்கள் வன்னிமை எனும் அதிகாரத்தின் கீழ் செயற்பட்டனர். அம்பிலாந்துறையில் நி.சி.வ.வீமாப்போடி உடையார், இ.வ.வி.வீரபத்திரப்போடி உடையார், தம்பிமுத்து உடையார், கந்தப்போடி உடையார் போன்றோர் இருந்துள்ளனர். இவர்கள் கிராமத்தவரின் வாழ்வியலில், ஒழுக்கத்தில் முக்கிய பங்கு வகித்தனர். கிராமத்தின் நிருவாக அதிகாரிகள் இவர்கள். சமூக அந்தஸதில் முக்கிய பங்கு வகித்தார்கள். ஆலயங்களில் சிறப்பான இடம் இவர்களுக்குண்டு. அம்பிலாந்துறையில் தம்பிமுத்து உடையார் கிராம நிருவாகத்தினை நடாத்தி வந்துள்ளார்.

## நி.சி.வ.வீமாப்போடி உடையார்

செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயில் நிருவாகத்திலிருந்தவர். கு.வ.கதிராமப்போடி வன்னியனார் இறந்ததன் பிற்பாடு கண்ணகியம்மனுடைய திருப்பணிச்சாமான்கள் யாவும் இவரிடந்தான் ஒப்படைக்கப்பட்டது. நிருவாகத்தினைச் சிறந்த முறையில் நடத்திய பெருமைக்குரியவர். இவர் அறுமக்குட்டிப் போடி, கந்தப்போடி, வன்னியர்களுக்குப் பிறகு சிறந்த செல்வந்தனாக இருந்தவர். கரவாகுப்பற்று, மண்முனைப் பற்றுக்களின் சொந்தக்காரனாக இருந்தவர். மட்டக்களப்பின் வடக்குப் பாகத்தினையும் தெற்குப் பாகத்தினையும் ஒன்றாக தனது ஆளுகைக்குள் வைத்திருந்தவர். ஆங்கிலேயரும் 1100 ஏக்கர் நிலங்களை இவருக்குக் கொள்வனவு செய்துள்ளனர் என்றால் இவருடைய அரச செல்வாக்கு எத்தகையது என்பதோடு, அரசர்கள் ஏன் இவருக்கு இத்தகைய நெற் காணிகளைக் கொடுத்தார்கள். இவ்வளவு காணிகளைக் கொள்வனவு செய்யக்கூடிய பணம் எவ்வாறு பெறப்பட்டது. என்ற வினாக்கள் எழ வாய்ப்பு ஏற்படுகின்றது. வீமாப்போடியார் மூதாதையர் சிறந்த செல்வந்தர்கள் என்பதோடு இவன் முன்னோர் தனது சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் செய்யாமல் இருந்திருக்கலாம். அதனால் இவர்களின் செலவாக்கு ஆங்கிலேயருக்குப் பின்னரும் அதிகரித்திருக்கும். அதுமட்டு மன்றி குஞ்சிலயாப்போடி வன்னியனார், கதிராமப் போடி வன்னியனார் இறப்பின் பின்னர் வீமாப்போடியார்தான் நிலபுலங்களுக்குச் சொந்தக்காரராக இருந்திருக்கின்றார். அதனால்தான் கண்ணகியம்மன் கோயிலிலும் பிரதான பதவியையும் முதல் கையொப்பத்தினையும் இட்டுள்ளார். (1100 ஏக்கர் காணிகள் இவருடைய பெயரிலும் இருந்திருக்கின்றது) வீமாப்போடியின் தகப்பன் சின்னத்தம்பி வன்னிமை இவர் தகப்பன் கதிரமலைப்போடி வன்னிமை இவர் தகப்பன் மதனம் சின்னத்தம்பி வன்னிமை. இவர்கள் யாவரும் அம்பிலாந்துறையில் இருந்தவர்கள்.

*(களுதாவளை - ஆ.அரசரெத்தினம் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்)*

## ஆ.வ.வீ.வீரபத்திரப்போடி

வீமாப்போடியின் சமகாலத்தவரான இவரும் சிறந்த நிருவாகியாவார். செட்டிபாளைய கண்ணகியம்மன் கோயிலின் நிருவாகத்தின் பிரதான பொறுப்பில் இருந்தவர்கள். அம்பிலாந்துறை சார்பாக முதற் கையொப்பம் இட்டவர். மட்டக்களப்புப் பிரதேசத்தின் சிறந்த செல்வந்தரும் மாபெரும் வீரருமாக இருந்தவர். கொக்கட்டிச்சோலைச் சிவன் கோவிலில் 1798ஆம் ஆண்டு காலத்தில் பொது தலைமை வண்ணக்கராக இருந்துள்ளார். அன்றைய காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் தலைமை பதவியை வகித்திருக்கின்றார். 21.12.1897ஆம் ஆண்டு நீதிமன்ற உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. கிழக்குமாகாணத்தில் ஆழ்வாப்போடி - வீரபத்திரப்போடி மற்றும் ஏனைய அம்பிலாந்துறையைச் சேர்ந்த இருவர்களும் பணம் சேகரிப்பதற்கும், வீடு அமைப்பதற்கும், நிலம், பொருட்கள், கடன் மற்றும் வரவுகளைக் கையாள்வதற்கும் உத்தரவு பிறப்பிக்கப் படுகின்றது. இவ்வாறான பின்னணியில் அவதானிக்கும் போது இவர் ஆங்கிலேயர் காலத்தில் எத்தகைய நிலையில் இருந்திருப்பார் என்பது புலனாகின்றது. அக்காலத்தில் சொத்துக்களைக் கையாள்வது என்பது இலகுவான வழடயம் அல்ல. ஆனால் வீரபத்திரப்போடி சொத்துக்களை நினைத்தமாதிரி கையாளக்கூடிய வகையில் நீதிமன்ற உத்தரவினைப் பெற்றிருக் கின்றார் என்றால் இவருடைய அதிகாரப் பின்புலத்தினை இலகுவாக விளங்கிக் கொள்ள முடிகிறதல்லவா?

## கண்ணாயுதப்போடி

இவர் அறுமக்குட்டி, கந்துப்போடி ஆகியோர்களுடைய வழியில் வந்தவர். இவர் நிருவாகப் பொறுப்பினை வகிக்கவில்லை. இவருக்கு நிலபுலங்களும் கொடுக்கப்படவில்லை. இதனால் கோபங்கொண்ட இவர் அம்பிலாந்துறையில் இருந்து பனிச்சயடிமும்மாரியில் குடியேறி இருக்கின்றார். இவருக்கு பனிச்சயடிமும்மாரி, மாவடிமும்மாரி, படுகாடு போன்ற இடங்களில் நிலங்கள் அதிகமாக இருந்தன. அம்பிலாந்துறையில் இருந்து மாட்டு வண்டில் தாந்தாவை நோக்கிச் செல்வதாக இருந்தால் களுவுந்தன்வெளிக்குச் செல்லும்

இடத்தில் வைத்து மாட்டின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் அலங்கார மணிகளை அவிழ்த்து விடவேண்டுமாம். அவிழ்த்து விட்டால்தான் அப்பக்கம் செல்லமுடியும். இது கண்ணாயுதப் போடியின் கட்டளையாம். மீறினால் அப்பக்கம் செல்ல முடியாதாம். சென்றால் சண்டைதான் இடம்பெறுமாம். அதாவது மரத்தில் கட்டி வைத்து அடிப்பாராம். இந்தப் பிரச்சினைக்கு முகம்கொடுக்கக்கூடாது என்பது மட்டுமல்ல எல்லோரும் உறவினர்கள் என்பதனால் அவருடைய கட்டளைப்படியே நடப்பார்களாம். அப்படியான வீரமும் விவேகமும், விடாப்பிடியும் கொண்டவனாக காணப் பட்டிருக்கின்றார் இவனுடைய சொந்தங்கள் கன்னங்குடாவில் இருக்கின்றார்கள். (கா.பூபாலப்பிள்ளை) அண்மையில் கிடைத்த ஆவணம் ஒன்றை ஆராய்ந்து பார்த்தபோது கண்ணாயுப்போடி - மண்முனைப்போடி, கந்தப்போடி உடையார் - பாக்கியசெல்வம் என்று பரம்பரை வரலாறு வருகின்றது.

## கௌரவ பா.அரியநேத்திரன்

தமிழ்த் தேசிய அரசியலில் அம்பிலாந்துறையில் இருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக பாக்கியசெல்வம் அரியநேத்திரன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகின்றார். இவர் 2004ஆம் ஆண்டு சித்திரை மாதம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பே தமிழ்த் தேசிய அரசியல் பணியினை முன்னெடுத்தார். குறிப்பாக 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்ட பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கணேசலிங்கத்தின் வெற்றிக்காகப் பிரசாரங்களை மேற்கொண்டார். இதில் அம்பிலாந்துறையைச் சேர்ந்த இ.அரசரெத்தினம், பா.சிறிஸ்கந்த செயா, க.மகேஸ்வரராசா, வே.யோகேந்திரன், போன்றோர்கள் ஏனைய இளைஞர்களையும் திரட்டி முனைக்காடு இன்பராசா, அரசடித்தீவு தம்பிராசா, கொக்கட்டிச்சோலைத் தவராசா ஆகியோரின் வழி காட்டலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தீவிர பிரசாரங்களை மேற்கொண்டனர்.

1981ஆம் ஆண்டு மாவட்ட அபிவிரத்தித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராக அரசடித்தீவு

வே.தம்பிராசா போட்டியிட்டபோது அவருக்காக தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது கடுக்காமுனையில் வைத்து ஐக்கியதேசியக் கட்சி அதரவாளர்களுக்கும் அரியநேத்திரன் குழுவினருக்கும் ஏற்பட்ட சண்டையில், அரியநேத்திரன் உட்பட, இ.சாந்தலிங்கம், சி.தவராசா, சா. வேலாப்போடி, வே.சிவநேசன், த.கணேசலிங்கம், வே.திருச்செல்வம் ஆகிய ஏழு பேரும் 1981ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் 14 நாட்கள் அடைக்கப்படுகின்றனர்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை உருவாக்கும் பணியில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மேற்கொண்ட பணியில் அரியநேத்திரன் அந்தச் சங்கத்தின் பொருளாளராக இருந்தது மட்டுமன்றி சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க இணைப்புப் பாலமாக செயற்பட்டு அதில் வெற்றியும் கண்டார். 2004 ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு 36646 வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு பலர் பின்வாங்கிய நிலையிலும்கூட தான் துணிந்து போட்டியிட்டு 16504 வாக்ககளைப் பெற்று இரண்டாம் முறையாகவும் வெற்றி பெற்றார். 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தல் அச்சுறுத்தல்கள் அற்ற தேர்தலாக இருந்ததினால் பலர் தேர்தலில் போட்டியிட ஆர்வம் காட்டினர். இத் தேர்தலில் 21304 வாக்குகளைப் பெற்றபோதும் அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவில்லை.

இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் வருடாந்த பாதீட்டு நிதியில் இருந்து கல்வி வளர்ச்சிக்காக அனேகம் பின்தங்கிய பாடசாலைகளுக்கும், ஆலயங்களுக்கும், வீதி அபிவிருத்திக்கும். சமூகக் கட்டமைப்புக்களுக்கும் பாரிய பணிகளைச் செய்துள்ளார். இதில் எந்த மாவட்டத்திலும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறப்பினர்கள் செய்யமுடியாத பணியினை மட் / காக்காச்சிவட்டை அ.த.க பாடசாலையில் மேற்கொண்டனர். பா.அரியநேத்திரன், க.ஜெயானந்தமூர்த்தி, த.கனகசபை, யோசப் பரராசசிங்கம்,

க.தங்கேஸ்வரி ஆகிய ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து தலா ருபா 250,000 நிதி ஒதுக்கி இரண்டு மாடிக் கட்டடத்தினை நிர்மானிக்க உதவினர்.

2004ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்டபோது பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டன . அந்த வேளை அம்பிலாந்துறையில் உள்ள இளைஞர்களைக் கொண்டு பிரேதங்களை அடக்கம் செய்தார். அத்தோடு பல கிராமங்களில் சிரமதானப் பணிகளையும் மேற்கொண்டார். குருக்கள் மட மக்களின் வேண்டு கோள்களுக்கேற்ப தற்போது முருகன் கோயிலுக்கு அருகாமையில் காணப்படும் கலைவாணி மகா வித்தியாலயம் பழைய இடத்தில் அமைந்தால் மீண்டும் தாக்கத்திற்கு உள்ளாகலாம் என்பதனை உணர்ந்து அந்தப் பாடசாலை பிரதான வீதியில் உள்ள முருகன் ஆலயத்திற்கு அருகாமையில்தான் அமைய வேண்டும் என மக்கள் கேட்டக் கொண்டதற்கு ஏற்ப மக்களுடன் ஒத்த கருத்துடையவராக இருந்தது மட்டுமன்றி, அப் பாடசாலையானது தற்போது இருக்கும் இடத்திற்கு வருவதற்கு ஒத்துழைப்பும் வழங்கியிருந்தார்.

2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் படுவான்கரையினை உள்ளடக்கி தனியான கல்வி வலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பாராளுமன்றத்தில் பிரேரனையை முன்வைத்து உரையாற்றியது மட்டுமன்றி கல்வி அமைச்சு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஏனைய மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்து பல தடவை முயற்சி மேற்கொண்டதன் விளைவாக 2008ஆம் ஆண்டு மத்திய அரசு அனுமதி வழங்கியபோதும் கிழக்கு மாகாணசபை முதன் முதலாக ஆரம்பமான காலம் என்பதால் அனுமதி கிழக்குமாகாண சபைக்கு வழங்கப்பட்டது. ஆனால், இந்த கல்வி வலயம் அமைய பா.அரியநேத்திரன் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் உரையாற்றி அதற்குச் செயல்வடிவம் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

2006ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் அசாதாரண சூழ்நிலை நிலவியபோது அதற்காகக் பாராளுமன்றில் குரல்

கொடுத்தது மட்டுமன்றி அதனை சர்வதேசத்துக்கும் கொண்டு சென்றதோடு, அந்த நாடுகளுக்கும் சென்று முறையிட்டவர். அம்பிலாந்துறையில் உள்ள பாட்சாலை 1AB ஆக மாற்றம் பெறுவதற்கும், கனிஷ்ட வித்தியாலயம் ஆரம்பிக்கப்படுவதற்கும் இவருடைய அரசியல் பணி காரணமாக இருந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பல பணிகளைச் செய்துள்ள இவருடைய அரசியல் பணி சிறப்புடையது. இவர் இன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மத்திய குழு உறுப்பினராகவும் ஊடகச் செயலாளராகவும் கட்சிக்காகப் பணி செய்து வருகின்றார்.

# ஆலய வழிபாடு

## ஆகம வழிபாட்டு வணக்க முறை

மட்டக்களப்புப் பிரதேசத்தில் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் சைவசமயமே நிலவியது. இது பூர்வ இலங்கைக்கும் பொருத்த முடையது. மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் சைவசமயம் சிறப்புப் பெற்றிருக்கின்றது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், தாந்தாமலை முருகன் கோவில், பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோவில் எனும் பேர் பெற்ற ஆலயங்களுடன், இப்பிரதேசத்து கிராமங்களில் மாரியம்மன், கண்ணகையம்மன், வாலையம்மன், காளியம்மன், விநாயகர், வைரவர், விஸ்ணு என்று தெய்வங்களுக்கு ஆலயங்கள் உண்டு.

## ஆகம சிற்பசாஸ்திர நெறிக்கமைந்த வழிபாடு

இந்து சமய வாழ்வியலில் வேதம் பொது நூலாகவும், ஆகமம் சிறப்பு நூலாகவும் கொள்ளப்படுகின்றன. ஆகமங்களில் ஆறாம் அத்தியாயம் கிரியைகளை எடுத்தியம்புகின்றன. தினந்தோறும் நிகழும் கிரியைகள் நித்திய கிரியைகள் எனப்படும். குறிப்பிட்ட தினங்க ளில் விசேட காரணம் கொண்டு நிகழ்த்தப்படும் கிரியைகள் நைமித்திய கிரியைகளாகும். கர்ஷணம் முதல் பிரதிஸ்டை வரை நிகழும் கிரியைகளை ஒரு தொகுதியாகவும், அவ்வாறே பிரதிஸ்டை முதல் உற்சவம் ஈறாகவும், உற்சவம் முதல் பிரயாச்சித்தம் முடியச் செய்யப்படும் கிரியைகளை தனித்தனியாகக் கூறும் மரபு ஆகமங்களில் அமைந்துள்ளன.

நித்திய கிரியைகளில் உஷகாலப் பூசை, காலைசந்தி பூசை, உச்சி காலப் பூசை,சாயரட்சை பூசை, இரண்டாங்காலப் பூசை, அர்த்தயாமப் பூசை, என்பனவாகும். நைமித்திய கிரியைகளில் பிரதோசம், நவராத்திரி, கிருத்திகை உட்சவம். ஆர்த்ததிரா பூசை. சிவராத்திர். நவராத்திரி. கந்தசஸ்டி, சித்திரைக்கதை, திருவெம்பாவை, விநாயகர்சஷ்டி, மகாமகம், பிரதிஸ்டை எனப்படும் கும்பாபிஷேகம் போன்ற வற்றைக்கொள்ளமுடியும். காமிய கிரியைகளாக அர்ச்சனை

செய்தல், அபிஷேகம் அலங்காரம். நிவேதம், தீபாராதனை, உச்சவம், திருவிழா போன்றனவும். பூர்வாங்கல் கிரியைகளாக, சங்கற்பம், விக்கினேஸ்வரபூசை, புண்ணியாக வாசனம், பஞ்சகவ்விய பூசை, பஞ்சாமிர்த பூசை, கண்டாபூசை, கலசபூசை, தீபபூசை. சகளிகரனம். சாமான்யார்க்கியம், பூதசுத்தி, போன்றன அடங்கும். இத்தகைய கிரியைகள் அம்பிலாந்துறையில் உள்ள ஆலயங்களில் இடம் பெறுகின்றன.

## ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

கணபதி வழிபாடு தமிழ் நாட்டிலே சிறப்பான இடத்தினைப் பெறுகின்றது. அங்கு இத்தெய்வம் தனக்குமேலே வேறொரு தலைவர் இல்லாத பரம்பொருள்(விநாயகர்), ஞான நெறியினால் அடையப்படும் பரம்பொருள், கணங்களின் தலைவர் (கணபதி) இடையூறுகளைக் களைபவர் (விக்னேஸ்வரர்), முருகனுக்கு முன் பிறந்தவர் (ஸ்கந்த பூர்வஜன்) கொடிய மாயையைத் துண்டிப்பவர் (வக்கிர துண்டர்), யானை முகமுடையவர் (கஜானன்), ஒரு துதிக்கை உடையவர் (ஏகதுண்டர்), அறிவுக்குப் புலனான பிரபஞ்சம் முழுவதையும் உண்டு தம்முள் அடக்குபவர் (லம்போதரர்), எலி வாகனமுடையவர் (ஆகுரதர்) என்று பால பெயர்கள் உண்டு. விநாயகப் பெருமானுக்கு முப்பத்திரண்டு திருவுருவங்கள் உண்டு. அவை,பாலகணபதி, பக்தி கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, துவிஜ கணபதி, கித்தி கணபதி, உச்சிஷ்ட கணபதி, விக்ண கணபதி, ஷிப்ர கணபதி, ஏரம்ப கணபதி, லஸ்மி கணபதி, ம"ா கணபதி, விஜய கணபதி, நிருத்த கணபதி, ஊத்துவ கணபதி, ஏகாட்சர கணபதி, வர கணபதி, திரயாஸ்சர கணபதி, ஸிப்ர கணபதி, ரித்ரா கணபதி, ஏசுதத்த கணபதி, சிருஷ்டி கணபதி, உத்தண்ட கணபதி, ரணமோசன கணபதி, துண்டி கணபதி, துவிமுக கணபதி, மும்முக கணபதி, சிங்க கணபதி, யோக கணபதி,துர்க்கா கணபதி, சங்கட"ர கணபதி என்பனவாகும்.

கணபதிக் கோட்பாடு தோன்றியமை பற்றிப் பலர் இலக்கிய ங்களை ஆதாரமாககக் கொண்டு விளக்கம் தருகின்றனர். இருக்கு வேதத்தில் மருத்துக்கள், ருத்திரன், பிரகஸ்பதி, இந்திரன் என்பவர்களைப் பற்றிய

வருணனைகளில் கணபதியின் மூலத்தைக் காண்பதாகக் கூறுகின்றனர். இதில் த்வாம் கணபதிம் என்றவாறு கணபதி எனும் சொல் காணப்படுகின்றது. தைத்திரிய ஆரண்யத்தில் தந்தின் என்றவாறு தந்தத்தை உடையவர் என்ற பொருளில் வருகின்றது. கல்ப சூத்திரத்திரங்களில் ஒன்றான மானவ கிருஹ்ய சூத்திரத்தில் சாலகடங்கர், சஷ்மாண்ட ராசபுத்திரர், உஸ்மிதர், தேவயஜனர் என்று குறிப்பிடப்படுகின்றார். புராணங்களில் சிவனுக்கும் பார்வதிக்கும் பிறந்த குழந்தையாகவும், சிவனுக்கும் பார்வதிக்கும் மட்டும் மகனாய்ப் பிறந்த குழந்தையாகவும், வராக புராணத்தில் சிவன் நெற்றியில் இருந்து அவர் தோன்றினார் என்றும், கந்தபுராணம், மச்சபுராணம் என்பனவற்றில் பார்வதி நீராடும்போது உபயோகித்த எண்ணெய் முதலான வாசனைத் திரவியங்க ளில் இருந்து அவர் படைக்கப்பட்டார் என்றும், சுப்ரவேதாகமத் தில் சிவனும் பார்வதியும் இரு யானைகளாக உருமாறி யிருந்தபோது விநாயகர் பிறந்தார் என்றும், சில புராணங்க ளின் கருத்துப்படி விநாயகர் ஒரு யானைத் தலையோடு படைக்கப்பட்டதாகவும், இந்தப்புதிய அம்சம் தற்செயலாக நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி யென்றும் கருதப்படுகின்றது.

பிரமவைவர்த்தன புராணத்தில் விநாயகர் கிருஷ்ணனுடைய அவதாரம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. மகாபாரதத்தை வியாசர் சொல்ல விநாயகர் எழுதினார் என்பது வரலாறு. தொல்காப்பியத்தில் இளம்பூரணர் காட்டும் "தன்தோள் நான்கில்" எனும் தொடரும், நச்சினார்கினியார் செய்யுளில் 149 வது செய்யுள் "தடந்தாட்கொத்த" எனும் செய்யுளும் விநாயகரைக் குறிப்பனவாகும் முத்தொள்ளாயிரம் காப்புச் செய்யுளில் "எண்ணிய எண்ணியாங்கு" என்பதும் விநாயகரைக் குறிப்பதாகும். எவ்வாறாயினு் விநாயகர் தோற்றம் பல்வேறு யுகங்களில் இடம்பெற்றிருக்கின்றது.

விநாயகர் ஓங்கார வடிவானவர். முதலில் பிறந்த ஒலி ஓங்காரம் (ஓம்) என்பதாகும். அ,உ,ம் என்ற மூன்று சேர்ந்தது ஓங்காரம். ஆகாரம் - உயிர், உகாரம் - இறை, மகாரம் - மலம் என்று திருமந்திரமம். திருவருட்பயன், அகாரம் - சிவன், உகாரம் - சக்தி, மகாரம் - மலம், நாதம் - மாயை, பிந்து - உயிர் என்ற ஐந்தும் சேர்ந்தது ஓங்காரம்.

விநாயகருக்குரிய யானைமுகம் அறிவையும் ஆற்றலையும் குறிக்கின்றது. துதிக்கை எல்லா மந்திரங்களுக்கும் மூலத்துவமாக விளங்கும் ஓம் எனும் பிரணவத்தின் வடிவைக் குறிக்கின்றது.

கணபதி உயர்ந்த கடவுள். சிவன், பிரமன், விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளைவிட அவர் பெரியவர் என்பதனை கணபதி உபநிடதம் கீழ்வருமாறு விளக்குகின்றது. "ஓம் கணபதியே வணக்கம். நீயே காணும் உண்மை, நீயே படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனுமாய் இருக்கின்றாய், நீயே எல்லாமாயுள்ள பிரம்மம், நீயே என்றுமுள்ள ஆண்மா என்பதில் ஐயமில்லை. உண்னிடமிரு ந்தே பிரபஞ்சம் தோன்றுகின்றது. இப் பிரபஞ்சமெல்லாம் உண்னிடமே சென்று ஒடுங்குகின்றது. நீயே பிரமன், விஷ்ணு, உருத்திரன்" என்றவாறு வருகின்றது.

அம்பிலாந்துறைக் கிராம எழுச்சி உலகநாச்சியின் வருகைக்கு முந்தியதாகும் என்பதனைச் சான்றாதாரங்களின் வளி உணரமுடியும். அவ்வாறாயின் இக்கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயமும் காலத்தால் முற்பட்டதாகும். தமிழர்சால்பில் குடியிருப்புக்களும் கோயில்களும் இணைந்தே வாழ்வியல் ஆரம்பிக்கப்பட்டு வந்தமையினை வரலாற்றடிப் படையில் கண்டுகொள்ள முடிகின்றது.

வணக்க முறைகள் ஆரம்ப காலத்தில், மக்கள் வாழ்வியலில் உயிருள்ளவற்றையும், உயிரற்றவற்றையும் இயற்கையையும் வணங்கி இருக்கின்றனர். வழிபாடுபற்றி அகராதி, கௌரவம், கண்ணியம், வணக்கம், மதிப்பு ஆகிய பொருள்களைத் தருகின்றது. தமிழர்களின் பண்பாட்டில் வழிபாடு இன்றியமையாதது என்பதனை இதிகாசம், புராணம் என்பவற்றோடிணைந்த மக்கள் வாழ்வின் மூலம் கண்டு கொள்கின்றோம்.

இத்தகைய பின்னணியை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும் போது அம்பிலாந்துறை மக்களின் வாழ்வோடு பிணைந்திருக்கின்ற பிள்ளையார் வழிபாட்டின் ஆரம்பம் ஒரு வணக்கத்தின் அடிப்

படையில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னர் இலை குழையால் பந்தர் கட்டி, பின்னர் ஓலையி னால் கோயில் கட்டி, பின்னர் களியினால் சுவருடன் கோயில் அமைக்கப்பட்டு அதன் பிறகுதான் குட்டைக் கல்லினால் கட்டப்பட்டிருக்க வேண்டும். கற்கோயிலின் பரிநாமம் இன்று கருங்கல்லினால் அடித்தளமும், செங்கல்லினால் சுவரும் கொண்ட ஆகம மரபுக்குட்பட்ட கோயிலாக உயர்ந்து நிற்கின்றது. பிள்ளையார் ஆலயத்தின் ஆரம்பம் உலக நாச்சி வருகைக்கு முற்பட்டதென்பதனை வரலாற்று அடிப்படையில் அவதானிக்கமுடிகின்றது. பிள்ளையாரை வணங்கியதற்கு முன்னர் வேறு தெய்வத்தினை வணங்கியிருக்க வேண்டும். ஏனென்றால், பிள்ளையார் வணக்கம் கிறிஸ்து சகாப்தத்திற்குப் பின்னர்தான் எழுச்சி பெறுகின்றது. அப்படியானால் அம்பிலாந்துறையின் வழிபாட்டுமுறை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலுக்கும் முற்பட்டுநிற்கின்றமையினை வரலாறு காட்டும் சான்றூடாக அவதானிக்கமுடிகின்றது. தான்தோன்றீஸ்வர ஆலய லிங்கம் உலகநாச்சி வருகையின் பின்னர்தான் வெளிப்படுகின்றது. இந்த லிங்கத்தினை பூர்வீக கால மக்கள் வணங்கி இருக்கலாம்.

1766ஆம் ஆண்டு அறுமக்குட்டிப்போடி "போடி" அந்தஸ்துப் பெற்றதன் பின்னர் அம்பிலாந்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவர் ஒல்லாந்தர் காலத்தில் இந்த நியமனம் பெற்றுள்ளார். இவருடைய ஆட்சியின் பின்னர் வன்னிமை நிருவாகத்தில் கதிகாமப்போடி வன்னியரும், குஞ்சிலயாப்போடி வன்னியரும், இவர் மகன் கதிராமப்போடி வன்னியனும் இருந்திருக்கின்றனர். இத்தகைய நிருவாக அமைப்பில் 1766ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோயில் எழுப்பப்பட்டிருக்கலாம். ஆனால், 1975ஆம் ஆண்டு காலப்பகுதியில் தற்போது இருக்கும் ஆலயம் கட்டுவதற்கு குட்டக் கல்லாலான இரு அறைகளைக் கொண்ட கோயில் உடைக்கப்பட்டபோது அடித்தளத்தில் போர்த்துக் கேயருடைய குற்றிக் காசுகள் பல கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது இக்கோயில் போர்த்துக்கீசர் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம். இலங்கை வரலாற்றில் போர்த்துக்கீசர் காலம் கி.பி. 1505 தொடக்கம்

1658 வரையுமாகும். எனினும், கற்கோயிலுக்கு முன்னர் ஏற்கனவே கூறியதுபோல் ஏதோ ஒரு வகையில் கோயில் அமைந்திருக்க வேண்டும்.

இன்று தோற்றமளிக்கும் விநாயகர் ஆலயம் ஐந்து மண்டபம் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. ஆறாவது மண்டபத்தினை நமது கிராமத்து புனிதவதி என்பவர் தனது செலவில் அமைத்துள்ளார். இம்முயற்சி ஆலய வரலாற்றில் ஒரு மைல்கல். இவ் ஆலயத்தினுள் அமையப்பெற்றுள்ள நவக்கிரக ஆலயத்தினை வேலாப்போடி குடும்பமும், வைரவர் ஆலயத்தினை செ.கோவிந்தராசா குடும்பமும், நாகதம்பிரான் ஆலயத்தினை க.யோகேந்திரன் தலைமையிலான வேளாமை வெட்டுக் குழுவும் அமைத்துக்கொடத்துள்ளனர்.

## ஆலயத்தில் இடம்பெறும் கிரியைகளும் சடங்குகளும்

ஆகம முறைசார்ந்து இந்து மரபில் உள்ளபடி பூசை தினப் பூசைகளாக இடம்பெற்று வருகின்றன. வெள்ளிக் கிழமைதோறும் மூன்று காலப் பூசைகள் இடம் பெறுகின்றன. அத்தோடு விநாயகர் திருவிழா பங்குனி உத்தரத்தினை தீர்த்த நாளாகக் கொண்டு ஐந்து நாட்கள் இடம்பெற்று வருகின்றது. மூன்று இரவு திருவிழா இடம்பெறும். நான்காவது நாள் பிற்பகல் நேரத்தில் ஊர்வலமும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. திருவிழாவின் போது விநாயகர், சிவபெருமான் சகிதம் உமை, முருகப் பெருமான் ஆகிய தெய்வ எழுந்தருளிகளிகளான எலி, எருது, மயில் வாகனங்களில் வைத்து பக்தர்கள் சுமந்து வலம் வருவார்கள்.

பொதுவாகவே விரதங்கள்யாவும் இவ் ஆலயத்தில் அனுட்டிக்கப்படு கின்றன. கந்தசஷ்டி மற்றும் விநாயகர் சஷ்டி ஆகிய விரதங்கள் பண்டைக் காலம் முதலே அனுஷ்டிக்கப்படுகின்றன. விநாயகர் சஷ்டி விரத காலத்தில் நாவற்கண்ணியார் பிரதி செய்த பிள்ளையார் கதை ஏடு படிக்கப்பட்டு வருகின்றது. ஏடு படிக்கின்ற மரபுவார

முறைமை நாவற்கண்ணியார், தம்பிமுத்து, வேலாப்போடி, சின்னத்தம்பி, மகாலிங்கம் என்பவர்களால் படிக்கப்பட்டு இன்று உமாறமணன் படிக்கின்றார்.

கந்தசஷ்டி விரதம் பண்டைக்காலம் முதற்கொண்டு அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. ஆறு நாட்களைக் கொண்ட இவ் விரதம் விரதங்களில் அரியதும், சிறந்ததும் என்பர். கந்தபுராணம் படிக்கும் கலாசாரம் 1980ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்து முடிந்ததன் பின்னர்தான் எனது அப்பாவினால் படிக்கப்பட்டு வந்தது. யாழ்ப்பாணப் பிராமணர்கள் இவருடன் கொண்ட பக்தி நட்பால் இவரை யாழ்ப்பாணம் கூட்டிச் சென்றனர். அப்பாவும் அங்கிருந்து சமய வழிபாடுகளையும், வழிபாட்டு முறைகளையும் தெளிவாகவே அறிந்தார். நல்லூர் முருகன் ஆலயத்தில் கந்தபுராணம் பாடும் முறையை தெளிவாகப் புரிந்து கொண்டு வந்தார். இத்தகைய பின்னணியில்தான் கந்தபுராணம் பாடும் முறையைத் தெளிவாகப் புரிந்துகொண்டு கந்தபுராணப் புத்தகம் ஒன்றும் வாங்கிக் கொண்டு வந்தார். இத்தகைய பின்னணியில்தான் கந்தபுராணம் பாடும் மரபு ஆரம்பமானது. பின்னர் இவருடன் இணைந்து பொ.கந்தசாமி, பா.அரியநேத்திரன், இக்கட்டுரை ஆசிரியர் என்போர் பாடி வந்தனர். அரியண்ணன் அப்பாவின் இறுதி அடக்க இரங்கல் உரையில் குறிப்பிடும்போது "முருகேசு அண்ணன் எனக்குக் கந்தபுராணம் பாடும் முறையினைச் சொல்லித் தந்தவர்" என்றார். தொடர்ந்து இக்கட்டுரை ஆசிரியர் கந்தபுராண பாராயம் செய்துவருகின்றார். இவருடன் த.நவநிதியும் தற்காலத்தில் பாராயணம் செய்து வருகின்றார்.

கௌரி விரதகாலத்தில் கௌரி விரதப் பாடல்களை தி. ஜெயகலா படித்து வருகின்றார். திருவெம்பாவை சிறப்பாக அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. சிவராத்திரி, நவராத்திரி, சித்திரைப் புத்தாண்டு, தைப்பொங்கல், கார்த்திகை விளக்கீடு, மாசி மகோட்டம், சித்திரைக் கதை, பெருங்கதை ஆகிய பூசைகள் இடம்பெற்று வருகின்றன. சித்திரைக் கதை ஏடு கந்தப்போடி அவர்களால் படிக்கப்பட்டு வந்தது. அவர் மறைவுக்குப் பின் வே.நேசம்மா அவர்களும், தற்போது வ. ஹரிகரன் அவர்களும் படித்துவருகின்றார்.

## உபயகாரர்கள் விபரம்

1. தைப்பொங்கல் பூசை - இந்து இளைஞர் மன்றம்
2. தைப்பூசப் பூசை - க.செல்வராஜன் குடும்பம்
3. மகா சிவராத்திரி பூசை - மூ.முருகேசு குடும்பத்தினர்
4. மாசி மகோட்ட பூசை - க.கணபதி குடும்பம்
5. சித்திரை வருடப் பிறப்புப் பூசை - ஆ.நவரெத்தினம் குடும்பம்
6. கார்த்திகை விளக்கீடு - செ.கோவிந்தராசா குடும்பம்
   த.பேரானந்தம் குடும்பம்
7. சித்திரக் கதைப் பூசை - சி.வேலாப்போடி
8. சங்காபிஷேகப் பூசை - மு.குணரெத்தினம் குடும்பம்
   க.லோகேந்திரன் குடும்பம்

## கௌரி விரத உபயகாரர்கள்

| | | |
|---|---|---|
| 01. | திரு.மா.ஜீவரெத்தினம் | குடும்பம் |
| 02. | திரு.சி.சிவலிங்கம் | குடும்பம் |
| 03. | திருமதி.பா.துஸ்காந்தன் | குடும்பம் |
| 04. | திரு.ம.அருந்தவநாதன் | குடும்பம் |
| 05. | திரு.சி.கருணாநிதி | குடும்பம் |
| 06. | திருமதி.வீ.தங்கேஸ்வரி | குடும்பம் |
| 07. | திரு.க.மாசிலாமணி | குடும்பம் |
| 08. | திரு.மா.யோகராசா | குடும்பம் |
| 09. | திரு.சு.இராசரெத்தினம் | குடும்பம் |
| 10. | திருமதி.வே.சிவசோதி | குடும்பம் |
| 11. | திரு.வ.புவனசிங்கம் | குடும்பம் |
| 12. | திரு.க.குகபதி | குடும்பம் |
| 13. | திரு.இ.தில்லைநாதன் | குடும்பம் |
| 14. | திரு.சி.சீனித்தம்பி | குடும்பம் |
| 15. | திரு.க.லோகேந்திரராஜா | குடும்பம் |
| 16. | திரு.ம.குணசுந்தரம் | குடும்பம் |
| 17. | திரு.கு.ஜேந்திரன் | குடும்பம் |
| 18 | திரு.செ.பவானந்தம் | குடும்பம் |

19. திருமதி.க.லோகம்மா குடும்பம்
20. திருமதி.கு.பாக்கியம் குடும்பம்
21. திரு.த.கந்தப்போடி குடும்பம்
22. திருமதி.ம.சிவமலர் குடும்பம்

## விநாயகர் சஷ்டிவிரத உபயகாரர்கள்

01. திரு.க.சிவப்பிரகாசம் குடும்பம்
02. திருமதி.க.மரகதம் குடும்பம்
03. திருமதி.ந.சீனியம்மா குடும்பம்
04. திருமதி.த.அருணாசலம் குடும்பம்
05. திருமதி.கனகம்மா குடும்பம்
06. திரு.வே.சின்னத்தம்பி குடும்பம்
07. திரு.க.கந்தலிங்கம் குடும்பம்
08. திரு.நா.துரையப்பா குடும்பம்
09. திருமதி.க.சிவமணி குடும்பம்
திரு.மா.துரையப்பா குடும்பம்
10. திரு.க.முத்துக்குட்டி குடும்பம்
11. திரு.த.வாலசிங்கம் குடும்பம்
12. சி.தட்சணாமூர்த்தி குடும்பம்
13. வி.குணசீலன் குடும்பம்
14. திருமதி.அ.சிவநேசம் குடும்பம்
15. திரு.க.யோகேந்திரன் குடும்பம்
16. திரு.சீ.இராசசிங்கம் குடும்பம்
17. திரு.சி.தேவராசா குடும்பம்
18. திரு.க.மகேஸ்வரன் குடும்பம்
19. க.மாசிலாமணி குடும்பம்
20. திருமதி.க.நல்லம்மா குடும்பம்
21. திரு.க.புவனேசசிங்கம் குடும்பம்

## திருவெண்பாவை விரத உபயகாரர்கள்

01. திரு.அ.குபேந்திரராசா குடும்பம்
02. திருமதி.இ.பவளக்கொடி குடும்பம்

| | | |
|---|---|---|
| 03. | திருமதி.ஞா.கணபதிப்பிள்ளை | குடும்பம் |
| 04. | திரு.மகாலிங்கம் | குடும்பம் |
| 05. | திருமதி.அ.பாக்கியராசா | குடும்பம |
| 06. | திரு.சி.சிவலிங்கம் | குடும்பம் |
| 07. | திரு.ச.மதிவதனராசா | குடும்பம் |
| 08. | திரு.நா.கணேசலிங்கம் | குடும்பம் |
| 09. | திருமதி.க.கணபதிப்பிள்ளை | குடும்பம் |
| 10. | திருமதி.அ.செல்லத்தங்கம் | குடும்பம் |

## கந்தசஷ்டி விரத உபயகாரர்கள்

| | | |
|---|---|---|
| 01. | திரு.பொன்னம்பலம் | குடும்பம் |
| | திரு தம்பிராசா | குடும்பம் |
| 02. | திரு.வே.கந்தசாமி | குடும்பம் |
| 03. | திரு.இ.வாலசிங்கம் | குடும்பம் |
| 04. | திரு.இ.செல்லையா | குடும்பம் |
| | திருமதி கருணையம்மா | குடும்பம் |
| 05. | திரு.சீ.இராசசிங்கம் | குடும்பம் |
| 06. | திரு.சி.குணசேகரராசா | குடும்பம் |

## நவராத்திரி விரத உபயகாரர்கள்

| | | |
|---|---|---|
| 01. | திரு.மா.ரஜனிகாந் | குடும்பம் |
| 02. | திரு.ந.மயில்வாகனம் | குடும்பம் |
| 03. | திரு.ச.முத்தையா | குடும்பம் |
| 04. | திரு.சி.இராசசிங்கம் | குடும்பம் |
| 05. | திரு.க.மனோகரராசா | குடும்பம் |
| | வே.கணபதிப்பிள்ளை | |
| 06. | திரு.மா.சிதம்பரப்பிள்ளை | குடும்பம் |
| 07. | திரு.மா.கிருபரெத்தினம் | குடும்பம் |
| 08. | திரு.செ.நகுலேஸ்வரன் | குடும்பம் |
| 09. | திரு.அ.யோகேந்திரன் | குடும்பம் |
| 10. | திரு.ந.பவானந்தம் | குடும்பம் |
| | சி.பரமநாதன், க.நல்லதம்பி | |

## பூரணைப்பூசை உபயகாரர்கள்

| | | |
|---|---|---|
| 01. | திரு.மு.குணரெத்தினம் | குடும்பம் |
| 02. | திரு.க.மதிவதனராசா | குடும்பம் |
| 03. | திரு.க.கேசகரிப்போடி | குடும்பம் |
| 04. | திரு.செ.விநாயகமூர்த்தி | குடும்பம் |
| 05. | திரு.இ.ரவீந்திரன் | குடும்பம் |
| 06. | திரு.க.வெற்றிவேல் | குடும்பம் |
| 07. | திரு.அ.ஜெயக்குமார் | குடும்பம் |
| 08. | திரு.க.சோமசுந்தரம் | குடும்பம் |
| 09. | திரு.வீ.மகேசன் | குடும்பம் |
| 10. | திரு.க.மனோகரராசா | குடும்பம் |
| 11. | திரு.மு.குணேசலிங்கம் | குடும்பம் |
| 12. | திரு.ச.குணராசா | குடும்பம் |

## புதிய வருடப்பிறப்பு பூசை

| | | |
|---|---|---|
| 1. | திரு. சி.சிவனேசராசா | குடும்பம் |

## நெற்காணிகள்

அம்பலாந்துறை பெரியகுடியிருப்பு எனும் இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு பல ஏக்கர் நெற்காணிகள் உண்டு. குண்டுமுறிச்சான் காணி 12 ஏக்கராகும். இது பெரும்போகம், சிறுபோகம் செய்யக்கூடியது. இன்றைய காலத்தில் இந்த அளவுள்ள காணி இல்லை. ஆலயபரிபாலன சபையினரால் குடிமனைக்காக வளவுகள் விற்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னர் வளவுக்கா பூமியின் பாகங்கள் சுவிகரிக்கப் பட்டிருக்கின்றன. விளாங்குளத்தில் 18 ஏக்கர் நெற் காணி நாவிதர்களுக்கு அறுமக்குட்டிப்போடியால் வழங்கப்பட்டன. அக்காணியை கோயிலில் வைத்து ஏலத்தில் கூறிக் கொடுத்து அவற்றால் வரும் பணத்தினை நாவிதர்களுக்கு கொடுப்பது வழக்கம். தற்பொழுது 7- 1/2 ஏக்கர் காணி அளவில்தான் இருக்கின்றது. மற்றயவை பலரால் சுவிகரிக்கப்பட்டுள்ளன.

கா.சின்னக்குட்டி அவர்கள் கட்டக்காட்டுப் பகுதியில் அண்ணளவாக 3 ஏக்கர் ஒரு போகச் செய்கைக்குரிய நெற்காணியையும், நடுக்குடியிருப்பு பகுதியில் உள்ள பெறுமதி வாய்ந்த வீடு வளவினையும் ஆலயத்துக்கு நன்கொடையாக வழங்கினார். இந்த தனி நபர்களுடைய முயற்சி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டியவை. குண்டுமுறிச்சான் காணியில் உள்ள வளவினை விற்று பனிச்சையடிமும்மாரிப் பகுதியில் 8 ஏக்கர் காணி ஆலய பரிபாலன சபையின் பெயரால் வாங்கப்பட்டுள்ளன. இந்தக் காணியிலும் இரண்டு போகம் மேற்கொள்ளலாம். வெல்லங்குளப் பகுதியில் ஒரு ஏக்கர் இருபோகச் செய்கைக்குரிய பூமியுண்டு. இதனை தம்பிமுத்து பூசாரியார் நன்கொடையாக கோயிலுக்கு வழங்கினார்.

ஆலயத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டு. குண்டுமுறிசசான் காணி, விழாங்குழக் காணி இவை அம்ாபிலாந்துறை வரலாற்றின் முக்கிய ஆதாரங்கள் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். மதில் அழிந்து, அழித்தது போல் காணிகளையும் விற்பது பொருத்தமான தல்ல."வரலாறு தெரியாதவன் வரலாற் றால் தோற்கடிக்கப் படுவான்"என்பதற்கு நாமும் பொருத்தமுடைய வர்களாக இருக்கக் கூடாது. காணிகளை விற்பதனால் சமூகத்தில் சிறந்த மாற்றத்தினை ஏற்படுத்த முடியுமாக இருந்தால் அது பற்றிப் பரிசீலித்து ஒருமித்த கருத்துக்குப் பிற்பாடு முடிவுக்கு வரலாம்.

### அன்னதானம்

காலாகாலமாக ஆடிச்சடங்குடன் அன்னதானம் கொடுக்கும் நிகழ்வும் வைபவ ரீதியாக இடம்பெறுகின்றது.ஆரம்பத்தில் இருந்து இறுதி நாள் வரையும் பகல், இரவு வேளைகளில் இடம்பெறும். க. சுப்பிரமணியம் குடும்பம், வா.குருலேசிங்கம் குடும்பம், வைரவர் பாகை, பிள்ளையார் பாகை, அம்மன் பாகை, பேச்சியம்மன் பாகையென்று அன்னதான முறை இடம்பெற்று வருகின்றது.

## ஒலி பெருக்கி

எமது கிராமத்தில் ஆரம்பத்தில் ஒலி பெருக்கி வாங்குவதற்கு உத்தியோகத்தர் உட்பட பலரிடம் இருந்து பணம் அறவிடப் பட்டுள்ளது. ஜெர்மனியில் இருந்த எமது கிராமத்தைச் சேர்ந்த சி. சந்திரசேகரம் என்பவரால் ஒலி பெருக்கி உட்பட, அதனை இயக்கத் தேவையான பொருட்களும் சிறிய மின்சார இயந்திரமும் வழங்கப்பட்டிருக்கின்றது. ஒலி பெருக்கி வாங்குவதற்கு முன்னர் கல்முனை, அரசடித்தீவு போன்ற இடங்களில் இருந்து ஒலி, ஒளி வாடகை முறையில் அமர்த்தப்பட்டது. தொடர்ந்து பிறேமகுமார், மதிவதனராசா என்று மிக நீண்ட காலம் தொடக்கம் இன்று வரையும் அவர்கள் செயற்பாடு நீண்டு வருகின்றது. 2010ஆம் ஆண்டு அச்சேவையை ஆலயபரிபாலன சபை மேற்கொள்ள ஆரம்பித் துள்ளது.

## திருப்பணிச்சபை

எசெ.பவானந்தன் அவர்களால் கட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே திருப்பணிச் சபை ஓலைப்பந்தலால் போடப்பட்டது. ஆலயங்களில் தற்காலிக திருப்பணிச்சபை அமைக்கப்படுவது பொது வழக்கம். திருப்பணிச்சபைப் பணியை இந்து இளைஞர் மன்றமே பொறுப்பேற்று நடத்துவது வழக்கம். அம்மனின் பாதார விந்தத்தில் இருந்து எடுக்கப்படுகின்ற கமுகம்பாளைக்காக பலர் பணம் செலுத்தி தங்களுடைய நேர்த்திக்யைக் கழிப்பது வழக்கமாகும். இறுதியாக இந்தப் பாளை ஏலத்தில் கூறிக் கொடுக்கப்படுவது வழக்கமாகும். ஏலத்திற்காகப் பலர் போட்டிபோடுவார்கள். ஏலத்தில் எடுக்கப்பட்ட பின்னர் ஆலய பரிபாலன சபையினரின் மரியாதையுடன் கொட்டு மேளத்துடன் அம்மனுக்குரிய பாளையை ஏலத்தில் பெற்றவரின் வீட்டுக்கு கொண்டு செல்லப்படும்.

## கிணறு

பிள்ளையார் ஆலயத்தினுள் இரண்டு தீர்த்தக் கிணறுகள் உண்டு. பழைய காலத்தில் கட்டப்பட்ட கிணறு ஒன்று உண்டு.

தற்பொழுது ஒருகிணறு பயன்பாட்டில் உள்ளது. அதனை புனிதவதி குடும்பம் கட்டியது. முத்துமாரியம் மனுக்குரிய தீர்த்தக் கிணற்றினைக் மா.பேரானந்தம் குடும்பத்தினரும், மற்றுமொரு கிணற்றை ஆலயபரிபாலன சபைத் தலைவர் சி.தவராசா குடும்பத்தினரும், சின்னத்தம்பி குடும்பம் தனது மகன் கலாநிதியின் ஞாபகார்த்தமாகவும் கிணறுகளை அமைத்துள்ளனர். பிள்ளையார் ஆலயத்தினுள் காணப்படும் நீர் தேக்கும் பகுதியை (வக்) பொ. கந்தசாமி குடும்பம் கட்டியது.

## மதில்

பிள்ளையார் கோயிலைச் சுற்றிக் காணப்படும் மதிலை காலஞ்சென்ற சிவனேசன் அவர்களுக்கு லிகிதர் வேலை கிடைத் ததற்காக அவருடைய தாயரால் கட்டப்பட்டது. மாரியம்மன் கோயிலைச் சுற்றிக் காணப்படும் மதில் பொதுமக்களது பணத்திலிருந்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## குருக்கள் வரன்முறை

| | |
|---|---|
| *1.* வேலாப்போடி | *(அம்பிலாந்துறை)* |
| *2.* ஞானவதனம் | *(அம்பிலாந்துறை)* |
| *3.* ஞானசேகரம் | *(அம்பிலாந்துறை)* |
| *4.* கந்தசாமி | *(அம்பிலாந்துறை)* |
| *5.* சுந்தரேஸ்வரர் (பிராமணர்) | *(யாழ்ப்பாணப்பிராமணர்)* |
| *6.* சுந்தரேஸ்வரர் மருமகன் | *(பெயர் கிடைக்கவில்லை)* |
| *7.* சிவாஜி | *(சுந்தரேஸ்வரர் மகன்)* |
| *8.* சுரேஸ்குமார் | *(சுந்தரேஸ்வரர் மகன்)* |
| *9.* குருக்கள்பிள்ளை | *(அம்பிலாந்துறை)* |
| *10.* திருச்சிற்றம்பலமசர்மா | *(அம்பிலாந்துறை)* |
| *11.* கந்தசாமிசர்மா | *(பழுகாமம்)* |
| *12.* சச்சிதானந்தசிவம் | *(கந்தசாமி மகன்)* |
| *13.* சீதாராமசர்மா | *(கந்தசாமி மகன்)* |
| *14.* வினாயகமூர்த்தி | *(பழுகாமம்)* |
| *15.* நாதன்சர்மா | *(முனைக்காடு)* |

16. ந.முரளிநாதசர்மா (பழுகாமம்)
17. கோகுலநாதசர்மா (முதலை)
18. தேவனாதசர்மா (பழுகாமம்)
19. விஜயநாதசர்மா (பழுகாமம்)
20. ஆனந்தசங்கரசர்மா (பழுகாமம்)
21. விஜயநாதசர்மா (பழுகாமம்)
22. விநாயகமூர்த்திக் குருக்கள் (பழுகாமம்)

(இதற்கு முன்னுள்ள தகவல்கள் அறியக்கிடைக்கவில்லை)

இதில் வினாயகமூர்த்தி குருக்களையா அவர்களது பணியைப் பற்றிக் குறிப்பிடுவது சிறந்தது என நினைக்கின்றேன். குருக்கள்மார் இன்று பூசை முடித்தால் போதுமென்ற நினைப்பிலும் கௌரவத் தினைப்பெற வேண்டும் என்ற எண்ணத்துடனும் இருக்கின்றனர். இவர் அவற்றையும் கடந்து பல சமூக சேவை களைச் செய்துள்ளார். திருநெறி மன்றம் எனும் அமைப்பினைத் தொடங்கி அதற்குத் தலைவராக இருந்து மாணவர்களைக் கொண்டு ஆலயத்தில் கூட்டுப் பிராத்தனையினைச் செய்துவந்தார். பின்னர் சிறுதொகைப் பணத்தினை ஊரில் அறவிட்டு ஆலயத்திற்காக சேவையுடன் பல பொருட்களையும் வாங்கினார். நாயன்மார்களுக்கான குருபூசை தினத் தினை தொடர்ந்து நடத்தி வந்தார். மாணவர் களைக் கொண்டு பிள்ளையார் ஆலயமிருந்து துறையடி வீதிக்குச் செல்லும் வீதியில் பனைமரங்களை வீதியின் மருங்கில் நட்டார். இன்று அவை வளர்ந்து பெரிதாகிக் காட்சி தருகி ன்றது. தெப்பைகளை நட்டார். பூமரங்களை நட்டார், மாரி யம்மன் ஆலய மண்டப அமைப்பிற்காக ரூபா 15,000 கொடுத்தார். அது இன்று வளர்ந்து அழகாகக் காட்சியளிக்கி ன்றது. கோவிலில் காணப்படும் வில்வமரத்தினை நட்டார், வில்வ மரம் ஒரு கோயிலுக்கு இன்றியமையாதது. இவ்வாறாகப் பல சேவைகளை செய்தார். அவரைப் பிள்ளையார் நன்றாகவே இங்கிருந்து செல்லும்வரை வைத் திருந்தார். மக்கள் மனங்களில் இடம்பிடித்த மாபெரும் மனிதன் அவர். அவர் இங்கிருந்து செல்வதனை யாருமே விரும்பவில்லை. சுயவிருப்பிலே சென்றார். குருக்கள்மாருக்கு இவர் ஒரு உதாரணபுருஷர்.

## ஆகமம் சாரா வழிபாட்டு முறை

### மாரியம்மன் சடங்கு

கிராமியத் தெய்வவழிபாட்டில் சிறப்பிடம் பெறுவது சடங்கு. கிராமியத் தெய்வங்களுக்கு நிகழ்த்தப்படுகின்ற பூசை நடைமுறைகள் யாவும் சடங்கு என்ற பெயராலே இன்று வரையும் அழைக்கப் படுகின்றன. அம்பிலாந்துறை மாரியம்மன் சடங்கு அறுமக்குட்டிப்போடியின் வருகையின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். 1766ஆம் ஆண்டு போடி நியமனம் பெற்ற இவருக்கு மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் வீடு ஒன்று இருந்திருக்கின்றது. அந்த வீடு கட்டும் காலப் பகுதியில் கொத்துக்குளத்து மாரியம்மன் கோயிலில் மாரியம்மன் சடங்கு முதன்முதலில் இடம் பெற்றிருக்கின்றது. இச் சடங்கினைச் பார்க்கச் சென்ற இவரால் அம்பிலாந்துறையிலும் அம்மன் சடங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

அறுமக்குட்டிப்போடி கொத்துக்குளத்து மாரியம்மன் சடங்கினைக் கண்ணுற்று, அதன் சிறப்பம்சங்களை அம்பிலாநதுறையில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டபோது, கோயில் நிருவாகத்தினர், அம்மன் சடங்கு விதிமுறை கூறும் ஏட்டையும், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, கமுகம் பாளை, பத்திரம், சீனிச்சுருள் ஒன்றுமாக வட்டாவில் வைத்து அறுமக்குட்டிப் போடியிடம் கொடுக்க அவரும் அதனை குதிரை வண்டியில் எடுத்துக்கொண்டு அம்பிலாந்துறை சேர்ந்ததாக மரபு வழிக்கதைகள் கூறுகின்றன. மரபுவழிக் கதையாக இருந்தாலும் அது உண்மைச் சம்பவமாகவும் உள்ளது. காரணம் பூசை செய்தவர்களில் தலைமுறையினைக் கொண்டு அவதானிக்கும்போது, அது தெளிவாகின்றது.

### காலக்கணிப்பு

காலக்கணிப்பில் மாற்றம் இருக்கின்றது. பூசாரியார் சின்னத்தம்பி பிறந்தது 1926ஆம் ஆண்டாகும். அவருடைய மாமன் மாணிக்கப் போடி வாத்தியார் 85 வயதில் இறந்துள்ளார். மாணிக்கப்போடி

வாத்தியாருடைய அப்பா நாவற்கண்ணியார். 86 வயதில் இறந்து இருக்கின்றார். இவர்கள் மூவரும் மரபுவழிப் பூசாரியார்கள். இவர்களுடன் அவர்களுடைய உறவுகள் பலர் பூசை செய்துள்ளனர். 1766இல் போடி நியமனம் பெற்ற அறுமக்குட்டி அவர்களதான் அம்பிலாந்துறையில் மாரியம்மன் சடங்கினை ஆரம்பித்து இருக்கின்றார். இவர் எப்போது ஆரம்பித்தார் என்பதில்தான் காலப் பிரச்சினை உண்டு. அம்பிலாந்துறை மாரியம்மன் சடங்கு 1804ஆம் ஆண்டு ஆரம்பமானது எனும் தகவல் ஒன்று உள்ளது. இத்தகவல் வரலாறு தரும் கூற்றுப்படி இன்னும் பின்னுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவே தெரிகின்றது. ஆனால், அறுமக்குட்டிப்போடி இராசாதி இராசசிங்கனுக்குத்திறை செலுத்தி இருக்கின்றார். இலங்கை வரலாற்றுப்படி இவனுடைய காலம் கி.பி.1782ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 1798ஆம் ஆண்டு வரையாகும். கி.பி 1798ஆம் ஆண்டு இவர் மரணமாகி இருக்கின்றான். நிலைமைப் போடிகளிடமிருந்து திறை பெறுவதற்காக ஒல்லாந்தரால் அனுப்பப்பட்ட இரண்டு கணக்கப்பிள்ளைகளையும் பத்து வருடத்தால் இருவரையும் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக் கின்றனர். இவர்கள் இருவரும் 1776ஆம் ஆண்டு கொல்லப் பட்டிருக்க வேண்டும். கொலைகாரர்களைப் பிடிக்க ஒல்லாந்தர் முயன்றனர். அதில் தோல்வியடையவே ஒல்லாந்தர் கண்டிய அரசன் இராசாதி இராசனிடம் மட்டக்களப்பை கலி பிறந்து 4896ஆம் வருடம் ஒப்படைத்துச் சென்றிருக்கின்றானர்.

அறுமக்குட்டிப்போடி பதவியேற்று ஆட்சி செலுத்தி வரும் காலத்தில் இருந்து கி.பி.1803ஆம் ஆண்டுவரையும் போடி நியமனம் எதுவும் இடம்பெறவில்லை. இக்காலத்தில் ஆங்கிலேயருடன் போர் செய்த போடிகள் பின்வாங்கி மட்டக்களப்பினை விட்டு வெளியேறி கண்டியை நோக்கிச் சென்றுள்ளனர். இக்காலத்தில்தான் அடங்காப்பற்று வன்னிமை பண்டார வன்னியன் தலைமையில் அன்னியருக்கு எதிராக கி.பி 1803ஆம் ஆண்டு வரையும் நிலைத்திருந்தது சமர் செய்தது. வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்ப்படைகள் ஆங்கிலேயரால் சமகாலத்தில் தோற்கடிக்கப்படுகி ன்றன. கி.பி.1794இல் மட்டக்களப்புக்குப் பொறுப்பாக இருந்த ஒல்லாந்த பொறுப்பதிகாரி ஜேக்கப் வேர்ணாட் என்பவர்

போடிகளின் ஒத்துழைப்பினைப் பெறுவதில் கடினத் தன்மையினை உணர்ந்து கொண்டமை, கி.பி.1776ஆம் போடிகளின் கணக்கைப் பரிசோதிப்பதற்காக இருவர் நியமனம் பெற்றமை, அவர்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்டமை, கி.பி.1985-1794ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலவிதான நியனமம், 25.06.1785ஆம் ஒல்லாந்த முக்குகர் பிரச்சினையின் உட்சகட்டம், 1803ஆம் ஆங்கிலேயருக்கும் மட்டக்களப்பு போடிமார்களுக்கும் இடையே இடம் பெற்ற போராட்டம், இதில் புளியந்தீவுப் பகுதி மட்டும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமை, இவ்வருடமே மூன்று மாதங்களின் பின்னர் மட்டக்களப்பை விட்டு போடிமார் கண்டிக்குச் செல்லல் என்று நெருக்கிடையான பல சம்பவங்களைப் போடிமார் சந்தித்தனர்.

இந்தப் பின்னணியில் அவதானிக்கும் போது கி.பி.1798ஆம் ஆண்டுக்குப் பிறகு அறுமக்குட்டிப்போடியால் பிரச்சினைக்கு மத்தியில் ஒரு விடயத்தினைச் செய்வதற்கு முனையும் சந்தர்ப்பம் மிகக் குறைவாகவே இருந்திருக்கும். இவர் பதவியேற்ற கி.பி.1766ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி.1776 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் பொருட்களும், பணமும் இவரிடம் மிதமக இருந்துள்ளதனால்தான் கணக்கப்பிள்ளையை இவர் கொண்டிருக்கலாம் எனும் முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இவரிடம் ஏற்கனவே பல திட்டங்கள் இருந்துள்ளமையினால் கி.பி.1766ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவர் அம்பிலாந்துறையில் கல்வி நிறுவனத்தையும், மாரியம்மன் சடங்கினையும் ஆரம்பித்திருக்கலாம் எனும் முடிவுக்கு வரவேண்டியுள்ளது. ஏனெனில், இவருடைய முன்னோர்கள் மட்டக்களப்பினை ஆண்டு கொண்டிருந்த காலமாகையால் அறுமக்குட்டிப்போடிக்கு பல விடயங்களை நிறைவேற்றுவதில் தடங்கல்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

அத்தோடு பூசாரியான நாவற்கண்ணியார் 28 வயதில் பூசை செய்திருக்கின்றமையினைக் கொண்டு பார்க்கும்போதும் காலக்கணிப்பும் மேற்கூறிய காலப் பகுதியையே காட்டி நிற்கின்றது. இவருடைய வயதின் அடிப்படையில் நோக்கும் போது கி.பி 1766ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாரியம்மன் சடங்கு ஆரம்பிக்கப்

பட்டிருக்க வாய்ப்பேற்படுகின்றது. மாரியம்மன சடங்கு அக்காலப் பகுதியில் இருந்து இன்று வரையும் சிறப்பாக அம்பிலாந்துறையில் இடம்பெற்று வருகின்றது. மாரியம்மன் ஆலயத் தோற்ற காலம் 1766ஆம் ஆண்டு என்பது ஆய்வினூடாக தெளிவுபடுத்தப் படுகின்றது.

கொத்துக்குளத்து மாரியம்மன் சடஙகு கி.பி.1765ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அம்பிலாந்துறையில் வாய்வழியாக உள்ள தகவல்கள் இவற்றினை உறுதி செய்கின்றன. கொத்துக்குளத்து மாரியம்மன் கோயிலில் சரியான தகவல்களைப் பெறமுடியாதுள்ளது. அவர்கள் கூறுகின்றார்கள் பண்டைய காலமிருந்து இந்த ஆலயத்தில் சடங்கு செய்து வருகின்றார்கள். எங்களுக்கு சரியாக ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டினைக் கூறமுடியாது. உண்மையும் அதுதான். அம்பிலாந்துறை இராசதானியாக விளங்கிய காலத்தில் இந்த ஆலயமும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அம்பிலாந்துறையில் இருந்த பூசாரி பரம்பரையில் கோயில் சடங்கு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு பற்றிய விடயங்கள் கதையாக மருவி தலைமுறை தலைமுறையாக வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதே.

## மாரியம்மன் தோற்றம்

மாரியம்மன் தோற்றம் பற்றி வெவ்வேறான கதைகள் இலக்கியங்களில் வெளிவருகின்றன. புராணக்கதை மரபில் ஏழ்கடல்களுக்கும் அப்பாலுள்ள மணிநாகப் புற்றிலுள்ள நாகம் மூன்று முட்டைகளை இட்டதென்றும், பார்வதியின் அருளால் இந்த முட்டைகளினின்றும் பிரம்மராக்கு சக்தி, சின்ன முத்தார், பெரியமுத்தார் என்ற மூன்று பெண்கள் தோன்றினர் எனவும், மூவரும் தவம் செய்து சக்திமுனி யின் அருளால் குழந்தைகளைப் பெற்றனர் என்றும், அவர்கள் அனைவரும் கைலாயமலையில் சிவபிரானை வணங்கி நாட்டிலே கொடுமைகளை அழிப்பதற்கு மூவரும் கொடும் வியாதிகளை வேண்டினர் எனவும், அவர்களது வேண்டுகோளுக்கு ஏற்ப குணமாக்கவியலாத பல நோய்களைப் பிரமராக்க சக்திக்கும் சின்னம்மைக்குச் சின்னமுத்தார்க்கும்,

பெரியம்மை பெரியமுத்தார்க்கும் சிவபிரான் வரங்களாக அளித்தார் என்றும் கூறப்படுகின்றது. இத்தகைய கொடிய நோய்களை ஏற்படுத்தும் சக்திபெற்ற மூன்று சகோதரிகளும் தமிழ் நாட்டில் குடியேறி கொடியவர்களை தாம்பெற்ற வரங்களால் தண்டித்து வருவதாகக் மரபு வழிக் கதைகள் கூறுகின்றன.

கண்ணகி வழிபாடு எனும் நூலில் ம.பொ.சி. குறிப்பிடும்போது பாண்டி நாட்டில் மாரிமழை குன்றும் போதெல்லாம் கண்ணகியின் சாபத்திற்குப் பயந்து கண்ணகிக்கு வேள்வி செய்வது பாண்டிய நாட்டு வழக்கம். இரண்டாம் பாண்டியப் பேரரசை அடுத்த காலத்தில் கண்ணகிக்குச் செய்யப்பட்ட இத்தகைய வேள்வியால் மாரிபொழியவே மாரியைத் தந்தகண்ணகி, மாரியம்மன் என அழைக்கப்படலானாள் என்று கூறப்படுகின்றது.

## சடங்கு இடம்பெறும் முறை

கிராமியத் தெய்வ வணக்க முறையைச் சிறப்பாக சடங்கு என்றே அழைப்பர். தியாலங்களில் சடங்கு கணிக்கப்படும். ஒருநாள் இரண்டு தியாலங்களாகும். 5, 7, 9, 11,13 தியாலங்கள் எனும் அடிப்படையில் சடங்கு நடாத்தப்படும். பூரணையை இறுதி நாளாகக் கொண்டு ஆனி, ஆவணி மாதங்களில் சடங்கு இடம்பெறுகின்றது. இதுவே பொது வழக்கமும், ஆனால் நாவற்குடா, கிழக்கு மாரியம்மன் சடங்கு ஆனி, ஆடி மாதம் தவிர்ந்த ஆவணி மாதத்திலே நிகழ்த்தப்படுகின்றது. பொதுவாகச் சடங்குகள் கீழ்வரும் அமைப்பில் அம்பிலாந்துறையில் இடம்பெறுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 01. | கும்பம் வைத்தல் சடங்கு | - | முதலாம் நாள் |
| 02. | அலங்காரச் சடங்கு | - | இரண்டாம் நாள் |
| 03. | ஊர் சுற்றும் சடங்கு | - | மூன்றாம் நாள் |
| 04. | தோரணச் சடங்கு | - | நான்காம் நாள் |
| 05. | தவநிலைச் சடங்கு | - | ஐந்தாம் நாள் |
| 06. | தீச் சடங்கு | - | ஆறாம் நாள் |
| 07. | கும்பம் பிரித்தல் சடங்கு | - | ஏழாம் நாள் |
| 08. | எட்டாம் சடங்கு | - | கும்பம் சொரிந்து ஏழு நாள் கழிந்து வரும் அடுத்த நாள். |

## பந்தல் / பந்தர் போடுதல்

சடங்கின் முதல் நிகழ்வாக பந்தல் போடும் நிகழ்வு இடம்பெறும். விண்ணாங்குக் கம்பு இழைத்த தென்னை பச்சோலை கொண்டு பந்தல்கள் அமையும். மாரியம்மனுக்கு வடக்கு முகம் நோக்கியும், பேச்சியம்மனுக்கு தெற்கு முகம் நோக்கியும், வைரவர்க்கு மேற்கு முகம் நோக்கியும், பந்தல்கள் அமையும். பந்தல் அமைப்பு முறை பக்தியைத் தூண்டுகின்ற அமைப்பில் அமைவதும் குறிப்பிடத்தக்கது. பந்தற்கால் நாட்டும் போது பந்தர் கால் விநாயகப் பெருமானின் அருளுடன் அம்மனை வேண்டி நடப்படும். மாரியம்மன், வைரவர் பந்தல்கள் மேடை அமைப்பில் அமைய, பேச்சியம்மன் பந்தல் நிலமட்டத்துடன் அமைவது பொது வழக்கமாகும்.

இன்று மாரியம்மனுக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அக் கோயில் மூன்று மண்டபங்களைக் கொண்டு அமைந்துள்ளது. மூலவராக சிவமுத்து மாரியம்மன் விக்கிரகத்தில் அமர்ந்துள்ளாள். ஆகமமுறையில் தினப்பூசை இடம் பெறுகின்றது. மாரியம்மன் ஆலயம் பொதுமக்களால் கட்டப்பட பேச்சியம்மன் ஆலயத்தினை அ.குவேந்திரராசா அவர்களும், வைரவர் ஆலயத்தினை க. செல்வ ராசா அவர்களும் அமைத்துள்ளனர்.

## கும்பம் வைத்தல் சடங்கு

முதலில் விநாயகருக்கு அபிஷேகம் செய்யப்படும். பின்னர் அம்மனுக்கு அபிஷேகம் இடம்பெறும். அபிஷேகத் தீர்த்தத்தைக் கும்பச்செம்பில் இடுவர். அத்தோடு அச்சரம் கீறிய தகடும் இடப்படும். இது 51 சக்தியையும் அடக்கி, யந்திரம் பண்ணி செய்யப் படுவது. பின்னர் கும்பச்செம்பில் பத்திலும், கமுகம்பாளை, வெள்ளிப்பிரம்பு, தாமரைப்பூ என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டு அம்மனுக்குரிய முகக்களை அமர்த்தப்பட்டு கும்பம் வைக்கப்படும். மாரியம்மன் பந்தலில் வாலத்தெய்வம், புவனத்தெய்வம், திரிபுரத்தெய்வம் எனும் மூன்று பெண் தெய்வங்களுக்கும் கும்பம் வைக்கப்படும். வாலத் தெய்வத்துக்குரிய கும்பம் நடுவில் அமைய,

வலதுபக்கம் புவனத் தெய்வத்துக்குரிய கும்பமும், இடப்பக்கம் திரி புரத் தெய்வத்துக்குரிய கும்பமும் அமையும். அத்துடன். அம்மனுக்கு, பரமசிவனுக்கு, துர்க்கைக்கு, விறுமனுக்கு, காட்டேரிக்கு, வீரபத்திரனுக்கு, மருளனுக்கு, சுந்தரிக்கு, காளிக்கு, ஈஸ்வரிக்கு என்று மடை அமையும்.

கும்பம் வைப்பதற்கு முதலில் நெல் பரவப்படும். அதன்மேல் சீலை விரித்து அரிசி பரப்பப்படும். பின்னர் நெல்லுக்கு கீழும் யந்திரத் தகடு வைக்கப்படும். அரிசிக்கு மேல் யந்திரம் கீறி மடை வைப்பர். முதலில் விநாயகருக்கு மடை அமையும்."ஓம் ஆம் கணபதியே நம" என்று மடை வைக் கப்படும். அம்மனுக்கு "ஓம் சந்திராயா நம சக்தி சிவாய நம ஏறு ஏறு" என்று மடை வைக்கப்படும். பின்னர் வைக்கப்பட்ட மடைகளில் அம்மனுக்குரிய கும்பம் ஏற்றப்படும். இந்த நிகழ்வு மனதைத்தொட்ட உண்மை நிகழ்வாகும். அப்போது கும்பத்துக்கு மாரியம்மன் பிரணவம் கொடுத்து ஏற்றப்படும். "ஓம் றிங்க வாடி வா லெட்சப்பிறவி வாடி வாடி சூலகபாலம் துலங்கிய பத்தினி வாடி வாடி நெற்றியில் இட்ட செந்தூரப் பொட்டும்மாய் இலமங்காய் வாடியம்மா வா" அந்த மூன்று கும்பங்களும் விச்திதிரமாக மந்திர சக்தியால் ஏறும் காட்சியே காட்சி.

பேச்சியம்மனுக்கு, கம்பந்தடியில் கழுமரத்தடியில் என்று கும்பமும் வைக்கப்படும். கழுமரத்தடியில் சுப்பிரம ணியருக்கான கும்பமே அமையும். ஒவ்வொரு கும்பமும் வைக்கும் போதும் மந்திரம் சொல்லப்படும். வாலைக்கு கும்பம் வைக்கும் போது "ஓம் ஆம் அம் அவ்வவும் மவ்வும் ஐயும் கிலியும் சௌவும் சௌவும் கிலியும், ஐயும் ஆங்கார தாண்டவ அரனோடு சேர்ந்த சிவாகி வா வா வாக்கு வாகினி வால பரமேஸ்வரி வருக வருகவே சுவாகா" என்று உச்சரிக்கப்படும்.

கும்பாபிஷேகம் செய்யப்பட்ட பின்னர் மாரியம்மனுக்கு வழமையான கும்பம் மூன்றாவது மண்டபத்தில் வைக்கப் படுகின்றன. பந்தல் போட்ட காலத்தில் இருந்த மக்கள் உணர்வு இன்று அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை என்பர்.

## சடங்கு முறை

ஒவ்வொரு நாள் பூசையின் முன்பும் மடை பிரிக்கப்பட்டு புதிய மடை வைக்கப்படும். மடைப் பொருட்களாக வாழைப்பழம், பலாப்பழம், பாக்கு, வெற்றிலை, கமுகம்பாளை, தாமரைப்பூ, பத்திரம் என்பன அடங்கும். பூசையினை பிரதம பூசாரியார் நிகழ்த்துவார். அம்மனுக்குரிய மந்திரம் தமிழில் இடம்பெறும். பூசையின் போது தெய்வம் ஆடப்படும். தெய்வத்தின் பேரால் உருக்கொண்டவர் கால், கைகளில் சிலம்பணிந்து பத்திரக் கட்டைக் கையில் ஏந்திய வண்ணம் ஆடுவர். இதனைப் பேயாட்டம் என்பர். அப்போது தெய்வத்திற்கு ஆடுபவர்களைக் கட்டுவதும், அதனை வெட்டுவதும் இடம்பெறும். இங்கு அனுமன்வெட்டு குறிப்பிடப் படுகின்றது.

"ஓம் அனுமான் சாட்ட அனுமான் ஆதித்தனைக் கனியேன்று பாய்ந்தாப்போலே எனது சத்துரு கண்ணில் பாங்வே சுவாகா, ஓம் சீதை தூதா அங் அங் சுவாகா, ஓம் ஆதி விக்கிர வீர சூர அங் அங் அரகர ஆதி வீரபைத்திராய எழும்பு" எழும்பு" என்பதே அதுவாகும். பூசை முடிவில் பின்னர் சாட்டை கொடுத்து உருத்தணிக்கப்படும். மாரியம்மனுக்கு, காத்தனுக்கு, வைரவருக்கு, நாககன்னிக்கு, பால வதனனுக்கு என்று தெய்வங்கள் ஆடப்படுகின்றன.

தெய்வம் ஆடுபர்கள் கட்டுச் சொல்வார்கள். இது தெய்வ வாக்காக ஏற்றுக்கொள்ளப்படும். இதில் அம்மன் அடியவர்கள் மீது கொண்டுள்ள சந்தோஷம், பொதுமக்களுடைய குறை, நிறைகள், வருத்தம் தீர்க்கும் முறை என்பன வெளிப்படும். பூசையின்போது "முத்துக்கு முத்து முறையோ முறையோ மோகனச் செல்வி முறையோ முறையோ....? என்று உடுக்கடித்து பாடல் இடம்பெறும். அத்தோடு "அன்னை பரி பூரணி ......." என்ற மாரியம்மன் திவ்வியகரணி பாடலும் பாடப்படும்.

அம்மன் பூசை முடிய வணக்கம் இடம்பெறும். இதனைப் பத்ததியில் "ஓம் ஆயி அனந்த வல்லி அமுக்த காதலி ஆதி பராசக்திபாராகி மகி மாயி மாயா சொரூபி பிடிமகி மாதங்கிவாராகி மகி மாயி மாயா சொரூபி பிடிமகி மாதங்கிசடங்கி நாரணி

நாரணத் தருளி நளின பரிமளநாதஓங்கார சுத்த பத்தினி யோக யோகாசளத்தி புவனேஸ்வரிசவுந்தரி ஜயும் நமஸ்தே நம" எனக் காண முடியும்.

பூசை முடிந்ததும் நோய்வாய்ப் பட்டவர்களுக்கு திருநீறு போடுதல், நூல் கட்டுதல், அச்சரம் போடுதல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல் என்பன இடம்பெறும். இந்த நிகழ்வு ஒவ்வொரு தியாலப் பூசை முடிந்ததும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. அலங்கார் சடங்கு இரண்டாம் நாள் நடைபெறும் இச் சடங்கில் இரண்டு தியாலப் பூசை இடமட்பெறும். பூசையில் இடம்பெறுகின்ற அனைத்து நிகழ்வுகளும் நிகழும். அன்றைய தினமே தெய்வம் ஆடுபவர்கள் முதன் முதலாக ஆடுவார்கள். இதனைச் சிறப்பாக "தலைச்சுற்றுதல்" என்பர். இப்பூசையைத் தொடர்ந்து ஒவ்வொரு பூசையிலும் தெய்வம் ஆடப்படுவதுடன் அன்றிலிருந்தே தெய்வங்களை மந்திரத்தால் கட்டுவதும் ஆரம்பமாகும்.

## ஊர் சுற்றுதல் சடங்கு

அடியவர்களின் நலன் வேண்டி ஊர் சுற்றும் சடங்கு இடம் பெறும். ஊர் சுற்றுவதற்கென்று விசேடமாக கும்பம் ஒன்று வைக்கப்படும். அதனை "ஊர் சுற்றுக் கும்பம்" எனச் சிறப்பாக அழைப்பர். தெய்வம் ஆடுபவர்கள் ஒவ்வொருவரும் மக்களுக்கு அவர்களது படலைக்குச் சென்று ஆசிவழங்குவர். தெய்வங்களை மந்திரத்தால் கட்டுதலும், வெட்டுதலும் சிறப்பாக இடம்பெறும். இந்த நிகழ்வு மக்களை நேரடியாக தெய்வ பக்தியுடன் இணைக்கின்ற நிகழ்வாகும். உதாரணமாக தெய்வங்களைக் கட்டும் மந்திரம் ஒன்றைக் குறிப்பிட முடியும்.

ஓம் அங்க உங்க உங்க வங்க நிங்க குருபரா
சுத்திகையில் விலங்கு என் கையில் இருக்குது
திரிபுரம் எரிப்பூட்டு ஆதி மூலமே
ஈசப்பரியானை பூட்டு.

இந்த மந்திரத்தைச் சொல்லியதும் தெய்வம் ஆடும் ஒருவர் (பெயர் குறிப்பிட்டுச் சொல்லுதல்) சுருண்டு விழுந்து விடுவார். அதற்காக பூசாரியார் பல்வேறு தந்திரோபயங்களைக் கையாண்டு அந்த மந்திரத்தை வெட்டி தெய்வத்தை ஆடச் செய்வார். உதாரணமாக ஒரு வெட்டு மந்திரத்தையும் குறிப்பிட முடியும். இது விநாயகர் வெட்டாகும்.

ஓம் உட்சாடி எழுந்து இருந்தோ வங் சத்தனாத
கணபதி விக்கிறச்சி நெம்புள்ளிப் பரமேஸ்வரி
நம விறயேயாம் உக்குறோணி வாசத்தாலோ
குறனாதே எம்புள்ளே அவ வாந்து நாரயணதேமெறிகும்

என்பதாகும். அப்போது அத்தெய்வத்துக்கு ஆடுபவர் எழுந்து ஆடி வருவார். ஊர்வலம் முடிந்ததும் பூசையுடன் அன்றைய நிகழ்வு நிறைவுறும்.

ஊர்சுற்றும் போது மண்டபத்தடியில் ஒரு பூசை இடம் பெறும் .அந்தப் பூசையினை மண்முனைப் போடியார் குடும்பம் செய்து வருகின்றது. அது ஒரு சடங்கினை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வாகும். அதே போல் காஞ்சிரயடியில் ஒரு பூசை இம் பெறும். அந்தப் பூசையினை சுப்பிரமணியம் குடும்பம் செய்து வருகின்றது. இதுவும் ஒரு சடங்கினை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வாகும். இந்த இடங்களில் தெய்வம் ஆடுபவர்களால் பக்தர்களுக்கு வாக்குச் சொல்லப்படும். இந்த வாக்கினை தெய்வவாக்காகவே ஏற்றுக் கொள்வர்.

## தோரணச் சடங்கு

மட்டக்களப்பில் தோரணச் சடங்கு என்றால் சிறப்புப் பெறுவது அம்பிலாந்துறைதான். இதனைச் சொல்லி அறியவேண்டிய தில்லை. மரபில் இருந்து மாறாது தோரணத்தினைச் சிறப்பாக அமைக்கின்ற கைங்கரியத்தில் சிறப்பிடம் பெறுவது இவ்வூர். ஆரம்பத்தில் மகரதோரணமாக இவை கட்டப்பட்டிருக்கலாம். தற்போது அத்தகைய தோற்றம் இல்லை அது அலங்கார

தோரணமாகவே கட்டப்படுகின்றது. 15 வருடங்களுக்கு முன்பாக பூவரசங் குச்சிகளால் அலங்கரிக்கப்பட்ட நிலையில் தோரணம் அமைந்திருந்தது. தற்போது அலங்கராப் பொருட்களைக்கொண்டு தோரணம் காட்சியளிப்பதனைக் காணமுடிகின்றது. காட்டில் சென்று விண்ணாங்குக் கம்புவெட்டி அதனைக் கொண்டே தோரணம் அமைக்கப்படுகின்றது. தோரணச் சடங்கு என்றால் அதற்கு நிகரேயில்லை என்றளவுக்குப் பிரபலமாக அமையப் பெறுகின்றது.

அம்மன் பாகைத் தோரணத்தினை - பெரிய குடியிருப்புப் பாகை மக்களாலும், பிள்ளையார் பாகைத் தோரணத்தினை - நடுக்குடியிருப்புப் பாகை மக்களாலும், பேச்சியம்மன் பாகைத் தோரணத்தினை வாழைச்சேனைப் பாகை மக்களாலும், வைரவர் பாகைத் தோரணத்தினை நாகமுனைப் பாகை மக்களாலும் சமர்ப்பிக்கப்படுகின்றது. மாரியம்மனுக்கு விநாயகருக்கு, வைரவருக்கு, பேச்சியம் மனுக்கு என்று தோரணங்கள் கட்டப்படும். பத்ததியில் தோரணம் பற்றி குறிப்பு இல்லை. எனினும், அது மரபாகவே பேணப்பட்டு வருகின்ற நிகழ்வாக அமைகின்றது. தோரணத்தைச் சமர்ப்பிக்கா விட்ட மால் தெய்வத்தின் தீராத நோய் உண்டாகும் என்ற பயம் மக்கள் மத்தியில் வேரூண்றியுள்ளது. இதுவே அம்மன் அடையாளங்களாக தோரணங்களைச் சமர்ப்பிப்பதற்கான காரணமாகும்.

தோரணச் சடங்கு நாளன்று பூசை சிறப்பாகவே இடம் பெறும். இன்று தெய்வம் ஆடுபவர்களை மந்திரத்தால் கட்டுதல், அதனைப் பூசாரியார்கள் வெட்டுதல் எனும் நிகழ்வு ஆக்ரோசமாகவே இடம் பெறும். இன்று இரவு மந்திரப் பராக்கிரமத்தினை பார்க்க முடியும். இன்று இரவுதான் தீக்கட்டைக்குப் போவதற்கு பக்தர்களை தெய்வம் ஆடுபவர்கள் தெரிவார்கள். பக்தர்களும் அதனை தெய்வத்தின் அழைப்பாக ஏற்று தீக்கட்டை எடுப்பதற்காக வீரக்கட்டை இருக்கும் காட்டினை நோக்கிச் செல்வார்கள். அன்று மாட்டு வண்டியில் சென்று தீக்கட்டை ஏற்றி வந்தார்கள் இன்றோ உழவு இயந்திரத்தில் சென்று ஏற்றி வருகின்றார்கள்.

இவ்வாறான தோரணச் சடங்கு படுவான்கரை பிரதேசத்தில் முக்கியமும், சிறப்பும் வாய்ந்த அடையாளப் பொருளக சமர்ப் பிக்கப்படுகின்றது. அம்பிலாந்துறை தோரணத்தை அழகாகச் செய்வதில் பேர்போன கிராமாகும். இந்த உண்மையை இன்றுவரையும் அந்தக் கிராமச் சடங்குகளில் பார்க்கமுடியும். பாகை அடிப்படையில் பலர் பல விதங்களில் தோரணங்களை அமைத்து வருவது வழக்கமாகும். அந்த வகையிலே மாரியம்மன் பாகையிலுள்ள கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் (சந்திரன்) அவர்கள் 1990 ஆம் ஆண்டு "டைமன்" வடிவில் தோரணம் அமைத்தார். இந்தத் தோரணத்தின் அழகினை அன்று எல்லா மக்களுமே வாயாரப் புகழ்ந்து நின்றார்கள். இந்தத் தோரண அமைப்பினை என்றும் மறக்கவே மனம் வராது. அத்தகைய கைவினையில் தேர்ச்சியுடைய வர்களும் எங்கள் கிராமத்தில் இருக்கின்றனர். இவர் இன்றும் இருப்பாரானால் பல வடிவங்களில் தோரணங்களை அமைத்திருப்பார் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அம்பிலாந்துறையில் ஆடிச் சடங்கு முடிந்ததும் பழுகாமத்தில் துரோபதையம்மன் சடங்கு தொடங்குவது வழக்கமாகும். துரோபதையம்மன் கோயிலுக்கு இங்கு மாரியம்மனுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தோரணத்தினையே பழுகாம கிராம மக்கள் எடுத்துச் செல்வர். இது மரபாகவே இருந்து வந்தது. இதற்கான காரணமும் உண்டு "துரோபதையம்மன் கோவில் பூசாரியாருடைய கனவில் தோன்றி துரோபதையம்மன் கூறினாராம் எனக்கு அம்பிலாந்துறையிலுள்ள அக்காவின் (மாரியம்மன்) தோரணத்தினைக் கொண்டு வாருங்கள் என்று. அக்கால முதற்கொண்டு தோரணம் சமர்ப்பிக்கும் வழக்கமிருந்தது. அண்மைக்காலமாக பழுகர்மத்து மக்கள் அந்த மரபினைக் கைவிட்டுள்ளனர். இத்தகைய சிறப்பும் இத் தோரணத்துக்குண்டு.

பண்டைக்காலந் தொடக்கம் தேரணத்தினை அடையாள சின்னமாக சமர்ப்பித்து வருவது வழக்கமாகும். கொக்கட்டிச்சோலை சிவன் கோயில், பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோயில் என்பனவற்றில் பிரதான கோயில்களுக்குத் தோரணம் கட்டும் உரிமம் அம்பிலாந்துறை மக்களுக்கே சொந்தமானது. இவ்வாறான

பின்னணியில் அவதானிக்கும்போதும் பண்டைக்காலத்தில் இருந்து தோரணத்தினை முறையாகவும் சிறப்பாகவும் கட்டுவதில் இவ்வூரார் மக்கள் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தனர். உகந்தை மலையில் அமைந்துள்ள முருகன் ஆலயத்திற்கு தோரணம் கட்டிச் சமர்ப்பிக்கும் உரிமம் அம்பிலாந்துறை மக்களுக்கே உரியது. வருடாவருடம் எமது கிராமத்தில் இருந்து செல்கின்றவர்களே தோரணத்தினைக் கட்டி சமர்ப்பித்து வருவது வழக்கமாகும். காலா காலமாக இந்தப் பணி இன்றுவரையும் அம்பிலாந்துறை மக்களால் தொடர்கின்றது.

## தவநிலை / கம்பம் ஏறுதல் சடங்கு

கம்பச் சடங்கை சிறப்பாக தவநிலைச் சடங்கு என்று அழைப்பர். அன்றிரவு கம்பத்டியில் கம்பத்தினை வளைத்து பத்துக் கும்பம் வைக்கப்படும். கம்பத்துக்கு மேலே ஒரு கும்பம் வைக்கப்படும். கம்பச் சடங்கு உமை அறுபது அடி உயரம் உடைய கம்பத்தில் இருந்து தவம் செய்து பேறு பெற்றமையினைக் குறிக்கின்றது. கம்பத்தின் மேலே மாரியம்மனுக்கு உருக்கொண்டு தெய்வம் ஆடுபவர் ஏறிப் பூசை செய்வார். அங்கிருந்து வாழைப்பழங்களை பக்தர்களை நோக்கி எறிவார். தவநிலையில் ஏறும்போது தவநிலைப் பாடல் பாடப்படும். பூசை முடிந்ததும் பிள்ளை விற்று வாங்கும் நிகழ்வு இடம்பெறும். அன்றிரவுதான் காத்தானை கழுமரத்தில் ஏற்றும் நிகழ்வும் கழுமரத்தடியில் இடம்பெறும். இந்தக் கும்பம் சுப்பிரமணியருக்கு வைக்கப்படுவதாகும். இந்தப் பத்ததிப்படி தவநிலையில் ஏறியபின்னே தீப் பாய்வார்கள். வெல்லாவெளி அம்மன் சடங்கில் தீப்பாய்ந்தே கம்பத்தில் ஏறுதல் இடம்பெறுவது மரபு மாற்றாகும். அன்றிரவு கற்பூரச்சட்டி எடுத்து பெண்கள் தங்கள் நேர்த்தியை நிறைவு செய்வர். சிலர் தீக்கட்டை எழுந்தருளுகின்ற இடத்தினுள் கற்பூரச்சட்டி எடுப்பர்.

காத்தானுக்கு தெய்வம் ஏறி ஆடுபவர் களுமரத்தில் ஏறுவார். காத்தானைக் களுமரத்தில் கட்டியமையினை இந் நிகழ்வு ஞாபகப்படுத்தும். கம்பத்தடிப் பூசையினை இ. சின்னத்தம்பி குடும்பமும், களுமரத்தடிச் சடங்கினை திருமதி.மா.பேரின்பம்

குடும்பமும் செய்து வருகின்றனர். கம்பப் பாடலை நீண்ட காலகாக மகாலிங்கம் அவர்களும் அவரின் மறைவுக்குப் பின்னர் இப் புத்தக ஆசிரியர் அப்பணியினை மேற் கொண்டு வருகின்றார்.

## தீச் சடங்கு

தீச்சடங்கு அம்பிலாந்துறையிலே பண்டுதொட்டு சிறப்பிடம் பெறுகின்றது. இந்தச் சடங்குபற்றிக் குறிப்பிடும் போது, பண்டைக்காலத்தில் சடங்கு இடம்பெற்றுக்கொண்டிருந்தது. அப்போது தெய்வம் ஆடும் நிகழ்வும் இருந்தது. தெய்வம் ஆடிக்கொண்டிருந்தபோது அத்தெய்வத்தினைப் பார்த்து சிலர் இது பொய்த் தெய்வம் என்றும் கிண்டல் செய்திருக்கின்றார்கள். இவர்கள் கிண்டல் செய்ததனை தெய்வ சக்கியால் உணர்ந்த தெய்வம் ஆடியவர் அங்கு காணப்பட்ட தீயினை கையாள் அள்ளிக்கொண்டு கிண்டல் செய்த நபரிடம் கொடுத்தபோது அவர் அதனை வாங்காமல் தெய்வத்திடம் மன்னிப்புக் கேட்டாராம். அந்தக் காலந் தொடக்கம் இன்றுவரையும் தீச்சடங்கு இடம்பெற்று வருகின்றது. தீக்கட்டை காட்டில் இருந்து எடுத்து வந்ததன் பின்னர், அது முத்துலிங்கப் பிள்ளையார் கோயிலில் வைக்கப்படும். அந்த தீக்கட்டையினை எடுத்து வருவதற்காக அன்றுப் பகல் பூசை இடம்பெறும். தெய்வம் ஆடுபவர்களுடன் பத்தர்களும் சென்று பத்திப் பரவசத்துடன் எடுத்து வருவர். இன்று அம்பிலாந்துறை வடக்கில் இருந்து விநாயகப்பானை எடுத்த வரப்படும். இந்தப் பானையைக் கொண்டு வருவபர் மாசிலாமணியாவார். இந்த விநாயகப் பானை எழுந்தருளல் பண்ணும் நிகழ்வு பண்டைக் காலந் தொட்டு அவர்களுடைய பரம்பரையினரால் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றது. இப்பானையை வடக்குப் பகுதியில் இருந்து வாகையடி சந்திக்குக் கொண்டுவர தெய்வம் ஆடுபவர்கள் அந்த இடத்தில் வைத்து, அப்பானையினை ஆசிர்வதித்து தீக்கட்டை எழுந்தருள் வதற்கு எடுத்துச் செல்வர். இதற்காக முத்துலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பூசை இடம் பெறும். தீக்கட்டை எழுந்தருளப் பண்ணிய பின்னர் (தீக்கட்டையை ஆலயத்திற்கு எடுத்து வரல்) தீக்குழி வெட்டப்படும். மாரியம்மன் பந்தருக்கு நேராக தீக்குழி அமையும். அதில் மடை வைக்கப்பட்டு மந்திரத்தால் அக்கினி அழைக்கப்படும்.

இதனை பிரதம பூசாரியாரே மேற்கொள்வார். பின்னர் கட்டைகளை அடுக்கியபிறகு மாரியம்மன் தெய்வத்திற்கு ஆடுபவரால் தீ மூட்டப்படும். விடியற் பொழுதில் தீ மிதிப்பு இடம்பெறும். அன்றிரவு காளிக்கும் பூசை காளி மேடையில் இடம்பெறும். காளிக்கு சாராயம், கள்ளு உட்பட மடைப் பொருட்கள் அனைத்தும் வைக்கப் படும். தீச் சடங்கு ஆரம்பித்த காலந் தொடக்கம் இந்தப் பூசையினைச் செய்து வருபவர்கள் திருமதி.பு.சுந்தரநாயகம் குடும்பமாகும்.

தீச்சடங்கு இரவு விநாயகப்பானை வைத்து பொங்கல் இடம் பெறும். இப்பானை பொங்காமல்கூட மந்திரம் சொல்லிக் கட்டுவார்கள். விநாயகப் பானையுடன் வேறு பானைகளும் வைத்துப் பொங்கப்படும். அன்றிரவு அம்மனின் பன்னீராயிரம் இங்கிலியப் படைகளுக்குப் பரப்பு மடை வைக்கப் படுவது டன், "பூரணகும்பமும்" வைக்கப்படும். இக் கும்பத்தைச் சுற்றி ஒன்பது எண் அடிப்படையில் பாக்கு, வெற்றிலை, கரும்பு, வாழைப்பழம், பலாப்பழத்துண்டு, அன்னாசித்துண்டு என்பன வைக்கப்படும். இக்கும்பம் பூரணையில் தீர்த்தம் ஆடுவதை நினைவுபடுத் துகின்றது. பூரண கும்பத்துக்கு நேரே பெரிய மூன்று மடைகள் வைக்கப்படும். இந்தக் கும்பத்தைப் பயன்படுத்தி, மாரித் தெய்வம் உருவேறிய அடியார்க்கு பூசை கொடுக்கலாம்.
*(மாந்திரி புகழ்பெற்ற சின்னத்தம்பிப் பூசாரியார் - அம்பிலாந்துறை)*

தீப்பாய்ந்து முடிந்ததும் பேச்சியம்மன் பந்தரில் பள்ளையம் இடம்பெறும். இங்கு கள், சாராயம், தயிர், சோறு உட்பட மடைப் பொருட்கள் அனைத்தும் வைக்கப்படும். இதன் நோக்கம், தெரியாமற் செய்த பிழைகளைப் பொறுத்தருளச் செய்வதாகும். பள்ளையம் முடிந்தவுடன் "கும்பஆனை" இடம்பெறும். தெய்வம் ஆடுபவர்கள்"அடுத்த வருடம் சந்தோஷமாக வருவோம்" என்றும், பூசாரியாருக்குக் கட்டுச் சொல்வார்கள். அவர் பூரண கும்பத்தில் இருக்கும் அலகை எடுத்து இவர்களது நாக்கில் சிறிதாகக் குத்தி உருவைத் தணிப்பார்". அதன் பிறகு பழைய நிலையை அடைவார்கள். பள்ளையம் கொடுக்கும் போது,பள்ளயப் பேச்சுக்குரிய பாடல் பாடப்படும்.

அன்று பகல் சக்கரை அமுது இடம்பெறும். இது நவ கன்னிகைகளை நினைவுகூரும் நிகழ்வாகும். அவர்கள் ஆகாசக்கன்னி, அடுக்குக்கன்னி, செப்புக்கன்னி, செந்தாமரைக் கன்னி, வீசக்கன்னி போன்றவர்கள். இதற்காக ஒன்பது பெண் பிள்ளைகளை (பருவமடையாதவர்கள்) வைத்துப் பூசை இடம்பெறும். பூசை முடிந்ததும் கும்பம் பிரிக்கப்படும். இக்கும்பத்தை மடையில் இருந்து கிளப்பும் போது,

ஓம் சிறியும் மிறியும் கமலா சனத்தி புவள வசிகரிவால சரஸ்வதி அரகரி தாண்டவ சிதம்பர ஈஸ்வரிசிறியு மிறியும் கொண்டு சீக்கிரம் எழும்பம்மாஎழும்பு.

என்று எழுப்பி தீர்த்தம் ஆடக் கொண்டு செல்வர். அங்கு கும்பம் சொரியப்படும். கங்கையில் வடக்கு முகமாக நின்றே சொரிவர். நைவேந்தியம் பண்ணி "சிவசிவா கங்கா பரமேஸ் வரியே குளிரம்மா குளிர்" என்று மந்திரம் சொல்லி இடம்பெறும். தீர்த்தம் ஆடி முடிந்ததும் தீக்குளிக்கு பால் ஊற்றப்படும். தீப் பாய்ந்தவர்களே பால் ஊற்றுவது வழக்கம். பெண்கள் மடிப்பிச்சை எடுத்து வருதலும், அந்த நெல்லை அவர்களே குற்றி அம்மனுக்குப் பொங்கக் கொடுப்பதும், பரப்பு மடைக்கு றொட்டி சுடுவதும், ஆண்கள் அரிசி மா இடிப்பதும் அன்றுதான் இடம்பெறும். அத்தோடு அம்மனுக்குரிய அடையாளப் பொருட்களான மடைப்பெட்டி, முகக்களை, திரைச்சீலை போன்ற பொருட்களும் நேர்த்திக்கடன் வைத்தவர்களால் சமர்ப்பிக்கப்படும். பாற்காவடி முதல் பறவைக் காவடி ஈறாக காவடி எடுப்பதும் பெண்கள் அலகு போடுவதும், அங்கப்பிரதட்சணம் செய்வதும் இடம்பெறும்.

### எட்டாம் சடங்கு

கும்பம் பிரித்து எட்டாம் நாள் இடம்பெறும் சடங்கு இது. மாரியம்மன் பந்தலில் வால கும்பம் மட்டும் வைக்கப்படும். வைரவர் பந்தலில் வைரவருக்குரிய பந்தலும், கம்பம், கழுமரம், காளிக்கு என்று வட்டா மடையும் வைத்துப் பூசை இடம்பெறும். இன்றும் பொங்கல் செய்து, றொட்டி சுட்டு, மடை வைக்கப்படும்.

அம்மனின் இங்கிலியப்படை பன்னீராயிரம் பேருக்கும் அன்று பலிகொடுத்து அனுப்புவார்கள்.

(மட் டக்களப்பு மாந்திரியப் புகழ் வே.சின்னத்தம்பி பூசாரி - அம்பிலாந்துறை)

அம்மனின் பந்தலிலும் வைரவர் பந்தலிலும் வாழி பாடப்படும். பேச்சியம்மன் பந்தலில் எந்த நிகழ்வும் இடம்பெறாது. அது பள்ளையம் கொடுத்த இறுதிநாள் நிகழ்ந்தவுடன் முடிவடைந்து விடும். மாரியம்மன் வாழிப்பாடல் பூசை முடிவில் பாடப்படும். இதனைத் தொடர்ந்து வைரவர் பந்தலிலும் வாழி பாடப்பட்டு பூசை நிறைவுபெறும்.

மாரியம்மன் வழிபாட்டுச் சடங்கு சமூகத்தினிடையே ஒழுகலாறு, விழுமியங்களை ஏற்படுத்தி சமூகக் கட்டுக்கோப்பை வளர்த்துச் செல்கின்றது. கூட்டுப்பொறுப்பு, புனிதத்தன்மை என்பன பின்பற்றப்படுகின்றன. சின்னம்மாள் (சின்னம்மை), பெரியம்மாள் (பெரியம்மை) எனும் வெட்பு நோய்கள் வரும்போது அது மாரியம்மனுடைய குறைபாட்டால் வருகின்றது என்ற எண்ணத்துடன் அதற்கு மருந்தாக வேப்பம் பத்திரமும், மாரியம்மன் திவ்விய கரணியில் வருகின்ற மாரியம்மன் குளிர்த்திப் பாடலும் நாட்டு வைத்திய மருந்தும் அமைகின்றது. இந்த வைத்திய முறை சமூக மக்களிடைய இன்று வரை பின்பற்றப் படுகின்றது. மாரியம்மன் சடங்கு முடிந்ததும் வீடுகளில் சர்க்கரை அமுது கொடுக்கும் வழக்கமும் கிராம மக்களிடையே வழக்கில் இருந்து வருகிறது. சர்க்கரை அமுதுப் பொங்கலுடன் கெட்ட, துஷ்ட தேவதைகள் அனுகாமல் வைரவருக்கு அன்றிரவு பொங்கல் இடம் பெறுகின்றது. இதனை வைரவருக்குச் செய்தல் என்பர். மாரியம்மன், காத்தவராயன் வரலாற்றைக் கரகாட்டமாக ஆடுகின்றனர். மாரியம்மன் வழிபாடு, வழிபாட்டு மரபு கடந்து சமூக மக்களிடையே அசையா நம்பிக்கையை உண்டுபண்ணியுள்ளது. மலையகப் பிரதேசத்திற்கு பிரதேச வழிபாட்டு முறையில் சிறிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

## வட்டாக் கொடுத்தல்

மாரியம்மன் சடங்கு தொடங்கினால் மடைவைப்பது வழக்கம். மடை பிரித்ததும் பிரித்த மடைப்பொருட்களைப் பக்தர்களுக்குப் பகிர்ந்துகொடுப்பர். அப்போது சில இடங்களுக்கு மடையில் வைத்த வட்டாவினைக் கொடுத்து கௌரவிப்பர். வட்டாவில் மடைப் பொருட்கள் வைக்கப்படும். வட்டாக்கொடுப்பதில் முன்னுரிமை பேணப்படும். அவை கீழ் வருமாறு அமையும்.

1. கிட்டங்கி - அறுமக்குட்டிப்போடியார் இருந்த இடம்
2. வன்னிமை - குஞ்சிலயாப்போடியார் இருந்த இடம்
3. பூசாரி - நாவற்கணிணியார் இருந்த இடம்
4. விதானை - க. கு நடராசாவும் முன்னோரும் இருந்த இடம்
5. பாகை - ஒவ்வொரு பாகைக்குமானது
6. சேவை - மாரியம்மனுக்குச் சேவை செய்வோர்

## ஏனைய ஆகமம்சாரா வழிபாடுகள்

### சாமிக்குச் செய்தல்

மாரியம்மன் சடங்கு முடிந்ததும் வீட்டில் மாரியம்மனுக்கு சடங்கு செய்வார்கள். இதனைச் சக்கரையமுது கொடுத்தல் என்பர். மாரியம்மன் முகக்களையினை வைத்து பொங்கல் செய்வார்கள். வெளியில் கொண்டு பூசை செய்வதற்கென்று ஆலயத்தில் மாரியம்மன் முகக்களைகள் உண்டு. பகலில் இடம்பெறும் நிகழ்வில் 10 வயதுக்கு உட்பட்ட சாமத்தியப்படாத மூன்று பிள்ளைகள் அம்மனின் பூசை நிகழ்வில் சாறிகட்டி வணக்கத்திற்கு வைக்கப்படுவார்கள். அவர்களுக்கு சாறியின் மடியில் (முந்தானை) பொங்கல் வைத்துக் கொடுக்கப்படும். பூசை முடிந்ததும் அவர்களை வீட்டுக்குள்ளிருந்து தூக்கிக்கொண்டு வெளியில் விடுவார்கள். பின்னர் பொங்கலை பலருக்கும் பகிர்ந்து கொடுப்பர்.

### வைரவர் பூசை செய்தல்

சக்கரையமுது முடிந்ததும் அன்றிரவு வைரவருக்கு பொங்கல், ரொட்டி சுட்டு வைப்பர். மொந்தன் வாழைப்பழம் முக்கியமாக சேர்த்துக்கொள்ளப்படும். கஞ்சாவினால் உறட்டியும் இருக்கும். சாராயம், கள் என்பன வைக்கப்படும். வீட்டில் பூசை இடம்பெற்றதன் பின்னர், அம்பிலாந்துறையில் இருக்கும் வைரவர் ஆலயம் சென்று மடைப் பொருட்களை வைத்துக் பூசை செய்வர். பின்னர்தான் மற்றவர்களுக்கு பகிர்ந்துகொடுப்பர். மாரியம்மனுக்கு இவையெல்லாம் வைக்கப்படுவதில்லை.

மாரியம்மனுக்குச் செய்வதனால் நோய் பிணி வராதென்றும், வைரவருக்குச் செய்வதனால் துஷ்ட தேவதைகளிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்றும் எம்மை விட்டு நீங்கவில்லை. ஒரு தடைவ சக்கரையமுது செய்தால் தொடர்ந்து வருடங் களில் செய்யப்பட வேண்டும் என்ற நியதியுமுண்டு. இல்லா விட்டால் தெய்வ குற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையும் உண்டு.

## கழித்தல் / பேய்யோட்டுதல்

வைத்தியசாலைகளினால் குணப்படுத்த முடியாத பில்லி சூனியங்களுடன் தொடர்புபட்ட நோய்களுக்கு பேயோட்டல் அல்லது, கழித்தல் மூலம் தீர்வு காணப்படுகின்றது. அதாவது, செய்வினை எனும் கெட்ட வேலையினால் சிலரைக் குறித்து மந்திரத்தால் செய்வார்கள். இதனால் ஒருவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படவும் வாய்ப்புண்டு. பொருளாதார ரீதியாக இழப்புக்கள் ஏற்படும், குடும்பத்தில் சண்டை ஏற்பட்டு குடும்பப் பிரிவும் ஏற்படும். இவ்வாறு பல துஸ்ட செயல்கள் ஏற்படும்போது, மந்திரவாதிகளைக்கொண்டு தீர்வு காணப்படுகின்றது. மந்திர சக்தி படைத்தவர்கள் குறிபார்த்து பிரச்சினையினைக் கண்டு பிடித்து பரிகாரம் காண்பார்கள். எவ்வாறான முறையில் தீர்வு காணப்பட வேண்டுமோ அவ்வாறான முறையிலே தீர்வு காண்பார்கள்.

கழிக்கும் முறையில் இடம்பெற வேண்டுமாக இருந்தால் பூசனிக்காய் வைத்து இலகுவாகச் செய்வார்கள். அல்லது பேயை அழைத்தத்தான் குணமாக்க வேண்டுமாக இருந்தால் கோழிப் பலி கொடுத்து குணப்படுத்துவார்கள். இதனைச் மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்திலோ அல்லது, சவக்காலைக்குள்ளோ வைத்துச் செய்வார்கள். குறிப்பாக சரிசாமம் எனப்படுகின்ற நல்லிரவு 12 மணிக்குப் பிறகே இச் செயலைச் செய்வார்கள். அதாவது, ஊர் உறங்கும் காலம் அது காக்காய் குருவிச் சத்தங் கூட இருக்காது. அதாவது, பட்சிகள் உறங்கும் காலம் என்று சிறப்பாக அழைப்பர். குறிப்பாகச் சொல்லப்போனால் பேய்கள், பிசாசுகள் நடமாடும் நேரமென்பர்.

## ஆலய பரிபாலனமுறை

ஆரம்ப காலத்தில் ஆலய வழிபாடு இடம்பெற்றிருக்கின்றது. அனறைய நிருவாக அலகு ஊரிலுள்ள தலைவர்களினாலே இடம் பெற்றிருக்கின்றது. 17 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்து பரிபாலகர் முறை இருந்துவந்துள்ளது. அவர்களுடன் வண்ணக்குமார் செயற்பட்டிருக்கின்றனர். ஆலயத்தைப் பரிபாலனம்

செய்யும் இவர்கள் மக்களால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் வழிவழியாகவே பதவி வகித்து இருக்கின்றனர்.

1956ஆம் ஆண்டுக்கு முன்னர் பரிபாலகர் முறை இருந்து வந்தமையினை தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது. இவர்களில் தம்முத்து வட்டானை, எதிர்மனசிங்கம், செம்பாப்போடி ஆகியோர் பரிபாலகராக இருந்து வந்துள்ளார்கள். இவர்ளுடைய காலத்தில் நான்கு வண்ணக்குமார்களே செயற்பட்டு இருக்கின்றனர். இவர்களுக்கு வண்ணக்குமார்களாக நீண்டகாலம் பெரிய குடியிருப்புப் பாகைக்கு மூத்ததம்பி, நடுக்குடியிருப்புப் பாகைக்கு தம்முந்தர், வாழைச்சேனைப் பாகைக்கு மாணிக்கர், நாகைமுனைப் பாகைக்கு காளிக்குட்டி ஆகியோர் சேவையாற்றினர். வண்ணக் குமார்களுக்கு முன்னர் வன்னியர்கள், மண்முனைப்போடி அறுமக்குட்டிப்போடி என்று ஆலய பராபரிப்பு முறை நீண்டு செல்கின்றது.

1975ஆம் ஆண்டு காலத்தில் நிருவாகம் பிரிவுபடுத்தப்படுகின்றது. பரிபாலகராக பாலிப்போடி (வ.வி.) செம்பாப்போடி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார். பிரதான வண்ணக்கராக க.கு.நடராசா, தனாதிபதியாக க.சின்னத்தம்பி அவர்களும் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். வண்ணக்குமார்களாக இ.சின்னதம்பி, மா.அழகையா, இ.கந்தசாமி (பெரியகுடியிருப்புப் பாகை) கா.பூபாலப்பிள்ளை, வீ.தங்கப்பாக்கியம், (நாகமுனைப் பாகை) இ.வாலசிங்கம், க.தேவசிகாமணி (நடுக்குடியிருப்புப் பாகை) அ.யோகேந்திரராசா, சி.மகாலிங்கம் (வாழைச்சேனைப் பாகை) ஆகியோர் நியமணம் பெற்றிருக்கின்றனர்.

1978 ஆம் ஆண்டு காலத்தில் செயலாளராக கா.இராசமா ணிக்கம் இணைந்து நிருவாகப் பொறுப்பை ஏற்று நடாத்தி இருக்கின்றார். 03.10.1982ஆம் ஆண்டு வரையும் இவர் செயற்பட்டிருக்கின்றார். 1982.10.03ஆம் திகதி நிருவாகப் பரம்பல் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. இலங்கை அரசியல் திட்ட நிருவாக முறைக்கு ஏற்ப புதிய வடிவம் பெறுகின்றது. க.கு.நடராசா அவர்களின் அகால மரணத்தினைத் தொடர்ந்து புதிய நிருவாகம் தெரிவுசெய்யப்பட்டது.

அன்று தற்காலியத் தலைவராக கா.வேதாரணியம் அவர்களை நியமித்து அவர்களின் தலைமையில் நிருவாகம் தெரிவு செய்யப் பட்டதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தலைவர் பதவிக்காக பு.சுந்தரநாயகம் அவர்களின் பெயரும், கா.பூபாலப்பிள்ளையின் பெயரும் முன்மொழியப்பட்டபோது அவர்களைத் தெரிவுசெய்வதில் பிரச்சினை உருவானது. அதற்காக பெரும்பான்மை பெறும் அவசியம் அன்று இருந்தது. சபையில் இருந்தோர் கையுயர்த்தி பெரும்பான்மையை கா.பூபாலப்பிள்ளை அவர்களுக்குத் தெரிவிக்க அவர் தலைவரானார். பெரும்பான்மையை அடிப்படையாகக் கொண்டுதான் காலாகாலம் நிருவாகம் தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கின்றது. செயலாளராக இ.சாந்தலிங்கம் அவர்களும் பொருளாளராக பெ.வல்லிபுரம் அவர்களும் தெரிவானார்கள். 22.03.1992 ஆண்டு வரையும் தொடர்ந்த நிருவாகத்தில் 02.07.1988 பா.அரியநேந்திரன் பொருளாளராகவும், இ.செல்லையா செயலாளராகவும் செயற்பட்டனர்.

12.03.1992 இல் தலைவர், செயலாளர், பொருளாளர் முறையே அ.யோகேந்திரன், அ.பேரின்பநாயகம், க.கேசகப்போடி ஆகியோர் ஏகமனதாகத் தெரிவானார்கள். 13.03.1994 இல் த.அருணாச்சலம், கா.இராசமாணிக்கம், ப.புவனேசசிங்கம் அவர்களும் தெரிவாகினர். 17.04.1994 ஆண்டு மு.தயாநிதி இராசமாணிக்கத்திற்குப் பதிலாக செயலாளரானார். 25.04.1994 ஆம் ஆண்டு, அ.யோகேந்திரன், க.கேசகப்போடி அ.கருணாகரன் அவர்களும் 11.07.2000ஆம் ஆண்டு சி.தவராசா, வா.சசிக்குமார், மு.தயாநிதி அவர்களும் 30.01.2001ஆம் ஆண்டு க.அரசரெத்தினம், சி.ஐங்கரமூர்த்தி, க.விவேகானந்தம் அவர்களும் 12.07.2003ஆம் ஆண்டு செ.நகுலேஸ்வரன், மு.தயாநிதி, க.மகேஸ்வரராசா அவர்களும் தெரிவாகினர். பின்னர் 07.04.2004 ஆம் ஆண்டு இ.ரவீந்திரன் மகேஸ்வரராசா இடத்துக்கும் 27.04.2004ஆம் ஆண்டு மே.கௌரிகாந்தன் தயாநிதி இடத்திற்கும் நியமிக்கப் பட்டனர். மு.குணேசலிங்கம் பொருளாளரானார். எனினும் பல நிருவாக உறுப்பினர்கள் அவ்வப்போது மாற்றப்பட்டுள்ளனளர். தற்பொழுது தலைவராக சி.தவராசா அவர்களும், செயலாளராக சு.கோபிநாத் அவர்களும், பொருளாளராக த.நவநிதி அவர்களும்

செயற்படுகின்றனர். இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் முறைமை தலைவர், செயலாளர், பொருளாளர் முறையிலானது. பொதுவாக நிருவாகத் தெரிவு என்பது க.கு.நடராசா காலம் தொடக்கம் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றே வந்திருக்கின்றது என்பதனை ஆலயபரபாலன சபையினரின் ஆவணம் வெளிப்ப டுத்துகின்றது. அந்தந்த கால நிருவாகக் காலப் பகுதியில்வெற்றிடங்கள் காலியாகும்போது அந்த வெற்றிடம் உள்ள பாகையில் இருந்தே நியமிக்கப்பட வேண்டும் என்பதும் நிருவாக ஒற்றுமையினையே வெளிப்படுத்துகின்றது.

க.கு.நடராசா அவர்களுடைய காலத்தை எடுத்துப்பார்த்தால் அக்காலம் சமூக, பொருளாதார, அரசியல் நடைமுறையில் பல மாற்றங்களைக் கொண்டுவந்த காலமாகும் என்று குறிப்பாகக் கூறிவிடலாம். கா.பூபாலபிள்ளை அவர்களுடைய காலத்தில் ஆலயத்துடன் இணைந்த சமூக செயற்பாடுகள் சிறப்புப்பெற்றன. தற்போது நடைமுறையில் உள்ள பூசைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன, ஆலய வீதிக்கான நிலம் விஸ்தரிக்கப்பட்டன, வெல்லங்குளப் பூமிக்கு நிலையான உறுதி எழுதப்பட்டன, குடிமக்களது கைவிசேடமுறை மாற்றப்பட்டது என்று அடிக்கிக்கொண்டே செல்லலாம். இவர் தூரநோக்கில் குண்டுமுறிச்சான் காணிபற்றிச் சிந்தித்துள்ளார். அதாவது, இந்தக் காணியினை விற்று அதில் குடிகளை அமர்த்தும்போது கிராமத்தில் உள்ள உட் பூசல்களைத் தடுக்கமுடியும் என்பதாகும். அப்போது நிலத்தொடர்பு உண்டாகும் அதனால் பிரச்சினை இல்லாமல் போகும் என்றார். இதற்கு எனது அப்பா (மூ.முருகேசு) ஆலோசனை வழங்கினார் என்று அவர் குறிப்பிட்டார். இவருடைய இச் சிந்தனையை கிராம மக்கள் மறுவாசிப்புக் குட்படுத்திப் பார்க்கவேண்டிய தேவையுள்ளது போல் தெரிகிறது. நீண்ட காலத்தில் ஏற்படப்போகும் பிரச்சினை இதனால்தான் தீர வேண்டுமாக இருந்தால் அதனைச் செய்வதுதான் சிறந்த வழியுமாகும்.

அ.யோகேந்திரன் அவர்களின் காலத்தில் ஆலயத்தினுடைய காணிகள் விற்காமல் பாதுகாக்கப்பட்டன. அவர் இருந்திருந்தால்

புதுவட்டைக் காணியையும் ஆலயத்திற்கு சொந்தமாக்கியிருப்பார். புதுவட்டைக் காணி 176 ஏக்கரும் அம்பிலாந்துறை ஸ்ரீ சித்தி விக்கிணேஸ்வரர், சிவமுத்துமாரியம்மன் ஆலயத்துக்குச் சொந்தமானது. அந்தக் காணி அறுமக்குட்டிப்போடி, குஞ்சிலயாப்போடி என்று கைமாறப்பட்டு வந்துள்ளது. இக் காணிகள் மக்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட விதம் பிழையான வழியிலாகும். இதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இவர் ஆலயச் சொத்துக்களைப் பாதுகாப்பதில் முன்னோடியாக எப்போதும் செயற்படுபவர். செ.நகுலேஸ்வரன் அவர்களுடைய காலத்தில் நெருக்கடி நிலையில் புதுவட்டைக் காணி பலருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது, குண்டுமுறிச்சான் காணி குடியிருப்பு வளவுகளுக்காக விற்கப்பட்டது, பனிச்சயடிமும்மாரிக் காணி வாங்கப்பட்டது என்று கூறமுடியும். ஆலயக் கட்டுமானப் பணிகளும் சீர் செய்யப்பட்டன. சி.தவராசா அவர்களின் சேவை காய்தல் உவத்தலின்றி இடம்பெறுகின்றது. பூசாரியாருக்கு நினைவு மலர் வெளியிடப்பட்டது, சிவமுத்துமாரியம்மனுக்கு ஒலிப்பேழை வெளியிடப்பட்டது, வினாயகப்பெருமானுக்கு ஒலிப்போழை வெளியிடப்பட்டது, அம்பிலாந்துறைக் கிராமத்துக்கான வரலாற்று நூல் வெளியிடப்பட்டது, என்று பல ஆவணங்களுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் அரங்கேறியுள்ளன.

## சுருக்கமான முறையில் ஆலய பரிபாலனசபை வரன்முறை

1. அறுமக்குட்டிப்போடி
2. குஞ்சிலயாப்போடி
3. வீமாப்போடி, வீரபத்திரப்போடி
4. எதிர்மனசிங்கம்
5. செம்பாப்போடி

(எதிர்மனசிங்கம், செம்பாப்போடி ஆகியோர் காலத்தில் பிரதான வண்ணக்குமர்களாக மூத்ததம்பி, காளிக்குட்டி, மாணிக்கர், தம்முத்தர் ஆகியோர் நீண்ட காலம் இருந்துள்ளனர்.)

இலக்கம், ஆண்டு, தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற வகையில் பெயர்விபரம் அமைகின்றது.

6. 1975 க.கு.நடராசா கா.குமாரசிங்கம் க.சின்னத்தம்பி
7. 1978 க.கு.நடராசா கா.இராசமாணிக்கம் க.சின்னத்தம்பி
8. 1982 கா.பூபாலப்பிள்ள இ.சாந்தலிங்கம் பெ.வல்லிபுரம்
09. 1988 கா.பூபாலப்பிள்ளை இ.செல்லையா பா.அரியநேத்தின்
10. 1992 அ.யோகேந்திரன் அ.பேரின்பநாயகம் க.கேசகப்போடி
11. 1994 த.அருணாசலம் கா.இராசமாணிக்கம் ப.புவனேசசிங்கம்
12. 1994 த.அருணாசலம மு.தயாநிதி ப.புவனேசசிங்கம்
13. 1994 அ.யோகேந்திரன் க.கேசகப்போடி அ.கருணாகரன்
16. 2000 சி.தவராசா வா.சசிகுமார் மு.தயாநிதி
17. 2001 க.அரசரெத்தினம் சி.ஐங்கரமூர்த்தி க.விவேகானந்தன்
18. 2003 செ.நகுலேஸ்வன் மு.தயாநிதி க.மகேஸ்வரன்
19. 2004 செ.நகுலேஸ்வன மு.தயாநிதி இ.ரவீந்திரன்
20. 2004 செ.நகுலேஸ்வன மே.கௌரிகாந்ன் இ.ரவீந்திரன்
21. 2009 செ.நகுலேஸ்வன மே.கௌரிகாந்ன் மு.குனெசலிங்கம்
22. 2012. செ.நகுலேஸ்வரன் க.கேசகப்போடி அ.புவனேந்திரராசா
23. 2013 சி.தவராசா பு.கோபிநாத் த.நவநிதி

## பூசாரியார் வரன்முறை

1. நாவற்கன்னியார்
2. மண்முனைப்போடி
3. விஸ்வநாதர்
4. வேலாப்போடி
5. மாணிக்கப்போடி வாத்தியார்
6. வேலாப்போடி சின்னத்தம்பி
7. செல்லையா கோவிந்தராசா
8. செல்லையா அருளானந்தம்
9. செல்லையா அமிர்தலிங்கம்
10. கோவிந்தராசா தவகுமார்

## பராமரிப்புத் தத்துவம்

மட்டக்களப்பு அம்பிளாந்துறை பாலிப்போடி வ.வி.செம்பாப்போடியும் பரிகாரிப்போடி இராசம்மாவும் எதிர்மனசிங்கம் வள்ளியம்மையும் காளிக்குட்டி இராசமாணிக்கமம் ஆகிய நாங்கள் நால்வரும் சேர்ந்து மட்டக்களப்பு அம்பிளாந்துறையில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ விக்கினேஸ்வரர் ஆலயம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் என்பனவற்றின் பராமரிப்புத் தத்துவநியமன சாதனம் எழுதி நிறைவேற்றிக்கொள்ளும் விபரம்.

குறித்த பா.வ.வி.செம்பாப்போடி, பா.இராசம்மா, எ.வள்ளியம்மை, கா.இராசமாணிக்கம் ஆகிய நாங்கள் இதுவரை காலமும் குறித்த ஆலயங்களின் பராபரிப்பில் நாலுபாகையாகச் சேர்ந்து நடத்தி வந்தோம் என்றும், இனிமேல் குறித்த கோயிலின் நிருவாகத்தையும் பராபரிப்பையும் நாகமுனை, பெரியகுடியிருப்பு, நடுக்குடியிருப்பு, வாழைச்சேனை ஆகிய நாலு ஊருக்கும் பொதுவானதும் சொந்தமான தாகச் சேர வேண்டும் எனும் நிபந்தனைக்கமைவாக மேற்படி ஆலயங்கள் பின்வரும் ஒழுங்கின்படி நடந்துவர வேண்டிய தென்றும் இதனால் வெளிப்படுத்துகின்றோம். மேற்படி ஆலயங்களின் பரிபாலகரும் போஷகருமாக எங்களின் பெயர்வழி காரனாகிய பாலிப்போடி வ.வி.செம்பாப்போடி என்பவரும் பிரதான வண்ணக்கராக அம்பிளாந்துறை கந்தக்போடி குஞ்சித்தம்பி நடராசா என்பவரும், தனாதிகாரியாக அவ்வூர் கந்தப்போடி சின்னத்தம்பி என்பவரும், இருந்துவர வேண்யெதென்றும் இந்தப் பரிபாலகர் பிரதான வண்ணக்கர் தனாதிகாரி ஆகிய மூவரையும் விட நாகமுனைப் பாகைக்காககாளிக்குட்டி - பூபாலப்பிள்ளையும் வீரக்குட்டி - தங்கப்பாக்கியமும், பெரியகுடியிருப்புப் பாகைக்காக இளையதம்பி -சின்னத்தம்பியும் இராசையா - கந்தசாமியும் மாணிக்கம் - அழகையாவும், நடுக்குடியிருப்புப் பாகைக்காக இளையதம்பி வாலசிங்கமும் கந்தப்போடி தேவசிகாமணியும், வாழைச்சேனைப் பாகைக்காக அழகையா - ஆத்மலிங்கமும் (யோகேந்திரன்) சின்னத்தம்பி மகாலிங்கமும் வண்ணக்குமார்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்றும், இந்தப் பன்னிரெண்டு பெயர்களும் சேர்ந்து மேற்படி ஆலயங்களை நல்ல

முறையில் பராபரித்து அலயங்களின் முன்னேற்றத்துக்குரிய திருப்பணிகளை நடத்தி வரவேண்டும் என்றும் இதனால் வெளிப்படுத்துகின்றோம்.

மேலும் குறித்த ஆலயங்கள் அமைந்திருக்கின்ற பின்வரும் விபரங்களுடைய ஆதனத்தையும் மேற்படி ஆலயங்களுக்குச் சொந்தமாக பதினெட்டு ஏக்கர் காணியையும் நன்கொடையாகக் கொடுப்பதுடன் அந்த ஆலயங்களையும் அதற்குரிய காணியையும் பராபரிக்கும் நம்பிக்கைத் தத்துவகாரராகவும் இதனால் நியமனம் செய்கின்றோம்.

மேற்குறித்த பிரகாரம் நியமனம் செய்யப்பட்டிருக்கும் பரிபாலகர் இடம் காலியாகும்போது அவ்விடத்துக்கு நாலு ஊர்களில் உள்ளவர்களிலும் பெரும்பான்மையான சம்மதப்படியும் பிரதம வண்ணக்கரோ தனாதிகாரியோ மற்ற ஒவ்வொரு ஊருக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் வண்ணக்குமாரோ விலகும்போது அல்லது ஏதாவது ஒரு இடம் காலியாகும் போது அவ்விதம் காலியாகும் இடத்துக்கு அந்தப் பாகையில் உள்ளவரையே நியமிக்க வேண்டு மென்றும், இப்போது நியமனம் செய்யப்பட்டிருக்கின்றவர்களோ அல்லது, இனிமேல் இவர்கள் இடத்துக்கு நியமனம் செய்யப் படுபவர்களோ குறித்த ஆலயங்களை பராபரித்து வருவதுடன் மேற்படி ஆலயத்துக்குச் சொந்தமாக இருக்கும் குன்று முறிச்சான் எனும் காணியையும் கோயில் ஆதனமாகப் பராபரித்து கோயில்களின் நன்மைக்காக நடாத்திவர வேண்டியதென்றும் இதனால் பொருந்தி நாங்கள் கையொப்பம் இட்டோம்

**ஆலயங்கள் இருக்கும் ஆதன விபரம்**

மட்டக்களப்பு டிஸ்ரிக் மண்முனைப் பற்று அம்பிளாந்துறையில் இருக்கும் கோயில் வளவு எனப்படும் ஓர் பூமி எல்லைகள் வடக்கு 062ஆம் இலக்கக் கண்ட பூமி, தெற்கு பெரியகுடியிருப்பு ஊர், கிழக்கு 062ஆம் இலக்க கண்டம், பாலிப்பொடிக்கும் தம்பாப்பிள்ளைக்கும் உரிய பூமி, மேற்கு றோட்டு. விசாலம் வடக்குத் தெற்குப் பாகம் முப்பத்தொன்று (31) கிழக்கு மேற்குப் பாகம் முப்பத்திரண்டு (32) இவ்விசாரமுடைய வளவு முழுவதும் உட்பட ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயமும் ஸ்ரீ மாரியம்மன் ஆலயமும்.

கோயிலுக்காக கொடுக்கப்பட்ட ஆதனங்கள்

மேற்படி மட்டக்களப்பு டிஸ்ரிக் மண்முனைப்பற்று அம்பிளாந்துறையில் இருக்கும் குன்று முறிச்சான் எனும் ஓர் பூமி எல்லைகள் கிழக்கு புதுக்குளம் உப்புவட்டியும் மேற்கு றோட்டு, வடக்கு நடுக்குடியிருப்பு ஊர், தெற்கு நாகமுனை ஊரும் வாய்க்காலும் விசாலம் ஏக்கர் பதினெட்டு 18-00-00 இவ்விபரமுடைய பூமி முழுவதுமான பாய்ச்சல் வடிச்சல் உரித்துக்கள் சகலதும்.

சாட்சிகள்

1. மா.நாகராசா
2. கு.சின்னத்தம்பி

இ.சின்னத்தம்பி
இ.வாலசிங்கம்
மா.அழகையா
வீ.தங்கப்பாக்கியம்
பா.செம்பாப்போடி
ப.இராசம்மா
எ.வள்ளியம்மை
கா.இராசமாணிக்கம்
கா.கு.நடராசா
க.சின்னத்தம்பி
கா.பூபாலப்பிள்ளை
சி.மகாலிங்கம்
அ.யோகேந்திரன்
இ.கந்தசாமி
க.அரசமணி

மட்டக்களப்பு டிஸ்றிக்ன் பிரசித்த நொத்தாரிசும் சமாதான நீதிபதியுமாகிய நல்லதம்பி கதிரேசபிள்ளை ஆகிய நான் இச்சாதனத்தில் ஒப்பமிட்ட சாதனகாரரும், சாட்சியாளராக ஒப்ப மிட்ட அம்பிளாந்துறை மாசிலாமணி - நாகராசா குமரப்போடி சின்னத்தம்பி ஏனையவர்கள்முன்னாக வாசித்து விளங்கப் படுத்தினேன் என்றும், இவர்கள் அனைவரும் எனது சமுகத்தில்

ஆயிரத்து தொழாயிரத்து எழுபத்து மூன்றாமாண்டு புரட்டாதி இருபதாந் திகதி ஒப்பமிட்டார்கள் என்றும் இதனால் உறுதிப்படுத்து கின்றேன்.

கதிரேசபிள்ளை (ச.நீ) - பிரசித்தநொத்தாரிசி

## பராபரிப்புத் தத்துவ நியமனம் பற்றிய குறிப்பு

ஆரம்ப காலத்தில் அறுமக்குட்டிப்போடியினுடைய வரன் முறையின் கீழ் ஆலய பூசைகளும் திருவிழாக்களும் இடம்பெற்று வந்தன. பின்னர் வன்னியனார்களுடைய கண்காணிப்பின் கீழ் இடம்பெற்று வந்தன. அதன் பின்னர் உடையார்களுடைய தலைமைத்துவமத்தின் கீழ் பூசை நடைமுறைகள் இருந்தன. அதன் பிறகு பரிபாலகர்களு டைய கண்காணிப்பின் கிழ் இருந்திருக்கின்றன. 1973ஆம் ஆண்டு காலம் வரையும் ஊரில் பணம் அறவிடப்பட்டு பூசைகளும் சடங்குகளும் இடம்பெற்றிருக்கின்றன. ஆலயம் பொதுவான நிலையிலேயே பேணப்பட்டு வந்திருக்கின்றன. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் பராபரிப்புத்தத்துவம் எழுதப்பட்டதற்கான காரணம் என்ன?

ஆரம்பத்தில் நான்கு பாகையும் சேர்ந்துதான் பூசையினையும் சடங்கினையும் செய்து வந்திருக்கின்றனர். அது பரிபாலகர் முறையின் கீழ் இருந்திருக்கின்றது. 1973ஆம் ஆண்டு காலத்திற்கு முன்னர் நான்கு பாகையும் சேர்ந்து பூசையினையும் சடங்கினையும் நடத்தி வந்தனர். இந்தத் தொடர் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. 18 ஏக்கர் காணிகளும் ஏற்கனவே கந்தப்போடியார் காலத்தில் ஆலயத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்கின்றன. (மா.கதிர்காமத்தம்பி) ஆலயம் பற்றிய செயற்பாடுகள் யாவும் சிறப்பாக இடம் பெற்று வந்தன. அவ்வாறிருக்கும்போது மேற்குறிப்பிடப்பட்ட நால்வருந் தான் ஆலயத்தினையும் ஆலயத்துக்குச் சொந்தமான ஆதனங் களையும் கொடுத்தது போன்று இந்த விபரம் எழுதப்பட்டிருப்பது பொருத்த முடையதாகத் தெரியவில்லை.

## ஏனைய கோயில்கள்

### மண்டபத்தடி

அம்பிலாந்துறையில் நாகமுனை எனும் பிரிவில் அமைந்திருப்பது மண்டபத்தடிப் பிள்ளையார் கோயிலாகும். ஆரம்பத்தில் கல்லொன்றை வைத்து வழிபடப்பட்டு வந்தனர். பின்னர் அக்கல் ஒரு மேடையில் வைத்து வணங்கப்பட்டு வந்தது. இப்போதைய நிலையில் சிறிய ஆலயமொன்றுடன் காட்சியளிக்கின்றது.

### காஞ்சிரயடி

அம்பிலாந்துறையில் நாகமுனை எனும் பிரிவில் அமைந்திருப்பது காஞ்சிரயடி வைரவர் கோயிலாகும். இந்த வணக்கமுறை ஆரம்பத்தில் காஞ்சிரை மரத்துடன் காணப்பட்டது. பின்னர் சிறிய ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

மண்டபத்தடி எனும் இடத்தில் உள்ள கோயிலும், காஞ்சிரையடி வைரவன் கோயிலும் அம்மன் சடங்கு காலத்தில் ஊர்சுற்றும் நாள் அன்று சிறப்புப் பெறுகின்றன. மாரியம்மன் ஊர்வலம வரும்போது இந்த ஆலயங்களில் பூசை கண்டே அம்மனை எடுத்துச் செல்வார்கள். மண்டபத்தடிப் பூசையினை மண்முனைப்போடி குடும்பமும், வைரவர் கோயில் பூசையினை சுப்பிரமணியம் குடும்பமும் செய்து வருகின்றனர்.

### முத்துலிங்கப் பிள்ளையார் கோயில்

மாரியம்மன் சடங்கு அறுமக்குட்டிப்போடி காலத்தில் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், முத்துலிங்கப் பிள்ளையார் கோயில் ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றுக் கதை இது. பெரிய குடியிருப்பு பாகாகையில் இருந்து மூ. வேலாப்போடி குழுவினர் வருடாவருடம் தோரணக்கம்புக்குப் போய் வருவது வழக்கம். இக்கம்புகளை வண்டியில் ஏற்றி வருவார்கள். 1940 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவர்கள் தோரணக்கம்பு வெட்டுவதற்கு காட்டில் வந்து கம்புகளை வெட்டியிருக்கின்றனர். அப்போது ஓர் இடத்தில் பிள்ளையார்

தோற்றத்துடன் காணப்பட்ட கல்லைக் கண்ணுற்றனர். இவர்கள் அக் கல்லினைக் கம்புடன் ஏற்றிவந்து கிட்டங்கி வளவில் ஒரு பலா மரத்துக்குக் கீழ் இறக்கி வைத்துள்ளனர். இக்கல்கொண்டு வந்தது யாருக்கும் தெரியாது.

பந்தல் போட்டு கும்பம் வைத்து பூசையான போது மாசிலா மணியவர்கள் தெய்வமாடி மாணிக்கப்போடி வாத்தியார் அவர்களுக்குக் கட்டுச் சொல்லியிருக்கின்றார்."கிட்டங்கிவளவில் பலாமரத்துக்குக் கீழ் ஒரு பிள்ளையார் வடிவமான கல்லொன்று உண்டு. அதனை எடுத்துக் கொண்டு ஆலமரத்தின் கீழ் வையுங்கள்" என்றாராம். (தற்பொழுது) முத்துலிங்கப் பிள்ளையார் அமைந்துள்ள இடம்) அதன்படி அவர்கள் அக்கல்லை எடுத்துக்கொண்டு வேறொரு இடத்தில் வைத்திருக்கின்றனர்.

மறுநாள் பூசையின்போது தெய்வமாடிய அவர், தான் குறிப்பிட்ட இடத்தில் அக்கல்லை வைக்கவில்லை என்று பூசகரிடம் கூறியிருக்கின்றார். பின்னர் பூசகருடன் சென்ற குழுவினர் அந்தப் பிள்ளையார் கல்லை குறிப்பிட்ட இடத்தில் வைத்து பூசை செய்திருக்கி ன்றனர். (தகவல் - மூ.முருகேசு) அக்காலம் தொடக்கம் அப் பிள்ளையாருக்கு முத்துலிங்கப் பிள்ளையார் என்று பெயரிட்டவரும் மாசிலாமணி அவர்களே என்றார்.

பூசை நடைமுறைகளை அந்தக்காலம் தொடக்கம் புவனேசசிங்கம் குடும்பத்தினரே செய்து வருகின்றனர். முத்துலிங்கப் பிள்ளையார் பூசையை இன்றுவரையும் அக்குடும்பத்தினர் சிறப்பாகச் செய்கின்றனர். தீக்கட்டை எழுந்தருளப்பண்ணுதல் என்பது முத்துலிங்கப் பிள்ளையாருடன் பிணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வளர்ச்சியடைந்து வந்த முத்துலிங்கப் பிள்ளையார் ஆலயம் இன்று ஒரு தனியான கட்டிடத்துடன் காட்சி தருகின்றது. 1988ஆம்ஆண்டு காலப்பகுதியில் பா.அரியநேந்திரன் அவர்களை இந்தியன் காவல் துறையினர் பிடித்து, அடித்து துன்புறுத்தி இந்தக் கோயி லடியில் வைத்திருக்கின்றனர். அப்போது அவர் ஒரு நேர்த்திக்கடன் வைத்திருக்கின்றார். "நான் விடுதலையாகிய பின்பு

உனக்கு ஒரு கோயில் கட்டுவேன்" என்று இறை அருளால் அவருக்கு விடுதலை கிடைத்தது.

அவர் பல தடவைகள் கோயில் கட்ட முனைந்தபோதும், எமது பிரதேதசத்தில் அடிக்கடி ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறைவேற்றுவதில் சிக்கல் நிலை இருந்தது. அவருக்கு ஏற்படட அதிஸ்டத்தினால் 2004ம் ஆண்டு பாராளுமன்ற உறுப பினராகத் தெரிவானார். அக்காலப் பகுதியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும் நிதியில் இருந்து கட்டம் கட்டமாக இக்கட்டிடத்தை நிறைவேற்றி 14.03.2011 கும்பாபிஷேகம் கண்டிருக்கின்றது. இந்தக் கோயில் அமைப்பதற்கு ஆலய பரிபாலன சபையினுடைய பணமும் செலவு செய்யப்பட்டிருக்கின்றன.

முத்துலிங்கப் பிள்ளையார் என்பவர் நமது மக்களின் மனங்களில் பக்தி பூர்வமாக உரைந்துள்ளார். அசாதாரண சூழ்நிலை ஏற்பட்ட பயங்கரமான காலத்திலும் கேடு செய்வோரை ஊருக்குள் அழைக்க விடமாட்டார். அந்த இடத்திற்கு அத்தகையவர்கள் வரும்போது அவர்களை திருப்பிவிடுவார். அப்படியான காவல் தெய்வமாக போற்றப்பட்டவர். அவரை நம்பியவர் என்றும், இன்றும் கைவி டப்படமாட்டார்கள்.

இப்பிள்ளையார் ஆலயத்தில் பலரால் பொங்கல் பூசை செய்யப்படும். பொங்கியவர்கள் தாங்களாகவே படையில் வைத்து பூசை செய்வார்கள். வேண்டியருக்கு வேண்டும் வரம் கொடுப்பவரல்லவா முத்துலிங்கப் பிள்ளையார். சந்தியிலே அமைந்து, சாக்கடை கழைந்து சறுக்கியவரையும் உயர்த்தி உய்ய வைக்கும் பிள்ளையார் கும்பாபிஷேகத்தின் பின்னர் ஆகம வடிவில் அமைந்த சிலையில் காட்சி தருகின்றார்.

## வாலையம்மன் கோயில்

ஆலய வழிபாட்டின் பரிநாம வளர்ச்சியின் மற்றுமொரு வடிவம் "வாலையம்மன்" கோயிலாகும். இக் கேவில் 1993ஆம் ஆண்டு கட்டப் பட்டுள்ளது. தவலிங்கம் எனும் தனிமனித பூசாரியாரின் முயற்சியினால் எழுந்தது இக்கோயில். 16 வயதுடைய வாலைத் தெய்வத்தைத் தனது மந்திர சக்தியால் அழைத்து மக்களின் குறையினைத் தீர்த்துவரும் இவர், இன்றும் புகழ்ந்து பேசப்படுகின்றார். ஒரு வீடு கட்டுவதற்கு இன்றைய பொருளாதார நிலை நெருக்கடியைத் தரும்போது கோயிலைக் கட்டுவதென்பது முடியாத காரியமாகும். தவலிங்கம் பூசாரியார் அவர்களுக்கு வாலையம்மன் காட்சி கொடுத்ததன் விளைவாய்தான் இந்தக் கோயில் 1993ஆம் ஆண்டு காலப் பகுதியில் கட்டப்பட்டிருக்கின்றது.

வருடாவருடம் பங்குனி உத்தரத்தினை இறுதி நாளாகக் கொண்டு திருவிழா இடம்பெற்று வருகின்றது. இத் திருவிழா 5 நாட்கள் இடம்பெறுகின்றன. இவருடைய அபார தெய்வ சக்தியினால் வாலையம்மன் அவர் கூப்பிட்டபோது அவருக்கு காட்சி கொடுப்பதாக அறிகின்றோம். அவருடைய உடுக்கு ஒலிக்கும் நாத ஓசை அக் கோயிலுக்குச் செல்பவர்களை பக்தியின்பால் வசைப்படுத்திவிடும். இவருடைய தந்தையார் செல்லையாவும் சிறந்த வாலையம்மன் பக்தராவார்.

அம்பிலாந்துறை மாரியம்மன் சடங்கு விதிமுறை வாலை பத்ததியைக் கொண்டே இடம் பெறுகின்றது. வாலையம்மனை அழைத்து அத் தெய்வத்திற்கு ஒரு கும்பம் வைக்கப்படுகின்றது. இக் கும்பம் பிரதானமானது."வாலையைப் போல் தெய்வமில்லை. பாலையைப் போல் செல்வமில்லை" என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

2003ம் ஆண்டு காலப்பகுதியில் வாலையம்மன் கோயிலின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் நோக்கோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு சிலர் செயற்பட்டு, அதனைச் சில ஆண்டுகள் மூடியும் விட்டனர். அது ஆயுத சக்தி ஆண்டவன் சக்தியை அடக்கமுனைந்த அறியாமைக் காலம்.

## ஸ்ரீ முருகன் கோயில்

அம்பிலாந்துறையில் அம்பலத்தடி என்று அழைக்கப்படும் இடத்தில் முருகன் கோயில் அமைந்துள்ளது. இது 1973 ஆம் ஆண்டு காலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேலாப்போடி, வீரக்குட்டி போன்றோரின் முயற்சி இக்கோயில் அமைவதற்கு காரணமாக இருந்திருக்கின்றன. இதற்குரிய நிலத்தினை பெரியகுடியிருப்பைச் சேர்ந்த சட்டம்பியார் மகன் ஆலம்பிள்ளை அவர்கள் கொடுத்து இருக்கின்றார். 1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கும்பாபிஷேகம் இடம்பெற்றிருக்கின்றது. அம்பிலாந்துறை மக்களுக்கு அருள் பாலித்த அழகன் அமர்ந்திருந்த ஆலயம் அது. 1987.01.28 ஆம் திகதி இப்பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரன சூழ்நிலையால் இவ்வாலயம் முற்றாக அழிக்கப்பட்டது. தற்போது இவ்வாலயம் புதிதாகக் கட்டப்படுகின்றது. விரைவில் கும்பாபிஷேகம் இடம் பெறும்.

## மஹா விஸ்ணு கோவில்

1988 ஆம் ஆண்டு காலப் பகுதியில் IPK என்ற பெயர் பெற்ற இந்திய அமைதிகாக்கும் படையினரால் அமைக்கப்பட்ட ஆலயம் இதுவாகும். கற்சேனைப் பாடசாலைக்கு அருகாமையில் இவ்வாலயம் உள்ளது. இந்த ஆலயம் இந்தியப் படையினுடைய முகாமினுள் அமைந்திருந்தது. இப்படையினர் அங்கிருந்து சென்ற பிறகு, இவ்வாலயத்தினை அங்குள்ள மக்கள் பராபரித்து வருகின்றனர். இவ்வாலயத்தில் ஒரு அதிசயம் நிகழ்ந்துள்ளது, 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருவிழா இடம்பெற்றபோது, எழுந்தருளிக்குக் கட்டப்பட்ட குடைக்குள் நாகபாம்பு ஒன்று ஏறியது. அதனைக் கண்டு மக்கள் வியப்புற்றனர். பின்னர் அந்தப் பாம்பு எந்த வழியால் போனது என்று தெரியாது. கண்களில் காணாமல் மறைந்து விட்ட நிகழ்வு இன்றும் மக்கள் மத்தியில் நீங்காது நிலைத்துள்ளது. இவ்வாலயத்தில் ஆண்டு திருவிழாவும் தினப் பூசையும் இடம்பெற்று வருகின்றன.

### வேப்பயடிப் பிள்ளையார் கோயில்

அம்பிலாந்துறை வடக்கில் ஆனிமாதத்தில் இடம்பெறும் மாரியம்மன் சடங்கின்போது தீக்கட்டை எழுந்தருளப் பண்ணுவதற்காக வேப்பயடிப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செல்வது வழக்கமாகும். அங்கிருந்து தீக்கட்டையினை எடுத்துக்கொண்டு மாரியம்மன் ஆலயம் வருவார்கள்.

### கானடிக்கோயில்

இவ்வாலயம் அம்பிலாந்துறைக் கிராம எல்லைக்குள்ளேயே அமைந்துள்ளது. இதனை நிருவகித்து வருபவர்கள் கடுக்காமுனைக் கிராம மக்களே. இந்தக் கோயில் அவர்களுக்குத்தான் செந்தமானது. ஆரம்பத்தில் இது ஒரு வைரவர் ஆலயமாகக் காணப்பட்டது. பின்னர் லட்சுமி நாராயணராகக் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. ஆரம்ப காலத்தில் வைரவருக்குரிய வழிபாடு இடம்பெற்று வந்துள்ளது. இவ்வழிபாட்டுக்குரிய பூசையினைப் பல வருடங்களாக எனது அப்பாவும் செய்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய காலகட்டத்தில் ஆண்டுத் திருவிழதவும் தினப் பூசையும் இடம்பெறுகின்றன.

### கிறிஸ்தவ தேவாலயம்

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களில் கிறிஸ்தவ மதம் படிப்படியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வேரூன்றத் தொடங்கியது. அத்தாக்கம் அம்பிலாந்துறைக் கிராமத்தையும் பாதிக்கவே செய்தது. கி.பி.1776ம் ஆண்டில் மட்டக்களப்பு போடிமாரை மேற்பார்வை செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கிறிஸ்தவ கணக்காளர்கள் அனுப்பப்பட்டமை, அவர்களை போடிமார் மர்மக்கொலை செய்தமை, கி.பி.1833ஆம் ஆண்டுக்குப் பிறகு கிறிஸ்தவ மதத்தவருக்கு மட்டுந்தான் அரச உத்தியோகம் எனும் மாயை பரப்பப்பட்டமை இவையெல்லாம் பொதுவாக கட்டவிழ்த்துவிடப்பட்டன.

இத்தகைய பின்னணியில்தான் அம்பிலாந்துறையில் கதிராமப்போடி, குஞ்சிலயாப்போடி என்போர் வன்னியர் பதவியை ஏற்றுக் கொள்வதற்காக கிறிஸ்தவர்களாக மாறினர். இதன்பின் இவர்களை டானியல் கதிராமப்போடி வன்னியன் என்றும், றொபேட் குங்சிலயாப்போடி வன்னியன் என்றும் அழைக்கலாயினர். எனினும், இவர்களுடைய மனைவியரோ, பிள்ளைகளோ, சொந்தங்களோ கிறிஸ்தவ மதம் சாராமல் இருந்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அத்தோடு வன்னியர்களிடம் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்கமும் இருக்கவில்லை.

எனினும், கடந்த 4ஆம், 5ஆம் தசாப்த காலங்களில் சில வாலிபர்கள், கல்வியைப் பெறுவதற்காகவும், ஆசிரியர் தொழிலுக்காகவும் மதம்மாறி இருந்தனர். ஆனால், அவர்களுடைய குடும்பங்களோ கிறிஸ்தவத்துக்கு மதம் மாறவில்லை. இக்காலப் பகுதியில் மதம் மாறிய இரண்டு குடும்பங்களே இங்கு இருந்துவந்துள்ளன. பின்னர் சிலர் பல காரணங்களுக்காக இணைக்கப்பட்டனர். இன்று அம்பிலாந்துறை வடக்குப் பகுதியில் சில குடும்பங்கள் சில சலுகைகளுக்காக மதமாறியிருக்கின்றனர். எமது கிராமத்தைப் பொறுத்தமட்டில் பரம்பரைக் கிறிஸ்தவர்கள் எவரும் இருக்க வில்லை. அவர்கள் அண்மைக்காலங்களிலே மதம் மாறியவர்கள்.

இங்குள்ள கிறிஸ்தவ ஆலயத்துக்கும் அம்பிலாந்துறை இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையே வேறுபாடு நிலவுவதில்லை. எல்லோரும் எல்லாக் கோயிலையும் விழாக் காலங்களில் வணங்குவது வழக்கம். கிறிஸ்தவ தேவாலய உச்சவத்திற்கு கிறிஸ்தவ சமயம் சாராதவர்கள் பணம் கொடுப்பது வழக்கம். கிறிஸ்தவ தேவாலய நிருவாகத்தினரால் வரி அறவீடு வருடா வருடம் இடம் பெறுவது வழக்கமாகும். கிறிஸ்தவ தேவாலயம் இருக்கும் இடத்துக்கான பூமியினை செம்பாப்பேடியார் குடும்பமே கொடுத்தது.

இன்று இருக்கும் தேவாலயம் 1975ஆம் ஆண்டு காலத்தில் பாதர் "குக்" அவர்களால் கட்டப்பட்டது. அவர் அமெரிக்க நாட்டினைச் சேர்ந்தவர். 1978ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியினால் இவ்வாலயம் சிதைவுற்றிருந்தது. பின்னர் இது புனரமைக்கப்பட்டு இன்று வரையும் செயற்பாட்டிலுள்ளது. மன்னாரைச் சேர்ந்த ஜெக்கப்லேகம் (செட்டியார்) நல்லம்மா என்பவரைத் திருமணம் செய்ததன் பின்னர்தான் கிறிஸ்தவ மதம் இங்கு மேலும் வலுப்பெறத் தொடங்குகின்றது. இந்தத் தோவாலயம் அமைந்திருக்கும் இடத்தில்தான் விபுலானந்தர் தற்போது இருக்கும் சிவானந்தாப் பாடசாலையைக் கட்ட முயன்றபோது இங்குள்ள போடிமார் களால் விபுலானந்தர் குழுவினர் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

எனவே, கிறிஸ்தவ மதம் அம்பிலாந்துறைக்குள் உட்புகக் கூடாது என்பதில் இங்குள்ளவர்கள் கவனமாக இருந்திருக்கின்றார்கள். மண்முனைப்போடியின் 1111 ஏக்கர் உறுதி ஏட்டினைக் களவெடுத்து குஞ்சிலயாப்போடி வன்னியனுக்கு வெள்ளைக் காரி கொடுத்ததன் நோக்கம் வன்னியன் கிறிஸ்தவன், அவன் பரம்பரையும் கிறிஸ்தவர்களாக மாறுவார்கள். அப்போது பூமி கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவ குடும்பத்தாருக்கும் சேரும் என்ற நோக்கம் கொண்டாகும். இந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. மாறாக ஏமாற்றத்தையே கொடுத்தது. இன்றைய நிலையில் அம்பிலாந்துறை மேற்கில் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்டுள்ளது. இம் முயற்சி அண்மைக் காலத்தில் கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றப்பட்ட குலம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# பிரதான கோயில்களுடன் உள்ள உறவு

அம்பிலாந்துறை மக்களுக்கு பண்டு பரவணி காலந் தொடக்கம் வேறு ஆலயங்களிலும் பூசை நடைமுறைகள் இருந்துவருகின்றன. வேறு ஊர்களுக்கு இல்லாத பெருமை அம்பிலாந்துறைக்கு உண்டென்றால் அப்பெருமைகள் யாவும் போடிகள், வன்னியர் களைத்தான் சாரும். செட்டிபாளையம் கண்ணகையம்மன் ஆலயம், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், கதிர்காமம் முருகன் ஆலயம், உகந்தை முருகன் ஆலயம் மாவேற்குடாப் பிள்ளையார் ஆலயம் போன்ற ஆலயங்களில் பூசை நடைமுறைகள் இருந்துள்ளன. காலவோட்டத்தில் சில ஆலயங்களில் பூசை நடைமுறைகளளைத் தொடரமுடியாமல் போயுள்ளது.

## கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

உலகநாச்சி வருகைக்குப் பின்னர் இவ்வாலயத்தின் சுயம்புலிங்கம் வெளிப்படுகின்றது. இக்காலம் மூன்றாம் நூற்றாண்டு என அறியக்கிடைக்கின்றது. உலகநாச்சி மண்முனைக்கு வந்த காலத்தில் அம்பிலாந்துறையில் தங்கியிருந்து காடு சூழப்பட்ட அந்தப் பிரதேசத்தினை வெளியாக்கி குடிகளை அமர்த்தியிருப்பாள் என்பதில் சந்தேகமில்லை. காடுகளை வெளியாக்கி குடிகளை அமர்த்துவதென்பது அக்காலத்தினைப் பொறுத்தவரையும் மிக நீண்டகாலம் சென்றிருக்கும். அதுவரையும் அவள் அம்பிலாந்துறையில் தான் தங்கியிருப்பாள் என்று கூற இடமுண்டு. இந்தக் காலப் பகுதியில்தான் சுயம்புலிங்கம் (தானாகத் தோன்றியது) அவ்லிங்கம் கொக்கட்டி மரத்தின்வழி திகடன் குழுவிடம் வெளிப்படுகின்றது. செய்வதறியாது திகைத்து நின்ற இக்குழுவினர் இந்தச் செய்தியினை உலகநாச்சிக்கு தெரியப்படுத்துகின்றனர். அவர்கள் கூறியதற்கேற்ப உலகநாச்சி அவ்விடம் வந்து, கொக்கட்டி மரத்திலிருந்து குருதி வடிந்ததைக் கண்டு உடல் நடுங்க நின்று, துணியால் அதை மறைத்து, உலகம்போற்றச் செய்தாள் என்று வரலாறு கூறுகின்றது.

உலகநாச்சியினைத் தொடர்ந்து ஆலயங்களை நிருவகிப்பதில் பல மாற்றங்கள் இடம்பெற்றிருந்தன. பின்னர் மட்டக்களப்புப் பிரதேசத்திலே ஆலயங்களை நிருவகிக்கும் பொறுப்பு வன்னியர்களிடமிருந்தது. குறிப்பாக மட்டக்களப்பில் உள்ள ஆலயங்களின் நிருவாக நடை முறைகள் யாவும் அம்பிலாந் துறையிலிருந்த வன்னியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் இக்கோயிலையும் பராபரித்தார்கள். அவர்களுடைய தொடர்பு தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வேரூன்றியுள்ளது.

ஆலயங்களை நிருவகிப்பதிலும் அவற்றினைப் புணரமைப்பதிலும் வன்னியர்களின் தொடர்பு இருந்துள்ளது. அக்காலம் தொடக்கம் இந்த ஆலயத்திலும் தோரணம் கட்டுவது அம்பிலாந்துறை மக்களுக்கே உரியது. அதுபோல் தேருக்கு சீலை போடுவதற்காகவும், எண்ணெய் வைப்பதற்காகவும் முறையே அம்பிலாந்துறையில் உள்ள சலவைத் தொழிலாளிகளுக்கும், நாவிதர்களுக்கும் அந்த உரிமை அறுமக்குட்டிப்போடியினால் கொடுக்கப்பட்டு இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது. தேசத்துக் கட்டாடியினை ஆலயத்தின் கடிதத் தலைப்பில் பதிவுத் தபால் மூலம் அழைக்கப்படுகின்ற வழக்கம் இன்றும் உள்ளது. அத்தோடு அவருக்கு ஆலய ஆண்டு விளம்பரமும் வைத்து அனுப்பப்படும். அவர் படையாண்டகுடித் திருவிழா இடம்பெறும் அன்று இரவு வந்தால் தேரோட்டம் முடிந்துதான் செல்வது வழக்கமாகும். அம்பிலாந்துறையில் இருந்த நாவிதர்கள் இன்று களுதாவளையில் இருந்தாலும் அவர்களுக்கும் விளம்பரமும் அறிவிப்பும் வழங்குவது வழக்கமாகும். அத்தோடு மரபு ரீதியாக அம்பிலாந்துறையில் பிறந்த படையாண்டகுடியைச் சேர்ந்த ஒருவரே செயலாளர் பதவியை வகிப்பார் என்ற தேசவழமையின் கீழ் இந்த நடைமுறை உண்டு.

1. க.குஞ்சிலயாப்போடி வன்னியனார் - அம்பிலாந்துறை
2. ஆ.வீரபத்திரப்போடி உடையார் - அம்பிலாந்துறை
3. நி.வ.சி.வீமாப்போடி உடையார் - அம்பிலாந்துறை
4. சி.கதிர்காமத்தம்பிப்போடி வண்ணக்கர் - அம்பிலாந்துறை
5. செ.வ.வி.பண்டாரிப்போடி வண்ணக்கர் - அம்பிலாந்துறை
6. எ.அழகையா வண்ணக்கர் - அம்பிலாந்துறை,
7. கந்தப்போடி வண்ணக்கர் - அம்பிலாந்துறை,

6. த.வி.வ.கதிராமப்போடி வண்ணக்கர் - அம்பிலாந்துறை
7. பா.அரியநேந்திரன் வண்ணக்கர் - அம்பிலாந்துறை
8. இ.சாந்தலிங்கம் வண்ணக்கர் - அம்பிலாந்துறை

சி.கதிர்காமத்தம்பிப்போடி வண்ணக்கர் - ஏறாவூர்
செ.வ.வி.பண்டாரிப்போடி வண்ணக்கர் - கொக்கட்டிச்சோலை
த.வி.வ.கதிராமப்போடி வண்ணக்கர் - அரசடித்தீவு
இ.சாந்தலிங்கம் வண்ணக்கர் - மகிழடித்தீவு
இவர்கள் யாவரும் அம்பிலாந்துறையினைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். திருமணத்தினையே அந்தக் கிராமங்களில் செய்துள்ளனர்.

இந்த வண்ணக்குமுறை மாகோன் காலத்திலிருந்து நடை முறையில் இருந்து வந்துள்ளது. எனினும், கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக்கொண்டு இவ் விபரம் தரப்படுகின்றது. மாகோன் கலிங்ககுலம் என்பதனால் அக்குலத்தவர்களுக்கு தலைமை வண்ணக்கர் பொறுப்பும், வன்னியர்களை முதன்மைப்படுத்தி செயலாளர் வண்ணக்கர் படையாண்ட குடியினருக்கும் உலகநாச்சியினை முதன்மைப்படுத்தி பொருளாளர் வண்ணக்கர், உலகிப்போடியார் குடியாருக்கும் வழங்கப்பட்டது. இந்த மூன்று வண்ணக்குமாருந்தான் ஆலயத்தின் பிரதான இடத்தினை வகிப்பவர்கள். இதற்குக் காரணம் அதிகாரபூர்வமான அரசியல் பின்னணிதான். இவர்களுக்குப் பின்னர்தான் ஏனைய குடிகளுக்கான நிருவாக பொறுப்பு இருந்துள்ளது.

வன்னியர்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலுக்காகப் பல ஏக்கர் நிலங்களை எழுதிக் கொடுத்துள்ளனர். குறிப்பாக வீரானையிலுள்ள பல ஏக்கர் நிலங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்த வயல் நிலங்கள் அம்பிலாந்துறையைச் சேர்ந்த கதிர்காமப்போடி வன்னியனின் மறுபங்கு என்ற பெயரில்தான் எழுதப்பட்டிருக்கின்றது. அதுபோல் அம்பிலாந் துறையிலுள்ள சின்னவில்லு வயல் நிலங்கள் படையாண்டகுடி திருவிழாவுக்காக வன்னியர்களால் வழங்கப்பட்டிருக்கின்றது. தற்காலத்தில் இந்தப் பூமி தனிப்பட்டவர்களின் பெயர்களில் உள்ளது.

வன்னியர்களின் காலத்தில் அவர்களே ஆலயக் கூட்டங்களை தலைமைதாங்கி நடாத்தி வந்துள்ளனர். இந்த நடைமுறை மட்டக்களப்பிலுள்ள அக்கால நடைமுறையாகும். அந்த வகையில் நோக்கும்போது அம்பிலாந்துறையில் இருந்த போடிகளும் வன்னியர்களும் இவ்வாலயத்தினை காலாகாலமாக வழிநடத்தியிருக் கின்றார்கள். கொக்கட்டிச்சோலை சிவதலத்தின் இருப்பு அம்பிலாந்துறை வன்னிமைகளின் வழிதான் நிலைகொண்டிருக் கின்றது என்பதற்குச் வய்மொமித் தகவல்கள் சாட்சியாக இருந்தாலும் கிடைக்கப்பெற்ற எழுத்துமூலத் தகவல்களும் அதனை உறுதி செய்கின்றன. எனினும், மட்டக்களப்பின் பிரபல ஆய்வாளர்களுடைய கட்டுரைகளைத் தாங்கிவந்த தேரோட்ட மலரில் அத்தகவல்கள் எதுவும் இடம்பெறவில்லை. இது தவிர இடம்பெற்ற சில முக்கிய தகவல்கள் முன்னுக்குப் பின் முரண்பாடாக வருகின்றது, அத்தகவல்கள் யாவும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தி நிற்பதோடு கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரம் பற்றிய புத்தகம் ஒன்று இருக்கின்ற தகவல்களைக்கொண்டு இலங்கை வரலாற்றுடன் ஒப்பிட்டுப்பார்த்து வெளியிடப்படுவது காலத்தின் தேவையாகும்.

## செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயில்

செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோவிலில் உள்ள கண்ணகியம்மன சிலை செட்டிபாளையத்தில் தாபிகப்படுவதற்கு முன்பாக கிரான்குளத்திலே தாபிக்கப்பட்டிருந்தது. அச்சிலை ஒத்துக்குடாவிலிருந்து கந்தப்பனால் கொண்டுவரப்பட்ட ஏழு சிலைகளுள் ஒன்று. மற்றய ஆறு சிலைகளும் ஆறு ஊர்களில் தாபிக்கப்பட்டிருக்கின்றன. கிரான்குளத்தில் சிறாம்பியடி, பிள்ளையாரடித்திடல், பிள்ளையாரடி, முன்மாரி என பெயர்பெறும் இடத்தில்தான் கண்ணகையம்மனைச் சிறாம்பி கட்டி வழிபடப்பட்டிருக்கின்றனர். கண்ணகியம்மன் அறுமக்குட்டிப் போடியின் கனவில் தோன்றி "எனக்குப் பிள்ளைக்குரல் கேட்டுச் சயிக்கேலாது, மஞ்சலிடி, மாவிடிச்சத்தம் பொறுக்கேலாது, வெப்பம் சயிக்க முடியாது எனவே, என்னைச் செட்டிபாளையம் கிராமத்தில் மருத நிழல் சூழலில் மருத நிழல்சோலை நடுவே ஆலயமமைத்து

ஏழுரும் சேர்ந்து வழிபடும்படி" கூறியதாக செவிவழிக் கதைமூலம் அறியமுடிகின்றது. என்னும், கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று ஒல்லாந்தரால் கட்டப்பட இருக்கின்ற தகவல் அறிந்து அம்மன் சிலையினை செட்டிபாயையத்தில் அமர்த்தியதாக தகவல் உண்டு. எது எவ்வாறாக இருந்தாலும் அம்மன் வாக்குப்படி அம்பிலாந்துறை, கிரான்குளம், குருக்கள்மடம், செட்டிபாளையம், தேற்றாத்தீவு, கழுதாவளை, பழுகாமம், ஆகிய கிராமத்தவர் சேர்ந்து வழிபாடாற்றி வந்தனர். ஆரம்ப காலத்தில் கண்ணகியம்மன் கதவு திறப்புப் பூசை கிரான்குளத்து கிராம மக்களுக்கும் அம்பிலாந்துறை கிராம மக்களுக்கும் இருந்திருக்கின்றது. குளிர்த்தில் பூசையினை பழுகாமத்து மக்கள் செய்து வந்திருக்கின்றனர். பழுகாமத்து மக்களுக்கும் களுதாவளை மக்களுக்கும் குளுர்த்தில் பூசை சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினையில் களுதாவளை மக்களுக்கு 1935ஆம் ஆண்டு காலத்தில் கைமாறப்பட்டிருக்கின்றது.

ஆரம்பகாலமிருந்தே இக்கோயில் அம்பிலாந்துறையைச் சேர்ந்த அறுமக்குட்டிப்போடி, குஞ்சிலயாப்போடி வன்னியனார், அவருடைய மகன் கதிராமப்போடி வன்னியனார், நி.சி.வ.வீமாப்போடி உடையார், இ.வ.வி.வீரபத்திரப்போடி வன்னியனார் , தம்பிமுத்து உடையார் என்று நிருவாகப்பொறுப்பு இருந்திருக்கின்றது. பின்னர் கால மாறுதல்களுக்கேற்ப நிருவாக அமைப்பில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

செட்டிபாளைய ஆலயத்தின் கண்ணகியம்மன் கோயில் கூட்டக்குறிப்பில் 1816ஆம் ஆண்டுக்குப் பின்னரான தகவல்கள் வருகின்றன. 1880ஆம் ஆண்டு வைகாசி 24ஆம் திகதியக் கூட்டப்படி காலஞ்சென்ற கு.வ.கதிராமப்போடி (குஞ்சிலயாப்போடி வன்னியனாரின் மகன்) வன்னிமையிட மிருந்த செட்டிபாளையத்து அம்மனுடைய திருப்பணிச் சாமான்களை சி.வ.வீமாப்போடி உடையாரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 1891ஆம் ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் திகதிய கூட்டத்திற்கு சி.வ.கதிரமலைப்போடி வன்னிமை, தம்பிமுத்து உடையார், ந.தோ.குமரப்பெருமாள், வே.தோ.கதிரேசப்பிள்ளை, கு.தம்பையாக் குருக்கள் (பழுகாமம்) போன்றவர்கள் கலந்து கொண்டிருக்கின்றனர்.

1891ஆம் ஆண்டு ஆனி மாதம் 01ஆம் திகதி சி.வ.கதிரமலைப்போடி வன்னிமை, தம்பிமுத்து உடையார் பிறரும் சேர்ந்து கோவில் திருப்பணிப் பொருட்களை வே.அ.பொ.கந்தப்பனிடம் ஒப்புக் கொடுத்துள்ளனர். இவர்கள் இருவரும் அம்பிலாந்துறையைச் சேர்ந்தவர்கள்.

1897ஆம் ஆண்டு பங்குனி மாதம் 07ஆம் திகதி இடம்பெற்ற கண்ணகியம்மன் கோயில் கூட்டத்தில், அம்பிலாந்துறையிலிருந்து, நி.சி.வ.வீமாப்போடி, பொலிஸ் தலைமையதிகாரி இ.வ.வி.வீரபத்திரப் போடி ஆகிய இருவரும் கலந்து கொண்டுள்ளனர். அதன் பின்னர் கூட்டக்குறிப்புத் தகவல்களில் அம்பிலாந்துறைப் பிரநித்துவம் பற்றிக் குறிப்புக்கள் வருவதாகத் தெரியவில்லை. எனினும், 1964ஆம் ஆண்டு ஆடி மாதம் 05 ம் திகதிய கூட்டத்தில் அம்பிலாந்துறை மக்கள் சடங்கு கேட்டு விண்ணப்பம் அனுப்பியமைக்கான தகவல் வருகின்றது. இவர்கள் விண்ணப்பம் அனுப்பியும் கூட்டத்திற்குச் சமூகம் கொடுக்கவில்லை என காட்டப்படுகின்றது.

செட்டிபாளைய கண்ணகியம்மன் கோயில் மடாலயமாகக் காட்சியளித்திருந்தது. இக்கோயிலைக் கட்டியவர் குஞ்சிலயாப் போடி வன்னியனார். அந்த ஆலயம் கொழுக்கி ஓட்டினால் வேயப்பட்டிருந்தது. அதனை பிற்காலத்தில் இடித்தவர்கள் உடைத்து மண்ணுக்குள் புதைத்து விட்டார்கள். (க.பொன்னுத்துரை - மாங்காடு)

செட்டிபாளையக் கண்ணகையம்மன் கோயிலைப் பராபரித்து வந்தவர்கள் அம்பிலாந்துறையில் இருந்த வன்னிமைகளும் அவர்களைத் தொடர்ந்து வந்த நிருவாகிகளும்தான். பூரணகும்பத்திற்கு நெல்கொடுத்து கதவு திறக்கும் வழக்கம் அம்பிலாந்துறை மக்களுக்கும் கிரான்குளத்து மக்களுக்கும் இருந்திருக்கின்றது. வெள்ளிக்கிழமை கும்பம் வைத்துக் கதவு திறந்ததும் சனிக்கிழமை காலையில் வள்ளத்தில் வட்டா மடையினை அம்பிலாந்துறைக்குக் கொண்டு சென்று அறுமக்குட்டிப்போடிக்குக் கொடுத்துள்ளனர். பின்னர் வன்னியனாருக்குக் கொடுத்துள்ளனர். இவ்வாறு வட்டாமடை கொடுப்பது நீண்டநாள் வழக்கமாகும். குஞ்சிலயாப்போடி

வன்னியன் தனது காலத்தில் இது பற்றி ஆழமாகச் சிந்தித்துள்ளார். வள்ளத்தில் வட்டாமடையினைக் கொண்டுவரும்போது பலரும் அதில் வருவார்கள் அம்மனுடைய புனிதப் பொருள் அசுத்தப்படக் கூடாது என்பதற்காக அவர் கூறினாராம் இனி நீங்கள் இங்கு கொண்டு வராதீர்கள் எங்களுடைய சகோதரர்கள், உரிமைக் காரர்கள், வாரிசுகள் குடியிருப்பில் இருக்கின்றார்கள் (தேற்றாத்தீவுக் கிராமத்தில் உண்டு) அவர்களிடம் இந்த கௌரவ பங்கினைக் கொடுங்கள். அக்கால முதல் அந்தப் பங்கு இன்று வரையும் அம்பிலாந்துறை மக்கள் சார்பாக குடியிருப்பு மக்களிடமே ஒப்படைக்கப்பட்டு வருகின்றது. சின்னத்தம்பி உடையார் (அம்பிலாந்துறையில் இருந்து பின்னர் குடியிருப்பில் இருந்தவர். இவர்தான் 150 ஏக்கர் நெற்காணியினை கண்ணகையம்மன் கோயிலுக்குக் கொடுத்தவர்) மயிலிப்போடி, கணபதிப்பிள்ளை, குஞ்சித்தம்பி, கதிராமப்போடி, மண்முனைப்போடி, பொன்னுத் துரை (2015) என்று அந்த வட்டாமடை இன்று வரையும் ஒப்படைக்கப்பட்டு வருகின்றது.

பூரண கும்பத்திற்கு நெல் கொண்டு செல்லும் வண்ணக்குமார்களாக அம்பிலாந்துறைச் சார்பாக ச.முத்தையா, வீ.பாக்கியராசா என்பவர்கள் இன்றும் செல்கின்றனர். 2015 ஆம் ஆண்டு பாக்கியராசா சென்றுள்ளார். அன்று ஐந்த மரைக்கால் நெல் தோளினால் சுமந்துகொண்டு கொடுக்கப்பட்டது. இன்று ஓர் அவணம் நெல் கொடுக்கப்படுகின்றது. இந்த நெல் இன்றும் அம்பிலாந்துறைக்குச் சென்று எடுத்து வரப்பட்டு கொடுக்கப் படுகின்றது. ஆண்டினைச் சரியாகக் குறிப்பிட முடியாது. சடங்கு தொடங்குவதற்கு குடியிருப்பிலிருந்து பூரண கும்பத்திற்கான நெல் கொண்டு வரப்பட்டது. அதனை வண்டிலில்தான் கொண்டுவந்தனர். குறிப்பிட்ட இடத்துக்கு அப்பால் வண்டில் நகரவில்லை. வந்தவர்களும் முயற்சி செய்து பார்த்தார்களாம் மாடு அசைய வில்லை. பின்னர்தான் தெரியுமாம் மாங்காட்டில் சவம் இருப்பது. பின்னர் சவம் எடுத்ததன் பின்னர்தான் மாடு ஆலயத்தினை நோக்கி நடந்ததாம். அவ்வாறான அதிசயங்களும் இடம்பெற்றிருக்கின்றன.
(க.குணசேகரம் உதவிக் கல்விப் பணிபாபாளர் - மாங்காடு)

செட்டிபாளையத்துக் கண்ணகை அம்மன் கோயிலை உருவாக்கி பூசை நடைமுறைகளைக்கொண்டு வந்தவன் அறுமக்குட்டிப்போடி. இவன் மட்டக்களப்பு வடக்குப் பிரதேசத்தை அம்பிலாந்துறையிலிருந்து ஆட்சி செய்தான். ஆகவேதான், அக்காலம் தொடக்கம் அம்பிலாந்துறை மக்களுக்கு பூசை கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து வந்தது. அதுமட்டுமல்ல, அம்பிலாந்துறை மக்கள் சார்பான பிரதிநிதிகள் இவ்ஆலயத்தில் பிரதான இடம் வகித்தவர்கள். இன்றும் வகிக்க வேண்டியவர்கள். எனினும், துரதிஷ்டவசமாக அக்கோயிலோடு தொடர்ந்து இருக்கமுடியாமைக்கு, போக்குவரத்தும், நாட்டில் அவ்வப்போது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளுமே காரணமாகும். (கன்னக்குடாத்துறை கண்ணகைணம்மன் கோயிலுக்குப் பூசை செய்வதற்குப் போய் வருவதற்காக வெட்டப்பட்டதுறை என்பது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒன்று.) எனினும், கண்ணகையம்மன் சடங்கினைச் செய்துவரும் மக்கள் வரலாற்றை அறிந்து, மீண்டும் அந்த சந்தர்ப்பத்தைத் தருவார்களேயானால் அதனை மனப்பூர்வமாக ஏற்று, சடங்கினை சிறப்பாகச் செய்வதற்கு அம்பிலாந்துறை மக்கள் பேரார்வம் கொண்டுள்ளார்கள்.

கண்ணகியம்மன் கோயிலுக்கான தவில் சேவிக்கும் பொறுப்பு அம்பிலாந்துறையில் இருந்த நாவிதர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நடைமுறை பண்டைக் காலமுதற் கொண்டு நடைமுறையில் இருந்து வருகின்றது. அறுமக்குட்டிப்போடி இவர்களுக்கு இராசமேளம் ஒன்றினை வழங்கினான். இது வெண்கலத்தினால் வார்க்கப் பட்டிருந்தது. துண்டு துண்டாகக் காணப்படும் இந்தத் துண்டுகளைப் பொருத்தினால் மாறுபாடில்லாது அமையுமாம் அந்த இராசமேளம். இந்த இராச மேளத்தினை நாவிதர்களின் தலைவன் பத்தன்தான் கொண்டு செல்வார். அதற்குப் பாய்போட்டு வெள்ளை விரித்து அதன் மேல்தான் வைப்பார்கள். இந்த மேளம் குறிப்பது "அறுமக்குட்டிப் போடியால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பெயரில்வந்துள்ளேன்" என்பதாகும். ஊரில் ஒருவர் இறந்ததும் இராச மேளம் தானாகவே உறுமமாம் அத்தகைய சிறப்பு இம்மேளத்துக்குண்டு.

கண்ணகியம்மன் கோயிலில் எப்போது அம்பிலாந்துறைக்கான பூசை விடுபட்டதென்று சரியாகக் குறிப்பிடப்படாததற்கான காரணம் இன்றும் இவ்வூர் சார்பான பூசை நடைமுறைகள் அற்றுப் போகாததுதான். ஏதோ ஒருவகையில் அம்மனுக்கான உபயம் அம்பிலாந்துறை மக்கள் சார்பாக இன்றும் கிடைப்பதனையிட்டு நாங்கள் புகழாங்கிதம் கொள்கின்றோம். இக்கோயில் ஆரம்பிக்கப்பட்ட காலம் அறுமக்குட்டிப்போடி காலம் என்பதனால் இவர் பதவியேற்ற கி.பி.1766ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி.1776ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் பொருட்களும், பணமும் இவரிடம் மிதமக இருந்துள்ளது. அத்தோடு மாபெரும் வீரனாக வலம் வந்தவன், மட்டக்களப்பினையே தனது ஆளுகைக்குள் வைத்திருந்தவன் என்பதன் பின்னணியில் பார்க்கும் போது இக் காலப் பகுதிக்குள்தான் செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயிலினை ஆரம்பித்திருக்க வாய்ப்புண்டு. இதற்குப் பின்னருள்ள காலங்கள் அறுமக்குட்டிப்போடி பிரச்சினைகளைச் சந்தித்த காலமாகும்.

## தாந்தாமலை ஸ்ரீ முருகன் கோயில்

தாந்தாமலை முருகன் கோயிலில் ஒருநாள் திருவிழாவும், சிவராத்திரிப் பூசையும் அம்பிலாந்துறை மக்களுக்குண்டு. இந்த நடைமுறை பண்டுதொட்டு இருந்து வருகின்றது. அரசர்களுடைய தொடர்பு இந்த ஆலயத்தில் பூசை நடைமுறைகளைக் கொண்டு வந்தன. கண்டிய மன்னனுக்கும் போடிகளுக்கு இடையிலுள்ள தொடர்பு தாந்தாமலையூடாகவே இடம்பெற்றிருக்கின்றது. தாந்தாமலை அம்பிலாந்துறை வீதி "ராஜ" வீதியென அக்காலத்தில் அழைக்கப்பட்டிருக்கின்றது. ஆரம்பகால வன்னிமைகளின் போர் வீரர்கள் வனங்களிலே முகாமமைத்து இருக்கின்றார்கள். அந்த வகையில் இவர்கள் தாந்தாமலையினைத் தளமாகப் பயன்படுத்தி இருக்கலாம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் திட்டமிட்டு வன்னியர்களும், போடிகளும் கொல்லப் பட்டமையினால் இப்பிரதேசம் பாதுகாப்பாக இருந்திருக்க அதிக வாய்ப்புண்டு. கி.பி.12ஆம் நூற்றாண்டு காலத்தில் ஆடகசௌந்தரி ஆட்சியும் தாந்தாமலையை மையமாகக்கொண்டே இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. ஆடகசௌந்தரியினை குளக்கோட்டு மன்னன் திருமணம் செய்திருந்தான். குளக்கோட்டு

மன்னனுக்கும் கலிங்க மாகோனுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. எனவே, தாந்தாமலைக் கோயிலுக்கும் வன்னிமைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது எனலாம். இத்தொடர்பு வன்னிமைகள் இப் பிரதேசத்தில் இருக்கும் காலம் வரையும் இருந்திருக்கின்றது. அவர்கள் ஆலயங்களைப் புணரமைப்பதிலும் பூசை நடைமுறைகளைச் செய்வதிலும் கண்ணுங்கருத்துமாக இருந்தவர்கள் மட்டுமன்றி, ஆலயத்தினுடைய நிருவாக அமைப்பிலும் பிரதான இடம் வகித்தவர்கள். இவர்களுடைய தலைமையில்தான் ஆலயத்தின் பொதுக் கூட்டங்களும் இடம்பெற்றிருக்கின்றது.

கண்ணாயுதப்போடி காலத்தில் தாந்தாமலை பூசை சிறப்புப் பெற்று இருக்கின்றது. மாவடிமும்மாரியில் இருந்த இப்போடி இக் கோயிலுடன் சிறந்த தொடர்பினை வைத்திருந்துள்ளான். இவருடைய மகன் கந்தப்போடி உடையார் (விதானை) மண்முனைப் போடி ஆகிய இருவரும் மண்முனைப் பிரதேசத்திலே முக்கியமான பதவியினையும் இடத்தினையும் வகித்தவர்கள். கந்தப்போடியாரு டைய மகன் பாக்கியசெல்வம் மாவடிமும்மாரி பகுதிக்கே விதானையாராக நியமிக்கப்பட்டவர். இவர்தான் மாவடிமும்மாரி அ.த.க. பாடசாலை உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தவர் மட்டுமன்றி அவர்களுடைய பூர்வீக நிலத்தினையும் கொடுத்தவர். இதனை மாவடிமும்மாரிச் சமுகம் இலகுவாக மறந்துவிடமுடியாது. இந்தப் பாடசாலையினை கண்ணாயுதப்போடி பரம்பரையில் ஒருவருடைய பெயரினை இடுவார்களானால் மேலும் ஒருபடி சிறக்க வாய்ப்புண்டு. கண்ணாயுதப்போடி வாழ்ந்த காலம் 18ஆம் நூற்றாண்டு என்பதனால் அக்காலத்தில் தாந்தா மலையினுடைய பூசை நடைமுறைகள் சிறப்பாக இடம் பெற்றிருக்கும் என்பதனை உறுதியாகக் கூற வாய்ப்பு ஏற்படுகின்றது.

தாந்தாமலை ஆலய வரலாறு என்பது பூர்வமானது. அதனை அறிந்து செயலாற்றுவது இன்றியமையாதது. இத்தகைய வரலாற்றினைக்கொண்ட ஆலயம் சிலகாலம் பூசை நடைமுறைகள் இல்லாமல் இருந்திருக்கின்றது. 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் கட்டமைக்கப்பட்டு பூசைநடைமுறைகள் கொண்டுவரப் படுகின்றன. அக்காலம் தொடக்கம் அம்பிலாந்துறை கிராம

மக்களுக்கும் பூசைநடைமுறைகள் தாந்தாமலை ஆலயத்தில் இருந்துவருகின்றது.

## பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோயில்

பண்டாரியாவெளியில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத் தொடர்பும் அம்பிலாந்துறை வரலாற்றுடன் தொடர்புபட்டது. நான்கு ஆண் சகோதரர்களைக்கொண்ட கொம்பியுடன் நாகம் ஒன்று பிறந்தது. காலப்போக்கில் தாயிடம் இருந்த அசைவுள்ள பொருட்கள் நாகத்தை விடுத்து பங்குபோடப்பட்டன. இதனை ஏற்காத நாகம் இப் பிரிவினையை இரண்டு தடவை குழப்பிவிட்டது. மூன்றாம் தடவை இந்த நாகத்தையும் ஒரு சகோதரராய் ஏற்று பொருட்கள் ஐந்தாகப் பிரிக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட நாகம் தனது பங்கை கொம்பியின் பக்கம் சேர்த்துவிட்டு எங்கேயோ மறைந்தது. பல ஆண்டு கழிந்தபின் கொம்பியின் சந்ததியில் ஒருவர் கனவில் தோன்றி,"நான் நாகமுனை (அம்பிலாந்துறை) வயலில் வைக்கப்பட்டுள்ள ஒரு சூட்டின் மேல் இருப்பதாகவும் தன்னைப் பண்டாரியாவெளி நாககட்டில் இருக்கும் புற்றில் கொண்டு விடுமாறும் கூறியது" அவ்வாறே மக்கள் செயற்பட்டனர். (மகிழை மகேசன்) ஆகவே, நாகதம்பிரானின் உற்பத்தி அம்பிலாந்துறை வரலாற்றுடன் தொடர்புபட்டிருக்கின்றது. இந்த வரலாற்று நிலையினை பண்டுபரவனி நடைமுறையிலும் விளங்கிக் கொள்ளமுடியும்.

இன்றுவரையும் ஆனி மாதத்தில் வரும் ஆனி உத்தரம் அமைந்திருக்கும் முதல் வெள்ளியில் கதவு திறக்கப்பட்டு, திருவிழா இடம்பெற்று அடுத்த வெள்ளியில் தீருவிழா முடிவடைகின்றது. நாகதம்பிரான் ஆலய கதவு திறந்து வரும் மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை பூசையினை அம்பிலாந்துறை மக்கள் செய்து வருகின்றனர். பிரதான ஆலயத்தின் முன்வாயிலில் தோரணம் கட்டும் உரிமையும் இவர்களுக்கே உண்டு. மரபு வழியாக உப தலைவர் பதவி அம்பிலாந்துறையில் இருக்கும் நபருக்கே வழங்கப்படுவது வழக்கமாகும். நாகதம்பிரான் அம்பிலாந்துறை தோரணம் பிந்தும்போது பண்டைய காலமுதற்கொண்டு தோரணம் கட்டும் செல்லத்தம்பி பெரியார் வீட்டக்கு வந்துவிடும். (இன்றும்

இத்தகைய நிலை தொடர்கின்றது) பின்னர் தோரணத்துடன்தான் செல்லும். ஒரு தடவை செல்லத்தம்பிப் பெரியார் அந்த நாகத்தை அம்பிலாந்துறையிலிருந்து ஆலயம்வரை தோளில் போட்டு சுமந்து சென்றிருக்கின்றார் என்பதனை இன்றும் பலர் கூறுவார்கள். இத்தகைய சிறப்பும் தோரணத்துகக் உண்டு.

பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம் ஆகியவற்றுக்கான அம்பிலாந்துறை சார்பான நிறைவேற்று நிருவாகம் மற்றும் நிருவாகம் என்பன அம்பிலாந்துறை ஸ்ரீ சித்தி விக்கிணேஸ்வரர் ஆலய நிருவாகத்தினாலே தெரிவு செய்யப்பட்டு கொடுக்கப்படுவது மரபும் சாசனமுமாகும்.

## மாவேற்குடா பிள்ளையார் ஆலயம்

ஆரம்பகாலத்தில் தற்போது வண்ணாண்டசேனை என்று பெயர்பெறும் இடத்தில் போடிச்சிமனிசி எனும் பெண்மணி ஒருவர் இருந்துள்ளார். வண்ணாண்டசேனை எனும் பெயர் அக்காலத்தில் வேலாச்சிக் கிழவன் மடு என்று அழைக்கப்பட்டது. அவர் அக்காலத்தில் இடம்பெறுகின்ற திருவிழாவுக்கு பூசைப்பெட்டி கொண்டு செல்வது வழக்கமாம். ஓர் இரவு திருவிழாச் செய்வதற்கான பொருட்களைத் தலையிலே சுமந்துகொண்டு சென்றிருக்கின்றார். அவர் செல்லும் பாதை இருமருங்கும் காடாகுமாம். இவர் செல்லும்போது காட்டுக்குள்ளே நின்ற யானை அரிசிப் பெட்டியில் தும்பிக்கையைப் போட்டதாம். இவர் பயந்து "அரிசி"என்றாராம். யானை அசையாமல் நின்றதாம். காரணம் என்னவென்றால் அரிசி என்பது யானைக்கு உறுக்கும் மந்திரமாம். பின்னர் இவர் பூசை முடிந்ததன் பின்னர் வீடு திரும்பி வரும்போது அந்த யானை அப்படியே நின்றதாம். பின்னர் அந்த யானை அப்படியே இருந்துதான் இறந்ததாம். எனவே, நாம் இப்போது உச்சரிக்கின்ற அரிசியை அரிசு என்றுதான் சொல்ல வேண்டுமாம்.

அக்காலத்தில் நீலாவணையினைச் சேர்ந்த சீவில கரையார் எனப்படும் ஒரு பிரிவினர் மீன்பிடிப்பதற்கு மாவேற்குடாவின் முன்னருள்ள கன்னக்குடா ஆற்றுக்கு வருவது வழக்கம். அவ்வாறான ஓர் இரவு சரிசாமத்தில் கொட்டு மேளம், குரவைச் சத்தம் என்பன

கேட்டிருக்கின்றன. அப்போது இவர்கள் அங்கு சென்று பார்த்திருக்கிறார்கள் அங்கு திருவிழாச் செய்த தடயம் இருந்திருக்கின்றது. அவ்விடத்தில் தங்கவேல் ஒன்றும் வைத்து வணங்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் அங்கிருந்த தங்கவேலையும் முறித்துக்கொண்டு மண்டூர் தில்லையிலே பாய்ச்சினார்களாம். பின்னர் அவர்கள் ஊரவரிடம் தங்கவேலொன்று இருப்பதாக அறிவித்து ஊரைக் கூட்டினார்களாம். அதற்காகத்தான் நீலாவனையாருக்கு மண்டூர்க் கோவில் சொந்தமானதாம். இந்தச் செய்தி தலைமுறை தலைமுறையாக கேட்கப்பட்டு வந்ததாம். (வெ.கணபதி) இக்கோயிலுக்கு வேல் வந்தமை பற்றிய வேறு கதையும் உண்டு. அம்பிலாந்துறை மக்களுக்கு மாவேற்குடா ஆலயத்தில் ஒரு பூசை இருந்திருக்கின்றது. அண்மைக் காலத்தில்தான் அந்த ஆலயத்துடனான பூசை நடைமுறை அற்றுப் போயிருக்கின்றது.

## கதிர்காமம் முருகன் ஆலயம்

கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் சித்திரைப் பூசையினைச் செய்வதற்கான உரிமம் அம்பிலாந்துறை மக்களுக்கு இருந்திருக் கின்றது. பூசையினைச் செய்வதற்காக அக்காலத்தில் ஒவ்வொரு வருடமும் ஆலயத்திற்குச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது. (கா.பூபாலபிள்ளை) காலஞ் சென்ற க.சிவஞானசெல்வம் ஆசிரியர் இவ்வாலயத்தின் அன்னதானசபை உறுப்பினராக இருந்துள்ளார்.

## உகந்தை முருகன் கோயில்

உகந்தை முருகன் கோயிலுக்குத் தோரணம் கட்டிக் கொடுக்கும் வழக்கம் அம்பிலாந்துறை மக்களுக்கே வழங்கப்பட்டிருக்கின்றது. பண்டைக் காலந் தொடக்கம் இன்று வரையும் இந்த வழக்கம் நடைமுறையில் உண்டு. இன்று ச.முத்தையா குழுவினர் அங்கு சென்று தோரணத்தினை கட்டி முருகனுக்கு சமர்ப்பித்து கதிர்காமக் கந்தனை நடையில் சென்று தரிசித்து வருகின்றனர். இவர்களுக்கு முன்னர் இவருடைய தகப்பனார் சட்டம்பியார் இப்பணியினை நிறைவேற்றி வந்திருக்கின்றார்.

இந்த தோரணம் கட்டும் வழக்கம் ஏன் ஏற்பட்டிருக்க வேண்டும். பண்டைய காலத்தில் குணசிங்க மன்னனுடைய ஆட்சி பால் நகையை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றது. அவர் அம்பிலாந்துறையைப் பற்றி நன்றாக அறிந்திருந்தார். அதனைத் தொடர்ந்து வந்த அரசர்கள் அனைவரும் இவ்வூரைப் பற்றி நன்றாக அறிந்திருப்பர். பின்னர் அறுமக்குட்டிப்போடியின் தகப்பன் பானகை என்றும், முதல் மனைவி பானகை என்றும கந்தப்போடி மட்டக்களப்பின் தென் பகுதியை நிருவகித்திருந்தமையும், போடி, வன்னியர்களுடைய ஆட்சி அம்பிலாந்துறையைத் தலைமை இடமாகக்கொண்டு இருந்தாலும் இவர்களுடைய ஆட்சிப் பரப்பு கூமுனை தொடக்கம் வெருகல் வரை இருந்தது. இந்த நிலையில் கதிர்காமம், உகந்தை ஆகிய ஆலயங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ள வாய்ப்பிருந்திருக்கும். ஏனென்றால், இவர்கள்தான் ஆட்சியதிகாரம் பெற்றவர்கள். இவர்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் எப்போதும் இருந்திருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

பிரதான கோயில்களுடன் உள்ள உறவு பண்டுபரவனியானது. இந்த உறவுகள் யாவும் அம்பிலாந்துறைக் கிராமத்திலுள்ள ஸ்ரீ சித்தி விக்கிணேஸ்வரர், சிவமுத்துமாரியம்மன் ஆலயத்தினை அடிப்படை யாகக் கொண்டு இயங்கும் கிராமத்துக்குக் கொடுக்கப்பட்டதே தவிர அம்பிலாந்துறையில் உள்ள கிராம சேவகர் பிரிவுகளுக்கு அல்ல. கிராம சேவகர் பிரிவுகள் என்பது அண்மைக் காலத்தில் நிருவாகத்தினை இலகுபடுத்துவதற்கா ஏற்படுத்தப்பட்டது. அம்பிலாந்துறை என்ற பெயரில்தான் ஆரம்பகால கிராம சேவகர் பிரிவு இருந்துள்ளது. பின்னர் அம்பிலாந்துறை மேற்கு, அம்பிலாந்துறை வடக்கு, கற்சேனை என விரிவடைந்துள்ளது. ஆலயம் ஒன்று அமையும்போது அந்தந்த கிராமசேவகர் பிரிவுகளின் பெயர் இடம்பெறுவது வழக்கமாகும். ஒரு கிராமத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பெயரில் ஒரே ஆலயங்கள் பதிவு செய்யப்பட்டு அமைய முடியாது என்பதனை அரச சுற்றுநிருபங்கள் வலியுறுத்துகின்றன. அதற்கேற்ப அம்பிலாந்துறை சிவமுத்துமாரியம்மன், ஸ்ரீ சித்தி விக்கினேஸ்வரர் என்றும், அம்பிலாந்துறை வடக்கு முத்து மாரியம்மன், ஞானசக்தி விநாயகர் என்றும், கற்சேனை மஹா விஷ்ணு என்றும் ஆலயங்களின் பெயர்கள் வருகின்றன.

# தீவுக்குடியிருப்பு பிரிந்து சென்றது

மாரியம்மன் கோயில் சடங்கு ஆரம்ப காலம் முதல் அம்பிலாந்துறையில் உள்ள மக்கள் யாவரையும் ஒன்றிணைத்திருக்கின்றது. மாரியம்மன் பாகையை பிரதி நிதித்துவப்படுத்தி பெரியகுடியிருப்பு மக்களும், பிள்ளையார் பாகையினை பிரதி நிதித்துவப்படுத்தி நடுக்குடியிருப்பு மக்களும், பள்ளயப்பந்தர் பாகையைப் பிரதிநிதித்துவப்படுத்தி தீவுக் குடியிருப்பு மக்களும், வைரவர் பாகையை பிரதிநித்துவப்படுத்தி படுத்தி நாகமுனை மக்களும் இச்சடங்கினைச் செய்துவந்தனர். அக்காலத்தில் ஒவ்வொரு பாகைக்கும் ஒரு சடங்கும் பந்தரும், தோரணமும் என்று பிரித்துக் கொடுக்கப்பட்டது. தீவுக்குடியிருப்பு மக்களுக்கு தோரணச்சடங்கன்று சடங்கு செய்வதற்கான ஏற்பாடுகள் இருந்திருக்கின்றன. அதனால் அவர்கள் அன்றிரவு வண்டிலில் சடங்கு செய்வதற்குரிய பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்திருக்கின்றனர்.

மாரியம்மன் சடங்கு செய்துவந்த பல வருடம் கடந்த பிறகுதான் கி.பி. 1922ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆலயத்தில் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அதாவது, மரபு வழக்கப்படி தோரணம் கட்டுவது, முதலாவதாக பிள்ளையார் தோரணமும், அடுத்து மாரியம்மனுக்குரிய தோரணமும், அடுத்து பேச்சியம்மனுக்குரிய தோரணமும், அடுத்து வைரவருக்குரிய தோரணமுமாகும். இதற்கு மாறாக பிரிந்து செல்லும் அந்த வருடம் தீவுக்குடியிருப்புப் பாகைக்குரிய தோரணம் பிந்தி வந்திருக்கின்றது. குறிப்பிட்ட நேரம் கடந்ததனால் மூன்றாவதாக வைரவர் பாகையைப் பிரதி நிதித்துவப்படுத்தும் மக்களால் தோரணம் ஏற்றப்பட்டிருக்கின்றது. அதனால் சினம்கொண்ட தீவுக்குடியிருப்பு மக்கள் தாங்கள் கொண்டுவந்த தோரணத்தைக் முறித்தது எறிந்தது மட்டு மன்றிப் பள்ளயப் பந்தரையும் பிரித்துச் சென்றிருக்கின்றனர்.

இத்தகைய பிரச்சினை சிக்கலை ஏற்படுத்தும் என்பதற்காக, இளையதம்பிப் பூசாரியார் இரவோடு இரவாகத் தோணியில், அப்போது களுதாவளையில் இருந்த பொன்னுச்சாமி வன்னினாரிடம் சென்றிருக்கின்றார். வன்னியனாருக்கும்

இவருக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டாம். இளையதம்பி மாபெரும் மந்திரவாதி, அவர் இவருடன் சென்ற தீவுக்குடியிருப்புப் பகுதியினருக்குக் கூறியினாராம். இளையதம்பி "நான் அங்கு வரும்போது நீங்கள் கும்பம் வைத்துப் பூசை செய்தால், நான் பிரித்துத் தருவேன். இல்லையேல் பெரியகுடியிருப்புக் கோயிலுடன் நீங்கள் இணைந்து மீண்டும் செயற்படவேண்டும்" அவர்கள் சிக்கலானவர்கள் என்றாராம். இதற்கு ஏற்ப அவர்கள் தற்காலிகமாக ஒரு சிறிய பந்தர் கட்டி பூசை செய்தார்களாம். பொன்னுச்சாமி வன்னியனிடம் பெரியகுடியிருப்புக் கோயில் நிருவாகத்தினரும் சென்று நடந்தவற்றினைக் கூறியிருக்கின்றனர். அதற்கு அவர் கூறினாராம் அவர்களும் வந்தவர்கள் நான் நாளை வருகின்றேன் பிரச்சினையினைச் சமாளிப்போம் என்றாராம். ஆனால், அதுதான் நடைபெறவில்லை. மறுநாள் வந்த வன்னியனாரின் முன்னிலையில் வைத்து, தாய்க்கோயிலார் நடந்தவற்றினைக் கூறியிருக்கின்றார்கள். நடந்தவற்றினை மறந்து நாங்கள் ஒற்றுமையாகத் தொடர்ந்து சடங்கினைச் செய்வோம். இனிப் பிரச்சினை வராமல் பார்ப்போம் என்றார்களாம். அதற்கு வன்னியனார் கூறினாராம் அவர்கள் இப்போது கும்பம் வைத்து சடங்கு செய்கின்றார்கள் வைத்த கும்பத்தைப் பிரிப்பதற்கு எனக்கு முடியாது, ஆனால், அவர்கள் மறுவருடம் இணைந்து செயற்படட்டும் என்றாராம். வன்னியனுக்குத் தெரியும் மறுவருடம் இவர்கள் இணையமாட்டார்களென்று. அம்பிலாந்துறையின் ஒற்றுமையினைப் பிரிப்பதற்கு இவர்மேற் கொண்ட பிரயத்தனம் குறிப்பிடத்தக்கது. வன்னியனாருடைய கபடத்தனந்தான் பிரிவினை ஏற்படுத்தியிருக்கின்றது. இவர் நினைத்திருந்தால் இப்பிரச்சினையினைத் தீர்த்திருக்கலாம் என்று இன்றும் கூடத் தீவுக்குடியிருப்பு மக்கள் கூறுவார்கள்.

பொன்னுச்சாமி வன்னியனின் இன்னொரு தீர்ப்புப்பற்றி கண்ணகியம்மன் வரலாற்று நூல் குறிப்பிடப்படுகின்றது, கண்ணகியம்மன் கோயிலில் ஆரம்பகாலத்தில் குளிர்த்தில் சடங்கினை பழுகாமத்துக் கிராம மக்கள் செய்து வந்திருக்கின்றனர். 1935ஆம் ஆண்டு வருடாந்தக் கூட்டத்தில் குளிர்த்தில் சடங்கு பற்றிய சர்ச்சை எழுந்துள்ளது. இரண்டு ஊரவர்களும் தமக்கே உரியது என வாதாடினர். இருசாராரும் கண்ணகியம்மன் ஆலயமுன்றலில்

குளிர்த்திலுக்குரிய சாமான்களுடன் கூடினர். பிரச்சினை தீர்க்கப்படவில்லை. பின்னர் பிரச்சினை பொன்னுசாமி வன்னியனிடம் சென்றது. அவர் வந்து, களுதாவளை மக்கள் கொண்டுவந்த வெற்றிலை, பழம், பாக்கு, கமுகம்பாளை, இளநீர், கரும்பு முதலானவற்றையும். பழுகாமத்துக் கிராம மக்கள் கொண்டுவந்த பால், தயிர், கத்தரிக்காய், கீரை என்பவற்றையும் வேறு வேறாக வைக்கச் சொன்னாராம். சடங்கு செய்யும் தலைமைக் கட்டாடியாரைக் கூப்பிட்டு, குளிர்த்தில் சடங்கு செய்வதற்கு எந்தச் சாமான் வேண்டும் என்று கேட்டாராம். அதற்கு கட்டாடியார் கழுதாவளை மக்கள் கொண்டுவந்த சாமான்களைக் காட்டினாராம். பின்னர், குளிர்த்தில் ஏடு படிப்பது யார் என்று வண்ணக்குமாரிடம் கேட்டாராம். அதற்கு களுதாவளை மக்களென்று கூறினார்களாம். இவற்றினைக் கேட்ட வன்னியன் தனது தீர்ப்பினைப் பின்வருமாறு கூறினாராம். "அம்மனைக் குளிர்த்தில் ஆட்டுவதற்குரிய சாமான் கொண்டு வந்தவர்களும், குளிர்த்தி ஏடு படிப்பவர்களுமாகிய களுதாவளை ஊரவருக்கே குளிர்த்தில் சடங்கு. இதுவே கண்ணகையம்மன் தீர்ப்பு." தீர்ப்பு அறிவித்த போது பழுகாமத்து மக்கள் வெளிநடப்புச் செய்திருக்கின்றார்கள். அப்போது பாரிய மழை பெய்ததாம். அவர்கள் கொண்டுவந்த சாமான்கள் யாவும் தேடுவாரற்றுக் கிடந்ததாம்.(கண்ணகியம்மன் வரலாறு பக் : 69)

தீவுக்குடியிருப்பு மக்களுடைய பிரிவு நிரந்தரமாக இருப்பதற்கு கடுக்கண்டர் திரியோதனன் தம்பிமுத்து மற்றும் வண்ணக்கர் சுளியர்தம்பிமுத்து ஆகியோர் காரணம் என்பர். இருவரும் தீவுக்குடியிருப்பு சார்பாக தாய்க்கோயிலுக்கு நீண்டகாலம் வண்ணக்கர்களாக இருந்தனர். இவர்கள் மீது கொண்ட பொறாமையின் காரணமாக இவர்கள்தான் இந்தப் பதவியை வகிக்கின்றார்கள் ஏன்? நாங்கள் வகிக்கக் கூடாது, என்ற எண்ணமும் தீவுக்குடியிருப்பு மக்களின் ஒருசாராருக்கு பிரச்சினையினை ஏற்படுத்தக் காரனமாக இருந்ததாம். தோரணப் பிரச்சினையினை அதற்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். கோயில் பிரிந்து சென்றாலும் வண்ணக்கர் சின்னத்தம்பி இரண்டு வருடம் கடந்துதான் தாய்க்கோயிலை விட்டு சென்றிருக்கின்றார். (ஏகாம்பரம், தங்கராசா - தீவுக்குடியிருப்பு)

இவர்கள் பிரிந்த மறுவருடம் தாய்க்கோயிலில் கும்பம் வைக்க ஐந்து நாட்கள் இருக்கும் காலத்தில் இப்பகுதியில் ஏற்பட்ட கொள்ளை நோயினால் தோரணம் முறித்துப் பிரச்சினைப்பட்டவர்கள் யாவரும் இறந்திருக்கின்றனர். உடல் அடக்கம் செய்து வீடு வரும்போது மற்றவர் இறந்துபோவாராம். இவ்வாறாக ஒரு நாளே சம்பந்தப்பட்டவர் பலர் இறந்திருக்கின்றனர். இந்த காலப்பகுதியில் அம்மன் குறையை உணர்ந்த இளையதம்பிக் குருக்கள், வீட்டில் கும்பம்வைத்து மந்திரத்தால் அம்மனை அழைத்து மன்னிப்புக் கேட்டு, ஊரைச் சுற்றி காவல் செய்து இந்தக் குறைபாட்டில் இருந்து நீங்கியதாக இன்றும் கூறுவர். அம்மனை அழைத்து இத்தகைய ஆபாத்திலிருந்து விடுபடச் செய்தவர் இளையதம்பி பூசாரியார் என்பர். இவர் மகன் செல்லையா, செல்லையா மகன் கோவிந்தராசா ஆவார். அதன் பிறகு அவர்கள் இன்று வரையும் தனியாக சடங்கு செய்து வருகின்றனர்.

இன்று தாய்ப்பற்று, தாரப்பற்று, கிராமப்பற்று , பிரதேசப்பற்று, மாவட்டப்பற்று, தேசப்பற்று இல்லாதவர்களிடம் எழுச்சி பெறுகின்ற பதவிமோகம், அரசியல் ஆசை போன்ற மாயைகள் தூரநோக்கற்ற மனநிலையினை ஏற்படுத்துகின்றன. மக்களை ஏமாற்றி பிரச்சினையினை தூண்டிவிடுவதனால் எதிர்கால சமூகப்போக்கு பாதிக்கப்படுகின்றது என்பதனை ஏமாற்றுபவர்கள் அறிவார்களா? ஏமாற்றி குரோத உணர்வினை ஊட்டுபவர் களிடமிருந்து மக்கள் விளிப்பாக இருக்கவேண்டும். இதனால் கல்வி நேரடியாகப் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. அத்தோடு கலை, கலாசாரம், சமூக ஊடாட்டம் என்பன பாதிக்கப்பட்டு மொத்தத்தில் சமூகமே அழியும் நிலை ஏற்படும். எனவே, ஒற்றுமையை நாம் பேசும்போது சிலர் கிராமப் பிரிவினை எனும் மாயையை ஏற்படுத்தி குளிர்காய நினைக்கின்றார்கள். எனவே, மக்கள் விளிப்பாக இருப்பது இன்றைய உன்னிப்பான செயலாகும்.

## மாரியம்மன் சடங்கு

1922ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் மாரியம்மன் வணக்கமுறை தோற்றம் பெற்றிருக்கின்றது. சடங்கு செய்யும் முறையில் மாற்றமில்லை. தாய்க்கோயிலின் வரன்முறையிலே சடங்கு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றது. தீவுக்குடியிருப்பில் பிள்ளையார் பாகை, மாரியம்மன் பாகை, வைரவர் பாகை, பேச்சியம்மன் பாகையாக பிரித்து சடங்கு செய்துவருகின்றனர். ஆரம்பத்தில் வசதிகருதி தீ மிதித்தலையும், தவநிலை ஏறுதலையும் ஒரே இரவில் செய்து வந்தனர். அண்மைக்காலமாக தாய்க்கோயில் சடங்கு முறையைப் பின்பற்றி முறையாகவே செய்கின்றனர். அம்மன் பூசகர்களாக இளையதம்பி, வெல்லாவெளியார், மூத்ததம்பி, செல்லையா, மயில்வாகனச் சாமியார், மூ.தங்கராசா, வே.சுப்பிரமணியம், செ.அருளானந்தம், செ.தவலிங்கம், என்போர் பூசகர்களாக சேவை செய்துள்ளனர். தற்காலத்தில் பா.இராசரெத்தினம், மா.சுப்பிரமணியம் ஆகியோர் பூசகர்களாகச் சிறந்த சேவையாற்றி வருகின்றார். ஆலய பரிபாலகர்களாக இளையதம்பி, செல்லையா, ஆகியோர் இருந்துள்ளனர். செ.தவலிங்கம் அவர்களுடைய பரம்பரையினரே மாரியம்மன் சடங்கினையும் பிள்ளையார் பூசையினையும் செய்து வந்துள்ளனர்.

## தீவுக்குடியிருப்புப் பிள்ளையார் கோயில்

பூர்வீக காலத்தில் பெரியகுடியிருப்புப் பகுதிதான் மக்கள் குடியேற்றமுள்ள இடமாக இருந்திருக்கின்றன. பின்னருள்ள காலங்களில் குடியேற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன. தீவுக்குடியிருப்பின் மேற்குப்புறமாக நாவிதர்களும், கிழக்குப் புறமாக நாசிவக்களையும் அறுமக்குட்டிப்போடி குடியேற்றியுள்ளான். 1922ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் ஆலய வணக்கம் காட்டப்படுகின்றது. களிமண்ணினால் பிள்ளையார் கோயில் இருந்திருக்கின்றது. இது இரண்டு அறையினால் ஆனது. பின்னர் நீத்துக் கட்டடத்தினால் கட்டப்பட்டிருக்கின்றது. 1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட சூறாவளி யால் கோயில் அழிக்கப்பட்டது. பின்னர் இன்றுள்ள கோயில் கட்டப்பட்டு 2002ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இன்று வரையும் தினப்பூசை இடம்பெறுகின்றது. அத்தோடு அம்மன்

சடங்கு காலத்தில் பிள்ளையார் திருவிழாவும் இடம்பெற்று வருகின்றது.

ஆரம்பகாலத்தில் மயில்வாகனச்சாமியார் இக்கோயிலுக்காகப் பலவகையில் தொண்டாற்றி இருக்கின்றார். அவர் 1945ஆம் ஆண்டு யாழ்பாபாணத்தில் இருந்த காலத்தில் இக்கோயிலுக்காகப் பல பொருட்களைக்கொண்டு சேர்த்திருக்கின்றார். இவர் கொண்டுவந்த பிள்ளையார்தான் அன்று பூசிக்கப்பட்டுவந்தது. 1922ஆம் ஆண்டு தொடக்கம் 1945ஆம் ஆண்டு வரையும் இந்தக் கோயில் ஓலையால்தான் இருந்துள்ளது. பூசைக்குரிய தளபாடங்கள், மரத் தளபாடங்கள், நெல் போன்ற பொருட்களை இவர் இக் கோயிலுக்காக வழங்கி பூசை இடம் பெறுவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றார். இவருடைய பணி இந்தக் கோயிலுக்குச் சிறந்த பங்களிப்பினை நல்கியுள்ளது. இவரை சாமியப்பா என்றுதான் அழைப்பார்களாம்.

வீரசிங்கம் அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் அவருடைய அயராத முயற்சியாலும் கிராம மக்களின் உழைப்பினாலும் பிள்ளையார் ஆலயம் கட்டப்பட்டது. ஆரம்பகால பூசகராக இளையதம்பி அவர்களே செயற்பட்டு வந்துள்ளார். பின்னர் விஸ்வநாதர், சின்னத்தம்பி, மயில்வாகனச்சாமியார், கந்தசாமி, திருச்சிற்றம்பலம், விநாயகமூர்த்தி, மோகனதாஸ் ஆகியோர் பூசை செய்துள்ளனர். குருபரன் தற்போது பூசை செய்து வருகின்றார்.

## பூசை நடைமுறைகள்

**புது வருடப் பிறப்புப் பூசை**
திரு.வே.கண்ணப்பன் குடும்பம்

**தைப் பொங்கல் பூசை**
திரு.செ.குமரப்போடி குடும்பம்

**மகா சிவராத்திரிப் பூசை**
திரு.சா வேலாப்போடி குடும்பம்

**பங்குனி உத்தரப் பூசை**

திருமதி.அ.சிவராமலிங்கம் குடும்பம்

**சித்திரை வருடப் பிறப்புப் பூசை**

திரு.சி.கீர்த்திராசா குடும்பம்

**அம்மன் திருச் சடங்கு**

பொது மக்கள் குடும்பம்

**தவநிலைச் சடங்கு**

திரு.அ. திரு.காம்பரம் குடும்பம்

**கழுமரச் சடங்கு**

திரு.வே.சிவநாமம் குடும்பம்

**தீக்கட்டை எழுந்தருளப் பண்ணல் பூசை**

திரு.இ.செல்லத்தம்பி குடும்பம்

**தீக்குளிப் பூசை**

திரு.கு.ரஜனிகாந் குடும்பம்

**நவராத்திரிப் பூசை**

1. திரு.கு.கருணாநிதி குடும்பம்
2. திரு.மா.திருச்செல்வம் குடும்பம்
3. திரு.வெ.தனிகாசலம் குடும்பம்
4. திரு.மு.சிவா குடும்பம்
5. திரு.வே.கோகுலவரன் குடும்பம்
6. திரு.மு.சசிகரன் குடும்பம்
7. திரு.க.அகிலன் குடும்பம்
8. திருமதி.க.சோதிமலர் குடும்பம்
9. திரு.வேதநாயகம் குடும்பம்
10. திரு.க.மாணிக்கவாசகம் குடும்பம்

### கேதார கௌரிப் பூசை உபயகாரர்கள்

1. திரு.மா.ஜெகநாதன் குடும்பம்
2. திரு.கீ.வாமதேவன் குடும்பம்
3. திரு.கி.ரவி குடும்பம்
4. திரு.ந.விஜயகுமார் குடும்பம்
5. திரு.செ.அருளானந்தம் குடும்பம்
6. திரு.த.சிவராசா குடும்பம்
7. திரு.சி.நாராயணபிள்ளை குடும்பம்
8. திருமதி.சி.மஞ்சுளா குடும்பம்
9. திரு.த.கிருஸ்ணபிள்ளை குடும்பம்
10. திரு.சி.செல்லத்துரை குடும்பம்
11. திரு.சா.விக்கினேஸ்வரன் குடும்பம்
12. திரு.பொ.சோமசுந்தரம் குடும்பம்
13. திரு.இ.இராஜேந்திரம் குடும்பம்
14. திரு.சி.வீரசிங்கம் குடும்பம்
15. திரு.இ.குருகுலசிங்கம் குடும்பம்
16. திரு.க.சதானந்தம் குடும்பம்
17. திரு.அ.கிருஸ்ணபிள்ளை குடும்பம்
18. திரு.பா.குணசேகரம் குடும்பம்
19. திரு.வே.சிவநாமம் குடும்பம்
20. திரு.பூ.வேல்முருகு குடும்பம்
21. திரு.பா.புஸ்பரெத்தினம் குடும்பம்

### கந்தசஷ்டிப் பூசை உபயகாரர்கள்

1. திரு.சி.வேலாயுதம் குடும்பம்
2. திரு.வே.கந்தசாமி குடும்பம்
3. திரு.பே.விஸ்வலிங்கம் குடும்பம்
4. திரு.பா.தேவராசா குடும்பம்
5. திரு.க.தேவன் குடும்பம்
6. திரு.ரா.சதீஸ்குமார் குடும்பம்

### கார்த்திகை விளக்கீட்டு உபயகாரர்கள்

1. திருமதி.தங்கராசா அன்னம்மா குடும்பம்

## விநாயக விரத உபயகாரர்கள்

| | |
|---|---|
| 1. திருமதி.அ.கைலாயபிள்ளை | குடும்பம் |
| 2. திரு.மா.சுப்பிரமணியம் | குடும்பம் |
| 3. திரு.நா.பேரின்பகரன் | குடும்பம் |
| 4. திரு.க.குருநாதபிள்ளை | குடும்பம் |
| 5. திரு.க.சுந்தரலிங்கம் | குடும்பம் |
| 6. திரு.த.சுதாகரன் | குடும்பம் |
| 7. திரு.த.விஜயராசா | குடும்பம் |
| 8. திரு.க.லிங்கராசா | குடும்பம் |
| 9. திரு.வே.அகிலன் | குடும்பம் |
| 10. திரு.பா.நடராஜா | குடும்பம் |
| 11. திரு.சி.சுந்தரலிங்கம் | குடும்பம் |
| 12. திரு. பெரியதம்பி | குடும்பம் |
| 13. திரு.க.ஐங்கரன் | குடும்பம் |
| 14. திரு.கு.அசோகன் | குடும்பம் |
| 15. திரு.மு.சங்கரப்பிள்ளை | குடும்பம் |
| 16. திரு.சி.வினாயகமூர்த்தி | குடும்பம் |
| 17. திரு.அ.ஏகாம்பரம் | குடும்பம் |
| 18. திரு.கு.அமரசிங்கம் | குடும்பம் |
| 19. திரு.பெ.முத்துலிங்கம் | குடும்பம் |
| 20. திரு.சி.முத்துலிங்கம் | குடும்பம் |
| 21. திருமதி.அ.சிவராமலிங்கம் | குடும்பம் |
| திருமதி.யோ.சரவணமுத்து | குடும்பம் |

## திருவெம்பாவைப் பூசை உபயகாரர்கள்

திரு.வே.சுப்பிரமணியம் குடும்பம்

## நாகதம்பிரான் கோயில் நிர்மானிப்பு

திரு.சு.தேவராசன் குடும்பம்

## வைரவ கேயில் நிர்மானிப்பு

திருமதி.அருந்ததி சிவராமலிங்கம் குடும்பம்

## மணிக்கோபுர நிர்மானிப்பு

திரு.செ.தவலிங்கம் குடும்பம்

1980ஆம் ஆண்டு காலகட்டத்தில் தலைவர், செயலாளர், பொருளாளர் முறையே வே.சுப்பிரமணியம், ஏ.கிருஷ்ணானந்த மூர்த்தி, உ.குமாரவேலு இவர்களுடன் நிருவாகத்தில் இருந்தவர்கள் யாவரும் முறையே ஒவ்வொரு வேக் சீமெந்து, கல், மண், மரம் போன்ற பொருட்கள் கொடுத்து எல்லோருமாக மடப்பள்ளியினை அமைத்தனர்.

1927 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே வண்ணக்குமார்கள் பள்ளயப் பாகைக்கு மாணிக்கப்போடியும், பிள்ளையார் வைரவர் பாகைக்கு வேலாப்போடியும், அம்மன் பாகைக்கு கதிராமப்போடியும் செயற்பட்டிருக்கின்றார்கள். இவர்களைத் தொடர்ந்து முறையே ஏகாம்பரம், சுப்பிரமணியம், மாணிக்கப் போடி, தங்கராசா என்போர் செயற்பட்டிருக்கின்றனர். தங்கராசாவுக்கு முன்னர் சிறிது காலம் கதிராமப்போடி அவர்களும் செயற்பட்டிருக்கின்றார்.

## தீவுக்குடியிருப்பு ஆலய பரிபாலன முறை

இந்த பெயர் விபரம் தலைவர், செயலாளர், பொருளாளர் எனும் வகையில் வருகின்றது.

*1980(முன்) வே.சுப்பிரமணியம் சோ.திருத்தனிகாசலம் உ.குமாரவேலு*

*1980(பின்) வே.சுப்பிரமணியம் ஏ.கிருஷ்ணானந்தமூர்த்தி உ.குமாரவேலு*

*சு.சின்னராசா, கு.வீரசிங்கம், ஏ.கிருஷ்ணானந்தமூர்த்தி*

1. *1994 கு.வீரசிங்கம், வே.விஸ்வலிங்கம், ச.சற்குணம்*
2. *கு.வீரசிங்கம், மு.சசிகரன், க.புவிராசா*
3. *கு வீரசிங்கம், க.வீரகுமார், க.புவிராசா*
4. *கு.வீரசிங்கம், நா.பேரின்பகரன்,க.புவிராசா*
5. *கு.வீரசிங்கம், க .மாணிக்கவாசகம், க.புவிராசா*
6. *2007 சி.சிவராமலிங்கம், நா.பத்மசீலன், க.யசோதரன்*
7. *2010 கு.வீரசிங்கம், வி.தவராசா, க.யசோதரன்*
8. *கு.வீரசிங்கம், வே.விஜயரெத்தினம், க.யசோதரன்*
9. *2011 க.விஜயரெத்தினம், ஏ.கிருஷ்ணானந்தமூர்த்தி, க.யசோதரன்*

## கற்சேனை ஆலய நிருவாக முறை

1988ஆம் ஆண்டுக்குப் பின்னர் விஷ்ணு ஆலய நிருவாம் அமைக்கப்பட்டுள்ளது. கீழ்வரும் பெயர்கள் தலைவர் செயலாளர் பொருளாளர் என்ற வகையிலே அமைகின்றன.

1. வே.சின்னத்தம்பி, சு.தேவராசன், வே.கதிராமப்போடி
2. பி.தங்கராசா, சு.இராசரெத்தினம், சீ.மகேஜ்வரன்
3. அ.கோடீஸ்வரன், சு.இராசரெத்தினம், க.அமிர்தலிங்கம் சீ.மகேஸ்வரன்.
4. சீ.பாக்கியராசா, வ.சசிகுமார், த.இராசகோபால்
5. சீ.பாக்கியராசா, தி.பார்த்தீபன், கு.சிவகுமார்

## அம்பலத்தடி ஸ்ரீ முருகன் ஆலய நிருவாக முறை

வைரமுத்து (வால்கட்டு), கந்தப்போடி விதானையார் (பண்டாரியாவெளி) இவர்கள் 1973ஆம் ஆண்டு காலத்தில் நிருவாகத்தில் இருந்துள்ளனர். வேலாப்போடி, வைரமுத்து - வீரக்குட்டி என்பவர்கள்தான் ஆலயத்தின் முழுப் பொறுப்புடையவர்களாக இருந்துள்ளனர். இவர்களால்தான் ஆலயம் எழுப்பப்பட்டிருக்கின்றது.

2008ஆம் ஆண்டிலிருந்து நிருவாகத்திலுள்ளவர்கள் விபரம்.

1. சி.சின்னத்தம்பி, சு.கேதீஸ்வரன், ஞா.குலசேகரம், க.மகேஸ்வரராசா.
2. த.சிதம்பரப்பிள்ளை, சு.தேவராசன், க.யசோதரன்
3. சி.சின்னத்தம்பி, ஞா.குலசேகரம், க.மகேஸ்வரராசா.

# கல்வி

அம்பிலாந்துறை கல்வி வரலாறு நீண்ட பாரம்பரியம் கொண்டது. அவற்றுக்கான ஆதாரங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. எனினும், அறுமக்குட்டிப்போடி காலத்திற்குப் பின்னர் போடிகல்வெட்டு மூலம் கல்விக்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அறியக் கிடைக்கின்றன. இந்த வகையில் கல்வி பற்றிய தெளிவினை பெறுவதற்காக எதிர்மனசிங்கன் காலம், அறுமக்குட்டிப்போடி காலம், கிறிஸ்தவர்களுடைய காலம், 1920ஆம் ஆண்டுக்குப் பின்னர் என்று நான்கு கட்டங்களாகப் பிரித்து நோக்கமுடிகின்றது.

## எதிர்மனசிங்கன் காலம்

மட்டக்களப்பு பூர்வசரித்திரம் தரும் தகவல்படி, கலிங்க குலத்து மாகோன் ஆட்சிக்குப் பின்னர், சுகந்திரன், எதிர்மனசிங்கன், தாதன் என்று ஆட்சி தொடர்கின்றது. மாருதசேனன் தனது மகனான எதிர்மனசிங்கனுக்கு தோப்பாவை மட்டக்களப்பு, உன்னாசகிரி, மண்முனை, கோறளை, போர்முனை ஆகிய பிரதேசங்களைப் பட்டங்கட்டிக்கொடுத்தான். இவன் கலிங்ககுடிவழி அரசுகளின் இறுதி மன்னன். இவனுடைய காலத்தில் மட்டக்களப்பில் கல்வி வளர்ச்சி கண்டிருந்தது. இவன் பதவியேற்றதும், வர்த்தகசாலைகளும் வைத்தியசாலைகளும் கல்விச் சாலைகளும் பல திக்குகளிலும் அமைக்கப்பட்டன. தானிய சங்கத்தினை ஏற்படுத்தினான், ஆலயங்களில் ஆறுகாலப் பூசை புரியச் செய்தான். மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல திக்குகளிலும் கல்விச்சாலைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அத்தகைய கல்விச்சாலை ஒன்று அம்பிலாந் துறையில் இருந்திருக்கும். அதனால்தான் அறுமக்குட்டிப்போடி பதவி ஏற்றதும் இந்தியாவில் இருந்து கற்ற குழுவினரை அழைத்து வந்து கல்வி புகட்டி இருக்கின்றான். அறுமக்குட்டிப்போடி இங்கிருந்த கல்விச்சாலையினை மேலும் புனரமைத்து கல்வியை தொடர்ந்து மக்களுக்கு வழங்கி இருக்கின்றான். இவன் காலத்துக்குப் பிறகு கல்வி வளர்ச்சி பற்றிய தகவல் போடிகல்வெட்டின் மூலந்தான் கிடைக்கின்றது.

## அறுமக்குட்டிப்போடி காலம்

அறுமக்குட்டிப்போடி காலத்தில் கல்வி பெரு வளர்ச்சி அடைகின்றது. இந்தியாவில் திருச்சிராப்பள்ளியில் அம்பிலாலந்துறை எனுமிடத்திற்குச் சென்று, பலநூலாய்ந்த பண்டிதர் சிலரை அம்பிலாந்துறைக்கு அழைத்து வந்திருக்கின்றான். இதில் செம்பனோடு ஐவர் இருந்துள்ளனர். சம்புநாதன் தலைமை ஆசிரியராக இருந்திருக்கின்றார். இவர் காலத்தில் இன்னும் பல கல்விச் சாலைகள் இருந்திருக்கலாம். அக்காலத்தில் அன்னசத்திரம் அளித்திடும் நகரமாக அம்பிலாந்துறை இருந்திருக்கின்றது. ஆகவே, பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களுக்கு அரிசிச் சோறு வழங்கப்பட வாய்பிருந்திருக்கின்றது. எதிர்மனசிங்கன் காலத்தில் இங்கு கல்விச்சாலை ஒன்று இருந்திருக்க வாய்ப்புண்டு. எனினும், அறுமக்குட்டிப்போடி பதவி ஏற்ற ஆண்டே (கி.பி 1766இல்) அம்பிலாந்துறையில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இதனை அம்பிலாந்துறைப் பாடசாலையின் ஆரம்ப ஆண்டாகக் கொள்ளமுடியும்.

செயலொடு திருச்சிராதேசத்தவரில்
அம்பிலாலந்துறையதிலே சென்று
வம்பில்லாக் கலிங்க மரபினரொருவன்
பலநூலாய்ந்த பண்டிதர் சிலரை
சம்புநாதன் தனையிருமென்று
அம்பிலாலந்துறை அதனில் வைத்து
வேண்டிய தமிழ்நூல் விளங்கப்
பயின்றென ஆண்டனரெங்கள்
ளடிகுலமரபினோர்.

(போடிகல்வெட்டு)

(அம்பிலாலந்துறை சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. திருச்சி மாவட்டத்திலுள்ள இலால்குடி எனப்படும் திருத்தலத்திற்குக் கிழக்கே மூன்றுகல் தொலைவில் உள்ளது. அம்பில் என்றும், அன்பில் என்றும் இக்காலத்தில் வழங்கப்படுகின்றது. இத்தலத்திலுள்ள திருக்கோயிலுக்கு

ஆலந்துறை என்பது பெயராகும். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய நாயன்மார்கள் இத் தலத்திலுள்ள இறைவனைப் தேவாரப் பதிகங்களால் சிறப்பித்துள்ளனர். கொள்ளிடத்தின் தென்கரையில் நின்று பாடிய சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல்களைக் கேட்டமையால் இங்குள்ள விநாயகர் செவிசாய்ந்த விநாயகர் என்று அழைக்கப்படுகின்றார். சிவபிரான் சத்தியவாகீசர், இறைவி சௌந்தரநாயகி. (கலைக்களஞ்சியம் - 2)

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அரசாங்கமே நேரடியாகக் கல்வியில் ஈடுபட்டது. பல்வேறு அதிகாரங்களைக் கொண்ட பாடசாலைச் சபையொன்று கிறிஸ்தவ சமயக் குருமார்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது. கிறிஸ்தவ சமயத்தின் மேலான்மை இச்சபையால் கண்காணிக்கப்பட்டன. கிறிஸ்தவ சமயத்தவரே ஆசிரியராக நியமிக்கப்பட்டனர்.

ஒல்லாந்தர் காலக் கல்வியில் அளவு கடந்த மதப்பற்று, கட்டாயக் கல்வி என்ற போர்வையில் மதத்தைப் பரப்புதல், புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியவர்களுக்கு மாத்திரம் பதவி வழங்கல், கல்வியினூடாகச் மதபேதங்களை உண்டாக்குவதற்கு வழிவகுத்தல், கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே வெளிநாட்டுப் புலமைப் பரிசில் வழங்குதல் என்று இறுக்கமான நிலை காணப்பட்ட இக்காலத்தில் கல்வி நிலையமொன்று அமையப்பெற்றதென்றால் போடிமார் களுடைய பராக்கிரமத்தினை சொல்லவேண்டுமா?

## போர்த்துக்கேயர் கால கல்விக் குறிக்கோள்கள்

- உள்நாட்டவர்களை உரோமன் கத்தோலிக்க மதத்திக்கு மாற்றுதல்.
- தமது மதத்தைத் தழுவியவர்கள் ஊடாக வியாபார அலுவல்களை விருத்தி செய்தல்.
- தாம் வாழ்ந்த பிரதேச மக்களின் ஆதரவை மதத்தின் மூலம் பெற்றுக் கொள்ளல்.
- உரோமன் கத்தோலிக்க மதத்தினைத் தழுவியவர்களுக்கு எழுத்து, வாசிப்பு, எண்கணிதம் போன்ற பாடங்களில் கல்வியைப் பெற்றுக்கொடுத்தல்.

- போர்த்துக்கேய கலாசாரத்தைத் தழுவிய சமூகத்தினை உருவாக்குதல்.
- நிருவாகத்தை நிலை நாட்டுதலும் விரிவாக்குதலும்.
- கத்தோலிக்க கல்வியைப் பரப்புவதற்காக பிரஞ்சிக்கன் (1543), ஜேசுயிட் (1602), டொமினிகன் (1606), ஒகஸ்டீனியன் (1606) ஆகிய பிரிவுகளை உருவாக்கி பிரசாரத்தினைத் தீவிரப்படுத்தினர்.

## ஒல்லாந்தர்களுடைய கல்விக் குறிக்கோள்கள்

- உரோம கத்தோலிக்க உள்நாட்டவர்களை கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்தலும் உரோமன் கத்தோலிக்க பலத்தை நிலை நிறுத்தலும்
- தமது மதத்தைத் தழுவியவர்களுக்கு எழுத்து வாசிப்புப் போன்ற ஆரம்பக் கல்வியை அளித்தல்.
- தமது அரசியல் அதிகாரத்தினைப் பரப்புதல்.
- மதத்தைப் பரப்புவதற்கு விரிவுரையாளர்களையும் ஆசிரியர்களையும் தமிழ் மொழியில் பயிற்றுவித்தல்.
- நிருவாகத்திற்கு உதவக்கூடிய மத்திய வகுப்பினைக் கொண்ட புத்திஜீவிகளை உருவாக்குதல்.
- பாடசாரலப் பரிசோதனையில் உள்நாட்டவர்களை மதமாற்றல்.

இவ்வாறான ஒரு சூழ் நிலையில் அறுமக்குட்டிப்போடி கல்வியை (இந்து சமயம்) ஒரு புதிய பாதையில் கொண்டு சென்றன் என்றால் அவனுடைய அதிகாரம் எத்தகையது?

## மட்டக்களப்புப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சி

மட்டக்களப்புப் பிரதேசத்தில் பாடசாலைகளின் எழுச்சி ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களுடைய முயற்சியினால் உருவாகின்றன. கி.பி 1914ஆம் ஆண்டு மெதடிஸ்த பாதிரியார் வண வில்லியம் ஒல்ற் இன்று காணப்படும் மட்டுநகர் மெதடிஸ்த கல்லூரியினை ஆரம்பித்தார். 1833ஆம் ஆண்டு வீட்டுப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு, 1849இல் மிஷன் பாட சாலையாகி, 1885ஆம் ஆண்டு விஞ்சன் பெண்கள் பாடசாலையாகியது. (தற்போதய விஞ்சன் பாடசாலையின் ஆரம்ப காலம் 1820ஆம் ஆண்டாகும்) 1857ஆம் ஆண்டு புனித மிக்கேல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. (தற்போதய புனித மிக்கேல் கல்லூரியின் ஆரம்ப காலம் 1873ஆம் ஆண்டாகும்) சைவப் பாடசாலையாக இருந்தது ஆனைப்பந்தி பிள்ளையார் கோயில் வளவுக்குள் கா.அருணாசலதேசிகர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாகும். 1933ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் சிவானந்தா வித்தியாலயத்துக்கு அதிபராகிய பின்னர் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல சைவப் பாடசாலைகள் இராமகிருஸ்ணமிஷன் என்ற பெயருடன் தோற்றம் பெறச் செய்தார். (சிவானந்தாப் பாடசாலை 1929ஆம் ஆண்டு 27 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது) 1924ஆம் ஆண்டு கல்லடிப் பாலம் கட்டப்படுவதற்கு முன்னர் உள்ள காலத்தில் சிவானந்தா வித்தியாலயத்திற்கு பாதையால் பயணம் செய்து கல்வி கற்றிருக்கின்றனர். இதில் இலக்கிய கலாநிதிகளான சி.சிவசுப்பிரமணியம், சா.இ.கமலநாதன் போன்ற சுவாமி விபுலானந்தருடைய மாணவர்களைக் குறிப்பிடலாம். 1924ஆம் ஆண்டு காலத்தில்தான் அமெரிக்கரான வண.லாங்.சே.ச அவர்கள் கல்லடிப் பாலத்தின் கீழ் மீன்கள் பாடுவதனை பல பூரணை நாட்களில் கண்விழித்து அவதானித்து, அதனை ஒலிப்பேழையில் பதிவு செய்து அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நூறு வருட மட்டுநகர் நினைவுகள்)

1931ஆம் ஆண்டு வைகாசியில் சஞ்சூசையப்பர் சபைத் துறவிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து புனித அகுஸ்தினார் ஆசிரியர் கலாசாலை, புனித மரியாள் பாடசாலை, விடுதிசாலை, அனாதர் சாலைகளைக் கையேற்றனர். இவர்களை யாழ்ப்பாணத்து விறதர்மார், கொழும்புத்துறை விறதர்மார், படிப்பிற்கும் விறதர்மார் எனப் பல பெயர்களால் அழைத்தனர். விறதர்மார் கேட்டுக் கொண்டதற்கினங்க மட்டக்களப்பு அனாதர்சாலையில் கற்ற மாணவர்களுக்காக குஞ்சிலயாப்போடி வன்னியனார் கொக்கட்டிச்சோலை எரிபொருள் நிரப்பு நிலையமிருந்து மணற்பிட்டி வரையுமுள்ள நெற்செய்கைக் காணிகளை அன்பளிப்புச் செய்திருந்தார். அக்காணிகள் பின்னாளில் விறதர்மாருடைய கண்டம் என்ற பெயர் பெற்றது.

## கிறிஸ்தவர்களின் காலம்

கி.பி 1883ஆம் ஆண்டு மெதடிஸ்த மிஷனாக இப்பாடசாலை இருந்துள்ளது. அக்காலத்தில் இருந்த மெதடிஷ்த மிஷனறியால் அம்பிலாந்துறையில் பாடசாலைக் கட்டிடம் ஒன்று கட்டப் பட்டுள்ளது. அதற்காக இக்காலத்தில் ரூபா 10 செலவு செய்ததற்கான குறிப்பு A history of the methodist church in ceylon *(1814 - 1964)* எனும் நூலில் பக்கம் 308 இல் காணப்படுகின்றது. மெதடிஸ்த மிஷன் பாடசாலை 1883ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வந்துள்ளது. எனினும், 1922ஆம் ஆண்டு வரையும் தகவல்கள் எழுத்துமூல ஆதாரமாகப் பாடசாலையில் கிடைக்கவில்லை. இக்கலப் பகுதியில்தான் பல இடங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

1834ஆம் ஆண்டு பாடசாலை ஆணைக்குழு நிறுவப்பட்டது. இதனுடைய அதிகாரமானது ஆங்கிலேய சபையின் மதகுருமாரிடம் காணப்பட்டமையினால் பல பிரச்சினைகள் ஏற்பட 1841ஆம் அண்டு இச் சபை கலைக்கப்படுகின்றது. பதிலாக 1869ஆம் ஆண்டு பொது போதனா திணைக்களம் அமைக்கப்படுகின்றது. இத் திணைக்களத்திடம் கல்வி தொடர்பான சகல பொறுப்புக்களும்

ஒப்படைக்கப்பட்டன. பின்னர் 1871ஆம் ஆண்டு கிராமசபை கட்டளைச் சட்டத்தின் மூலம் கட்டிட நிருமானம், பராமரிப்பு என்பனவற்றுடன் கட்டாயச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கிராம சபைகளிடம் வழங்கப்பட்டது. இந்த கட்டளைச் சட்டத்தின் கீழ்தான் அம்பிலாந்துறையிலும் 1883ஆம் ஆண்டு கட்டிடம் கட்டப்படுகின்றது. அது பாடசாலை ஆரம்பகாலமல்ல என்பதனைப் புரிந்துகொள்வது அவசியமாகும். 1883ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட பாடசாலை செயலிழந்து இருந்திருக்கும். பின்னர்தான் இச்சபையினரால் இந்தக் கட்டடம் கட்டப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டை அடிப்படையாகக் கொண்டுதான் 1993ஆம் ஆண்டு பாடசாலையில் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்டது. பாடசாலையின் ஆரம்ப காலமாக போடிகல்வெட்டு ஆதராத்தின் அடிப்படையில் 1766ஆம் ஆண்டு தெளிவுபடுத்திக் காட்டப்படுகின்றது.

## 1920ஆம் ஆண்டுக்குப் பின்

இலங்கையில் இன்றைய பள்ளிகூடக் கட்டுருவானது ஐரோப்பிய வருகையோடு அறிமுகமாயிற்று. ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட நிலையில் தமிழ் பாரம்பரியத்தில் திண்ணைப்பள்ளி, கோயிறய் பள்ளி, நிலாப்பள்ளி, மரநிழற்பள்ளி, மடாலயம், சங்கம், முதலிய பள்ளி ஒழுங்கை மைப்புக்கள் காணப்பட்டன. ஐரோப்பியரது ஆட்சியில் சுதேச பள்ளிக்கூட்டங்கள், ஆங்கிலப் பள்ளிக்கூடங் கள் என்ற இருமைத்தன்மை தெளிவாகக் காணப்பட் டது. வாய்ப்பு வசதி மிக்கோர் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிலும் கற்ற நிலையில் சமூக நிரல் அமைப்பை பள்ளிக்கூடங்கள் மீள வலியுறுத்தின. 1920ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டு கல்வியின் பொறுப்பும் நிருவாகமும் ஒரு புதிய வடிவத்தினைப் பெறுகின்றது.

தமிழ்ப் பாரம்பரிய கல்வி முறைகளில் ஒன்றான திண்ணைப்பள்ளி, முறையிலேயே தொடர்ச்சியாக கல்வி புகட்டப்பட்டிருக்கின்றது. இன்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் கலைமகள் மகாவித்தியாலயம் அறுமக்குட்டிப் போடி காலக் கல்வி நிலையத்தின் தொடர்ச்சியாகும். திண்ணைப் பள்ளி முறையில் மாணவர்களுக்கு கல்வி

புகட்டியுள்ளதோடு இதனை ஜோன் பீற்றர் என்ற கிறிஸ்தவ ஆசிரியர் ஆரம்பித்து வழி நடத்தி வந்தார். இவரின் சேவை 1922ஆம் ஆண்டு வரை நீடித்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் உரமாக இருந்தார்.

பாடசாலையின் தோற்ற காலம் பிரித்தானியரின் ஆட்சிக்காலமாக இருந்தமையால் இலங்கையின் முதலாவது தேசாதிபதியான நோர்த் பிரதான மதகுருவான ஜேம்ஸ் கோடினருடன் சேர்ந்து தயாரித்த பாடசாலை அமைப்பு முறையினூடாக வாசிப்பு, எழுதுதல், எண் கணிதம், கிறிஸ்தவ சமயம் என்பன தாய்மொழி மூலம் கற்பிக்கப்பட்டது. இதனை அமெரிக்கன்மிஷனரி சபையினர் இலவச கிராமப் பாடசாலைகள் என்ற அமைப்பில் தமிழ்மொழியில் ஆரம்பக் கல்வி இலவசமாக வழங்கப்பட்டது. ஜோன் பீற்றரின் ஆரம்பக்காலம் எமது கிராம கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட காலம் என்பதை மறப்பதற்கில்லை. இவர் தனியாக இருந்து மூன்று மாணவர்களுடன் இந்த திண்ணைப்பள்ளியை நடத்தி வந்தார்.

1921ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி இலங்கையில் பல்கலைக் கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இலங்கையில் 15 பல்கலைக் கழகங்கள் உண்டு. 1921ஆம் ஆண்டின் பின் அரச பாடசாலைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து தீவு முழுவதற்கும் கல்வி வசதி அளிப்பதில் அரசுக்கும் சமய அமைப்புகளுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்புகள் இருந்தன. இவ்வாறான காலகட்டத்தில் 1922ஆம் ஆண்டு மெதடிஸ்த மிஷன் பாடசாலையாக நடுக்குடியிருப்பில் எட்டு மாணவர்களுடன் திரு.ஏ.செபஸ்தியான் என்ற தலைமை ஆசிரியர் திண்ணைப் பள்ளி முறைக்கு மேலும் வலுவூட்டுகின்றார். இந்த அதிபரின் விடாமுயற்சியின் பயனாக மாணவர்கள் கல்வி கற்று வேலையிலும் அமர்ந்து தொண்டாற்றினர்.

1927ஆம் ஆண்டு டொனமூர் குழுவினர் இலங்கையில் காலடி பதித்த காலத்திற்கு முன்பாகவே 1926ஆம் ஆண்டு தலைமை ஆசிரியர் பொறுப்பை திரு.கே.பி.டானியல் ஏற்கின்றார். டொனமூர் கல்வித் திட்டத்துடன் இணைந்து பாடசாலையை நடத்தி வந்தார். இவருடைய காலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான

அளவு உயர்ந்து காணப்பட்டதுடன் கல்விகற்கச் சென்ற மாணவர்களுக்கு பசுப்பாலும் வழங்கப்பட்டது. ஆகவே, இவருடைய காலமும் இக்கிராமக் கல்வி வளர்ச்சிக்கு உரமிட்ட காலம் எனலாம். இவரும் தனியாக இருந்து பாடசாலையை நடத்தினார்.

1928ஆம் ஆண்டளவில் கல்வித் திணைக்களத்தினால் பாடத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு பிரதான பாடங்களுடன் இயற்கைக் கல்வி, ஒழுக்கம், பழக்கவழக்கங்கள் போன்ற விடயங்கள் கற்பிக்கப் பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட காலத்திலும் 1940ஆம் ஆண்டு பாடவிதான மறுசீரமைப்பு ஏற்பட்ட காலத்திலும் திரு.எஸ்.எம்.செபமாலை என்பவர் தலைமை ஆசிரியர் பொறுப்பை 1933ஆம் ஆண்டு ஏற்று 1941ஆம் ஆண்டு வரை பாடசாலையைச் செயற்படுத்தினார். இவருடைய காலப்பகுதியில் 13 மாணவர்கள் கல்வி கற்றதோடு பாடசாலையும் ஓலைக் கொட்டிலாகவும் மண் சுவராலும், கற் கட்டிடத்தாலும் இருந்துள்ளது.

## 1940ஆம் ஆண்டுக்குப் பின்

1940ஆம் ஆண்டு காலத்திற்குப் பின்னர் பள்ளி வளவினில் இருந்த (தற்போது கதிராமப்போடியார் குடும்பம் இருக்கும் நடுக்குடியிருப்பு வளவு) றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை தற்போது கலைமகள் மகா வித்தியாலயம் இருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றது. பள்ளி வளவில் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்டே இருந்திருக்கின்றது. 1940ஆம் ஆண்டின் பின்னர்தான் வகுப்பு 10 வரையும் சென்றிருக்கின்றது. இவ்வாண்டின் பிறகு மாணவர்கள் கற்றலில் அதிக கவனம் செலுத்த முனைந்திருக்கின்றனர். 1933ஆம் ஆண்டு காலப்பகுதியில் க.தியாகராசா, எ.இராசதுரை, க.குமாரவேலி, வே.சுப்பிரமணியம், வீ.தம்பியன், வெள்ளப்பிள்ளை, வெ.கணபதி, மாரிமுத்து, சின்னத்தம்பி போன்றோர் கல்வி கற்றிருக்கின்றனர். இதில் க.தியாகராசா அவர்கள்தான் கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சையில் சித்தி பெற்றிருக்கின்றார். அவர் பின்னர் அதிபராக இருந்துள்ளார்.

1935ஆம் ஆண்டு பாடசாலையினை மேற்பார்வை செய்வதற்காக தாளங்குடாவில் இருந்த கொக்குனெட் பாதிரியார் அவர்கள் வந்திருக்கின்றார். அவர் மாணவர்களை அவதானித்தபோது பல மாணவர்கள் கதிரை , மேசைகளிலும், சில மாணவர்கள் நிலத்திலும் இருந்து படிப்பதனை அவதானித்திருக்கின்றார். இது ஏன் என்று தலைமை ஆசிரியரிடம் கேட்டிருக்கின்றார். அதற்கு அவர் கூறினாராம் இவர்கள் குடிமக்கள். ஊர் சட்டப்படி இவர்கள் இப்படித்தான் கற்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது என்று. அதனை நிராகரித்த அவர் அந்த மாணவர்களையும் அன்றிலிருந்து மாணவர்களுக்கான சம அந்தஸ்து உடையவர்களாக மாற்றிச் சென்றிருக்கின்றார். இக்காலத்தில் பாலிப்போடி (அம்பிலாந்துறை), பூபாலப்பிள்ளை (தாளங்குடா), இராசசிங்கம் (களுவாஞ்சிகுடி), அனுக்லேட் (எருவில்) ஆகியோருடன் பெண் ஆசிரியர் ஒருவரும் (பெயர் கிடைக்கவில்லை) ஆசிரியராக இருந்துள்ளனர்.

1943ஆம் ஆண்டு C.W.W.கன்னங்கரா அறிக்கை கல்வி விசேட குழுவின் அறிக்கையாக வெளியிடப்பட்டு பாடசாலை அமைப்பும் மாற்றியமைக்கப்பட்டு உயர்கல்விக்கான வாய்ப்புக்களும் ஏற்பட்டுள்ளன. 1945ஆம் ஆண்டு இலவசக் கல்வி கன்னங்கரா அவர்களால் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இலவசக் கல்வி மூலம் கிராமப்புறங்களில் வாழ்ந்த அதிக மாணவர்களுக்கு உயர்கல்வி பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. தாய்மொழி மூலம் கல்வி வழங்கப்பட்டது. நூற் கல்வியை விட வெளி வேலைகளில் அவதானம் செலுத்தப்பட்டது. இக் காலப்பகுதியில் திரு. என். கே. அருளப்பு தலைமை ஆசிரயராக இருந்து தற்போது பாடசாலை அமைந்திருக்கும் இடத்தில் பாடசாலை ஒன்றை ஓலையால் கட்டி கடமையாற்றினார். இவருடன் இன்னுமோர் உதவி ஆசிரயரும் 19 மாணவர்களுக்கும் கல்வி புகட்டி வந்துள்ளனர்.

கன்னங்கரா கல்வி நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் திரு.ரி.கே.ஏகாம்பரம் தலைமை ஆசிரியராக இருந்து பாடசாலையை நடாத்தி வந்தார். இக்காலம் மாணவர்கள் கல்வியில் அக்கரை காட்டி வந்ததோடு ஆசிரியர்களும் கணிசமான

பங்களிப்பினைச் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 1944ஆம் ஆண்டு திரு.வி.பிள்ளை என்பவர் தலைமையில் அதிபர் பொறுப்பை ஏற்று நடத்தி வந்துள்ளார். இவருடைய சேவையும் எமது கிராமக் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும் பாடசாலை அமைப்பு முறையினைப் புனருத்தாரனம் செய்வதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. 1950ஆம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை 1951ஆம் ஆண்டு கல்விக் கட்டணச் சட்டம். 1960ஆம் ஆண்டு உதவிபெறும் பாடசாலைகள், ஆசிரியர் கலாசாலைகள் (விசேட சட்டம்) 1960ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தம், 1961ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழு, 1961ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை, 1963ஆம் ஆண்டு தொழிநுட்பக் கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை, 1964ஆம், 1966ஆம் ஆண்டுகளில் கல்வி வெள்ளையறிக்கை. 1967ஆம் ஆண்டு கல்வி யாப்பு வரைபு. 1972ஆம், 1978ஆம் ஆண்டுகளில் கல்விப் புணரமைப்பு ஆலோசனைகள், 1981ஆம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை, 1977 ஆம் ஆண்டு புதிய கல்விச் சீர்திருத்த முன்மொழிவு கள் ஊடாக எல்லோர்க்கும் கல்வி என்ற நிலை உருவானது. இந்த சீர் திருத்தங்களின் ஊடாக எமது கிராமமும் எழுச்சிகண்டு வந்தது.

1948.02.04.இல் நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் கன்னங்கரா கல்வி 1950ஆம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கையுடனும், 1951ஆம் ஆண்டு கல்வி கட்டளைச் சட்டத்துடனும் இணைந்து பாடசாலை அமைப்பு முறை ஒழுங்கமைக்கப்பட்டது. இக் காலத்தில் திரு. எம். அலோசியஸ் என்பவரும் தொடர்ந்து ஆபிரகாம் என்பவரும் அதிபர் பொறுப்பை ஏற்றனர். இக்காலகட்டத்திலும் ஓலைக் கொட்டிலுடனே இயங்கி வந்ததோடு மாணவர்களின் எண்ணிக்கை யும் கணிசமான அளவு கூடுதலாக இருந்தபோதும் ஆசிரியர்களும் இருவர் கடமையாற்றி வந்தமையும் குறிப்பிடத்தக் கது. ஆபிரகாம் அதிபருடைய காலத்தில்தான் கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இது 1949ஆம் ஆண்டாகும். இக்காலத்தில்தான் க.தியாகராசா அதிபர் அவர்கள் முதன் முதலாக கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சைக்குத்

தோற்றியிருக்கின்றார். மா.கதிர்காமத்தம்பி பிரதி அதிபர் அவர்கள் 1951ஆம் ஆண்டு கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றியிருக்கின்றார்.

1962ஆம் ஆண்டு இலங்கையின் தனியார் பாடசாலைகளை அரசு கையேற்றதன் மூலம் கல்வியின் பொறுப்பும் செயற்பாடும் தொடர்பான இருவித நிர்வாக முறை முற்றுப் பெற்றதுடன் தேசிய கல்வி முறை உருவானது. இக் காலப்பகுதியில்தான் இவ்வூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இப் பாடசாலை ஆரம்பக் கல்வியை கற்று மட்டக்களப்பில் உயர் கல்வியை தொடர்ந்து கற்று ஆசிரியர் பதவியைப் பெற்ற திரு.ம.மயிலிப்போடி என்பவர் இப் பாடசாலையிலே 1964ஆம் ஆண்டு தலைமைப் பொறுப்பை ஏற்றார். இவருடன் இருந்த சகல ஆசிரியர்களும் மாணவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணைபுரிந்து வந்துள்ளனர். மாணவர்களின் வளர்ச்சிக்கு இவருடைய கல்விப் பணி சிறந்த பங்காற்றியது.

இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து 1970ஆம் ஆண்டுவரை அடிக்கடி கல்வி புணருத்தாரணம் ஆலோசனைகள் வழங்கப் பட்டாலும் பாடசாலை அமைப்புமுறையில் அவ்வளவு தெளிவான மாற்றங்கள் நிகழவில்லை. பொருளாதார சமுதாய மாற்றங்களுக்குப் பொருத்தமான ஒரு கல்வித் திட்டம் அவசியம் என உணரப் பட்டதால் இதுவரையில் இருந்த கல்வித் திட்டத்தை மாற்றுவதற்கு 1972இல் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

01.03.1972ஆம் ஆண்டு திரு.த.அழகையா என்பவர் அதிபராகக் கடமையேற்றார். இவருடைய சேவை இப்பாடசாலை வரலாற்றில் இதுவரையில் நீண்டகால சேவையாகும். இவருடைய காலத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆசிரியர் குழாம் தொண்டாற்றி வந்ததோடு இக்காலத்திலே மீண்டும் க.பொ.த. (சா/த) ஆரம்பிக்கப்பட்டு சிறந்த பெறுபேறுகளும் பெறப்பட்டு மாணவர்கள் உயர் கல்வியைப் பெறுவதற்கு வழிகாட்டப்பட்டது. குறிப்பாக திரு.ம.கதிர்காமத்தம்பி, இ.கனகசுந்தரம் ஆகிய ஆசிரியர்களின் பணி குறிப்பிடத்தக்கவை. அழகையா அதிபர் என்றால் அவர் இவ்வூருக்குச் செய்த பணியே நினைவில்வரும்.

பாடசாலையில் இருந்து துறையடிவரை வீதியோரங்களில் மாணவர்களைக்கொண்டு பனை மரங்கள் நாட்டினார். பாடசாலைக்கு வராத மாணவர்களை இனங்கண்டு வீடுவீடாய்ச் சென்று பாடசாலைக்கு அழைத்துவந்து அன்பு வார்த்தை கூறி, கல்வி புகட்டி, அவர்களின் எதிர்காலத்திற்கு அடித்தளமிட்டார். இவருடைய காலப் பகுதியில் பாடசாலைக் கட்டிடங்கள் கற்கட்டிடமாகவும் ஓலைக் கொட்டிலாகவும் இருந்தது. இல்ல விளையாட்டுப் போட்டி புறக்கிருத்திய வேலை என்பனவும் சிறப்பாக இடம்பெற்றன. அதிபரின் பணியும் இவருடன் இணைந்து கடமையாற்றிய ஆசிரியர்களின் பணியையும் இவ்வூர் மக்கள் என்றும் மறப்பதற்கில்லை. அவர் 24.06.1986 ஆம் ஆண்டு இங்கிருந்து செல்கின்றார்.

1943இல் கன்னங்கரா அறிக்கையின்படி எமது கல்வி வசதிகள் கடந்த 40 ஆண்டுகளாக நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் மிக விரைவாகப் பரந்து வளர்ச்சியடைந்தது. ஆனால், இக் கல்வித் திட்டத்தில் காணப்படும் சில குறைபாடுகளைத் தவிர்த்து நாட்டின் தேவை களை அடிப்படையாகக் கொண்டு கல்வியை உருவாக்கிக் கொள்வதற்கான புதிய ஆலோசனைகள் 1981ஆம் ஆண்டு வெள்ளை அறிக்கை மூலம் முன் வைக்கப்பட்டன. இந்த வெள்ளையறிக்கை செயற்படுத்தப்பட்ட காலப்பகுதியிலே திரு.க.ஆறுமுகம் அவர்கள் 25.06.1986 ஆம் ஆண்டு இப் பாடசாலையின் அதிபராக கடமையேற்றுக் கொண்டார். இவருடைய காலப்பகுதியில் கல்வி கற்றவர்களின் தரம் உயர்வடைந்து வந்துள்ளது. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இவ்வூர்ப் படித்த இளைஞர் யுவதிகள் தொண்டர் அடிப்படையில் ஆசிரியராகக் கடமையாற்றினார். இப்பணி சிறந்த பணியும், மெச்சத்தக்க பணியுமாகும். இக்காலப் பகுதியில் பாடசாலை முழுவதும் கற்கட்டமாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆறுமுகம் அதிபர் ஆசிரியர் ஆனாலும் சரி, மாணவர்கள் ஆனாலும் சரி அன்பு வார்த்தை கூறியே அழைப்பார். இவரின் பணியும் எமது பாடசாலையில் போற்றுதற்குரியது. இவர் 16.07.1991இல் இங்கிருந்து செல்கின்றார்.

ஆறுமுகம் அதிபரைத் தொடர்ந்து திரு.கே.மயில்வாகனம் அவர்கள் தலைமை அதிபர் பொறுப்பினை 12.07.1991ஆம் ஆண்டு தொடக்கம் 11.10.1992ஆம் ஆண்டு வரை ஏற்றுக் கடமையாற்றினார். அவரைத் தொடர்ந்து 03.08.1991 - 02.09.1991ஆம் ஆண்டு வரை வை.தட்சணாமூர்த்தி அதிபர் அவர்கள் கடமையாற்றினார்.

1997இல் புதிய கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகள் ஏற்டகனவே கல்வியில் இருந்துவந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக கொண்டுவரப்பட்டது. இதில் 5-14 வயதுவரை மாணவர்கள் கட்டாயம் கல்விகற்க வேண்டும் எனும் நியதி சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இந்தச் சீர்திருத்த முன்மொழிவுகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாக 02.03.1993இல் பாடசாலையின் அதிபர் பொறுப்பை திரு.சி.சந்திரபோஸ் அவர்கள் ஏற்று நடத்தி வந்தார். இவர் பாடசாலையினைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் திரு.செ.பாலசுந்தரம் அவர்கள் 12.10.1992ஆம் ஆண்டு தொடக்கம் 28.02.1993 ஆம் ஆண்டு வரையும் பாடசாலையினைப் பொறுப்பேற்று நட.த்தியிருந்தார்.

திரு. P.R.சந்திரபோஸ் அவர்களுடைய காலம் பாடசாலை வரலாற்றின் பொற்காலமாகும். இவருடைய காலத்தில்தான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் முதன்முறையாச் சித்தியடைந்தனர். (1995ஆம் ஆண்டு) மேலும், 1993ஆம் ஆண்டு, க.பொ.த.(உ/த) ஆரம்பிக்கப்பட்டது. பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரி என்று மாணவர்கள் சென்றனர். அகில இலங்கை மட்டத்தில் பெண்கள் அணியினர் கரப்பந்துப் போட்டியில் பங்குபற்றினர். இந்த அணியில் த.யூகராணி, பு.ஈஸ்னா, ம.பிரபாளினி, மு.ராஜினி, மே.வினோகலா பேன்றோர் வதுளைக்குச் சென்று தேசிய மட்ட கரப்பந்து நிகழ்வில் பங்குபற்றினர். இவையாவும் முதல் தடைவயாக நடந்தேறியவை. பொதுவாகப் பாடசாலையின் சித்தி வீதம் அதிகரிப்பைக் காட்டியது. இவர் 14.04.2002 ஆம் ஆண்டு இங்கிருந்து செல்கின்றார்.

திரு.சி.சந்திரபோஸ் அதிபரின் அரியபெரிய பணியைத் தொடர்ந்து 15.04.2002ஆம் ஆண்டு இப்பாடசாலையின் தலைமை அதிபர்

பொறுப்பினை திரு.எஸ்.அலோசியஸ் என்பவர் ஏற்று நடத்தி வந்தார். இவருடைய காலத்தில் விளையாட்டில் மாணவர்கள் அதிக அக்கரைகாட்டினர். தேசிய ரீதியில் எல்லே, கரப்பந்து விளையாட்டுக்களில் மாணவர்கள் பங்குபற்றி வெற்றியும் பெற்றனர். கல்வியில் அதிகரிப்பு இருந்தது. இவர் 18.01.2011 ஆம் ஆண்டு இங்கிருந்து செல்கின்றார். 2002ஆம் ஆண்டு பாடசாலை அதிபர் பொறுப்பினை அலோசியஸ் ஏற்று நடாத்தி அவர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகச் சென்றுளளார். ஜெயதீபன், நிரோஜன் எனும் மாணவர்கள் தனி விளையாட்டுக்களில் 2009ஆம், 2010ஆம் ஆண்டுகளில் அகில இலங்கை மட்டத்திற்குச் சென்றது முதல் தடவையாகும். கரப்பந்து, எல்லே ஆகிய போட்டிகளில் அகில இலங்கை மட்டம் வரையும், உதைபந்தில் (ஆண்) மாகாண மட்டம் வரையும் சென்றுள்ளனர். இவருடைய காலத்தில் க.பொ.த.(சா/த) பெறுபேறு அண்மைக்காலமாக அதிகரிப்பைக் காட்டியுள்ளன. ஆனால், தரம் 5 பரீட்சையில் எந்த மாணவனும் சித்திபெற முடியாத நிலையில் மூன்று ஆண்டுகள் பதியப்பட்டுள்ளன. உயர் கல்விக்குச் செல்லும் மாணவர் விகிதம் மிகக் குறைவாக உள்ளது. பொதுவாக விளையாட்டுப் பெற்ற இடத்தினை உயர் கல்வி பெறவில்லை என்றே கூறலாம். எனினும் இவருடைய பணி சிறப்பானதே.

அலோசியஸ் அவர்களின் பணியினைத் தொர்ந்து பதில் அதிபராக பொ.தேவராசா அவர்கள் 19.01.2011ஆம் ஆண்டு தொடக்கம் 05.06.2011ஆம் ஆண்டுவரை செயற்படுகின்றார். அவரைத் தொடர்ந்து த.ரவிராசா அவர்கள் 06.06.2011ஆம் ஆண்டு அதிபர் பொறுப்பினை ஏற்று நடாத்தி வந்தார். இவருடைய காலத்திலும் கல்வியிலும் விளையாட்டிலும் மாணவர்கள் அதிக பங்கு வகித்துச் செயற்படலாயினர். அவருடைய பணி 10.02.2015ஆம் ஆண்டு வரைத் தொடர்ந்தது. அதனைத் தொடர்ந்த மு.குணரெத்தினம் அவர்கள் 11.02.2015 ஆண்டு தெடக்கம் பாடசாலையின் அதிபர் பொறுப்பினை ஏற்று நடாத்திவருகின்றார். இவருடைய காலத்தில் சிறந்தபெறுபேறு கிடைத்துள்ளது. மூன்று மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். நான்கு மாணவர்கள் ஒரே தடவையில் பல்கலைக் கழகம் செல்லவுள்ளனர்.

## 1AB பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது

இப்பாடசாலை இன்று 1AB பாடசாலை அமைப்பினுள் காணப்படுகின்றது. 05.03.2014ஆம் ஆண்டு முதற்கொண்டு க.பொ.த(உ/த) மாணவர்களுக்கு கணிதப் பிரிவு ஆரம்பிக்கப் பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு முதல் இடைநிலைப்பிரிவு மாணவர்களையே இப்பாடசாலை கொண்டிருக்கும்.

## கனிஷ்ட பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது

01.01.2012ஆம் ஆண்டு கனிஷ்ட பாடசாலை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இது தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையுள்ள வகுப்புக்களைக்கொண்டு அமைந்திருக்கின்றது. இதன் அதிபராக தவராசா செயற்படுகின்றார். கனிஸ்ட பாடசாலைக்கான நிலத்தினை தெரிவுசெய்வதில் பாடசாலைச் சமூகம் கரிசனை காட்டியபோதும் அந்த நிலங்கள் நிலச் சொந்தக்காரர்களால் தரப்படவில்லை. இறுதியாக க.புவனசிங்கம் அவர்களே தனது வயல் நிலத்தினை வழங்கியிருந்தார். அந்த நிலத்துக்குப் பதிலாக அம்பிலாந்துறை ஆலய பரிபாலனசபைக்குச் சொந்தமான விழாங்குளக் காணியில் அவரிடமிருந்துபெற்ற நிலத்துக்கான சமநிலம் (வேளாமைச் செய்யும் நிலம்) அளந்து கொடுக்கப்பட்டுள்ளது.

## பிரதேசத்தின் முதல் பட்டதாரி

பிரதேசத்தின் முதல் பட்டதாரி யார்? எனும் வினா எழுகின்றது. பல இடங்களில் இறைபதமடைந்த ஆய்வாளர் மகிழை மகேசன் அவர்களைக் கூறுவதுண்டு. இவர் 1970.10.01ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றவர். ஆனால், அம்பிலாந்துறையைச் சேர்ந்த க். சபாரெத்தினம் 1960ஆம் ஆண்டு இந்தியப் பல்லைலைக் கழகத்தில் விஞ்ஞானப் பிரிவில் B.Sc பட்டம் பெற்றவர். இவர் காலி அலோசியஸ் கல்லூரியில் 8 வருடமும், மட்டக்களப்பு சென்மைக்கல் கல்லுரியில் ஒரு வருடமும் ஆசிரியராகக் கடமையாற்றி 1970ஆம் ஆண்டு அவுஸ்ரேலியா சென்று விட்டார். அதனால் இவர் பலரால் அறியப்படவில்லை. எனினும், பிரதேசத்தின் முதல் பட்டதாரியாக க.சபாரெத்தினம் அவர்கள் அடையாளப் படுத்தப்படுகின்றார்.

## கல்விக்கான முயற்சிகள்

காலகாலமாக அம்பிலாந்துறையில் உள்ள இளைஞர்கள் கல்விக்காகத் தங்களை அர்ப்பணித்துள்ளனர் என்பது தெரிகின்றது. 1978ஆம் ஆண்டு சூறாவளி வீசியதன் பின்னர் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியது. இதனால் மாணவர்கள் பல இன்னல்களைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டது. இந்த நிலையில்தான் ஒளிக்கல்லூரி அவர்களுக்கு கைகொடுக்கின்றது. 1981/1982 காலப் பகுதியில் க.பொ.த (உ/த) த்தில் சித்தி பெற்ற மாணவர்கள் ஒளிக்கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளுக்குக் கைகொடுத்தனர். எனினும், ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்ததன் காரணமாக இக்காலப்பகுதியில் அம்பிலாந்துறையில் க.பொ.த(சா/த) வகுப்பு நிறுத்தப்பட்டு அவர்கள் குருக்கள்மடத்து கலைவாணி மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டனர். சொற்ப காலத்தின் பின்னர் அவர்கள் இங்கு வரவழைக்கப்பட்டு, அவர்களுடைய கல்வி வளர்ச்சிக்காக இக்காலப் பகுதியில் தொண்டர் அடிப்படையில் பலர் கற்பித்தலை மேற்கொண்டனர். அவர்களுள் வீ. கோபாலபிள்ளை, இ.தவராசா, சு.தேவராஜன், செ.தவலிங்கம், ந.குணேஸ்வரலெட்சுமி, பெ.சறோசா, இ.வனசுந்தரி, க.சந்திரலீலா போன்றவர்களைக் குறிப்பிடமுடியும். அதன்பின்னர் மா.ஜீவரெத்தினம் க.புவனசிங்கராசா, க.மாணிக்கப்போடி, ஏ.கிருஸ்னாணந்தமூர்த்தி, கு.பத்மளா போன்றோர் செயற்பட்டனர்.

இது இவ்வாறிருக்க அ.பேரின்பநாயகம் க.அரசரெத்தினம் வ.சந்திர குமார், மு.குணரெத்தினம் போன்றோர்களும் கல்விக்காகப் பணியாற்றியுள்ளனர். இந்த கட்டுரையாசிரியர் பல வருடங்களுக்கு மேலாக இலவசமாக கணித பாடத்தினைக் கற்பித்து சிறந்த பெறுபேற்றினை பெறச் செய்தவர். அதுபோல், இந்து நாகரிகம், இந்துசமயம், தமிழ் போன்ற பாடங்களையும் கற்பித்து சிறந்த பேற்றினை அடையச் செய்தவர். இன்றும் அவ்வப்போது பணியாற்றி வருகின்றார். மு.குணரெத்தினமும், மு.தயாநிதியும் இணைந்து க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக குணரெத்தினம் அவர்களுடைய வீட்டில் வைத்து இரவில் கற்பித்தலை மேற்கொண்டு மாணவர்களை உயர் படிப்புக்கு அனுப்பியவர்கள்.

பேரின்பநாயகம், கிருஸ்ணானந்த மூர்த்தி ஆகிய இருவரும் கணித பாடத்தினைச் சிறப்பாக நீண்ட காலம் கற்பித்தவர்கள்.

மேலும், பொ.கோணேசன் என்பவருடைய பணி சிறந்தது. 18 வருடங்களாக தனது வீட்டிலேயே தங்குமிடம் கொடுத்து மாணவர்களை முன்னேற வழிகாட்டியவர். இன்றும் அவருடைய நீண்ட காலப் பணி தொடர்கிறது. மாணவர்களுக்குப் பல பாடங்களைக் கற்பிக்கும் திறமைகொண்ட இவருக்கு தனியிடம் உண்டு. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்களைச் சித்திபெறச் செய்வதற்காக செயற்பட்டுவருகின்றார். அத்தோடு க.பொ.த (சா/த) பரீட்சையில் மாணவர்களை சித்திபெறச் செய்வதிலும் பெரும் பணியாற்றி வருகின்றார். க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான ஊக்கத்தினையும் ஆக்கத்தினையும் வழங்கிவருகின்றார். இவருடைய கல்விப் பணியானது அளவிடக் கரியது. மனம்போலும் மக்கள் சேவையுடைய அவரது பணியினை எவ்வாறு வாழ்த்துவது? அவ ருக்கு ஆண்டவன் கொடுத்த கொடை அது. நியுவெல்டன் எனும் பிரத்தியேக கல்வி நிலையம் ஒன்றினை ஆரம்பித்து ஞா. அன்ரனிதாஸ் அவர்கள் சில காலம் கல்வி புகட்டி வந்தார். தற்போது அவ்வப்போது சிலர் கல்விக்காகப் பணியாற்றி வருகின்றனர்.

## உயர்தர கல்வி

1993ஆம் ஆண்டு திரு.P.R.சந்திரபோஸ் அதிபரின் அயராத முயற்சியினால் உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டது. இக் காலத்தில் உயர் தரம் ஆரம்பிக்கப்படாமல் இருந்திருந்தால் பல மாணவர்கள் கல்வியைப்பெற முடியாமல் இருந்திருக்கும். க.பொ.த (சா/த) சித்தியடைகின்ற மாணவர்கள் யாவரும் உயர்தரம் கற்பதில்லை. காரணம் பொருளாதாரப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை, அக்காலத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை என்று பல காரணங்களைக் குறிப்பிடமுடியும். இவற்றினை உணர்ச்த திரு.P.R.சந்திரபோஸ் அதிபர் அவர்கள் உயர்தரத்தினை ஆரம்பித்து ஏழை மாணவர்களின் கல்விக்கு வழி காட்டி மக்களின் மனங்களில் உயர்ந்து நிற்கின்றார். உயர்தரம் ஆரம்பிப்பதற்கு மாணவர்கள்

கனிசமான வகையில் தேவைப்படுவது கல்வி அமைச்சின் சுற்றுநிருபம். ஆனால் அவற்றையும் சூக்குமமான முறையில் கையாண்டு ஆறு மாணவர்களுடன் உயர் தரத்தினை ஆரம்பித்தார். அவற்றிலும் இரண்டு மாணவர்களே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய தகுதி உடையவர்களாக இருந்தனர். இவருக்கு பின்னர் பல அதிபர்கள் நீண்ட காலம் பாடசாலையில் இருந்தாலும் உயர்தரக் கல்வியைப் பற்றிச் சிந்திக்காதவர்களாகவே இருந்திருக்கிறார்கள். அவர்கள் சிந்தித்திருந்தால் அம்பிலாந்துறைக் கிராமத்தின் கல்வி வளர்ச்சி இன்னும் சிறப்புப் பெற்றிருக்கும். உயர்தரம் ஆரம்பிக்கப் பட்டமையினால் அம்பிலாந்துறையில் உயர்தர கல்வி கற்கின்ற மாணவர்களின் தொகை அதிகரித்தது. 1993ஆம் ஆண்டுக்கு முன்னர் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம், செட்டிபாளையம் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் அதிகமான மாணவர்கள் கலைப் பிரிவில் கல்வி கற்று வந்தனர்.

எமது கிராமத்தில் க.பொ.த (உ/த) வகுப்பு ஆரம்பிக்கப் பட்டமையினால் கல்வியினைப்பெற வேண்டும் என்கின்ற உத்வேகம் மாணவர்களிடையே ஏற்படலாயிற்று. ஆனால், பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர்களின் தொகை வீழ்ச்சியிலேயே இருந்து வந்துள்ளது. இடையிடையே சில ஆண்டுகளாகப் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் செல்லாத நிலை பாடசாலையில் பதிவாகியுள்ளன. பல்கலைக்கழகம் சென்று சரியாகக் கற்று சமூகத்தை வழிநடத்தினால் அந்தச் சமூக் முன்நோக்கிச் செல்லும்.

## பாடசாலையில் கற்று பல்கலைக்கழகம் மற்றும் கல்வியற் கல்லூரி சென்றவர்கள்

1995 - தெரிவு செய்யப்படவில்லை

1996 - கல்வியற் கல்லூரி - கு.தவேந்தி

1997 - பல்கலைக்கழகம் - பா.வேந்திரராசா, ஞா.அன்ரனிதாஜ்

1998 - தெரிவு செய்யப்படவில்லை

1999 - கல்வியற் கல்லூரி - இ.சசிகுமார்

2000 - கல்வியற் கல்லூரி - மா.ஜீவகாந், மு.சௌந்தரராசா

2001 - தெரிவு செய்யப்படவில்லை

2002 - பல்கலைக்கழகம் - அ.பிறேமாகரன்,
கல்வியற் கல்லூரி - பு.ஈஸ்ணா

2003 - தெரிவு செய்யப்படவில்லை

2004 - தெரிவு செய்யப்படவில்லை

2005 - பல்கலைக்கழகம் - மா.குணலெட்சுமி

2006 - தெரிவு செய்யப்படவில்லை

2007 - பல்கலைக்கழகம் - ந.தினுசா, த.றோகினி

2008 - கல்வியற் கல்லூரி - சு.சூரியமூர்த்தி

2009 - கல்வியற் கல்லூரி - அ.தனுராஜ்
பல்கலைக்கழகம் - ம.ஜீவகுமார்

2010 - தெரிவு செய்யப்படவில்லை

2011 - தெரிவு செய்யப்படவில்லை

2012 - பல்கலைக்கழகம் - கே.கோபினகௌரி
கல்வியற் கல்லூரி - குணசீலன்

2013 - பல்கலைக்கழகம் - த.தேவிகரன்
கல்வியற் கல்லூரி - ச.துவாரா

2014 - தெரிவு செய்யப்படவில்லை

2015 - பல்கலைக்கழகம் - பா.கனுசியா, தே.கயல்விழி,
நா.அனோஜா, மு.ரஜினி.

**வேறு பாடசாலைகளில் கற்று பல்கலைக் கழகம் சென்றோர்.**

*1.* க.சபாரெத்தினம்
*2.* க.இராசையா
*3.* க.மாணிக்கப்போடி
*4.* மா.லக்குணம்
*5.* மு.தயாநிதி
*6.* க.பரமானந்தம்
*7.* க.விவேகானந்தன்
*8.* த.விஜயமலர்
*9.* ஞா.பாமதி
*11.* ஞா.மதிவண்ணன்
*12.* கு.உமாறமணன்
*13.* கு.நவலக்ஷினி
*14.* க.சந்திரகுமார்
*15.* வி.சம்பந்தன்
*16.* பா.சோபா
*17.* யோ.தட்சாயனன்
*18.* சோ.சஞ்சயன்
*19.* வி.கீதன்
*20.* சோ.தஞ்சயன்
*21.* சி.கோபிகாந்
*22.* சி.டிலக்ஷனா
*23.* ந.பார்த்தீபன்
*24.* க.லோகாட்சரம்
*25.* ர.டயனகாந்
*26.* வி.தரணியா
*27.* வ.திவ்யா
*28.* து.சுகிர்தன்
*29.* வி.மதுஷா
*30.* சி.தனோசிதன்
*31.* சோ.கஜவதனன்
*32.* தே.தர்சனா
*33.* அ.சலன்ராஜ்
*34.* க.சிவபாலன்
*35.* து.சுகிர்தன்

வேறு பாடசாலைகளில் கற்று கல்வியற் கல்லூரி சென்றோர்.

1. து.சபேசன்
2. சி.குமரசேகர்
3. பூ.சுதானந்தன்
4. சி.உதயசேகர்
5. சி.சிவதர்சன்
6. மா.வதனரூபன்
7. தே.தர்சிகா
8. தே.கீர்த்தனா

## கல்வியினுடைய போக்கு

அறுமக்குட்டிப்போடிக்கு முன்னர் கல்வி நிலையங்கள் இருந்தமை பற்றிய தகவல்கள் எமக்கு சரியாகக் கிடைக்கவில்லை. எனினும், எதிர்மனசிங்கன் காலத்தில் கல்வி பற்றிப் பேசப்படுகின்றது. அறுமக்குட்டிப்போடி கல்வி நிலையங்களை அமைத்து பலருக்குக் கல்வி வழங்கியிருக்கின்றார். அறுமக்குட்டிப்போடி காலத்தவர்களும் அவர்களுக்குப் பின்வந்தவர்களும் சிறந்த கல்வி அறிவு உடையவர்காக இருந்துள்ளனர். எனினும், அவருடைய காலத்துக்குப் பின்னர் அம்பிலாந்துறையில் இருந்த வன்னியர்களினால் தொடர்ந்து கல்வி கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவில்லை. காரணம் இங்குள்ளவர்கள் செல்வந்தர்காளகக் காணப்பட்டனர். தங்களைப் பெரியவர்களாகக் காட்டிக்கொண்டனர். பொருளாதார உயர்ச்சியினால் எதனையும் பெறமுடியும் என்ற எண்ணப்பாட்டுடன் இருந்தனர். அதனால் அவர்கள் கல்வியைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அத்துடன் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்களுக்கு மட்டுந்தான் கல்வி பெறமுடியும் என்ற சூழ்நிலையும் இருந்துள்ளது. சைவ சமயத்தில் பற்றுள்ள இவர்கள் கிறிஸ்தவ சமயத்துக்குமாறி கல்வியைப் பெறுவதா? என்ற சிந்தனை உடையவர்களாக இருந்தனர். எனினும், அம்பிலாந்துறையைப் பொறுத்த வகையில் வன்னியர்களுக்கு கல்வியை வழங்குவதற்கு தடைகள் இருந்ததாகத் தெரியவில்லை. குஞ்சிலயாப்போடி வன்னியனார் சிறந்த ஆங்கில அறிவு உடைய

வராக இருந்திருக்கின்றார். இதனால் அவர்கள் ஆங்கிலேயருடன் சிறந்த தொடர்பினை எப்போதும் வைத்திருந்தார். எனினும், கல்விச்சாலைகள் இக்காலத்தில் முன்கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவில்லை. இருந்த கல்விச்சாலைகள்கூட புனரமைக்கப்பட்டு கல்வியை வழங்கக்கூடிய வகையில் தயார்படுத்தப்படவில்லை. மாறாகப் பொருளாதாரத்தைப் பெருக்குவதிலே அவர்களுடைய கவனம் இருந்து வந்துள்ளது.

1940ஆம் ஆண்டு காலங்களில்கூடப் பாடசாலை அமைப்பதற்கு இங்குள்ளவர்கள் விரும்பாமல் விபுலானந்தரைத் திருப்பிவிட்ட வரலாறும் உண்டு. இவ்வாறான கட்டுப்பாடுகள் கல்வியில் கொண்டுவரப்பட்டதனால் கல்வியில் மாற்றம் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அறுமக்குட்டிப்போடி காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கல்வி எழுச்சி தொடர்ந்திருந்தால் அம்பிலாந்துறையினுடைய கல்வி வளர்ச்சி இமயம் தொட்டிருக்கும். இந்த வரலாற்றினை இன்று அறிகின்ற நாம் தொடர்ந்து முயற்சித்து கல்வியில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்காக மேலும், முயற்சி செய்வது காலத்தின் தேவையாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததற்கு பின்னரும்கூட அம்பிலாந்துறைக் கல்வியில் மாற்றம் நிகழவில்லை. இக்காலங்களில் பாடசாலை முறை பெரிதும் சிறப்புப்பெறவில்லை. கல்வி கற்கவேண்டும் என்கின்ற எண்ணம் மாணவர்களிடையேயும் இருக்கவில்லை. பெற்றாரும் ஊக்கப்படுத்தவில்லை. விரும்பிய ஒரு சிலர் மட்டும் கல்வி கற்றனர். மற்றவர்கள் ஆரம்ப வகுப்புக்களிலே விலகிக் கொள்வார்கள். க.பொ.த (சா/த) கல்வியை சிலர் மட்டுமே பெற்றனர் சிலருக்கு தொடர்ந்து கற்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இந்தநிலை நீண்ட காலத்துக்குத் தொடர்ந்தது. பின்னர் சில காலம் க.பொ.த (சா/த) கல்வியைப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகின்றது.

1960ஆம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட காலத்திற்குப் பின்னர் சிலர் கல்வி கற்கவேண்டும் என்ற

உத்வேகத்துடன் கற்றனர். இன்றுள்ள பழுகாமம் கண்டு மணி மகாவித்தியாலயம், முதலைக்குடா மகா வித்தியாலயம் பேன்ற பாடசாலைகளுக்குச் சென்று க.பொ.த (சா/த) கல்வியைப் பெறலாயினர். சில மாணவர்கள் வசதி கருதி பிரதான வீதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி பெறலாயினர். இதன் பின்னர்தான் கல்வி வளர்ச்சி மெல்ல மெல்ல அடியெடுத்து நகரத் தொடங்கியது.

1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் க .பொ.த (சா/த) வகுப்பு மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றது. க.பொ.த (சா/த) கல்வியினைப் பெறுவதற்கு மாணவர்கள் அக்கறை காட்டினாலும் க.பொ.த (சா/த) ல் சித்தி பெறுகின்ற வீதம் மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. ஒரு சிலர் மட்டும் உயர் தரத்தில் கல்வி பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் அசாதாரண சூழ்நிலை உருவாகத் தொடங்குகின்றது. இதனால் தொடர்ந்து கல்வியைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றது. 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் அது வலுப்பெறுகின்றது. தமிழீழ வீடுதலைப் போராட்டத்துக்காக இளைஞர்கள் இணைக்கப்படுகின்றனர். அது 2004ஆம் ஆண்டு கட்டாய ஆட்சேர்ப்பாக உருவெடுக்கின்றது. இவ்வாறான நிலமைகள் யாவும் எமது கிராமத்தினையும் பாதிக்கவே செய்கின்றது. கல்வி கற்ற மாணவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டாயத்தின் பெயரில் இணைக்கப்பட்டனர். சிலர் கிராமத்தினை விட்டு வெளியேறினர், சிலர் செய்வதறியாது திகைத்து நின்றனர், சிலர் ஒளித்தனர். இவையாவும் மக்கள் மனங்களில் உள்ளாந்த தாக்கத்தினை ஏற்படுத்தியது. அதனால் கல்வியைப் பெறுவதில் தொடர்ந்து சிக்கல் நிலை ஏற்பட்டது. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாணவர்கள் கற்கத் தொடங்கினாலும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகின்ற நிலை மிகக் குறைவாகவே உள்ளது. அதற்கு காரணம் பாடசாலையில் சிறந்த வழிகாட்டல் இல்லாமையும், கற்பிக்கின்ற சில ஆசிரியர்களிடையே காணப்படுகின்ற வழுவான நிலையுமாகும். இதனால் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெறமுடியாமல் போகின்றன.

அம்பிலாந்துறைக் கிராம மக்களுடன் விளையாட்டு ஊறிப்போயுள்ள ஒன்று. அந்த தன்மையினை பாடசாலை மாணவர்களிடையேயும் காணமுடியும். அன்மைக் காலமாக பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டம் வரைச் சென்று வெற்றியும் பெற்றனர். இதற்காக மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள். விளையாட்டில் ஆர்வம் கொண்டார்கள். இந்த மாணவர்கள்தான் பிரதேச செயலக விளையாட்டு, இளைஞர் கழக விளையாட்டு போன்றவற்றிலும் பங்குபெறவேண்டி ஏற்பட்டது. இதனால் கல்வி மீதிருந்த பற்றுகுறையத் தொடங்கியது, அதனால் க.பொ.த (உ/த) சிறந்த பெறுபேற்றினைப் பெறமுடியாமல் போயுள்ளது. இது அவர்களுக்கு தேசிய மட்டத்திலான விளையாட்டுச் சான்றிதழ் இருந்தும் கல்வியற் கல்லூரிக்குக்கூட தெரிவு செய்ய போதாத பெறுபேறாக இருந்துள்ளது. இத்தகைய நிலை மாற்றியமைக்கப்பட வெண்டும். விளையாட்டில் கவணம் இருப்பது போன்று பெறுபேற்றினை அதிகரிப்பதிலும் கவனம் வேண்டும். பொதுவாக சரியான திட்டம் வேண்டும் இல்லாவிட்டால் கல்வியைப் பெறுவதில் தொடர்ந்து இவ்வாறான பாதிப்பே ஏற்பட வாய்ப்புண்டு.

2014ஆம் ஆண்டுக்குப் மு.குணரெத்தினம் அதிபர் அவர்கள் பாடசாலையினைப் பொறுப்பேற்ற பின்னர் உயர்தரம் செல்கின்ற மாணவர்களின் தொகை சடுதியாக அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) க்குத் தோற்றிய மாணவர்களில் நான்கு பேர் பல்கலைக்கழகம் செல்வதற்கு வாய்ப்புண்டு. இந்த நிலை தொடர்ந்து கொண்டு செல்லப்பட வேண்டும். அதற்காகப் பாடசாலைச் சமூகம் ஒத்துழைப்பு பாடசாலைக்கு வழங்க வேண்டும். மொத்தத்தில் 2015ஆம் ஆண்டு பல பாகங்களிலும் கல்வி கற்ற மாணவர்களில் இருந்து 15 மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லத் தகுதி பெற்றுள்ளனர். இது அம்பிலாந்துறையின் மொத்த கல்வி வளர்ச்சியாகும்.

## கற்சேனைப் பாடசாலை

1979ஆம் ஆண்டு காலத்தில் பாலர் பாடசாலையாக ஆரம்பித்த இப்பாடசாலை இன்று தரம் 9 வரையுள்ள வகுப்புக்களைக் கொண்டுள்ளது. பாடசாலைக்கான நிலத்தினை பொடிசிங்கம், மூ.மாதாச்சிப்பிள்ளை க.மூத்ததம்பி, அ.பொன்னம்மா, சி.இராசசிங்கம் ஆகியோர் நன்கொடையாக வழங்கியுள்ளனர். ஆரம்பத்தில் பல இடர்களை இப்பாடசாலை சந்தித்தபோது 10.10.1979ஆம் ஆண்டு தேற்றாத்தீவில் இயங்கி வந்த பிரான்சிஸ்கன் அமைப்பு பொறுப்பேற்று பாடசாலையினை இயங்கச் செய்திருக்கின்றது. அக்காலத்தில் க.கருணையம்மாவும், சி.கங்கேஸ்வரியும் தொண்டர் அடிப்படையில் கல்வி கற்றுக் கொடுத்தனர். இவர்களுக்கு முன்னராக சு.பூமணியும், வே.கோபாலபிள்ளையும் கற்பித்து வந்தனர்.

1980ஆம் ஆண்டு காலத்தில் அரசாங்கப் பாடசாலையாக பொறுப்பேற்கப்பட்டதன் பின்னர் சி.வேல்முருகு (06.02.1980 - 17.05.1980) அதிபராக இருந்தார். அவரைத் தொடர்ந்து க.முத்துலிங்கம் (18.05.1980 - 26.12.1990) செ.சதாசிவம் (27.12.1990 - 04.07.2001) இ.மேகராசா (05.07.2001 இன்று வரை) அவர்கள் பாடசாலையின் அதிபர்களாகக் கடைமையாற்றுகின்றார். திரு.இ.மேகராசா அதிபர் அவர்கள் உயிரோட்டமுள்ள பாடசாலைக்கு அத்திபாரம் இட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை வரலாற்றில் 2011ஆம் ஆண்டு து.சுகிர்தன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியாகும் அதே வேளை சி. பிறேமினி அவர்கள் 75 மீற்றர் ஒட்டத்தில் 1998ஆம் ஆண்டு அகில இலங்கை மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான பயிற்சியினை இப் புத்தக ஆசிரியர், ஆசிரியராக இருந்த அக்காலத்தில் வழங்கியிருந்தார். இந்த மாணவியினை கற்சேனைப் பாடசாலைச் சமூகம் இலகுவில் மறந்துவிட முடியாது.

## மண்முனை தென்மேற்குப் பிரதேசப் பாடசாலைகள்

| இல | பாடசாலைகள் | ஆரம்பம் | தரம் |
|---|---|---|---|
| 01 | மட்/மமே/அம்பிலாந்துறை கலைமகள் மகா வித்தரியாலயம் | 1766 | 1AB |
| 02 | மட்/மமே/பண்டாரியாவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 1896 | தரம் 3 |
| 03 | மட்/மமே/அரசடித்தீவு விக்கிணேஸ்வரா வித்தியாலயம் | 1910 | 1C |
| 04 | மட்/மமே/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் | 1912.01.01 | 1C |
| 05 | மட்/மமே/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் | 1923.01.01 | 1C |
| 06 | மட்/மமே/பட்டிப்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 1934 | தரம் 3 |
| 07 | மட்/மமே/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண வித்தியாலயம் | 1937 | 1C |
| 08 | மட்/மமே/முதலைக்குடா மகா வித்தியாலயம் | 1947 | 1AB |
| 09 | மட்/மமே/படையாண்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 1961.02.05. | தரம் 3 |
| 10 | மட்/மமே/மாவடிமுன்மாரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 1961.05.03 | தரம் 2 |
| 11 | மட்/மமே/கற்சேனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 1984.10.10 | தரம் 3 |
| 12 | மட்/மமே/நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயம் | 1990.05.02 | தரம் 2 |
| 13 | மட்/மமே/கொல்லனுலை விவேகானந்தா வித்தியாலயம் | 1993.11.10 | தரம் 2 |

| | | | |
|---|---|---|---|
| 14 | மட்/மமே/கடுக்காமுனை வாணி வித்தியாலயம் | தரவு இல்லை | தரம் 2 |
| 15 | மட்/மமே/விடுதிக்கல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 1997.01.01 | தரம் 3 |
| 16 | மட்/மமே/வால்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 1997.01.01 | தரம் 3 |
| 17 | மட்/மமே/குழுவினமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 1994.02.01 | தரம் 3 |
| 18 | மட்/மமே/கச்சக்கொடி சுவாமிமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 2005 | தரம் 3 |
| 19 | மட்/மமே/முதலைக்குடா கனிஷ்ட வித்தியாலயம் | 2010.01.0 | தரம் 3 |
| 20 | மட்/மமே/முனைக்காடு கனிஷ்ட வித்தியாலயம் | 2010.01.04 | தரம் 3 |
| 21 | மட்/மமே/அம்பிலாந்துறை கனிஷ்ட வித்தியாலயம் | 2012.01.01 | தரம் 3 |

# வாழ்வியல் சடங்கும் சம்பிரதாயங்களும்

மனித வாழ்வியலில் பிறப்பு முதல் இறப்பு வரை பல சடங்குகள் செய்யப்படுகின்றன. அல்லது, சடங்கு செய்பவரின் தேவைக்கேற்ப குறைந்தோ கூடியோ அமையலாம், சடங்கு மாற்றம் பெறாது. அவை வாழ்வியலோடு ஒன்றித்துப் போயுள்ளன. அச்சடங்குகள் காலாகாலமாக மக்கள் மத்தியில் நடை முறையில் இருந்து வருகின்றன. இவை பண்பாட்டோடு இணைந்த விழுமியங்களை வெளிக்கொணர்வதோடு இறை பக்தியையும் புலப்படுத்தி நிற்கின்றது.

## திருமணம்

திருமணம் அன்று தொடக்கம் இன்று வரையும் ஒரே குடியினருக்கு இடையில் இடம்பெறுவதில்லை. கலிங்க குலத்தாருக்கும் படையாட்சி குடியினருக்கும் இடையில்தான் அதிகமான திருமணங்கள் இடம்பெற்றிருக்கின்றன. எனினும், பல திருமணங்கள் காதல் காரணமாக ஆங்காங்கு ஒரே குடியிணருக்கு இடையில் இடம் பெறுகின்றமையினைக் காணமுடிகின்றது. இது பெரும் பாலும் ஒரே ஊரில் அமைவதில்லை. அன்றைய காலங்களில் அம்பிலாந்துறையில் உள்ள ஆண் பெண்களைப் பலர் விரும்பித் திருமணம் செய்திருக்கின்றனர். வன்னியர்கள் பலர் அம்பிலாந்துறையில் இருந்த பெண்களை விரும்பித் திருமணம் செய்திருக்கின்றனர். இக் கிராமத்திலுள்ள பலரை மாப்பிள்ளை கேட்டுத் திருமணம் செய்திருக்கின்றனர். அதனால்தான் வன்னியர்களுடைய இருப்பிடமாக அம்பிலாந்துறை இருந்திருக் கின்றது. (ஆ.அரசரெத்தினம்)

## மாப்பிள்ளை பார்த்தல்

தனது மகளுக்குத் திருமண வயது வந்ததும் பெற்றோர்கள் பொருத்தமான மாப்பிள்ளையைப் பார்த்து மணம் முடிப்பார்கள். இதற்காகச் சாதகங்களையும் பார்ப்பார்கள். பெண்ணின் தாய்

மாமனின் மகனைத் திருமணம் செய்வதுதான் வழக்கமாக இருந்தது. அப்படி இல்லையாயின் குலம், கோத்திரம் பார்த்து மாப்பிள்ளை எடுப்பர். பெண்ணின் தந்தையார் சுற்றத்தாரோடு மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று, மாப்பிள்ளையின் தகப்பனிடம் தாம் வந்த மூலக் கருத்தை வெளிப்படுத்துவார். திருமணத்துக்குச் சம்மதம் என்றால், மாப்பிள்ளையின் பெற்றோர் தமது கருத்தைக் கூறுவார்கள். வாழ்வதற்கு ஒரு வீடு வளவு, கிணறு, தொழில் செய்வதற்குக் காணி, உழுதுவதற்கு மாடுகள் என்ற பொருட்களில் இருப்பதை மட்டும் கொடுப்பதாகப் பொருந்திக்கொள்வார்கள். அத்துடன் வசதிக்கேற்ப நகைகள், வெண்கலச் சாமான்கள் என்பனவும் கொடுக்கப்படும். இன்றைய நிலை வேறு.

## கலியாணத்தூது அனுப்புதல்

முறை மாப்பிள்ளை இல்லாதபோது வெளியூரில் மாப்பிள்ளை எடுப்பதற்காக தமது உறவினர்களை அல்லது, நண்பர்களை மாப்பிள்ளையின் பெற்றோரிடம் அனுப்புவதாகும். இந்த நிகழ்வு ஒரு சுப தினத்தில் நிகழும். மாப்பிள்ளையின் பெற்றோர் இணங்கிக் கொண்டதும் பொருத்தம் பார்ப்பதற்கான ஏற்பாடுகள் இடம் பெறும்.

## சோதிடப் பொருத்தம் பார்த்தல்

மாப்பிள்ளையின் சாதகத்தையும், பெண்ணின் சாதகத்தையும் பார்த்து அதில் பல விடயங்கள் பொருந்தி வருமாயின் திருமணம் இடம்பெறும். இதனைக் கலியாணப் பொருத்தம் என்பர்.

## மாப்பிள்ளை கேட்டல்

நிகழ்வு இடம் பெறும். மாப்பிள்ளை கேட்டுப் போகும்போது முதலில் மாப்பிள்ளை வீட்டாரின் வேலியையும், கோடியையுந் தான் (சலம் கழிக்கும் இடம்) பார்ப்பார்களாம். இவை இரண்டும் சரியாக இருந்தால் தனது மகளை இவன் நன்றாகக் கவனிப்பான் என்பதாம். அவை பொருத்தமாக இல்லாவிட்டால் திரும்பி வந்துவிடுவார்களாம். மாப்பிள்ளைச் சாமானை காவிச்சென்றிருக்கிறார்கள். ஓலைப்

பெட்டியில் வைத்தும் பொருட்களைக் கொண்டு செல்வார்கள். மாப்பிள்ளை, பெண் பிள்ளையின் சாமான்கள் வைப்பதற்காக சிறப்பான ஓலைப்பெட்டிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஓலைப் பெட்டியை வெள்ளைத் துணியினால் சுற்றிக்கொள்வார்கள். இன்று விஸ்கட் வரும் பெட்டிகள் பாவிக்கப்படுகின்றன. எனினும், ஓலைப் பெட்டிக் கலாச்சாரம் இன்றும் முற்றாக மறையவில்லை.

மாப்பிள்ளைக்காக மாப்பிள்ளைக் கொழுக்கட்டை அவித்து எடுப்பர். அவற்றுள் ஒரு கொழுக்கட்டையைப் பெரிதாக செய்து அதற்குள் தங்க மோதிரம் வைத்து அவிப்பர். இதனை மாப்பிள்ளைக் கொழுக்கட்டை எனப்படும். கொழுக்கட்டைகளை ஓலைப் பெட்டியில் வைத்து வெள்ளை நிறத் துணியினால் சுற்றிக் கட்டுவார்கள். பலவகைப் பலகாரவகை செய்யப்படும். பலகாரங் களை வெள்ளை நிறப் புள்ளிகளால் அலங்காரம் செய்யப்பட்ட வெங்கலப் பானைகளில் வைத்து வெள்ளைத் துணியினால் மூடிக் கட்டப்படும். வாளைக்குலை, தயிர்ப் பானைகள் என்பனவும் வெள்ளைத் துணியினால் சுற்றப்பட்டு காவுகளில் தொங்கவிடப்படும். அதனை ஆண்கள் தோளில் காவிக் கொண்டு முன்னே செல்ல, பெண்கள் ஏனைய சாமான்களைத் தலையில் சுமர்ந்து பின்னே செல்வார்கள். அன்று பறைமேள தாளத்துடன் சென்றனர். இன்று மேளதாளத்துடன் செல்கின்றனர். பின்னர் பொருட்கள் கைமாறப்பட்டு நிகழ்வு தொடரும். இதற்காக விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பந்தர் செய்வார்கள்.

## மோதிரம் மாற்றுதல்

பெண்ணுக்குரிய மோதிரத்தை மாப்பிள்ளையும், மாப்பிள்ளைக் குரிய மோதிரத்தைப் பெண்ணும் அணிவித்துக்கொள்வார்கள். இவ்வாறுதான் உடுப்பும் பரிமாறப்படும்.

## உறுதி எழுதுதல்

சீதன உறுதி எழுதப்பட்டு கைமாற்றிக் கொடுக்கப்படும். அத்தோடு வீடுவளவு, நெற்காணி, இதற்குரிய விதைநெல், படி நெல், மாடுகள் என்பனவும் வழங்கப்படும்.

## உணவருந்துதல்

மாப்பிள்ளையை ஆண்களின் பந்தியிலும், பெண்பிள்ளையினை பெண்களின் பந்தியிலும் இருத்தி விருந்தளிப்பர். அதன் பின்னர் திருமண முகுத்தம் நிச்சயிக்கப்படும்.

## முகுத்தம் பார்த்தல்

திருமணம் நடைபெறுவதற்காகப் பொருத்தமான நாள் நிச்சயிக்கப்படும். இரு வீட்டார்களும் இந்த நாளை நிச்சயப்படுத்திக் கொள்வார்கள்.

## திருமணத்துக்கு அறிவித்தல்

சுற்றத்தாருக்கு கலியாணம் பற்றிய செய்தியினை அறிவிப்பதற்காக வட்டா ஒன்றினை எடுத்து, அதில் வெற்றிலை, பாக்கு வைத்து அதனைத் தூக்கிச் சென்றே திருமண நாள், முகுத்தம் என்பவற்றை அறிவிப்பார்கள். இதற்காக மாப்பிள்ளை வீட்டாரில் ஒருவரும், பெண்பிள்ளை வீட்டாரில் ஒருவரும் செல்ல வேண்டும். இன்று ஊருக்குள் வட்டா இன்றி சொந்தங்களுக்கு அறிவிக்கப்படும் கலாசாரம் உண்டு. மற்றும்படி திருமணத்துக்காக திருமண அழைப்பு (காட்) பாவிக்கப்படுகின்றது.

## தாலிக்குப் பொன் உருக்குதல்

கணையாளி மாற்றிய தினத்தன்று தாலிக்குப் பொன் உருக்கு வதற்கான சுபதினம் அறிவிக்கப்படும். அத்தினத்தில் மாப்பிள்ளை வீட்டுக்கு பொற்கொல்லர் அழைக்கப்படுவார். இரு தரப்பாரும் சம அளவான பங்கு நகைகளைக் கொடுத்து தாலி உருக்கப்படும். தாலிக்காய் பிள்ளையார் முகப்பைக் கொண்டதாக இருக்கும். இதற்காக உருக்கப்படும் தங்கம் கட்டியாக உருக்கப் பட்டுப பின்பு தான் தாலிக்காய் செய்யப்படும். உருக்கப்படும் கட்டியில் குறைபாடு இருந்தால் ஏதேனும் குற்றம் இருப்பதாகக் கருதப்பட்டு, பிள்ளையாருக்கு பிரிதி செய்யப்படும். உருக்கப்பட்ட பொன் சபையோரால் ஆசீர்வதிக்கப்பட்ட பின்னர், பெற்கொல்லருக்குச்

சன்மானம் வழங்கப்படும். தாலிக்கொடி செய்யும் பொறுப்பினை மாப்பிள்ளை ஏற்றுக் கொள்வார்.

### கூறை தாலிப்பெட்டி

மாப்பிள்ளை கூறைக்கு விலையுயர்ந்த பட்டுச்சேலை வாங்கிக் கொள்வார். அதில் முதலாம் கூறை, இரண்டாம் கூறை எனப் கூறைகள் பல உண்டு. அதே போன்று பெண் வீட்டார்களும் பட்டு வேட்டி, சால்வைகளை வாங்கி தமது வீட்டில் வைத்துக்கொள்வார்.

### பந்தர் போருதல்

வீட்டு முற்றத்தில் கால் நட்டு பந்தல் அமைப்பர். கூரைக்கு படங்கு அல்லது, தகரம் என்பன போடுவார்கள். பந்தரைச் சுற்று சலவைத் தொழிலாளி சீலை சுற்றிக் கட்டுவார். கரும்பு, கமுகு, வாலைக் குலைகளுடன் வெளிவாயில் அலங்கரிக்கப்பட்டிருக்கும். பந்தருக்குள் சோடனைப் பொருட்களால் அலங்கரிப்பார்கள். திருமணத்துக்கு வருபவர் கள் இந்தப் பந்தருக்குள் இருந்துதான் சாப்பிடுவார்கள். திருமணம் முடிந்ததும் பந்தர் பிரிக்கப்படும். புதன், சனிக் கிழமை களில் பந்தர் நாட்டுவதோ, பிடுங்குவதோ இல்லை.

### கூரைமுடி வைத்தல்

முற்குக குலத்தில் உள்ள குடிப்பிரிவினரைப் பொறுத்து கூரைமுடி அமையும். வழிபாட்டறையின் கூரையில் இந்த முடிகள் வைக்கப்படும். (மரண வீட்டில் சாப்பீட்டு கூரையில் முடிகள் வைக்கப்படும்) வெங்கலச் செம்பில் தேங்காய் வைத்து கும்பம் வைக்கப் படும். மேல் வரிசையில் உள்ள கும்பத்திற்குக் குடை கட்டப்படும். அதனுடன் தென்னம் பாளையும் சேர்ந்து கட்டப்பட்டிருக்கும். கூரைமுடிகளுக்கு சீலைகள் கொய்து எறியப்பட்டு இரு மருங்கும் தொங்க விடப்பட்டிருக்கும். அதன் இரு மருங்கும் இரண்டு நிறை குடங்கள் வைக்கப்பட்டு விளக்குகளும் வைக்கப்படும்.

## மணவறை அமைத்தல்

வீட்டின் ஒரு பகுதியில் மணமக்கள் இருக்கத்தக்கதாக கதிரை போடப்பட்டு மணவறை அமைக்கப்படும். இதனை பலவகையான சோடனைப் பொருட்களைக் கொண்டு அமைப்பர்.

## அரப்பு வைத்தல்

பெண்பிள்ளைக்கு மாப்பிள்ளை வீட்டுக் காரருடைய தோழியும், மாப்பிள்ளைக்கு பெண்பிள்ளை வீட்டுக் காரருடைய தோழனும் வைப்பார்கள் பின்னர் அவர்களுடைய சொந்தங்கள் சூழ ஏனையோரும் மணமக்களுக்கு அரப்பு வைப்பார்கள். இந்த நிகழ்வு அவரவர் வீட்டில்தான் இடம்பெறும்.

## மாப்பிள்ளையை அழைத்து வருதல்

பெண்ணின் தம்பி அல்லது தம்பி முறையானவர் மாப்பிள்ளையை அழைத்து வருவதற்காகச் செல்வார். இவரை மாப்பிள்ளைத் தோழன் என்பார்கள். மாப்பிள்ளை தனது வீட்டில் இருந்து புறப்பட்டு ஆலய வழிபாட்டினை மேற்கொண்ட பின்னர் கல்யாண ஊர் வலம் ஆரம்பமாகும். மேளம் இசைக்க, குரைவைச் சத்தம் கேட்க, காவுகளும் மங்கலப் பெட்டிகளும் வரிசையாகச் செல்ல, நிறைகுடம், விளக்கு, வட்டா என்பனவற்றை சுமங்கலிப் பெண்கள் தாங்கிச் செல்ல, மாப்பிள்ளையின் சகோதரியான சௌபாக்கியவதி ஒருவர் கூறை தாலிப் பெட்டியினைத் தலைமேற் சுமந்து செல்ல, மாப்பிள்ளைத் தோழன் குடைபிடித்து மாப்பிள்ளையை அழைத்துச் செல்வார்.

## மாப்பிள்ளையை வரவேற்றல்

மாப்பிள்ளையைப் பெண்வீட்டார்கள் அழைத்துச் செல்வார்கள். வீட்டை அடைந்ததும் கொண்டுவந்த பொருட்களையெல்லாம் பெண்வீட்டார்கள் மாறிக்கொள்வார்கள். பின்னர் கூறைதாலிப் பெட்டியினை மாறுவதற்கு வருவார்கள். அந்த நேரம் இரண்டு பகுதியினரும் பெட்டியைப் பறித்து இழுபறிப்படுவார்கள். அதில் வேறு யாரும் பங்கெடுக்க முடியாது. நீண்ட நேரத்திற்குப் பின்னர்

பறிக்கப்பட்டதும், மாப்பிள்ளை கடப்படியில் தேங்காய் உடைத்து உள்ளே வருவார்.

பெண்ணின் தாயார் பழம், பாக்கு, வெற்றிலை, மஞ்சல், குங்குமம், தட்சனை என்பனவற்றைத் தனது முந்தானையில் கட்டிக் கொண்டு மாப்பிள்ளையின் தாயாரின் முந்தானையில் வைத்து கைலாகு கொடுத்து அழைத்துவரப், பெண்ணின் தந்தையும் மாப்பிள்ளையின் தந்தையின் கையில் பிடித்து அழைத்துச்சென்று உரிய இடத்தில் இருக்க வைப்பர்.

பின்னர் கூரைமுடி வைக்கப்பட்ட இடத்தின் கீழ் பலகைபோட்டு அதற்குச் சீலை விரித்து, மாப்பிள்ளையின் காலினை அதன் மேல் வைத்து, பால், அறுகு, மஞ்சல் கலந்த நீரினால் மணப் பெண்ணின் சகோதரர் கழுவுவார். அதற்காக மாப்பிள்ளை மோதிரமோ? காசோ அவருக்குக் கொடுப்பார். பின்னர் மணப்பெண் அழைத்துவரப்பட்டு மாப்பிள்ளையின் இடப்புறமாக நிற்பார். இப்போது மாப்பிள்ளை கூறைச்சேலையைப் பெண்ணுக்குப் போர்ப்பார், மணப்பெண் வேட்டி, சால்வையை மாப்பிள்ளைக்குப் போர்ப்பார். இருவரும் அந்த உடுப்பினை மாற்றிக்கொண்டு மீண்டும் வருவர்.

## தாலி கட்டுதல்

பெரியவர் ஒருவர் தட்டு ஒன்றில் மங்கலப் பொருட்களுடன் தாலியையும் வைத்துக்கொணண்டு, திருமணத்துக்கு வந்தவர்களிடம் அவரவர் இருக்கும் இடம் சென்று ஆசீர்வாதம் பெறுவார். தொடர்ந்து மாப்பிள்ளை அந்த தாலியினை மணப்பெண்ணின் கழுத்தில் கட்டுவார். பின்னர் இரு சுமங்கலிகள் கண்ணூறு கழிப்பர்.

## கைபிடித்துக் கொடுத்தல்

பெண்ணின் தகப்பனார் மாப்பிள்ளைகையுடன் பெண்ணின் கையைப் பிடித்து ஆசீர்வதிப்பார். தமது கரங்களால் இருவரது விரல்களையும் பற்றியவாறு "சந்திரர் சூரியர் சாட்சியாகவும், அக்கினி மற்றும் தெய்வங்கள் சாட்சியாகவும் எனது மகளை

மாப்பிள்ளையாகிய (பெயர் சொல்லுதல்) இன்னாருக்கு மணஞ் செய்து வைக்கின்றேன். அவர்கள் ஊழி ஊழிக் காலம் எல்லாச் சிறப்பும் பெற்றுவாழ ஆண்டவன் அருள் செய்யுமாறு வணங்குகிறேன்" என்று மணமக்களை ஒன்றினைத்து வைப்பார். அதன் பின்னர் மாப்பிள்ளை பெண்ணின் கையைப் பிடித்தபடியே வலது காலை முன்வைத்து வீட்டுக்குள் செல்வர். அங்கு கடவுள் வழிபாடு இடம் பெறும். கடவுள் வழிபாடு முடிந்ததும் வெள்ளை விரிக்கப்பட்ட பாயில் தம்பதியினர் இருப்பர்.

## கலத்தில் போருதல்

முதலில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பசும்பாற் கலவையை பரிமாறிக்கொள்வார்கள். பின்னர் வெண்பட்டு விரிக்கப்பட்ட குத்திப்பலகையில் மாப்பிள்ளை அமர்ந்திருப்பார். அதன்முன் வெங்கலத்தாலான சேவரக்கால் வைக்கப்பட்டு அதில் வெங்கல வட்டி வைக்கப்பட்டிருக்கும். வெங்கலச் செம்பில் தண்ணீர் இருக்கும். மாப்பிள்ளை கையினை மணப்பெண் கழுவியதும் கமுகம்பூ சம்பா அரிசிச் சோற்றை மூன்று முறை வட்டியில் போட்டு, விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஏழு மரக்கறிகளையும் இட இதனை மாப்பிள்ளை சோற்றுடன் சேர்த்து மூன்று பிடி உண்ட பின்னர், மனப் பெண்ணும் மூன்று முறை உண்பார். பின்னர் தாம்பூலத்தினை இருவரும் அருந்திக் கொள்வர். பின்னர் மணமக்கள் பெற்றோருடைய ஆசியைப் பெறுவார்கள். அத்துடன் திருமணத்திற்கு வந்தவர்களின் ஆசியினையும் பெறுவார்கள். திருமணம் முடிந்த மூன்றாம் நாள் மாப்பிள்ளை மட்டும் மைத்துணருடன் தாய் வீட்டுக்குச் செல்வார்.

## கால் மாறிப்போதல்

தமக்குப் பொருத்தமான சுபமுகூர்த்த வேளையில் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் சுற்றம் புடைசூழ, கொட்டு மேளம் குரவைச் சத்தத்துடன் செல்வார்கள். மணப் பெண் வலதுகாலை எடுத்து வைத்தத்தான் மாப்பிள்ளை வளவினுள் செல்ல வேண்டும். அப்போது, மணப்பெண்ணைச் சிறப்பாக வரவேற்பார்கள். அவருக்கு மைத்துணி மோதிரம் அணிவிப்பார்.

## ஆறு மாதக் கவனிப்பு

திருமணம் இடம்பெற்று ஆறு மாத காலத்துக்கு மாப்பிள்ளையின் வருமானம் எதனையும் எதிர்பாராமல் உபசரிப்புக்கள் இடம்பெறும். அதன் பின்னர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு தனிக்குடித்தனம் செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பர்.

கற்பிணி ஆகிய காலந் தொடக்கம் அப்பெண் கவனமாகப் பார்க்கப்படுகின்றார். சத்தான உணவுகள் கொடுக்கப்படும். உடல் மாற்றத்துக்கு ஏற்ப ஆலோசனைகள் வழங்கப்படும். தாயின் ஆலோசனைப்படி விடயங்கள் இடம்பெறும். அன்று அவர் வீட்டில் பல் வேலைகளைச் செய்திருக்கின்றார். அவருக்குரிய வேலையினை அவரே செய்வது வழக்கம். அவர் நெல் குத்துதல், மாவிடித்தல் போன்ற பெரியபெரிய வேலைகளைச் செய்திருக்கின்றார். நன்றாகச் சாப்பிட்டிருக்கின்றார். அதனால் அவருக்கு பிள்ளைப்பேற்றில் சுகப்பிரசவமே இடம் பெற்றிருக்கின்றது. மருத்துவச்சி பிள்ளைப் பேற்றினைக் கவனிப்பார். ஆண்பிள்ளை பிறந்ததும் பலாமரத்தாலான சிறு உலக்கையை பிள்ளை பிறந்த வீட்டுக் கூரைக்கு மேலாக, கூரையைக் கடந்து செல்ல எறிவர். பெண் பிள்ளை எனின்,சோலைக் காடுகளில் வளர்ந்த வாருகற் புல்லினால் கட்டப்பட்ட வாருகற் கட்டை அவ்வாறே எறிவது பிள்ளையின் தகப்பன் செய்யும் மரபாகும்.

## ஐந்தாம் மருங்கை

பிள்ளை பிறந்து ஐந்தாவது நாள் மருங்கை எனும் பெயரில் இடம்பெறுகின்றது. உற்றார், உறவினர், மருத்துவிச்சி, வண்ணான், நாசிவர், நாவிதர் போன்றவர்களை அழைத்து மதிய உணவு கொடுக்கப்படும். அன்று சீந்திற் கம்பிற் சிறு சிறு துண்டாக்கி, இடையிடையே முத்துமணியைத் தாமரை நூலிற் கோர்த்து பிள்ளையின் இடுப்பிலும் கையிலும் கட்டிவிடுவார். பின்னர் ஏழு நிற நூல் சேர்த்து, வறுத்த பச்சை அரிசியை சப்பிக் கொண்டே முறுக்குவார். ஆதனால், பிள்ளைக்கு உடம்பு முறிந்து அழும்,

வயிறுபொருமல் தீரும், வயிற்றுவலி தீரும், மலசலம் சுகமாகப் போகும் என்ற நம்பிக்கையும் உண்டு.

### நாமஞ் சூட்டுதல்

பிள்ளை பிறந்த பன்னிரெண்டாம் நாள் பிள்ளைக்குத் தாய் மாமன் பெயர் சூட்டுவார். அப்பெயர் மரபுவழிப்பட்டதாகவும், பிள்ளை பிறந்த நட்சத்திர எழுத்தைக் கொண்டதாகவும் இருக்கும். அன்றும் உற்றார், உறவினர், மருத்துவிச்சி, வண்ணான், நாசிவர், நாவிதர் போன்றவர்களை அழைத்து மதிய உணவு கொடுக்கப்படும். அவரவருக்குரிய பொருட்களும் கொடுக்கப்படும்.

### தொட்டிலில் இடுதல்

பெயர் சூட்டும் நாளன்று தொட்டில் கட்டப்படும். பிள்ளையை அம்மம்மா மடிமீது வைத்திருப்பார். அப்போது பிள்ளைக்கு காப்பு, மாலைகள் போடப்படும். பின்னர், நாவிதர் மயிரைக் களைந்து வட்டி ஒன்றில் போடுவார். பிறகு தொட்டிலில் இட்டு ஆட்டப்படும்.

### காது குத்துதல்

முப்பதாவது நாளிலே காது குத்தப்படும். காதனிகளை ஆண், பெண்களுக்கு அணிவது மரபாக இருந்தது. அன்றும், உற்றார், உறவினர், மருத்துவிச்சி, பொற்கொல்லர், வண்ணான், நாசிவர், நாவிதர் போன்றவர்களை அழைத்து மதிய உணவு கொடுக்கப்படும்.

### சாதகம் வாசித்தல்

சுபமுகூர்த்தத்தில் சோதிடரால் சாதகம் வாசித்தல் நிகழ்வு இடம்பெறும். அன்றும் விருந்துபசாரங்களும் சோதிடருக்குச் சன்மானமும் வழங்கப்படும்.

### சாமத்தியச் சடங்கு

பெண்பிள்ளைகள் வயதுக்கு வருவதனைச் சாமத்தியப்படல், பெரியபிள்ளையாதல், புத்தியறிதல், பக்குவப்படுதல், என்ற

சொற்களால் மட்டக்களப்புப் பிரதேசத்தில் அழைக்கின்றனர். ஒருபிள்ளை சாமத்தியப்பட்டதும் ஆற்றுநீர், குளத்துநீர், கடல்நீர், மற்றும் பல கிணற்று நீர்களையும் கலந்து, மஞ்சள், வேப்பிலை, அறுகு முதலிய பொருட்களைச் சேர்த்து மாமி முறையான சுமங்கலிப் பெண் ஒருவர் தலை முழுக நீர் வார்ப்பார். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார் உறவினர்கள் மஞ்சல் பூசி தமது மகிழ்ச்சியினை வெளிக்காட்டுவார்கள்.

இந்தப் பெண்ணுக்கு உப்புமாப் பிட்டு, அரிசிமாப் பிட்டு, கோழி முடடை, வேப்பம் எண்ணெய் போன்ற உணவுப் பொருட்கள் கொடுக்கப்படும். தினமும் மஞ்சல் பூசி முழுக்கு வைப்பார்கள். கைமருத்துவத்தில் திருப்தி கண்டதும் பிள்ளையை வெளியில் நடமாட விடுவார்கள். இக்காலத்தில் அப்பெண்ணுக்குப் பல அறிவுரைகள் பாட்டி, தாய் முதலியோரால் வழங்கப்படும். பின்னர் சாமத்தியச் சடங்கு ஏற்பாடுகள் செய்யப்படும். அந்தப்பிள்ளை சாமத்தியப் பட்டதிலிருந்து முப்பது நாள் வரையும் கவனமாகப் பார்க்கப்படுகின்றது.

**புதுமனை புகுதல்**

புது வீடு ஒன்று கட்டிமுடித்ததும் முதலில் செல்லும் நாள் புதுமனைபுகுதலாகும். இதனை குடிபோதல் என்பர். தேங்காய் எண்ணெய் விளக்கு, நிறைமுட்டி, வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு வைத்த வட்டா போன்றவற்றுடன் செல்வர். அன்றைய நாள் பசுப்பால் மண்சட்டியில் காய்ச்சுவார்கள். இவ்வாறான மங்கல கரமான நிகழ்வுகளுடன் குடிபுகுவர். இத்துடன் குருக்களைக் கொண்டு ஆகமம்சார் கிரியையும் இடம்பெறும். சோறு சமைத்துக் கொடுக்கப்படும். மச்சம் மாமிசம் எடுக்கமாட்டார்கள். இது 40 நாள் வரையும் தொடரும்.

## மரணச் சடங்கு

### குளிர்ப்பாட்டுதல்

ஒருவர் இறந்ததும் அவரை குளிப்பாட்டுவர். அவர் ஆணாக இருந்தால் அவருக்கு முகச் சவரம் செய்யப்படும். முகச்சவரத்தினை நாவிதரே மேற்கொண்டனர். தற்போது பொதுமக்களில் ஒருவரே செய்வார். பின்னர் அவருக்கு புது உடை அணிந்து கட்டிலில் வளர்த்துவர். தலைமாட்டிலும் கால்மாட்டிலும் தேங்காய் எண்ணெய் விளக்கு சவம் எடுத்துச் செல்லு மட்டும் எரிந்து கொண்டிருக்கும்.

### பாடை கட்டுதல் (சவக் கட்டில்)

பாடை என்ற சொல்லை இப்பிரதேச மக்கள் சவக்கட்டில் என்றே அழைப்பர். பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வரும் சவக்கட்டில் கட்டும் மரபு பெரும்பாலும் பல கிராமங்களில் பின்பற்றப்படுவதில்லை. ஆனால், அம்பிலாந்துறையில் அம்மரபு இன்றுவரையும் பின்பற்றப்பட்டு வருவதுதான் சிறப்பு. இதற்காக வாழைமரம், கிளிசெறியாக்கம்பு,தென்னங் குருத்து,பேப்பர், கொடிச்சீலை, சணல், கயிறு, வைரமான பத்தடிக்குக் குறையாத கம்பு என்பன பயன்படுத்தப்படுகின்றன. கட்டில் அழகாக வடிவமைக்கப் பட்டிருக்கும். (விளக்கம் புத்தகத்தில்)

### கடமை செய்தல்

| | |
|---|---|
| முதலாவது உலகிப்போடிகுடி | 7 முறை |
| இரண்டாவது காலிங்க அரசன்குடி | 6 முறை |
| மூன்றாவது படையாட்சிகுடி | 5 முறை |
| நான்காவது பணிக்கொணார்குடி | 4 முறை |
| ஐந்தாவதுவது கச்சிலாகுடி | 3 முறை |
| ஆறாவது கோப்பிகுடி | 2 முறை |
| ஏழாவது பெத்தான்குடி | 1 முறை |

அவரவர் குடிக்கேற்ப வாய்க்கரிசி, உரிமைத் தண்ணீர் என்பன கொடுத்து கடமையினை நிறைவேற்றுவார்கள். (உதாரணமாக - உலகிப்போடி குடியிலிருந்து கடமை செய்பவர், வாய்க்கு அரிசு 7

தடவையும், உரிமைத் தண்ணீர் 7 தடவையும் போடுவார்.) அம்பிலாந்துறையில் முதலாவதாக பெற்ற கடைமை என்ற வகையில் 8 முறை உறவினர் அல்லது உறவினரைச் சார்ந்தவர் வலம் வருவார்.

### கால் கழுவுதல்

இறந்தவரின் கால் கழுவும் நிகழ்வு இடம்பெறும். இதற்காக மஞ்சள், அறுகம்புல் கலர்ந்த நீர் பாவிக்கப்படும். இறந்த வரிலும் பார்க்க வயது கூடியவர்கள் கால் கழுவமாட்டார் கள். அவருக்கு இளையவர்களே கால் கழுவுவது வழக்கமாகும்.

### இறைவணக்கம் செய்தல்

கால் கழுவிய பின்னர் கற்பூரம் கொழுத்தி இறைவணக்கம் செய்யப்படும். தேவாரம் பாடத் தொடங்கியதும் எல்லோரும் அழுகையை நிறுத்த வேண்டும். பட்டினத்தார் பாடலோ, அல்லது பஞ்சபுராணமோ, அல்லது இரண்டும் கலந்தோ பாடப்படும். தேவாரம் முடிந்ததும் சவம் வைத்திருக்கும் பெட்டி மூடப்பட்டு நான்குபேர் சேர்ந்து கட்டிலைத் தூக்கிச் செல்வார்கள். கடப்படிக்குச் சென்றதும் மூன்று முறை முன்னர் சென்றும் மூன்றுமுறை பின்னர் வந்துதான் சவக்காலைக்குச் செல்வது மரபு.

### பாடைதூக்குதல்

பாடைக்கு முன்பக்கத்தினை இருவர்கள் தூக்குவார்கள், பின்பக்கம் இருவர் தூக்குவார்கள். சவக்காலை தூரத்தில் உள்ளதனால் பாடையினை இடையில் ஆள்மாறியும் தூக்குவார்கள். சிலர் இறுதிவரையும் மாறாமல் தூக்குவார்கள். சவம் அடக்கம் செய்ய இருக்கின்ற மடுவினை (சவக்குழி) மூன்றுதரம் சுற்றிய பின்னர் பாடையினை இறக்கி வைப்பார்கள்.

### சவத்தினை அடக்கம் செய்தல்

(குடிமக்கள் எனும் பகுதியில் விளக்கம் உண்டு)

## மாத்து மாறுதல்

(குடிமக்கள் எனும் பகுதியில் விளக்கம் உண்டு)

## மரணத்தின் பின்னர்

சாதாரணமான இறப்பாக இருந்தால் 3,8,31 என்ற அடிப்படையில் சம்பிரதாய நிகழ்வுகள் இடம்பெறும். ஆகாலமரணமாக இருந்தால் 5,8,41 என்ற அடிப்படையில் சம்பிரதாய நிகழ்வுகள் இடம்பெறும். அத்தோடு சனிக்கிழமை, புதன் கிழமைகளில் மரணம் நிகழ்ந்தால் ஐந்தாவது நாளில்தான் புக்கைக்கு வைப்பர். எட்டுக்கு ஒன்பதாவது நாளில் வைக்கப்படும். அந்த நாட்களில் இறந்த நாளில் போடப்பட்ட பந்தரையும் பிரிக்கமாட்டார்கள்.

## இளநீர் வைத்தல்

இறந்தவரை நினைத்து அடக்கம் செய்த நாளிலிருந்து தொடர்ந்து மூன்று இளநீர் வைப்பது வழக்கம். இறந்த ஒருவர் தங்களுடன்தான் இருக்கின்றார். அவர் எங்களை விட்டுச் செல்லவில்லை. அவருடைய உயிர் பதைக்கக்கூடாது என்ற மரபுவழிச் சிந்தனைகள் இன்றும் மக்களைவிட்டு நீங்கவில்லை. புக்கைக்கு வைக்கும் அன்றுடன் (இறந்து மூன்றாம் நாள்) இளநீர் வைக்கமாட்டார்கள்.

## மூன்றாம் நாள்

பொங்கல் செய்து படைப்பார்கள். இதனைப் புக்கைக்குவைத்தல் என்று சொல்வதுதான் மரபு. புக்கைக்காக சுற்றத்தார் மற்றவர்கள் எல்லோரும் அரிசி, சீனி போன்ற பொருட்களைக் கொண்டு வருவார்கள். எல்லோருடைய அரிசும் பொங்கலில் சேர்க்கப்படும். அன்று இரவு பொங்கல் பொங்கிப் படையல் செய்து இறந்தவருக்காக இறைவனை வேண்டுவர். இந்த நிகழ்வு மாலைக்குள் இடம்பெறும்.

## எட்டாம் நாள்

எட்டாம் நாள் இடம்பெறும் சடங்கு எட்டுக்கு வைத்தல் எனும் நிகழ்வாக இடம் பெறுகின்றது. இதனைக் கல்லைக்கு வைத்தல் என்பர். இன்றும் சுற்றத்தார், மற்றவர்கள் அரிசி, தேங்காய், மரக்கறி போன்ற பொருட்களைக் கொண்டு வருவர். இந்த நிகழ்வு இரவிலோ அல்லது பகலிலோ இடம்பெறும். பகலில் இடம்பெற்றால் இரவில்

மடைப்பொருட்கள் வைத்து இறைவனைத் துதிப்பர். இரவில் மடைவைத்துக் வணங்கினால் மறுநாள் அமுதுகொடுப்பர். படையலுக்கு ஆட்டிறைச்சி சேர்க்கப்படுவது வழக்கமாகும். அத்துடன் இறந்தவர் பாவித்த வீடி, சுருட்டு, சிக்கரட், சாராயம், விஸ்கட், பழவகை போன்ற பொருட்கள் படைக்கப்படுவது வழக்கமாகும். இறந்தவர் வீடு செல்கின்ற எல்லோரும் சாப்பிடுவதுதான் வழக்கம். கௌரிக்காப்புக்காரர்களுக்காக பக்கத்து வீட்டில் சமைத்துக் கொடுப்பர்.

## முப்பத்தியோராம் நாள்

இந்த நிகழ்வு முப்பத்தொன்றுக்கு வைத்தல் என்று சொல்லப்படுவது வழக்கமாகும். இதனை அமுது கொடுத்தல் என்பர். இன்றும் சுற்றத்தார், மற்றவர்கள் அரிசி,தேங்காய், மரக்கறி போன்ற பொருட்களைக் கொண்டுவருவர். இந்நிகழ்வு பகலிலே இடம் பெறும். அன்று சோறு சமைத்துக்கொடுப்பர். இன்று மடைப் பொருட்களாக இறைச்சி எடுக்கப்படுவதில்லை. மதுவோடு சம்பந்தப்பட்ட பொருட்கள் வைக்கப்படுவதில்லை. இன்றுதான் கோயிலுக்கு இறந்தவரின் பெயரில் மடைப்பெட்டி கொடுப்பர். சிலர் குருக்களைக் கொண்டு கிரியை செய்வர். கிரியை செய்தால் மூன்று வருடம் இறந்தவரின் திதியில் அக்கிரியை இடம்பெறும்.

## சமூகத்தொடர்பு

ஒருவர் இறந்ததன் பின்னர் அந்தக் குடும்பம் பெரியதோர் இழப்பைச் சந்திக்கின்றது. அவர்களுடைய சோகம் பல நாட்களாகத் தொடரும். இதனைக் கருத்திற்கொண்டு, எமது சமூகம் சவம் அடக்கம் செய்த பின்னர் அன்றே சாப்பாடு (சோறு) கொண்டு போய் விடுவார்கள். பின்னர் எட்டு வரையும் தொடர்ந்து சோறு, இடியப்பம், பாண் போன்ற உணவுப் பண்டங்களைக் கொண்டு செல்வர். இன்றைய காலகட்டத்தில் அதிகமானோர் ஒரே நாளில் சமைத்துச் செல்வதால் அவை சேதமாகின்றது என்பதனைக் கருத்தில் கொண்டு மரண வீட்டாரிடம் கேட்ட பின்னரே சமைத்துச் செல்கின்றனர். அதாவது, எட்டு முடிந்த பின்னரும் சமைத்துக் கொடுப்பது தொடர்ந்து செல்கின்றது. சமைத்துக் கொடுக்கமுடியாதவர்கள் அங்கர், சீனி,

தேயிலை, விஸ்கட், அவித்த கடலை போன்ற பொருட்களைக் கொடுப்பர். எட்டாம் நாள் வரையும் கடதாசிக் கூட்டம் விளையாடுவதற்காக சமூகத்தில் உள்ளோர் கூடுவார்கள். பெண்கள் அன்று இரவு முழுதும் கண்விழித்திருந்து அவர்களுக்கு தேயிலை கொடுப்பர். அத்தோடு வெற்றிலை பாக்கு, வீடி என்பன வழங்கப்படும். அவித்த கடலை, விஸ்கட், மரவள்ளிக் கிழங்கு, சோளன்குலை போன்ற பொருட்கள் அவர்களுக்கு வழங்கப்படும். எட்டுக்குப் பின்னர் முப்பத்தொன்று வரையும் சமூகத்தினர் கூடியே இருப்பார்கள்.

மரணச் செய்தி கேட்டதும் அன்றே மக்கள் கூட்டம் அந்த இடத்தில் சேர்ந்துவிடுவார்கள். பந்தர் போடுதல், மரணச் செய்தி சொல்லி அனுப்புதல், பதாதைகள் கட்டுதல், பாடை கட்டுதல் என்று பற்பல வேலைகளில் ஈடுபடுவார்கள். இத்தகைய சமூக ஊடாட்டம் இன்று வரையும் மக்கள் மத்தியில் மாறா இடத்தினைப் கொண்டுள்ளது.

# மந்திரமும் மக்கள் வாழ்வும்

வாழ்வும் சாவும் செய்யக்கூடிய மந்திரங்கள் பல அதர்வண வேதத்தில் உள்ளன. இம் மந்திரங்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் குரு - சீட பரம்பரையில் நாட்டார் கலையாக பயிலப்பட்டு வந்துள்ளன. மந்திரங்களோடு கூடிய யந்திரமும், நோய் மற்றும் வறுமையில் இருந்து விடுபடவும், தொழில், தானம், பூமி செல்வாக்கு, வாகனம், அதிகாரம் என மனித வாழ்வில் விரும்பி ஏற்கக்கூடிய தேவைகள் அனைத்தையும் மந்திர சக்தியால் நிறைவேற்ற முடியும் என்பது இன்றும் பொதுவாக நம்பப்பட்டே வருகின்ற வாழ்வியலாகும்.

மலையாள நாடும் மட்டக்களப்பும் மந்திரக் கலையில் நீண்டகாலத் தொடர்புடையவை. கேரளத்திலும் மட்டக்களப்பிலும் மந்திரங்களின் பாவனை ஒத்ததன்மை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. மந்திர வழக்கும், மந்திரங் கலந்த மருந்துப் பயிற்சிகளும் இங்கு நாளாந்த வாழ்விலே பயன்படுத்தப்பட்டு இருந்திருக்கின்றது. இத்தகைய மந்திரக்கலை அம்பிலாந்துறைக் கிராமத்தில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இங்கு மாந்திரிகப் புகழ்பெற்ற மரவுவழிக் குடும்பம் உண்டு. இன்றும் மாரியம்மனுக்குப் பூசை செய்துகொண்டு வரும் நாவற்கண்ணியார் பூசாரியார் பரம்பரை மாந்திரிகப் புகழ்பெற்ற பரம்பரையாகும்.

பூசாரி நாவற்கன்னியார் பரம்பரையே எம்மூரில் மாரியம்மன் சடங்கு செய்து வந்தது. இப் பரம்பரையின் வருகையே இன்றுவரையும் சடங்கு சம்பிரதாயமென்னும் வாழ்வியலுடன் பிணைந்துள்ளது. கணபதிப்பிள்ளை பூசாரியார் மகன் வேலாப்போடிப் பரிகாரியர். இவருடைய மகன் பூசாரியார் சின்னத்தம்பி. இவர் பிறந்தது 1926ஆம் ஆண்டாகும். பரிகாரி இளையதம்பிக் குருக்கள் மகன் செல்லையாப் பரிகாரி, இவருடைய மக்கள்கோவிந்தராசா அரும்பலம், அமிர்தலிங்கம், வீரலெட்சுமி, நாகேஸ்வரி ஆகியோர். செல்லையாப் பூசாரியார், பூசாரி சின்னத்தம்பி என்பவருடைய மச்சான். இளையதம்பியின் மற்றுமொரு வகுத்துவார் செல்லத்தம்பி, மற்றும் தவலிங்கம் ஆகியோர் (வாலயம்மன் பூசகர்)

பூசாரி சின்னத்தம்பி அவர்களுடைய முன்னோர் பிரபல்யமான பூசாரியார்களும், பரிகாரியார்களும், நாவற்கண்ணியார் மண் முனைப்போடி ஆகியோர் பெத்தப்பா, விஸ்வநாதர் அவருடைய அம்மப்பா, மாணிக்கப்போடி வாத்தியார் மாமன், வீமாப்போடி தம்பி, மயில்வாகனச்சாமி செல்லையா என்போர் மச்சான்மார் என உறவுமுறை வருகிறது.

பெரியகுடியிருப்பு, தீவுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் பொல்லாத மந்திரவாதிகள் இருந்தனர் என்பார்கள். அன்றைய காலத்தில் இளையதம்பி, வெல்லாவெளியார், மூத்ததம்பி, செல்லையா, மயில்வாகனச்சாமியார் போன்ற மந்திரவாதிகள் தீவுக்குடியிருப்பில் இருந்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து தங்கராசா, அருளானந்தம், தவலிங்கம், பவளசிங்கம் என்று அம்மனுக்குப் பூசை செய்து வருகின்றனர். இவர்களுடன் வே.சுப்பிரமணியம், இராசரெத்தினம் ஆகியோரும் இணைந்து சடங்கு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதே. பெரியகுடியிருப்பில் விஸ்வநாதரும் தீவுக்குடியிருப்பில் விடுதிக்கல்லாரும் பிரபல்ய மந்திரவாதிகளாவர்.

## மந்திர விளையாட்டு

கோளாவில்லில் கூட்டம் நடைபெற்றால் காளி மூப்பன் அந்தக் கூட்டத்துக்குச் செல்வது வழக்கமாம். அவரைக் கண்டால் எல்லோரும் எழும்பி மரியாதை செய்வார்களாம். அவ்வாறு செய்யா மலும், இவரை எதிர்த்தவர்களையும் மந்திர சக்தியால் சாகடித்து விடுவாராம். அப்படிப்பட்ட பொல்லாத மந்திரவாதி இவர். இந்த நிலைமையினால் நொந்துபோன மக்கள் இதிலிருந்து விடுதலை பெறுவதற்காக அம்பிலாந்துறையில் உள்ள மந்திரவாதியான விஸ்வநாதரை நாடி அங்கு நடக்கின்ற விடயத்தினைக் கூறியிருக்கின்றனர். அவரும் வேண்டுகோளை ஏற்று கோளாவில் சென்றிருக்கின்றார். இந்தச் செய்தி ஒரு சிலருக்குத்தான் தெரியும். ஒரு நாள் கோளாவில்லில் கூட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, காளிமூப்பன் அக் கூட்டத்திற்கு வந்திருக்கின்றார். அவரைக் கண்டதும் கூட்டத்தில் உள்ள

குடியானவர்கள் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்தார்களாம். விஸ்வநாதர் மட்டும் எழும்பவில்லையாம். அப்போது மற்றவர்கள் இவரைப் பார்த்துக் கூறினார்களாம் உனது கதை முடிந்துவிட்டது என்று. அதைக் கேட்ட விஸ்வநாதர் அதை நான்பார்த்துக் கொள்கின்றேன் என்று சென்று விட்டாராம்.

அன்று இரவே காளிமுப்பன் அங்கம், பில்லி, சூனியம் மூன்றையும் விஸ்வநாதரை நோக்கி ஏவிவிட்டாராம். மூன்றும் இவரைக் கொல்லு வதற்கு வருகின்றதாம். இவர் மூன்று முட்டி எடுத்து, மண் சுவரில் மூன்று துளையிட்டு, முட்டி மூன்றையும் துளைக்குள் வைத்துப் பிடித்தாராம். வந்த அங்கம், பில்லி, சூனியம் மூன்றும் சம்பந்தப்பட்டவரைத் தேடித் திரிகின்றதாம். இவரும் மூன்றையும் மந்திரசக்தியால் மண் முட்டிக்குள் எடுத்து முட்டியைக் கவிழ்த்து விட்டாராம். பின்னர் அங்கம், பில்லி, சூனியம் மூன்றிடமும் சத்தியம் கேட்டு, மூன்றையும் அவரை நோக்கி ஏவி காளிமுப்பனைக் கொன்றாராம். அடுத்தநாள் இவருக்கு சிறந்த வரவேற்பு இருந்ததோடு மக்களும் ஆரவாரத்துடன் சந்தோசமாக இருந்தார்களாம். (வெ.கணபதி) இதிலிருந்து வெளிப்படுவது மந்திர சக்தியின் மகத்துவம்.

பச்சனாவியர் கணபதிப்போடி என்பவர் மாட்டுப்பட்டிக்குச் சொந்தக்காரர். இவர் சோதயன்குளத்தில் அறுபது ஏக்கர் நிலத்தினை மாடு மேய்வதற்கான மேய்ச்சல் தரையாக ஒதுக்கி வைத்திருந்தவர். இவருடைய மாடு நடந்த வழியே கன்னக்குடா வயல்களுக்குள் பறயன்வெட்டி வழி கொள்ளப்படுகின்றதாம். இவருடைய மாடு பயிர்களைச் சேதப்படுத்திவருவது வழக்கமாக இருந்தது. இத் தாக்கத்தினால் கோபங்கொண்ட விவசாயிகள் இவருடைய மாடுகளுக்கு துப்பாக்கியினால் சுடுவது வழக்கம். இதற்காகப் பச்சனாவியர் மந்திரத்தால் செபம்பண்ணி மாட்டுக் காலையடியில் ஒரு சிரட்டையினை வைப்பாராம். மாடுகளுக்குச் சுடுகின்ற துப்பாக்கி ரவைகள் யாவும் அந்தச் சிரட்டைக்குள் கிடக்குமாம். அதுமட்டுமன்றி இவர் மாடுபார்ப்பதற்காக செல்லும்போது குடைபிடித்துச் செல்வதில்லையாம். நான்கு தேசிக்காய்களை மந்திரத்தால் செபம் செய்து சால்வையின் நான்கு மூலையிலும் பிடிக்கக்கூடிய வகையில் இருத்துவாராம். அது அவருக்கு

குடையாகச் செல்லுமாம். அதுமட்டுமன்றி அன்றைய காலத்தில் மிகக் கவனமாக ஊருக்குள்ளே நடந்துகொள்வார்களாம். ஒருவருக் கொருவர் போட்டியின் காரணமாக மந்திரத்தால் தீவினை செய்ய முயற்சிப்பது. இதற்காக இவர்களுடைய நகர்வுகள் யாவும் மிகக் கவனமாக இருக்குமாம்.

2005ஆம் ஆண்டு காலத்தில் அம்பிலாந்துறையினைச் சேர்ந்த பூசாரியார் சின்னத்தம்பி, பூசாரி கோவிந்தராசா குழுவினரே மகிழடித்தீவில் உள்ள காளி கோவிலில் பூசை செய்து வந்தனர். பண்டாரியாவெளியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் குழுவினர் அவர்களை மந்திரத்தால் மானங் குறைக்க நினைத்தனர். இதற்காக இவர்கள் மகிழடித்தீவு சவக்காலைக்குள் மடை வைத்து காளிகோவிலில் தெய்வமாடுபவர்களை மந்திரத்தால் கட்டினர். அதுமட்டுமல்ல, தெய்வங்களைச் சவக்காலைக்குள் கொண்டு செல்ல முனைந்தனர். கட்டுவதும் வெட்டுவதும் அன்று மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியது. நேருக்கு நேர் இடம் பெறுகின்றது. இது ஒரு பகல் சடங்கு. மக்கள் என்ன செய்வதென்று அங்கலாய்க்கின்றனர். கோழிப் பலி கொடுத்து, கையைக் கத்தியால் கீறி கட்டுகின்றார்கள் அதனைக் குங்குமத்தால் வெட்டுகின்றார் கோவிந்தன் பூசாரியார். தெய்வங்கள் மந்திரத்தால் கட்டியவர்கள் பக்கம் செல்லும் பின்னர் மந்திரத்தால் வெட்ட, ஆலயம் திரும்பும் இவ்வாறாக நீண்டநேரம் மந்திரத்தால் வாதாடினார்கள் இறுதியில் கட்டியவர்களால் ஜெயிக்கமுடிய வில்லை. கோபத்தோடு பின்வாங்கிச் சென்று விட்டார்கள்.

மேலும், பூசாரியார் சின்னத்தம்பி குழுவினரே மகிழூரில் மாரியம்மன் பூசை செய்வது வழக்கம். 2007ஆம் ஆண்டு காலத்தில் ஒரு மந்திரவாதி தெய்வமாடியவர்களைக் கட்டியது மட்டுமன்றி பூசை செய்தவர் களையும் கட்டிவிட்டார். அப்போது எதுவும் செய்ய முடியாமல் திகைத்தனர் பூசாரிமார். அந்தவேளை இவர்களுடன் சென்ற உதவிப் பூசாரியார் மட்டும் கட்டுப்படவில்லை. உடனே அவர் அம்மனுக்குரிய மந்திரத்தால் தீர்த்தச் செம்பினை எடுத்து செ.கோவிந்தராசா பூசாரியிடம் கொடுத்தாராம். தீர்த்தச் செம்பினை வாங்கியதும் அவர் உடன் செயற்படத் தொடங்கினார். உடனே

மந்திரத்தால் எல்லோரையும் எழச் செய்தார். ஆனால், ஒரு தெய்வமாடும் தேவாதியை மட்டும் எழச் செய்வது கஸ்ரமாக இருந்தது. செ.கோவிந்தராசா பூசாரி சொல்லியிருக்கின்றார் கட்டியவர் தயவு செய்து விடுங்கள், நான் இறுதி மந்திரத்தால் வெட்டப்போறேன் என்று பலமுறை கேட்டிருக்கின்றார். கட்டியவர் விடவில்லை. அவரால் ஒன்றும் செய்யாமலபோக இறுதி மந்திரத்தைப் பாவித்தார் கட்டியவர் உயிர் பிரிந்தார். தெய்வம் மீண்டு வந்தது. இவ்வாறாகப் பல செயல்களைக் கூறமுடியும். இக்காலத்தில் இத்தகைய மந்திர சக்தி இருக்குமாக இருந்தால் அக்காலத்தில் இதன் தாக்கம் எவ்வாறு இருந்திருக்கும். அக்காலம் மந்திரத்தால் தேங்காய் ஆய்ந்த காலமாகும்.

மந்திரம் மக்களின் வாழ்வியலோடு பிணைந்துள்ளது. பொதுவாக மந்திரம் பரிகார வைத்திய முறையுடன் நெருங்கிய தொடர்புடையது. விஷக்கடி வைத்தியம், சுளுக்கு வைத்தியம், பயித்தியத்துக்கு வைத்தியம், பிள்ளைப்பேறு, முறிவு வைத்தியம் போன்றவற்றைக் கொள்ள முடியும். இத்தகைய வைத்திய முறைகளுடன் மந்திரம் தொடர்புபடு கின்றது. நினைப்பவரைக் காக்கின்ற மந்திரம் கிராமியத் தெய்வ வழிபாட்டின் உயிர்நாடி. உருக்கெடுத்து கும்பமேற்றி, தெய்வத்துக்கு உருக்கொண்டு ஆடுபவர்களைக் கட்டியபோது அதனை வெட்டி, நோயுள்ள வர்கள் ஆலயத்துக்கு வரும்போது அவர்களின் நோய்களைத் தீர்த்து வீடுகளில் காணப்படும் பில்லி சூனியங்களை அகற்றி மக்களுக்கு மறுவாழ்வளிப்பது மந்திரங்களாகும். விஞ்ஞான வைத்தியத்துறை கைவிடும் பல நோயாளிகள் மந்திர வைத்தியத்தினால் சுகமாக்கப் பட்டிருக்கி றார்கள். மந்திரசக்திக்கு உட்பட்ட நோய்க்கு விஞ்ஞானத்தால் சுகப்படுத்த முடியாது. அம்மன் குறை ஏற்பட்டால் அம்மனை மன்றாடி மன்னிப்புக் கேட்டல், அம்மன் மந்திரங்களை உச்சரித்ல், தண்ணீர் ஓதிக் குடித்தல், கூடு போடுதல், வளவு காவல் செய்தல், ஒருவருக்கு பேய் பசாசு ஏற்பட்டால் அவருக்கு மடை வைத்துக் கழித்தல்போன்றன வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையவையாகும்.

இன்றும் யாழ்ப்பாணப் பிரதேசம் உட்பட மட்டக்களப்பு மந்திர சக்தி அறிந்த பலர் கூறுவார்கள். "மட்டக்களப்பில் பாயில் இருந்தால்

அவர்கள் மந்திரத்தால் பாயுடன் ஒட்ட வைத்துவிடுவார்கள் என்று" இதில் இரண்டு பொருளுண்டு.

1. விருந்தோம்பலின் சிறப்பு
2. மந்திர சக்தியின் சிறப்பு

மந்திர சக்தி எமது கிராமத்தில் இரண்டாவது நிலையைத் தோற்று வித்திருக்கின்றது. அன்றைய காலத்தில் மந்திரத்தைப் பயன்படுத்தி மனித குலத்துக்குத் நன்மை செய்திருக்கின்றனர். தற்காலத்தில் கல்வி வளர்ச்சியின் உயர்வால் மந்திரசக்தியின் தீய செயலினைக் காணமுடியாதுள்ளது. எனினும், ஆங்காங்கு சில அசம்பாவிதங்கள் இருக்கவே செய்கின்றன.

## பரிகாரியார்கள்

அம்பிலாந்துறைக் கிராமத்தில் பரியாரியார்கள் பலர் இருந்துள்ளனர். அவர்கள் மனிதர்களுக்கு பல்வேறு முறைகளில் செய்யும் வைத்திய முறைகளைக் கற்றிருந்தனர். சிறப்பாக பாம்புக்கடி, கட்டு, பயித்தியம், கட்டு, சுழுக்கு, பிள்ளைப்பேறு, மிருகவைத்தியம், உள்நாக்கு போன்றவற்றுக்கு வைத்தியம் செய்கின்றனர்.

தாங்களால் பார்க்கப்பட்ட கைமருந்துவத்தில் துறை போனவர்கள். பலர் மந்திரசக்தியை பக்க துணையாகக் கொண்டு மருத்துவம் செய்திருக்கின்றனர். மருத்துவம் வெற்றியளித் தமைக்கு அவர்களிடையே வெளியிடப்பட்ட உண்மை, நேர்மை, மற்றவர் களுக்குத் தீங்கு செய்யாமை போன்றவற்றை கொள்ள முடியும். (அட்டவணையில் உண்டு)

அம்பிலாந்துறையில் உள்ள பரிகாரியார்களில் பரம்பரையாகக் கற்றவர்களும் உண்டு, முறையாகக் கற்றவர்களும் உண்டு. இந்த இருசாராருடைய வைத்திய முறையில் குறையிருந்ததாகத் தெரியவில்லை.

## மருத்துவச்சி / மருத்துவிச்சியும் பிள்ளைப் பிரசவமும்

பிரசவம் சிறப்பாக இடம்பெறுவதற்கு இன்று உலகில் விஞ்ஞானம் வகிக்கும் இடத்தினை அன்று ஏன் இன்றும் ஆங்காங்கு மருத்து வச்சிகளின் கைமருத்துவம் வகிக்கின்றது. மருத்துவச்சி என்பவள் பிரசவம் பார்ப்பவள் எனும் பொருளில் வரும். நாட்டார் வழக்காற்றில் மருத்துவச்சி எனும் பெயரால் அழைக்கப்படுவாள். இவர்கள் பெண்கள் கர்ப்பமாக இருக்கும் பொழுதே என்னபிள்ளை என்பதனை ஊகித்துக் கூறுவார்கள். இவர்களுடைய ஊகம் பெரும் பாலும் சரியாகவே இருக்கும். காலால் பிறக்கும் பிள்ளை இருக்குமாக இருந்தால் அப்பிள்ளையை கையால் மெல்ல மெல்லமாக திருப்பி விடுவார்கள். (வயிற்றில் இருக்கும்போதே)

## மந்திரக் கல்வி நிலையம்

ஆரம்ப காலத்திலிருந்து இங்கு படித்தவர்கள் இருந்திருகின்றார்கள். 1766ஆம் ஆண்டு காலத்தில் கல்வி நிலையம் இங்கு உருவாக்கப் பட்டிருக்கின்றது. அக் காலத்துக்கு முதலிலும் பின்னரும் இங்கு கல்வி வழங்கப்பட்டிருக்கின்றது. இதில் ஒரு பிரிவாக மந்திரக் கல்வி இங்கு வழங்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு. அம்பிலாந்துறையில் உள்ளவர்களில் பலர் அன்று மந்திரவாதிகளாகவே இருந்திருக்கின்றனர். மந்திரங்களைக் கற்பதென்றால் வாய்மொழிப் படிப்பு போதுமானதாக இல்லை. எழுத , வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அதன் பின்னணியில்தான் மந்திர விளையாட்டுக்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கின்றார்கள். சண்டைகளையும் மந்திரத்தாலே மேற்கொண்டிருக்கின்றனர். சமாதானத்தினையும் மந்திரத்தாலே மேற்கொண்டிருக்கின்றனர். பில்லி, சூனியம், பேயோட்டல் என்பனவற்றோடு, நாட்டு மருத்துவத்திலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். அவர்களுடைய பரம்பரையினரை நாம் இன்றும் அவதானிக்கலாம். அன்றைய காலகட்டத்தில் அம்பிலாந்துறை ஆலயத்தில் பல கமுகம் மரங்கள் காணப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் மந்திரத்தால் தெய்வத்தைக் கட்டியவர்கள் அம்மரத்தில் வளையம் போட்டுக் கட்டுவார்களாம். மந்திரத்தால் வெட்டும்போது அந்த வளையம் மெல்லமெல்ல மேல் நோக்கிச்

சென்று கமுக மரத்தின் வட்டினைத் முறித்து பறந்து விடுமாம். இவ்வாறாக இங்கு காணப்பட்ட கமுக மரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன என்றால் மந்திரசக்தி படைத்தவர்களின் நிலையினைக் கூறவும் வேண்டுமா?

**மண்முனைப்போடி**

அறுமக்குட்டிப்போடியினுடைய புதல்வனான இவன், சிறந்த வீரனும் இறைபக்தி உடையவனும், பூசாரியும் மந்திரவாதியும். ஆனால் இவன் தனியாகச் சடங்கு செய்யவில்லை. இவன் மந்திர வித்தை தெரிந்தவன் இவனை யாரும் தீயமுறையில் மடக்க முடியாது. தகப்பனுக்குப் பின்னர் காணிகளை தன்வயப்படுத்திக் கொண்டு மட்டக்களப்புப் பிரதேசத்துக்கே சிம்ம சொற்பனமாக விளங்கியவன். அன்னங் கொடுத்து அமுது கொடுப்பதில் இவனுக்கு நிகரானவர் யாரும் இல்லை. அம்பிலாந்துறையில் அன்ன சத்திரம் வைத்து அமுது கொடுக்கப்பட்டிருக்கின்றது. தம்மத்தான் கிணற்றடி அமுதும் சிறந்த உதாரணம். மட்டக்களப்புப் பிரதேசத்திலும் பல இடங்களில் அமுது கொடுக்கப்பட்டிருக்கலாம். வன்னியர்களுக்கு காணி 127 ஏக்கர் மட்டுமே இருந்துள்ளது. இவன் மீது பொறாமை கொண்டு தந்திரமான முறையில் காணிகள் நீதிமன்று மூலம் பறிக்கப்பட்டு அரச நிலமாக மாற்றப்பட்டு வன்னியர்களுக்கு எழுதப்பட்டது. அதன் பின்னர்தான் 1111 ஏக்கர் நிலமாகப் பெயர் பெற்றிருக்கின்றது. அறுமக்குட்டிப்போடி ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் செய்தாலும், ஆங்கிலேயர்கள் மண்முனைப்போடி மீது வஞ்சம் பாராட்டவில்லை. மாறாக அவனுடைய நிலங்கள் யாவையும் வன்னியர்களைப் பயன்படுத்திப் பறித்து நடைப் பிணமாக்கினர். இது தண்டனையில்பொல்லாத தண்டனையாகும். இவர் பூசாரி சின்னத்தம்பியினுடைய பெத்தப்பா என்பதும் குறிப்பிடத்தக்கது. பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

## நாவற்கன்னியார்

இவருடைய பெயர் தகவல்களின்படி சரியாகக் கிடைக்கவில்லை. அறுமக்குட்டிப்போடியினுடைய மகன் முறையிலுள்ளவர். பூசாரி சின்னத்தம்பியினுடைய பெத்தப்பா இவர். மாரியம்மன் சடங்கு ஆரம்பித்த காலத்தின் முதற்கொண்டு சடங்கு செய்து வந்தவர். மரபுவழிப் பூசாரியார்களின் முதற் பூசாரியார் இவரே. சிறந்த மந்திரக் கலையைக் கற்றவர். நாட்டு வைத்தியத்தில் கைதேர்ந்தவர். அதிலும் சிறப்பாகப் பாம்பு தீண்டியவர்களை நயண (பார்வை மூலம்) முறையாலே விசம் இறக்கும் ஆற்றல் கொண்டவர். நீண்ட நாட்கள் சடங்கு செய்து வந்திருக்கின்றார். மட்டக்களப்புப் பிரதேசத்திலே சிறந்த மந்திரவாதியாக இருந்திருக்கின்றார். அறுமக்குட்டிப் போடியின் வெற்றி பலவற்றிற்கு காரணகர்த்தாவாக இருந்துள்ளார். பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

## கணபதிப்பிள்ளை பூசாரியார்

நாவற்கண்ணியாருடைய மகனான இவர் சிறந்த பூசாரியார் மட்டுமன்றி நாட்டு வைத்தியருமாவார். தகப்பனைத் தொடர்ந்து தனியாகப் பூசை செய்து வந்திருக்கின்றார். பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

## வேலாப்போடி பரிகாரியார்

கணபதிப்பிள்ளைப் பூசாரியாரின் மகனான இவர் சிறந்த பூசாரியும் நாட்டு வைத்தியருமாவார். பரிகாரம் பார்ப்பதில் சிறந்து விளங்கியவர். மந்திர வித்தைகளைச் சிறப்பாகச் செய்பவர். சிறந்த சோதிடருமாவார். பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

## சின்னத்தம்பிப் பூசாரியார்

வேலாப்போடிப் பரிகாரியாரின் மகனான இவர், சிறந்த மந்திரவாதி, அம்மனுடன் மந்திரத்தால் கதைப்பவர், மந்திரக் கட்டுக்களை ஒற்றைத் தீபத்தால் மட்டும் வெட்டி விலக்கும் ஆற்றல் கொண்டவர். இலங்கையின் பல பாகங்களுக்குச் சென்று பலருடைய வினைகளை மந்திரத்தால் அகற்றியவர்.

## வீமாப்போப்போடிப் பூசாரியார்

சிறந்த பூசாரியான இவர் பூசாரி சின்னத்தம்பியினுடைய தம்பியாவார். தனது அண்ணனுடன் இணைந்த சடங்கு செய்து வந்துள்ளார். மந்திரக் கலையினைச் சிறப்பாகத் தெரிந்து வைத்துள்ளார்.

## பரிகாரியார் இளையதம்பிக் குருக்கள்

இவர் சிறந்த பரிகாரியாவார். இவரை பரிகாரியார் இளைய தம்பிக் குருக்கள் என்றுதான் அழைப்பது வழக்கம். தீவுக்குடியிருப்பு தோரணம் முறிப்பதற்கு பிரதான பங்கு வகித்தவர். பொன்னுச்சாமி வன்னியனுடன் சிறந்த தொடர்பு வைத்திருந்தவர். அம்மனை மந்திரத்தால் அமைத்து அவளுடன் கதைப்பவர். தோரணம் முறித்தவர்கள் யாவரும் அம்மனுடைய கொள்ளை நோயில் இறந்துபோக அம்மனை மந்திரத்தால் அழைத்து, அந்நோயிலிருந்து இருந்து தப்பியவர் இவர்தான். அத்தகைய மந்திர சக்தி வாய்ந்தவர் இவர். பூசாரியார், விஷகக்டி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

## செல்லையாப் பரிகாரியார

பாரிகாரியார் இளையதம்பிக் குருக்களின் மகன் இவர். சிறந்த மந்திரவாதியாவர். மந்திரக் கலையில் பேர்போனவர். வாலையம்மன் பக்தியுடையவர். வாலையை மந்திரத்தால் அழைத்து கதைக்கும் திறமை கொண்டவர். வாலையம் மனுடைய செயல்கள் யாவையும் நன்கு தெரிந்துகொண்ட இவர் வாலையம்மனை வணங்கும் முறையினை தனது புதல்வர்களுக்கு கூறியிருக்கின்றார். இவர் பூசாரி சின்னத் தம்பியினுடைய மச்சானாவார். பூசாரியார், விஷகக்டி,

பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### செ.கோவிந்தராசா

செல்லையாப் பரிகாரியாரின் மகனான இவர் சிறந்த மந்திரவாதியாவார். இன்று அம்மனுக்குப் சடங்கு செய்து வரும் இவர் சோதிடக் கலையையும் நன்றாகக் கற்றுச் செயற்படுகின்றார். தனது மாமனான பூசாரியார் சின்னத்தம்பி அவர்களைக் குருவாகக் கொண்டு செயலாற்றி வருகின்றார். மகிழூர், நாற்பதாம் கிராமம், மகிழடித்தீவு ஆகிய கிராமங்களில் உள்ள அம்மன் கோயில்களிலும் பூசை செய்து வருகின்றார்.

### செ.தவலிங்கம்

இவர் சிறந்த மந்திரவாதியாவாதியும் வாலையம்மன் பக்தரும் சோதிடரும் அம்மன் பூசகருமாவார். வாலையம்மன் வழிபாட்டிற்காக தனியாகக் கோயில் அமைத்துப் பூசை செய்து வருகின்றார். தீவுக்குடியிருப்புக் கோயிலில் பிரதான பூசகராகப் பல காலம் பணியாற்றியுள்ளார்.

### செ.அருளம்பலம்

இவர் சிறந்த மந்திரவாதியாவார். தீவுக்குடியிருப்புக் கோயிலில் பிரதான பூசகராகப் பல காலம் பணியாற்றியுள்ளார். இன்று கோவிந்தராசா பூசாரியாருடன் இணைந்து சடங்கு செய்து வருகின்றார். தீவுக்குடியிருப்புக் கோயிலில் பிரதான பூசகராகப் பல காலம் பணியாற்றியுள்ளார்.

### செ.அமிர்தலிங்கம்

இவர் இன்று கோவிந்தராசா பூசாரியாருடன் இணைந்து சடங்கு செய்து வருகின்றார்.

### கோ.தவகுமார்

தனது தந்தையுடன் இணைந்து சடங்கு செய்து வருகின்றார்.

### விஸ்வநாதர்

இவர் பூசாரி சின்னத்தம்பியினுடைய அம்மப்பாவாகும். அம்பிலாந் துறையிலே சிறந்த மந்திரவாதியாகத் திகழ்ந்துள்ளார். நாட்டு வைத்தியத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். விடுதிக்கல்லாருக்கும் இவருக்குந்தான் மந்திரப்போட்டி இருந்தது என்று கூறுவார்கள். பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### விருதிக்கல்லார்

தீவுக்குடியிருப்பில் இருந்த சிறந்த மந்திரவாதி மட்டுமல்ல சிறந்த நாட்டு வைத்தியரும். மந்திரத்தால் சாதனை பல புரிந்தவர். பூசாரியார், விஷகக்டி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### மாணிக்கப்போடி வாத்தியார்

இவர் பூசாரி சின்னத்தம்பியினுடைய மாமனாவார். மாணிக்கப் போடி வாத்தியாருடைய காலத்துக்குப் பின்னர் (கி.பி 1955) பூசாரியார் சின்னத் தம்பியே சடங்கினைச் செய்து வந்துள்ளார். மாணிக்கப்போடி வாத்தியார் திண்ணைப்பள்ளி ஆசிரியராவார். சிறந்த மந்திரவித்தை உடையவர். இவருடைய காலத்தில் பலர் மந்திரத்தால் தெய்வங்களைக் கட்டியுள்ளனர். அவற்றையெல்லாம் இலகுவாக மந்திரத்தால் வெட்டியவர். பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### மயில்வாகனச் சாமியார்

தீவுக்குடியிருப்புக் கோயில் பல வழிகளில் முன்னேற்றம் அடைவதற்கு பல வழிகளில் உழைத்தவர். சாமியப்பா என்று அழைக்கப்பட்ட இவர் பூசாரி, மந்திரவாதி என்று சேவை செய்தவர். பொருட்கள், நெல், பணம் எனும் அடிப்படையில் கோயிலின் எழுச்சிக்காக உதவியவர். இவர் பூசாரி சின்னத்தம்பியினுடைய மச்சானாவார். பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### தம்பிமுத்து

இவரும் சிறந்த மந்திக் கலை விற்பனர். வெல்லாவெளி மாரியம்மன் கோயிலில் பிரதான பூசகராக இருந்து செயற்பட்டவர்.

### கணபதிப்போடி

இவரைப் பச்சனாவியார் என்று சிறப்பாக அழைப்பர். சிறந்த மந்திரவாதியான இவர் மாட்டுப் பட்டிக்குச் சொந்தக்காரர். நாட்டு வைத்தியத்திற்குப் பேர் போனவர்களில் இவரும் ஒருவர். பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### மூத்தவர்

இவரை வட்டான மூத்தவர் என்று சிறப்பாக அழைப்பர். பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### கந்தப்பர்

இவரை குருட்டுக் கந்தப்பர் என்று சிறப்பாக அழைப்பர். பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### குமரப்போடியார்

பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப் புத் தேர்ச்சி பெற்றவர்.

### ச.ஆலம்பிள்ளை

பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### கொட்டார் தம்பிமுத்து

பூசாரியார், விஷக்கடி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### வட்டான சின்னத்தம்பி

பூசாரியார், விஷகக்டி, பயித்தியம், முறிவு, உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

### க.உ.பாக்கியம்செல்வம்

உள்ளூர் வைத்தியம், மிருக வைத்தியம் என்று வைத்தியம் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். ஒருதலைக் குத்துக்கு சிறந்த மருந்துவம் செய்பவர். நாட்டு வைத்தியத்தினை மட்டக்களப்பில் முறையாகக் கற்றவர். தோரணங்களை வடிவமைக்கும் கலைஞர்.

### மா.பேரானந்தம்

பயித்தியத்துக்கு வைத்தியம் செய்வதிலும், பிள்ளைப்பேற்று வைத்தியத்திலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். இவருடைய சேவையில் அவருடைய துணைவியாரும் செயற்பட்டவர்.

### பொ.கந்தசாமி

விசக்கடிக்கு வைத்தியம் பார்த்தவர் மட்டுமன்றி சிறந்த சோதிடருமாவார்.

### நெ.மாமாங்கம்

விசக்கடிக்கு வைத்தியம் பார்த்தவர். சிறப்பாகப் பாம்புக்கடி வைத்தியத்தில் கைதேர்ந்தவர். இவரிடம் பாம்புக்கடி பட்டுச் சென்றவர்கள் எல்லோரும் மறு உயிர் பெற்றவர்கள்தான். இவருடைய சேவையில் அவருடைய துணைவியாரும் செயற்பட்டவர்.

### க.வேலாப்போடி

அண்மைக்காலமாக வாழ்ந்து மறைந்த இவரைச் சிறப்பாக சாத்திரி வேலாப்போடி என்றுதான் அழைப்பார்கள். சிறப்பாகச் சாத்திரம் சொல்வார், கெடுதி பார்ப்பதில்பேர்போன ஒருவர். குறிபார்ப்பதிலும் சிறப்புத் தேர்ச்சி இவருக்குண்டு.

**வே.வல்லிபுரம்**

விசக்கடிக்கு வைத்தியம், சிறப்பாகப் பாம்புக்கடி வைத்தியத்தில் கைதேர்ந்தவர். இன்று விசம் தீண்டியவர் பலரைக் காப்பாற்றியுள்ளார். சிறப்பாகச் செயற்பட்டுவருகின்றார். இவருடைய சேவையில் அவருடைய துணைவியாரும் செயற்பட்டவர்.

**மூ.தங்கராசா**

அம்பிலாந்துறை வடக்கில் அம்மன் பூசகராக பூசை செய்தவர்.

**வே.சுப்பிரமணியம்**

அம்பிலாந்துறை வடக்கில் அம்மன் பூசகராகப் பூசை செய்து வருகின்றார்.

**மா.சுப்பிரமணியம்**

அம்பிலாந்துறை வடக்கில் அம்மன் பூசகராகவும் நாட்டு வைத்தியராகவும் செயற்படுகின்றார்.

**பா.இராசரெத்தினம்**

அம்பிலாந்துறை வடக்கில் அம்மன் பூசகராகப் பூசை செய்து வருகின்றார்.

**சி.வினாயகமூர்த்தி**

விசக்கடிக்கு வைத்தியம், சிறப்பாகப் பாம்புக்கடி வைத்தியத்தில் கைதேர்ந்தவர். பாம்பு போன்ற விசம் ஐந்து தீண்டியவர் பலரைக் காப்பாற்றியுள்ளார். இன்றும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்.

**க.செல்வராசா**

மந்திரக் கலையினைக் கற்றுச் சிறப்பாகச் செயற்படுகின்றார். பலருடைய பிணிகளை மந்திரத்தால் அகற்றிச் செயற்படுகின்றார்.

**ச.சற்குணராசா**

முறிவு வைத்தியரான இவர் சிறப்பாகச் செயற்படுகின்றார்.

## முருகேசு பொன்னம்மா

எனது தாயான இவர் கொட்டான் நாக்குக்கு சிறந்த வைத்தியம் செய்துள்ளார். பலர் இவரிடம் அந்த நோய்க்கு வைத்தியம் பெற்றனர். அவரிடம் ஒரு தடைவை கேட்டேன் நீங்கள் எந்த முகிலிகைகளைக் கொண்டு இந்த வைத்தியம் பார்க்கின்றீர்கள் என்று, அதற்கு அவர் கூறினார் நான் உன்னிடம் சொல்லமாட்டேன், அதனை எனக்கு இறைவன் கனவில் கூறினார் என்றும், அப்படிச் சொன்னால் அந்த வைத்தியம் பலிக்காது என்றும் கூறினார். அப்படியானால் நான் அந்த முகிலிகைகளைப் பிடுங்கும்போது உன்னால் கண்டுகொள்ள முடியும் என்றார். நான் முடிதும்பையை மட்டுமே கண்டேன் ஏனைய இரண்டு முகிலிகைகளையும் காணவில்லை இறக்கும் வரையிலும் அதனை அறிய முடியாமல் போய்விட்டது. அவர் அந்த முகிலிகை மூன்றையும் யாருக்கும் தெரியாமல் அரைத்து, காலையில் சூரியன் உதிப்பதற்கு முன்னர் நோயாளியினுடைய தலையில் வைத்து (தப்புதல்) மூன்று முறை உச்சியிலுள்ள தலைமயிரை வேகமாக இழுப்பார். சிலருக்கு ஒரு தடவையுடன் சரியாக்போகும், சிலருக்கு இரண்டாவது தடவையுடன் சரியாகிவிடும். இவர் பலருக்கு பிள்ளைப்பேற்று மருத்துவிச்சி வைத்தியமும் பார்த்துள்ளார்.

## நாவிதப் பெண் ஒருவர்

பிள்ளைப் பேற்று வைத்தியத்துக்குப் பேர்போன இவருடைய பெயர் கிடைக்கப்பெறவில்லை. பலருக்கு வைத்தியம் பார்த்த இவருடைய பணி சிறப்பானது.

## வைரமுத்து தங்கம்மா

பிள்ளைப் பேற்று வைத்தியத்துக்குப் பேர்போன இவர், பலருக்கு வைத்தியம் பார்த்த இவருடைய பணி சிறப்பானது.

## முருகேசு மகேஸ்வரி

பிள்ளைப் பேற்று வைத்தியத்துக்குப் பேர்போன இவர், பலருக்கு வைத்தியம் பார்த்துள்ள இவருடைய பணி சிறப்பானது.

**சண்முகம் பொன்னம்மா**

*பிள்ளைப் பேற்று வைத்தியத்துக்குப் பேர்போன இவர், பலருக்கு வைத்தியம் பார்த்துள்ள இவருடைய பணி சிறப்பானது.*

**செல்வராசா புவனேஸ்வரி**

*பிள்ளைப் பேற்று வைத்தியத்துக்குப் பேர்போன இவர், பலருக்கு வைத்தியம் பார்த்துள்ள இவருடைய பணி சிறப்பானது.*

# குடிமக்கள்

குடிமக்கள் என்று அழைக்கப்படுபவர்கள் பணிசெய்யும் பதினென் கணத்தாரேயாவார். அவர்களை, இலை வாணிகன், உப்பு வாணிகன், எண்ணெய் வாணிகன், ஓச்சன், கல்தச்சன், கன்னான், குயவன், கொல்லன், கோயிற்குடியான், தச்சன், தட்டான், நாசிவன், பள்ளி, பாணன், பூமாலைக்காரன், வண்ணான், வலையன், பறயன் என்றழைப்பர். அவர்களுள் முத்திறத்தாராகிய வண்ணான், நாசிவன், பறயன் என்போரை அம்பிலாந்துறையில் அறுமக்குட்டிப்போடி குடியமர்த்தினான்.

## சலவைத் தொழிலாளி

அறுமக்குட்டிப்போடி இவர்களை தற்போது அவர்கள் இருக்கும் இடத்தில் ஏழு வளவு கொடுத்து குடியமர்த்தியதாக அறிய முடிகின்றது. இவர்களை வெருகல் துறைப் பகுதியிலிருந்து அழைத்து வந்திருக்கிறார். ஆனால், கொம்மாதுறை, குடியிருப்புப் பகுதியில் இருந்துதான் குடியமர்த்தப்பட்டதாக வெ.கணபதி அவர்கள் கூறுகின்றார். அவர்களுடைய பரம்பரையினரே இங்கு காணப்படு வதாக அவர் தலைமுறை காட்டுகின்றார். இன்று அவர்கள் பலகுடும்பங்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு குடியுரிமை வகுத்துக்கொடுத்த அறுமக்குட்டிப்போடி அவர்களே கொக்கட்டிச் சோலையில் வலம் வரும் தேருக்குச் சீலை சுற்றும் உரிமையையும் கொடுத்ததார்.

## மரண வீட்டில் கூரைமுடி வைத்தல்

இதற்காக வெண்கலச் செம்பு பாவிக்கப்படும். இறந்தவர் எந்தக் குடியோ அதற்கேற்பவே கும்ப எண்ணிக்கையும் அமையும். வீட்டின் இடப்பக்கமாகக் கும்பங்கள் அமையும். மூன்று வரிசையில் கும்பங்கள் அமையும். மேல் கும்பத்திற்கு நேரே வாசலின் கீழ் இரண்டு கம்பு நாட்டி அவற்றிலும் இரண்டு கும்பங்கள் வைக்கப்படும். அதன் பக்கத்தில் விளக்கும் இருக்கும். கூரையில் அமைந்திருக்கும் கும்பத்துடன் தென்னம் பாளையும் குடையும்

வைத்துக் கட்டப்படும். ஒருவருடைய இறப்பின் பின்னர் அவருடைய குடிக்கேற்ப கூரைமுடி வைக்கப்படுகின்றது. இந்த கூரைமுடி அமையும் முறை பற்றி மட்டக்களப்பு பூர்வசரித்திரம் கீழ்வருமாறு விளக்குகின்றது.

## கலிங்ககுலம்

இவர்களுக்கு 13 கூரைமுடி. மேற்கட்டி, நிலபாவாடை, தேங்கு மலர் 18 வரிசை, மேளவகை, வெள்ளாளர்கீந்த சிறை முற்றும், வெள்ளாளர் கொண்டுபோய் விட்டு ஊழியஞ் செய்விக்கவும்.

## உலகிப்போடி குடி

11 கூரைமுடி, ஏழு சீலை கொய்து கும்பம் வளையவும். வெள்ளாளர்க்கீந்த சிறை பனிரெண்டும் ஊழியம் புரியவும். மேற்கட்டி, நிலப் பாவாடை, மேள வகைகளும் உண்டு.

## படையாட்சிகுடி

9 கூரைமுடியும், ஒன்பது சீலை கொய்து வளையவும், தேங்கு மலர், மேற்காட்டி, நிலப்பாவாடை, மேளவகை வெள்ளாளர் கீந்த சிறை ஒன்பது ஊழியஞ்செய்யவும், இரண்டு பந்தரிடவும்.

## பனிக்கொணார் குடி

9 கூரைமுடியும், ஒன்பது சீலை கொய்து வளையவும், தேங்கு மலர், மேற்காட்டி, நிலப்பாவாடை, மேளவகை வெள்ளாளர் கீந்த சிறை ஒன்பது ஊழியஞ் செய்யவும், இரண்டு பந்தரிடவும்.

## வெள்ளாளர்

7 கூரைமுடி, ஏழு சீலை கொய்து கும்பம் வளையவும். சிறை 18உம் ஊழியஞ் செய்யவும். பலவிதமான மேளவகை, மேற்கட்டி, நிலப்பாவாடை, தேங்குமலரிடவும். கலிங்க குலத்தாருக்கு மாத்திரம் தங்களுக்கீந்த சிறை பதினேழையும் கொண்டு ஊழியம் செய்விப்பதேயன்றி மற்றவர்களுக்கு வெள்ளாளர் போவதில்லை.

## வேறு சாதியினர்

மூன்று கூரைமுடியும், மூன்று சீலை கொய்து கும்பம் வளையவும். மேற்கட்டி மாத்திரம். பூகமலரிடவும். ஊழியரில்லை, அவர்களே செய்துகொள்ள வேண்டும்.

## பட்டம் கட்டுதல்

இறந்தவர் வீட்டில் 40 முழம் வெள்ளைத்துனி வாங்கப்படுவது வழக்கமாகும். இத் துணியில் மூன்று முழ வீதம் கிழித்து அங்கு கடமையிலிருக்கும் குடிமக்களுக்கு வழங்கப்படும். அவர்கள் அதனைத் தலையில் கட்டுவார்கள் இதுவே பட்டங்கட்டுதலாகும்.

## கடமை செய்தல்

இறந்தவரின் மகன் அல்லது மகன் முறையான ஒருவர் முதலில் இறுத்க் கடமை செய்வார். இதனைப் பெற்ற கடமை உன்பர். மஞ்சள், சிறுசிறு தேங்காய் கலக்கப்பட்ட அரிசியை வட்டியில் எடுத்து, கடமைசெய்பவரின் தலையில் வெள்ளைச் சிலை ஒன்றினை மடித்துப் போட்டு அதற்கு மேல் வட்டியை வைத்து குடிவீட்டு சலவைத் தொழிலாளி பிடித்துக்கொள்வார். அவர் கட்டிலைச் சுற்றி 8 முறை வலம் வருவார். பின்னர் பிரேதப் பக்கம் முதுகு இரக்கத்தக்க வகையில் முழுங்காலில் நின்று கையிரண்டினையும் முதுகுக் குப் பின்னர் வைத்து 8 முறை வாய்க்கரிசியைப் போடுவார். பின்னர் 8 முறை நீரை ஊற்றுவார். இதனைத்தொடர்ந்து மேற்கூறிய வகையில் குடிகள் கடமையினைச் செய்வார்கள்.

| | |
|---|---|
| இறந்தவரின் உறவு சார்பாக (பெற்ற கடமை) | 8 முறை |
| முதலாவது உலகிப்போடிகுடி | 7 முறை |
| இரண்டாவது காலிங்க அரசன்குடி | 6 முறை |
| மூன்றாவது படையாட்சிகுடி | 5 முறை |
| நான்காவது பணிக்கொணார்குடி | 4 முறை |
| ஐந்தாவதுவது கச்சிலாகுடி | 3 முறை |
| ஆறாவது கோப்பிகுடி | 2 முறை |
| ஏழாவதுபெத்தான்குடி | 1 முறை |

பாடையினைச் சுற்றி வலம் வரும் எண்ணிக்கைக்கேற்ப வாய்கரிசி தண்ணீர் என்பன போட்டு கடமையினை நிறைவு செய்வார்கள். பெற்ற கடமை அம்பிலாந்துறையில்தான் இடம்பெறுகின்றது

## மாத்துக் கொடுத்தல்

சீலைபோடுதல் (இறுதி அடக்கத்திற்கு) தேசங்கூறுதல்போன்ற அம்சங்கள் இடம்பெறும். மாத்து விலகும் வாகை மரத்தடியில் தேசம் கூறப்படும். இதில் டோவிகளின் தலைவராகிய தன்னடக்கக்காரன் தேசம் - மண்முனை - மட்டக்களப்பு - அம்பிலாந்துறை - தலைமை நிலைமை - வண்ணக்கர் - கடுகண்டமார். (ஊர்ப்போடிகள்) என்று கூறி, மாத்து என்று சொல்வார். பின்னர் வேட்டி, சாறன், போன்ற உடுதுணிகளை அவர்கள் நிற்கும் இடம் சென்று அங்கு நிற்கும் சலவைத் தொழிலாளிகள் அவரவர் காலடிகளில் போடுவார்கள். இதில் தேசம் என்பது, மட்டக்களப்புப் பிரதேசத்தை ஆளும் உரிமம் பெற்ற கலிங்க மன்னரையே குறிக்கும். மாத்து விலகும்போது முதலில் ஊரில் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவரே அதனை முதலில் உடுப்பார். பின்னர் ஏனையவர்கள் உடுத்துக்கொள்வார்கள். அதன் பிறகு டோவி தலைவருக்கு பணம் கொடுக்கப்படும். பழைய காலத்தில் ஒரு துட்டுக்கொடுத்து இருக்கின்றார்கள்.

| | | |
|---|---|---|
| ஒரு காசி | - | ஒரு சதம் |
| ஒரு துட்டு | - | 1 1/2 சதம் (இது 1 சதமும் 1 சல்லியும்) |
| ஒரு பணம் | - | 6 சதம் |
| ஒரு இறசால் | - | 75 சதம் |

இறந்தவர் வீட்டில் வெள்ளைத்துணி தலையில் கட்டுவதற்காக கொடுக்கப்படும். அதில் துட்டுப்பணம் முடிந்து கொடுக்கப் பட்டுவது வழமை. இன்றும் சீலை கொடுக்கும் வழக்கமும் பணம் முடியும் வழக்கமும் உண்டு. இவர்கள் இறந்தவர் வீட்டில் இறந்தவர் எந்தக் குடியைச் சார்ந்தவரோ அந்தக் குடிக்குரிய கூரை முடிவை சிறப்பாக இன்றும் வைத்து வருகின்றனர். கோயில்களில் வெள்ளை கட்டுதல், திரைச்சீலை போடுதல், வெள்ளை போடுதல் என்று இவர்களுடைய பணி அமைகின்றது. யாக பூசை இடம்பெறும் போது யாகேஸ்வரன், யாகேஸ்வரிக்கு வைக்கப்படும் கும்பம் இரண்டும் வழங்கப்படும்.

பெண்கள் சாமத்தியப்படும் வீட்டில் இவர்கள் செய்யும் கடமைக்கு ஐந்து மரைக்கால் நெல் வழங்கப்படும். (முன்னர்) அத்துடன் அவர்களுக்கு உணவு வழங்குதலுடன் மற்றய உணவுப் பொருட்களும், ஒரு சேலையும், தலைப்பிள்ளை பிறந்தால் ஒரு சேலையும் கொடுக்கப்படும். இத்துடன் சிறுசிறு நடைமுறைகளும் உண்டு. இறந்த வீட்டில் 8இல், 31இல் செலவு கொடுக்கவேண்டும். செலவு என்பது அவர்கள் செய்த கடமைக்காகக் கொடுக்கப்படும் உணவு உட்பட ஏனைய நடைமுறைகள் யாவும் அடங்கும்.

குடி வீட்டுக்காக சேவை செய்யும்போது கணவன், மனைவி இருந்தால் எட்டு மரைக்கால் நெல்லும், குறைய நபர்கள் இருந்தால் அதற்கு ஏற்ப நெல் கொடுக்கவேண்டும். வேளாண்மை செய்தால் உப்பட்டிக் கட்டு ஒன்றும் வழங்கப்படும். கை வழக்கத்திற்கு முன்னர் 10 சதம் வழங்கப்படும். சித்திரை வருடம் பிறந்த காலத்தில் கைவழக்கம் இடம் பெறும். இந்த நடை முறைகள்யாவும் எமது கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களில் தண்டக்கார வரன்முறை, ஆணையர், வேங்கையர், காளியர், கன்னமுத்தர், வீரன், வெள்ளையன், கணபதி என்று தொடர்ந்து வந்திருக்கின்றது.

### திரு.வெ. கணபதி

தண்டக்காரர் வரிசையில் இறுதியாக இடம்பெறுபவர்தான் இவர். சிறந்த மனித நேயமுள்ளவர், பல்துறை ஆற்றல் கொண்டவர். அம்பிலாந்துறையினுடைய வரலாற்றில் அறிந்தவரைக்கும் சிறப்பாகப் பல தகவல்களைக் கூறியவர். இவர் முத்திறத்தாருக்குமுரிய கடமைகளை விளக்கிக் கூறினார். பெரியதம்பிரானுக்குப் பூசை செய்யும் பூசாரியாராவார். குறிப்பாகப் பாண்டிருப்பு, தாளங்குடா போன்ற பெரியதம்பிரான் ஆலயங்களில் பூசை செய்து வருகின்றார். பாண்டிருப்பில் தனக்குப் பிறகு பூசை செய்வதற்காக சிலருக்குப் பயிற்சி கொடுத்து வருகின்றார். சிறப்பாக மந்திரம் சொல்லக் கூடியவர். மந்திர, மருந்துகளுடன் பரீட்சயமுள்ளவர். பிள்ளைகளுக்குத் திருநீறு போட்டு அவர்களுடைய பிணியைப் போக்குவதில் கைதேர்ந்தவர். பூசை, சடங்கு நடைமுறைகளைச் சிறப்பாக அறிந்து வைத்துள்ளவர். இவர் பேராசிரியர்

இரா.வை.கனகரெத்தினம் அவர்களுக்கு பெரியதம்பிரான் பற்றி கொடுத்த வரலாறுதான் இன்றும் இலங்கையில் பெரியதம்பிரான் பற்றிப் பேசப்படுகின்ற வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. மாணவர்களும் அதனையே க.பொ.த (உ/த) இந்து சமயப் பாடத்திட்டத்தில் கற்கின்றனர்.

## சிகை அலங்காரம் செய்வோர்

அறுமக்குட்டிப்போடி இப்போதுள்ள வடக்குக் கோயிலுக்கப் பின்னால் இவர்களைக் குடியேற்றியிருக்கின்றார். இவன் மரண வீட்டில் பிரதான இடம் வகித்தவன். கட்டிலுக்கு கால் நாட்டுதல், இறந்த உடலுக்கு முகச்சவரம் செய்தல், சவம் கொண்டு செல்லத் தேர் கட்டுதல், இறுதி அடக்கத்தின் போது வாய்க்கருசியும், தண்ணீரும் கொடுத்தல், அடக்கம் செய்த பின்பு பிரண்டன் கொடியை வைத்தல். இது தலைக்கு மூன்றும், வயிற்றுக்கு இரண்டும், காலுக்கு ஒன்றுமாக வைக்கப்படும். அதேபோல் மண்வெட்டியை இந்த இடங்களில்அதே முறையில் வைத்தல். இறுதியாக சவம் புதைந்த இடத்திலிருந்து எல்லோரும் திரும்பிய பின்பு மரக்கொத்தை எடுத்து காலடிகளை அந்தக் கொத்தால் இல்லாமல் செய்து அவரும் இறுதியாக வருதல். சவம் எரிக்கப் படுமா இருந்தால் எரிப்பதற்கு தீப்பந்தம் வைத்தல், எரிந்த சாம்பல் எடுத்தல், சாம்பல் எடுக்கும் இடத்தில் ஒன்பது வரவை மணலால் செய்து உழவு செய்தல். இதில் சங்கப்பத்துக்கு நின்றவரே கலப்பையை இழுக்க வேண்டும். கலப்பை பிடிப்பவர் நாசிவராகும்.

அங்கம் கரைத்து வீடு வரும்போது நாசிவன் ஒரு கோடு கீறி அவர்களை மறிப்பான். அப்போது அவனுக்கு புதுவேட்டி, சாலவை கொடுக்க வேண்டும். அதன் பின்னர் கோட்டைத் தாண்டி வரும்போது பறையன் மறிப்பான், அப்போது அவனுக்கு பணம் சில்லறையில் கொடுக்கவேண்டும். இப்பணத்தினை" அறங்கைப் புறங்கைப்" பணம் என்பர். கை இரண்டையும் முதுகுக்குப் பின்னால் வைத்துப் பிடித்து இப் பணத்தினைப் பெறுவான். அவனோ? திரும்பிப் பார்க்கமாட்டான். அதனால் இப்பணத்தினை அறங்கை புறங்கைப் பணம் என்பர்.

வீட்டுக் கடப்படிக்கு வந்தபோது வண்ணான் மறிப்பான். அப்போது அறங்கைப் புறங்கைப் பணத்தின் மீதியைக் கொடுக்கவேண்டும். பின்னர் சங்கப்பத்திற்கு நின்றவர் கண்ணாடியில் முழித்து பின்னர் வீட்டில் வைத்துள்ள மடையில் முழிக்க வேண்டும். நாசிவர்கள் பரம்பரையாகச் சேவை செய்து வருகின்றார்கள். பழுகாமத்தைச் சேர்ந்த கணபதியண்ணன், அவருடைய மருமகன் வடிவேல், இவருடைய மருமகன் ஜெகன் என்று இப்பணி இடைவிடாது தொடர்கின்றது. ஆரம்பத்தில் கணபதியண்ணன் வீடு வீடாகச் சென்று தலைமுடி வெட்டுவது வழக்கமாக இருந்தது. 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாடசாலைக்கு முன்பாக சலூன் ஒன்று பொதுமக்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. தற்காலத்தில் அவர்கள் கடைகளை வாடகைக்கு அமர்த்தி சேவை செய்து வருகின்றனர். தலைமுடி வெட்டுவதுடன் இவர்களுடைய பணி மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

## நாவிதர்

அம்பிலாந்துறையின் வடக்குப் பகுதியில் இவர்களைக் குடியேற்றிய அறுமக்குட்டிப்போடி அவர்களுக்காக குடி வழமைகளையும் வகுத்து வைத்தார். அறுமக்குட்டிப்போடியால் இவர்களுக்கு "இராசமேளம்" ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது. இவ்வெங்கல மேளம் 1839 ஆம் ஆண்டு வழங்கப்பட்டதாக ஆய்வாளர் மகிழை - மகேசன் அவர்கள் குறிப்பிடுகின்றார். இந்தக் குறிப்பில் தவறு இருப்பதுபோல் தெரிகின்றது.

## இராச மேளம்

அம்பிலாந்துறையில் இருந்த பறையர்களின் தலைவனான மூப்பன் பத்தனுக்கு இந்த மேளம் அறுமக்குட்டிப்போடியால் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த மேளத்தினை அவர்கள் பரம்பரை பரம்பரையாக மரண வீடுகளுக்குக் கொண்டு சென்று வருவது வழக்கமாகும். இந்த மேளம் மரண வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுவதன் நோக்கம்" அறுமக் குட்டிப்போடி மரணவீட்டில் தங்களுடன் இருக்கின்றார் என்பதனை ஞாபகப்படுத்து வதற்காகவே" என்பர். இதன் மூலம் இராசமேளத்துக்குக்

கொடுக்கின்ற மரியாதை அறுமக்குட்டிப்போடிக்குக் கொடுப்பதனை நினைவுபடுத்துகின்றது. மேலும், அறுமக்குட்டிப்போடியால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பேரில் வந்துள்ளேன் என்பதனையும் வலியுறுத்தும்.

இராச மேளத்துக்கு வெள்ளைத்துணி சுற்றப்பட்டிருக்கும். அதனை மூப்பனே கொண்டு வருவார். அதனை வைப்பதற்கு தனியாகப் பாய் விரிக்கப்பட்டு வைக்கப்படும். இந்த மேளத்தினை அவர்கள் சேவிக்கும் எல்லா இடங்களுக்கும் கொண்டுசெல்வது வழக்கமாகும். இந்த மேளத்தில் "அறுமக்குட்டிப்போடியால் வழங்கப்பட்டது" என்று எழுதப்பட்டிருந்தது. ஊரில் மரணம் நிகழ்ந்தால் இராசமேளம் உறுமும் சத்தம் கேட்குமாம். இதனை மூப்பன் உணர்ந்து கொண்டு ஆயத்தங்களைச் செய்வாராம்.

இந்த மேளம் வெங்கலத்தால் செய்யப்பட்டதாகும். இது பல துண்டு வெங்கலங்கலால் பொருத்தப்பட்டது. துண்டு துண்டாக பிரிக்க முடியும். இத்தகைய மேளம் மூப்பன் பத்தன் வறுமையில் இருந்தாலும் அது பாதுகாக்கப்பட்டது. ஆனால், பத்தன் இல்லாத வேளையில் இவருடைய மகள் வறுமையின் நிமிர்த்தம் இரும்பு வாங்கும் ஒருவனுக்கு விற்றுவிட்டாள். பத்தன்னன் விடயம் தெரிந்து பலருக்குக் கூறி அவனைத் தேடியபோதும் அவன் அகப்படாமல் துறையினால் சென்று விட்டான். இந்த மேளத்தினைப் அவன் கொண்டு போகும் போது பலரும் கண்டிருக்கின்றனர். ஆனால், அவர்களுக்கு இந்த மேளம் பற்றிய உண்மைத் தெரியாது போய் விட்டது.

அம்பிலாந்துறை மரபின்படி அறுமக்குட்டிப்போடியே இவர்களை குடியேற்றியதாக தகவல்கள் கிடைக்கின்றன. கி.பி 1766இல் அறுமக்குட்டியை மட்டக்களப்பு வடபகுதிக்கு போடியாக நியமித்துள்ளனர். போடியாக நியமித்ததன் பின்னர்தான் வண்ணார், நாசிவர், பறையர், ஆகிய மூன்று திறனுடையவர்களையும் அம்பிலாந்துறையில் குடியமர்த்தியிருந்தார். எனவே, இராச மேளத்தைக் கொண்டு இவர்களுடைய குடியேற்றத்தினைக் கணக்கிட முடியாது. இவர்கள் அறுமக்குட்டிப் போடி பதவியேற்று

சில ஆண்டுகளுக்குள்ளே வெருகல் பகுதியில் இருந்து இங்கு கொண்டு குடியமர்த்தப் பட்டிருக்கின்றனர்.

இவர்களுக்கு 18 ஏக்கர் பரப்புள்ள விழாங்குழக் காணி அறுமக்குட்டிப்போடியால் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்தக் காணிகளுள் பல பலரால் சுவிகரிக்கப்பட்டுள்ளன. அவர்கள் வசம் அண்ணளவாக 7 1/2 ஏக்கர் மட்டுமே இருந்தன. இவர்களில் பல குடும்பங்கள் படிப்படியாக இங்கிருந்து அவர்களுடைய சொந்தங்கள் உள்ள களுதாவளை, கோளாவில், ஒல்லிக்குளம், கிளிவெட்டிப் பகுதி என்று சென்றுள்ளனர். இன்று சௌந்தரராசன் குடும்பம் மட்டுமே உள்ளது. இன்று இக்காணி அம்பிலாந்துறையில் பெரியகுடியிருப்பு எனும் இடத்தில் அமைந்துள்ள கோயில் நிருவாகத்தினரால் பராமரிக்கப்படுகின்றது.

பறயர்களில் வயது முதிர்ந்தவராக இருந்தவர் "பத்தன்" ஆவார். இவரை சிறியோர் முதல் முதியோர் வரை பத்தண்ணன் என்றே அழைப்பர். இவரின் தலைமையில் இவர்கள் செயற்பட்டு வந்தனர். ஆலய திருவிழாக்களில், மரண வீடுகளில் சென்று பறையடித்தனர். இவர்தான் அம்பிலாந்துறையின் இதுவரையுள்ள வரலாற்றில் 105 வயதில் இறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அம்பிலாந்துறைப் பறையர் முக்குகர்களுக்கு மட்டுமே சேவிக்கவேண்டும் என்பது கட்டளை. இவர்கள் 19 கிராமங்களில் சேவித்து வந்தனர். அதுவும் ஊர்த் தலைவர்களின் அனுமதி பெற்றே சேவிக்கச் சென்றனர். ஒரு விடயத்தை ஊரில் அறிவிக்க வேண்டுமாக இருந்தால் பறயர்களில் ஒருவர் ஊரை சுற்றி பறையறிந்து குறிப்பிட்ட விடயத்தினை அறிவிப்பார்.

பிரேதத்தை வீட்டிலிருந்து நடை தாளத்துடன் எடுத்துச் செல்வர். சந்திக்கு சந்தி மறித்து பறைத் தாளம் அடித்து ஆடுவர். அப்போது அவர்களுக்கு சில்லறைப்பணம் கொடுத்துச் செல்ல வேண்டும். சவக் காலை சென்றதும் சவம் புதைப்பதற்கு அவர்களிடம் உத்தரவு பெற்ற பின்னரே அடக்கம் இடம்பெறும். உடல் அடக்கம் செய்வதற்காக 18 குடிகளுக்கும் நன்றி சொல்லப்படும்.

"தொண்டு மண்டல வரிசை மூவாறு குடி மக்கள்
சுருதி நூல் முறையாகவே சுகமான நாவிதன்
நன்மை தீமைக் கோலை சொன்னபடி எழுது மோட்சன்
கண்டதொரு கம்மாளன் ஐவரொடு வலைஞரும்
கைச்சரடு கொண்ட பாணன்
காசினியிலே வரும் வாணிபர்கள் மூவரொடு
காவலுடன் பள்ளர்தானும்
கொண்டு வரும் பூமாலைக் காரனும்
வெட்டியான் குயவனொடு வீரகுடியான்
கூறைகறைபோக்கின்ற
வண்ணானும் இவ்வகைக் குடிகளாம்
பண்டுநாள் சோழன் முன் தொண்டைந்தர்
தன்னிலே பரிவாரணந் தனக்குப் பகிர்ந்திட்டார்
காராளரே."

இப்பாடலைத் தொடர்ந்து அடக்கம் செய்வதற்கான சிறு துண்டு நிலம் நாவிதரால் விலை வைக்கப்படும். இதனை பறயர்களின் தலைவனான பத்தனே கூறுவார். இது இறசால் கணக்கில் ஏலம் விடப்படும். நாவிதர் முதலில் இறசால் முறையிலே ஏலம் வைப்பார். தொடர்ந்து இறுசால் முறையில் விலை வைக்கப்பட்டு சவம் அடக்கம் செய்யப்படும்.

ஒரு இறசால் 75 சதமாகும் (முக்கால் பணம்) இதனை சவம் புதைக்கச் சென்றவர்களில் ஒருவர் விலை வைத்து வாங்குவார். பின்னர் பறையனுக்கு சேவகம் செய்தமைக்காக பணம் வழங்கப்படும். (சல்லி - 1/2 சதம், துட்டு - 1 1/2 சதம், காசு 50 சதம் (1/2 ரூபா, எட்டுப்பணம்), நாலுபணம் - 25 சதம் (கால் ரூபா),

ஆலயச் சடங்குகளில், திருவிழாக்களில் பறையடிக்கும்போது வாழைப்பழத்துடன் இணைத்த மடை வழங்கப்படும். இன்று நாள் கூலி வழங்கப்படுகின்றது. 04.08.1991இல் சாவீட்டுக்குச் சேவகம் செய்ய ரூபா 500 ஆக இருந்த பணம் இன்று ரூபா 5000 ஆக விரிவடைகின்றது.

புதுவருடம் கொண்டாடிய பின்னர் கைவிசேடம் (கை முழுத்தம்) செய்வதற்கு வருவார்கள். முதலில் ஆலயத்தில் வந்து தவில் அடித்த பின்னர் அறுமக்குட்டிப்போடி வாழ்ந்த கிட்டங்கி வளவில் அடிப்பார்கள். இந்த வளவு இன்று பெரியகுடியிருப்பில் பாலிப்போடியார் குடும்பம் இருக்கும் வளவு. அதன் பிறகு வன்னியனார் இருந்த வீட்டிலும், பின்னர் நாவற்கன்னியார் இருந்த வீட்டிலும், பின்னர்தான் ஏனைய இடங்களிலுள்ள வீடுகளிலும் அடிப்பார்கள். இவர்களுக்கு நெல், சாராயம், சாப்பாடு என்பன வழங்கப்படும். இது அவர்களுக்கு பெரியதோர் அறவீடாகும். தான்தோன்றும்ஈஸ்வரர் தேருக்கு எண்ணெய் கொடுக்கும் உரிமை அம்பிலாந்துறையில் வாழ்ந்த பறயருக்கே உண்டு. இவர்கள் இங்கு முக்குகருக்கு மட்டும் சேவிக்க வேண்டும். ஊர்த்தலைவர்களின் அமைதி பெற்றேபத்தொன்பது கிராமங்களில் சேமித்து வந்தனர். இவர்களுக்கென்று சேட்டுப்போடக்கூடாது என்ற கட்டுப் பாடுகளும் இருக்கவே செய்தன. இன்று அவர்களில் பலர் அரச தொழில் புரிகின்றனர். எல்லாப் பிள்ளைகளும் கல்வி பெறும் வாய்ப்பு திறந்து விடப்பட்டுள்ளது. இன்று ஆலயத்தில் மரண வீடுகளில் பறையடிக்க களுதாவளையிலிருந்து அல்லது, ஒல்லிக் குளத்திலிருந்து அவர்களை அழைத்து வரவேண்டியுள்ளது.

1998ஆம் ஆண்டு காலத்தில் மேளத் தொழிலாளர்களில் ஒருவர் சமூகத்திற்கு பொருத்தமற்ற முறையில் நடந்து கொண்டதன் விளைவாக மேளத் தொழிலாளர்களுக்கும் குறிப்பிட்ட குடும்பத்தினருக் குமிடையில் பிரச்சினை எழுந்தது. 21.10.1988ஆம் ஆண்டு மேளத் தொழிலாளர்களான சங்கரன், நல்லதம்பி ஆகியோருக்கு சிலர் அடித்து அந்தச் சமுகத்தை பயமுறுத்தினர். அத்தகைய நெருக்கடியை தொடர்ந்தும் சகித்துக்கொள்ள முடியாத அவர்கள் தாய்க் கோயிலான அம்பிலாந்துறை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முன்றலில் பொதுமக்கள் மத்தியில் தங்கள் பிரச்சனைகளைக் கூறி இனியும் தாங்கள் இங்கிருந்தால் தங்கள் உயிருக்கு கூட ஆபத்து ஏற்படலாம் என கருத்துக்ககளை வெளிப்படுத்தி 30.10.988இல் பத்தன் மூப்பன் குடும்பத்தைத் தவிர ஏனையோர் முழுமையக வெளியேறினர். இதன் பின்னர் அவர்களைக் குடியேற்றும்போது அறுமக்குட்டிப்போடி கொடுத்த வளவு காணியாவும் அம்பிலாந்துறை

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பராமரிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. இன்று அம்பிலாந்துறையில் சௌந்தரராசா குடும்பம் மட்டுமே உள்ளது. இவர் மூப்பன் பக்தன் வாரிசைச் சேர்ந்தவர். மேளத் தொழிலாளர்களுக்கு என்று கொடுக்கப்பட்ட குடியிருப்பு வளவுகள் வேறு பொதுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதும் பழமையை அழிக்கும் செயலாகும்.

## நாசிவர், நாவிதர், சலவைத்தொழிலாளிகளின் பிரச்சினை

தமிழீழப் போராட்டம் என்ற பெயரில் இயக்கங்கள் பல தமிழர் சமூகத்தில் உருவான போது தமிழர்களுடையே பொருளாதாரம், கல்வி என்ற இழப்புகளுக்கு அப்பால் உயிர் உடைமைகளையும் இழந்து நின்றனர். இயக்கங்கள் இன, மத, சாதி, பால்,வர்க்க வேறுபாடின்றி இளைஞர்களை தங்கள் இயக்கத்திற்கு இணையச் செய்தனர், இணைத்தனர். இத்தகைய சூழ்நிலையில்தான் நாசிவர், சலவைத்தொழிலாளிகள், நாவிதர் இனத்து இளைஞர்களும் இயக்கங்களில் சேர்ந்து கொண்டனர். இவர்களில் சிலர் அந்தந்த இயக்கங்களில் அதிகாரம் கொண்ட குழுக்களின் தலைவர்களாகவும் இருந்து செயற்பட்டனர்.

குடிமக்களாகிய இவர்களில் சிலர் குடிமக்களின் பெண்களைத் திருமணம் செய்து கொண்டனர். இத்தகையதொரு கலப்பு முறைத் திருமணம் இடம்பெற்றது. இந்த நிலையில் அவர்களுக்கு சமூக அந்தஸ்து எனும் தேவை உருவானது. இந் நிலையால் இவர்களில் பலர் தங்கள் குலத்தொழிலை விட்டு சுயதொழில் செய்வதற்கு முனைந்தனர். அவர்களுக்கு கிராமத்தில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் மெல்லமெல்ல தளரத்தொடங்கியது. இவ்வாறான பின்னணியில்தான் இந்த மூன்று குடிமக்களும் சிறுசிறு பிரச்சனைகளை முன்வைத்து நிவாரணம் காணத் தொடங்கினர். இதற்காக அவர்கள் தங்கள் இனம் சார்பான சங்கங்களை உருவாக்கிக் கொண்டார்கள். இதனால் இவர்களுக்காக உருவாக்கப் பட்டிருந்த சமூக சட்டங்களில் தளர்வு ஏற்படவே செய்தது.

1994ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு மரண வீடுகளில் நாசிவர் செய்த சேவை முற்றாகத் தடைப்பட்டது. அவர்கள் இன்று சிகை அலங்காரம் மட்டுமே செய்கின்றனர். வண்ணார் தொடர்ந்தும் குடியான வர்களுக்காக சேவைகளைச் செய்கின்றனர். அதனால், சேட்டுப் போடா மலே விடுதல், குடை பிடிக்காமல் விடுதல் நீள் காற்சட்டை போடாமல் விடுதல் போன்ற செயற்பாடுகள் முழுமையாகவே தளர்வடைந்துள்ளன.

நாவிதர்கள் கிராமத்தை விட்டு வெளியேறிச் சென்ற காலம் முதல் 2006ஆம் ஆண்டு காலம் வரை அவர்களை மரண வீடுகளிலோ, கோயில்களிலோ சேவகம் செய்ய எடுக்கக் கூடாது என்ற கட்டுப் பாடும் தளர்வடைந்துள்ளது. இன்றைய நிலையில் அவர்கள் இந்த இடங்களில் சேவகம் செய்வதற்காக கூடுதலான பணத்தையும் குடிக்க சாராயத்தையும் பெறுகின்றனர். ஆலயத்தில் சேவகம் செய்யும்போது சாராயம் குடிக்கமாட்டர்கள். இன்று மரண வீடுகளில் தவில் அடிக்கப்படுகின்றது.

சலவைத் தொழிலாளர்கள் பிரச்சினை 18.04.1994ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆலயப் பொதுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதில் அவர்கள் தங்களுக்கு ஒலி பெருக்கி தரும்படியும் தங்களின் நன்மை தீமைக்கு வெளியூர் பறையன் கொண்டு அடிப்போம் என்றும், வாவர் கொண்டு சேவை செய்வோம் என்றும் கூறினார்கள். இக் கருத்தினை வேதாரணியம் அவர்களே முன் வைத்தனர். இதனை ஏற்க மறுத்த பொதுமக்கள் பழைய முறைப்படி சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். இக்கருத்தினை அவர்கள் ஏற்க மறுத்தனர். இப் பிரச்சனையினை அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டது. 02.05.1994ஆம் திகதி உதவி அரசாங்க அதிபர் முன்னிலையில் தாங்கள் பழைய நடைமுறைப்படி சேவை செய்வதாக ஏற்றுக்கொண்டு கையொப்பம் இட்டுச்சென்றனர். இதில் சலவைத் தொழிலாளர்களின் மூத்த உறுப்பினர்களும், முன்னோடிகளுமாகிய வே.கணபதி, சீ.செல்லன், வெ.சோமசுந்தரம், சி.வேலன் என்போர் கையொப்பம் இட்டனர். இந்த மூன்று திறனுடைய குடிமக்களை மக்கள் சிறப்பாக கவனித்து வருவது எமது கிராம மரபாகும்.

# கலைகள்

கலைகள் நுண்கலைகள், நுண்கலைகள் சாராதவைகள் என அமைகின்றன. நுண்கலைகளாவன கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் என்பனவாகும. நுண்கலை சாராதனவாக மருந்து, மந்திரம், விளையாட்டு என்பனவும் ஏனைய கைவினைக் கலைகளுமாகும். அம்பிலாந்துறைக் கிராமத்தில் நடனம், நாடகம், மருந்து மந்திரம், விளையாட்டு எனும் பிரிவுகள் பெரிதும் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஏற்கனவே விளக்கமாகத் தரப்படுவதனால் நாடகம் எனும் கலை எவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்பதனை நோக்க முடிகின்றது.

## கூத்து

கூத்து மக்கள் மத்தியில் மக்கள் கலையென உயர்ந்து நிற்கின்றது. இத்தகைய மக்கள் கலை, புனருத்தாரணம் சமூகவாழ்வும், வாழ்வு நெறியும் மாறுகின்ற பொழுது தோன்றுவதாகும். இலங்கையில் தமிழ், சிங்கள மக்களிடையே இம் மரபு வேரூன்றியுள்ளன. யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம், மலையகம் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கி சிறப்புப் பெறும் நாட்டுக் கூத்து மட்டக்களப்புப் பிரதேசத்தில் மக்களோடும், மண்ணோடும், கலந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. சமுதாய நெறியும் வாழ்க்கை முறையும் அமையும் பொழுது மரபு வழியில் வரும் கிராமியக் கலையில் அதிக ஆர்வமும் கவனமும் தோன்றும். கிராமியக் கலைகள் மூலம் மக்களது உண்மையான உளப்பாங்கினையும், நடைமுறைப் பண்பையும் அறியலாம்.

தமிழ் பேசும் மக்கள் ஈழத்திலே பல நூற்றாண்டுகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பகுதிகளுள் மட்டக்களப்புப் பிரதேசமும் ஒன்றாகும். மட்டக்களப்பிலுள்ள நாட்டுக் கூத்துக்கள் வடமோடி, தென்மோடி என இருவகைப்படுத்திக் கூறப்படும். இலங்கையில் பயிலப்படும் மரபுவழி நாடகங்களுள், புரதான சம்பிரதாயங்களுடன் நெறி பிறழாது போற்றப்பட்டு வருபவை மட்டக்களப்பிலுள்ள மரபுவழி நாடகங்களே. இவற்றை நாட்டுக்

கூத்து என்பர். நாட்டுக் கூத்து எனும் சொற்றொடரில் வரும் கூத்து எனும் சொல் கதை தழுவிவரும் ஆட்டத்தைக் குறிப்பது. "நாட்டு" எனும் சொல் கிராமத்தைக் குறிப்பது. அதுவே புராதனத்தை எடுத்துணர்த்துவதாக உள்ளது. மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்கள் மரபுத் தொடர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆடப்படும் கூத்துக்கள் வடமோடிக் கூத்துக்கள், தென்மோடிக் கூத்துக்கள் என இரண்டு வகையுண்டு. இக்கூத்துக்களுக்கிடை கதைப்போக்கு, இசை, ஆடல், உடை முதலியவற்றில் வேறுபாடுகளுண்டு.

பண்டைக் காலத்தில் கூத்தாடுகின்ற மரபே மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல கூத்துக்கள் ஆடப்பட்டிருக்கின்றன. அதுவும் படுவான்கரைப் பிரதேசத்தில் அதனுடைய செல்வாக்கு அதிகமாக இருந்தது. ஊருக்கொரு கூத்து, ஊருக்குள்ளே கூத்தென்று ஆடப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் அம்பிலாந்துறையில் பல கூத்துக்கள் ஆடப்பட்டு அரங்கேற்றப் பட்டிருக்கின்றன. இதனுடைய காலத்தினை சரியாகக் கணக்கிட்டுக் கூறுவது கடினமாகும்.

அம்பிலாந்துறையில் கூத்துக்கள் ஆடப்பட்டதற்கான காரணங்களாக கொள்ளத்தக்கவை. (இவை எல்லாக் கிராமத்தவருக்கும் பொதுவான நடைமுறையாகும்)

1. ஊருக்குள் மூதேவி உறைந்துள்ளது, அதனை விரட்டியடிக்க வேண்டும் என்பதற்காக விடிய விடியக் கூத்தாடினார்கள்.
2. பாரிய சண்டை பிடித்து எதிரியாய் இருப்பவர்களை ஒற்றுமை யாக்கல். அதாவது, நீதி மன்றத்துக்குச் சென்றால் தீர்ப்புக் கிடைக்குமே ஒழிய ஒற்றுமை கிடைக்காது. வீண் அலைச்சல் தான் ஏற்படும், என்பதனை உணர்ந்த ஊர் பெரியவர்கள் அவர்களை இணைத்து விடிய விடியக் கூத்தாடி உறவை வளர்த்தார்கள்.
3. பிறக்கும் பிறக்கும் பிள்ளைகள் புராணக்கதைகளை அறிய வேண்டும் என்பதற்காக கூத்தாடினார்கள்.
4. நேர்த்திக்கடன், ஊர்த்திருவிழா, ஓய்வு நேரங்களைக் கழித்தல் போன்ற காரணங்களுக்காக கூத்தாடினார்கள்.

5. கூத்தாடிக் கௌரவமான பேர்பெறுதல். சில காலத்திற்கு முன்னர் உணரப்பட்டது. சட்டம்கொடுத்த பின்னர் (கூத்துப்பாத்திரம்) கூத்தாடுபவர்கள் பாத்திரப்பெயர் கொண்டே அழைக்கப்படுவார்கள். உதாரணமாக, வீமனுக்கு ஆடுபவர் வீமன் என்று அழைக்கப்படுவார். அவருடைய சொந்தப் பெயர் கணபதியாக இருந்தால் "வீமன் கணபதி" என்ற பட்டப் பெயரால் சமூகத்தில் அழைக்கப்படுவதோடு சிறப்பும் பெறுவார். இதனை இச்சமூகம் விரும்பியதற்காக கூத்தாடினார்கள்.

6. அக்காலச் சமூக அடுக்கமைப்பில் சிறப்பான முறையில் கூத்தாடும் இளைஞனுக்கே திருமணம் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. சிறப்பாகக் கூத்தாடுபவன் சிறந்த மாப்பிள்ளை என்ற உணர்வு அந்தக் காலத்திலிருந்தது. இத்தகைய சிறப்பைப் பெறவேண்டும் என்பதற்காகக் கூத்தாடினார்கள்.

7. கிராமங்களுக்கிடையே உள்ள போட்டியின் மத்தியில் கூத்துக்கள் ஆடப்பட்டன. உதாரணமாக, அம்பிளாந்துறையில் ஒரு கூத்தாடினால் அதே வருடம் கடுக்காமுனையிலும் மற்றும் ஏனைய கிராமங்களிலும் கூத்தாடுவார்கள். மேலும், கூத்தாடவில்லையாயின் மற்றக் கிராமத்தார் ஏளனம் செய்துவிடுவார்கள் என்பதற்காகக் கூத்தாடிளார்கள்.

8. பொருளாதாரச் சமநிலையைப் பேணுவதற்காகவும் கூத்துக்கள் ஆடப்படுட்டிருக்கின்றன. அதாவது, ஒருவரிடம் அதிக பணம், நெல் இருந்தால் அவரை அழைத்துக் கூத்தாடி, அவர் பொருளாதார நிலையினைச் சமநிலைக்குக் கொண்டு வருதல். இதனால் சமூகத்தில் பணக்காரன், ஏழை என்ற ஏற்றத்தாழ்வு இருக்க மாட்டாது. என்ற சமூக மேலான்மை உணர்வும் மேலோங்கி இருந்தன. இவை போன்ற காரணங்களின் அடிப்படையில் கூத்துக்கள் மக்கள் மத்தியில் சிறப்பிடம் பெற்றிருந்தன.

அம்பிலாந்துறையில் ஆடப்பட்ட கூத்துக்களுள் சிறப்பிடம் பெறுவது "நொண்டிகூத்து" ஆடியவர்கள் அந்தந்தப் பாத்திரப் பெயர்களால் அழைக்கப்பட்ருக்கின்றனர். எனது அம்மப்பாவின் பெயர் சின்னத்தம்பி. அவர் நொண்டிக்கு கூத்தாடியமையினால் நொண்டி

சின்னத்தம்பி என்றே அழைக்கப்பட்டார். பிற்பட்ட காலத்தில் அவர் இயல்பாகவே நொண்டியானார். இவ்வாறு பாலிப்போடியார் பறச்சிக்கு ஆடியதனால் பறச்சிபாலர் என்றும், அருச்சுனன் கணபதி என்றும் பலர் கூத்துப் பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றனர்.

அம்பிலாந்துறைக் கிராமத்தில் அரிச்சந்திர விலாசம், விரகுமாரன், சத்தியவான் சாவித்திரி, பூதத்தம்பி, அல்லி அருச்சுனன், மதுரவாசகம், சூரசம்மாரம் அலங்காரரூபன் போன்ற கூத்துகக்ள் ஆடப்பட்டதாக அறிய முடிகின்றது. எனது அப்பா அலங்காரரூபன் நாடகம் ஆடியிருக்கின்றார். இந்தக் கூத்து களுதாவளை, தேற்றாத்தீவு போன்ற இடங்களில் ஆடப்பட்டிருக்கின்றன. நொண்டி கூத்து, அலங்காரரூபன் கூத்து, அல்லி கூத்து என்பன சிறப்பாகப் பேசப்பட்டன. பொதுவாகவே கூத்துக்கள் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டே ஆடப்பட்டு வந்துள்ளன. இக் கூத்துக்களை ஆடியவர்கள் பொது அமைப்பு என்று இல்லாமல் பொது முடிவின் கீழ் ஆடியுள்ளனர். 1970 ஆம் ஆண்டு கலைக்கழகங்கள் தோன்றி மேடை நாடகங்களையும், மேடைக் கூத்துக்களையும், கரகம், கும்மி, கோலாட்டம், தாளலயம் போன்ற வடிவங்களைத் ஆற்றுகைக்கு உட்படுத்தின.

### வசந்தன்

அம்பிலாந்துறையில் வசந்தன் கூத்த பன்னெடுங்காலமாக ஆடப்பட்டுவந்துள்ளது. மரபுக் கலையான இந்த ஆட்டம் பல்வேறு சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ளது. இந்த வசந்தன் ஆட்டத்தினை பதினெட்டு வசந்தன் என்று கூறுவார்கள். அண்மைக்காலமாக இந்தக் கூத்து இடம்பெறவில்லை. அதற்குக் காரணங்கள் பல. அவை, வசந்தன் கூத்துப் பாடல்கள் கிடைக்காமை, வசந்தன் பாடலினைப் படிக்கக்கூடிய நபர்கள் இல்லாமல் போனமை, வசந்தனைப் பழக்கக் கூடிய அண்ணாவியார் இல்லாமை, இதற்கு மேலாக நாட்டமின்மை என்று கூறிக்கொண்டு செல்லாம். தற்காலத்தில் கடந்த சில ஆண்டுகளாக கலைப்பூக்கள் கலைக்கழகத்தினர் வருடத்திற்கு ஒரு வசந்தன் என்ற அடிப்படையில் சிறுவர்களைக் கொண்டு பழக்கி மேடையேற்றி வருகின்றனர்.

## கலைக்கழகங்கள்

கலை நிகழ்வுகளை நவீன அம்சங்களுடன் ஆற்றுகைக்கு உட்படுத்தும் கலைக் கழகங்களின் வருகைக்கு முன்னராக "கூத்து" எனும் வடிவம் மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் தோறும் ஆடப்பட்டிருக்கின்றன.

## கதிரவன் கலாமன்றம்

அம்பிலாந்துறையில் இன்று பல கலைக்கழகங்கள் உள்ளன. 1970ஆம் ஆண்டு கலைக்கழகங்கள் தோற்றம் பெற்றுள்ளன. ஆரம்பத்தில் கதிரவன் கலாமன்றம் தோற்றம் பெற்றது. தலைவராக செ.மகேந்திரன் அவர்களும், செயலாளராக பா.ஸ்ரீஸ்கந்தசெயா அவர்களும் செயற்பட்டனர்.

## இளைஞர் கலாமன்றம்

பின்னர் 1973ஆம் ஆண்டு காலத்தில் இளைஞர் கலாமன்றமும் தோற்றம் பெற்று கலை மரபை ஒரு புதிய வடிவத்தில் தந்தது. இதன் தலைவராக க.பரமானந்தம் அவர்களாவார். இவர்கள் பொன்னம்பலப்போடியார் நவீன நாட்டுக் கூத்தினை பல மேடைகளில் மேடையேற்றியிருந்தனர். அம்பிலாந்துறையில் அமைந்துள்ள மாரியம்மன் சடங்கை அடிப்படையாகக் கொண்டு கலைக் கழகங்களின் நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டு வந்திருக்கின்றன. சமூகசீர்திருத்த நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், புராண நாடகங்கள், இலக்கிய நாடகங்கள், கரகம், கும்மி, தாளலயம், நவீன நாட்டுக் கூத்து என்ற அடிப்படையில் கலைவடிவங்கள் மேடையேற்றப்பட்டுவருகின்றன. கலைக்கழகங்கள் மேடையில் அதாவது, ஒரு பக்கம் திறக்கப்பட்ட மேடையிலே நாடகம் நடித்து வந்தனர். இதற்காக உழவு இயந்திரப் பெட்டிகளைப் பயன்படுத்துகினர். இரண்டு அல்லது மூன்று பெட்டிகளைப் பயன்படுத்துவது வழக்கம். மாரியம்மன சடங்கை அடிப்படையாகக் கொண்டு மேடை ஏற்றப்பட்டு வேறு கிராமங்களுக்கும் சென்று மேடை ஏற்றுவது வழக்கமாக இருந்து வருகின்றது.

க.கு.நடராசா அவர்கள் தலைவராக இருந்த 1980ஆம் ஆண்டு காலத்தில் இளைஞர்கள் நாடகம் நடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் ஆத்திரமுற்ற இளைஞர்கள் தீவுக்குடியிருப்புக் கோயிலில் அந்த நிகழ்ச்சியை மேடையேற்றினர். அன்றைய காலத்தில் "சுந்தரிக்குச் சுகமில்லை" எனும் நாடகம் சிறப்பாகப் பேசப்பட்டது. அவருடைய காலத்தில்தான் பாக்கியசெல்வம் அவர்களுடைய வீட்டில் கல்முனையில் இருந்து இசைக்குழு வரவழைக்கப் பட்டு இசை நிகழ்ச்சி வைக்கப்பட்டன.

### நவரச கலாமன்றம்

1975ஆம் ஆண்டு ஞானப்பிரகாசம் தலைமையில் நவரச கலாமன்றம் நிகழ்ச்சிகளைச் மேடையேற்றினர். இதன் செயலாளராக அ.பாலசுந்தரம் அவர்கள் செயற்பட்டுள்ளார்.

### நாகேஸ் கலைக் கழகம்

நவரச கலாமன்றம் 1980 ஆம் ஆண்டு நாகேஸ் கலைக்கழகம் என்ற பெயரால் அழைக்கப்பட்து. நாகேஸ் கலைக்கழகம் பல நகைச்சுவை கலந்த காசிய நாடகங்களை மேடையேற்றி வருவது வழக்கமாகும். இராசேந்திரன், பாலசுந்தரம் (மூத்தவன்) என்றால் அக் கழகத்தினுடைய நகைச்சுவையே ஞாபகத்திற்கு வரும். இவர்கள் பாட்டுக்குப் பாட்டு போட்டியினை பல வருடங்கள் வைத்தவர்கள். வீ.கந்தப்போடி பாட்டும் கதையும் என்ற நிகழ்ச்சியினைச் சிறப்பாகச் செய்தவர். இவ்வாறான பல நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம்.

### சிவாஜி கலைக்கழகம்

சிவாஜி கலைக்கழகம் ஆரம்பத்தில் கதிரவன் கலாமன்றம் என்ற பெயரிலேயே நாடகங்களை மேடையேற்றியுள்ளது. பின்னர்தான் 1980ஆம் ஆண்டு காலத்தில் சிவாஜி கலைக்கழக மென்றும், பின்னர் மக்கள் கழகமென்றும் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. இக்கழகம் பல நிகழ்வுகளை சிறப்பாகச் செய்து வந்தது. பழுகாமம் போன்ற கிராமங்களுக்குச் சென்று நாடகங்களை மேடையேற்றியுள்ளனர்.

இக்கழகத்தினைப் முன்னின்று நடத்தி வந்தவர் மா.ஜீவரெத்தினம் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கலைஞர் கலைக்கழகம்

*சி.கணேசலிங்கம் தலைமையில் 20.08.1986ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு பல நிகழ்ச்சிகளை நடத்தி வந்தனர்.*

### கலைப்பூக்கள் கலைக்கழகம்

*கலைப் பூக்கள் கழலக்கலைகம் 1990ஆம் ஆண்டு தொடக்கம் கலைப்பூக்கள் கலைக்கழகம் கலையை ஒரு புதிய ஆற்றுகைக்கு இட்டுச் சென்றுள்ளது. நவீன நாட்டுக் கூத்து தொடர்ந்தும் ஆடப்பட்டுவருகின்றது. இந்த கூத்து வடமோடி, தென்மோடி ஆட்டமுறைகளை அடிப் படையாகக் கொண்டும், தற்கால சமூகத்திற்கு ஏற்ற கதை யினை கருப்பொருளாகக் கொண்டும் இசை வடிவங் களை உட்புகுத்தியும், 6 - 10 இடைப்பட்ட கலைஞர்களைக் கொண்டும் ஆடப்பட்டுவருகின்றன. தாளலயம், கலைப்பூக்கள் கலைக் கழகத்தால் முதன் முதலில் மேடையேற்றப் பட்டது. இதுவரையில் கலைப்பூக்கள் கலைக்கழகம் "வெங்காயப் போடி" எனும் நவீன நாட்டுக் கூத்தை வேறு இடத்திலிருந்து பெற்று முதல் கூத்தாக ஆடியது அதன் பிறகு இக்கட்டுரை ஆசிரியரால் 8 கூத்துக்கள் இயற்றப்பட்டும், நொண்டி கூத்து மாற்றீடு செய்யப்பட்டும் மேடையேற்றப்பட்டிருக்கின்றன.*

*கலைப்பூக்கள் கலைக்கழகம் நடிப்பு மட்டுமின்றி சமூக முன்னோடிகளை கௌரவிக்கும் நோக்கோடு கடந்த பல வருடங்களா பொன்னாடை போர்த்தல், வாழ்த்து மடல் வழங்கல் எனும் நிகழ்வுகளையும் சிறப்பாகச் செய்து வருகின்றர். 2010ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக பேராசியர் மதிப்புக்குரிய இரா.வை.கனகரெத்தினம் அவர்களை பிரதம அதிதயாக வரவழைத்து மக்களுக்கு கருத்துரை ஊடாக பல அறிவுரைகள் கல்வியை அடிப்படை யாகக் கொண்டு வழங்கப்பட்டன. அம்பிலாந்துறையில் முதன் முதலில் மேடையேற்றப்பட்ட பேராசியரும் அவரே எனும் சிறப்பும் உண்டு. இக்கட்டுரை ஆசிரியிரின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்கவும் அவர் எமது*

கிராமத்தின் மீது கொண்ட மதிப்பு காரணமாகவும் இங்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

கலைப்பூக்கள் கலைக்கழக புராண இதிகாச நாடகங்கள் மக்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்றது. எமது கலைக்கழக நிபுணத்துவ ஆலோசகர் மு. குணரெத்தினம் ஆசிரியர் அவர்களின் நெறியாழ்கையின் கீழ் வருடாவருடம் மேடையேறுகின்றன. "இந்திரஜித்" எனும் நாடகம் இன்னும் நீங்காத நினைவில் உள்ளது. நிபுணத்துவ ஆலோசகர் பா.அரியநேந்திரன் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் ஆற்றுகையில் பல கரகங்கள் கண்ணீர் வதைகளாக மேடையேறின. நாட்டு நடப்புக்களை அப்படியே சித்தரித்து கரகம், வில்லுப்பாட்டு நிகழ்வுகளை எழுதி நடிப்பிற்கு வழிப்நடத்தி வருகின்றனர்.

கழகத்தின் மூத்த உறுப்பினர்களான செ.கோவிந்தராசா, மா.தம்பிராசா என்போர் ஆரம்ப காலத்தில் கரகங்களை மேடையேற்றினர். மத்தள ஆசிரியராக தம்பிராசா அவர்களும், பரமானந்தம் (காத்தி) அவர்களும் சிறப்பாகச் செயற்படுத்தினர். தற்போது கன்னன் குடாவைச் சேர்ந்த கு.பரமசிவம் அவர்களும் தம்பிராசா அவர்களும் மத்தள ஆசிரியர்களாக மிகவும் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

பொது விளம்பரத்தின் கீழ் நிகழ்ச்சி நடதத்தப்பட்டதை புதிய நடைமுறைக்கு கொண்டு வந்ததும் கலைப்பூக்கள் கலைக்கழகமே அதாவது, கழக நிகழ்ச்சிகளை வேறு ஒரு விளம்பரத்தில் விளம்பரப்படுத்தி சிறப்பித்தனர். இதனை ஆரம்பித்து வைத்தவர் எமது கழக மதிப்பக்குரிய உதவி மாவட்ட பதிவாளரும் கழகத்தினுடைய மூத்த மதியுரைஞர்களில் ஒருவருமான அ.பேரின்பராயகம் அவர்கள். அதனைத் தொடந்து இன்று வரையும் அந்தச் செயற் பாடு, க.ஜெயராசு, இ.கமலேந்திரன், கு.டிலக்சன் என்று நடை முறையிலிருந்து வருகின்றது.

கலைப்பூக்கள் கலைக்கழகம் தமது கழகத்திலிருந்து இறையடி சேர்ந்த கலைஞர்களை வருடாவருடம் நினைவு கூர்ந்து

அவர்களுக்கென்று ஞாபகச் சுடர் ஏற்றப்படுகின்றது. அத்தகைய கலைஞர்களின் பிள்ளைகளுக்கு வங்கியில் பணம் வைப்புச் செய்து அதனை வருடா வருடம் ரூபா. 1000 வைப்பிலிட்டு புதுப்பித்துக் கொடுக்கப்படுகின்றது. கல்வி வளர்ச்சிக்காக அம்பிலாந்துறை கலைமகள் வித்தியாலயத்திற்கு ருபா. 20000 ஆயிரம் பெறுமதியான புத்தகங்களை வாங்கிக் கொடுத்துள்ளனர். இந்தப் புத்தகத்திற்காகப் பணத்தினை அன்பளிப்புச் செய்தவர்கள் செந்தாளன், அவர்களும் ஜெ.கோஜனா அவர்களும் என்பது நினைவுபடுத்தத்தக்கது.

கலைப்பூக்கள் கலைக்கழகத்தின் மகுடவாக்கியம் "கலைஞனாய் இரு அன்றில் கலை ரசிகனாய் இரு" என்பதாகும். இதுவரை மகுட வாக்கியம் உள்ள ஒரே கழகம் இதுவேயாகும். கழக கீதம், தமிழ் வணக்கம் என்பன் இசைக்கப்பட்டு வருகின்றன. இறை சுடருடன் சமாதானச் சுடர், ஞாபகச்சுடர் என்பன ஏற்றப்பட்டு வருகின்றன. அம்பிலாந்துறை வரலாற்றில் தொடர்ந்து 25 வருடங்கள் நிகழ்ச்சிகளை மேடையேற்றி வெள்ளிவிழாக் கண்ட கழகமென்றால் அது கலைப்பூக்கள் கலைக்கழகம் என்ற பெருமையினையும் இக்கழகம் பெறுகின்றது.

## தங்கநிலா கலைக்கழகம்

1990ஆம் ஆண்டு காலத்தில் தங்கநிலா கலைக்கழகத்தினை தங்கவேல் அவர்கள் உருவாக்கிப் பல நகைச்சுவை நாடகங்களையும், புராண, இதிகாச நாடகங்களையும் மேடையேற்றி சிறப்புப் படுத்தினார்.

## இளஞ்சுடர் கழகம்

1980ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக் கழகமானது 1986ஆம் ஆண்டு காலத்தில் கண்ணதாசனாகவும் நாவலர் கழகமாகவும் இரண்டாக அமைக்கப்படுகின்றது.

## கண்ணதாசன் கலைக்கழகம்

இன்று வரையும் கண்ணதாசன் கலைக்கழகத்தினர் சிறப்பான நிகழ்ச்சிகளை எமது கிராமத்தில் மட்டுமன்றி வேறு கிராமங்களிலும் சென்று மேடையேற்றி வருகின்றனர்.

### நாவலர் கலைக்கழகம்

இன்று வரையும் நாவலர் கலைக்கழகம் சிறப்பான நிகழ்ச்சிகளை எமது கிராமத்தில் மேடையேற்றி வருகின்றனர்.

### கண்ணன் கலைக்கழகம்

1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கழகமானது கற்சேனையிலும் வேறு கிராமங்களிலும் சிறப்பான நிகழ்ச்சிகளைச் செய்து வருகின்றனர்.

### வைரவா கலைக்கழகம்

2014ஆம் ஆண்டு வைரவா கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு நிகழ்ச்சிகளை மேடையேற்றி வருகின்ற னர். இவர்கள் நியுவெல்டன் என்றும், திறிஸ்ரார் என்ற பெயரிலும் சில வருடங்கள் நிகழ்ச்சியினை மேடையேற்றியுள்ளனர்.

இந்தக் கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் 50 மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு நடிப்புடன் சமூக சேவைகளை ஆற்றிவருகின்றன. அத்தகைய சேவைகள் தனித்தனியே ஆராயப்பட வேண்டும். தகவல்களுக்காக மட்டுமே இப் புத்தகத்தில் கலைக்கழகங்கள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

### பாடசாலை

கலை நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி வைப்பதில் பாடசாலை பிரதான பங்கு வகிக்கின்றது. அதிபர், ஆசிரியர்களின் வழி காட்டலின் கீழ் மாணவர்கள் நிகழ்வுகளைச் செய்து வருகின்றனர். வருடா வருடம் ஆலயத்தைச் சிறப்பிப்பதற்காக கலை நிகழ்வுகள் மேடையேற்றப்படுகின்றன. நீண்ட காலமாக ஆலயதத்திற்கும் பாடசாலைக்கும் இடையே தொடர்பு வலுப்பெற்றுள்ளது. வெள்ளிக்கிழமை தோறும் மாணவர்கள் ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டு சிவபுராணம் பாடி, அவர்கள் கொண்டு வரும் பூசைப் பொருட்களை வைத்து பூசை கண்டு செல்வர். இப் பூசை காலை வேளையில் இடம்பெறும்.

### மத்தள ஆசிரியர்கள்

திரு.மா.கதிர்காமத்தம்பி (கதிர்காமப்போடி)

திரு.சி.கிருஷ்ணபிள்ளை
திரு.க.விஸ்வலிங்கம்
திரு.மா.தம்பிராசா
திரு.ந.பரமானந்தம்

### அண்ணாவியார்கள்

திரு.பாலகர் சின்னத்தம்பி
திரு.கா.சின்னக்குட்டி

# விளையாட்டுக் கழகம்

விளையாட்டு ஒரு மனிதனைப் பூரணத்துவம் உடையவனாக மாற்றுகின்றது. ஆரம்பத்தில் மரபு வழிசார் விளையாட்டுக்கள் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றன. இத்தகைய விளையாட்டுக்கள் மரபு ரீதியாக, அம்பிலாந்துறையில் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பின்பற்றப்பட்டு வந்தன. அந்த விளையாட்டுக்களை காலை, மாலை, இரவு நேரங்களில் குறிப்பாக நிலாக் காலங்களில் விளையாடுவர். இத்தகைய விளையாட்டுக்களை இளைஞர்கள் விளையாடுவதனால் அவர்கள் சுறுசுறுப்பாக இருந்ததோடு, நோய் நொடியில்லாமலும் வாழ்ந்து வந்ததோடு, குரோத மனப் பாங்கையும் இல்லாமல் செய்தன. கிராமிய விளையாட்டுக்கள் காலப்போக்கில் மெல்லமெல்ல செயலிழக்கத் தொடங்க தேசிய விளையாட்டுக்கள் பிரபல்யம் பெறத தொடங்கின.

## கதிரவன் விளையாட்டுக் கழகம்

கதிரவன் விளையாட்டுக்கழகம் 1970 ஆம் ஆண்டு இ.அரசரெத்தினம், பெ.மகேந்திரன் ஆகியோரின் முயற்சியினால் ஆரம்பமானது. விளையாட்டு கழகத்தின் ஆரம்பகாலத் தலைவராக பெ.மகேந்திரன் அவர்களும், செயலாளராக பா.ஸ்ரீஸ்கந்தசெயா, அவர்களும், அவரைத் தொடர்ந்து பா. அரியநேத்திரன் அவர்களும் நீண்ட காலம் பதவி வகித்துள்ளனர். கதிரவன் விளையாட்டுக் கழக ஆவணங் களின்படி ஸ்தாபகராக இ.அரசரெத்தினம் அவர்களைக்கொள்வது வழக்கமாயிற்று. ஆரம்பகால கரப்பந்துக் குழுவின் தலைவராக இ.அரசரெத்தினம் செயற்பட்டுள்ளார். விளையாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒருவர். கழகத்தின் வளர்ச்சிக்காக பலவழிகளிலும் உதவியவர். விளையாட்டுகழகம் ஆரம்பிக்க வேண்டும் என்ற தீர்மானம் பாக்கியசெல்வன் விதானையார் வீட்டில் வைத்தே எடுக்கப்பட்டிருக்கின்றது. இவ் வீட்டிலேயேவிளையாட்டுக் களுக்கான பயிற்சிகள்கூட வழங்கப்பட்டிருக்கின்றன. கதிரவன் விளையாட்டுக் கழகத்தினர் 1981ஆம் ஆண்டு வரையும் வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவில் விளையாடியுள்ளனர்.

1970,1971,1972ஆம் ஆண்டுகளில் பிரதேச மட்டத்தில் முதலிடத்தை கதிரவன் விளையாட்டுக் கழகம் தக்கவைத்துள்ளது. ஆரம்பத்தில் பழுகாமம், கோயில்போரதீவு, மண்டூர் கிராமங்களுடன் போட்டி இருந்தது. தலைவராக இருந்த மகேந்திரன் வீடு வீடாகச் சென்று வீரர்களை உற்சாகப்படுத்தி அவர்களை அழைத்துச் செல்வார். வீரர்களை விளையாட்டின் பால் திசைதிருப்பிய இவருடைய பங்களிப்பு மறக்கமுடியாது.

1981ஆம் ஆண்டு முதல் எமது பிரதேச செயலகத்தில் பிரதேச விளையாட்டுக்கள் முதன்முதலாக அரம்பிக்கப்பட்டது. இந்த ஆண்டில்தான் பிரதேச செயலகமும் புதிதாக ஆரம்பிக்கப் பட்டது. அன்று தொடக்கம் இன்று வரையும் கதிரவன் விளை யாட்டக்கழகம் பிரதேச மட்டத்தில் தனது முதல் ஸ்தானம் நிலையினைத் தக்கவைத்துக் கொண்டுவருகின்றது.

கதிரவன் விளையாட்டுக் கழகத்தில் வே.குஞ்சிலயாப்போடி, வேதநாயகம், க.வேதாரணியம், வே.சிவஞானம், வீ.கோபாலப் பிள்ளை, சி.தவராசா, இராசேஸ்வரி, அமராபதி, க. கிருபைராசா போன்றோர் ஆரம்ப சம்பியன்களாக வலம் வந்தனர். நா.சங்கரப்பிள்ளை, க.மகேஸ்வரன் என்போரின் பணி அளப்பரியது.

வெல்லாவெளிப் பிரதேச செயலக மட்டத்தில் விளையாடும் போது ஏற்பட்ட மண்டூர் பொலிஸ் பிரச்சினை, போரதீவுச் சண்டை, எமது பிரதேசத்தில் அரசடித்தீவுப் பிரச்சனை, இவையெல்லாம் விளையாட்டில் கதிரவன் விளையாட்டுக் கழகம் உயர் நிலையில் இருந்தபோது ஏற்பட்டதாகும். இது ஒரு வகையான ஒடுக்கு முயற்சியாக இருந்தபோதும் அவற்றுக்கெல்லாம் கதிரவன் விளையாட்டுக்கழகம் சுமுகமாக முகங்கொடுத்தது.

கரப்பந்து விளையாட்டு அம்பிலாந்துறைக் கிராம மண்ணோடும் மக்களோடும் ஒன்றிப்போயுள்ளது. விளையாட்டுக் கழகம் தொடங்கிய காலமிருந்து அம்பிலாந்துறை இளைஞர்களில் தேசிய விளையாட்டாகச் சிறப்புப் பெற்றுள்ளது. இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் விளையாட்டு பிரபல்யமடைந்துள்ளன.

ஆரம்ப காலங்களில் ச.ஆலம்பிள்ளை, ம.கிருபைராசா, கா.பூபாலப்பிள்ளை இ.அரசரெத்தினம்,பெ.மகேந்திரன், சா.வேலாப்போடி (தங்கவேல்), சௌந்தரராசா, க.சுந்தரலிங்கம், வீ.பாக்கியராசா, வீ.தங்கப்பாக்கியம், ச.முத்தையா, க.பேரின்பராசா, சி.தவராசா, செ.பாலசுந்தரம், வே.யோகேந்திரராசா, வே.சிவஞானம், க.குஞ்சிலயாப்போடி, போன்றவர்கள் கரப்பந்து விளையாட்டில் சிறப்பாக விளையாடியுள்ளார்கள்.

1978ஆம் ஆண்டு அகில இலங்கை மட்டத்திலான மாபெரும் கரப்பந்துச் சமர் அம்பிலாந்துறையில் இடம் பெற்றது. இலங்கையின் பல மாவட்டங்களில் இருந்து கரப்பந்து அணியினர் அழைக்கப்பட்டு கரப்பந்துச் சமர் இடம்பெற்றது. நான்கு பேர்கொண்ட அணி இதில் விளையாடியது. இவ்விளையாட்டு "ஓவர்கேம்" அடிப்படையிலானது. மூதூர் ஏறாவூர் அணியினருக்கிடையே இறுதிச் சமர் இடம்பெற்று மூதூர் அணியினர் வெற்றி பெற்றனர். இந்த சமருக்கு பிரதம விருந்தினராக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பூ.கணேசலிங்கம் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். அந்தக் கரப்பந்து அணியில் சௌந்தரராசா, க.சுந்தரலிங்கம், வீ.தங்கவேல், க.பேரின்பராசா, இ.அரசரெத்தினம், சி.தவராசா போன்றவர்கள் அம்பிலாந்துறை சார்பாக விளையாடினர்.

அம்பிலாந்துறையிலிருந்து மாவட்ட மட்டப் போட்டிக்கு பெண்கள் அணியினரும் செல்லலாயினர். 1992ஆம் ஆண்டு கால ப்பகுதியில் இந்த அணியினர் சென்றிருக்கின்றனர். இன்று மாகாணம், அகில இலங்கை மட்டத்தில் போட்டியிடக்கூடிய வகையில் பெண்கள் அணியினர் வலுப்பெற்றிருக்கின்றனர். கதிரவன் விளையாட்டுக் கழகம் கரப்பந்து விளையாட்டில் இன்று வரையும் பல வெற்றி சின்னங்களை மண்டூர், குறுமன்வெளி, களுவாஞ்சிக்குடி என்று பல இடங்களில் இருந்து விளையாடிப் பெற்றுவருகின்றனர். அதற்கான கரப்பந்து அணியினர் இன்றும் தயார் நிலையில் உள்ளனர். எல்லே விளையாட்டும் எமது கிராமத்தில் பெருமை பேசும் விளையாட்டாகும். பாடசாலை அணியினரும் கதிரவன் அணியனரும் அகில இலங்கை மட்டம் வரை சென்றுள்ளனர். கதிரவன் அணியினர் இறுதியாக 2010ஆம் ஆண்டும் அகில

இலங்கை மட்டத்தில் பங்கு பற்றியுளள்ளனர். ஆண்கள் அணியினர் பல தடவைகள் மாகாண மட்டத்தில் பங்கு பற்றியுள்ளனர். கால்பந்து, கபடி, வலைப்பந்து போன்ற நிகழ்ச்சிகளிலும் மாகாண மட்டம் வரை வீர, வீராங்கனைகள் பங்கு பற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கதிரவன் வீர, வீராங்கனைகள் தனி விளையாட்டுக்களிலும் மாவட்ட மட்டம் வரை சென்றுள்ளனர். குஞ்சிலயாப்போடி சங்கரப்பிள்ளை ஆகியோர் சிறந்த மரதன் ஓட்ட வீரர்கள். இவர்களை சிறப்பாக சங்கர்கணேஸ் என்றுதான் அழைப்பார்களாம். வே.யோகேந்தின், வே.சிவஞானம், வீ.கோபாலபிள்ளை, சா.வேதநாயகம், போன்ற வீரர்கள் அன்று முதல் தர வீரர்களான வலம் வந்தனர்.

அமராபதி, த.புஸ்பராணி இராசேஸ்வரி, ஆ.கோமளா, அ.விஜயகுமாரி (சிப்பி) அ.உதயகுமாரி (டப்பி) எனும் பெயருடைய அக்கா, தங்கையும் சிறந்த வீராங்கனைகளே. துவிச்சக்கர வண்டி ஓட்டத்தில் சி.சிவக்கொழுந்து, வே.நகுலேஸ்வரி, சி.மங்கையங்கரசி போன்ற வீராங்கனைகளும் முதல் தரமானவர்களாகவே வலம் வந்தனர். இவ்வாறாக நாம் பலரை முன்னிலைப்படுத்தலாம். இன்று எமது கிராமத்தில் பல வீர, வீராங்கனைகள் விளையாட்டில் சிறப்பாகப் பிரகாசிக்கின்றனர்.

பெ.மகேந்திரன், இ.அரசரெத்தினம், க.மாசிலாமணி, க. மகே ஸ்வரன், மு.குணரெத்தினம், மா.ஜீவரெத்தனம், செ.புஸ்பராசா,க.லோகேந் திரன், கு.நமசிவாயம், தலைவர்களாவும் பா.ஸ்ரீஸ்கந்தசெயா பா.அரியநேந்திரன், க.பேரின்பராசா, கு.வீரசிங்கம், சு.கேதீஸ்வரன் ஏ.கிருஷ்ணானந்தமூர்த்தி, தா.யோகேஸ்வரன், மு.தயாநிதி, க.சிவஞானசெல்வம், சு.ஞானக்குமார், சு.கோபிநாத் ஆகியோர் செயலாளர்களாகவும் செயற்பட்டுள்ளனர். 2003ஆம் ஆண்டுக்குப் பின்னர் கு.நமசிவாயம், அ.சிவதேனன், ஆகியோர் நிருவாகப் பொறுப்பில் உள்ளனர். ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும், முடிவிலும் கதிரவனின் வருடாந்தக் கூட்டம் இடம் பெற்று வந்தது. கூட்டம் போடுவதற்கான விதி முறையும் உண்டு.

விளையாட்டைப் பொறுத்தவரை பலருடைய முயற்சிகள் துணையாக இருந்தன. ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரையும் கழகத்திற்காகவே செயலாற்றி வருபவர்களும் கழகத்தினை நேசிப்பவர்களும் அதிகம். 1992ஆம் ஆண்டு காலத்தில் கழகங்களுக் கிடையிலான கரப்பந்து சமரும், எல்லேயும் இடம்பெற்றது. வீரர்களுக்கான பயிற்சி, அவர்களை முன்கொண்டு செல்கின்றதிறன், எதிர்காலவியல் என்ற பல்வேறு கோணங்களில் பலர் சிந்தித்துச் செயற்படுகின்றனர்.

கதிரவன் விளையாட்டுக் கழகத்தின் சாதனைகள் எண்ணில் அடங்காதவை. அவற்றினை அந்தந்தக் காலத்தில் இருந்த நிருவாகத்தினரும் பிறரும் மேற்கொண்டுள்ளனர். இந்தக் கழகத்திற் கென்று பல மட்டங்களில் தனியான, தனியாத இடமுண்டு. அதனை யாரும் குறைத்து மதிப்பிடமுடியாது. கதிரவன் விளையாட்டுக் கழகத்திற்கு எதிரான சதிகள் உள்ளூரிலே ஏற்பட்டும் உள்ளன. சிலர் வேண்டுமென்று அதிருப்தியாளர்களாக இருந்தனர், சிலர் கதிரவனுக்கு எதிராக செயற்பட்டனர், சிலர் காட்டியும் கொடுத்தனர். அத்தகைய செயற்பாடு அவ்வப்போது தொடர்ந்தாலும் கதிரவன் கதிரவனாகவே சாதனை படைத்து வருகின்றது, சாதனையில் மாற்றமில்லை.

## விளையாட்டு மைதானம்

ஆரம்ப காலங்களில் விளையாட்டு மைதானம் இருக்கவில்லை பல பொது இடங்களில்தான் விளையாடி வந்தோம். வயல் நிலங்கள், ஆலய முன்றல், உப்புக் கரைச்சைவெளி என்று சில இடங்களைக் குறிப்பிடலாம். பின்னர் முத்திலிங்கப்பிள்ளையார் ஆலயத்தின் மேற்குப் புறமாக உள்ள விளையாட்டு மைதானம் அமைக்கப் பட்டது. அதில் சில காலம் விளையாட்டு இடம்பெற்றபோதும் பொருத்தமான இடத்தில் அமையாததனால் அங்கு விளையாடு வதனைத் தவிர்த்துக் கொண்டனர். மீண்டும் வயல் நிலங்கள், ஆலய முன்றல், உப்புக்கரைச்சை வெளி என்றுதான் விளையாட்டுக்கள் இடம்பெற்றன. இதன் பின்னர்தான் கதிரவன் விளையாட்டுக்

கழகத்தின் முயற்சியினால் செம்பாப்போடியார் குடும்பத்திலிருந்து சோதயன்குளக் காணி விலைக்கு வாங்கப்பட்டது.

கதிரவன் விளையாட்டுக் கழகத்தினர் பாடசாலைக்கு அண்மையில் விளையாட்டு மைதானம் அமையவேண்டும் என்பதில் கவனம் செலுத்தினர். பாடசாலை மாணவர்கள் வேறு கதிரவன் விளையாட்டுக்கழகம் வேறு அல்ல. ஒன்றின் வெற்றி ஒன்றிலே தங்கியுள்ளது என்பதனை உணர்ந்துகொண்ட கதிரவன் விளையாட்டுக் கழகம் தங்களுடைய பெயரிலிருந்த மைதான உறுத்தியினை பாடசாலைக்குக் கையளித்தனர். கையளிக்கும் போது "கதிரவன் விளையாட்டுக் கழகம் அனுமதியின்றி பாடசாலை மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் விளையாடுவோம் என்றும், வேறு கழகங்களோ? விளையாட்டினை வைக்க விரும்புகின்ற பொது அமைப்புக்களோ? கதிரவன் விளையாட்டுக் கழகத்தின் அனுமதியினைப் பெற வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டு கையளிக்கப்பட்டது". இந்தப் பரிந்துரை பாடசாலை சம்பவத் திரட்டிலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கடிதத் தலைப்பிலும் எழுதப்பட்டு, அதிபர் அவர்களின் கையொப்பமும் பெறப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டு மைதானம் 21.08.2003ஆம் ஆண்டு கு.நமசிவாயம் கதிரவன் விளையாட்டுக் கழகத் தலைவர் அவர்களின் தலைமையின் கீழ், மறைந்த கதிரவன் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் இ.அரசரெத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக சி.அலோசியஸ் கலைமகள் மகா வித்தியாலய பாடசாலை அதிபர் அவர்களுக்குக் கையளிக்கப்பட்டது.

## இளைஞர் கழகம்

இளைஞர் கழகங்களின் தோற்றம் பெரும் எழுச்சியைத் தந்தது. இளைஞர்களிடையே காணப்படும் பல்வேறு திறமைகளை வெளிக்கொணர்வதற்காக மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் கிராமங்கள் தோறும் இளைஞர் கழகங்களை அமைத்தன. அம்பிலாந்துறை மத்தியில் பாரதி இளைஞர் கழகமும், அம்பிலாந்துறை மேற்கில் காந்தி இளைஞர் கழகமும், அம்பிலாந்துறை வடக்கில் விவேகானந்தா இளைஞர் கழகமும் கற்சேனையில் தாமரை இளைஞர் கழகமும் அமைக்கப்பட்டன. 13 தொடக்கம் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு பல நிகழ்ச்சிகளை இளைஞர் கழகம் ஏற்படுத்தியிருந்தது. அவற்றுள் விளையாட்டு, பேச்சு, பொது அறிவு, நாடகம். கவிதை, கட்டுரை, எழுத்து என்று பலவற்றைக் கூறலாம்.

1997 ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் கரப்பந்துப் போட்டியில் எமது இளைஞர்கள் முதலாம் இடத்தைப் பெற்று பெரும் சாதனையினை நிலை நாட்டினர். சுதானந்தம், நவசிவாயம், சுரேந்திரன், சிவஞானசெல்வம், குவேந்திராசா, புஸ்பராசா (கடுக்காமுனை) ஆகியோர் விளையாடினார்கள். இந்தச் சான்றிதழினைக் கொண்டு அம்பிலாந்துறையிலுள்ள இளைஞர்கள் மட்டுமல்ல வேறு இளைஞர் கழகத்தினச் சேர்ந்தவர்களும் தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஊடாக நியமனம் பெற்றனர்.

1997 ஆம், 2000 ஆம் ஆண்டுகளில் பொது அறிவுப் போட்டியில் அகில இலங்கை மட்டம் வரை எமது இளைஞர்கள் சென்றுள்ளனர். இவ்வணியில் மு.தயாநிதி, செ.புஸ்பராசா, சசிகரன் (பண்டாரியாவெளி), க.விவேகானந்தம் ஆகியோர் இடம் பெற்றனர். 1997 ஆம் ஆண்டு மு.தயாநிதி மாகாண மட்டத்தில் பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்று அகில இலங்கை வரை சென்றார். இவருடைய திறமைகளைப் பாராட்டி மாவட்ட இளைஞர் சம்மேளனம் 1997 ஆம்

ஆண்டு சிறந்த இளைஞர்களுக்கான விருதையும், 2012ஆம் ஆண்டு சிறந்த இளைஞர்கழக முன்னோடிக்கான விருதினையும் அளித்தது.

பெண்கள் அணியினர் கரப்பந்து போட்டியில் தொடர்ந்து பல ஆண்டுகள் மாவட்ட மட்டம்வரை சென்றனர். பலர் தனி விளையாட்டுக்களில் மாவட்ட மட்டத்தில் நிலைகளைத் தக்கவைத்துள்ளனர். யூகராணி முப்பாய்ச்சலில் முதலிடம் பெற்றார். ஆசிரியர்களாக இருக்கும் கு.தவேந்தி, பு.ஈஸ்ணா என்போர் கரப்பந்துப் போட்டியில் மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்றமையால் கிடைத்த சான்றிதழினால் கல்வியல் கல்லூரிக்குத் தெரிவாகி ஆசிரியர் நியமனம் பெற்றனர். ஆண்கள் அணியினர் எல்லே, கால்பந்து, கபடி, போன்ற நிகழ்ச்சிகளில் தொடர்ந்து மாவட்ட மட்டத்தில் பங்குகொள்ளும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அம்பிலாந்துறை இளைஞர்கள் யாவரும் பாரதி இளைஞர் கழகம் சார்பாக விளையாடி வருவது இளைஞர்களிடையே ஒற்றுமையையும் விடாமுயற்சியையும் வெளிக்காட்டுகின்றது.

சி.ஐங்கரமூர்த்தி மாவட்ட இளைஞர் சம்மேளனத்தில் உப தலைவராக இருந்தார். கு.சசிக்காந்தன் பிரதேச இளைஞர் சம்மேளனத்து தலைவராக இருந்து 2010ஆம் ஆண்டு இளைஞர் பாராளுமன்றத்துக்கு பிரதேச மட்டத்தில் தேர்தல் மூலம் தெரிவானார். இவரே மாவட்ட மட்டத்தில் அதிக வாக்ககளைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருடன் போட்டியிட்ட கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த இளைஞர்இரண்டாம் இடத்தினைப் பெற்றார். சுதானந்தம் உயரம் பாய்தலில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்தார். இச் சாதனை இவரை ஆசிரியர் பணிக்கு அமர்த்தியது. இக்கட்டுரையாசிரியர் வேக நடைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதே.

1995ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையுள்ள காலம் அம்பிலாந்துறை இளைஞர் கழகத்தின் பொற்காலம் எனலாம். இக்காலத்தில் இக்கட்டுரை ஆசிரியர் தலைவராகவும், சிவஞான செல்வம் செயலாளராகவும் இருந்து செயற்பட்டனர். இக்காலப்

பகுதியில் முதன் முதலாக இளைஞர் நூல் நிலையம் அமைக்கும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு செட்டிப்பாளையம் இளைஞர் கழகத்திற்குமே அனுமதி கிடைத்தது. இப் புத்தகத்தினைப் பெறுவதற்காக மஹரகமவில் உள்ள இளைஞர் கழகத்தினுடைய தலைமைக் காரியாலயத்திற்கு சென்றோம். புத்தகத்தை பெற்று வரும்போது, சந்தேகத்தின் பெயரில் பிடிபட்டு நானும், செட்டிப்பாளய சுந்தரலிங்கமும் 24 மணித்தியாலம் கொழும்பிலுள்ள சிறைச்சாலையில் இருந்தோம். எங்களுடன் வந்த லத்திப் (Y.S.O) ஜனாதிபதியின் முக்கிய உறுப்பினர்களுடன் கதைத்து விடுதலை செய்தார். இந்த நிகழ்வு 1996ஆம் ஆண்டு இடம் பெற்றது. இது வாழ்க்கையிலே மறக்கமுடியாத சம்பவம்.

இளைஞர் கழக வாசிகசாலையினை முதலில் சிறிஸ்கந்தசெயா அவர்களின் வீட்டில் ஆரம்பித்தோம், பின்னர் அருணாசலம் அவர்களின் வீட்டில் உள்ள கடையில் சில காலம் செயற்பட்டது. பின்னர் கருணாகரன் வீட்டுக்கு மாற்றப்பட்டது. அந்தக் காலத்தில் சிவஞானசெல்வம் தலைவராக இருந்தார். இன்றைய நிலையில் நமது இளைஞர் கழகத்தின் செயற்பாடு வினைத்திறனுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. இளைஞர் சேவை மன்றத்தின் பின்னால் சென்று பல வெற்றிகளை நமது இளைஞர்கள் பெற்றிருக்கின்றனர். இன்னும் பெறமுடியும். அதற்காக எமது இளைஞர்கள் முன்வர வேண்டும்.

குறிப்பாகச் சொல்லப்போனால் எமது பிரதேசத்தில் சிறப்பாகச் செயற்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த நடேசகுமார் (Y.S.O) அவர்கள் அன்றைய கால கட்டத்தில் அகில இலங்கை மட்டத்தில் மாவட்டத்திலிருந்து சிறந்த உத்தியோகஸ்தராகத் தெரிவு செய்வதற்கு அவருக்கு பல புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தது நமது இளைஞர் கழகமே. இதற்காக அவருக்கு பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கதே. அவர் இதனை இன்றும் நன்றியோடு எமது இளைஞர் கழகத்தினைப் பாராட்டுவார்.

# கிராமிய விளையாட்டுக்கள்

## தட்டுக்கோடு விளையாடல் (கிளித்தட்டு)

தட்டுக்கோடு என்ற சொல் கிளித்தட்டு என்று இன்று அழைக்கப்படுகின்றது. கிட்டத்தட்ட 20 அடி அகலத்திலும் 100 அடி நிளத்திலும் தரையில் மண்வெட்டியால் கோடாக ஒரு மண் வெட்டி அகலத்தில் வெட்டுவார்கள். பின்னர் இரு அணியாகப் பிரிந்து கொள்வார்கள். முன்கோட்டில் நிற்பதில்லை. ஒரு சாரார் மறிப்பார்கள். மறுசாரார் பாய்வார்கள். பாயும்போது கோட்டில் நின்று மறிப்பார்கள். மறிப்பவரை ஏமாற்றிச் செல்ல வேண்டும். பின்னர் பழங்கூறி வருவார்.

## பிள்ளையார் கட்டை விளையாடல்

இரண்டு குழக்களாகப் பிரிவர். சிறட்டையினை செங்கல் ஒன்றை வைத்து அதற்குமேல் வைத்து அடுக்குவார்கள். பின்னர் குறிப்பிட்ட துரத்தை இருபக்கமம் சரிசமமாகப் பிரித்துக் கொள்வார்கள். பின்னர் அத் தூரத்தில் நின்று இறப்பர் பந்தால் அந்த சிறட்டைக்கு எறிவார்கள். யார் முதலில் எறிந்து வீழ்த்துகின்றார்களோ? அவர்கள் மற்ற அணியினருக்கு சிறட்டைளை அடுக்கும் மட்டும் அவர்களுக்குப் பந்தால் எறிவார்கள்.

## வாரடித்து விளையாடல்

இரண்டு அணியாகப் பிரிந்து குறிப்பிட்ட துரத்தில் நிற்பர். ஒரு பக்கத்தில் இருந்து ஒருவரோ இருவரோ வருவர். மறுபக்கத்தில் இருந்து மற்றவர் செல்வார். அவர் முன்பு வந்தவரைத் துரத்தியடிக்க முனைவார், அவர் ஏமாற்றி ஓடுவார். இவர் அடிக்க முனைவார். இவ்வாறாக நிகழும். அடிபட்டவரை தங்கள் பக்கம் வைத்துக் கொள்வார். அடித்தவர் எதிர்ப்பக்கம் சென்று "வார்" கொடுக்க வேண்டும். அதாவது, இருவரும் கையை நீட்டிக்கொள்வார்கள், பின்னர் கைகொடுத்தவர் ஒடுவதற்கு முயற்சிப்பார், அவரை அடிக்க வார்கொடுத்தவர் முயற்சிப்பார். அடிபட்டவரை மீட்பதற்காக அவர்கள் முயற்சிப்பர். அதனை விடாமல் தடுப்பார்கள். ஒரு பக்கத்தில் நிற்கும் எல்லோரு அடிபட்டால் மறுபக்கம் மாறுவார்கள். இது வெற்றியாகக் கணிக்கப்படும்.

## கள்ளன் பொலிஸ் விளையாடல்

சிலர் கல்லர்களாகவும் சிலர் பொலிசாகவும் தங்களைப் பாவனை செய்து கொள்வார்கள். கள்ளர்கள் ஒளிப்பார்கள். பொலிஸ தேடி கள்ளர்களைக் கண்டு பிடித்து தண்டணை வழங்குவார்கள். போலிஸ் கள்ளர்களைக் கண்டுபிடிக்க நீண்ட நேரம் செல்லும். கள்வர்களாகப் பாவனை செய்வோர் பல இடங்களில் ஒளிப்பார்கள். பொலிஸ் தேடிக் களைத்துப்போவார். பொலிசை ஒரு நியதியின் அடிப்படையிலேயே தெரிவு செய்வார்.

## கிள்ளிக் கிள்ளிப் பிராண்டி விளையாடல்

சில பிள்ளைகள் வளைத்து இருப்பார்கள் சம்மாளத்திலிருந்து கையைத் தரையிலே வைத்துக்கொண்டு ஒருவர் மற்றவர்களுடைய கையகளில் கிள்ளி வருவார். அப்போது கீழ்வரும் பாடலை அவர் பாடுவார்.

"கிள்ளிக் கிள்ளிப் பிராண்டி கீயாமாயாப் பிராண்டி
கொப்பன் பேரென்ன? முருங்கைப்பூ (சம்பந்தப்பட்டவர்)
முருக்கு முருக்கு தடித்தவளே முன்னங்கை நீண்டவளே
பாதி விளாங்காய் திண்டவளே பாவட்டங்கையை மடக்கு".

யாருடைய கையில் பாடல் முடிவடைகின்றதோ அவர் அந்த விளையாட்டிலிருந்து விலகுவார். பின்னர் மற்றவரைக் விலக்குவதற்கு பாடல் தொடரும். இவ்வாறாக இவ்விளையாட்டு இடம்பெறும்.

## உத்துக்கம்பு விளையாட்டு (கிட்டிப்புள்ளு)

ஆரம்பத்தில் கம்பினால்தான் இவ் வியைாட்டு இடம்பெற்றது. கம்பை வைத்து உத்துவார்கள். பின்னர் இறப்பர் பந்தை வைத்து உத்தினார்கள். உத்தியதன் பின்னர் கம்பையோ அல்லது பந்தையோ வைத்து அளவெடுத்து அடிப்பார்கள். அளவுக்கு ஏற்ப கிட்டியை அடிப்பர்கள். கிட்டி அடித்து நீண்ட தூரம் சென்றதும் அங்கிருந்து மூச்சு விடாமல் ஊதி வரவேண்டும். அல்லது உத்துக்கம்புப் பாடல் பாடிவர வேண்டும்.

### ஊசி வைத்து விளையாடல் (கைக்குப் பின்னால்)

இரண்ட குழுவாகப் பிரிந்து கொண்ட பின்னர் சுமார் பத்து மீட்டர் தூரத்தில் நின்ற கொள்வார்கள். ஒரு அணினர் முதலில் கைகளைப் பின்னால் வைத்துக் கொள்வார்கள். அதில் ஊசியை வைப்பதற் கென்று ஒருவர் இருப்பார் அவர் ஊசினை வைத்த பின்னர் யாரிடம் ஊசி உண்டு என்று கேட்பார். எதிரணியில் உள்ளவர்கள் சரியாக மதித்துச் சொல்ல வேண்டும். பிழையாகச் சொன்னால் மீண்டும் அவ்வணியினரே ஊசை வைத்துக் கொள்வார்கள். சரியாகச் சொன்னல் ஊசி வைப்பது எதிரணிக்குச் சென்றுவிடும். பின்னர் எதிரணியினர் ஊசியை வைப்பார்கள். இவ்வாறாக மாறி மாறி விளையாட்டுத் தொடரும்.

### ஊசி ஒழித்து விளையாடல் (மணல் குவியல்)

இருவர் இருவராகச் சேர்ந்து கொள்வார்கள். மணலினைக் குவித்துக் கொள்வார்கள் மணல் கும்பம் நடுவில் இருக்கும் மணல் கும்பத்திற்கு எதிர் எதிராக இருப்பர். அதில் ஒருவர் ஊசினை மணலுக்குள் ஒழிப்பார் மற்றவர் அதனைச் சரியாகக் கண்டுகொள்ள வேண்டும். கண்டு கொள்ளாவிட்டால் தொடர்ந்து ஊசினை அவரே ஒழிபார். கண்டுகொண்டால் ஊசி வைப்பது மற்றவக்கு மாறிவிடும்.

### ஊஞ்சல் விளையாடல்

மரத்தில் அல்லது இரண்டு பெருமரக் கட்டைகளை நட்டு ஊஞ்சல் போடுவார்கள். ஊஞ்சலுக்காக கயிறு பாவிக்கப்படும். முன்னர் உள்ள காலங்களில் வைரமான காட்டுக் கொடிகள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது.

### ஓற்றைரெட்டை விளையாடல்

சோளன் விளைந்த காலத்தில் அதனை வறுத்தோ, அவித்தோ, சுட்டோ உதித்தி எடுப்பார்கள். பல பருப்புக்களைக் கைக்குள் பொத்திக்கொண்டு ஒற்றையா? ரெட்டையா என்று கேட்டு விளையாடுவார்கள். சரியாகச் சென்னால் கைக்குள் இருக்கும் சோளன் பருப்பினைக் கொடுக்க வேண்டும். பிழையாகச் சொன்னால் இவர் கொடுக்க வேண்டும்.

## ஓழித்து விளையாடல்

பல சிறுவர்கள் சேர்ந்து ஒழிப்பார்கள் அதனை ஒருவர் கண்டு பிடிப்பார். பின்னர் முதலில் யார் கண்டுபிடிக்கப் பட்டாரோ? அவர் பின்னர் கண்டு பிடிக்கவேண்டும் ஏனையோர் ஒழிப்பார்கள் இது சுழச்சி முறையில் இடம்பெறும். இன்று இதனைத் தூத்தி விளையாடுதல் என்று சொல்கின்றார்கள்.

## மட்டைப்பந்து விளையாடல்

இன்றைய எல்லே விளையாட்டுக்கு ஒப்பானது. மட்டைப்பந்தில் ஒருவர் out ஆனல் (பட்டுத்தார் என்று கூறுவார்கள்) அவரை ஒரு தடவையில் வளைத்து வந்து எழுப்பி விடுவார்கள். பின்னர் அவர் விளையாடுவார். இங்கு ஓடுகின்ற இடங்கள் முதலாம் கட்டை, இரண்டாம் கட்டை, மூன்றாம் கட்டையென பெயர் பெறும். அந்த விளையாட்டு இன்று எல்லே விளையாட்டாக விளையாடப் படுகின்றது.

## மாங்கொட்டை விளையாடல் (நொண்டியடித்தல்)

நீள் சதுரமாக கிட்டத்தட்ட 10 அடி வரையும் கோடு கீறி, பின்னர் அதனை 7 பெட்டியாகப் பிரிப்பார்கள். மாங்கொட்டையினை ஒரு பக்கம் போட்டு மறுபக்கம் ஒற்றைக்காலில் சுற்றி வருவார்கள். பின்னர் மறுபக்கம் போட்டு சுற்றிய பின்னர் புறங்காலில் மாங்கொட்டையினை வைத்து நொண்டுவார்கள். இது இரண்டு குழுக்களாக இடம்பெறும்.

## அலம்பல் ஏற்றி விளையாடல்

பனைமட்டையில் வண்டில் செய்து மூத்திரக் கஞ்சா மரத்தினைப் பிடுங்கி பனைமட்டையில் வைத்துக் கட்டி இழுத்துச் செல்வது. அதனை பொலிஸ் பிடிப்பது என்று விளையாடுதல்.

## கடைவைத்து விளையாடல்

கடையில் உள்ள சாமான்கள் மாதிரியான சாமான்களை வைத்து விளையாடல்.

## கண்பொத்தி விளையாடல்

ஒருவர் கண்ணைப் பொத்துவார் பக்கத்தில் நிற்பவர்களில் ஒருவர் அவரின் தலையில் குட்டுவார். பின்னர் கண் பொத்தியவர் குட்டியவர் யார்? என்று கேட்பார். அவர் ஒருவரைக் சொல்வார். சொன்னவர் சரியென்றால் அவருடைய கண் பொத்தப்படும். பிழையென்றால் மீண்டும் அவருடைய கண்ணையே பொத்தி குட்டுவார்கள். இவ்வாறே தொடர்ந்துகொண்டு செல்லும்.

## சாமி வைத்து விளையாடல்

இறைவனாகப் பாவனை செய்து கல்லில் சாமி வைத்து விளையாடுதல்.

## சங்கு வைத்து விளையாடல்

வட்டமாகப் பலர் இருந்து கை விரலை மடித்து கைக்குமேல் வைத்து அம்மா சங்கு, அப்பா சங்கு என்று முறைபல சொல்லி விளையாடு வார்கள்.

## சாண் - முழம் விளையாடல்

இதனைக் கல்லுக்கொத்தல் என்றும் அழைப்பதுண்டு. ஐந்து சிறிய கல்லினை எடுத்து உள்ளங்கையால் போட்டு புறங்கையால் பிடிப்பர். புறங்கையில் ஒரு கல் தங்குமாக இருந்தால் ஒற்றை (ஒரு விரலால் அளப்பது), இரு கல் தங்குமாக இருந்தால் கிளிப்பு (சாண்) மூன்று கல் தங்குமாக இருந்தால் வெளியேறுதல் (out) நான்கு கல் தங்குமாக இருந்தால் நாத்தை (நான்கு விரல்களையும் மடித்துவைத்து அளப்பது), ஐந்து கல்லும் தங்குமாக இருந்தால் ஒரு முழம். என்று அந்த விளையாட்டு அமையும். நான்கு பக்கமும் நான்குபேர் அமைந்திருந்து விளையாடுவர்.

## சுரக்காய் இழுத்து விளையாடல்

ஒருவர் ஒரு அசையாத கட்டையினைப் பிடித்திருப்பார். அவருடைய இடுப்பினை மற்றவர் பிடித்திருப்பார். இவ்வாறு ஒருவரையொருவர் பிடிப்பார்கள். ஒருவர் வந்து சுரக்காய் ஒன்று கேட்பார் அவருக்குப் பதில் சொல்வார்கள் ஒன்றை ஆய்ந்துகொண்டு செல்லும்படி.

அவரும் தட்டிப்பார்த்து இறுதியில் உள்ளவரை இழுப்பார். அவரும் கைநழுவாமல் பிடிப்பார் இழுவை தொடர்ந்து இடம்பெறும். இவ்வாறு ஒவ்வொன்றாக இழுப்பார்கள். இழுத்து முடிய விளையாட்டும் முடிவடையும். இந்த விளையாட்டு தொடர்ந்து இடம்பெறும்.

### சிரட்டையில் நடந்து விளையாடல்

இரண்டு சிரட்டைக்குத் துவாரம் இட்டு அதற்குள்ளால் கயிற்றினைப் போட்டு, கயிற்றுக்குள் விரல்களை நுளையவிட்டு சிரட்டைக்குமேல் ஏறி இரண்டு கைகளாலும் கயிற்றினைப் பிடித்து நடப்பார்கள்.

### நாயும் புலியும் விளையாடல்

இது 12 ஈர்க்குகளைக் கொண்டு விளையாடும் விளையாட்டு.

### ஆலாப்பற விளையாடல்

வளைத்திருந்து கைகளை விர்த்துவைத்து " ஆலாப்பற பற கொக்கு பறபற குஞ்சு பறபற" என்று விளையாடுவர்.

# சமூகசேவை நிறுவனங்கள்

## இந்து இளைஞர் மன்றம்

1980ஆம் ஆண்டு அம்பிலாந்துறை ஸ்ரீ சித்தி விநாயகர் முத்துமாரியம்மன் ஆலயத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமானது. தலைவராக பா.அரியநேந்திரன் அவர்களும் செயலாளராக வீ. கோபலப்பிள்ளை அவர்களும் பொருளாளராக மா. மாசிலாமணி அவர்களும் செயற்பட்டனர்.

இந்து இளைஞர் மன்றம் ஆரம்பத்தில் அம்பிலாந்துறை வடக்குக் கோயிலையும் நிருவகிப்பதற்காகவே பொதுவாக ஆரம்பிக்கப் பட்டது. இது இரண்டு கோயிலுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையை வெளிப்படுத்தி நின்றது. காலப்போக்கில் அம்பிலாந்துறை வடக்கில் உள்ளவர்கள் தனியாகச் செயற்படத் தொடங்கினார்கள்.

இந்து இளைஞர் மன்றமானது ஆலயத்தில் இடம்பெறும் ஆண்டு விழாவினைச் சிறப்பித்தல், தைப்பொங்கல் பூசையினைச் செய்தல், சமயப் போட்டிகளை, பரீட்சைகளை வைத்து பரிசில்கள் வழங்கல், அறநெறிப் பாடசாலையினை முன்னின்று நடாத்ததல், சமயப் பிரசங்கங்களைச் செய்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகளையும் இன்று வரையும் ஆற்றி வருகின்றது.

எலி வாகனம் 1983ஆம் ஆண்டு பிள்ளையார் கோயிலுக்கு இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் அன்பளிப்பு செய்யப்பட்டது. இக் கட்டுரையாசிரியர் முயற்சினால் மாணவர்களுக்கு சைவசமயப் பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதன் தொடர் இன்று வரையும் நீண்டு செல்கின்றது. 2010ஆம் ஆண்டு சு. கோபிநாத் தலைவராக இருந்த காலத்தில் இந்துகலாசார அமைச்சுடன் இணைந்து தைப்பொங்கல் விழா கொண்டாடப் பட்டது.

ஒவ்வொரு நிருவாகத்தினருடைய காலத்திலும் நிகழ்வுகள் சிறப்புப் பெற்றிருக்கின்றன. இதுவரை பா.அரியநேந்திரன், இ.தவராசா, க.லோகேந்திரன்,ச.தவசீலன்,மா.வதனரூபன், சு.கோபிநாத் அ.சிவதேனன் ஆகியோர் தலைவராக இருந்து செயற்பட்டனர். வீ.கோபாலப்பிள்ளை, சி.கணேசலிங்கம், மு.தயாநிதி, க.குணராசா, சீ.சரத்குமார் என்போர் செயலாளர்களாக செயற்பட்டுள்ளனர்.

## நற்பணி ஒன்றியம்

கணவனை இழந்த விதவைகளின் பொருளாதார விருத்திக்காக உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பின் தலைவராக பா.அரியநேந்திரன் அவர்களும், செயலாளராக சு.தேவராசா அவர்களும், பொருளாளராக மாக்ரட் மேரி அவர்களும் செயற்பட்டனர்.

விதவைகளுக்கு வட்டியில்லாமல் கடன் கொடுத்தல், நெல்லுக்குற்றி விற்பதற்காக தாச்சி போன்ற பாத்திரங்களை வழங்கினர். இந்த முயற்சி பெரிதும் பாதிக்கப்பட்வர்களுக்கு உதவியது. நற்பணி ஒன்றியம் பிளாஸ்டிக் கதிரைகளை வாங்கி அம்பிலாந்துறையில் இடம் பெறும் நன்மை தீமைகளுக்கு கொடுத்தனர். இதற்காக வாடகை மிகவும் குறையவே அறவிடப்பட்டது. இப் பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கதிரைகள் யாவும் காணாமல் போயுள்ளன.

அம்பிலாந்துறையில் கலைமகள் வித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த), தரம் 5 புலமைப்பாரிசில் பரீட்சைகள் சித்தியடைந்த மாணவர்களுக்காக பாராட்டு விழா வைக்கப்பட்டு பணப் பரிசில்களைக் கொடுத்து வந்தனர். இச்செயற்பாடு நற்பணி ஒன்றியம் இயங்காமல் இருக்கும் காலம் வரை நடைமுறையில் இருந்து வந்துள்ளது. 2007ம் ஆண்டு காலத்தில் இப் பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் காரணமாக தொடர்ந்து இச் செயற்பாட்டினை கொண்டு செல்வதற்கு முடியாமல் போயுள்ளன. சமூகசேவையின் ஒரு புதிய மாற்றமாக நற்பணி ஒன்றியம் செயற்பட்டு வந்தது.

## சமூகப்பணி ஒன்றியம்

2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இவ் ஒன்றியம் சமுதாயத்தில் ஆற்றிவரும் பணி இன்றைய சமூக அடுக்கமைப்புப் பொருளாதாரத்திற்கு ஏற்ற ஒன்றாகும். அம்பிலாந்துறைச் சமுதாயத்தில் இருந்து ஒவ்வொரு குடும்பத்திலுமிருந்து ரூபா 100 மேற்பட்ட பணத்தினை அறவிட்டு அதன் மூலம் கிடைக்கும் மொத்தப் பணத்தினைச் சேகரித்து வைத்துக்கொண்டு ஒரு மரண வீட்டுக்கு ரூபா 7500 வழங்கி உதவுகின்றனர். இந்த உதவு தொகை மரண வீட்டிற்கு அளவில் சிறியதாயினும் காலத்துக்குப் பெரியது.

இவ் ஒன்றியத்தின் தலைவராக க.கேசகப்போடி அவர்களும், செயலாளராக அ.கருணாகரன் அவர்களும், பொருளாளராக சா.விக்கினேஸ்வரன் அவர்களும் செயற்படுகின்றனர். ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்குமாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வருகின்றனர். இச் செயற்பாடு தொடர்ந்து நிலைக்குமாக இருந்தால் சமூகத்தவரின் நல்லாசிகளை நிச்சயம் பெறும்.

சமூகப்பணி ஒன்றியத்தின் மரண வீட்டில் இறந்தவரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டு அவர் கிராமத்துக்கு ஆற்றிய சேவையை இரங்கல் உரை மூலம் பாராட்டுவார்கள். வாழும்பொது வாழ்த்துவது மட்டுமன்றி இறுதி அடக்கத்திலும் ஒருவரை வாழ்த்தி அடக்கம் செய்யும் உயரிய பண்பு அம்பிலாந்துறைக் கிராம மக்களிடையே ஆழ் மனதில் பதிந்துள்ளது. இவ்வுயரிய பண்பு மக்களை நிச்சயம் உயர வைப்பதோடு உயிர் பிரிந்தவரின் ஆத்மாவையும் சாந்தியடையச் செய்யும்.

## பேரில்லா அமைப்பு

அம்பிலாந்துறையினைப் பொறுத்தவகையிலே பல அமைப்புக்கள் இருக்கின்றன. அவையெல்லாவற்றிற்கும் பெயரும் நிருவாக அமைப்புமுண்டு. ஆனால், பேரில்லாமல் சிறந்த சேவை செய்து வரும் அமைப்பு பேரில்லா அமைப்பென்று அடையாளப்படுத்தப் படுகின்றது. ஆரம்ப காலமுதற்கொண்டு இவர்கள் ஒன்றிணைந்தே செயற்பட்டு வருகின்றனர். ஆரம்பகால நண்பர்களாக சிலரே சேவை செய்தனர். பின்னர் பலர் இவர்களின் சேவையினைக் கருத்திற் கொண்டு இணைந்துகொண்டனர்.

இவர்களுடைய சேவை அளப்பரியது. பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயச் சூழலில் காணப்படும் பல வாகை மரங்களை 13.11.2005ஆம் திகதி நட்டார்கள், அம்பிலாந்துறையடியில் காணப்படும் வாகை மரத்தினையும், தாமரைப்பூ சந்தியில் காணப்படும் வாகை மரத்தினையும், அம்பிலாந்துறை மாரியம்மன் ஆலயத்தில் காணப்படும் வாகை, தென்னை மரங்களையும், நாகமுனை வைரவர் ஆலயத்தில் காணப்படும் ஆல மரத்தினையும், விளையாட்டு மைதானத்தில் காணப்படும் வாகை மரங்களையும், கற்சேனை பாடசாலை மைதானத்தில் காணப்படும் ஆலமரத்தினையும், அம்பிலாந்துறை உலகதர்சன கட்டடத்தில் காணப்படும் கினிசெப் மற்றும் வாகை மரத்தினையும், காணடிக் கோயில், கடுக்காமுனை காளிகோயிலில் காணப்படும் வாகை மரங்களையும், கொக்கட்டிச்சோலை கதிரொளி சிறுவர் இல்லத்தில் காணப்படும் வாகை மரங்களையும் நட்டார்கள். ஒவ்வொரு இடங்களிலும் பல மரங்கள் நடப்பட்டன. அவற்றுள் சிலதுதான் இன்று வரையும் நிழல் கொடுக்கின்றன. அத்தோடு தரம் 10, 11 மாணவர்களுக்கு மேலதிக கணித வகுப்பினையும், தரம் 5 மாணவர்களுக்கான வகுப்பினையும் அவர்களுடைய பரீட்சை கருதி நடாத்தி வருகின்றனர். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு ரூபா 1000 வங்கியில் இட்டுக் கொடுக்கின்றனர். இவ்வாறாக இவர்களுடைய பணி சிறப்பாகத் தொடர்கின்றது. சேவைக்கு பெயர் அவசியமில்லை என்பதற்கு இவர்களை முன்னுதாரணமாகக்கொள்வது சாலவும் சிறந்தது.

## உசாத்துணை நூல்கள்


1. ஆலய பரிபாலன சபை எழுத்து மூலத் தகவல்கள்
2. இந்து தர்மம் - (1993), மனோகரன். துரை (கட்டுரை ஆசிரியர்) "மலையகமும் முத்துமாரியம்மன் வழிபாடும்" இந்து மாணவர் சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம.
3. இராசநாயகம் செ. (1953), யாழ்ப்பாண சரித்திரம், யாழ்ப்பாணம்.
4. கணபதிப்பிள்ளை சி. (பதிப்பாசிரியர்) (1970) மகமாரி தேவி திவ்வியகரணி, அட்டப்பள்ளம்.
5. கந்தையா.வி.சீ (1953), மட்டக்களப்புத் தமிழகம், மட்டக்களப்பு.
6. மேலது, (1964) மட்டக்களப்புத் தமிழகம்.
7. கமலநாதன் சா.இ (2005) மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
8. குணராசா.க (2003) மகாவம்சம் இலங்கைச் சரித்திரம், கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
9. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய மலர் (1998)
10. சிவசண்முகம் .G (2000) மட்டக்களப்பு குகன்குல முக்குகர் வரலாறு, விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.
11. சுப்பிரமணியர் பால பத்தாசி - தந்துதவியர் மட்டக்களப்பு மாந்திரிகப் புகழ் வே.சின்னத்தம்பி (பூசாரியார்).
12. சுயம்பு (2012) மலர் 1, மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகம்.
13. செட்டிபாளையம் கண்ணகி அம்மன் வரலாறு (1994) தமிழ்க் கலைக் களஞ்சியம் - 02
14. தாந்தா மலைமாட்சி (2011) தாந்தாமலை ஆலய குடமுழுக்கு மலர்.

15. தங்கேஸ்வரி.க (2005) தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
16. மேலது, (1993) குளக்கோட்டன் தரிசனம், மட்டக்களப்பு.
17. தனபாக்கியம் கணபாலசிங்கம்(1993), மட்டக்களப்பு மான்மீயம் (ஓர் ஆராய்ச்சி)
18. நடராசா F.X.C (1980) மட்டக்களப்பு மக்களின் வளமும் வாழ்க்கையும், மட்டக்களப்பு இந்து வாலிபர் முன்னணி.
19 மேலது, (1998) மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை.
19. பத்மநாதன்.சி (2003) இலங்கையில் வன்னியர், குமரன் புத்தக இல்லம்.
20 பிரான்சிஸ்.எஸ் (1994) நூறு வருட மட்டுநகர் நினைவுகள், அன்பு வெளியீடு.
21. மகேஸ்வரலிங்கம்.க (2008) மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும், கொழும்பு தமிழ்ச் சங்கம்.
22. முத்தாரம் (2003) அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயம்.

## தகவல் வழங்கியோர்

| | | |
|---|---|---|
| 1. | மூ.தங்கராசா அம்பிலாந்துறை | வயது - 93 |
| 2. | வே.சின்னத்தம்பிப் பூசாரியார் அம்பிலாந்துறை | வயது - 90 |
| 3. | மா.கதிர்காமத்தம்பி அம்பிலாந்துறை | வயது - 89 |
| 4. | வே.சிவசுப்பிரமணியம் அம்பிலாந்துறை | வயது - 89 |
| 5. | வெ.கணபதி | வயது - 89 |
| 6. | அ.ஏகாம்பரம் அம்பிலாந்துறை | வயது - 82 |
| 7. | வீ.தம்பியன் அம்பிலாந்துறை | வயது - 81 |
| 8. | மூ.முருகேசு - அம்பிலாந்துறை | வயது - 79 |
| 9. | செ.கோவிந்தராசா அம்பிலாந்துறை | வயது - 72 |
| 10. | கா.பூபாலப்பிள்ளை அம்பிலாந்துறை | வயது - 70 |
| 11. | சி.பூபதிப்பிள்ளை அம்பிலாந்துறை | வயது - 69 |
| 12. | ஆ.அரசரெத்தினம் களுதாவளை | வயது - 69 |
| 13. | செ.அருளம்பலம் அம்பிலாந்துறை | வயது - 69 |
| 14. | க.பொன்னுத்துரை மாங்காடு | வயது - 68 |
| 15. | க.அரசரெத்தினம் அம்பிலாந்துறை | வயது - 65 |
| 16. | பா.தில்லையப்போடி கடுக்ககமுனை | வயது - 65 |
| 17. | சிவபாலன் பட்டிப்பளை | வயது - 65 |
| 18. | பா.ஸ்ரீஸ்கந்தசெயா அம்பிலாந்துறை | வயது - 62 |
| 19. | சு.புனிதமலர் | வயது - 62 |
| 20. | அருளானந்தம் பருத்திச்சேனை | வயது - 59 |
| 21. | பா.அரியநேத்திரன் அம்பிலாந்துறை | வயது - 58 |
| 22. | செ.தவலிங்கம் அம்பிலாந்துறை | வயது - 58 |
| 23. | இ.சாந்தலிங்கம் அம்பிலாந்துறை | வயது - 57 |
| 24. | அ. யோகேந்திரன் அம்பிலாந்துறை | வயது - 56 |
| 25. | க.குணசேகரம் மாங்காடு | வயது - 54 |
| 26. | சி.சரஸ்வதி அம்பிலாந்துறை | வயது - 53 |
| 27. | ஏ.கிருஷ்ணானந்தமூர்த்தி | வயது - 52 |
| 28. | பா.இராசரெத்தினம் அம்பிலாந்துறை | வயது - 50 |
| 29. | கோ.பிரமசாயிசிவம் ஆரையம்பதி | வயது - 39 |
| 30. | திரு.மா.ஜீவரெத்தினம் | |

# பின்னிணைப்பு

## சமூக செயற்பாட்டாளர்கள்

### போடிகள் (நியமனம்)

1. குறுநில மன்னன் அறுமக்குட்டிப்போடி (ஒல்லாந்தர் ஆட்சிக்காலம்)
2. குறுநில மன்னன் கந்தப்போடி (ஒல்லாந்தர் ஆட்சிக் காலம்)

### வன்னியர்கள்

1. உயர்திரு.C.D கதிராமப்போடி வன்னியனார்
2. உயர்திரு.க.குஞ்சிலயாப்போடி வன்னியனார்
3. உயர்திரு.கு.கதிராமப்போடி வன்னியனார்
4. உயர்திரு.மதனம் சின்னத்தம்பி வன்னியனார்
5. உயர்திரு.சி.கதிரமலைப்போடி வன்னியனார்
6. உயர்திரு.க.சின்னத்தம்பி வன்னியனார்
7. உயர்திரு.கணபதிப்பிள்ளை வன்னியனார்

### உடையார்கள்

1. உயர்திரு.நி.சி.வ.வீமாப்போடி உடையார்
2. உயர்திரு.இ.வ.வி.வீரபத்திரப்போடி உடையார்
3. உயர்திரு.தம்பிமுத்து உடையார்
4. உயர்திரு.கந்தப்போடி உடையார்

### பாராளுமன்ற உறுப்பினர்

1. கௌரவ பா.அரியநேத்திரன்

### இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்

1. திரு.கு.சசிக்காந்தன்

### பிரதேச சபை உறுப்பினர்கள்

1. திருமிகு.க.கு.நடராசா
2. திருமிகு.சி.பாலிப்போடி

3. திருமிகு.க.கணபதிப்பிள்ளை
4. திருமிகு.சு.தேவராசன் - உதவி தவிசாளர்
5. திருமிகு.மு.தேவதாஸ்

## திண்ணைப்பள்ளி ஆசிரியர்

1. திருமிகு.மாணிக்கப்போடி வாத்தியார்

## சிரேஷ்ட கல்வியலாளர்

1. திரு.மு.தயாநிதி

## வைத்தியர்கள்

1. செல்வி.ஞா.பாமதி
2. திரு.ஞா.மதிவண்ணன்

## பொறியியலாளர்கள்

1. திரு.யோ.தட்சாயனன்
2. திரு.சோ.சஞ்சயன்
3. திரு.சோ.தனஞ்சயன்
4. திரு.சி.கோபிகாந்

## சட்டத்தரணி

1. திரு.இ.சோமசுந்தரம்
2. திரு.சி.டிலக்ஷனா

## விரிவுரையாளர்கள்

1. திரு.க.சந்திரகுமார்
2. திரு.வி.சம்பந்தன்
3. செல்வி.பா.சோபா

## தொழிநுட்ப உத்தியோகஸ்தர்

1. திரு.க.வேதாரனியம்

## கணியவள அளவையளாளர்

1. திரு.வி.கீதன்

## உதவி மாவட்டப் பதிவாளர்

1. திரு.அ.பேரின்பநாயகம்

## நிருவாக உத்தியோகஸ்தர்

1. திரு.பா.சிறிஸ்கந்தசெயா

## அதிபர்கள்

1. திரு.ம.கந்தப்போடி வாத்தியார் (இவருடைய பெயரில் மகிழவெட்டுவானில் ஒரு பாடசாலை உண்டு. அது கந்தப்போடி வித்தியாலயம்)
2. திரு.ம.பாலிப்போடி வாத்தியார்
3. திரு.ம.விளங்கிப்போடி வாத்தியார்
4. திரு.த.செல்வநாயகம் (இளையதம்பி) (1873ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்/புனித மிக்கேல் கல்லூரியில், 1973ஆம் ஆண்டு காலப் பகுதியில் அதிபராக இருந்தவர்)
5. திரு.கே.தியாகராசா வாத்தியார்
6. திரு.சா.நாகராசா வாத்தியார்
7. திரு.மா.கணபதிப்பிள்ளை
8. திரு.க.பரமானந்தம்
9. திரு.வீ.கோபாலபிள்ளை
10. திரு.சு.தேவராசன்
11. திரு.ஏ.கிருஸ்ணானந்தமூர்த்தி
12. திரு.க.மகேசரெத்தினம்
13. திரு.மு.தயாநிதி
14. திரு.க.அரசரெத்தினம்
15. திரு.மு.குணரெத்தினம்
16. திரு.வ.சந்திரகுமார்
17. திரு.து.சபேசன்
18. திரு.செ.புஸ்பராசா
19. திரு.க.கிருபைராசா
20. திரு.சா.விக்கிணேஸ்வரன்
21. திரு.மு.குணேசலிங்கம்
22. திரு.க.பேரின்பராசா



ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்



சிவமுத்துமாரியம்மன் ஆலயம்



மண்டபத்தடிப் பிள்ளையார் ஆலயம்



முத்துலிங்கப் பிள்ளையார் ஆலயம்



வைரவர் ஆலயம்



ஞானசக்தி விநாயர் ஆலயம்



ஸ்ரீ வாலயம்மன் ஆலயம்



மஹா விஷ்ணு ஆலயம்



வேம்படிப் பிள்ளையார் ஆலயம்



ஸ்ரீ முருகன் ஆலயம்



நெக்கட்டியடி விநாயகர் ஆலயம்



லக்ஷ்மி நாராயணர்ஆலயம்



கிறிஸ்தவ தேவாலயம்




கலைமகள் மகா வித்தியாலயம்



கனிஷ்ட வித்தியாலயம்



கற்சேனை அ.த.க.பாடசாலை



இந்தியா - அம்பிலாலந்துறை சிவாலயம்



இந்தியா - அம்பிலாலந்துறை ஸ்ரீ மாரியம்மன் ஆலயம்



கொக்கட்டிச்சோலை
தான்தோன்றீஸ்வரர் ஆலயம்



பண்டாரியாவெளி
ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம்



தாந்தாமலை
ஸ்ரீ முருகன் ஆலயம்



செட்டிபாளையம்
கண்ணகியம்மன் ஆலயம்



உகந்தை
முருகன் ஆலயம்



கதிர்காமம்
முருகன் ஆலயம்



300 வருடம் பழமையான வாகை மரம்



படகுப்பாதை



மரைக்கால்



கொத்து



கற்பெட்டி



சுளகு



குறியுடன் பசு



கலப்பை, ஏத்து, வண்டில்



ஆதியூர் ஆனைமுகனுக்கு இசைத்தட்டு வெளியீடு



சுரக்காய் இழுத்தல்



கயிறு இழுத்தல்



ஓலை பின்னுதல்



மாரியம்மன் சடங்கு



தீக்கட்டை எழுந்தருளல்



பாற் காவடி



மாரியம்மன் சடங்கு







தோரணச் சடங்கு



கலைப்பூக்கள் கலைக்கழகத்தின்
25 வது ஆண்டு நிறைவு விழா (2015)




"தோரணம்" இறுவட்டு வெளியீடு (2013)



செல்லையா
பரிகாரியார்



வே.சின்னத்தம்பி பூசாரியார்
(60 வருடம் சடங்கு செய்தவர்)



இவர்களுடன் பின்புறமாக நிற்பவர்கள் அறுமகுட்டிப்போடி, கந்தப்போடியாக இருக்கலாம்.



கௌரவ. ஞா. ஸ்ரீநேசன் (பா.உ ) கௌரவ பா. அரியநேத்திரன் (மு.பா.உ)


2013ஆம் ஆண்டு அம்பிலாந்துறை இடம்பெற்ற இறுவட்டு வெளியீட்டுக்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) ஞா.ஸ்ரீசேன் அவர்கள்.



மாப்பிள்ளையை அழைத்து வரும் நிகழ்வு



ஊஞ்சல் நிகழ்வு



சருவச்சட்டி




சேருவக்கால் / சேவரக்கால்




கெண்டி



குடம்



சேருவக்காலுடன் வட்டி



வட்டி



வன்னியர் கட்டிய மதிலின் சிதைந்த பகுதிகள்



சவக்காலை (1111 ஏக்கருள் அடங்கும்)



வயல் உழுது நெல் விதைத்தல்



பாலர் பாடசாலை



சிறுவர் வள நிலையம்



வாசிகசாலை



நம்பிக்கை இல்லம்



சுகாதார நிலையம்



பாலர் பாடசாலை




வில்லுக்குளம்




இந்தியா - அம்பிலாலந்துறை வயலமைப்பு




மட்டக்களப்பு - அம்பிலாந்துறை வயலமைப்பு




அம்பிலாந்துறை எல்லை குறித்து எழுதப்பட்ட உறுதி.



அம்பிலாந்துறை எல்லை குறித்து எழுதப்பட்ட உறுதி.




அம்பிலாந்துறையில் உள்ள 19 கண்டங்கள் வரையப்பட்ட படம்.
(1111 ஏக்கரும் ஆற்றிலும் ஒரு சங்கிலி அடங்கும் வரைபடம்)




அம்பிலாந்துறையில் உள்ள கண்டங்களை எல்லையாக வைத்து எழுதப்பட்ட உறுதி.




ஆழ்வாப்போடி வீரபத்திரப்போடிக்கு சொத்துக்களைக் கையாள்வதற்கு கொடுக்கப்பட்ட சட்ட ஆவணம். இதுமட்டக்களப்பு நீதி மன்றில் 21.12.1897 ஆம் ஆண்டு சட்டமாக அறிவிக்கப்பட்டது.




மா.கதிர்காமத்தம்பி ஐயா அவர்களுக்கு
1953ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட S.S.C சான்றிதழ்.




பு.சுந்தரநாயகம் அவர்களுக்கு ரணசிங்க பிரேமதாச உள்ளூராட்சி சபையில் சிறப்பாக செயற்பட்டமைக்கு 23.03.1984ஆம் ஆண்டு கொடுத்த சான்றிதழ்.




கந்தப்போடி உடையார் பாக்கியசெல்வம் அவர்களை பொலிஸ் தத்துவத்துடன் 19.10.1948ஆம் ஆண்டு கிராமத் தலைமையாக நியமித்தல்.




கண்ணாயுதப்போடி கந்தப்போடி உடையார் அவர்களை பொலிஸ் தத்துவத்துடன் *03.02.1881*ஆம் ஆண்டு கிராமத் தலைமையாக நியமித்தல்.




ஆழ்வாப்போடி வீரபத்திரப்போடி பொது தலைமை வண்ணக்கர் என்று உறுதி செய்யப்படும் 1898ஆம் ஆண்டு ஆவணம்.




கண்ணாயுதப்போடியின் மற்றுமொரு மகன் வ.வி.மண்முனைப்போடி என்பதனை உறுதி செய்யும் ஆவணம்




ஆழ்வாப்போடி வீரபத்திரப்போடிக்கு சொத்துக்களைக் கையாள்வதற்கு
கொடுக்கப்பட்ட சட்ட ஆவணம் - 21.12.1897.



ஆழ்வாப்போடி வீரபத்திரப்போடி படையாட்சிகுடி வண்ணக்கர் என்று உறுதி செய்யும் ஆவணம். *(1898ஆம் ஆண்டு)*



கற்சேனையில் பாலகர் சின்னத்தம்பி என்பவருக்கு 1952ஆம் ஆண்டு காணி பண்படுத்தற் சட்டத்தின்படி கொடுக்கப்படும் "பேர்மிற்" உத்தரவுப்பத்திரம். பின்னர் 1967ஆம் ஆண்டு அவருடைய மருமகன் இ.சின்னத்தம்பிக்கு மாற்றப்பட்டிருக்கின்றது.



கற்சேனையில் பாலகர் சின்னத்தம்பி என்பவருக்கு 1952ஆம் ஆண்டு காணி பண்படுத்தற் சட்டத்தின்படி கொடுக்கப்படும் "பேர்மிற்" உத்தரவுப்பத்திரம். பின்னர் 1967ஆம் ஆண்டு அவருடைய மருமகன் இ.சின்னத்தம்பிக்கு மாற்றப்பட்டிருக்கின்றது.

## ஆசிரியர்கள்

1. திரு.நா.மாணிக்கப்போடி வாத்தியார்
2. திரு.ம.கதிர்காமத்தம்பி
3. திரு.க.சபாரெத்தினம்
4. திரு.செ.பாலசுந்தரம்
5. திரு.ம.கிருபைராசா
6. திரு.மா.ஜீவரெத்தினம்
7. திரு.இ.தவராசா
8. திரு.செ.நகுலேஸ்வரன்
9. திரு.க.லோகேந்திரன்
10. திரு.சா.தட்சணாமூர்த்தி
11. திரு.சி.ஐங்கரமூர்த்தி
12. திரு.க.லோகப்பிரகாசம்
13. திரு.மா.வதனரூபன்
14. திரு.க.உதயகுமார்
15. திரு.செ.சுரேந்திரன்
16. திரு.கு.இளங்கீரன்
17. திரு.இ.விஜயரெத்தினம்
18. திரு.கு.நமசிவாயம்
19. திரு.சி.சிவதர்சன்
20. திரு.சு.கோபிநாத்
21. திரு.க.விவேகானந்தன்
22. திரு.அ.சிவதேனன்
23. திரு.சி.உதயசேகர்
24. திரு.சி.குமரசேகர்
25. திரு.பூ.சுதானந்தம்
26. திரு.இ.சசிகுமார்
27. திரு.மா.கிருபைரெத்தினம்
28. திரு.சு.கிருபைராசா
29. திரு.க.சதானந்தம்
30. திரு.க.சிவஞானசெல்வம்
31. திரு.சு.பேரின்பராசா
32. திரு.க.பரமானந்தம்
33. திரு.மா.ஜீவகாந்

34. திரு.மா.சந்திரபோஸ்
35. திரு.அ.தனுராஜ்
36. திரு.இ.சிவலிங்கம்
37. திரு.வ.அற்புதநாதன்
38. திரு.க.மகேஸ்வரன்
39. திரு.க.சந்திரகுமார்
40. திரு.தா.விஜயரெத்தினம்
41. திரு. .ராகுலன்
42. திரு.க.அருட்சிவம்
43. திரு.சு.சூரியமூர்த்தி
44. திரு.பு.குபேதன்
45. திரு.நா.குருசந்திரராசா
46. திரு.சு.கோபாலசிங்கம்
47. திரு.க.சிவராமலிங்கம்
48. திருமதி.ம.சின்னப்பிள்ளை
49. திருமதி.ம.சின்னப்பிள்ளை
50. திருமதி.ம.சின்னப்பிள்ளை
51. செல்வி.க.ஈஸ்வரியம்மா
52. திருமதி.வெ.சந்திரலீலா
53. திருமதி.கு.பத்மளா
54. திருமதி.த.குணேஸ்வரலெட்சுமி
55. திருமதி.தே.நிர்மலா
56. திருமதி.யோ.வனசுந்தரி
57. திருமதி.ச.குணேஸ்வரலெட்சுமி
58. திருமதி.மா.இராசையா
59. திருமதி.அ.மதிவதனா
60. திருமதி.கே.ஜெயமணி
61. திருமதி.சி.அருந்ததி
62. திருமதி.க.கனகசுந்தரி
63. திருமதி.தே.தவமணி
64. திருமதி.லோ.தவேந்தி
65. திருமதி.ம.மதிகலா
66. திருமதி.சு.தங்கரெத்தினம்
67. திருமதி.கோ.சந்திராதேவி

68. திருமதி.த.விஜயமலர்
69. திருமதி.வே.ஜெயந்தி
70. திருமதி.த.ஜெயந்தி
71. திருமதி.க.பேரின்பராசா
72. திருமதி.தி.அன்ரனிதாஸ்
73. திருமதி.பு.ஈஸ்ணா
74. செல்வி.அ.ராஜினி
75. செல்வி.த.றோஜினி
76.இ.பிறேமலதா
77. திருமதி.ச.கவிதா

## வங்கி முகாமையாளர்கள்

1. திரு.க.இராசையா
2. திரு.ஸ்ரீ.சண்முகப்பிரதாப்
3. திரு.ஞா.அரவிந்தன்
4. திரு.த.தனுஸ்யந்தன்

## வங்கி உத்தியோகஸ்தர்கள்

1. திரு.க.ஜெயதீசன்
2. திரு.மு.சுகிர்தன்

## உதவிக்கல்விப் பணிப்பாளர்

1. க.மாணிக்கப்போடி

## ஆசிரிய ஆலோசகர்கள்

1. திரு.மா.லக்குணம்
2. திரு.க.புவனசிங்கராசா

## கல்வி அலுவலக உத்தியோகஸ்தர்கள்

1. திரு.ஞா.அன்ரனிதாஸ் - லிகிதர்

## வாசிகசாலை உத்தியோகஸ்தர்கள்

1. திரு.க.புவிராசா
2. திருமதி.க.பரஞ்சோதி
3. செல்வி.இ.பூங்கொடி

### விஞ்ஞானகூட உத்தியோகஸ்தர்கள்

1. திரு.பொ.கோணேசன்
2. திரு.கு.ஜெயக்குமார்

### கிராம உத்தியோகஸ்தர்கள்

1. திரு.பரிகாரிப்போடி
2. திரு.கு.கந்தப்போடி
3. திரு.கதிர்காமத்தம்பி
4. திரு.க.கு.நடராசா
5. திரு.க.உ.பாக்கியசெல்வம்
6. திரு.பு.சுந்தரநாயகம்
7. திரு.கா.சிவலிங்கம்
8. திரு.க.பவளசிங்கம்
9. திரு.க.அரசரெத்தினம்
10. திரு.க.சின்னத்தம்பி
11. திரு.ஜெ.செபமாலைமுத்து
12. திரு.இ.சாந்தலிங்கம்
13. திரு.ம.அருந்தவநாதன்
14.. திரு.த.கணேசலிங்கம்
15. திரு.அ.ஸ்ரீநாதன்
16. திரு.இ.பிரதீஸ்காந்
17. திருமதி.சோ.சிவஞானேஸ்வரி
18. திருமதி.க.மகேஸ்வரி
19. திருமதி.ர.நித்தியா

### சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள்

1. திரு.க.கேசகப்போடி
2. திரு.அ.கோடீஸ்வரன்
3. திருமதி.க.சகுந்தலா
4. திரு.பா.பிறேமகுமார்
5. திரு.சீ.குகன்
6. திரு.ந.ரமேஸ்
7. திரு.பே.விஸ்வலிங்கம்
8. திரு.வே.கந்தசாமி

9. திருமதி.த.தேவராணி
10. திருமதி.அ.சிவகலா
11. திருமதி.கு.யுமதி

## அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள்

1. திரு.பா.வேந்திரராசா
2. திரு.கோ.தவகுமார்
3. திரு.இ.ரவீந்திரன்
4. திரு.த.பேரின்பராசா
5. திரு.ந.தவகுமார்
6. திரு.பே.கவீந்திரன்
7. திரு.சு.திவாகரன்
8. திரு.கு.உமாறமணன்
9. திரு.ச.தவசீலன்
10. திரு.த.சிதம்பரப்பிள்ளை
11. திரு.சு.பார்த்தீபன்
12. திரு.சீ.தில்லைவாசன்
13. திரு.ம.சூரியகுமார்
14. திரு.த.நவநிதி
15. திரு.கு.சசிக்காந்தன்
16. திரு.ந.சிவதர்சன்
17. திரு.அ.இளையராஜா
18. திரு.கு.ஜெயகாந்தன்
19. திரு.பூ.சயானந்தன்
20. திருமதி.சி.யூகராணி
21. திருமதி.மா.பிறேமலதா
22. திருமதி.செ.பிரவீனா
23. திருமதி.அ.சிவகுமாரி
24. திருமதி.செ.அனுசியா
25. திருமதி.பு.கோகுலவாணி
26. திருமதி.ம.குணலெட்சுமி
27. செல்வி.கி.சசிகலா
28. செல்வி.ச.ரஜிதா
29. செல்வி.மா.யசோதனா

30. செல்வி.சி.சிவபதி
31. செல்வி.அ.சுவாசினி
32. செல்வி.வ.பிரபாஜினி
33. செல்வி.த.பிரியா
34. செல்வி..சி.ராதிகா
35. செல்வி.வ.தேவராணி
36. செல்வி.சி.ஞானரூபி
37. செல்வி.அ.நிலானா
38. திரு.த.தேவகரன்
39. திரு.க.விஸ்வநாதன்
40. திரு.சு.கருணாகரன்
41. செல்வி.வை.உஷாந்தி

## இலங்கை போக்குவரத்து சபை உத்தியோகஸ்தர்கள்

1. திரு.க.கருணாகரன் - லிகிதர்
2. திரு.செ.தவலிங்கம் - லிகிதர்
3. திரு.சா.வேலாப்போடி - நடத்துனர்
4. திரு.கு.தணிகாசலம் - நடத்துனர்
5. திரு.த.சின்னமணி - சாரதி

## தாதியர்கள்

1. திரு.அ.வடிவேல்
2. திரு.செ.அருண்பிரசாந்
3. செல்வி.வ.கனுஷ்கா

## குடும்பநல உத்தியோகஸ்தர்கள்

1. திருமதி.க.கருணையம்மா
2. திருமதி.பி.சோமேஸ்வரி

## கிளை முகாமையாளர்கள்

1. திரு.இ.செல்லையா
2. திரு.மா.மாசிலாமணி
3. திரு.க.தாமோதரம்
4. திரு.த.நவரெத்தினம்
5. திரு.சி.தவராசா
6. திரு.க.சுந்தரலிங்கம்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்

1. திரு.ந.ரகுநாதன்

### நீதிமன்ற உத்தியோகஸ்தர்

1. திரு.ஸ்ரீ.விக்கினப்பிரதாப்

### பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள்

1. திரு.பூ.தவராசா - லிகிதர்
2. திரு.அ.யோகேந்திரன் - லிகிதர்
3. வ.குணசீலன் - அலுவலக உதவியாளர்
4. திரு.ந.சிவகுமார் - அலுவலக உதவியாளர்
5. திரு.கு.நவரெத்தினம் - அலுவலக உதவியாளர்
6. க.புண்ணியமூர்த்தி - அலுவலக உதவியாளர்

### பிரதேச சபை உத்தியோகஸ்தர்

1. திரு.க.வெற்றிவேல் - லிகிதர்
2. திரு.ஞா.குலசேகரம் - தொ.நு உத்தியோகஸ்தர்
3. திரு.மா.தேவராசா - அலுவலக உதவியாளர்
4. செல்வி.மா.சுவேதனா - லிகிதர்

### பொலிஸ் உத்தியோகஸ்தர்

1. திரு.சு.சூரியதாஸ்
2. திரு.தி.குணசீலன்

### கமநல கேந்திரநிலைய எழுதுனர்

1. திரு.மா.யோகநாதன்

### இலங்கை மின்சாரசபை உத்தயோகஸ்தர்

1. திரு.க.குகதாசன்

### தபாலக உத்தியோகஸ்தர்கள்

1. திரு.த.வர்ணகுலசிங்கம்
2. திரு.பா.ஸ்ரீகந்தராசா
3. திரு.வா.சுவேந்திரராசா
4. திரு.வ.கரிகரன்

### வைத்தியசாலை உத்தியோகஸ்தர்கள்

1. திரு.மா.அமிர்தலிங்கம்

2. திரு.சி.சிவலிங்கம்
3. திருமதி.சு.மல்லிகா
4. திருமதி. க.தர்சினி
5. திருமதி. தி.விமலேஸ்
6. திருமதி. செ.சீதாஜினி
7. திருமதி.இ.கோகுலவாணி
8. செல்வி.சி.சிவாசினி

## தபால் நிலைய அதிபர்கள்

1. திருமதி.ந.சோதிலெட்சுமி
2. செல்வி.ந.வக்சலா
3. செல்வி.க.விஜிதா

## காகிதாலை உத்தியோகஸ்தர்

1. திரு.வே.கணபதிப்பிள்ளை

## விவசாய உத்தியோகஸ்தர்

1. திரு.பெ.வேலாப்போடி
2. திரு.ந.பார்த்தீபன் - AIO

## புகையிரத நிலைய அதிபர்

1. திரு.சி.சிவனேசன்

## புகையிரத நிலைய உத்தியோகஸ்தர்கள்

1. திரு.மு.பரமானந்தம்
2. திரு.அ.வடிவேல்
3. திரு.இ.கந்தசாமி

## மிருக வைத்திய போதனாசிரியர்

1. திரு.இ.அரசரெத்தினம்
2. திரு.பா.அரியநேத்திரன்
3. திரு.க.மாணிக்கவாசகம் - அலுவலக உத்தியோகஸ்தர்

## நிள அளவை உத்தியோகஸ்தர்

1. திரு.சி.கணேசலிங்கம்

## மாவட்டச் செயலக விகிதர்

1. செல்வி.சு.சறோசா

## காணி உத்தியோகஸ்தர்

1. திரு.பெ.மகேந்திரன்

## நீர்பாசனத் திணைக்கள உத்தியோகஸ்தர்கள்

1. திரு.க.தேவதாஸன் - TO
2. திரு.அ.அரசரெத்தினம் - WS
3. திரு.கா..அருச்சுனன்
4. திரு.கு.சாமித்தம்பி
5. திரு.சி.சிவசுப்பிரமணியம்
6. திரு.கு.கணபதிப்பிள்ளை
7. திரு.வா.சசிகுமார்
8. திரு.சி.சுந்தரலிங்கம்
9. திரு.வேலாப்போடி
10. திரு.சி.தம்பையா

## அரச வாகனச் சாரதிகள்

1. திரு.வே.சிவஞானம்
2. திரு.வே.யோகேந்திரராசா
3. திரு.க.குஞ்சிலயாப்போடி
4. திரு.க.மகேஸ்வரன்
5. திரு.சி.சண்முகநாதன்
6. திரு.க.திலீபன்

## பட்டதாரிகள்

1. திரு.து.நிமலன்
2. திரு.மா.ஜீவகுமார்
3. செல்வி.அ.நிலாஜினி
4. செல்வி.சி..அனுசியா
6. செல்வி.த.பிரியா
7. செல்வி.அ.உஷாந்தினி

8. செல்வி.பா.சர்மிளா
9. செல்வி.க.உஷாந்தினி

## பல்கலைக்கழக மாணவர்கள்

1. செல்வன்.த.தேவிகரன்
2. செல்வன்.சி.தனோசிதன்
3. செல்வன்.சோ.கஜவதனன்
4. செல்வன்.பு.புவனகாந்
5. செல்வன்.க.சிவபாலன்
6. செல்வன்.து.சுகிர்தன்
7. செல்வி.கே.கோபினகௌரி
8. செல்வி.தே.தர்சனா
9. செல்வி.கு.நவலக்ஷினி

## கல்வியற் கல்லூரி மாணவர்கள்

1. செல்வி.தே.தர்சிகா
2. செல்வி.தே.கீர்த்தனா

## பாலர்பாடசாலை ஆசிரியர்கள்

1. திருமதி.யோ.சந்திரிகா
2. திருமதி.சி.தமேந்தி
3. திருமதி.அ.சசிகுமாரி
4. திருமதி.ஞா.ஜெயக்குமாரி

## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள்

1. திரு.செ.நகுலேஸ்வரன் (அதிபர்)
2. சிவஸ்ரீ.வ.ஹரிகரன்
3. திருமதி.ப.புஸ்பாதேவி
4. திருமதி.வி.ஜெயகலா
5. திருமதி.மு.பிறேமலதா
6. திருமதி.சு.ரஜனிகா
7. செல்வி.சி.வித்தியா
8. செல்வி.மா.யசோதனா
9. செல்வி.க.தர்ஷினி
10. செல்வி.அ.சிவாஜினி

# போடி கல்வெட்டு

திங்கள் நேருலாவும் செகதல மனைத்தும்
மங்குறாதழுகொடு மண்முனைக்கதிபன்
சிங்கவாகுவின் செல்மதி கொண்டு
பங்கிடா வெளியெனும் பதிதனில் இருந்து
கலிங்கர் குலத்துக் கன்னனென்றொருவன்
துலங்கி வாழ் நாளில் துதிபெறுங் குகன்முறை
குன்றாதரசு குடிபடையோடு
கண்டிமா நகருக்குக் கதியெழு நடத்தி
ஆண்டர்கள் வாழ்ந்த அரசேற்றிருந்து
குகன் குல வரிசை குவலயம் வழங்க
மகம் பெரிதாகும் மட்டக்களப்பில்
செந்நெல்முன் தானியம் சேர் பதினெட்டும்
கன்னல் கதலி கமுகொடு தேங்கு
செழித்து இலங்கத் தேனினங் கூடித்
தெளித்தனவெங்கும் சிறந்திடு மாநகர்
அறமே துலங்க அதர்மங் கலங்கத்
திறமே இலங்கத் தீதே மலங்கத்
தேவராலயங்கள் சிறந்து விளங்கத்
மூவர் வேதங்கள் முற்று முணர்ந்து
மதுர மதனால் மட்டக்களப்பைச்
சதுர மதிலாய்த் தரித்து முன்னாண்டு
அன்னக் கொடையும் அண்டர்கள் மகிழ
மன்னர்க்கதிபன் மட்டக்களப்பில்
இருந்தனர் முடிமறை இன்றோ டென்றும்
வரித்தனன் வாவி ஏரிகள் சூழ
வாழ்வுறு நாளில் மதிகுலர் சென்று
சூழ்படு குகன் நகர் சூட்டென முடியை
என்றடி பணிந்ததன் னிடரது ஓத
பண்டெனப் பறங்கி அரசனும் மகிழ்ந்து
போருக்கெழுந்து புகழ்பெறும் இலங்கையில்
ஏர்சீர் கண்டு இடிபோல் வெடியை
இட்டிட விசையவாகு மெதிர்த்துப்
பட்டிடத் துரத்திப் பறைமுறை சாற்றிப்
கண்டியாலகற்றிக் கரைநாடெங்கும்
நன்றுடன் கொடுத்து நன்மொழிபேசி

மணற்றிடர் மன்னார் மட்டக்களப்பு
இணற்றிரு கோணமலையொடு காலி
கைவசங் கொடுத்துக் கப்பமே பெற்று
வையகமதனில் மட்டக்களப்பை
ககனொடு சேர்த்துக் கொற்றவனாக்கிக்
மகம் பெரிதான மரபர்களென்றும்
செகமதில் திருச்சி திறல்சேர் நகரோரிவர்
தலைமையிலுயர்ந்தோர் இராமநாட்டதிபர்
நிலைமையாய் வைத்து நீயிவை யாளென
விஜயன் குலத்து வேந்தனும் உரைத்து
திசைகளையாளச் சென்றனர் குகன் நகர்
பார்த்து மகிழ்ந்து பரிவொடு கலிங்கரைச்
சேர்த்து நிலைமையாய்ச் செய்திட இனங்கிச்
சங்கமொன்றறியத் தலைமையாய் வைத்துப்
போர்த்துநாட்டரசன் குகன் புகழ் பரப்பிக்
காத்தனர் இராச குடும்பமாய் வைத்து
நிலைமையாய் எங்களை நிருபித்த பின்பு
தலைமையாய் இருந்தோம் தாரணி மகிழ
ஒல்லாந்த அரசே உமக்கிது உரைத்தோம்
பொல்லாங்ககற்றிப் **போடியாய்** வைத்தால்
செந்நெல் செழிக்கும் தேன் சொரிந்தொழுகும்
மன்னர் மகிழ மண்முனை தழைக்கும்
என்றிடக் குகனும் ஏந்தலன் மகிழ்ந்து
பண்டுமுன் முறைமை பகுக்கவென்றெண்ணி
அறுமக்குட்டியை அழைத்திடச் செய்து
பெறுமன்னரசு பெருமையாய் நிலைமைப்
போடியென்றுரைத்து புகழ்பெற்றிலங்க
நாடுகள் தெரிய நன்முறை சாற்றி
ஆக்கொத்ததனில் அரசரின் கைச்சாத்திட்டு
தாக்கினர் கோவாந்தோர் ராசனென் றெழுதி
மேஸ்தர் யீமான் வெல்லம்பல்க் யோகான்
ஆஸ்தர் கோரா தபயன் அங்கல்வெல்க்
அதிரியானிஸ் யுவானிஸ் அரசொளி பிறாங்கே
கதிபெற ஒல்லாந்தர் கட்டளை கொடுத்து
மட்டக்களப்பும் மண்முனைப் பற்றும்
திட்டப்படுத்திச் சிற்றரசாக்கி
வைத்தனர் இந்த மாநகர் தன்னில்
அத்தெழுவாண்டு ஆயிரத்தெழுநூற்று அறுபத்தாறு

திங்கள் நேர் கார்த்திகைத் திங்கள் ஆறதனில்
பொருத்தனை எழுதிக் கொடுத்திடப்போடி
கருத்துடன் பெற்றுக் கலிங்க குலத்தோன்
தேவரில்லங்கள் செழித்திட நடத்திப்
பூபாலனெனவே புவியோர் மகிழ்ந்து
இயலிசை நாடகம் எங்கும் விழங்கச்
செயலொடு திருச்சிராதேசத்தவரில்
அம்பிலாலந்துறையில் அதிலே சென்று
வம்பில்லாக் கலிங்க மரபினனொருவன்
பலநூலாய்ந்த பண்டிதர் சிலரைக்
கவி பல விளங்கக் காசினியோர்க்கு
அஞ்ஞானமகற்றி அறிவுகளுட்ட
மெஞ்ஞான முடையா அறுவரை அழைத்து
செம்பனோடைவரும் சேர்ந்திந் நகரில்
கம்பப் புலவர் காட்டிய நூல்முறை
அன்னசத்திரம் அளித்திடும் நகரில்
பன்னூல் ஓதும் பண்டிதர் வரவே
சம்புநாதன் தனையிருமென்று
அம்பிலாலந்துறையதனில் வைத்து
வேண்டிய தமிழ்நூல் விளங்கப் பயின்றென
ஆண்டன எங்கள் அடிகுல மரபினோர்
சங்கச் சாலையும் சதாசிவ வணக்கமும்
எங்கும் சிறக்கு இருந்தனர் குகன் குலம்
பட்டையம் வரிசை பவுஷொடு வரல்முறை
வெட்டினர் கல்லில் மேன்மைகள் துலங்க
முன்னால் எங்கள் மூதாச் சொற்படி
அந்நாள் தொட்டு அறமே வாழுங்கும்
சிறைதள தாபரம் சீவகாருணியம்
மறைநான்கொழுங்கு வகுத்திடு மரபில்
எழுந்த நானோதினே இதுமுறை யல்லால்
ஒழிந்ததொன்றில்லை உத்தம அரசே
எனக் குகனோத இங்கிலிஸ் அரசன்
மனக்களிப்புடனே வன்னிமை மரபாய்
வைத்தனர் மட்ட மாநகர் தன்னில்
வித்தகக் குகன் முறை விளம்பியதறிந்தே.

(மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்)

# ஊஞ்சல் பாடல்கள்

மகிழையில உஞ்சில்போட்டு
பேரான தெகிழங்கொடியினால்
நாட்டியொரு தூனை நன்றாக நிறுத்தி
நாகமணி நற்சோலை நான்தாண்டி தோழே

கிட்டங்கி சுட்டங்கி வெட்டவெளியாக்கி
வேலையும் கட்டித் துணையாக வைத்து
ஆரைத்தான் காவல் வைப்போமென்றென்னி
அண்ணன்ட வள்ளியையும் பாங்கியையும் காவல் வைத்தோம்

தென்னமரத்திலே பாலிறக்கி
தேவலோகத்திலே கள்ளிறக்கி
கள்ளுக்குடிக்கப் பொனடத்த
தென்னமரந் தெத்தாமப் பாருங்கடி

அரிமுழகு திரிமுழகு அண்ணம் பலாக்கா
அம்பட்ட வண்ணானைக் கும்பிட்டழைத்து
ஆறுமுகச் சாமியைக் கயிறாகத் திரித்து
பனிரெண்டு கப்பலுக்குப் பாய்மரம் பூட்டி
வெள்ளக்காறக் கப்பலுக்கு விளக்கேற்றி வைத்து
ஓடாவி மாரெல்லாம் ஒப்பாரி வைக்க
மங்களக் குறவனார் காவியம் பாட
போகுதாம் கப்பல் பெரியதுறை பார்க்க.

மாலபட மாலபட வாறேனெண்டான்டி
மாப்பெட்டி சவுக்காரம் தாறேனென்றான்டி
பொழுதுபட பொழுதுபட வாறேனென்றான்டி
பொன்னால மூக்குத்தி தாறேனென்றான்டி

குரும்பக்கொல குரும்பக்கொல குலுக்கிமுடியாதோ
குஞ்சி வண்ணான் போட்ட உஞ்சில் ஆடிமுடியாதோ

ஆத்தை மறித்துக்கட்டி அழகுசம்பா நாம்விதைத்து
குளத்தை மறித்துக்கட்டி கொத்துச்சம்பா நான் விதைத்தேன்

குளத்துத் தண்ணீர் குறையக் குறைய
கொத்தமல்லி வாடுதையா
ஆத்துத் தண்ணி குறையக்குறைய
அழகுச் சம்பா வாடுதையா

உத்தி உத்தி ஊஞ்சல் உத்தி
ஊரெல்லாம் அழைத்து உத்தி
பக்கத்து வீட்டாரையும்
பாடச் சொல்லி சேர்ந்து உத்தி
கிறுகக் கிறுகக் கிட்டி வைத்து
கிழவனும் சேர்ந்து ஆட
கீழ்வானம் மேல் வானமாய்
கிழவியும் சேர்ந்து உத்தி

ஒருகொத்து ஈச்சங் கொட்டை வறுத்துக் குத்தி
ஒன்பது பேராம் கூடிக் குத்தி
கல்லோ மல்லோகலந்து குத்தி
கல்லடி நச்சிக்குக் கல்யாணமாம்
நாற்பெட்டிமுனையால மாப்பிளயாம்
மாற்பெட்டி சவுக்காரம் பெட்டியிலாம்

தெத்தாத உஞ்சில் தெத்தாத
தெத்துப் பலகாரம் சுட்டுத் தாறேன்
நேரேபோ ஊஞ்சல் நேரே போ
நேற்றடித்த காற்றோரம்.

ஒரு கொடியைக் கிளப்பக் கிழப்ப
ஒரு கடகம் பாவற்காய்
ஆக்கவும் ஒன்னாம் காச்சவும் ஒன்னாம்
ஐயோ நம்மட பாவற்காய்
ரெ (இ) ண்டு கொடியைக் கிளப்பக் கிழப்ப
ரெ (இ) ண்டு கடகம் பாவற்காய்
ஆக்கவும் ஒன்னாம் காச்சவும் ஒன்னாம்
ஐயோ நம்மட பாவற்காய்

(இவ்வாறாக இலக்க அடிப்படையில் செல்லும்) இறுதியில் ஐயோ நம்மட பாவற்காய், ஐயோ நம்மட பாவற்காய், ஐயோ நம்மட பாவற்காய் என பல தரம் சொல்லி இசையுடன் முடிவடையும்.

உத்திக் கிழப்பு மட்டக்களப்பு,
உத்திக் கிழப்பு மட்டக்களப்பு
உத்திக் கிழப்பு மட்டக்களப்பு
உத்திக் கிழப்பு மட்டக்களப்பு
உத்திக் கிழப்பு மட்டக்களப்பு
உத்திக் கிழப்பு மட்டக்களப்பு
உத்திக் கிழப்பு மட்டக்களப்பு
உத்திக் கிழப்பு மட்டக்களப்பு

காற்றாய்ப் பறப்பதற்குக் கப்பலிடும் பெண்ணே
கப்பலாய் ஓடதற்குக் குரவையிடும் பெண்ணே
வேப்பை மரம் ஆடிடவே குரவையிடும் பெண்ணே
வேலமரம் ஆடிடவே குரவையிடும் பெண்ணே
தோப்பெல்லாம் அதிர்ந்தாடக் குரவையிடும் பெண்ணே
தோத்தாது பறந்தாடக் குரவையிடும் பெண்ணே.

ஊண்ணுங்கடி பொண்டுகளே —— நல்ல
பொன்னின் ஊஞ்சல் ஆடிடுவோம்
வாருங்கடி பொண்டுகளே - நல்ல
வண்ண ஊஞ்சல் ஆடிடுவோம்.

பாவட்டைக்குள் பதுங்கியிருந்து
பார்க்குதடி ஒரு குரங்கு
சாவட்டையே என்று சொல்லிச்
சத்தமிட்டுக் கூவுங்கடி.
மாவுக்குள்ளே மறைந்திருந்து
மச்சான் பாக்கான் பொண்டுகளே
மாவிற் செய்த பிள்ளை என்று
மானம்போக ஏசுங்கடி.

பொழுதுபட பொழுதுபட வாறேனென்றான்டி
பொண்ணால மூக்குத்ரி தாறேன் என்றான்டி
கருக்குப்பட கருக்குப்பட வாறேன் என்றான்டி
கருமணிக்குச் சேலை வாங்கித் தாறேனென்றாண்டி

மாலைபட மாலைபட வாறேன் என்றான்டி
மார்புக்குப் பதக்கமொன்று தாறேன் என்றான்டி
அந்திபட அந்திபட வாறேனென்றான்டி
அத்திமரத்தடியில் நிற்பேனென்றான்டி

காக்காய்க்கு குருவிக்கு கழுத்திலே கொண்ட
கடுகண்டாப்போடிக்கு காதிலே கொண்ட
உஞ்சிலத்தோம் தானத்தோம்.

எங்கள் தெருவிலே ஒரு கும்பா
ஒரு கும்பாவும் பொன்கும்பா
பூவொடு காயோடு பிஞ்செடுத்து
பொன்கும்பாவுக்குப் பூச்சூடி

எங்கள் தெருவிலே ஒரு கும்பா
ஒரு கும்பாவும் வெண்கும்பா
பட்டொடு பாவொடு பாலெடுத்து
வெண்கும்பாவுக்கு மேற்சூடி

ராசா வருவாரென்று ரோசாப்பூச் சேர்த்து வைத்தேன்
ராசாவும் வரவுமில்லை றோசாப்பூ வாடிப்போச்சு
மச்சான் வருவாரென்று மல்லிகைப்பூ கோர்த்து வைத்தேன்
மச்சான் வரவுமில்லை மல்லிகையும் வாடிப்போச்சு
அத்தான் வருவாரென்று ஆவாரம்பூ பார்த்து வைத்தேன்
அத்தான் வரவுமில்லை ஆவாரையும் வாடிப்போச்சு
மன்னன் வருவாரென்று மாதுளம்பூப் பறிச்சு வைத்தேன்
மன்னர் வரவுமில்லை மாதுர்ளையும் வாடிப்போச்சு.

**தெய்வானைக்கும் வள்ளிக்கும் தர்க்கம்**
காட்டு வள்ளிக் கிழங்குண்பான் உங்கள் குலத்தார் - பச்சைக்
கள்ளுண்டு ஆடுவாருன் காட்டு வேடர்கள்
அரக்கருக்கர் அடிமையல்லோ உங்கள் குலத்தார் - அவரின்
அரிய சிறைக் கைதியல்லோ உங்கள் தேவர்கள்.

பார்பதிக்கும் லக்சுமிக்கும் தர்க்கம்

ஆறமர இடமில்லாமல் ஆலிலை மேலே —— கடலில்
அஞ்சியே துயின்றாரடி உங்கள் பெருமான்
உண்டுடக்க வளியில்லாமல் சுடுகாட்டில் - கையில்
ஓடெடுத்து அண்டியானார் உங்கள் சிவனார்
தூயில்லா அனாதையானார் உங்கள் பெருமாள் - அதனால்
பூதகியின் பால் குடித்தார் உங்கள் பெருமாள்.
பிள்ளைக்கி உண்டு களித்த புலையனடி —— வந்தி
பிட்டுக்காய்ப் பிரம்படி பட்ட வலைஞனடி.

சின்னச் சின்ன வண்டி கட்டி சிவத்தமாடு ரெண்டு பூட்டி
வாழைக்காய்ப் பாரமேற்றி வாறாண்டி உண்பருசன்
மாடுமோ செத்தல் மாடு வண்டியுமோ ஓட்டை வண்டி
மாடிழுக்க மாட்டாமல் மாயூராண்டி ஒன் புருசன்

வெள்ளைமாடு வண்டி கட்டி விடியற்காலை எழுந்திருந்து
புள்ளிமாட்டுத் தயிரெடுக்க போறாண்டி என் புருசன்.

கொக்கிறகு மயிலிறகு சூடிவருவாரோ
கொக்கையிர புருசனார் எப்பவருவாரோ
இன்றைக்கு வருவாரோ இடியுழுந்து போவாரோ
நாளைக்கு வருவாரோ நாசமற்றுப் போவாரோ.
ஒரு நாளும் வராது ஓதுங்கியிருப்பாரோ
ஒண்ணுமே சொல்லாது ஓடிவிடுவாரோ.

தங்கச்சி புருசன் வாறாண்டி தாளங்குடாவில் நிற்காண்டி
மஞ்சல் அரடி தங்கச்சி மாரிபில பூசடி தங்கச்சி
இன்னமரடி தங்கச்சி இடுப்பில பூசடி தங்கச்சி

# மாரியம்மன் பத்து

சக்திகளுக்குச் சக்தி ஆதிசக்தியானவளே
சமயபுரம் எழுந்து உலகுக்கு ஒளி கொடுப்பாய்
சர்வலோக நாயகியாய் எம்முன்னே நின்றாயே
சாமுண்டி வராகி வஸ்ணவி என்றெல்லாம்
வருந்தி வருவோர்க்கு வரும்பிழைகள் போக்கிடுவாய்
வாலத்தாய் என்று பெயர்பெற்ற அம்மா நீ
அம்மானக்காய்கொன்று அகற்றிடுவாய் தீவினையை
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

சாலோக சாமீப சாரூப சாயுச்சியமாய் நின்றவளே
சார்ந்தவரைக் கார்த்து துறையூரில் எழுந்துநின்றாய்
மன்றியிட்டு வணங்குவோரை மனதிலே இருத்திநின்றாய்
மாயாவினோதியம்மா மக்கள் துயர் போக்கிடுவாய்
கட்டுச் சொல்லி கன்ம வினை ஓட்டிடுவாய்
கட்டியவர்க்கு காலனாகவும் மாறிடுவாய்
அகரமாய் நின்று அன்பர்க்கு அருள் புரியும்
அம்பிலாந்துறையூரில் வாழும் மாரித்தாயே!

சிலம்பெடுத்து தீவினையை போக்கிடுவாய்
சிரித்த முகத்துடனே சிறைதனையும் உடைத்திடுவாய்
உடுக்கை ஒலித்தாலே உண்ணுருவம் ஓடி வரும்
உதடுகளும் முனுமுனுக்கும் உன்பெயர் சொல்லியே
பூவாக மலர்ந்து நிற்பாய் பூலோக நாயகியே
பூமியில் உதித்தவளே பார்வதி தேவியே நீ
அல்லும் பகலும் அலைகின்றோம் உமைத் தேடி
அம்பிலாந்துறையூரில் வாழும் மாரித்தாயே

சீற்றம் கொண்டு தீயவரைச் சங்கரித்தாய்
சிங்க வாகனத்தில் அகோரமுகமும் கொண்டாய்
சிவனின் சடையில் நின்று கங்கையாய் உருவெடுத்தாய்
சினமகற்றி உறவு கொண்டு பக்தர்க்கு அருள் புரிந்தாய்
ஒன்பது கன்னியாய் ஒரே முகமும் கொண்டாய்
ஓம் சக்தியாய் நின்று முருகனுக்கு வேல் கொடுத்தாய்
அம்பிகையாய் உருவெடுத்து அகிலம் ஆழும்
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

சுடரும் தீயிலே இறங்கிடுவோம் உன்னருளால்
படர்ந்த வினைகள் எல்லாம் பாரைவிட்டு ஓடிடவே
பக்தியாய் வருவோருக்கு பாவவினை போக்கிடுவாய்
பத்திரத்தின் சக்தியே நீ முத்து மாரியம்மா
தவனிலையில் தவம் செய்து தன்னிகராய் நின்றவளே
தயாபரியே எந்தனக்கு அருள்வாய் அம்மா நீ
அரும்பு நிறை வாசனை போல் எங்கும் நிற்கும்
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

சூலம் ஏந்தி நீ சுட்டெரிப்பாய் தீயவரை
சூழ்ச்சி செய்பவரை சாம்பலாய் ஆக்கிடுவாய்
மனம் நொந்து வருவோரை மகிழ்வித்து அனுப்பிடுவாய்
மகமாரி என்று நீ வலம் வருவாய் அவனியில்
ஏற்றவர்க்கு வரம் தந்து எக்கனமும் காத்திடுவாய்
தோற்கவில்லை உனை நம்பியோர் துறையூரில்
அடியார்மேல் அன்புகொண்டு அருள்பாலிக்கும்
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

செய்வினை செய்பவரின் செருக்கை அடக்கிடுவாய்
செயற்கரிய பரம்பொருளே மாரிமுத்தே
தொய்யவில்லை உனை நம்பி துதிக்கின்றோமே
தொல்லைகளும் ஓடிடவே வலமும் வருவோம்
துறந்தார்க்கும் உதவிடுவாய் மெய்ப்பொருளேயம்மா
துஞ்சவில்லை உனை நம்பி வாழுகின்றோமே
அங்கம் பொருளாக எங்கும் ஒளி கொடுக்கும்
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

சேகண்டி ஒலிப்பதுபோல் செகமதிலே ஒலித்திடுவாய்
சேவை செய்வோரை செவ்வனவே காத்திடுவாய்
மந்திரத்தின் சத்தியாலே நொந்தவர்க்கு மாலையிட்டாய்
எந்திரமும் போட்டாலே எம்மையும் காத்திடுவாய்
சுந்தர வல்லியே நீ சுமையதனை இறக்கிடுவாய்
எந்தன் முகம் பார்த்து நீ வந்தவரைக் காருமம்மா
அன்னைக்கு அன்னையாய் நீ அகிலமாழும்
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

சைனியமும் ஓடிடவே வாளெடுத்தாய்
சக்தியும் பிரமமாய்க் காட்சிதந்தாய்
நித்தியமாய் நம்பிவந்தோம் உன்பதியை
பத்தினியாய் நீயுந்தான் ஊரும் காத்தாய்
வண்ண மலரெடுத்துப் பூசை செய்தால்
வல்ல புகழ் யாவுமே எமக்களித்தாய்
அகிலமாழும் தெய்வமடி சிவமுத்துமாரி
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

சொல்லரும் நிக்களமாய் ஆனசக்தியே
சூரனை வென்று நீ காளியுமானாய்
மும்மலமும் நீக்கிடவே மூண்டெழுந்தாய்
முத்தெறிந்து எங்களையும் கார்த்து நின்றாய்
இடர்தரும் தொல்லைகளும் இனிமேலில்லை
இன்பமுடன் வாழ்கின்றோம் உன்னருளால்
அட்சரத்தால் அறியாமை அகற்றி நின்ற
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

சோதிவடிவாகி நின்று துயர் துடைத்தாய்
திரிபுர வால புவன என்று
ஏழ்கடலுக்கு அப்பால் தோன்றி நீயும்
ஏழைகளுக்கு அருள் கொடுப்பாய் என்றுமேதான்
தீவினை அழிக்கவென்று வரமும் பெற்று
தீயவரைச் சங்கரித்தாய் சிவன் வரத்தால்
அட்டதிக்கெங்கும் அருள் பாலிக்கும்
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

சௌந்தர வல்லியாய் தரணியிலே வீறுகொண்டாய்
சாட்டையாலே ஓட்டிடுவாய் மிடுக்குதனையும்
சிந்தையிலே உனைவைப்போம் சீக்கரமாய்
செயற்கரிய பருப்பொருளே மாரிமுத்தே
காத்தானைக் கழுவேற்றி கண்மவினைபோக்கி
காத்திட்டாய் மக்கள் துயரகற்றி
அருவுருவாய் நின்றவளே நீயுமம்மா
அம்பிலாந்துரையூரில் வாழும் மாரித்தாயே!

(ஆக்கம் - முருகுதயாநிதி)

# மாரியம்மன் காவியம்

ஆயிரத்து எழுநூற்று அறுபத்து ஆறில்
முத்துமாரியாக வந்தவளே தாயே
முத்தழகு கட்டழகு கொண்டவளும் நீயே
முத்தேவியாகவும் வந்தவளும் நீயே
நித்தம் உனை வேண்டுகின்றோம் சிவமுத்துமாரி
நித்திலத்தில் நீதான் எத்திசையும் நிற்பாய்
உத்தமியே பத்தினியே சிவமுத்துமாரி
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

சிவமுத்துமாரியாய் தீயவற்றை அகற்றி
சிவனுக்குப் பாகமாய் அமைந்தவளும் நீயே
சிவலோகம் பரலோகம் எங்குந்தான் அம்மா
ஒருலோகமாகவே ஓடித்தான் வருவாய்
கட்டழகு கொண்டவளே மகமாரியம்மா
கன்ம வினை போக்க வருவாயே தாயே
எங்களையும் கார்த்து துன்பங்களை ஓட்டும்
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

துன்பங்கள் ஓட்டியே ஊழ்வினையழிப்பாய்
பங்கமது வராமல் எங்களையும் காப்பாய்
மாரித்தாய் என்றவுடன் பூரிப்பாய் நீயும்
மாரியும் பொழிந்துதான் மக்கள் துயர் தீர்ப்பாய்
ஏழ்கடலுக்கப்பால் உதிர்த்தவளேயம்மா
ஏழைகளின் விடிவுக்காய் எழுந்துவா அம்மா
எக்காள தேவியாய் எம்மையுமே காப்பாய்
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

எம்மையுமே காத்து நிம்மதியைக் காட்டு
சன்நிதியில் நீதான் சங்கடத்தை நீக்கு
மும்மலமும் நீக்கி கன்மவினை போக்கு
சாமுண்டி வராகி வஸ்ணகியே அம்மா
நம்மையது செய்தாலே நற்பேறு காட்டி
நாட்டுக்கு அருள்வாய் நாயகியேயம்மா
அன்னை பரிபூரணியாய் அகிலத்தை ஆழும்
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

அகிலமது ஆழும் அம்பிகையேயம்மா
அட்சரத்தால் தீவினைகள் போக்கிடுவாய் நீயும்
கும்பத்தில் எழுந்துதான் குற்றங்கள் போக்கி
துன்பமது காக்கும் மாரியே தாயே
முகக்களையில் அம்மா நீ கண்திறந்து வருவாய்
முத்துக்கு முத்தாயும் தத்துவமாய் நிற்பாய்
சத்திக்குச் சத்தியே தாயான சத்தி
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

தாயான சக்தியாய் நோய் பிணிகள் தீர்த்து
தீயவற்றை அகற்றி திகழ்பவளும் நீயே
அம்மானக் காயாலே மூலமது எழுப்பி
எம்மையுமே காத்துத்தான் நன்மைகளும் செய்வாய்
தீயினிலே எழுந்துதான் தீவினைகள் அழிப்பாய்
தீமைகளை ஓட்டவே அவதாரம் எடுப்பாய்
காளியாய் எழுந்தும் நீ சூரனை வதைத்தாய்
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

சூரனை வதைக்க நீ சுடராக எழுந்தாய்
சூலமது ஏந்தியே துயர்களை உடைத்தாய்
மந்திரத்தால் அழைத்தாலே மனந்திறந்து வருவாய்
மகமாரி அம்மாவே மக்கள் துயர் துடைப்பாய்
வாலத்தாய் என்றாலே வருவாயே நீயே
மாண்டுதான் மறைந்தாலும் மறவோமே உமையே
முருகனுக்கு வேல் கொடுத்து சங்காரஞ் செய்த
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

சங்காரஞ் செய்ய சரவணையில் இணைத்தாய்
சர்வலோக நாயகியே பார்வதியே அம்மா
காத்தானைத் தண்டித்து கம்பத்தில் ஏறி
காத்தாயே தவத்தையே நோக்கமதுகொண்டு
முத்தெறிந்து நீயும் தண்டிப்பாயம்மா
எத்திசையும் நீதான் ஓடியே வருவாய்
ஈரேழு பதினான்கு லோகமும் ஆண்டு
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

உலகமது ஆண்டு உத்தமியானாய்
உன்முகங்காண ஓடியே வருவோம்
சிவனுக்கு நீயும் உண்மையை உரைத்தாய்
சிவலோக நாயகியே சிவமுத்து மாரி
கங்கையில் எழுந்து காட்டாறு ஆனாய்
மங்கையாய் மாறி மதிமுகமும் கொடுப்பாய்
முத்தேவியாய் இருந்து முப்பொருளும் தருவாய்
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

முப்பொருளும் தருவாய் திரிபுரையே அம்மா
எப்பொழுதும் காப்பாய் புவனையே நீயும்
உனை நினைக்கும் போது ஓடியே வருவாய்
மனையாளும் தாயே வாலத்தாயம்மா
ஊர்வலமும் வந்து கொடுப்பாயே காட்சி
ஊமைகளும் எழவே வரமதுவும் தந்தாய்
மழலைகள் நோயாலே வருந்தாமல் காப்பாய்
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

வருந்தாமல் காப்பாய் வரும் பிழைகள் தீர்ப்பாய்
வருந்தி வருவோரின் மனக்கவலையழிப்பாய்
சிலம்பெடுத்து நீயும் சிறுமையை அழிப்பாய்
சிவலோகம் இருந்து காட்சியும் கொடுப்பாய்
காவடியெடுத்தாலே காவலனாய் நிற்பாய்
கண்ணுக்குக் கண்ணான கண்மணியே நீயும்
உன்னுருவம் காட்டி உலகாழும் தாயே
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

உலகாழும் தாயே உமையவளே நீயும்
உத்தமியே பத்தினியே சக்தியே அம்மா
கலைகளுக்கெல்லாம் ஆயகலை நீயே
காமாட்சி அம்மாவே காத்தருள்வாய்யெமையே
சோதனைகள் தீர்த்து சாதனைகள் படைக்க
சொற்பனத்தில் இருந்து எக்கனமும் வருவாய்
தொல்லைகள் தீர்ந்து சுகமாக வாழ
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

சுகமாக வாழ செகமேழும் வருவாய்
சுப்பிரமணியர்க்கு தாயான சக்தி
ஒன்பது கன்னியாய் உலகாழும் தாயே
துன்பங்கள் போக்கியே காட்சியும் தந்தாய்
கட்டு சொன்னாலே கன்மவினை தீரும்
கற்பூர நாயகியே மகமாரி அம்மா
வெக்காளியாக வந்து வேதனைகள் போக்கும்
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

வேதனைகள் போக்கிடுவாய் வேண்டும் வரம் தருவாய்
போதனைகள் செய்யவே புத்திமதி கொடுப்பாய்
மண்ணை அளர்ந்து நீ வலம்வரும் தாயே
பொன்பொருள் எல்லாமே எமக்குமே தருவாய்
தீர்த்தம் குடித்தாலே தீவினைகள் அறுப்பாய்
தித்திக்கும் செயலாலே திடுக்கிடவே செய்வாய்
பக்திக்கு நீயம்மா பூபதியே பார்வதியே
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

பாளையத்தம்மாவே பாவவினை தீர்ப்பாய்
பள்ளயம் கொடுத்தாலே பத்தரைக் காப்பாய்
நூல்கட்ட மாறுமே நுண்பிணிகள் எல்லாம்
எல்லைகளும் தாண்டவே எம்மையுமே காப்பாய்
நேத்திக்கடன் வைத்தாலே ஓடுமே நோயும்
காத்திடுவாய் அம்மா காவலாயிருந்து
தோத்திரம் பாடினால் தொல்லைகளும் அகலும்
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

தொல்லைகள் அகல துதிப்போமே அம்மா
கல்நெஞ்சம் தனையும் கசிந்துருகச் செய்வாய்
புரட்டணம் பண்ணவே உன்பதியில் வருவோம்
பறக்குமே பில்லி சூனியம் ஏவல்
கதவு திறந்தாலே காலனும் மறைவான்
கெட்ட செயலெல்லாம் கெடுதியில் அழிப்பாய்
தொட்டு வணங்கவே தொல்லைகள் தீர்க்கும்
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

தொல்லைகள் தீர்க்க எல்லையிலும் வருவாய்
தொலைந்தவையெல்லாம் நிலைத்துவர அருள்வாய்
அலகுதான் போட்டாலும் விலகுமே வினையும்
அகிலத்துக்கு அம்மாவே அண்டமது ஆள்வாய்
புவிமீது நீயம்மா புடம் போட்டாய் அருளாள்
தவிக்கிறோம் உனையெண்ணி தன்மதியே தாயே
தேடியே வந்தோமே உன்பதியில் நாமே
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

உன்பதியை நாமே நம்பியே வந்தோம்
உணர்வுடன் இருந்து இன்னருளைப் பெறவே
மலைபோலும் வருவதை சங்காரம் செய்து
தலைமுறை காத்த சங்காரி நீயே
உடுக்கை ஒலித்தாலே ஓடியே வருவாய்
மிடுக்குகளும் அகலவே ஆடியிலே வருவாய்
கொடுமைகளை அழிக்க வரம் பெற்று அம்மா
அம்பிலாந்துறையூரில் அமைந்தாயே தாயே!

வரம் பெற்று நீயும் தீயவரை அழித்தாய்
கொப்பளிப்பான், சின்னமுத்து என்றுதானம்மா
தமிழ் நாட்டில் குடிகொண்டு மாரியாய் வந்தாய்
தமிழரின் விடிவுக்குத் தலைவியாய் நின்றாய்
தகமைகள் பெறுவதற்கு நாவிலே உதிப்பாய்
பகமைகமைகளும் நீங்கவே பார்வதியாய் வருவாய்
நிலையாக நிற்கின்ற சோதி வடிவே
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

சோதிவடிவாக வந்து சோதனைகள் தீர்ப்பாய்
சொர்க்கவாசல் தனையுமே எமக்காகத் திறப்பாய்
எட்டாஞ் சடங்கிலே கெட்டசெயல் மறைய
எழுந்துவருவாயே சிவமுத்துமாரி
மக்களோடு மக்களாய் மறைந்திருக்குமம்மா
கூக்குரல் கேட்டாலே பறந்துதான் வருவாய்
எங்கள் முகம் பாருமம்மா மங்காதசோதி
அம்பிலாந்துறையூரில் அமைந்தவளே தாயே!

(ஆக்கம் - முருகுதயாநிதி)



முருகுதயாநிதி ஒரு கவிஞர், எழுத்தாளர், ஆய்வாளர் என நன்கு அறியப்பட்டவர். அவர் இன்று தேசிய கல்வி நிறுவகத்தில் தமிழ்த்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். மட்டக்களப்பு அம்பிளாந்துறையில் 12.06.1971ஆம் ஆண்டு பிறந்த இவர் அம்பிளாந்துறை கலைமகள் மகாவித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியினையும் குருக்கள்மடம் கலைவாணி மகாவித்தியாலயத்தில் உயர் கல்வியையும் கற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, கலைமுதுமாணி, முதுதத்துவமாணி ஆகிய பட்டங்களைப் பெற்று, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்விமாணிப் பட்டத்தினையும் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமாப் பட்டத்தினையும் பெற்றுள்ளார். தற்போது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை கலைத்திட்ட முகாமைத்துவத்தில் மேற்கொண்டு வருகின்றார். அவர் ஆசிரியராகவும், அதிபராகவும் நீண்ட காலம் பணியாற்றியவர். கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கு கற்பித்தலையும் கற்பித்தல் மேற்பார்வையினையும் மேற்கொண்டு வருகின்றார். குறிப்பாக ஆசிரியர்களுக்கான கற்பித்தல் - கற்றல் செயலமர்வினை வினைத்திறனுடன் ஆற்றி வருகின்றார். எழுத்துத்துறையில் அதிக அக்கறை காட்டிவரும் அவர் பல கட்டுரைகளையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அத்தோடு "படிப்பதற்கு" எனும் கவிதை நூலினையும், மாரியம்மன் காவியம், மாரியம்மன் பத்து முதலான பாடல்களையும் உள்ளடக்கிய நூலினையும் ஆக்கியுள்ளார். பழைய ஆவணங்களைத் தேடுவதிலும் பாதுகாப்பதிலும் ஆர்வமுள்ள இவர் மட்டக்களப்பிலுள்ள பல ஓலைச் சுவடிகளையும் எழுத்துருவிலுள்ள ஆவணங்களையும் ஆராய்ந்து அம்பிலாந்துறை வரலாற்று நூலினைப் படைத்துள்ளார்.

பேராசிரியர் சி.தில்லைநாதன்